பொருநராற்றுப்படை

முகவுரை.

பொருநராற்றுப்படையாவது, கடைச்சங்கப்புலவர்களுள், நக்கீரனார்முதலிய நல்லிசைப்புலவர்களால் அருளிச்செய்யப்பெற்று அவர்களால் தொகுக்கப்பெற்ற பத்துப்பாட்டுக்களுள் இரண்டாவது; பத்துப்பாட்டுக்களிவையென்பதைப் பின்வரும் வெண்பாவாலுணர்க:

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

பொருநராற்றுப்படையென்பதற்குப் பொருநரை வழிப்படுத்துவ தென்பது பொருள். இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய சோழன் கரிகாற்பெருவளத்தானாற் பெருஞ்செல்வம்பெற்றுக் கவலையின்றிப் போகின்ற பொருநனொருவன் வறுமைத்துன்பத்தால் வாடிவருகின்ற பொருநனொருவனைப்பார்த்து, 'நீ கரிகாற்பெருவளத்தா

னிடஞ்செல்லின், பெருஞ்செல்வம்பெற்று வாழ்வாய் ' என அவனை வழிப்படுத்தியதாக அவ்வரசன்மீது முடத்தாமக்க ண்ணியார் பாடியது.

பொருநர் - ஒருவகைச்சாதியார் ; ஏர்க்களம்பாடுதல், போர்க் களம்பாடுதல்முதலியன இச்சாதியாருடைய தொழில்கள் ; அவர் களுள், இப்பாட்டிற்குரியபொருநன் போர்க்களம்பாடுவோன் ; இத னை, இந்நூல், ௫௭ - ம் அடியின் விசேடவுரையாலுணர்க. 'பொருந்' என்பது இப்பெயர்க்கு முதனிலை. இந்நூல்வகையைச்சார்ந்தன வாய், கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, புலவராற்றுப் படை, விறலியாற்றுப்படையெனப் பண்டைக்காலந்தொட்டுப் பல நூல்கள் வழங்கிவருகின்றன. கிற்க.

உ0

கருக

முகவுரை

இந்நூல், உ௪அ - அடிகளையுடையது ; இடைஇடையே வஞ்சி யடிகள் கலக்கப்பெற்ற ஆசிரியப்பாவாக அமைந்துள்ளது ; வஞ்சி யடிகளை, ௧௭அ - ம் அடிமுதலியவற்றிற்காண்க.

இதனால், கரிகாற்பெருவளத்தானுடைய வள்ளன்மையும் அவன் வீரமும் அவனாண்ட சோழநாட்டின் வளங்களும் காவிரிநதி பயன்படுத்துதலும் நன்குபுலப்படும்.

இந்நூலாசிரியராகிய முடத்தாமக்கண்ணியாருடைய வரலாறு வேறொன்றும் தெரியவில்லை.

சோழன் கரிகாற்பெருவளத்தான்வரலாற்றின்விரிவை இப்புத்தகம், ௬௯ - ம் பக்கத்திற்காண்க.

இந்நூல் உரையாசிரியராகிய

நச்சினார்க்கினியர் வரலாறு.

விருத்தம்.

எவனால வாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்றே.

இந்நூலின் உரையாசிரியராகிய ஆசிரியர் நச்சினார்க்கினியர், பாண்டி வளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாசகோத்திரத்திற் பிறந்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லாநூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னாரதல், " வண்டிமிர் சோலை மதுரா புரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத் துவாச, னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன் " என்னும் உரைச்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். சிவஸ்தலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்,' 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் எழெழுத்தொருமொழிக்கும் உதாரணமாக இவர், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழி மரபில், "ஓரெழுத்தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்தநூல்களாகிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கியவிலக்கணப் பொருள்களுக்கன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள்கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், நாமகளிலம்பகத்து 'மேகம் மீன்ற' என்னும் ௩௩௩-ம் செய்யுளில், 'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படையுரையிற் காட்டிய சில நயங்களாலும், உரைச்சிறப்புப்பாயிரத்தில், " தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன் " என்க்கூறப்பெற்றதனாலும், மற்றுஞ் சிலவற்றாலும், இவர் சைவசமயியர்தல் நன்குவெளியாகும்.

இவ்வுரையாசிரியர், பத்துப்பாட்டினுள் இந்நூலுக்கன்றி மற்றநூல்களுக் கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் சீவகசிந்தாமணிக்கும், குறுந்தொகையில் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்

களுக்கும் உரைசெய்தருளினர். இன்னும் சிலநூல்களுக்கு இவர் உரை யியற்றினரென்பர் ; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரி கின்றமையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப் பதாக இவருடைய உரைச்சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும், அவைகள் இங்கே எழுதப்பட்டில.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரையெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை ஓர்உரையை யெழுதி அவர் களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீ கரித்துக்கொண்டார்களென்று சைனர் கூறுகின்றனர்.

சீவகசிந்தாமணியில் நாமகளிலம்பகத்தில் "கண்ணுளார் நுங்காதலர்" என்னும் சூ-ம் செய் யுளுரையில் 'ஈங்குத் தன்மையையுணர்த்துதல், "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரத்திற் கூறினும்' என்றும், குணமாலையாரிலம்பகத்தில் "மங் கை நல்லவர்" என்னுஞ்செய்யுளுரையில் 'ஆசிரியர் "நண்டுந் தும்பியும்" என்று தும்பியைப்பின்வைத்தது. மேல்வருஞ் சூத்திரத்தில், "மாவு மாக்களு மையறி வென்ப" என்ற ஐயறிவு இதற்கும் எறுதற்கென்றுணர்க; இதனை வாராததனால் வந்தது முடித்த லென்னுந் தந்திரவுத்தியாற் கொள்க வென்று, ஆண்டு உரை கூறிப்போந்தாம்' என்றும் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலால், இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதினபின்பு சீவகசிந்தாமணிக்கு உரையெழுதினரென்று விளங்குகின்றது.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் விளங்கியவை வருமாறு:—

க. அகத்தியம்.

உ. அகநானூறு.

ங. அணியியல்.

௪. அவிநயம்.

௫. ஆசாரக்கோவை.

௬. இராமாயண வெண்பா.

௭. இறையனாரகப்பொருள்.

௮. ஏலாதி.

௯. ஐங்குறுநூறு.

௧௦. ஐந்திணையெழுபது.

௧௧. ஐந்திணையைம்பது.

௧௨. கடகண்டு.

௧௩. கலித்தொகை.

௧௪. களவழிநாற்பது.

௧௫. காக்கைபாடினியம்.

௧௬. குணநாற்பது.

௧௭. குறிஞ்சிப்பாட்டு.

௧௮. குறுந்தொகை.

௧௯. கூத்தநூல்.

௨௦. கைந்நிலை.

௨௧. கொன்றைவேந்தன்.

௨௨. சிலப்பதிகாரம்.

௨௩. சிறுகாக்கைபாடினியம்.

௨௪. சிறுபஞ்சமூலம்.

௨௫. சிறுபாணாற்றுப்படை.

௨௬. சினேந்திரமாலை.

௨௭. சீவகசிந்தாமணி.

௨௮. தகடூர்யாத்திரை.

௨௯. திணைமாலை நூற்றைம்பது.

௩0. திணைமொழியைம்பது.

௩௧. திரிகடுகம்.

௩௨. திருக்குறள்.

௩௩. திருக்கோவையார்.

௩௪. திருமுருகாற்றுப்படை.

௩௫. திருவாசகம்.

௩௬. தொல்காப்பியம்.

௩௭. நற்றிணைநானூறு.

௩௮. நாடகநூல்.

௩௯. நாலடியார்.

௪௦. நெடுநெல்வாடை.

௪௧. பட்டினப்பாலை.

௪௨, பதிற்றுப்பத்து.

௪௩. பரிபாடல்.

௪௪, பல்காப்பியம்.

௪௫. பல்காயம்.

௪௬. பழமொழி.

௪௭. பன்னிருபடலம்.

௪௮. பாரதவெண்பா.

௪௯. புறநானூறு.

௫0. புறப்பொருள்வெண்பாமாலை.

௫௧. பூதபுராணம்.

௫௨. பெருங்கதை.

௫௩. பெரும்பாணாற்றுப்படை.

௫௪. பெரும்பொருள்விளக்கம்.

௫௫. பொய்கையார்முதலாயினோர் செய்த அந்தாதி.

௫௬. பொருநராற்றுப்படை.

௫௭. மணிமேகலை.

௫௮. மதுரைக்காஞ்சி.

௫௯. மலைபடுகடாம்.

௬௦. மாபுராணம்.

௬௧. முத்தொள்ளாயிரம்.

௬௨. முதுமொழிக்காஞ்சி.

௬௩. முல்லைப்பாட்டு.

௬௪. மோதிரப்பாட்டு.

௬௫. யாழ்நூல்.

௬௬. வசைக்கடம்.

௬௭. வஞ்சிப்பா.

௬௮. வளையாபதி.

௬௯. விளக்கத்தார்கூத்து.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரியவிஷயங்களை ஆங் காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்றமையின், இவரை வட மொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்லுதற் கிடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளையாசிரி யர்முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக்கூறப்பட் டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினாற்பிற்பட்டவரென்று தெரி கின்றது.

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல் செய் அருந்தவத்தின் பெரும்பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன

கஙஅ நச்சினார்க்கினியர் வரலாறு.

இவருடைய மேம்பாட்டைப்பாராட்டி அக்காலத்து ஆன்றோராற்செய் யப்பட்ட உரைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் வருமாறு:—

வெண் பா.

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு
மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ் . சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.

தொல்காப் பியத்திற் றெருத்த பொருளனைத்து
மெல்லார்க்கு மொப்ப வினிதுரைத்தான் - சொல்லார்
மதுரைநச்சி ஞர்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு.

ஆசிரியப்பா.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொரு ளுணணிதி னுணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னுற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய னாகிப் பாற்பட
வெழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்று
மிழுக்கற வாய்ந்த வழுக்கின்றேல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணுக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியு
முரையிடை யிட்ட காண்டிகை யுரைத்து
மான்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபது பாட்டு முணர்பவர்க் கெல்லா

முறையற முழுதும் புறைபட வுரைத்து
மொலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்கு

நச்சினார்க்கினியர் வரலாறு.

கடுசு

குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப வுள்ளுறை
யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி யிறைச்சிப்
பொருளுக் கெய்தும் வகையைத் திறப்படத் தெரிந்து
சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப் பாற்பட
நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும் வையம்
புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச் சிந்தா
மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்

பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்து
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற் கிதுபொரு
ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துந்
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன் வண்டிமிர்
சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாச
னுண்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
னவின்ற வாய்மை நச்சினார்க் கினிய
னிருவினை கடியு மருவியம் பொதியின்

கக௦ நச்சினார்க்கினியர் வரலாறு.

மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
வூழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை தானே.

விருத்தம்.

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
வெச்சினாற் றிசையு முண்ணு மமிழ்தென வெழுநா வெச்சின்
மெச்சிநா ணாளும் விண்ணோர் மிசைகுவர் வேத போத
னச்சினார்க் கினிய னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.

பத்துப்பாட்டில்

இரண்டாவதாகிய

பொருநராற்றுப்படை

மூலமும் உரையும்.

நேரிசையாசிரியப்பா.

[பரிசில்பெற்றுவந்தபொருநன்

எதிர்வந்த பொருநனைவிளித்தல்:]

அரூஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறூது
வேறுபுல முன்னிய விரகறி பொருந
[பாலையாழும் அதனுறுப்பும்:]
குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்

இதன்பொருள். *

1. அரூஅ யாணர் அகல் தலை பெரு ஊர் - இடையறாத செல்வவருவாயுள்ள அகன்ற இடத்தையுடைய பெரிய ஊர்களிடத்து,

குறிப்பு. வருவாய் - வரும்படி.

2. சாறு கழி வழிநாள் சோறு நசை உறூது - விழாக்கழிந்த பின்னாளில் ஆண்டுப்பெறுகின்ற சோற்றை விரும்புதல்செய்யாது,

கு - பு. திருவிழாநடக்குமிடங்களிற் சென்றுபாடி உணவுமுதலியன பெறுதல் பொருநர்க்கு இயல்பு.

3. வேறு புலம் முன்னிய விரகு அறி பொருந - விழாக்கொண்டாடும் வேற்றுப்புலத்தைக் கருதிய உபாயத்தையறிந்த பொருந,

இஃது அண்மைவிளி.

கு - பு. வேற்றுப்புலம் - வேறிடம்.

4.. குளம்பு வழி அன்ன கவடு படு பத்தல் - மான்குளம்பழுத்திய இடத்தையொத்த இரண்டருகும்தாழ்ந்து நடுவுயர்ந்த பத்தலினையும்,

* மாணாக்கர்களுடைய விருப்பத்தின்படி, இவ்வுரையாகிய நச்சினார்க் கினியம், அவ்வவ்விடத்துச் சிறிதுசிறிது முடிபுமுதலியன வேறுபடுத்தப் பெற்றதென்றுணர்க.

பொருநராற்றுப்படை.

விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
யெய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
யளைவா ழலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி
யெண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
யண்ணா வில்லா வமைவரு வறுவாய்ப்

5. விளக்கு அழல் உருவின் விசி உறு பச்சை - விளக்கினது எரிகின்ற நிறத்தையுடைய விசித்துப் போர்த்தலுற்ற தோலாகிய,

தா - பு. விசித்து - இறுகக்கட்டி. "விளக்கழ லுறுத்த போலும் விசி யுறு போர்வை" என்றார் சிந்தாமணியிலும்; காந்த. கூஎ.

6. எய்யா இள சூல் செய்யோள் அவ்வயிற்று - மிக அறியப்படாத இளைய சூலையுடைய சிவந்த நிறத்தையுடையோளது அழகினையுடைய வயிற் றினிடத்து,

'செய்யோள்' என்றார், மயிரொழுங்கு விளங்கித் தோன்றுதற்கு.

தா - பு. எய்யாமை - அறியாமை. சூல் - கர்ப்பம்.

7. ஐது மயிர் ஒழுகிய தோற்றம் போல - மெல்லியதாகிய மயிர்

ஒழுங் குபடக்கிடந்த தோற்றரவுபோல,

கு - பு. ஐம்மை - மென்மை.

8. பொல்லம்பொத்திய பொதிஉறு போர்வை - இரண்டுதலையுங் கூட் டித்தைத்த மரத்தைப்பொதிதலுறும் போர்வையினையும்,

தோலாகிய போர்வையென்க.

கு - பு. "பழைய தோர்பொல்லம் பொத்திய பத்தர்யாழ்" என்றார்; (திருவிளை. விறகு. கரு).

9 - 10. அளை வாழ் அலவன் கண் கண்டு அன்ன துளை வாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி - வளையிலேவாழ்கின்ற நண்டின்கண்ணைக் கண்டா லொத்த பத்தலிரண்டுஞ்சேர்த்தற்குத் திறந்த துளைகளின் வாய் மறைதற்குக் காரணமாகிய முடுக்குதலமைந்த ஆணியினையும்,

தோல் நெகிழாமல் முடுக்கின ஆணியென்றுமுரைப்பர். அன்ன ஆணி யென்க.

11 - 12. எண்ணாள் திங்கள் வடிவிற்றாகி அண்ணா இல்லா அமை வரு வறு வாய் - உவாவிற்கு எட்டாநாளிற் றிங்களின்வடிவை உடைத்தாய் உண்ணாக்கில்லாத பொருந்துதல்வந்த வறியவாயினையும்,

கு - பு. உவா - பௌர்ணிமை. வறியவாய் - உள்ளீடில்லாதவாய். "பிறைபிறந் தன்னபின்னேந் துகவைக்கடை" என்பது, பெரும்பாணாற்றுப் படை, கக.

பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை யாய்தொடி கடுக்குங்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவி
னுய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
கேள்வி போகிய நீள்விசித் தொடையன்
மணங்கமழ் மாதரை மண்ணணி யன்ன
வணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
யாறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை

---

13. பாம்பு அணந்து அன்ன ஓங்கு இரு மருப்பின் - பாம்பு டுத்தாலொத்த ஓங்கின கரிய தண்டினையும்,
தலையெ

14. மாயோள் முன்கை ஆய் தொடி கடுக்கும் - கரியநிறத்தையுடையோளுடைய முன்கையில் அழகினையுடைய தொடியையொக்கும்,

த - பு. மா - கருமை.

15. கண்கூடு இருக்கை திண் பிணி திவவின் - ஒன்றோடொன்று நெருங்கின இருப்பையுடைத்தாகிய திண்ணிய பிணிப்பினையுடைய திவவினையும்,
இது நரம்புதுவக்கப்படுவது. கடுக்கும் திவவென்க.

த - பு. "மடந்தை முன்கைக், குறுந்தொடி யேய்க்கு மெலிந்து வீங்குதிவவு" என்றார்; (பெரும்பா. கஉ - கங).

16 - 18. ஆய் தினை அரிசி அவையல் அன்ன வேய்வை போகிய

விரல்
உளர் நரம்பின் கேள்வி போகிய நீள் விசி தொடையல் - அழகினையுடைய தினையரிசியிற் குத்தலரிசியையொத்த குற்றம்போகிய விரலாலசைக்கும் நரம்பினையுடைய இசைமுற்றுப்பெற்ற நீண்ட விசித்தலையுடைய தொடர்ச்சி

யிணையும்,

கு - பு. திணையின்குத்தலரிசியையொத்தகுற்றம், முறுக்காலுண்டாவது.

19. மணம் கமழ் மாதரை மண்ணி அன்ன - கலியாணஞ்செய்தமை தோற்றுகின்ற மாதரை அலங்கரித்தாலொத்த,

கு - பு. "மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி" என்றார்; (சில. கானல்).

20. அணங்கு மெய் நின்ற அமை வரு காட்சி-உரியதெய்வம் தன்னிடத் தேநின்ற இலக்கணம் அமைதல்வரும் அழகினையுமுடைய, பாலையாழ் (உஉ).

கு - பு. வீணைக்குரியதெய்வம், மாதங்கி.

21. ஆறு அலை கள்வர் படைஇட - வழியில் அலைக்கின்ற கள்வர் தம் கையிலுள்ள படைக்கலங்களைக் கைவிடும்படி,

21 - 22. அருளின் மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை - அருளி னது மாறாகிய மறத்தினை அவர்களிடத்துநின்று பெயர்க்கும் மருவுதலினிய பாலையாழை,

பாலை - ஆகுபெயர்.

கு - பு. மறம் - அருளின்மை, பாலையாழைக்கேட்பின், திருடர்களுக் கும் அருளுண்டாகுமென்பதாம்.

உஉ

பொருநராற்றுப்படை.

[யாழ்த்தொழில்:]

வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்துஞ்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி
[பாடினியின் கேசாதிபாதம்:]

உடு யறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
ணிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்

பத்தலினையும் (௪), பொல்லம்பொத்திய (௮) பச்சையாகிய (௯) போர்வையினையும் (௮), ஆணியினையும் (௧௦), வறுவாயினையும் (௧௨), மருப்பினை யும் (௧௩), வார்க்கட்டினையும் (௧௯), நரம்பின்றொடர்ச்சியினையும் (௧௮), காட்சியினையும் (௨௦) உடைய பாலையாழென முடிக்க.

"கொன்றைகருங் காலி குமிழ்முருக் குத்தணக்கே"
என்பதனுல், கோட்டிற்குமரம் கொன்றையும் கருங்காலியுமாம்; பத்தற்குமரம் குமிழும், முருக்கும், தணக்குமாம்.

23. வாரியும் - நரம்புகளைக்கூடத் தழுவியும்,

கு - பு. கூட - ஒருமிக்க,

23. வடித்தும் - உருவியும்,

23. உந்தியும் - தெறித்தும்,

23. உறழ்ந்தும் - ஒன்றைவிட்டு ஒன்றைத்தெறித்தும்,

வடித்தல் - நரம்பெறிதலென்றுமுரைப்பர்.

24. சீர் உடை நல் மொழி நீரொடு சிதறி - சீரையுடைத்தாகிய தேவ பாணிகளை நீர்மையுடன் பரக்கப்பாடி,

சீரெனவே பாணியுந் தூக்கும் உளவாயின.

கு - பு. தேவபாணி - தெய்வங்களைத்துதிக்கும் பாட்டு; "மாயோன் பாணியும் வருணப் பூதர், நால்வகைப் பாணியும்" என்பதனுலுணர்க; (சில. கடலாடு. ௩௯ - ௩௪). சீர்முதலியன தாள்விசேடங்கள்; சீர் - முடியுங்கா லத்தைத் தன்னிடத்தேயுடையது; பாணி - எடுக்குங்காலத்தைத் தன்னிடத் தேயுடையது; தூக்கு - நிகழுங்காலத்தைத் தன்னிடத்தேயுடையது.

25. அறல் போல் கூந்தல் - ஆற்றறல்போலும் கூந்தலினையும்,

25. பிறை போல் திரு நுதல் - பிறைபோல அழகினையுடைய நெற்றியினையும்,

26. கொலை வில் புருவத்து - கொலைத்தொழிலையுடைய விற்போலும் புருவத்தினையும்,

26. கொழு கடை மழை கண் - அழகிய கடையினையுடைய குளிர்ந்த கண்ணினையும்,

27. இலவு இதழ் புரையும் இன் மொழி துவர் வாய் - இலவினது இதழையொக்கும் இனியசொல்லையுடைய செம்மையுடைத்தாகிய வாயினையும்,

த - பு. துவர் - செம்மை.

பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
னாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னாடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகி
ரணங்கென வுருத்த சுணங்கணி யாகத்து
....
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ

28. பல உறு முத்தின் பழி தீர் வெள் பல் - பலவுஞ்சேர்ந்த முத்துக்கள்போற் குற்றந்தீர்ந்த வெள்ளிய பல்லினையும்,

பலமுத்தென்ருர், ஒருகோவையாயிருத்தலின். இனி, பலவிலையுற்ற மூத்தென்றுமாம்.

29. மயிர் குறை கருவி மாண் கடை அன்ன - மயிர்வெட்டுகின்ற கத் தரிகையினுடைய மாட்சிமைப்பட்ட குழைச்சையொத்த,

கு - பு. கத்தரிகை - கத்தரிக்கோல்.

30. பூ குழை ஊசல் பொறை சால் காதின் - பொலிவுபொருந்திய மகரக்குழையினுடைய அசைவினைப் பொறுத்தலமைந்த காதினையும்,

கு - பு. ஊசல் - அசைவு.

31. நாண் அட சாய்ந்த நலம் கிளர் எருத்தின் - நாணம் வருத்தலாற் பிறரைநோக்காதுகவிழ்ந்த நன்மைவிளங்குகின்ற கழுத்தினையும்,

32. ஆடு அமை பணை தோள் - அசைகின்ற மூங்கில்போலும் பெருத் தலையுடையதோளினையும்,

32. அரி மயிர் முன்கை - மெல்லியமயிரினையுடைய முன்கையினையும்,

33. நெடு வரை மிசைஇய காந்தள் மெல் விரல் - நெடிய மலையின் உச்சியிடத்தனவாகிய காந்தள்போலும் மெல்லிதாகிய விரலினையும், 34. கிளி வாய் ஒப்பின் ஒளி விடு வள் உகிர் - கிளியினது வாயோடொப்பினையுடைய ஒளிவிடுகின்ற பெருமையையுடைத்தாகிய நகத்தினை யும்,

35. அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து - பிறர்க்கு வருத்த மெனத் தோற்றின சுணங்கணிந்த மார்பினையும்,

36. ....
......

37. நீர் பெயர் சுழியின் நிறைந்த கொப்பூழ் - நீரிடத்துப் பெயர்தலை
யுடைய சுழிபோல உத்தமவிலக்கணங்கள் நிறைந்த நாபியினையும்.

பொருநராற்றுப்படை.

உண்டென வுணரா வுயவு நடுவின்
வண்டிருப் பன்ன பல்காழ் ....
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்கு

---

38. உண்டென உணரா உயவும் நடுவின் - உண்டென்று பிறருண ரப்படாத வருந்துமிடையினையும்,

'உயவின்' என்று பாடமாயின், வருந்துதலையுடையவென்க.

39. வண்டு இருப்பு அன்ன பல் காழ் .... - பல வண்டினங்
களின் இருப்பையொத்த பலமணிகோத்த வடங்களையுடைய மேகலையை
யும், ...

காழ் - ஆகுபெயர்.

ௐ - பு. காழ் - மணிக்கோவை, "பாடுவண் டிருந்த வன்ன

பல்கலை" என்முர்; (சீவக. சுர. உ).

40. இரு பிடி தட கையின் செறிந்து திரள் குறங்கின் - பெரிய பெண்
யானையினுடைய பெருமையையுடைய கைபோல ஒழுகவந்து மெல்லிதாகத் தம்மில்நெருங்கி ஒன்றித்திரண்ட துடையினையும்,

தூ - பு. ஒழுக - நீள.

41. பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்கு ஒப்ப - இலக்கணமென் றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட ஏனையிலக்கணங்கள்திருந்தின கணைக்காலுக்குப் பொருந்த,

42. வருந்து நாய் நாவின் - ஓடியிளைத்த நாயினது நாப்போல,

42. பெரு தகு சிறு அடி - பெருமை தக்கிருக்கும சிறிய அடியினையு முடைய, பாடினி (சஎ) என்க.

பெருவென் னுமுதனிலை பெருமையையுணர்த்திநின்றது.

தூ . பு. "மதந்தபுளுமலி நாவி னன்ன துளங்கியன் மெலிந்தகல் பொருசீறடி" என்பது மலைபடுகடாம், சஉ - சங..

43. அரக்கு உருக்கு அன்ன செந்நிலன் ஒதுங்கலின் - சாதிலிங்கத்தை உருக்கின தன்மையொத்த செய்யநிலத்தே நடக்கையினலே,

44. பரல் பகை உழந்த நோயொடு சிவணி - சுக்கான்கல்லாகிய பகை யாலே வருந்தின நோயோடேபொருந்தி,

45. மரல் பழுத்தன்ன மறுகு நீர் மொக்குள் - மரல்பழுத்தாற்போன்ற தளும்புநீரையுடைய கொப்புளம்;

ணன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
[கடவுள் வழிபாடு:]
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
யிலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
[கேட்பாயென்று நயம்படக்கூறல்:]
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாண்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி

---

46. நல் பகல் அந்தி நடை இடை விலங்கலின் - நன்றாகிய உச்சிக் காலமான சந்தியிலே நடத்தலை நடுவே தவிர்த்தலாலே,

தவிர்த்தலாலே, அல்கி (௪௯) என்க.

கு - பு. கொப்புளம் தவிர்த்தலாலேயென்க ; கொப்புளம்தோன்றின மையின், நடத்தலொழிந்தாள்.

47 பெடை மயில் உருவின் - பெடைமயில் அருகுநின்ற மயில்போலும் சாயலினையுடைய,

47. பெரு தகு பாடினி - கல்விப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

கு - பு. பாடினி - பாடுபவள் ; இவள்விறலியென்றும் பாணிச்சியென் றும் கூறப்படுவேள்.

48. பாடின பாணிக்கு ஏற்ப - பாடின தாளத்திற்குப் பொருந்த,

48 - 49. நாடொறும் களிறு வழங்கு அதர் கானத்து அல்கி - நாடோறும் யானையுலாவரும் வழியையுடைய காட்டிடத்தே தங்கி,

50. இலை இல் மராத்த - இலையில்லாத மராமரத்திடத்துள்ள,

50. எவ்வம் தாங்கி - சூரியவெப்பத்தால்வந்த துன்பத்தைத் தாங்குத லால்,

51. வலை வலந்தன்ன மெல் நிழல் மருங்கில் - வலையை மேலேகட்டினாலொத்த மெல்லிய நிழலினிடத்தே,

52. காடு உறை கடவுள் கடன் கழிப்பிய பின்றை - காட்டின்கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச்செய்யும் முறைமைகளைச் செய்துவிட்டபின்பு,

கடன்கழித்தல் - தடாரியைவாசித்தல்.

கு - பு. தடாரி - ஒருவகைப்பறை.

53 - 54. பீடு கெழு திருவின் பெரு பெயர் நோன் தாள் முரசு முழங்கு தானை மூவரும் கூடி - பெருமைபொருந்தின செல்வத்தையும் பெரிய பெயர்களையும் வலியையுடைய முயற்சியையும் வெற்றிமுரசுமுழங்கும் படையினையுமுடைய சேரசோழபாண்டியர் தம்மிற் பகைமைநீங்கிச் சேர்ந்து,

பொருநராற்றுப்படை.

யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந
வறியா மையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே

போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந
வாடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
றெழுமதி வாழி யேழின் கிழவ

---

55. அரசவை இருந்த தோற்றம் போல - செல்வக்குறைபாடின்றி அர சிருத்தற்குரிய அவையாகவிருந்த தோற்றரவுபோல,

பாட்டு, நிருத்தகீதவாச்சியத்தை யுடைமையின், அரசரோடு உவமித்தார்.

56 - 57. பாடல் பற்றிய பயன் உடை யெழாஅல் கோடியர் தலைவ - மிடற்றுப்பாடலைத் தொடங்கி எழுந்திருந்த பயன்களைத் தன்னிடத்தேயுடை த்தாகிய யாழையுடைய கூத்தர்க்குத்தலைவனே,

இவன் போர்க்களம்பாடும் பொருநனாதலானும், கூத்தரில் இவனிற்சிற ந்த கூத்தர் இன்மையானும் இங்ஙனங் கூறினர்.

57. கொண்டது அறிந அறிந - பிறர் மனத்துக்கொண்டதனைக் குறிப்பால் அறியவல்லாய்,

58. அறியாமையின் நெறி திரிந்து ஒராஅது - வழியறியாமையினாலே இவ்வழியைத்தப்பி வேறொருவழியிற் போகாதே,

59. ஆற்று எதிர்ப்படுதலும் நோற்றதன் பயனே - இவ்வழியிலே என் னைக்காண்டலும் நீமுற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனே,

60. புகழ் மேம்படுந போற்றி கேண்மதி - புறத்தார்புகழை அரசவை களிலே மேம்படுத்தவல்லாய், யான்கூறுகின்றவற்றை விரும்பிக்கேட்பாயாக;

61 - 62. ஆடு பசி உழந்த நின் இரு பேர் ஒக்கலொடு நீடு பசி

ஓராஅல் வேண்டின் - அடுகின்ற பசியாலேவருந்தின நின்னுடைய கரிய பெரியசுற்றத்தோடே தொன்றுதொட்டுவந்தபசி நின்னைக் கைவிடுதலை விரும்புவை யாயின்,

62 - 63. நீடு இன்று எழுமதி - நீட்டித்தலின்றி எழுந்திருப்பாயாக;

கு - பு. மதி - முன்னிலையசை.

63. வாழி - நீவாழ்வாயாக;

63. எழின் கிழவ - சூரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தார மென்னு மேழின்கண் உரிமையுடையாய்,

[தன்வரலாறுகூறல்:]

பழுமர முள்ளிய பறவையின் யானுமவ
ணிழுமென் சும்மை யிடனுடை வரைப்பி
னசையுநர்த் தடையா நன்பெரு வாயி
லிசையேன் புக்கென் னிடும்பை தீர
வெய்த்த மெய்யே னெய்யே னாகிப்
பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
யிருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிய
லொன்றியான் பெட்டா வளவையி னொன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி

64. யானும் பழுமரம் உள்ளிய பறவையின் - செல்வமெய்தியயானும் முன்பு பழுத்தமரத்தை நினைத்துச்செல்கின்ற புட்போல,

64 - 65. அவன் இழுமென் சும்மை இடன் உடை வரைப்பின் - அவனுடைய இழுமென்றெழும் ஓசையினையுடைய அகலமுடைத்தாகிய மதிலில்,

66. நசையுநர் தடையா நல் பெரு வாயில் - நச்சிவந்தார்க்குத் தடையில்லாத நன்றாகிய பெரிய கோபுரவாயிலின்கண்ணே,

தி - பு. "பொருநர்க் காயினும் புலவர்க்காயினு, மருமறை நாவி னந் தணர்க்காயினும்......அடையா வாயில்" என்பது சிறுபாணாற்றுப்படை, உ௦௩ - உ௦௬.

67. இசையேன் புக்கு - வாயிலோனுக்குக் கூறாமற்புகுந்து,

67. என் இடும்பை தீர - என்னுடைய வறுமைத்துன்பம் தீர்தல் காரணமாக,

68. எய்த்த மெய்யேன் எய்யேனாகி - முன்பு இளைத்த உடம்பையுடைய யான் அவ்வாயிற்குள்ளேசென்ற உவகையாலே பின்பு இளைப்புத் தீர்ந்து,

69 - 70. பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப கை கசடு இருந்த என் கண் அகல் தடாரி - படம்விரித்த பாம்பினது பொறியையொப்பக் கையினது வடுப்பட்டுக்கிடந்த எனது கண்ணகன்ற உடுக்கையிற் றோற்றுவிந்த,

71. இரு சீர் பாணிக்கு ஏற்ப - இரட்டைத்தாளத்திற்குப் பொருந்த,

71 - 72. விரி கதிர் வெள்ளி முளைத்த நள் இருள் விடியல் - விரிகின்ற கிரணங்களையுடைய வெள்ளியெழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தே,

73. ஒன்று யான்பெட்டா அளவையின் - ஒருபாட்டினை யான் பேணிப்பாடுவதற்கு முன்னே,

ரு - பு. பொருந்தப் பாடுதற்கு முன்னேயென்க. சென்று பாடுதல் பொருநர்க் கியல்பு.

விடியற்காலத்தே

73 - 74. ஒன்றிய கேளிர் போல கேள் கொளல் வேண்டி - முன்பே தன்னோடுபொருந்திய நட்டாரைப்போல என்னுடன் உறவுகொள்ளுதலை விரும்பி,

உஉ

கஎ0

பொருநராற்றுப்படை.

எடு வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமொ
டுருகு பனைபோ லென்பு குளிர்கொளீஇ
யீரும் பேனு மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை நல்கி
மழையென் மருளு மகிழ்செய் மாடத்

75. வேளாண் வாயில் வேட்ப கூறி - தான் உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே யான்எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக்கூறி,

தி - பு. ‡ "கரப்பிலா நெஞ்சிற் கடன்றிவார் முன்னின், றிரப்புமோ ரேஎ ருடைத்து" என்பது திருக்குறள், ௧0௫௩.

76. கண்ணில் காண நண்ணு வழி இரீஇ - தன் கண்ணிலேகாணும்படி தனக்குஅண்ணிதான இடத்திலே என்னை இருத்தி,

77. ‡ பருகு அன்ன அருகா நோக்கமோடு - கண்ணாற்பருகுந் தன்மை யையொத்த கெடாத பார்வையாலே,

78. உருகுபவைபோல் என்பு குளிர்கொளீஇ - உருகும் மெழுகுமுதலி யனபோல் நெகிழும்படி என்பைக்குளிர்வித்து,

நோக்கத்தாலே (௭௭) குளிர்கொளீஇ (78) யென்க.

79. ஈரும் பேனும் இருந்து இறைகூடி - ஈரும்பேனும் கூடியிருந்து. அரசாண்டு,

80 - 81. வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த துன்னல் சிதாஅர் துவர் நீக்கி - வேர்வையாலேநனைந்து சறடுகள் உள்ளேயோடுதற்குக் காரணமாகிய தைத்தற்றொழிலையுடைய சீலையை என்னிடத்தினின்றும் முற்றப் போக்கி,

82 - 83. நோக்கு நுழைகல்லா நுண்மைய பூ கனிந்து அரவு உரி அன்ன அறுவை நல்கி - கண்ணிற்பாவை இஃது இழைபோனவழியென்று குறித்துப் பார்க்கவாராத தன்மையையுடையவாய்ப் பூத்தொழில் முற்றப் பெற்றதன்மையாற் பாம்பினது தோலையொத்த துகிலை நல்கி,

கு - பு. "பையர வுரியினன்ன நடைப்படாம்" என்பர்; (திருவிளை. திருமண. கசஎ).

84. மழை என - மேகத்தைப்போல,

84. மருளும் மகிழ் - உண்டார்மயங்குதற்குக் காரணமாகியகள்ளை,

மகிழ் - ஆகுபெயர்,

84. செய்மாடத்து - அலங்கரித்துச் செய்யப்பெற்ற மாடத்தின் கண்ணே.

இழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
வார வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை மற்றவன்
திருக்கிளர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
ததன்பய மெய்திய வளவை மான
வாறுசெல் வருத்த மகல நீக்கி

---

85. இழை அணி வனப்பின் இன் நகை மகளிர் - ஆபரணங்களையணிந்த அழகினையுடைய பாட்டாலும் கூத்தாலும் வார்த்தையாலும்

அரசனுக்கு இனியமகிழ்ச்சியைச் செய்யுமகளிர்,

"இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (உஉ0) என்றார், சிறுபா

ணாற்றிலும்.

86. போக்கு இல் பொலம் கலம் நிறைய - ஓட்டற்ற பொன்னாற்செய்த வட்டில்நிறைய,

86 - 87. பல்கால் வாக்குபு தரத்தர - பலமுறை வார்த்துத்தரத்தர,

87 - 88. வருத்தம் வீட ஆர உண்டு பெரு அஞர் போக்கி - வழிவந்த வருத்தம் போம்படி நிறையவுண்டு கள்ளுண்ணப்பெறுகிலேமென்று நெஞ் சிற்கிடந்த பெரிய வருத்தத்தையும்போக்கி,

89. செருக்கொடு நின்ற காலை - மகிழ்ச்சியுடனே நான்நின்ற அந்திக் காலத்தே,

89 - 90. மற்று அவன் திரு கிளர் கோயில் ஒருசிறை தங்கி - இங்ஙன மிடிதீர்ந்தபின்பு அவனுடைய செல்வம்விளங்குகின்ற கோயிலில் ஒருபுக் கத்தே கிடந்து,

அவனைச் சேவித்துநிற்கின்ற நங்குலத்திலுள்ள மகளிர் (அகு) பொலங் கலநிறைய (அகூ) மகிழை (அஎ) வார்த்துத் தரத்தர (அஎ) உண்டு போக்கிக்

(அஅ) கோயிலில் ஒருசிறைத் தங்கியென முடிக்க.

91 - 92. தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது அதன் பயம் எய்திய அளவை மான - மிக்க தவத்தைச்செய்கின்ற மாக்கள் தம்முடைய தவஞ்செய்தவுடம்பைப் போகடாதேயிருந்து அத்தவத்தாற்பெறும் பயனைப் பெற்ற தன்மையையொப்ப,

மக்களென்னாது மாக்களென்றார், வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்.

93. ஆறு செல் வருத்தம் அகல நீக்கி - வழிபோனவருத்தத்தை என்னிடத்துச் சிறிதும் இல்லாமற்போக்கி,

யனந்தர் நடுக்க மல்லது யாவது
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையுங்
கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லனூர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
கல்லா விளைஞர் சொல்லிக் காட்டக்
கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉ

94 - 95. அனந்தர் நடுக்கம் அல்லது யாவதும் மனம் கவல்பு இன்றி மாழாந்து எழுந்து - கள்ளின் செருக்காலுண்டான மெய்ந்நடுக்கமல்லது சிறிதும் வேறுமனக்கவற்சியின்றி மயங்கிப் பின் துயிலுணர்ந்து,

கவல்பு - கவற்சியெனப் பெயராய் நின்றது.

96. மாலை அன்னது ஓர் புன்மையும் - யான் அவனைக் காண்பதற்கு முன்னாளின் மாலைக்காலத்தில் என்னிடத்திலின்ற சொல்லிற்கு எட்டாத நிலைமையும்,

அன்னது - சேர்த்திசுட்டு.

96 - 97. சாலை கண்டோர் மருளும் வண்டு சூழ் நிலையும் - அவனைக் கண்ட பொழுதில் என்னைக்கண்டவர் நெருநல்வந்தவனல்லனென்று மருளுதற்குக் காரணமான வண்டுகள் இடையறாதுமொய்க்கின்ற தன்மையையும் காட்டி,

பல நறுநாற்றங்களும் தானுடைமையின், 'வண்டுசூழ் நிலை' என்றான்.

98. கனவென மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப - இது கனவாயிருக்குமென்று கலங்கிய என்னுடையநெஞ்சு நனவென்று துணிய,

99. வல் அஞர் பொத்திய மனம் மகிழ் சிறப்ப - வலிய மிடியாலுண்டாகிய வருத்தம்பொதிந்த கூட்டத்தார்மனம் மகிழ்ச்சி மிக,

100. கல்லா இளைஞர் சொல்லி காட்ட - அவற்குரியபுகழ்களைத் தாங்கள் முற்றக்கற்று என்பின்னின்ற இளையவர் அவற்றைச் சொல்லிக்காட்ட,

கல்லாவென்பது, செய்யாவென்னுமெச்சம்; இனி, தத்தம் சிறுதொழி லன்றி வேறொன்றுங்கல்லாத இளைஞர், நெருநல்வந்தவன் இவனென்று அரசனுக்குச் சொல்லிக்காட்ட வென்றுமாம். என்றது, இவனது வேறுபாடு கூறிற்றும்.

101. கதுமென கரைந்து வம்மென கூஉய் - அதுகேட்டு அவர்களைக் கெவலழைத்துவாருமென்று வாயிலோர்க்குக்கூறி யாங்கள் சென்றபின் தான் அணுகவாருமென்று அழைக்கையினாலே,

யதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய்வெய் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவைய
வேறுபல் லுருவின் விரகு தந்திரீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சீறியா
ழொண்ணுதல் விறலியர் பாணி தூங்க

"ஏனோருந் தம்மென" (மதுரைக்காஞ்சி, எசஎ) என்புழித் தம்மென் பது தாருமெனநின்றாற்போல வம்மென்பது வாருமென்னும் பொருட்டாய் நின்றது.

102. அதன் முறை கழிப்பிய பின்றை - அக்காட்சியிடத்துச் செய்யு முறைமைகளை யாங்கள் செய்துமுடித்தபின்பு,

102. பதன் அறிந்து - காலமறிந்து,

103 - 104. துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின் பராரை வேவை பருகென தண்டி - அறுகம்புல்லாற்றிரித்த பழுதைதின்ற செம்மறிக் கிடாயினது அழகினையுடைய புழுக்கினதசையிற் பரிய மேற்குறங்கு நெகிழ வெந்ததனை விழுங்கென்று பலகாலலைத்து,

105 - 106. காழில் கோழூன் சுட்ட கொழு குறை வெய்து வாய் ஊழின் ஊழின் ஒற்றி - இருப்பு நாராசத்தே கொழுத்த இறைச்சிகளைக் கோத்துச் சுட்ட கொழுவிய பெரியதசைகளின் வெம்மையை வாயிடத்தே இடத்தினும்வலத்தினுஞ்சேர்த்தி ஆற்றித்தின்று,

107. அவை அவை முனிகுவம் எனினே - புழுக்கின இறைச்சியையும் சூட்டிறைச்சியையும் யாங்கள் இனி வேண்டே மென்கையினாலே,

107 - 108. சுவைய வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ - இனிமையுடையவாய் வெவ்வேறாகிய பலவடிவினையுடைய பணியாரங்கள்கொண்டுவந்து அவற்றைத் தின்னும்படி எங்களையிருத்தி,

உபாயங்களாற் பண்ணப்படுதலின், விரகென்றார்; ஆகுபெயர்.

109 - 110. பண் அமை சீறியாழ் ஒண்ணுதல் விறலியர் மண் அமை முழவின் பாணி தூங்க - பண்குறைவற்ற சிறிய யாழையும் ஒள்ளிய நுதலினையுமுடைய விறல்படப்பாடியாடுவார் மார்ச்சனையமைந்த முழவினது தாளத்திற்கு ஆடும்படி,

௯ - பு. விறலை வடநூலார் சத்துவ மென்பர்.

களசு பொருநராற்றுப்படை.

மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநா
ளவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பால்வறைக் கருனை காடியின் மிதப்ப
வயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி
யுயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந் தொருநாட்

---

111. மகிழ் பதம் பன்னாள் கழிப்பி - மகிழ்ச்சியையுடைய கள்ளுண்டலிலே பலநாள்போக்கி,

இனி, பதம் - காலமுமாம்.

111 - 112. ஒருநாள் அவிழ் பதம் கொள்க என்று இரப்ப - ஒருநாள் சோறாகியஉணவையும் கொள்வாயாகவென்று வேண்டிக்கொள்கையினாலே,

த - பு. அவிழ் - பருக்கை.

112 - 114. முகிழ் தகை முரவை போகிய முரியா அரிசி விரலென நிமிர்ந்த நிரல அமை புழுக்கல் - முல்லையரும்பின் தகைமையினையுடைய வரியற்ற இடைமுரியாத அரிசி விரலென்னும்படி நெடிகின ஒன்றோடொன்றுசேராத சோற்றையும்,

பழுத்தவரிசியை ஆக்கினமைதோன்ற நிரலமை புழுக்கலென்றார்.

115 - 116. பால் வறை கருனை காடியின் மிதப்ப அயின்ற காலை - பாலைப் பொரித்ததனோடேகூடிய பொரிக்கறிகளையும் கழுத்திடத்தேவைத்து நிரம்பும்படி விழுங்கினகாலத்தே,

இனி காடியைப் புளிங்கறியாக்கிப் புளிங்கறியோடே நிரம்ப விழுங்கின காலையென்றுமுரைப்பர்.

தி - பு. "மூரலை போகிய மூரிவில்வான் மூரல் பால் வறையல், கருனை" (திருவிளை. குண்டோதரனுக்கு. கச) என்பது இந்தப் பகுதியைத் தழுவி வந்தமை காண்க.

116. பயின்று இனிது இருந்து - அவனைவிடாதே இனிதாகவிருந்து,

117 - 118. பல்லே கொல்லை உழு கொழு ஏய்ப்ப எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்கி - எம்முடையபற்கள் கொல்லைநிலத்தேயுழுத கொழு வையொப்பப் பகலும்இரவும் இறைச்சியைத்தின்று முனைமழுங்கி, 119. உயிர்ப்ப இடம் பெறாஅது ஊண் முனிந்து - இளைப்பாற இடம் பெறாதே இவ்வுணவுகளை வெறுத்து,

முற்கூறியனவெல்லாம் உண்டற்றொழிற்கு உரிமையுடைமையின், 'ஊண்முனிந்து' என்றார்.

119. ஒருநாள் - ஒருநாளில்,

செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
யகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்

---

120 - 121. செயிர்த்து எழு தெவ்வர் திறை துறை போகிய செல்வ - குற்றத்தைச்செய்தெழுந்த பகைவரைத் திறைகொள்ளும் கூறுபாடுகளெல்லாம் முடியப்போன செல்வா,

121 - 122. பெயர்ந்து எம் தொல் பதி சேறும் என மெல்லென கிளந்தனமாக - இனி மீண்டு எம்முடைய பழைய ஊரிடத்தே செல்வேமென்று மெத்தெனச் சொன்னேமாக,

'தொல்பதி' என்றார், இதுவும் தமக்குப்பதியென்பது தோன்ற.

122. வல்லே - விரைவில்,

123 - 124. சிறியவன் போல் செயிர்த்த நோக்கமொடு எம் ஆயம் விட்டு அகறிரோ என - அதுகேட்டுக் கோபித்தான்போல எமக்குவருத்தத் தைச்செய்த பார்வையுடனே எம்திரளைக் கைவிட்டுப் போகின்றீரோவெனச் சொல்லி,

125. துடி அன்ன அடி தூங்குநடை குழவியொடு - உடுக்கையின் கண்ணையொத்த அடிகளையும் அசைந்த

நடையினையுமுடைய கன்றுகளுடனே,

கு - பு. கன்று - யானைக்கன்று.

126. பிடி புணர் வேழம் கொள்க என - பிடியொடுபுணர்ந்த களிறுகளைக் கைக்கொள்வாயாகவென்று சொல்லி,

126 - 127. பெட்டவை தன் அறி அளவையில் தரத்தர - பின்னும் தான்விரும்பியிருந்த ஊர்திகள் ஆடைகள் அணிகலங்கள் முதலியவற்றைத் தான் அறிந்தஅளவாலே மேன்மேலேதர,

127 - 128. யானும் என் அறி அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு - யானும் என்னுடையகுறைகளை யானறிந்த அளவாலே வேண்டுவனவற்றை வாரிக்கொண்டு,

டின்மை தீர வந்தனென் வென்வே
[தலைவனுடையதந்தை:]
லுருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
[தலைவன்:]
முருகற் சீற்றத் துருகெழு குரிசி
றாய்வயிற் றிருந்து தாய மெய்தி
யெய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்

129. இன்மை தீர வந்தனென் - மிடி எக்காலமும்

இல்லையாம்படி வந்தேன் ;

யானும் அவன் (சுச) வரைப்பின் (சுரு) வாயிற்கண்ணே (சுசு) புக்கு என் இடும்பைதீர்தல் காரணமாக (சுஎ) எய்யேனாகி (சுஅ) விடியற்காலத்தே (எஉ) ஒன்று யான்பெட்டாவளவையிற் (எரு) கொளல்வேண்டிக் (எச) கூறி (எகு) இருத்தி (எசு) நோக்கத்தாலே (எஎ) குளிர்கொளுத்திச் (எஅ) சிதார் நீக்கி (அக) நல்கி (அரு) மகளிர் (அகு) மகிழை (அச) வார்த்துத்தரத்தர (அஎ) உண்டு போக்கி (அஅ) நின்றகாலைத் (அகூ) தங்கி (கூo) நீக்கி (கூரு) எழுந்து (கூகு) எமாப்பச் (கூஅ) சொல்லிக்காட்டக் (கoo) கூவுகையினாலே (கoக) கழிப்பியபின்றைத் (கoஉ) தண்டி (கoச) ஒற்றி (கoசு) வேண்டேமென்கை யினாலே (கoஎ) இரீஇத் (கoஅ) தூங்கக் (ககo) கழிப்பி (ககக) இரப்ப (ககஉ) அயின்றகாலத்திலே இருந்து (ககரு) மழுங்கி (ககஅ) முனிந்து (ககசு) சேறுமெனை (கஉக) ஒருநாட் (கககூ) கிளந்தனமாக (கஉஉ), அகறிரோவெனச் சொல்லித் (கஉரு) தரத்தர யானும் (கஉஎ) தவஞ்செய்மாக்கள் (ககூ) அதன் பயமெய்திய அளவைமான (கூஉ) வேண்டுவ முகந்துகொண்டு (கஉஅ) இன்மைதீர வந்தனென் (கஉகூ) என வினைமுடிக்க.

129 - 130. வென் வேல் உருவ பல் தேர் இளையோன் சிறுவன் - வென் றிவேலினையும் அழகினையுடைய பலதேரினையுமுடைய இளஞ்சேட்சென்னி யுடைய புதல்வன்,

131. முருகன் சீற்றத்து உரு கெழு குரிசில் - முருகனது சீற்றம்போலும் சீற்றத்தையுடைய உட்குதல்பொருந்திய தலைவன்,

ரு - பு. உட்குதல் - பிறர் அஞ்சுதல்.

132. தாய் வயிற்று இருந்து தாயம் எய்தி, பிறந்து (கருஎ) - தாயுடைய வயிற்றிலேயிருந்து அரசவுரிமையைப்பெற்றுப் பிறந்து,

தான் பிறக்கின்றகாலத்துப் பிறவாதே நல்லமுகூர்த்தம் வருமளவும் தா யுடையவயிற்றிலேயிருந்து பிறக்கையினாலே

அரசவுரிமையைப்பெற்றென் றூா.

ஒ - பு. " உருகெழு தாய மூழி னெய்தி" என்பது, பட்டினப்பாலை, உஉஎ.

133. எய்யா தெவ்வர் ஏவல் கேட்ப - முன்பு தன்வலியறியாத பகைவர் பின்பு தன்வலியினையறிந்து ஏவினதொழிலைச் செய்ய,

செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பௌவ மீமிசைப் பகற்கதிர் பரப்பி

வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப

வாளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்

தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்

கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலு

134. செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப - ஏவல்செய்யாத பகைவர் தேசம் மனக்கவற்சிபெருக,

135 - 136. வெம் வெம் செல்வன் பௌவம் மீமிசை பகல் கதிர் பரப்பி விசும்பு படர்ந்தாங்கு - வெம்மையையுடைய எல்லாராலும்விரும்பப் படும் இளஞாயிறு கடலின்மீதே பகற்பொழுதைச்செய்யுங் கிரணங்களைப் பரப்பிப் பின்னர் விசும்பிலே மெத்தெனச்சென்றாற்போல,

137. பிறந்து—,

137. தவழ் கற்றதன் தொட்டு - தவழ்தலைக் கற்றநாள் தொடங்கி,

137 - 138. சிறந்த நல் நாடு செகில் கொண்டு நாடொறும் வளர்ப்ப - ஏனையோர்நாட்டிற்சிறந்தநாட்டைத் தோளிலேவைத்துக்கொண்டு நாடோறும் வளர்த்தல்காரணமாக,

139. ஆளி நல் மான் அணங்கு உடை குருளை - ஆளியாகிய நல்லமாவினது வருத்துதலையுடையகுட்டி,

140. மீளி மொய்ம்பின் மிகு வலி செருக்கி - கூற்றுவனுடைய வலி யிற்காட்டின் மிகுகின்றவலியாலே கலித்து,

141. மூலை கோள் விடாஅ மாத்திரை - முலையையுண்டலைக் கைவி டாத இளையபருவத்தே,

யாளியை ஆளியென்றார், "கடிசொலில்லை" (தொல். எச்ச. ருக) என் பதனான். "நாயே பன்றி" (தொல். மர. அ) என்னுஞ் சூத்திரத்து, 'ஆயுங் காலை' என்பதனாற் குருளையென்பது முடித்தாம்.

141. ஞெரேரென - கடுக,

142. தலை கோள் வேட்டம் களிறு அட்டாங்கு - முற்பட இரையைக் கோடற்குக்காரணமான வேட்டையிலே களிற்றைக் கொன்றாற்போல,

143. இரு பனம் போந்தை தோடும் - கரிய பனங்குருத்தில்

அலர்ந்த வலப்பக்கத்து ஓலையும்,

“தோடே மடலே” (தொல். மர. அசு) என்னுஞ் சூத்திரத்து, ‘பிறவும்’ என்றதனாற் போந்தைமுடித்தாம்; அதனிடத்தினின்றும் போந்ததனாற் போந்தையென்றார்.

143 - 144. கரு சினை வேம்பின் அரம் வாய் ஆம் குழை தெரியலும்

ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
றாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்

[தலைவனது கொடை:]

ஈற்றா விருப்பிற் போற்றுபு நோக்கிநுங்
கையது கேளா வளவை யொய்யெனப்

கரிய கொம்பினையுடைய வேம்பினுடைய வாளரத்தின் வாய்போலும் விளிம்பினையுடைய அழகிய தளிராற்செய்த மாலையும்,

145 - 146. ஓங்கு இரு சென்னி மேம்பட மிலைந்த இரு பெரு வேந்த

ரும் ஒருகளத்து அவிய - நறிய மாலைகளில் மேலாதற்குக் காரணமான பெரிய தலையிலே ஏனையோர்சூடும் அடையாளப்பூக்களிற் சிறப்ப அவற்றைச்சூடிய சேரனும் பாண்டியனும் ஒருகளத்தே படும்படி,

147 - 148. வெண்ணி தாக்கிய வெரு வரு நோன் தாள் கண் ஆர் கண்ணி கரிகால் வளவன் - வெண்ணியென்கின்ற வூரிடத்தேபொருத அச்சந் தோன்றுகின்ற வலியையுடைய முயற்சியையும் கண்ணுக்கு அழகுநிறைந்த ஆத்திமாலையினையுமுடைய கரிகாற்சோழன்,

"மூச்சக் கரமும்" என்னுங் கலியானே கரிகாலாதலுணர்க.

கு - பு. வெண்ணியென்னுமிடம், கரிகாலன் பகைவர்களைவென்ற போர்க்களமென்பதை, புறநானூறு, கசு - ம் செய்யுளாலுமுணர்க; இது சோழநாட்டில் நீடாமங்கலத்திற்கு மேற்கேயுள்ளது; பாடல்பெற்ற சிவஸ்தலம்; 'கோவிலுண்ணி' என வழங்குகின்றது. "மூச்சக்கரம்" என்னும் செய்யுளை, இப்புத்தகத்தின் இறுதிப்பக்கத்திற்காண்க.

தாயமெய்திப் (கருஉ) பிறந்து (கருஎ) தெவ்வர் எவுஃகேட்பச் (கருரு) செய்யார்தேஎம் தெருமரல்கலிப்ப (கருச) நாடுசெகிற்கொண்டு நாடொறும்
வளர்த்தல்காரணமாகக் (கருஅ) குறளை (கருகூ) களிறட்டாங்கு (கசஉ) இருபெருவேந்தரும் அவியத் (கசரு) தாக்கிய (கசஎ) கரிகால் வளவனெனமுடிக்க.

149 - 150. நிழல் மருங்கின் தாள் அணுகுபு குறுகி தொழுது - அருளைத் தன்னிடத்திலேயுடைய திருவடிகளை அண்ணிதாக நின்று சேர்ந்து வணங்கி,

150. முன் நிற்குவிராயின் - நும்முடைய வறுமைதோன்ற முன்னே நிற்பீராயின்,

150 - 151. ஈற்று ஆ விருப்பின் பழுதின்று போற்றுபு நோக்கி - ஈற்றுத்தொழிலையுடைய பசுத் தனதுகன்றுக்குப் பால்சுரந்துகொடுக்கவேண்டுமென்னும் விருப்பம்போல நும்மிடத்துநிற்கின்ற மிடி இன்றாம்படி பேணிப்

பார்த்து,

151 - 152. நம் கையது கேளா அளவை - நம்மிடத்துள்ள கலையைத் தான்கேட்பதற்குமுன்னே,

152. ஒய்யென - கடுக,

பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைக்கவி பருகி
யெரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நாலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தே

153 - 154. பாசி வேரின் மாசொடு குறைந்த துன்னல் சிதாஅர் நீக்கி - கொட்டைப்பாசியினது வேர்போலே அழுக்கோடேகுறைந்த தையலையுடைய துணிகளைப்போக்கி,

154 - 155. தூய கொட்டை கரைய பட்டுடை நல்கி - தூயவாகிய திரளமுடிந்தமுடிகளைக் கரையிலேயுடைய பட்டாகிய உடைகளைத் தந்து,

கொட்டை - தும்புமாம்.

கு - பு. திரளமுடிந்தமுடிக்குக் கொட்டையென்றுபெயருண்டு.

156. பெறல் அரு கலத்தின் பெட்டாங்கு உண்க என - பெறுதற்கரிய பொற்கலத்தே விரும்பினபடியே உண்பாயாகவென்றுசொல்லி,

157 - 158. பூ கமழ் கை கவி தேறல் வாக்குபு தர தர வைகல் வைகல் பருகி - தீம்பூ நாறுகின்ற தேன்கடுமையாற் சிறிதமையுமென்று கைகவித்தற்குக்காரணமான கட்டெளிவை மேன்மேலே வார்த்துத் தரத்தர நாடோறும் நாடோறும் பருகுவித்து,

"தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்"

பிறரும்.

(புறநானூறு, ௩௯௨) என்றார்;

கு - பு. தீம்பூ - மலர்விசேடம்.

159. எரி அகைந்தன்ன ஏடு இல் தாமரை - நெருப்புத் தழைத்தாலொத்த ஒருவன்செய்ததன்றித் தனக்கென இதழில்லாத தாமரையை,

என்றது பொற்றாமரைக்கு வெளிப்படை. "தோடே மடலே" (தொல். மர. அ௬) என்னுஞ் சூத்திரத்தே ஏடு கூறினர்.

160. சுரி இரு பித்தை பொலிய சூட்டி - கடைகுழன்ற கரியமயிரிலே பொலிவுபெறச்சூட்டி,

161 - 162. நூலின் வலவா நுணங்கு அரில் மாலை வால் ஒளி முத்தமொடு பாடினி அணிய - நூலாற்கட்டாத நுண்மையையும் பிணக்கத்தையுமுடைய பொன்னரிமாலையை வெள்ளிதாகிய ஒளியையுடைய முத்தத்தோடே பாடினிசூட,

163. கோட்டின் செய்த கொடிஞ்சி நெடு தேர் - யானைக்கொம்பாற் செய்த தாமரைமுகையினையுடைய நெடிய தேரிலே,

ரூட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
றாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவருஞ் செலவின் வெகுளி வேழந்

---

164. ஊட்டு உளை துயல்வர ஓரி நுடங்க - சாதிலிங்கமூட்டின தலையாட்டம்பொங்கக் கழுத்தின்மயிரசைய,

165. பால் புரை புரவி நால்கு உடன் பூட்டி - பாலையொத்த நிறத்தினையுடைய குதிரைகள் நான்கினைச் சேரப்பூட்டி,

நான்கு - நால்கெனப் பெயர்த்திரிசொல்.

ஒ - பு. "நால்கு பண்ணினர் நால்வரு மேறினார்" என்பது சிந்தாமணி; (கனக. உகஅ).

166. காலின் ஏழடி பின் சென்று - தன் காலாலே ஏழடிப் பின்னே வந்து,

எழுடி வருதல் ஓர்மரபு ; எழிசைக்கும் வழிபாடுசெய்தானாகக் கருதாத வின். " செலவினும்வரவினும் " (தொல். கிளவி. உ௮.) என்னுஞ் சூத்திரத் துப் பொதுவிதியால், சென்றென்பது வந்தென்னும்பொருட்டாய் நின்றது.

166 - 167. இன் தாறு கோல் களைந்து - செலுத்துதற்கினிதாகிய செ லவுமுடுக்குங்கோலைப் போக்கி, என்றதனாற் கடுவிசைக்கு இவர் இருத்தலாற்றாரென்றுகருதி இயற்கை யிற்சேறல் அமையுமென்றார்.

167. ஏறு என்று ஏற்றி - இங்ஙனம் ஏறென்று ஏறவிட்டு,

167 - 168. வீறு பெறு பெரு யாழ் முறையுளி கழிப்பி - ஏனையாழ்க ளின் வீறுபெற்ற யாழ்ப்பாணர்க்குக் கொடுக்குமுறைமைகளை நினக்குத் தந்து விட்டு,

168 - 170. நீர் வாய் தண் பணை தழீஇய தளரா இருக்கை நன் புல் ஊர நாட்டொடு - நீரை எப்பொழுதும் தன்னிடத்தேயுடைத்தாகிய தண்ணிய மருதநிலஞ்சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய நன்றான பல ஊர்களையுடைய நாடுகளுடனே,

171. பறை வெரூஉ நவலும் - பறை எல்லார்க்கும் அச்சத்தைச்சாற் றுதற்குக் காரணமாகிய,

170 - 172. பரூஉ பெரு தட கை வெரு வரும் செலவின் வெகுளி நன்பல் வேழம் - பருத்த பெரிய வளைவினையுடைய கையினையும் அச்சந் தோன்றும் ஓட்டத்தினையும் கோபத்தினையுமுடைய நன்றாகிய பலயானைகளை,

தரவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்ல னொல்லெனத்

[சோழநாட்டுவளமும் திணைமயக்கமும்:]

திரைபிறழிய விரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினிற்

---

173. தரவு இடை தங்கல் ஓவிலன் - தருதற்றொழிலிடத்தே நிலைபெறுதலை ஒழிதலிலன்;

இனி, தரவிடத்துத் தாழ்த்தலிலனென்றுமாம்.

173 - 174. வரவிடை பெற்றவை பிறர் பிறர்க்கு ஆர்த்தி - வருதலிடத்துப் பெற்றபொருள்களைப் பிறர்க்குப்பிறர்க்குக் கொடுத்து,

174 - 175. தெற்றென செலவு கடைக்கூட்டுதிர் ஆயின் - கடுக அவனிடத்துநின்றும் போகின்றபோக்கை முடிவுபோக்குவீராயின்,

175. பல புலந்து - அதுபொறாமற் பலகாலும்வெறுத்து,

176. நில்லா உலகத்து நிலைமை தூக்கி - செல்வமும் யாக்கையுமுதலியன நிலைநில்லாத உலகத்துப் புகழைச் சீர்தூக்கிப் பார்த்து,

நிலைபெறுந் தகைமையுடைத்தாகலின், புகழை நிலைமையென்றார்; ஆகு பெயர்.

177. செல்க என - இங்ஙனம்போகெனக்கூறி,

177. விடுக்குவன் அல்லன் - நும்மைக் கடுக விடுவானல்லன்;

தொழுது முன்னிற்குவிராயின் (௧௫௦) நோக்கி (௧௫௧) நீக்கி (௧௫௪) நல்கி (௧௫௫) வாக்குபு தரத்தரப் (௧௫௭) பருகுவித்துச் (௧௫௮) சூட்டி (௧௬௦) அணியத் (௧௬௨) தேரிலே (௧௬௩) குதிரையைப்பூட்டி (௧௬௫) ஏற்றி (௧௬௭) முறையுளிக்கழிப்பி (௧௬௮) நாட்டோடு (௧௭௦) வேழம் (௧௭௨) தரவிடைத் தங்கல் ஓவிலன் (௧௭௩) வரவிடைப் (௧௭௩) பெற்றவைபிறர்பிறர்க்கார்த்தித் தெற்றெனச் (௧௭௪) செலவுகடைக்கூட்டுதிராயின் அதற்குப்பலபுலந்து (௧௭௫) நில்லாவுலகத்து நிலைமையைச்சீர் தூக்கிச் (௧௭௪) செல்வாயாகவெனக் கூறி விடுக்குவனல்லனெனமுடிக்க.

நில்லாவுலகத்து நிலைமைதூக்கிப் பலபுலந்து செல்லென விடுக்குவனல்ல னென்பாருமுளர்.

177 - 179. ஒல்லென திரை பிறழிய இரு பௌவத்து கரை சூழ்ந்த அகல் கிடக்கை - ஒல்லென்னும் ஓசைபடத் திரைமுரிந்த கரியகடலினது கரைசூழ்ந்த அகன்ற பரப்பினையுடைய இவ்வுலகத்து,

180. மா மாவின் வயின் வயினின் - ஒருமாநிலத்தில் ஒருமாநிலத்தில் திடர்தோறும் திடர்தோறும்.

ரூழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினாற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்க
ணீற்றி யாமை தன்பார்ப் போம்பவு
மிளையோர் வண்ட லயரவு முதியோ

181. தாழ் தாழை தண் தண்டலை - தாழ்ந்த தெங்கினையுடைய குளி

ர்ந்த மரச்சோலைகளிலிருக்கின்ற,

182. கூடு கெழீஇய குடிவயினான் - நெற்கூடுகளையுடைய குடிமக்க ளிடத்தில்,

183 - 184. செம் சோற்ற பலி மாந்திய கரு காக்கை - உதிரத்தாற் சிவந்த சோற்றையுடையவாகியபலியை விழுங்கின கரியகாக்கை,

184 - 186. மனை நொச்சி நிழல் ஆங்கண் ஈற்று யாமைதன் பார்ப்பு கவவு முனையின் ஓம்பவும் - மனையைச்சூழ்ந்த நொச்சியினது நிழலிடத்துக் கிடந்த ஈற்றுத்தொழிலையுடைத்தாகிய யாமையினுடையபார்ப்பைத் தான் தின்றலை வெறுத்ததாயின், அதனைப் பின்பு பசித்தகாலத்துத்தின்பதாகப் பாதுகாத்துவைப்பவும்,

எனவே மருதநிலத்திலிருக்குங்காக்கை நெய்தனிலத்துப்பார்ப்பைத் தின் னுமென்றார். "தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன" (தொல், மர. கூ) என்பதனாற் பார்ப்பென்றார்.

187. இளையோர் வண்டல் அயரவும் - அவ்வுழவர்மகளிர் நெய்தனிலத் தின் மணற்குன்றிலே விளையாடவும்,

187 - 188. பகை முதியோர் அவை புகு பொழுதில் தம் முரண் செல வும் - பகைமைமுதிர்ந்தோர் தனது அரசவையிற்சென்று புகுங்காலத்துத் தம்மாறுபாட்டைப் போக்கும்படியாகவும்,

என்றது வழக்குமாறுபட்டு வந்தோர்க்கு அவ்வழக்கு வீடறுப்பனென்ற வாறு ; "உரைமுடிவு காணான்" (பழமொழி,உக)என்னும் பழமொழிகூறினார்.

கு - பு. இங்கே கூறிய பழமொழிச் செய்யுளும் அதனுரையும் வருமாறு:—"உரைமுடிவு காணா னிளமையோ னென்ற, நரைமுது மக்க ளுவப்ப-நரைமுடித்துச், சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை, கல்லாமற் பாகம் படும்" என்பது தம்முள் மறுதலையாயினா ரிருவர் தமக்கு முறைமை செயவேண்டிவந்து சில சொன்னால் அச்சொல் முடிவுகண்டே ஆராய்ந்து முறை செய்ய அறிவு நிரம்பாத இளமைப்பருவத்தானென்று இகழ்ந்த நரைமுதுமக்களுவக்கும் வகைநரை முடித்து வந்து முறை வேண்டிவந்த இருதிறத்தாருஞ் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் கரிகாற் பெருவளத்தா னென்னுஞ் சோழன்; ஆதலால், தத்தம் குலத்துக்குத் தக்க விச்சைகள் கற்பதற்குமுன்னே செம்பாக முளவா மென்றவாறு.

முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி
யறைக்கரும்பி னரிநெல்லி
னினக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத்
தளிர்ப்புன்கின் றாழ்காவி
னனைஞாழலொடு மரங்குழீஇய
வவண்முனையி னகன்றுமாறி
யவிழ்தளவி னகன்றோன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா

---

189 - 192. பை பாகல் பழம் செம் சுளைய துணரிய கனி மாந்தி

முடம்காஞ்சி செம்மருதின் மட கண்ண மயில் ஆல - பசிய பாகற்பழத்தையும் சிவந்த சுளையையுடையவாகிய குலைகொண்ட பலாப்பழத்தையுந் தின்று வளைவையுடைய காஞ்சிமரத்திலும் செவ்விய மருதிலுமிருந்த மடப்பத்தைத் தம்மிடத்தேயுடையவாகிய பெடைமயில்கள் ஆரவாரித்தழைக்கவும்,

193 - 194. அறை கரும்பின் அரி நெல்லின் இனம் களமர் இசை பெருக - அறுத்தலைச்செய்யும் கரும்பினிடத்தும் அரிகின்ற நெல்லினிடத்துமுள்ள கூட்டமான களமர்களின் ஓசைபெருகவும்,

195. வறள் அடும்பின் - நீரற்ற இடத்தே எழுந்த அடும்புகளும்,

கு - பு. அடும்பு, அடம்பெனவும் வழங்கும்.

195. இவர் பகன்றை - படருகின்ற சிவதைக்கொடிகளும்,

196. தளிர் புன்கின் தாழ் காவின் - தளிரையுடைய புன்கினையுடைய தாழ்ந்த சோலைகளுடன்,

197. நனை ஞாழலொடு - அரும்பின புலிநகக்கொன்றைகளுடன்,

197. மரம் குழீஇய - மற்ற மரங்களும் திரண்ட,

198. அவண் முனையின் - அவ்விடத்தை வெறுத்தால்,

கு - பு. வெறுத்தல், நாரையின்தொழில்.

198. அகன்று மாறி - அவ்விடத்தைவிட்டுநீங்கி,

கு - பு. அகன்று மாறி, ஒருபொருட்பன்மொழி.

199. அவிழ் தளவின் அகல் தோன்றி - மலர்ந்த செம்முல்லையினையும் விரிந்த காந்தளினையும்,

200. நகு முல்லை வீ உகு தேறு - மலர்ந்தமுல்லையினையும் பூ உகுகின்ற தேற்றாமரத்தினையும்,

201. பொன் கொன்றை மணி காயா - பொன்போலும் பூவினையுடைய கொன்றையினையும் நீலமணிபோலும் பூவினையுடைய காயாமரத்தினையு

முடைய,

நற்புறவி னடைமுனையிற்
சுறவழங்கு மிரும்பௌவத்
திறவருந்திய வினநாரை
பூம்புன்னைச் சினைச்சேப்பி
னோங்குதிரை யொலிவெரீஇத்
தீம்பெண்ணை மடற்சேப்பவுங்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்
தியாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயரத்
தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவுமறுகவுங்

---

202. நல் புறவின் நடை முனையின் - நல்ல அந்தக்காட்டிலுறைகின்ற ஒழுக்கத்தை வெறுப்பின் அவ்விடத்தைவிட்டுநீங்கி,

து - பு. 'அகன்றுமாறி' என்பதை இங்கும் கூட்டுக.

203. சுற வழங்கும் இரு பௌவத்து - சுறாமீன்கள் திரியும் கரியகடலின்கணுள்ள,

204. இறவு அருந்திய இனம் நாரை - இறவைத்தின்ற

கூட்டமாகிய காளைகள்,

205. பூ புன்னை சினை சேப்பின் - பூக்களையுடைய கிளையிலே தங்கின், (ஆண்டுள்ள) புன்னைமரத்தின்

206. ஓங்கு திரை ஒலி வெரீஇ - உயர்ந்துதோன்றுகின்ற அலைகளின் ஒலிக்கு அஞ்சி,

207. தீ பெண்ணை மடல் சேப்பவும் - இனிய பனையினது மடலிலே தங்கவும்,

208. கோள் தெங்கின் குலை வாழை - குலைகளையுடைய தென்னைகளையும் குலைவாழைகளையும்,

209. கொழு காந்தள் மலர் நாகத்து - கொழுவிய செங்காந்தள்களையும் பூக்களையுடைய சுரபுன்னையினையும்,

210. துடி குடிஞை குடி பாக்கத்து - உடுக்கைபோலும் ஓசையினையுடைய பேராந்தையினையும் குடியிருப்பையுமுடையபாக்கத்தில்,

கு - பு. பாக்கம் - கடற்கரையிலுள்ள ஊர்.

211 - 213. யாழ் வண்டின் கொளைக்கு எற்ப கலவம் விரித்த மடமஞ்ஞை நிலவு எக்கர் பல பெயர - யாழோசைபோலும் வண்டினது பாட்டினைக்கேட்டு அதற்குப்பொருந்தத் தோகையைவிரித்த அறியாமையையுடைய மயில் நிலவுபோலும் இடுமணலிலே பலபகுதிப்படஆடவும்,

214 - 215. தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர் மீன் நெய்யொடு நறவு மறுகவும் - தேனாகியநெய்யோடே கிழங்கையும் விற்றவர்கள் மீனினது நெய்யோடே நறவையும் கொண்டுபோகவும்,

தீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவுங்
குறிஞ்சி பரதவர் பாட நெய்த
னறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி திணைக்கவர
வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பினா னடுகுழீஇ
மண்மருங்கினான் மறுவின்றி
யொருகுடையா னொன்றுகூறப்

---

216 - 217. தீங்கரும்போடு அவல் வகுத்தோர் மான் குறையொடு மது மறுகவும் - இனிய கரும்போடே அவலைக் கூறுபடுத்தி விற்றவர்கள் மானினது தசையோடே கள்ளையும்கொண்டுபோகவும்,

218. குறிஞ்சி பரதவர் பாட - குறிஞ்சிநிலத்தைப் பரதவர்புகழவும்,

218 - 219. குறவர் நெய்தல் நறு' பூ கண்ணி சூட - குறவர் நெய்தலினது நறிய பூவாற்செய்த கண்ணியைச்சூடவும்,

220. கானவர் மருதம் பாட - இடையர் மருதநிலத்தைப்புகழவும்,

220 - 221. அகவர் நீல் நிறம் பல் முல்லை நிணை நுவல - மருதநிலமாக்
•கள் கரியநிறத்தையுடைய பலவாகிய முல்லைநிலத்தைக்கொண்டாடவும்,

222. கானம்
னாத்தின்னவும்,

கோழி கதிர் குத்த - காட்டிடத்துக் கோழிகள் நெற்கதி

223. மனை கோழி தினை
தினையைத்தின்னவும்,

கவர - மருதநிலத்தின் மனையிற்கோழிகள்

224. வரை மந்தி கழி மூழ்க - மலையிடத்திற்குரியமந்திகள்
கழியிலே மூழகவும,

225. கழி நாரை
இடக்கவும்,

வரை இறுப்ப - கழியிற்றிரியும்நாரைகள் மலையிலே

226. தண் வைப்பின் நால் நாடு குழீஇ - குளிர்ந்த
வைப்புக்களை யுடைய நான்குகூறாகிய நாடுகள் திரண்டு,

நால் நாடென்றார், "நடுவ ணைந்திணை நடுவண தொழிய" (தொல்.
அகத்திணை. உ) என்னுஞ்சூத்திரத்தால்.

227. மண்
ருமுமின்றி,

மருங்கினல் மறு இன்றி - பூமியினிடத்தே யாதொருகுற்

228. ஒரு குடையான் - ஒருகுடையாலே,
228. ஒன்று கூற - தன்னுடைய ஆணையையே உலகம்கூற,
உ௯

பொருநராற்றுப்படை.

பெரிதாண்ட பெருங்கேண்மை
யறனொடு புணர்ந்த திறனறி செங்கோ
லன்னோன் வாழி வெண்வேற் குரிசின்
மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மா

[காவிரிநதியின்பெருமை:]

ணெல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி நைப்பவு
மருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையு

---

229. பெரிது ஆண்ட பெரு கேண்மை - மிகவும் ஆண்ட பெரியநட்பையும்,

230. அறனொடு புணர்ந்த திறன் அறி செங்கோல - தருமத்தோடு கூடப்பொருந்திய உலகை அறிதற்குக்காரணமாகிய செவ்வியகோலையுமுடைய,

ஒருகுடை என்றதனாலும், ஒன்றுகூற என்றதனாலும் இவன் மண்முழுதும் ஆண்டானென்றார்.

231. தன்னோன் - யான் கூறிய அத்தன்மைகளை யுடையோன்,

231. வாழி - வாழ்வாளுக;

இறுதியகரம் கெட்டுநின்றது.

231. வென் வேல் குரிசில்-வெற்றிபொருந்திய வேலையுடையதலைவன்,

232 மன்னா நடுங்க தோன்றி - பகையரசர் நடுங்கும்படி விளங்கி,

232 - 233. பல் மாண் எல்லை தருநன் பல்கதிர் பரப்பி - பல்லுயிர்களும் மாட்சிமை படுதற்கு காரணமாகிய பகறபொழுதைத்தரும கதிரோன் தன னிலையைவிட்டுப் பலகிரணங்களைப் பரப்புகையினாலே,

234. புல்லை கரியவும் - கஞசாதியவும,

234. கோடு எரி கைப்பவும் - மரங்களினுடைய கொம்புகளை நெருப்புத் தின்னவும,

235. மா மலை அருவி சிழத்தவும் - பெருமையையுடைமலை தன்னிடத் த விகளை இலையாக்கவும்,

235 - 236. மற்ற கருவி வானம் கடல் கோள் மறப்பவும் - இவையொழிந்த தொகுதியையுடைய மேகம் கடலிடத்துமுகததலை மறப்பவும,

237. பெரு வறன் ஆகிய பணபு இல் காலையும் - பெரிய ...ஜிய நர்குணமில்லாச காலததும்,

வற்கடமுண

கரியவுமா நைப்பவும (௨௩௪) கிழத்தவும் (௨௩௫) மறப்பவும் (௨௩௧) வறனுகியகாலையுமெனமுடிக்க.

நறையு நரந்தமு மகிலு மாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடைய
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற் றூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே.

---

238 - 239. நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும் பொறை துறை துறைதோறும் உயிர்த்து ஒழுகி - நறைக்கொடியும் நரந்தப்புல்லும் அகிலும் சந்தனமுமாகிய சுமையைத் துறைதோறும் துறைதோறும் இளைப்பாறத்தள்ளிப் போய்,

240. நுரை தலை குரை புனல் - நுரையைத் தலையிலேயுடைய ஆரவாரத்தையுடைய நீர்,

240. வரைப்பு அகம் புகுதொறும் - குளத்திலும் கோட்டத்திலும் புகுந்தோறும்,

வளைக்கப்படுதலின், வளைப்பு; ஆகுபெயர்.

241. புனல் ஆடும் மகளிர் கதுமென குடைய - நீராடுமகளிர் கடுகக் குடைந்துவிளையாட,

புனல் ஒழுகிப் புகுதொறும மகளிா குடையவென்க.

242. கூனி குயத்தின் வாய் நெல் அரிந்து - வளைந்துநின்று அரிவாளின் வாயாலே நெல்லையறுத்து,

நெல் மிகக்காய்த்துத் தரையிலேவிழுதலின்,

வளைந்துநிற்கவேண்டுமென்றா.

243. சூடு கோடு ஆக பிறக்கி - சூட்டை மலையாக அடுக்கி,

243 - 244. நாடொறும் குன்றென குவைஇய குன்றா குப்பை - நாடோறும் கடாவிட்டு மேருவென்னும்படி திரட்டின தொலையாத நெற்பொலி,

245. கடு தெற்று மூடையின் இடம் கெட கிடக்கும் - நெருங்கப்பின்னின கூட்டின்கண்ணே வெற்றிடம் இல்லையாம்படி கிடத்தற்குக்காரணமான,

கடுந்தெற்றுமூடை - கோட்டையுமாம்.

246 - 247. சிறை கொள் வேலி ஆயிரம் சாலி நெல்லின் விளையுட்டாக - வரம்புகட்டின வேலிநிலம் ஆயிரக்கலமாகிய செந்நெல்லின் விளையுளை உடையதாக,

248. காவிரி புரக்கும் நாடு கிழவோன் - காவிரி பாதுகாக்கும் நாடு தனக்கே உரித்தாந்தன்மையுடையோன்.—எ - று.

கஅஅ பொருநராற்றுப்படை.

வறனுறிய காலையும் (உ௩எ) புனல் (உ௪0) ஒழுகிப் (உ௩௯) புகுதொறும் (உ௪0) மகளிர் குடைந்து விளையாடக் (உ௪க) கூனி அரிந்து (உ௪உ) பிறக்கிக் (உ௪௩) குவைஇய குப்பை (உ௪௪) கிடத்தற்குக்காரணமான (உ௪ரு) விளையுட்டாகக் (உ௪எ) காவிரி புரக்கு நாடு (உ௪அ) எனவினைமுடிக்க.

பொருந (௩), கோடியர்தலைவ, கொண்டதறிந (௫௭), புகழ்மேம்படுந (௬௦), எழின் கிழவ (௬௩), காடுறை கடவுட்கடன் கழிப்பியபின்றை (௫௨) நெறிதிரிந்தொராஅது (௫௮) ஆற்றெதிர்ப்படுதலும் நோற்றதன்பயனே (௫௧), போற்றிக்கேண்மதி (௬௦), நின்னிரும்பேரொக்கலொடு (௬௧) பசியொராஅல் வேண்டின், நீடின்று (௬௨) எழுமதி (௬௩), யானும் (௬௪) இன்மைதீர வந்தனென் (௧௨௯); உருகெழுகுரிசிலாகிய (௧௩௧) உருவப்பஃறேரிளையோன்சிறுவன் (௧௩௦), கரிகால்வளவன் (௧௪௮), நாடுகிழவோன் (௨௪௮), குரிசில், அன்னோன் (௨௩௧) தாணிழன் மருங்கிற் குறுகி (௧௪௯) தொழுது முன்னிற்குவிராயின் (௧௫௦), நாட்டொடு (௧௭௦) வேழம் (௧௭௨) தரவிடைத் தங்கலோவிலன் (௧௭௩); அவன், மன்னர்நடுங்கத்தோன்றி (௨௩௨) வாழி (௨௩௧) எனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

"முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே, யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" (தொல். எச்ச. ௬௬) என்பதனான், இங்ஙனமுடிந்தது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு, மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" (தொல். புறத்திணை. ௩௬.) என்பது இதற்குவிதி.

"ஆசிரிய நடைத்தே வஞ்சி" (தொல். செய். ௧௦௮) என்பதனால், பின்னர் வஞ்சி மிகவும் வந்தனவென்றுணர்க.

சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார்பாடிய பொருநராற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

வெண்பா.

௧. ஏரியு மேற்றத்தி னானும் பிறநாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாந் - தேரி
னரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு.

தேரின் - ஆராயுமிடத்து, எரியும் ஏற்றத்தினும் - எரிப்பாய்ச்சல்களாலும் ஏற்றத்தின்பாய்ச்சல்களாலும், பிற நாட்டு - மற்றைநாடுகளில், வாரி சுரக்கும் வளன் எல்லாம் - வருவாய்பெருகித்தோன்றுகின்றவளங்கள் யாவும், கரிகாலன் - கரிகாற்பெருவளத்தானது, காவிரி சூழ் நாடு - காவிரி நதியாற் சூழப்பெற்ற சோழநாட்டின்கண், அரி காலின் கீழ் உகூஉம் - கதிர் அரியப்பெற்றநெற்றாள்களின்கீழேசிந்துகின்ற, அ நெல்லே சாலும் - அந்த நெல்லையேபோல்வனவாகும்.— எ - று.

மற்றைநாடுகளின் மிக்கவருவாய்களெல்லாம், சோழநாட்டுசென்செய்களில் அரிதாள்களின் கீழேசிந்துகின்ற நெல்லைப்போல்வனவாகுமென்றதனால், அறுத்தநெல்லின் அளவு சொல்லிலடங்குவதன்று என்றபடி.

உ. அரிமா சுமந்த வமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன் - திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் றொழுதகைப்
போனவா பெய்த வளை.

அரிமா சுமந்த அமளி மேலானை - சிங்கத்தாற்சுமக்கப்பட்ட ஆசனத்தின்மேல்வீற்றிருக்கின்றவனை, திருமா வளவன் என தேறேன் - கரிகாற்பெருவளத்தானென்று தெளியேனும், மார்பில் -, திரு மானம் மால் என்று தொழுதேன் - திருமகளையும் பெருமையையுமுடைய திருமாலென்று கருதித்தொழுதேன், தொழுதகை - அஞ்சலித்தகையில், பெய்தவளை - முன்பு இடப்பட்டவளையல்கள், போனவா - கழன்றுபோனமை என்னவியப்பு. எ - று.

கரிகாற்பெருவளத்தானுக்குத் திருமாவளவனென்றும் ஒருபெயருண்டு; இதனை, "திருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய வேலினும் வெய்ய கானமவன் கோலினுந் தண்ணிய தடமென் றோளே" (உகூகூ - ௩0க) என்னும் பட்டினப்பாலையானுணர்க.

௯. முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகா
லிச்சக் கரமே யளந்ததாற் - செய்ச்செ
யரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

மு சக்கரமும் - மூன்றுஉலகங்களையும், அளப்பதற்கு நீட்டிய கால் - அளத்தற்பொருட்டு நீட்டப்பெற்றகாலானது, இ சக்கரமே அளந்தது - இந்த மண்ணுலகத்தைமட்டும் அளந்தது. செய் செய் - வயல்கள்தோறுமுள்ள, அரிகால் மேல் - கதிர் அரியப்பெற்ற நெற்றாள்களின்மேலே, தேன் தொடுக்கும் - வண்டுகள் தேனடைவைக்கப்பெற்ற, ஆய் புனல் நீர் நாடன் - அழகிய புனலையுடைய காவிரிநதிபாயப்பெற்ற நாட்டையுடையவனான, கரிகாலன் - கரிகாற்பெருவளத்தானது, கால் நெருப்பு உற்று - பாதம் நெருப்புத்தீண்டப்பெற்றமையின். எ - று.

மூன்றுலகத்தையும் அளத்தற்குரிய பெருமைவாய்ந்த கரிகாற்பெருவளத்தானுடைய பாதமானது நெருப்புத்தீண்டப்பெற்றமையின், இப்பூமியைமட்டும் அளந்தது; இதனால் இவன் திருமாலைப்போல்வானென்று கூறியபடி. இளமைப்பருவத்தில் நெருப்பில்வீழ்ந்தமையின், இவனுடையகால் கரிந்துபோயிற்றென்றும் அதனாலேதான் இவன் கரிகாலனென்று பெயர்பெற்றானென்றும் கூறுவர்; இதனை, "சுடப்பட் டுயி . ந்த சோழன் மகனும், பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் - ை க்காற் சேர . செங்கோல் செலீஇயின

னில்லை, யுயிருடையா ரெய்தா வினை" (405) என்னும் பழமொழிவெண்பாவாலும், 'இளமைப்பருவத்துப் பிறர்க்கடப்பட்டு உயிருய்ந்துபோகிய கரிகாலனும், இரும்பிடர்த்தலையாரென்னும் பெயரையுடைய தன்மாமனைத் தனக்குத்துணையாகப் பெற்று, பின்னொருகாலத்தின்கண் தன்னுரிமையரசுபெற்றுக் குற்றமற்றசெங்கோலை நடாத்தினான்; ஆதலால், உயிருடையார் எய்தாததொரு நல்வினைப்பயனில்லை' என்னும் அதனுரையாலும் உணர்க.

முகவுரை.

சிறுபாணாற்றுப்படையென்பது, நக்கீரனார் முதலிய கடைச் சங்கப்புலவர்களால் இயற்றப்பட்டு அவர்களால் தொகுக்கப்பெற்ற பத்துப்பாட்டினுள், மூன்றாவதாகவுள்ள ஒரு நேரிசை ஆசிரியப்பா. இஃது இருநூற்றறுபத்தொன்பது அடிகளையுடையது.

பத்துப்பாட்டாவன: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பனவாம்.

வெண்பா.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

இவற்றுள், திருமுருகாற்றுப்படை, சைவத்திருமுறைகளில், கக-ம் திருமுறைப்பிரபந்தவரிசையிற் சேர்க்கப்பெற்றுள்ளது; குறிஞ்சிப் பாட்டு, பெருங்குறிஞ்சியெனவும் மலைபடுகடாம், கூத்தராற்றுப் படையெனவும் வழங்கும்; கிற்க

ஆற்றுப்படையென்பது, ஒருவர் ஒரு கொடையாளியின்பால் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் அங்கேசென்று தாம்பெற்றவையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல்; ஆறு - வழி; படை - படுத்தல். ஒவ்வொருவரும் இங்ஙனம் கூறுதற்குரியோராயினும், கூத்தர்முதலியோரே, எதிர் வந்த வறியவர்களாகிய கூத்தர்முதலியவர்களுக்குக்கூறி அவர்களை வழிப்படுத்தியதாகச் செய்யுள்செய்தல்மரபு. தொல்காப்பியப் புறத் திணையியலில், ௩௬-ம் சூத்திரத்தில் உள்ள, "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்,

சொன்ன பக்கமும்" என்பது இதற்குவிதி; 'ஆடன்மாந்தரும் பாடற் பாணரும் கருவிப்பொருநரும் இவருட் பெண்பாலாராகிய விறலியு மென்னும் நாற்பாலாரும் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர் வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறுகூறிய கூறுபாடும்' என்பது இதன் பொருள். இங்ஙனம் இயற்றப்பெற்றவைகள்: கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, புலவராற்றுப்படை, விறலியாற்றுப்படை என ஒவ்வொருவகையிலும் பலபலவுள்ளன. பத்துப்பாட்டிலன்றிப் புறநானூறு முதலியவற்றிலும் பிற்காலத்து நூல்களாகிய கலம்பகங்களிலும் இவ்வாற்றுப்படைச்செய்யுட்கள் காணப்படுகின்றன. இவை தனிச்செய்யுளாகவே ஆக்கப்படும், புறப்பொருள்வெண்பாமாலையிற் பாடாண்படலத்தில்வந்துள்ள,

[வெண்பா.]

"இன்றொடை நல்லிசை யாழ்ப்பாண வெம்மைப்போற்

கன்றுடை வேழத்த கான்கடந்து - சென்றடையிற்
காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்
தாமரை சென்னி தரும்.''

என்னும் பாணாற்றுப்படைச் செய்யுள்முதலியவற்றால் இஃது அறியலாகும். பத்துப்பாட்டிலுள்ள மூன்றாவதும் நான்காவதுமாகிய பாட்டுக்கள் பாணாற்றுப்படைகளேயாயினும் அடிவரையறையின் சிறுமை பெருமைகளால் முறையே அவை சிறுபாணாற்றுப்படை யெனவும் பெரும்பாணாற்றுப்படையெனவும் வழங்கலாயின. பாணர் - இசைப்பாட்டைப்பாடுவோர்; [பாண் - இசை.]

நூல்.

சிறுபாணாற்றுப்படையென்பது, ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் மீது இடைக்கழிநாட்டு நல்லூர்நத்தத்தனாரால் இயற்றப்பெற்றது. நல்லியக்கோடன்பாற் பரிசில்பெற்றுச்செல்லும் பாணனொருவன், வறுமையால் வருந்தி மெலிந்து எதிர்ப்பட்ட பாணனொருவனை அவன்பாற் செல்லும்படி வழிப்படுத்தியதாக அமைந்துள்ளது, இப்பாட்டு.

இப்பாட்டின் சிலபகுதிகள், பழைய உரையாசிரியர்களால் தக்க இடங்களில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

இந்நூலால், தமிழ்நாட்டரசர்களின் இராசதானிகளாகிய வஞ்சி, மதுரை, உறந்தை என்பவற்றின் நிலைமையும் பேகன் முதலிய ஏழுவள்ளல்களின் அரியவரலாறுகளும் நல்லியக்கோடனுடைய கொடைச்சிறப்பும் அவனுடைய ஊர்களின்வளமும் அவற்றிலுள் ளவர்களின் நற்குண நற்செய்கைகளும் அவனுடைய ஓலக்கச்சிறப் பும் குறிப்பறிந்துகொடுக்கும் அவனது விதரணவிசேடமும் பிற வும் நன்குஅறியலாகும்.

பாட்டுடைத்தலைவன்:

இப்பாட்டுடைத்தலைவனாகிய நல்லியக்கோடன்காலத்தில் இவ னைப்போன்ற பெருங்கொடையாளிகள் யாருமிலர்; பேகன்முதலிய ஏழுவள்ளல்களுக்கும் இவன் காலத்தாற் பிந்தியவன். இவை, இப் பாட்டிலுள்ள "வஞ்சியும்வறிதே" "மதுரையும்வறிதே" "உறந்தை யும்வறிதே" என்பவற்றாலும், இதன், அச - ம் அடிமுதலியவற்றா லும் கீழே காட்டப்படும் புறநானூற்றுச் செய்யுளாலும் விளங்கும். ஓய்மான் நல்லியக்கோடனெனவும் இவன் வழங்கப்பெறுவன்; இதனை மேற்கூறிய செய்யுளின் பின்னுள்ள வாக்கியத்தாலறிக. ஓய்மானல்லியாதன்,

ஒய்மான்வில்லியாதனென இரண்டுஉபகாரிகள் புறநானூற்றிற் புகழப்பட்டுள்ளார். அவர்கள் இவனுடைய பரம் பரையைச் சார்ந்தவர்களென்றுமட்டும் தெரிகின்றதேயன்றி இவ னுக்கு முன்பிருந்தவர்களோ பின்பிருந்தவர்களோ யாதும் புலப் படவில்லை.

சங்கப்புலவருள், புறத்திணைநன்னுகனுரென்பவராலும் இவன் துதித்துப்பாராட்டப்பெற்றுள்ளான்; அவர்பாடியசெய்யுள்,

"ஓரை யாயத் தொண்டொடி மகளிர்
கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்
யாமையீன் புலவு நாறு முட்டையைத்
தேனு ரும்பற் கிழங்கொடு பெறூஉ
மிழுமென வொலிக்கும் புனலம் புதவிற்
பெருமா விலங்கைத் தலைவன் சீறியா
ழில்லோர் சொன்மலை நல்லியக் கோடனை
யுடையை வாழியெற் புணர்ந்த பாலே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீ
ரோரூ ருண்மையி னிகந்தோர் போலக்

முகவுரை.

காணாது கழிந்த வைகல் காணா
வழிநாட் கிரங்குமென் னெஞ்சமவன்

கழிமென் சாயல் காண்டொறு நினைந்தே."

[புறநானூறு, கஎசு.]

சிறுபாணாற்றுப்படையில், "உறுபுலித் துப்பி னோவியர் பெரு கன்" (கஉஉ) என்றதனால் இவன் ஓவியர்குடியிற்பிறந்தவனென்று தரிகின்றது; ஓவியர்குடி, நாகர்களுடையவகுப்பில் ஒருவகையென் ப்ம் இவனுடைய ஊர்களுள் ஒன்ருகிய மாவிலங்கையென்பது, னுட்டுக்கு வடக்குள்ள அருவாநாடு, அருவாவடதலையென்கிற)ரண்டும் சேர்ந்த இடமென்றும் புராதன சரித்திர ஆராய்ச்சியா 'ர் தெரிவிக்கின்றனர்.

இவனுடைய மற்ற ஊர்களுள், எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்பவை தொண்டைநாட்டிலுள்ள இருபத்துநான்கு கோ -டங்களுள் மூன்றுகோட்டங்களாகவுள்ளவை. எயிற்கோட்டத் தச்சார்ந்த சிறுநாடுகள்: தண்டகம், கோனேரிக்குப்பம், மாகற லென்பன. வேலூர்க்கோட்டத்தைச்சார்ந்தவை: ஒழுகறைநாடு, கென்மேலிநாடு, மாத்தூர்நாடு என்பவை. ஆமூர்க்கோட்டத்தைச் ார்ந்தவை: படூர்நாடு, குமிழிநாடென்பவை. இப்பாட்டின் கசுo-ம் அடியில்வந்துள்ள, கிடங்கிலென்பது கிடங்காலென இக்காலத்து வழங்கப்படுகின்றது. இது, திண்டிவனத்தைச்சார்ந்த

ஊர்களுள் ஒன்று. யாப்பருங்கலவிருத்தியுரையில் மேற்கோள்களாகவந்துள்ள பாடல்களுள் ஒன்றில் இவ்வூர் பாராட்டப்பட்டிருக்கின்றது.

நூலாசிரியர்.

இந்நூலாசிரியர்நாடாகிய இடைக்கழிநாடென்பது சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள ஒரு சிறுநாடு. இஃது உப்பங்கழிகளுக்கு இடையே இருத்தலின் இப்பெயர்பெற்றதுபோலும்; இதிலுள்ள ஊர்கள் பலவற்றுள் நல்லூரென்று ஓரூர் இருக்கின்றது. அதுவே இந்நூலாசிரியருடைய ஊராக இருத்தல்வேண்டும். இவருடைய காலத்துப்புலவர், நல்லியக்கோடனைப்பாடிய புறத்திணை நன்னாகனாராவர்; இவர்காலத்துப்பிரபுக்கள்: இப்பாட்டுடைத்தலைவனாகிய நல்லியக்கோடனும், புறத்திணை நன்னாகனாராற்பாடப்பெற்ற ஓய்மானல்லியாதனும் ஓய்மான்வில்லியாதனும் கரும்பனூர்கிழானுமே.

தத்தனென்பது இவரது இயற்பெயரென்றும் கல்விமேம்பாடு பற்றி நத்தத்தனாரென்றபெயர் பின்னர் வழங்கலாயிற்றென்றும் தெரிகின்றது. 'ந' என்பது சிறப்புப்பொருளைத் தருவதோரிடைச் சொல். நக்கீரர்,

நப்பாலத்தர், நப்பூதனார், நச்செள்ளையார் முதலிய பெயர்களாலும் இது விளங்கும். எட்டுத்தொகையில் நத்தத்தனா ரென ஒரு புலவர்பெயர் காணப்படுகின்றது. அவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை.

கடைச்சங்கப்புலவர்காலம், இற்றைக்குச் சற்றேறக்குறைய 1800 - வருஷங்களுக்கு முற்பட்டதென்பது யாவருக்கும் தெரிந்த தாதலால், அப்புலவர்களுள் ஒருவராகிய இவருடையகாலமும் அதுவேயென்பது சொல்லாமலேவிளங்கும்.

சென்னை,
23—8—09.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

இந்நூல் உரையாசிரியராகிய

நச்சினார்க்கினியர் வரலாறு.

விருத்தம்.

எவனால வாயிடைவர் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.

இந்நூலின் உரையாசிரியராகிய ஆசிரியர் நச்சினார்க்கினியர், பாண்டிவளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லாநூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னராதல், "வண்டிமிர் சோலை மதுராபுரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத் துவாச, னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன்" என்னும் உரைச்சிறப்புப் பாயிரத்தாலும் விளங்கும். சிவஸ்தலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்', 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெழுத்தொருமொழிக்கும் உதாரணமாக, இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமரபில், "ஓரெழுத்தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்தநூல்களாகிய திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார் என்பவற்றி னின்றும் தமது உரைகளிற் பலவிடங்

களில் இலக்கிய இலக்கணப்பொருள்களுக்கன்றித் தத்துவப்பொரு ளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள்கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரை களாலும், சீவகசிந்தாமணியில், "மேகம்மீன்ற" என்னும் ௩௩௩-ம் செய்யுளில், 'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படையுரையிற் காட்டிய சில நயங்களாலும், இவரது சைவசமயம் நன்கு வெளியாகும்.

இவ்வுரையாசிரியர், பத்துப்பாட்டினுள் இந்நூலுக்கன்றி மற்ற நூல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் சீவகசிந்தாமணிக்கும் குறுந்தொகையிற் பேராசிரியர் பொருளெழு

நச்சினார்க்கினியர் வரலாறு.

எ

தாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரைசெய்தருளினர். இன்னும் சில நூல்களுக்கு இவர் உரையியற்றின ரென்பர்; அவை இன்னவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக் கோவையாருரை பேராசிரியராற்செய்யப்பட்டதென்று தெரிகின்ற மையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையா லும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவருடைய உரைச்சிறப்புப்பாயிரத்திலே னும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும் அவைகள் இங்கே எழுதப்பட்டில.

சீவகசிந்தாமணிக்கு இவ்வுரையாசிரியர் முதன்முறை ஒருரை யெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டா
முறை ஓர் உரையை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக் கொண்டார்க ளென்று சைனர் கூறுகின்றனர்.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் விளங்கியவை ௬௦; அவை வருமாறு:—

க. அகத்தியம்.

உ. அகநானூறு.

ங. அணியியல்.

௪. அவிநயம்.

ரு. ஆசாரக்கோவை.

௬. இராமாயணவெண்பா.

௭. இறையனாரகப்பொருள்.

௮. ஏலாதி.

௯. ஐங்குறுநூறு.

௧௦. ஐந்திணையெழுபது.

௧௧. ஐந்திணையைம்பது.

௧௨. ஔவையார்பாடல்.

௧௩. கடகண்டு.

௨௦. குறிஞ்சிப்பாட்டு.

௨௧. குறுந்தொகை.

௨௨. கூத்தநூல்.

௨௩. கைந்நிலை.

௨௪. கொன்றைவேந்தன்.

௨௫. சிலப்பதிகாரம்.

௨௬. சிறுகாக்கைபாடினியம்.

௨௭. சிறுகுரீஇயுரை.

௨௮. சிறுபஞ்சமூலம்.

௨௯. சிறுபாணாற்றுப்படை.

௩0. சினேந்திரமாலை.

௩௧. சீவகசிந்தாமணி.

௩௨. தகடூர்யாத்திரை.

௧௪. கலித்தொகை.
௧௫. களவழிநாற்பது.
௧௬. காக்கைபாடினியம்.
௧௭. கார்நாற்பது.
௧௮. காரைக்காற்பேயார்பாடல்.
௧௯. குணநாற்பது.
௩௩. தந்திரவாக்கியம்.
௩௪. திணைமாலைநூற்றைம்பது.
௩௫. திணைமொழியைம்பது.
௩௬. திரிகடுகம்.
௩௭. திருக்குறள்.
௩௮. திருக்கோவையார்.

௩௯. திருப்பாட்டு.
௪0. திருமுருகாற்றுப்படை
௪௧. திருவாசகம்.
௪௨. திருவாய்மொழி.
௪௩. திருவுலாப்புறம்
௪௪. தொல்காப்பியம்.

௪௫ நற்றிணைநானூறு.

௪௬ நாடகநூல்.

௪௭. நாலடியார்.

௪௮. நெடுநல்வாடை.

௪௯. பட்டினப்பாலை.

௫௦. பதிற்றுப்பத்து.

௫௧. பரிபாடல்.

௫௨. பல்காப்பியம்.

௫௩. பல்காயம்

௫௪. பழமொழி.

௫௫. பன்னிருபடலம்.

௫௯. பாரதவெண்பா.

௬௧. பெருங்கதை.

௬௨. பெரும்பாணாற்றுப்படை.

௬௩. பெரும்பொருள் விளக்கம்.

௬௪. பொய்கையார் முதலாயி
னோர் செய்த அந்தாதி.

௬௫. பொருநராற்றுப்படை.

௬௬. மணிமேகலை.

௬௭. மதுரைக்காஞ்சி.

௬௮. மலைபடுகடாம்.

௬௯. மாபுராணம்.

௭0. முத்தொள்ளாயிரம்.

௭௧. முதுமொழிக்காஞ்சி.

௭௨. முல்லைப்பாட்டு.

௭௩. மூதுரை.

௭௪. மோதிரப்பாட்டு.

௭௫. யாப்பருங்கலம்.

௭௬. யாழ்நூல்.

௭௭. வசைக்கடம்,

௫௭. புறநானூறு. [லே. ௭௮. வசைக்கூத்து

௫௮. புறப்பொருள்வெண்பமா ௭௯. வளையாபதி.

௫௯. பூதத்தாரவையடக்கு. ௮௦. விளக்கத்தார்கூத்து.

௬௦. பூதபுராணம்.

தொல்காப்பியவுரை முதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்றமையாலும் பிறவாற்றாலும் இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொலவதுடன் பலவகையான கலைகளிலும் பயிற்சியுடையவரென்று சொல்லுதற்கும் இடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளை

யாசிரியர்முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினுற்பிற்பட்டவரென்று தெரிகின்றது.

"பாரத்தொல்காப்பியமும்", "தொல்காப்பியத்தில்", "பாற்கடல்போல", "பச்சைமாலனைய" என்னும் முதற்குறிப்பையுடைய பாடல்கள், பண்டைக்காலத்தாரால் இயற்றப்பெற்று இவருடைய உரைச்சிறப்புப்பாயிரங்களாக வழங்குகின்றன.

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல்செய் அருந்தவத்தின்பெரும்பயனாக அவதரித்தருளிய இம்மஹோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

பத்துப்பாட்டுள்

மூன்றாவதாகிய

சிறுபாணாற்றுப்படை.

மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
(யணிமுலைத்) துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கறல்
*லயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வுழிநாட்
காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ
யைதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅ
யுயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துகிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி

நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்

---

* அயிலுருக்கனையவாகியென்றும், அயிலுருத்தனையவாகி யென்றும் பாடம்.

பூணகத் தொடங்கிய (வெம்முலை முலை)யென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கி
னின்செறி நீர்தரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியன்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பி
னின்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
வியங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப

முனிவிகந் திருந்த முதுவா யிரவல
கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழன்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணூற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே
யதாஅன்று
நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுதற் றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
*நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்

* நகாஅ வன்னவென்றும் பாடம்.

௩.—சிறுபாணாற்றுப்படை.

௩

வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி
னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
றென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
றமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
யோவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
(வருமுலை யன்ன) வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
யாசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை

யேம வின்றுணை தழீஇ யிறகுளர்ந்து
காமர் தும்பி காமரஞ் செப்புந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னா
ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய
னோடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி

வாலுளைப் புரவியொடு வையக மருள
வீர நன்மொழி யிரவலர்க் கீந்த
வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்க

மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ
ளார்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை யதிகனுங் கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி கார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு
நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
வோரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ
ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
வொருதான் றாங்கிய வுரனுடை நோன்றா
ளறுவீ நாகமு மகிலு மாரமுந்

துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றரூஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளு
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா
ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை

௫.—சிறுபாணாற்றுப்படை.

ரு

நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக விந்நா
டிறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த

ஊழி பூத்த புழற்கா ளாம்பி
யொல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையு
மழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்
டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருது நீயிரு
மிவணயந் திருந்த விரும்பே ரொக்கற்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயி
னலைநீர்த் தாழை யன்னம் பூப்பவுந்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவுங்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவுங்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரி
னோங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோண்
மதியேக் கறூஉ மாசறு திருமுகத்து

நுதிவே னோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்

கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
றளையவிழ் தெரியற் றகையோற் பாடி
யறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைங்கனி யவரை பவழங் கோப்பவுங்
கருங்கனிக் காயாக் கணமயி லவிழவுங்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்
கொல்லை நெடுவழிக் கோப மூரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தி
னுறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
யெயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொ

டாமான் சூட்டி னைமவரப் பெறுகுளிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலைபருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
*புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவன்
மதிசே ரரவின் மானத் தோன்று
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
யந்தணை ரருகா வருங்கடி வியனக
ரந்தண் கிடங்கினவ னூழ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி
னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்

---

* புலவுக்கய லெறிந்த வென்றும் பாடம்.

௩.—சிறுபாணாற்றுப்படை.

எ

தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப

விருங்கா ழுலக்கை யிருப்புமுகந் தேய்த்த
வவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு கூடு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவி
ரெரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக
ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா
ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்,ந்து மன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினு
மருமறை நாவி னந்தணர்க் காயினுங்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
வடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையு
மின்முக முடைமையு மினிய னாதலுஞ்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
வஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையு
மாணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலு
மொருவழிப் படாமையு * மோடிய துணர்தலு
மரியே ருண்க ணரிவைய ரேத்த

வறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
வின்னகை யாயமோ டிருந்தோற் குறுகிப்
பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
வங்கோட்டுச் செறிந்த வளிழ்க்குவிங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து

* வடியதுளர்தலுமென்றும பாடம்.

வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு
தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யானுது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவு
மிளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவு

மேரோர்க்கு நிழன்ற கோலினை யெனவுந்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவு
நீசில மொழியா வளவை மாசில்
காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
யானா விருப்பிற் றானின் றூட்டித்
திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயில் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
யுருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடிவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு
நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல

வள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி

௨௩௨: பதிற். கா.௩: ௫; ௪௯௩௭.

௯௦

௨௩அ-௯௮: பெகே: ப. 101: 91

௩.—சிறுபாணாற்றுப்படை.

௯௧

யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோட்
டுகிலணி (யல்குற்) றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பி
னல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

இதன்பொருள்.

1 - 2 [மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை, (யணிமுலைத்) துயல் வரூஉ மாரம் போல:] பணை தோள் மா நிலமடந்தை மணி மலை (அணி முலை) துயலவரூஉம் ஆரம் போல—மூங்கிலாகிய தோளையுடைய பெருமை யினையுடைய மண்மகளுடைய மணிகள்தங்கின மலையாகிய (அழகினையுடைய முலையிற்) கிடந்தசையும் முத்துவடம்போல,

(குறிப்பு.) இதுமுதல், ௪௦-ம் அடி இறுதியாகவுள்ள அடிகளால், நல்லி யக்கோடனிடத்துப் பரிசில்பெற்றுப் பலவகைச்சிறப்போடுவரும்பாணன், இடைவழியில் வறுமைத்துன்பத்தால்வருந்திக் கவலையுற்று விறலியரோடும் சுற்றத்தோடுமிருந்த பாணனொருவனைக்கண்டு இரங்கி அவனுடையவறுமை யைப் போக்கநினைந்து நல்லியக்கோடனிடத்தே ஆற்றுப்படுத்தற்கு அவனை முன்னிலையாக்கல் கூறப்படுகின்றது. பூமியை மடந்தையென்றது, வடநூல் வழக்குப்பற்றி; "நாணென்னு நல்லாள்" என்பதனாலுமுணர்க. மூங்கில்கள் நிலமடந்தையின் தோள்களாக உருவகம்செய்யப்பட்டன. துயல்வரல் - அசைதல். ஆரம் - முத்துவடம்.

3 - 4 [செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாற்றுக், கொல்கரை நறும் பொழில்:] சேய் வரற் கரை கொல் கான்யாற்றுச் செல் புனல் உழந்த நறு பொழில்—மலைத்தலையினின்றும் வருதலையுடைய கரையைக் குத்துகின்ற காட்டாற்றிடத்து ஓடுகின்ற புனலாலே வருந்தின நறிய பொழிலிடத்து,

இரண்டுமலையினின்றும் வீழ்ந்த இரண்டு ஆற்றிடைக்குறையைச் சூழ் வந்து பின்னர்க் கூடுதலின், முத்துவடம் உவமையாயிற்று; இது மெய்யுவ
மம். பெருக்காற் கோடுகள் வருந்துதலின், உழந்தவென்றார். இதனாற்பயன்.
2

ஆற்றிடைக்குறையில் நின்றமரம் இளவேனிற்காலத்து மிகவும் பூத்ததாயிற்று.

(கு - பு.) சேய்மை - நெடுந்தூரம். அஃது இங்கே மலையினுச்சிக்கு ஆயிற்று. நறுமை - நல்லமணம். பொழில்-சோலை. முத்துவடம் காட்டாற்றிற்கு உவமை. மெய்யுவமம் - நால்வகையுவமத்துள் ஒன்று. அது வடிவினால் ஒரு பொருள் மற்றொன்றற்கு உவமையாவது; 'துடியிடை' என்பதுபோல. கோடுகள் - மரக்கிளைகள். பூத்தது - பொலிவுபெற்றது.

4 - 8 [குயில்குடைந் துதிர்த்த, புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித் துக், கதுப்பு விரித் தன்ன காழக நுணங்கற, லயிலுருப் பனைய வாகி யைது நடந்து, வெயி லுருப்புற்ற வெம்பரல் கிழிப்ப:]

காழ் அகம் நுணங்கு அறல் குயில் குடைந்து உதிர்த்த புது பூ செம் மல் சூடி புடை நெறித்து கதுப்பு விரித்தன்ன வேனில் நின்ற (௬)—கரு மையை இடத்தேயுடைய நுண்மையையுடைய அறல் குயில்கள் அலகாலுளர்ந்து உதிர்த்த புதிய பூக்களாகிய வாடலைச்சூடித் தம்பிடமெல்லாம் அறல் பட்டு மயிரை விரித்தாலொத்த தன்மையவாக இளவேனில் நின்றவென்க.

பொழிலிடத்து அறலென்க.

வெயில் உருப்பு உற்ற வெம் பரல்— வெயிலால் வெம்மையுற்ற வெவ் விய பருக்கை,

! அயில் உருப்பு அனையவாகி இழிப்ப சுரன் மராத்த வரி நிழல் முதல் அசைஇ (கஉ) ஐது நடந்து—வேல் காய்ந்த தன்மையவாய் அடி.யைக் கிழிக்
கையினாலே அருங்கானகத்துநின்ற கடம்பினுடைய செறியாத நிழலையுடைத்
தாகிய அடியிலே இளைப்பாறிப் பின்பு போகவேண் டுதலின், மெத்தென நடந்து,

(கு - பு.) காழ் - கருமை. அறல் - கருமணல். செம்மல் - பழம்பூ. நெ
றித்து - நெளித்து. கதுப்பு - கூந்தல். அலகு - பறவையின்மூக்கு, வாடல் - வாடர்பூ. இளவேனில் - சித்திரை வைகாசிமாதங்கள். பருக்கை - பருக் கைக்கல். உருப்பு - வெம்மை. பருக்கைக்கல்லுக்குக் காய்ந்தவேல் உவமை. ஐம்மை - மென்மை; "ஐதவீ ழ்குபெயல்" (13) என்பர்பின்னும். மராம் - கடப்பமரம். அசைதல் - இளைப்பாறுதற்குத் தகைதல்.

9 - 11. [வேனி னின்ற வெம்பத வழிநாட், காலை ஞாயிற்றுக் கதிர் கடா வுறப்பப், பாலை நின்ற பாலை நெடுவழி:] வேனில் நின்ற காலை வழி நாள் ஞாயிற்றுக் கதிர் கடாவுறப்ப வெம்பதம் பாலை நின்ற பாலை நெடுவழி— இளவேனில் நிலைபெற்ற காலத்தைப் பின்னாகிய நாளிலே ஞாயிற்றினு டையகதிர் வெம்மையைச் செலுத்தலைச் செய்கையாலே வெய்ய செவ்வி யையுடைய பாலைத்தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலைநிலமாகிய தொலையாத வழியினையுடைய

௩.—சிறுபாணாற்றுப்படை

கக

*"நடுவுநிலைத்திணையே" என்னுஞ் சூத்திரத்துரையாற் பாலைத்தன்மை கூறினும்; அதுகொண்டு உணர்க. பாலைநின்ற பாலைவழி, "ஆறுசென்றவியர்" போல்கின்றது.

(கு - பு.) வழி - பின். ஞாயிறு - சூரியன். கடாவுறுத்தல் - செலுத்து தல். இளவேனிலுக்குப்பின்வந்தகாலம் முதுவேனிலாதலின், 'ஞாயிற்றுக் கதிர்கடாவுறப்ப' என்றார். பதம் - காலம். பாலைத்தன்மையாவது, காலை யும்மாலையும் நண்பகலன்னகடுமைகூரச் சோலைதேம்பிக் கூவல்மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயன்துறந்து புள்ளும்மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம்பெறுவதொருகாலம். "நடுவுநிலைத்திணையே" என்னுஞ்சூத்திரத்து ரையில், பாலைத்தன்மைகூறினுமென்று எழுதியிருத்தலின், இந்நூலுக்குமுன் பே நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்துக்கு உரைசெய்தமை பெறப்படு கின்றது; இந்நூல், 28-ம் அடிமுதலியவற்றின் விசேடவுரையும் இதனை வலி யுறுத்தும். ஆறுசென்றவியர் - வழியிற்சென்றதனாலுண்டாகிய வேர்வை.

12. [சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ] என்பதனை முன்னே கூட்டுக.

(கு-பு.) இவ்வடி, 7-ம் அடிமுதலியவற்ருேடு முன்பு கூட்டப்பெற்றது.

13 - 4. [ஐதவீ ழிருபெய லழகுகொண் டருளி, நெய்கனிந் திருளிய கதுப்பின்:] அருளி ஐது வீழ் இரு பெயல் அழகுகொண்டு நெய் கனிந்து இருளிய கதுப்பின்—உலகிற்கு அருளுதலைச்செய்து மெல்லிதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழையினது அழகைத் தன்னிடத்தே கொண்டு எண்ணெயிலே முற்றுப்பெற்று இருண்ட மயிரினையும்,

(கு - பு.) இனி பாணனுடன்வந்த விறலியரின் கேசாதிபாதவருணனை கூறப்படுகின்றது. தெய்வமகளிரைப் பாதாதிகேசாந்தமாகவும், மானிடமக ளிரைக் கேசாதிபாதாந்தமாகவும் வருணித்தல் மரபு. வீழென்னுமுதனிலை, வினையெச்சப்பொருளில்வந்தது. "எண்ணெயு நானமு மிவைமூழ்கி" (சீவக. நாமக. 135) என்பது ஈண்டுள்ள 'நெய்கனிந்திருளியகதுப்பு' என்பதன் பொருளைத் தழுவியது.

14 - 6. [கதுப்பென, மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன், மயின் மயிற் குளிக்குஞ் சாயல்:] மயில் பலவுடன் மணி வயின் கலாபம் கதுப்பெனப் பரப்பி மயில் குளிக்கும் சாயல்—மயில்கள் பலவுங்கூடி நீலமணிபோலுங் கண்ணினையுடைய தோகைகளை மகளிர் மயிரைவிரித்தாற்போல விரித்துப் பார்த்து இவர்கள் சாயற்கு ஒவ்வேமென்று பேட்டிற்குள்ளே சென்று மறைதற்குக் காரணமாகிய கட்புலனாகிய மென்மையினையும்,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கூ.

(கு - பு.) கண்ணென்றது, மயிலின்பீலியிலுள்ள கண்களை; வயின் - இடம். ஐம்புலன்களிலும் மென்மையுண்மையின், 'கட்புலனாகிய மென்மை' என்றார். சிந்தாமணியில் "சேக்கொத்தலர்ந்த" (8) என்னுஞ்செய்யுளில், 'அமிர்தன்னசாயல்' என்பதற்கு இவர் எழுதிய உரையைப்பார்க்க.

16 - 8. சாஅய் உயங்கு நாய் நாவின் நல்லெழில் அசைஇ வயங்கு இழை உலறிய அடியின்—ஓடியிளைத்து வருந்துகின்ற நாயினது நாக்கினுடைய நல்ல அழகைவருத்தி வறுமையாலே விளங்குகின்றசிலம்புமுதலியன இன்றிப் பொலிவழிந்த அடியினையும்,

(கு - பு.) மகளிர்களுடைய அடிக்கு வருந்தியநாயின்நாவை உவமை கூறுதல், "வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி" (பொருந. சஉ), "மதந்தபு ஞமலி நாவி னன்ன, துளங்கியன் மெலிந்த கல்பொரு சிறடி" (மலைபடு. சஉ - க), "நாய்நாச் சிறடி" (சீவக. முத்தி. கஙு), "வருந்துநாய் நாவி னணி கொள் சிறடி" (கூர்ம. இராமன்வனம். கஓ) என்பவற்றாலும் அறியப்படும்.

18 - 9. [அடிதொடர்ந், தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையின்:] ஈர்ந்து நிலம் தோயும் இரு பிடி தட கையின் அடி தொடர்ந்து— இழுக்கப்பட்டு நிலத்தேசெறியும் கரிய பிடியினது பெருமையையுடைய கை போலத் தாமும் அடியோடே தொடர்புபட்டு முறையாற் பருத்து,

(கு - பு.) இருமை - கருமை. பிடி - பெண்யானை. தட - பெருமை; உரிச்சொல்; "தடவும் கயவு நளியும் பெருமை" (தொல். உரி. உஉ.)

20 - 21. [சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென, மால்வரை யொழுகிய வாழை:]

மால் வரை ஒழுகிய வாழையெனச்
சேர்ந்து—பெருமையையுடையமலையிலே ஒழுங்குபடவளர்ந்த வாழையெனத் திரண்டு,

சேரென்னும் உரிச்சொல் முதனிலையாகச் சேர்ந்தென்னும் வினையெச்சம் வந்தது.

குறங்குடன் செறிந்த குறங்கின்—ஒருகுறங்குடனே ஒருகுறங்கு செருங்கியிருக்கின்ற குறங்கினையும்,

(கு - பு.) சேரென்பது திரட்சியையுணர்த்துவதோர் உரிச்சொல்; "சே ரேதிரட்சி" (தொல். உரி. சுசு.) என்பதனாலும் உணர்க. குறங்கு - தொடை.

21 - 2. *வாழைப் பூவெனப் பொலிந்த ஓதி*—வாழையினது பூவென் னும்படி அழகு பெற்ற பனிச்சையினையும்,

(கு - பு.) ஓதி - கூந்தல்; பனிச்சை - வாழைப்பூவடிவாக முடிக்கப்ப டுங்கூந்தல் வடிவம்.

22 - 4. [ஓதி, களிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்த்து:] களி சுரும்பு களி சினை வேங்கை நாள் மலர் நச்சி ஓதி அரற்றும் சுணங்கின் சுணங்கு பிதிர்த்து—களிப்பினை யுடைய சுரும்புகள் செறிவினையுடைத்தாகிய கொம்பினையுடைய வேங்கையினது நாட்காலத்து மலரென்று விரும்பிப் பாடி ஆரவாரிக்கும் ஓரிடத்திற் றோன்றிய சுணங்குடனே ஓரிடத்திற்றோன்றிய சுணங்கு பிதிர்பட்டு,

(கு - பு.) சுரும்புகள் - வண்டுகள். களி - செருக்கம். சினை - மரக்கிளை. வேங்கை - ஒருவகைமரம். நாட்காலம - மலரும்காலம். சுணங்கு - தேமல். பிதிர்தல் - சிதறுதல். தேமலுக்கு வேங்கைப்பூ உவமம்.

25 - 6. யாணர் கோங்கின் அவிர் முகை எள்ளி பூண் அகத்த ஓங்கிய (வெம் முலை)—புதிதாகப் பூத்தலையுடைய கோங்கினது விளங்குகின்ற முகையை இகழ்ந்து மெல்லிய பணிகள் இடையிலேகிடக்கின்ற (விருப்பத்தை யுடைய முலையினையும்,)

(கு - பு.) யாணர் - புதுமை. கோங்கு - ஒருவகைமரம். முகை - அரும்பு. பணிகள் - ஆபரணங்கள். அகம் - உள். வெம்மை - விருப்பம்.

26 - 8. [(முலையென,) வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கி, னின் செறி நீர்தரு மெயிற்றின்:] வண் கோள் பெண்ணை (முலையென) வளர்த்த நுங்கின் இன்செறி நீர் தரும் எயிற்றின்—பெரிய

குலையினையுடைய பனை (முலையென்னும்படி) வளர்த்த நுங்கினது இனிய செறிந்தநீர் தன்னீர்மை யால் தாழும் எயிற்றினையும்,

(கு - பு.) வண்மை - பெருமை. கோள் - காய்க்குலை. பெண்ணை - பனை. எயிறு - பல்.

28 - 30. [எயிறெனக், குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த, முல்லை சான்ற கற்பின்:] குல்லை அம் புறவில் குவி முகை எயிறென அவிழ்ந்த முல்லை சான்ற கற்பின்—கஞ்சங்குல்லையையுடைய அழகிய காட்டகத்தே குவிந்த அரும்பு எயிறென்னும்படி நெகிழ்ந்த முல்லைசூடுதற்கமைந்த கற்பினையும்,

கற்பின் மிகுதிதோன்ற முல்லைசூடுதல் இயல்பு. 'கதுப்பிற் கதுப்பு' என்பது முதல் இத்துணையும் இயைபுத்தொடை. திரிந்து வந்ததென்றறிக; * "இறுவா யொன்றல்" என்னுஞ் சூத்திரத்துட் கூறினும்.

(கு - பு.) கஞ்சங்குல்லை - கஞ்சா; "கஞ்சங் குல்லை கஞ்சா வாகும்" என்பது, பிங்கலநிகண்டு. புறவு-முல்லைநிலம்; காடு. கற்பின்மிகுதிதோன்ற மகளிர் முல்லைமாலைசூடுதலை, "முல்லையந்தொடையருந்ததி" (பிரபுலிங்க லீலை) என்பதனாலுமுணர்க; "முல்லாய்நின் பேர்க்குணம் பெற்றேற் கிடந் தந்தென் முன்னிற்பையே" என்பது, திருவாரூர்துறைக்கோவை, கந.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கக.

30 - 31. மெல்லியல் மடமான் நோக்கின் வாள் நுதல் விறலியர்— மெல்லிய இயல்பினையும், மடப்பத்தினையுடைய மான்போலும் பார்வை யினையும், ஒளியையுடைத்தாகிய நுதலினையுமுடைய விறல்பட ஆமெகளிர்,

கதுப்பினையும், (கச), ஓதியினையும் (உஉ), நுதலினையும், நோக்கினையும் (ௗக), எயிற்றினையும் (உஅ), (முலையினையும்) (உகூ), குறங்கினையும் (உ0), அடியினையும் (கஅ), சாயலினையும் (கரு), மெல்லிய இயல்பினையும், கற் பினையு (ௗ0) முடைய விறலியரென்க.

(கு - பு) மடப்பம்-கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை. நுதல்- நெற்றி. விறல் - சத்துவம்; அஃதாவது வேம்புதின்றூர்க்குத் தலைநடுங்குவது போல, அஞ்சத்தக்கது முதலியவற்றைக் கேட்டவிடத்துப்பிறந்த உள்ளநிக ழ்ச்சியால் தாமேதோன்றும் நடுக்கமுதலாயின.

32 - 3. நடை மெலிந்து அசைஇய நல் மெல் சிறடி கல்லா இளையர் மெல்ல நைவர—நடையால் இளைத்து ஓய்ந்த நன்மையையுடைய மெல் லிய சிறிய அடியைத் தம்தொழிலையொழிய வேறுகல்லாத இளையர் மெத் தென்று வருட.

(கு - பு.(சிறடி=சிறுமை அடி., நைவர - தடவ.

34 - 5. பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின் இன் குரல் சிறு யாழ் இடவயின் தழீஇ—பொற்கம்பியினையொத்த முறுக்கடங்கின நரம்பி னது இனிய ஓசையையுடைய சிறிய யாழை இடப்பக்கத்தே தழுவி,

(கு - பு.) வார்தல் - ஒழுகுதல். யாழ்த்தந்தி நரம்பைமுறுக்கிச்செய் யப்படுவதாதலின், 'புரியடங்குநரம்பு' என்றார்; "பொன்வார்ந் தன்ன புரி யடங்கு நரம்பின், றொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ" (பெரும்பா ணாற்றுப்படை,கக-க)என்பது இவ்வடிகளின்பொருளை வற்புறுத்துகின்றது.

36 - 7. கைவளம் பழுநிய நயம் தெரி பாலை கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க—நட்டபாடையென்னும் பண் முற்றுப்பெற்ற இனிமை தெரிகின்ற பாலையாழை வாசித்தலைவல்ல பாணனாகியமகன் வாசிக்கு முறை மையை அறிந்து வாசிக்க,

(கு - பு.) நட்டபாடை - ஒருவகைப்பண்; அது பகற்பண் பன்னிரண் டனுள் ஒன்று. பாலையாழ் - ஒருவகையாழ்; இவ்வடிகளும், "கைவளம் பழு நிய பாலை வல்லோன்" (குறிஞ்சிப்பாட்டு,கசசு) என்பதும் ஒத்துள்ளன.

38. இயங்கா வையத்து வள்ளியோர்

நசை இ—வள்ளியோரின்மை யின் பரிசிலர் செல்லாத உலகத்தே பரிசில் தருவாரை விரும்பி,

இனி இயக்கும்வையம் சகடமாகலின், உலகத்திற்கு இயங்காவைய மென வெளிப்படை கூறிற்றுமாம்.

(கு - பு.) வள்ளியோர் - கொடையாளிகள். சகடம் - வண்டி. வைய மென்பதற்குப் பூமியென்றும் வண்டியென்றும் இரண்டுபொருளுண்டு. இதற் குச் செய்திருக்கும்பொருள் மிகப் பாராட்டற்பாலது.

39. துனி கூர் எவ்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப—தன்னை வெறுத்தல் மிக்க வருத்தத்தோடேகூடின வறுமை நின்னைக் கொண்டு போகையிலே,

(கு-பு.) துனி - வெறுப்பு. 'ஆற்றுப்படுப்ப' என்பது இந்நூற் பெயரைக் குறிப்பிக்கின்றது.

40. முனிவு இகந்து இருந்த முது வாய் இரவல - வழிவருத்தந் தீர்ந்திருந்த பேரறிவு வாய்த்தற்றொழிலையுடையையாய இரவல,

(கு - பு.) முனிவு-வெறுப்பு; இங்கேவருத்தத்திற்கு ஆயிற்று. முதுமை - பேரறிவு; "அளியன் றானே முதுவா யிரவலன்" (திருமுருகாற்றுப்படை, உஅ௪), "வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கல்", "முதுவாய்க் கோடியர்" (பட்டினப்பாலை, உ௧௪, உ௫௩.)

துயர் ஆற்றுப்படுக்கையினாலே போந்து (௩௧) விறலியர் தம்முடைய (௩௧) சீறடியை (௩௨) வெம்பரல் (அ) அயிலுருப்பனையவாகக் (எ) கிழிக்கை யினாலே (அ) வரிநிழலசைஇப் (௧௨) பின்னும் ஆற்றுந்தகைபெற ஐதுநடந்து (எ) அந்நடையால் இளைத்து ஒய்ந்த அடியை (௩௨) இளையர் தைவரப் (௩௩) பாண்மகன் (௩எ) பாலையை (௩௬) இயக்க (௩எ) வள்ளியோர் நசைஇச் (௩அ) சீறியாழ் இடவயிற்றழீஇ (௩௫) முனிவிகந்திருந்த இரவலவென முடிக்க.

41 - 2. கொழு மீன் குறைய ஒதுங்கி வள் இதழ் கழுநீர்

மேய்ந்த கயவாய் எருமை—கொழுவிய மீன் துணியஉடக்கு வளவிய இதழையுடைத் தாகிய செங்கழுநீர்ப்பூவைத்தின்ற பெரிய வாயையுடைய எருமை,

(கு - பு.) சேரன்முதலிய தமிழ்நாட்டரசர்மூவரும் மிக்கபரிசில் தாரார்; மிக்கபரிசிலைத்தருபவராகிய பேகன் முதலிய எழுவள்ளல்களும் இப் பொழுது இலர்; ஆதலால், நீ நல்லியக்கோடன்பாற்செல்' என வற்புறுத்திக் கூறும்பாணன், முதலில், சேரன் இராசதானியாகிய வஞ்சியினிலைமை யைக் கூறுகின்றான். கொழுமீன் - ஒருவகைமீனுமாம்; ''கழனி யுழவர் சூட்டொடு தொகுக்குங், கொழுமீன்'' (புறநானூறு, கங). குறைய - துண்ட மாக. கய, பெருமையையுணர்த்துவதோர் உரிச்சொல்.

43 - 4. பைங்கறி நிவந்த பலவின் நீழல் மஞ்சள் மெல்லிலை மயிர்ப் புறம் தைவர—பசிய மிளகுகொடிபடர்ந்த பலாவினீழலிலே மஞ்சளினது மெல்லியஇலை தனது மயிரையுடைய முதுகைத்தடவ,

45. விளையா இளங்கள் நாற மெல்குபு பெயரா—முற்றாத இளையதேன் நாற மென்று அசையிட்டு,

(கு - பு.) கள், கழுநீர்ப்பூவிலுள்ளது. அசையிடுதல் - முதலில் உண்ட தீனைச் சிறிது சிறிதாக மீட்டும் வாயில்வருவித்துக் கடித்து உண்ணுதல்.

46. குளவி பள்ளி பாயல் கொள்ளும்—காட்டுமல்லிகையாகிய படுக்கையிலே துயில்கொள்ளும்,

(கு - பு.) காட்மெல்லிகை யென்றது, உதிர்ந்துகிடக்கும் காட்மெல்லி கைப்பூக்களை; அக்கொடிகளையுமாம்.

47. குடபுலம் காவலர் மருமான்—மேற்றிசைக்கணுள்ள நிலத்தைக் காத்தற்றொழிலையுடைய சேரர் குடியிலுள்ளோன்,

எருமை, நீழலிலே தைவரப் பெயராக்கொள்ளும் குடபுலமென முடிக்க.

(கு - பு.) குடக்கு+புலம்=குடபுலம்; குடக்கு - மேற்கு.

47 - 9. ஒன்னார் வடபுல இமயத்து வாங்கு வில் பொறித்த எழு உறழ் திணி தோள் இயல் தேர் குட்டுவன்—பகைவருடைய வடக்கின்கண் உள்ள தாகிய நிலத்திடத்தே நிற்கும் இமவானின்கண்ணே வளையும் வில்லைவைத்த கணையத்தைமாறுபடும் திணிந்ததோளினையும் நடக்கின்ற தேரினையுமுடைய குட்டநாட்டையுடைய சேரன்,

(கு - பு.) ஒன்னல் - பொருந்தல். இமயம் - இமயமலை. விற்பொறித்த- வில்லை எழுதுவித்த; விற்கொடி சேரர்களுக்கு உரியது. சேரனொருவன், தன்னாட்டிற்கும் இமயமலைக்கும் இடையேயுள்ள நாட்டரசர்களாகிய பகை வரை வென்றுசென்று அம்மலையில் வில்லைப்பொறித்தானென்பதும், அதனால் இமயவரம்பனென்று பெயர்பெற்றானென்பதும் பழையவரலாறு; இதனை "அமைவர லருவி

யிமயம் விற்பொறித், திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத், தன்கோ னிறீஇ" (பதிற்றுப்பத்து, உ-ம்பத்து, பதிகம்), "இமயஞ் சூட்டிய வேம விற்பொறி, மாண்வினை நெடுந்தேர் வானவன்" (புறநா. நகக), "விடர்ச்சிலை பொறித்த விறலோன்" (சிலப். நகேற். கஙக) என்பவற் றாலுணர்க. எழு- கணையமரம்; இது கோட்டைவாயிலிற் கதவின் உட்புறத் தே குறுக்காகப் போடப்படுவது; புறநானூறு, கச-ம் பாட்டின் குறிப்புரை யைப்பார்க்க. இது யானையைத் தடுக்குமரமென்றும் கூறப்படும். இது வீரர்தோளுக்கு உவமமாகக் கூறப்படுதலை, "எழுவுறழ்திணிதோள்" (புறநா. ௬க) என்பதனாலுமுணர்க. குட்டநாடென்பது மலைநாட்டின் உள்நாடுகளில் ஒன்று; அதனை உடையவனாதலின், சேரன் குட்டுவனென்று கூறப்படுவான்; அது, கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்று; "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா" என்னும் பழையவெண்பாவாலுணர்க.

50. வரு புனல் வாயில் வஞ்சியும் வறிது—பெருகுகின்ற நீரையும், கோபுரவாயிலையுமுடைய வஞ்சியென்னுமூரும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்.

மருமான் (சஎ) குட்டுவன் (சக) அவனுடைய வஞ்சியும் வறிதென முடிக்க.

அதாஅன்று—அவ்வூரன்றி,

(கு - பு.) வஞ்சிக்குக் கீழ்த்திசைக்கண்ணே திருக்குணவாயிலென்பதோ ரூரிருந்ததென்று தெரிதலின், இங்கேயுள்ள 'வாயில்வஞ்சி' என்பதற்குக் குண வாயிலென்னும் ஊரையுடையதான வஞ்சிநகரமென்று பொருள்கூறினும் பொருந்தும்; "குணவாயிற் கோட்டத் தரசு துறந்திருந்த" (சிலப்பதிகாரம்) என்பதன் உரையைப்பார்க்க. வஞ்சிக்கு மேற்கே குடவாயிலென்று ஒரூ ரிருந்ததென்று, புறநானூறு, எச - ம் பாட்டின் பின்னுள்ள பழைய வாக்கி யத்தால் தெரியவருகின்றது. ஒரு கொடியின்பெயராகிய வஞ்சியென்பது அதனை மிகுதியாக உடைய ஊருக்குப் பெயராயிற்று; "பொற்கொடிப்பெயர்ப் படூஉம் பொன்னகர்", "பூங்கொடிப் பெயர்ப்படூஉம், திருந்திய நன்னகர்" (மணிமேகலை, உசு-ம காதை, கஉ; உஅ - ம் காதை; கoக - உ) என்பவற்றா லறிக. வறிதென்பது சிறிதென்னும் பொருளதாதலை, "வறிதுவடக் கிறைஞ் சிய சீர்சால் வெள்ளி" (பதிற். உச), "வறிது சிறிதாகும்" (தொல். உரிச். ௩அ) என்பவற்றானுமுணர்க. 'வஞ்சியும் வறிதே' என்பது, இடத்துநிகழ் பொருளின்றொழில் இடத்தின்மேல் ஏறிநின்றது. 'அதாஅன்று' என்பதை, 'அதா அன்றெ'ன அகரநீட்டெழுதுக; இதனை, "அன்றுவரு காலை யாவா குதலு, மைவரு காலை மெய்வரைந்து கெடுதலுஞ், செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப" என்பதனான்...முடிக்க' (தொல். உயிர்மயங். இசு. ந. உரை) என்பதனால், 'அதா அன்று' என்பதை முடித்துக்கொள்க.

51 - 2. நறவு வாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து அறை வாய் குறு துணி—தேனைப் பூக்கள் தம்மிடத்தினின்று துளிக்கும் இளமை முதிர்ந்த நுணாமரத்தினது வெட்டின வாயையுடைய குறியகுறட்டை,

(கு - பு.) அறை - அறுத்தல்; "அறைக்கரும்பு" (பொருநராற்றுப் படை. ௧௯௩). குறட்டை - கட்டையை.

52 - 3. [அயிலுளி பொருத, கைபுனை செப்பங் கடைந்த மார்பின்:] அயில் உளி கடைந்த கைபுனை செப்பம் பொருத மார்பின் மந்தி (௫௬)— கூர்மையையுடைய உளிகள் உள்ளேசென்றுகடைந்த சாதிலிங்கம் தோய்ந்த சேப்புச்சேர்ந்த மார்பின் மந்தி,

(கு - பு.) செப்பம் - சிவப்புநிறம். நுணுக்கட்டையிலிருந்து சிவப்புவர்ணம் உண்டாதலின், இங்ஙனம்கூறினார்.

54. செய் பூ கண்ணி செவி முதல் திருத்தி—கிடேச்சையாற்செய்த பூவினையுடைய மாலையைச் செவியடியிலே நெற்றிமாலையாகக் கட்டி,

(கு - பு.) கிடேச்சை - நெட்டி.

55. நோன் பகடு உமணர் ஒழுகையொடு வந்த மந்தி (௫௬)—வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய உப்புவாணிகருடைய சகடவொழுங் கோடே கூடவந்த மந்தி,

(கு. பு.) நோன்மை - வன்மை. இவ்வடியின்பொருளை, "பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச், சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப், பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி" (பெரும்பாணாற்றுப்படை, 63 - 5) என்பவற்றாலுமுணர்க.

சகடஒழுங்கு - வண்டியொழுங்கு.

56. மகாஅர் அன்ன மந்தி—அவர்கள் வளர்த்தலின் அவர்கள் பிள்ளைகளையொத்த மந்தி,

56 - 8. மடவோர் மகாஅர் அன்ன மளி நீர் முத்தம் வாள் வாய் எருந் தின் வயிற்றகத்து அடக்கி—அவ்விடத்து மடப்பத்தையுடைய மகளிருடைய எயிற்றையொத்த செறிந்த நீர்மையையுடைய முத்தை வாள்வாய்போலும் வாயையுடைய கிளிஞ்சிலின் வயிற்றிடத்தே இட்டுப் பொதிந்து,

(கு - பு.) எயிறு - பல். முத்துக்களைக் கிளிஞ்சிற்குள்ளேவைத்து.

59 - 60. [தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி, னுளரிய லைம்பா லுமட் டியரீன்ற:]

நுசுப்பின் நல்கூர் புறம் தோள் மறைக்கும் உமட்டியர்—நுசுப்பினது நல்கூர்ந்த புறத்தைத் தோள் மறைக்கும் உமட்டியர்,

என்றது:—இடை தனது நுண்மையால் நெகிழமுயங்குங்காலத்து ஊற் றின்பம் பெறாது மிடிப்பட்ட புறத்தினைத் தோள் இறுகமுயங்கி அவ்வின் பத்தைக்கொடுத்தற்குக் காரணமான உமட்டியரென்றவாறு.

ஊற்றின்பம் பெற்றறியாதென்னும் புறங்கூற்றை யென்றுமாம்.

உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற — அசைகின்ற இயல்பினை யுடைய ஐந்துபகுதியாகிய மயிரினையுடைய உப்புவாணிகத்தியர் பெற்ற,

(கு . பு. நுசுப்பு - இடை, நல்கூர்ந்த - வறுமையுற்ற. ஊற்றின்பம் - ஸ்பர்சஇன்பம். கூந்தலின் ஐந்து பகுதிகளாவன: குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சையென்பன.

61. கிளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்—விளங்குகின்ற

பூனை யுடைய பிள்ளைகளுடனே தானும் கிலுகிலுப்பைகொண்டு விளையாடும்,

(கு - பு.) கிலுகிலுப்பை - ஒருவகை விளையாட்டுக்கருவி.

62. தத்து நீர் வரைப்பின் கொற்கை கோமான்—முரிகின்ற நீரைத் தனக்கு எல்லையாகவுடைய கொற்கையென்னும் ஊர்க்கு அரசன்,

மந்தி முத்தையடக்கி உமட்டியரீன்ற புதல்வரோடே ஆடுங் கொற்கை யென முடிக்க.

(கு - பு.) கொற்கை - பாண்டியர்களுடைய இராசதானிகளுள் ஒன்று. இது பாண்டிநாட்டிற் கடற்கரைக்கண் உள்ளது. இதனைச்சார்ந்த கடற் றுறையிலே முத்துக்கள் அகப்படுமென்பர்; "கொற்கையம் பெருந்துறை

முத்தொடு" (சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, ௮௦), "தென்கடன் முத்தும்" (பட்டினப்பாலை, ௧௮௯; சிலப்பதிகாரம், வேனிற். ௧௧), "தென்பவ்வத்து முத்துப்பூண்டு" (புறநானூறு, ௩௮௦) "கொற்கைத் துறை யிற் றுறைவாணர் குளிக்குஞ் சலாபக் குவான் முத்தும்" (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்) என்பவற்றாலு முணர்க. புறத்தேசென்று உப்புவாணிகம் செய்து திரும்பும் உமணர்களுடைய வண்டியொழுங்குகளுடன் வந்த மந்தி அவர்களுடைய பிள்ளைகளுடன் முத்துக்கள் உள்ளே பெய்யப்பெற்ற இளிஞ் சிலைக் கிலுகிலுப்பை யாகக்கொண்டு விளையாடுதற்கு இடமாகவுள்ளது கொற் கையென்றபடி.

63. தென் புலம் காவலர்
மருமான்—தெற்கின்கண்ணதாகியநிலத்தைக் காத்தற்ரெழிலையுடையார் குடியிலுள்ளோன்,

63 - 5. [ஒன்னார், மண்மாறுகொண்ட மாலை வெண்குடைக், கண்ணார் கண்ணிக் கடுந் தேர்ச் செழியன்:]

ஒன்னார் மண் மாறு கொண்ட செழியன்—பகைவர்நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட பாண்டியன்,

மாலை வெண்குடை கண்ணார் கண்ணி கடு தேர் செழியன்—முத்தமாலை யையுடைய கொற்றக்குடையினையும் கண்ணிற்கு அழகுநிறைந்த கண்ணி யினையும் கடிய தேரினையுமுடைய செழியன்,

(கு - பு.) முடியரசர்களுடைய குடையை வெண்கொற்றக்குடையென் றும் கொற்றக்குடையென்றும் கூறுதல் மரபு. கண்ணி - தலையிலணிந்துகொ ள்ளுமாலை.

66 - 7. [தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே:] நனை மகிழ் தாங்கரு மரபின் தமிழ் நிலைபெற்ற மறுகின் மதுரையும் வறிது—தன்னிடத்துத் தோன்றிய மனமகிழ்ச்சி பொறுத்தற் கரிய முறைமையினையுடைய தமிழ வீற்றிருந்த தெருவினையுடைய மதுரை யும் வறிது;

நனைமகிழ்—வினைத்தொகை,

கோமான் (சுஉ) மருமான் (சுங) செழியன் (சுரு) அவனுடைய மது ரையும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்.

அதா அன்று—அவ்வூரன்றி,

(கு - பு.) நனைத்தல் - உண்டாதல்; அரும்புகளை நனையென்பது இது காரணம் பற்றியே. சங்கப்புலவர்கள் வீற்றிருந்து தமிழாராய்தற்கு இடமா யிருந்ததுபற்றி, 'தமிழ்நிலைபெற்ற...மதுரை' என்றார்; "தமிழ்கெழுகூடல்" (புறநானூறு, 58), 'தென்றமிழ்மதுரை' (மணிமேகலை, 25-வது, 139). வறிது என்பதற்கு, முன் 50 - ம் அடிக்குறிப்பில் எழுதியவாறே பொருள்கொள்க.

68. [நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த:] பொய்கை நறு நீர் அடைகரை நிவந்த—பொய்கையிடத்து நறிய நீரடைகரையிலே நின்று வளர்ந்த,

(கு - பு.) இனி, சோழனுடைய இராசதானியாகிய உறையூர் கூறப்படு கின்றது. பொய்கை - ஒருவகை நீர்நிலை; மானிடரால் ஆக்கப்படாத நீர்நிலை யென்றுங் கூறுவர்; சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், ௬0அ - ம் செய்யு ளுரையைப் பார்க்க.

69. துறு நீர் கடம்பின் துணை ஆர் கோதை —செருங்குகின்ற தன் மையையுடைய கடம்பினுடைய இணைதல் நிறைந்த மாலை,

* கோதைபோலப் பூத்தலிற் கோதையென்றார்.

(கு - பு.) கடம்பு - கடப்பமரம்; என்றது நீர்க்கடம்பினை. அதன்பூ மாலைபோலவே தோன்றுமாதலின், அதனைக் கோதை யென்றார்.

70 - 71. [ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற், கோவத்தன்ன கொங்கு சேர் புறைத்தலின்:]கோவத்து அன்ன கொங்குஉறைத்தலின்

சேர்பு ஓவத்து அன்ன உண் துறை மருங்கின்—தன்னிடத்து இந்திரகோபத்தையொத்த தாதை உதிர்த்தலின் அத்தாது சேர்ந்து சித்திரத்தையொத்த உண்ணும் துறையிடத்தே நின்ற,

(கு - பு.) கோவம் - இந்திரகோபம்; இது பட்டுப்பூச்சியென்று இக் காலத்து வழங்கப்படுகின்றது. தாது, மேற்கூறிய கடப்பம்பூவின் மகரந் தங்கள். உண்ணுந்துறை - பலரும்வந்து நீருண்ணுந்துறை.

72 - 3. (வரு முலை அன்ன) வண் முகை உடைந்து திருமுகம் அவிழ் ந்த தெய்வம் தாமரை—(எழுகின்ற பெரியமுலையையொத்த) பெரிய முகை நெகிழ்ந்து அழகினையுடைய முகம்போல மலர்ந்த தெய்வத்தன்மையையு டைய தாமரையிடத்து,

† "பொருளே யுவமஞ் செய்தனர்" என்னுஞ் சூத்திரத்தாற் பொருளை உவமஞ் செய்தார்.

(கு - பு.) முகை - அரும்பு. பொருளே உவமஞ் செய்தன ரென்பதற் குப் பொருள்: உவமேயத்தை உவமானமாகச் செய்தனரென்பது; பொருள் - உவமேயம்.

74 - 6. ஆசு இல் அங்கை அரக்கு தோய்ந்தன்ன சேயிதழ் பொதிந்த செம் பொன் கொட்டை எம இன் துணை தழீஇ—குற்றமில்லாத அங்கை

---

* "கடம்பு சூடிய கன்னி மாலைபோல்" என்றார் சிந்தாமணியிலும்; குணமாலையாரிலம்பகம், கசo.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், கூ.

யைச் சாதிலிங்கந்தோய்ந்தாலொத்த சிவந்த இதழ்சூழ்ந்த செம்பொன்னாற் செய்தாலொத்த பீடத்திலே தன்னுயிர்க்குக் காவலாகிய இனிய பெடையைத் தழுவித் துயில்கொண்டு,

(கு - பு.) அங்கை=அகங்கை - உள்ளங்கை. கொட்டையென்றதும் பீட மென்றதும் தாமரைப்பூவின் உட்கொட்டையை; இது பொகுட்டெனவும் வழங்கும்; இது பொன்னிறமாக இருப்பது பற்றி, செம்பொற்கொட்டை யென்றார்; பதும பீடத்தன்னகரும்" என்றது இங்கே அறியத்தக்கது; (கம்பராமாயணம், கையடை. எ) பெடை - இங்கே பெண்வண்டு.

76 - 8. இறகு உளர்ந்து காமர் தும்பி காமரம் செப்பும் தண்பணை தழீஇய தளரா இருக்கை—அத்துயிலெழுந்து விருப்பமருவினதும்பி சீகாமர மென் னும் பண்ணைப்பாடும் மருதநிலஞ்சூழ்ந்த அசையாத குடியிருப்பினை யுடைய,

(கு - பு.) இறகுளர்தல், இங்கே துயிலெழுதலைப் புலப்படுத்தியது. தும்பி - ஒருவகை வண்டு. பணை - வயல்.

79. குணபுலம் காவலர் மருமான்—கிழக்கின் கண்ணதாகிய நிலத்தைக் காத்தற்றொழிலையுடையோர் குடியிலுள்ளோன்,
(கு - பு.) குணக்கு - கிழக்கு.

79 - 81. [ஒன்னார் ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந், தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை:] கதவம் ஓங்கு எயில் உருமு சுவல் சொறியும் ஒன்னார் தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தட கை— கதவத்தையுடைய உயர்ந்த மதிற்றலையிலே உருமேறு தன்கழுத்தைத் தின வால் தேய்க்கும் பகைவர் தூங்கெயிலை அழித்த தொடிவிளங்கும் பெருமை யையுடைய கையினையும்,

(கு - பு.) கதவம் - கோபுரவாயிற்கதவு. உருமேறு - இடி. தூங்கு எயில் - அசையும்மதில். சோழபரம்பரையிற் பிறந்த ஓரரசன், உலகவிரோதிகளாகிய ஒருவகையார் பெற்றிருந்த அசைந்துதிரியும் மதிலொன்றை அழித்தமை பற்றி அவனுக்குத் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனென்று பெயராயிற்றென்பது பழைய வரலாறு. இதனை, புறநானூறு, ௩௯ - ம் செய்யுளின் குறிப்புரையாலு முணர்க. தொடி - வீரவளை.

82. நாடா நல் இசை நற்றேர் செம்பியன்—ஐயுற்று ஆராயப்படாத உலகறிந்த நல்லபுகழினையும் நல்லதேரினையுமுடைய சோழனது,

(கு - பு.) சிபிவம்சத்திற் பிறந்தவனெனப்பொருள்படும் சைப்பியனென்பது, செம்பியனென்று ஆயிற்றென்பர்.

83. ஓடா பூட்கை உறந்தையும் வறிது—தன்னிடத்திருந்தோர்

ஒடா மைக்குக் காரணமாகிய மேற்கோளினையுடைய உறந்தையென்னும் ஊரும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்;

அது, *"முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென" என்பதனானுணர்க.

அதா அன்று—அவ்வூரன்றி,

(கு - பு.) "பூட்கை யெனபது மேற்கோ ளாகும்" என்பது திவாகரம். 'முறஞ் செவி' என்னும் மேற்கோளுக்குப்பொருள்: முறம் செவி வாரணம் - முறம்போலும் காதையுடைய யானையை, முன் சமம் முருக்கிய - முன்பு போரிற் கெடுத்த, புறம் சிறை வாரணம் - புறத்தே சிறகையுடைய கோழி யென்னும் பெயரைப் பெற்றதாகிய உறையூரில், புரிந்து புக்கனர் - விரும்பிப் புகுந்தார்; என, அசை. 'புறஞ்சிறை' என்பது வாரணத்திற்கு அடை; 'குடர் தொடர் குருதிக்கோட்டுக் குஞ்சரநகரம்', (சீவக. மண்மக. அக) என்பது போலக்கொள்க. தான் ஏறி வந்த யானையை ஒரு கோழிபொருது வென்ற மைகண்டு, அந்நிலவன்மையையறிந்து, அதில் நகரம் சமைப்பித்த சோழ னொருவன், அந்நகரத்திற்குக் கோழி யென்று பெயர்வைத்தானென்பது பண டைவரலாறு.

84 - 5. வானம் வாய்த்த வளமலை கவாஅன் கான மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய—மழை பருவம்பொய்யாமற் பெய்கையினாலே உண்டான செல்வத்தையுடைய மலைப்பக்கத்திற் காட்டிடத்தேதிரியுமயில் கூவியதற்குக் குளிர்ந்து கூவிற்றென்று அருள்மிகுதியாற் போர்வையைக்கொடுத்த,

(கு - பு.) இனி, பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரியென்னும் கடையெழுவள்ளல்களும் இப்பொழுது இல்லை யென்பார், முதலிற் பேகனைக்கூறுகின்றார்: கவான்,

மலைப்பக்கமென்பதை, "விறல்வரைக்கவாஅன்," "மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்", கவானுயர் சோலையின் வாய்த்தனி யேவரக் கண்டனனே" என்பவற்றாலுமுணர்க.

86. அரு திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்—பெறுதற்கரிய வலி யையுடைத்தாகிய வடிவினையுடைய ஆவியர் குடியிற்பிறந்த பெரியமகன்,

(கு - பு.) பேகன், ஆவியர் குடியிற்பிறந்தவ னென்பது, "அதமனெம் பரிசி லாவியர் கோவே" (புறநானூறு, கசஎ) என்பதனாலும் வெளியா கின்றது.

87. † பெரு கல் காடன் பேகனும்— பெரிய மலைநாட்டையுடைய பேகனென்னும் வள்ளலும்,

---

* சிலப்பதிகாரம் நாகோண்காதை.

† சிலபிரதிகளில், பெருங்கடனாடனென மூலத்தும் பெரிய கடனாடனென உரையிலும் வேறுபாடுண்டு.

நல்கிய பெருமகனாகிய பேகனுமெனமுடிக்க.

(கு - பு.) பேகன், குளிர் மிகுதியாற் கூவியதென்று மயிலுக்குப் போர் வைகொடுத்தமையும், அவன் மலைநாட்டை ஆண்டவனென்பதும் பின்னுள்ள வற்றாலும் விளங்கும்: "உடாஅ போரா வாகுத லறிந்தும், படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ, கடாஅ யானைக் கலிமான் பேகன்", மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப், படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக், கடாஅ யானைக் கலிமான் பேக", "ஏர்ந்தண் சிலம்பி

னிருங்கு களிமுழை, யருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமையப், பெருங்க னுடன் பேகன்" (புறநானூறு, கசக, கசடு, கடுஅ); "முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையு, மெல்லைநீர் ஞாலத் திசை விளங்கத் - தொல்லை, இரவாமலீந்த விறைவர்போ னீயுங், கர வாம லீகை கடன்" என்பது புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், சு. இங்ஙனங் கொடுத்தல் கோடைமடமெனப்படும். இவனுடைய ஊர் நல்லூரென்பது. இவன்பெயர் வையாவிக்கோப்பெரும்பேகனெனவும் வழங் கும். தனக்கு உரியவளாகிய கண்ணகியென்பவளைத் துறந்ததனால் அவளை அங் கீகரித்துக்கொள்ளும் வண்ணம் **கபிலர்** முதலிய புலவர்களால் இரந்துபாடப் பெற்றான். இது, 'கண்ணகிகாரணமாக வையாவிக்கோப் பெரும்பேகனைப் பரணர்பாடிய கைக்கிளைவகைப் பாடாண் பாட்டு' (தொல். புறத்திணை. நடு - சூ. நச்சினார்க்கினியம்) என்பதனாலும் விளங்கும். இவனைப்பாடிய புலவர் கள்: பரணர், கபிலர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழாரென் பார். இன்னுமுள்ள இவனுடைய வரலாற்றைப் புறநானூறு, அச்சுப்புத்தகத் திலுள்ள, 'வையாவிக்கோப்பெரும்பேகன' என்னும் பெயராலுமுணர்க.

87 - 8. சுரும்பு உண நறு வீ உறைக்கும் நாகம் நெடுவழி—சுரும் புண்ணும்படிநறியபூத் தேனைத்துளிக்கும் சுரபுன்னையையுடைத்தாகிய நெடிய வழியினின்ற,

(கு - பு.) இனி, பாரியென்னும் வள்ளலைக் கூறுவார். சுரும்பு - வண்டு,

89. சிறு வீ முல்லைக்கு பெரு தேர் நல்கிய — சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடி தடுத்தற்கு அதை வேண்டிற்றாகக்கருதிப் பெரிய தேரைக் கொடுத்த,

(கு - பு.) சிறுவீமுல்லை, பெருந்தேர் என்பன முரண்தொடை.

90 - 91. பிறங்கு வெள் அருவி வீழும் சாரல் பறம்பிற் கோமான் பாரியும்—மிகுகின்ற வெள்ளிய அருவிகுதிக்கும் பக்கத்தினையுடைய பறம் பென்னும் மலைக்கரசனாகிய பாரியென்னும் வள்ளலும்,

(கு - பு.) பாரி, முல்லைக்குத் தேர் கொடுத்ததையும், அவன் பறம பென்னுமலைக்குத்தலைவனென்பதையும், "இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடா தாயினுங், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த, பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்", "இவரே,

யூருட னிரவலர்க் கருளித் தேருடன், முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப், பற ம்பிற் கோமான் பாரி மகளிர்" (புறநானூறு, உ00, உ0க) என்பவற்றாலும், "முல்லைக்குத் தேரும்" என்னும் வெண்பாவாலும் உணர்க; ஸ்ரீசுந் தரமூர்த்தி நாயனாரருளிச்செய்த, "கொடுக்கிலா தானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்னும் திருப்புகலூர்த் தேவாரத்தால் இவனுடைய வள் ளன்மை நன்குபுலப்படும். இவன், முந்நூறூர்களையுடைய பறம்புநாட்டை ஆண்டவன்; அந்த முந்நூறூர்களையும் தன்னுடைய மற்றைப்

பொருள்களை யும் பரிசிலர்க்குக் கொடுத்தோன், மிகக பராக்கிரமமுடையவன்; இவனை வெல்லக்கருதிய தமிழ்நாட்டுவேந்தர்மூவரும் போர்செய்து வெல்லவொண் ணாமையின் வஞ்சித்து இவனைக்கொன்றனர்; இவனுடைய பிறவரலாறுகளைப் புறநானூறு அச்சுப்புத்தகத்துள்ள பாரியென்னும் பெயராலுணர்க.

91 - 3. கறங்கும் மணி வால் உளை புரவியொடு வையகம் ஈர நன் மொழி மருள இரவலர்க்கு ஈந்த காரி (கூடு)—ஒலிக்கும் மணியினையும் வெள் ளிய தலையாட்டத்தினையுமுடைய குதிரையோடேதனது நாட்டினையும், அரு ளினையுடைய நன்றாகிய மொழியினையும் ஏனையோர்கேட்டுவியக்கும்படி இரவலர்க்குக் கொடுத்த காரி,

ஈரநன்மொழிமருளவென்றுமாறுக.

94-5. அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சவரு நெடுவேல் கழல் தொடி
தட கை காரியும் — தன்னிடத்துறையுங் கொற்றவையுடைய கோபத்தின் மிகுதியினாலே தான் விளங்கும் அச்சந்தோன்றும் நெடியவேலினையும் உழலுந்தொடியினையணிந்த பெருமையையுடைய கையினையுமுடைய காரியென் னும்வள்ளலும்,

(கு - பு.) அழல்-கோபம். கொற்றவை - வீரமகள்; வீரலக்ஷ்மியென்றுங் கூறப்படுவள்; வீரத்தின் அதிதேவதையாதலின். வீரர்களுடைய தோள்களி லும் ஆயுதங்களிலும் இவள் இருப்பதாகச் சொல்லுவதுண்டு. தொடி - வீர வளை. இவன், வீரத்திற்சிறந்தவன்; பகைவர் பலரைவென்றுமிக்கபுகழ்பெற் றவன்; மலையமான்

திருமுடிக்காரியென்றும் மலையனென்றும் கூறப்படுவன்; இவன்குதிரை ரக்குக் காரியென்பதுபெயர் ; ஓரியென்னும் வள்ளலைவென்ற வன். இவற்றை, பின்வரும், "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, ஓரிக் குதிரை யோரியும்" என்பதனுலும், "காரி யூர்ந்து பேரமர்க் கடந்த, மாரி யீகை மறப்போர் மலையன்" என்பதனுலுமுணர்க. இவனிருந்த இடம் திருக் கோவலூர்; இவனுடையமலை முள்ளூர்மலையென்று நூல்களில் வழங்கும். இவனுடைய குடித்தலைவனுக்கு மலையமானென்பது பெயராதலின், இவனுண்ட நாடு மலையமானுடென்று முதலிற் கூறப்பெற்றுப் பிற்காலத்து அது மலா டென்று மருவி வழங்குவதாயிற்று, அந்நாடு கொடுந்தமிழ்நாடு பன்னி ரண்டனுள் ஒன்று. இன்னுமுள்ள இவனுடையவரலாறுகளை, புறநானூற்று

௩.—சிறுபாணாற்றுப்படை.

உ௫

அச்சுப்புத்தகத்தில், 'மலையமான் திருமுடிக்காரி' என்பதன்பின்னுள்ள வாக் கியங்களாலுணர்க.

95 - 7. [நிழறிகழ், நீல நாக நல்கிய கலிங்க, மாலமர் செல்வற் கமர்ந்

தனன் கொடுத்த:] நாகம் நல்கிய நிழல் திகழ் நீலம் கலிங்கம் ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த ஆய் (கூக)—பாம்பு ஈன்றுகொடுத்த ஒளி விளங்கும் நீலநிறத்தையுடைய உடையினை ஆலின்கீழிருந்த இறைவனுக்கு நெஞ்சுபொருந்திக் கொடுத்தஆய்,

(கு - பு.) ஆலின்கீழிருந்த இறைவன் - சிவபெருமான்; "ஆலமர் செல்

வன் புதல்வன் வரும்" (சிலப்பதிகாரம், குன்றக்குரவை) என்பதனாலு!

மூணர்க' இவ்வள்ளல் சிவபெருமானுக்கு ஆடைகொடுத்த சரித்திரம், வேறே எங்கும் காணப்பட்டிலது.

98 - 9. சாவத் தாங்கிய சாந்து புலர் திணி தோள் ஆர்வம் நன்மொழி ஆயும்—வில்லையெடுத்த சந்தனம் பூசிப்புலரும் திண்ணிய தோளினையும் கேட் டோர்க்கு விருப்பத்தைச்செய்யும் நன்றாகிய சொல்லினையுமுடைய ஆயென்

னும் வள்ளலும்,

(கு - பு.) சாவந்தாங்கியதோளென்க. 'ஆர்வநன்மொழி' என்பதையும்

இதன்பொருளையும், "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" என்னுந் திருக்குறளாலும் அதன்பொருளாலும் விளங்க உணர்க . ஆயென்னும் வள்ளல், உழுவித்துண்போர்வகையினன்; அரச

ராற் கொடுக்கப்படும் வேளென்னும் உரிமையையடைந்தோன்; சிறந்தவீரன்; பொதியின்மலைத்தலைவன்; அம்மலையின் அருகேயுள்ள ஆய்குடியென்பது இவனுடையவூர்; ஆய் அண்டிரனென்றும் அண்டிரனென்றும் இவன் பெயர் வழங்கும். பாணர்க்கும் மற்ற இரவலர்க்கும் யானைகளையும் மற்றப்பொருள் களையுபர் மிகுதியாகக்கொடுத்தவன் ; சுரபுன்னைப்பூமாலையையுடையவன் ; கொங்குநாட்டு அரசரோடு போர்செய்து அவர்களைவென்றோன். சங்கப்புல வர்களில் இவனைப்பாடியவர்கள்: உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார், துறை யூர் ஓடைகிழார், குட்டுவன்கீரனார்; இவர்களுள் இவன் இறந்தபின்பும் இருந் தோர்: துறையூர் ஓடைகிழாரொழிந்த மற்றையோர்.

99 - 101. மால் வரை கமழ் பூ சாரல் கவினிய நெல்லி அமிழ்து விளை தீங்கனி * ஔவைக்கு ஈந்த அதிகன் (௧0௩)—பெருமையையுடைய

* ஔவை அதிகமானிடத்து நெல்லிக்கனி பெற்றமையைப் பின்வரும் செய்யுளாலுமுணர்க: புறநானூறு, கக - "வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார், களம்படக் கடந்த கழறொடித் தடக்கை, யார்கலி நறவி னதிகர் கோமான், போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி, பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி, நீல மணிமிடற் றொருவன் போல, மன்னுக பெரும நீயே தொன்னிலைப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாத னின்னகத் தடக்கிச், சாத னீங்க வெமக்கீத் தனையே."

திணை, பாடாண்டிணை; துறை, வாழ்த்தியல். அதிகமானெடுமானஞ்சியை ஔவையார் நெல்லிப்பழம்பெற்றுப் பாடியது.

4

மலையிற் கமழும்பூக்களையுடைய பக்கமலையிலேநின்று அழகுபெற்ற கருநெல்லி யினது அமிழ்தின்தன்மை தன்னிடத்தேயுண்டான இனிய பழத்தைத் தான் நுகர்ந்து உடம்புபெறாதே ஔவைக்குக்கொடுத்த அதிகன்,

(கு - பு.) நெல்லிமரங்களுள் ஒருவகைநெல்லியின்கனி அமுதமயமாய் விளங்கி, உண்டவர்களை அநேகவருடங்கள் வாழ்ந்திருக்கச்செய்யுமென்பதும் இதனாலேதான், அந்தக்கனியையுண்ட ஔவையார் அநேகவருடங்கள் ஜீவித்து வாழ்ந்திருந்தனரென்பதும் பண்டைவரலாறு. அமுதமயமான நெல்

லிக்கனியுண்டென்பது, ஸ்ரீவில்லிபுத்தூரார் பாரதம், பழம்பொருந்துசருக்கத்தில், "அறுவரும்" என்னும் ௨௨-ம் செய்யுளில், "நிறைசுவையமுதநெல் லியின்கனியும்" என்பதனாலும் அறியலாகும்; 'இனிய கனிகளென்றது, ஔவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை' (திருக்குறள்: ௯௦௦, உரை) என்று பரிமேலழகரெழுதியதும் இங்கே அறிதற்பாலது; "பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையு, மாங்கு வருபெண்ணை யாற்றினையும் - ஈங்கே, மறப்பித்தாய் வாழதிகா வன்கூற்றி னுவை, யறப்பித்தா யாமலகந் தந்து" என்னும் ஔவையார் திருவாக்கும் இதனைப் புலப்படுத்துகின்றது, இது, தமிழ் நாவலர்சரிதையிற்கண்டசெய்யுள்.

102 - 3. உரவு சினம் கனலும் ஒளி திகழ் நெடு வேல் அரவம் கடல் தானை அதிகனும்—தன்னிடத்துறையும் கொற்றவையது வலியினையுடைய சினம் நின்றெரியும் ஒளிவிளங்கும் நெடிய வேலினையும் ஆரவாரத்தையுடைய கடல்போலும் படையினையுமுடைய அதிகமானென்னும் வள்ளலும்,

(கு - பு.) உரவு வலி, இதிலுள்ள 'உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்' என்பதனையும், முன்னுள்ள (அடி, ௬௯) "அழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேல்" என்றதனையும் ஒத்துள்ளன.

103 - 5. காவாது நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம் முட்டாது கொடுத்த கள்ளியும் (௧௦௫)—தன்மனத்து நிகழ்கின்றனவற்றை மறையாதுகூறி நட்புச்செய்தோர் மனமகிழும்படி அவர்கள் இல்லறம் நடத்துதற்கு வேண்டும்பொருள்களை நாடோறும் கொடுத்தகள்ளியும்,

(கு - பு.) கரவாது - ஒளியாமல். நடை - இல்லற ஒழுக்கம். முட்டாமல் - தட்டில்லாமல்.

105 - 7. முனை விளங்கு தடக்கை துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுகோடு நளி மலைநாடன் நள்ளியும்—பகைப்புலத்தே கொலைத் தொழிலால் விளங்கும் பெருமையையுடைய கையினையுடைய துளியையுடையமழை பருவம்பொய்யாதுபெய்யும் உயர்ச்சியாற் காற்றுத்தங்கும் நெடிய சிகரங்களையுடைய செறிந்த மலைநாட்டையுடையனாகிய நள்ளியென்னும் வள்ளலும்,

(கு - பு.) முனை - போர்க்களம். தட - பெருமை. மழைபொழியுமலை நாடென்க. நளி - செறிவு. நள்ளியென்பவன், கடையெழுவள்ளல்களில் ஒருவன். தோட்டியென்னுமலைக்கும் அதனைச்சார்ந்தநாட்டிற்கும் காட்டு நாட்டிற்கும் தலைவன். இவனைப்பாடிய புலவர்கள்: வன்பரணர், பெருந்தலைச் சாத்தனார். இவனுடைய குணவிசேடங்கள், புறநானூற்றின், கசஅ - ம் செய்யுள் முதலியவற்றால்விளங்கும். இவன்பெயர், கண்டிற்கோப்பெருநள்ளி, கண்டீரக்கோப்பெருநள்ளியெனவும் காணப்படுகின்றது.

107 - 9. நளி சினை நறு போது கஞலிய நாகு முதிர் நாகத்து குறும் பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த ஓரி (கசக)—செறிந்த கொம்புகளிட த்தே நறிய பூக்களெருங்கின இளமையையுடைய முதிர்ந்த சுரபுன்னையை யும், குறிய மலைகளையுமுடைய நன்றாகிய நாடுகளைக் கூத்தாடுவோர்க்குக் கொடுத்த ஓரி,

(கு - பு.) நறுமை போது; நறிய - நல்லமணமுள்ள. சுரபுன்னை - ஒரு வகைப்புன்னைமரம். பொறை - மலை.

110 - 111. காரி குதிரை காரியொடு மலைந்த ஓரி குதிரை ஓரியும்— காரியென்னும் பெயரையுடைத்தாகிய குதிரையையுடைய காரியென்னும் பெயரையுடையவனுடனே போர்செய்த ஓரியென்னும் பெயரையுடைத்தா கிய குதிரையையுடைய ஓரியென்னும் வள்ளலும்,

காரி கரியகுதிரையென்றும், ஓரி பிடரிமயிரென்றும் கூறுவாருமுளர்.

(கு - பு,) கடையெழுவள்ளல்களில் ஒருவனாகிய இவன், கொல்லிமலைக் கும் அதைச்சார்ந்தநாட்டிற்கும் தலைவன். இவன்பெயர் ஆதனோரியெனவும், வல்விலோரியெனவும்வழங்கும். இவனைப்பாடியபுலவர்கள்: வன்பரணர், கழைதின்யானையார். இவனுடைய குணவிசேடங்கள், புறநானூறு, கருஉ, கருரு - ம் பாடல்களால்விளங்கும்.

111 -3. [எனவாங், கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ, ளெழு வர் பூண்ட வீகைச் செந்நுகம்:]

என எழுவர் ஆங்கு பூண்ட ஈகை செந்நுகம்—என்றுசொல்லப்பட்ட எழுவரும் அக்காலத்தே

மேற்கொண்ட கொடையாகிய செவ்விய பாரத்தை,

எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள் எழுவர்—தம்மேலே வருகின்ற போர்களைக்கடந்த கணையத்தோடு மாறுபடுகின்ற திணிந்த தோளினை யுடைய எழுவர்,

(கு - பு.) இந்த எழுவள்ளல்களின்வரலாறுகள், "முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு, மரசுடன்பொருத வண்ணனெடுவேணக், கறங்கு

வெள் ளருவி கல்லலைத் தொழுகும், பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமி சைக், கொல்லி யாண்ட வல்வி லோரியுங், காரி யூர்ந்து பேரமர்க் கடந்த,

மாரி யீகை மறப்போர் மலையனு, மூரா தேந்திய குதிரைக் கூர்வேற், கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும், ஈர்ந்தண் சிலம்பி னிருடேங்கு நளி மூழை, யருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமையப், பெருங்க லுடன் பேகனுந் திருந்துமொழி, மோசி பாடிய வாயு மார்வமுற், றுள்ளி வருந ருலைவு நனிதீரத், தள்ளா தீயுந் தகைசால் வண்மைக், கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங், கெழுவர்" (புறநானூறு, கடுஅ) என்பதனாலும் புறநானூற்று அச்சுப் புத்தகத்துள்ள பாடப்பட்டோர்வரலாற்றாலும் விளங்கும். நுகம் - பாரம். கணையம் - யானையைத்தடுக்குமரம்.

114 - 126. [விரிகடல் வேலி வியலகம் விளங்க, வொருதான்

ருங்கிய வுரனுடை கோன்று, ணறுவீ நாகமு மகிலு மாரமுந், துறையாடு மகளிர்க் குத் தோட்புணை யாகிய, பொருபுன றரூஉம் போக்கரு மரபிற், றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய, நன்மா விலங்கை மன்ன ருள்ளும், மறுவி ன்றி விளங்கிய வடுவில் வாய்வா, ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன், களிற்றுத் தழும்பிருந்த கழறயங்கு திருந்தடிப், பிடிக்கணஞ் சிதறும் பெயன் மழைத் தடக்கைப், பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை, நல்லியக் கோ டனை நயந்த கொள்கையொடு:]

விரி கடல் வேலி வியலகம் விளங்க ஒரு தான் தாங்கிய நல்லியக்கோ டனை நயக்தனிர்செலின் (உகூ)—பரந்த கடலாகிய வேலியையுடைய உலக மெல்லாம் விளங்கும்படி ஒருவனாகிய தானே பொறுத்த நல்லியக்கோடனை விரும்பிச் செல்லின்,

மறு இன்றி விளங்கிய உரன் உடை கோன் தாள் வடு இல் வாய் வாள் உறுபுலி துப்பின் ஓவியர்பெருமகன்—குற்றமின்றி விளங்கிய அறிவையுடைத்தாகிய வலியையுடைய முயற்சியினையும் பகைவர்முகத்தினும் மார்பினும் வெட்டின வாய்த்தவாளையும் மிக்க புலிபோலும் வலியினையுமுடைய ஓவியருடைய குடியிலுள்ளோன்,

நறு வீ நாகமும் அகிலும் ஆரமும் துறை ஆடும் மகளிர்க்கு தோட்புணை ஆகிய பொரு புனல் தரூஉம் இலங்கை—நறிய பூக்களையுடைய சுரபுன்னை யையும் அகிலையும் சந்தனத்தையும் குளிக்குந்துறையிலே புனலாடுமகளிருடைய தோள்களுக்குத் தெப்பமாகக் கரையைக்குத்துகின்ற நீர்தருமிலங்கை,

கருவொடு போக்கரு மரபின் இலங்கை—கருப்பதித்த முகூர்த்தத்தாலே ஒருவராலும் அழித்தற்கரிய முறைமையினையுடைய

இலங்கை,

தொன்மா இலங்கைப் பெயரிய நன் மா இலங்கை—பழையதாகிய பெருமையினையுடைய இலங்கையினது பெயரைப்பெற்ற நன்றாகிய பெருமையை யுடைய இலங்கை,

மன்னருள்ளும் ஓவியர் பெருமகன்—அவ்விலங்கைக்குரிய அரசர் பலருள்ளும் ஓவியர்குடியிற் பிறந்தோன்,

௩.—சிறுபாணாற்றுப்படை.

உ௯

களிறு தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி — யானையைச்செலுத்துதலாலுளதாகிய தழும்புகிடந்த வீரக்கழல் கிடந்தசையும் பிறக்கிடாத அடியினையும்,

பிடிக்கணம் சிதறும் கை—பிடித்திரளைப் பலர்க்குங் கொடுக்குங்கை,

பெயல் மழை தடக்கை — பெய்தற்றொழிலையுடைய மழைபோன்ற பயனையுடைய பெரியகையினையுமுடைய,

பல்லியம் கோடியர் புரவலன்—பல வாச்சியங்களையுடைய கூத்தரைப் புரத்தலை வல்லவன்,

பேர் இசை நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு—பெரிய புகழை யுடைய நல்லியக்கோடனைக் காண்டற்குவிரும்பிய கோட்பாட்டுடனே,

பெருமகன் புரவலனாகிய நல்லியக்கோடனெனமுடிக்க.

(கு - பு.) முகத்திலும் மார்பிலும் ஆயுதங்களாலுண்டாகும்

புண்களை 'விழுப்புண்' என்பர்; "விழுப்புண் படாதநா ளெல்லாம்" என்னுந்திருக்குற ளாலுமுணர்க. கருப்பதித்தமுகூர்த்தமென்றது, இந்நகரம் அமைத்தற்கு அஸ்திவாரஞ்செய்தகாலத்தை. தொன்மாவிலங்கை - இராவணன் இராசதானியாகிய இலங்காநகரம். இப்பாட்டுடைத்தலைவன் நகரம் மாவிலங்கை யெனவும் வழங்கும்; "பெருமா விலங்கைத் தலைவன் சீறியா, ழில்லோர் சொன்மலை நல்லியக்கோடனை" (புறநானூறு, கஎசு) என்பதனாலுமுணர்க. பிறக்கிடாத - பின்னிடாத. பிடிக்கணம் - பெண்யானைக்கூட்டம்.

127. தாங்கரு மரபின் தன்னும்-பிறராற் பொறுத்தற்கரிய குடிப்பிறந் தோர்க்குரிய முறைமைகளையுடைய தன்னையும்,

(கு - பு.) மரபு - முறைமை.

127 - 8. தந்தை வான் பொரு நெடு வரை வளனும் பாடி—அவன்றந் தையுடைய தேவருலகத்தைத்தீண்டும் நெடிய மலையிற் செல்வத்தையும்பாடி,

(கு - பு.) தந்தையின்வரையென்க.

129. முன் நாள் சென்றனமாக—நாலுபத்துநாளைக்குமுன்னே போனேமாக,

இந்நாள்—இற்றைநாள்,

(கு - பு.) நாலுபத்துநாள் - சிலநாள்.

130. திறவா கண்ண சாய் செவி குருளை—விழியாத கண்ணையுடைய வாகிய வளைந்த செவியினையுடையகுட்டி,

* "நாயே பன்றி புலிமுய லென்கு, மாயுங் காலைக் குருளை யென்ப."

(கு - பு.) பிறந்த சிலநாள்வரையில் நாய்க்குட்டியின் கண்கள்

மூடப் பட்டிருக்கும்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், அ.

131. கறவா பால் முலை கவர்தல் நோனாது— பிறராற் கறக்கப்படாத பாலினையுடைய முலையையுண்ணுதலைத் தன்பசிமிகுதியாற் பொறுத்த லாற்றாது,

(கு - பு.) குருளையானது கவர்தலை.

132, புனிறு நாய் குரைக்கும் புல்லென் அட்டில்—ஈன்று அணிமையையுடைய நாய் கூப்பிடும் பொலிவழிந்த அடுக்களையில்,

(கு - பு.) அடுக்களை - சமையற்கட்டு.

133. காழ் சோர் அட்டில் (கூஉ)— கழிகள் ஆக்கையற்று விழுகின்ற அட்டில்,

முது சுவர் கணம் சிதல் அரித்த அட்டில் (கூஉ)— பழைய சுவரிடத் தெழுந்த திரண்ட கறையான் தின்ற அட்டில்,

(கு - பு.) ஆக்கை - கழிகளைக்கட்டும் கயிறுமுதலியன.

134. [பூழி பூத்த புழற்கா ளாம்பி:] பூழி புழல் காளாம்பி பூத்த அட் டில்—(கஉஉ) கனைந்தபுழுதி உட்பொய்யாகிய காளானைப் பூத்த அட்டில்,

(கு - பு.) காளான்பூத்த அட்டிலென்றதனால், மிக்கவறுமையைப்

புலப் படுத்தினர்; "ஆமெனி மறந்த கோடிய ரடுப்பில், ஆம்பி பூப்ப" என்றார் பெருந்தலைச்சாத்தனாரும்; (புறநானூறு, கசுச)

135 - 6. [ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல், வளைக்கைக் கிணைமகள்:] ஒடுங்கு பசி உழந்த ஒல்கு நுண்மருங்குல் வளை கை கிணை மகள்— ஒடுங்குதற்குக் காரணமான பசியாலே வருந்திய நுடங்கும் நுண் ணிய இடையினையும் வளையலையணிந்த கையினையுமுடைய கிணைவனுடைய மகள்,

(கு - பு.) கிணைவன்-கிணையென்னும்பறையைக்கொட்டுவோன். மகள் என்றது அவன் மனைவியை, "நினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉம், மன க்கினி யாற்குநீ மகளாய தூஉம், பண்டும் பண்டும் பல்பிறப் புளவால்" (மணிமேகலை, உக - வது காதை, உசு - ௩க.) என்பதனாலுமுணர்க.

136 - 7. வள் உகிர் குறைத்த குப்பை வேளை உப்பிலி வெந்ததை— பெரிய உகிராற்கிள்ளின குப்பையினின்ற வேளை உப்பின்றாய் அட்டிலிலே வெந்தவதனை,

138 - 9. மடவோர் காட்சி நாணி கடை அடைத்து இரு பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்— வறுமையுறுதலும் இயல்பென்றறியாது புறங்கூறுவோர் காண்டற்கு நாணித் தலைவாசலையடைத்து மிடியாற் கரிய பெரிய சுற்றத்தோடே கூடவிருந்து அடையத்தின்னும்,

140. அழி பசி வருத்தம் வீட— அறிவுமுதலியன அழிதற்குக் காரண மான பசியாலுளதாகிய வருத்தங்கள் விட்டுப் போம்படி,

(கு - பு.) பசி அறிவுமுதலியவற்றை அழிக்குமென்றது, "தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நலகுர வென்னு நசை" (திருக்குறள், ௧௦௪௩) எனவும், "குடிபிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ, நாணணி களையு மாணெழில் சிதைக்கும், ... பசிப் பிணி யென்னும் பாவி" (மணிமேகலை, ௧௧-வது காதை, எ௬-௮௦) எனவும், "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயர்ச்சி தாளாண் மை...பத்தும், பசிவந் திடப்பறந்து போம்" (நல்வழி) எனவும் வருவனவற் றால் உணரப்படும்.

140 - 143. பொழி கவுள் தறுகண் பூட்கை மணி தயங்கும் மருங்கின் சிறுகண் யானையொடு பெரு தேர் எய்தி யாம் அவணின்றும் வருதும்—மதம் வீழ்கின்ற கதுப்பினையும் கடுகக் கொல்லுதலாகிய மேற்கோளினையும் மணி யசையும் பக்கத்தினையும் சிறியகண்ணையுமுடைய யானையுடனே பெரியதே ரையும் பெற்று யாம் அவனிடத்துநின்றும் வாராநின்றேம்,

இது நிகழ்காலத்து வருதல், * "உம்மொடு வரூஉங் கடதற" என்புழிக் கூறினும்.

(கு - பு.) கதுப்பு - கன்னம், மேற்கோள் - கொள்கை, அவனென் றது, நல்லியக்கோடனை. வருதுமென்றது, பாணன் தன்சுற்றத்தாரையு முளப்படுத்திக்கூறியது. 'இது' என்றது, தும் விகுதியை; அது நிகழ்கால த்து வருமென்று இந்நூல் உரையாசிரியர் கூறியது: 'இக்கடதறக்கள் முத னிலையை அடுத்துவருங்கால் இறப்பும், ஈற்றினை அடுத்துவருங்கால் எதிர் வும் உணர்த்தும்; இனி இவற்றுள், சிறுபான்மை நிகழ்காலம் உணர்த்து வனவுமுள; அது,

"சிறுகண்யானையொடு...வருதும்" எனவரும்' என்பது; (தொல்காப்பியம், வினை, ௩ - ம் சூத்திரம், நச்சினார்க்கினியருரை.)

143 - 5. *நீயிரும் நயந்து இவண் இருந்த இரு பேர் ஒக்கல் செம்மல் உள்ளமொடு செல்குவிராயின்*— நீங்களும் மூவேந்தர்பாற்பெறும் பரிசிலை விரும்பி இவ்விடத்திருந்த வறுமையாற் கரியவாகிய பெரிய சுற்றத்தினது தலைமையையுடைத்தாகிய நெஞ்சுடனே அவனிடத்தே போவீராயின்,

(கு - பு.) மூவேந்தர் - சேரசோழபாண்டியர். இனி நல்லியக்கோடனது எயிற்பட்டினம் கூறுவார் அதனையுடைய நெய்தனிலச்சிறப்புக்கூறுகின்றார்.

146 - 150. [*அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவுந், தலைநாட் செருந்தி தமனிய மருட்டவுங், கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு, நெடுங் காற் புன்னை நித்திலம் வைப்பவுங், கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தர*:]

கடல் உலாய் நிமிர்தர அலைநீர் கானல் வெண்மணல்—கடல்பரந்து எற்றிப்பொருதலாலே அலையும்நீரையுடைய கரையில் வெள்ளிய மணலிடத்து நின்ற,

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், ௩.

தாழை அன்னம் பூப்பவும்— தாழை அன்னம்போலப் பூக்கையினாலும்,

தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்—இளவேனிற்காலம் தொட ங்குகின்றநாளிலே செருந்தி தன்னைக்கண்டாரைப் பொன்னென்று மருளப் பண்ணுகையினாலும்,

கடு சூல் முண்டகம் கதிர் மணி கழா அலவும் — முதற்சூலையுடைய கழி முள்ளி ஒளியையுடைய நீலமணிபோலப் பூக்கையினாலும்,

கன்னியாய்நின்று அரும்புதலிற் கடுஞ்சூல்.

கழா அல— கழற்ற,

நெடு கால் புன்னை நித்திலம் வைப்பவும்— நெடிய தாளினையுடைய புன்னை நித்திலம்போல அரும்புகையினாலும்,

(கு - பு.) செருந்தி - ஒருவகைமரம்; அதன்பூ பொன்னிறமுடையது; "செருந்தி பொன் சொரிதருக் திருநெல்வேலியுறை செல்வர்தாமே" என்பது, தேவாரம். கழிமுள்ளி - கடற்கரைக்கண் தோன்றுவதோர்செடி. நித்தி லம் - முத்து.

151. பாடல் சான்ற நெய்தல் நெவழி பட்டினம் (கருரு)— புகழ்த லமைந்த நெய்தனிலத்து நெடியவழியிற் பட்டினம்,

152. மணிநீர் வைப்பு பட்டினம் (கருரு)—நீலமணிபோலும் கழிசூழ்ந்த ஊர்களையுடைய பட்டினம்,

மதிலொடு பெயரிய பட்டினம் (கருரு) — மதிலோடே பெயர் பெற்ற பட்டினம்,

என்றது எயிற்பட்டின மென்றதாம்.

(கு - பு.) வைப்பு - ஊர்; மதில், எயிலென்பன ஒரு பொருளன. பட் டினம் - கடற்கரையூர்.

153. பனி நீர் படுவின் பட்டினம் படரின்—

குளிர்ச்சியையுடைய நீரையுடைய குளங்களையுடைத்தாகிய எயிற்பட்டினத்தே செல்வீராயின்,

படு - மடுவுமாம்.

(கு - பு.) படு - குளம்; மடு, ஆற்றிலுண்டாவது.

154. ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன— உயர்ந்த தன்மையை யுடைய ஒட்டகம் உறக்கத்தே கிடந்தாலொத்த,

(கு - பு.) ஒட்டகம்-ஒட்டகை; இஃது அகிலுக்கு உவமம். துயில்மடிதல் - தூங்குதல்.

155. வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்—மிகுகின்ற திரை கொண்டுவந்த மணத்தையுடைய அகிலாகிய விறகாலே,

(கு - பு.) 'விரைமரம்' என்றமையின், அகிலாயிற்று; விரை-வாசனை.

௩.—சிறுபாணாற்றுப்படை.

௩.௩.

156. கரு புகை செந்தீ மாட்டி— கரிய புகையையுடைய சிவந்த நெ

ருப்பை எரித்து,

(கு - பு,) கருமை, செம்மையென்பன, முரண்.

156 - 8. பெரு தோள் மதி ஏக்கறூஉம் மாசு அறு திரு முகத்து நறு வேல் நோக்கின் நுளைமகள் அரித்த— பெரிய தோளினையும் மதி இத்தன்மை பெற்றிலேமேயென்று விரும்புதற்குக் காரணமான மறு அறுகின்ற அமைதி யினையுடைய முகத்தினையும்

முனையினையுடைத்தாகிய வேல்போலும் பார் வையினையுமுடைய நுளைச்சாதியிற்பிறந்தமகள் அரிக்கப்பட்ட,

(கு - பு.) "கடைக்க ணேக்கற" என்பது, சிந்தாமணி, (கனக. ௬௬). நுளைச்சாதியிற் பிறந்தவர், நுளையன், நுளைத்தியெனவழங்கப்படுவர். அரிக்கப் படுதலால், கள், அரியலெனவழங்கும்.

159. பழம்படு தேறல் பரதவர் மடுப்ப — பழைதாகிய களிப்புமிகு கின்ற கட்டெளிவைப் பரதவர் எடுத்துவந்து வாயிடத்தே வைக்க,

(கு - பு.) பழமைபடு. பரதவர் - கடற்கரைமாக்கள்.

160 - 161. கிளை மலர் படப்பை கிடங்கில் கோமான் தளை அவிழ் தெரி யல் தகையோன் பாடி—கொத்திலெழுந்த பூக்களையுடையவாகிய தோட்டங் களையுடைய கிடங்கிலென்னும் ஊர்க்கு அரசனாகிய அரும்புநெகிழ்ந்த மாலை யினை யுடைய அழகையுடையோனைப் பாடி,

(கு - பு.) கிடங்கில், கிடங்காலென வழங்குகின்றது.

162. அறல் குழல் பாணி

தூங்கியவரொடு—தாளவறுதியையுடைய குழலோசையின் தாளத்திற்கொப்ப ஆடின மகளிரோடே,

(கு - பு.) அறல் - அறுதல். தூங்கல் - ஆடுதல்.

163. வறல் குழல் சூட்டின்— உலர்தலையுடைய குழன்மீனைச் சுட்ட தனோடே,

வயின் வயின் பெறுகுவிர்— மனைதோறும் மனைதோறும் பெறுகுவிர்;

(கு - பு.) குழன்மீன் - ஒருவகைமீன்.

பட்டினம் படரிற்(௧௫௫) கிடங்கிற்கோமானாகிய (௧௬௦) தகையோனைப் பாடி (௧௬௧) ஆடினமகளிரோடே (௧௬௨) நீங்களும் சூட்டோடே (௧௬௩) தேறலைப் பரதவர்மடுப்ப (௧௫௯) அவற்றை

வயின்வயிற் பெறுகுவிரென முடிக்க.

(கு - பு. இனி அவனுடைய வேலூர் கூறுவார், முல்லையும் குறிஞ்சியும் கலந்த இடத்தே அஃதுண்மையின், அந்நிலங்களின் சிறப்பை முறையே பாராட்டுகின்றார்.

164. பை நனை அவரை பவழம் கோப்பவும்— பசுத்த அரும்புகளை

"யுடைய அவரை பவழம்போலப் பூக்களை முறையே தொடாநிற்கவும்,

5

(கு - பு.) "பனிப்புத விவர்த்த பைங்கொடி யவரைக், கிளிவா யொப்பி னொளிவிடு பன்மலர்" என்பது, குறுந்தொகை. தொடாநிற்க - தொடுக்க.

165. கரு நனை காயா கணம் மயில் அவிழவும்— கரிய அரும்பினை யுடைய காயாக்கள் திரண்ட மயிலின் கழுத்துப்போலப் பூவாநிற்கவும்,

(கு - பு.) காயா - ஒருவகைமரம்; "புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை, மென்மயி லெருத்திற் றோன்றும்" (குறுந்தொகை); "செறியிலைக் காயா வஞ்சன மலர" (முல்லைப்பாட்டு) "கலவ மாமயி லெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா" (சிந்தாமணி. கனக. உ.)

166. கொழு கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்—கொழுவிய கொடியினையுடைய முசுண்டை கொட்டம்போலும் பூவைத் தன்னிடத்தே கொள்ளாநிற்கவும்,

கொட்டை - நூற்கின்ற கொட்டையுமாம்.

(கு - பு.) முசுண்டை - முசுட்டைக்கொடி. | கொட்டம் - பனங்குருத் தாற் செய்விக்கப்படும் சிறியபெட்டி; "அகலிரு விசும்பினுஅல் போல, வாலி தின் விரிந்த புன்கொடி முசுண்டை" (மலைபடுகடாம், ௧00.)

167. செழு குலை காந்தள் கைவிரல் பூப்பவும்—வளவிய குலையினையு டைய காந்தள் கைவிரல்போலப் பூவாநிற்கவும்,

(கு - பு.) "கோடற் குவிமுகை யங்கை யவிழ" என்பது, முல்லைப் பாட்டு, ௯௫.

168. கொல்லை நெடு வழி கோபம் ஊரவும்—கொல்லையிடத்து நெடிய வழிகளிலே இந்திரகோபம் ஊராநிற்கவும்,

(கு - பு.) இந்திரகோபம் - பட்டுப்பூச்சி.

இச் செயவெனெச்சமெல்லாம், ஈண்டு நிகழ்கால முணர்த்தியே நின்றன; 'ஞாயிறுபட வந்தான்' என்றாற்போல.

169. முல்லை சான்ற முல்லை அம் புறவின்—இவைகாலமுணர்த்தி இங்ஙனம் நிகழ்த்தாநிற்கவும் கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்து ஆற்றியிருந்த தன்மையமைந்த முல்லைக்கொடிபடர்ந்த அழகினையுடைய காட்டிடத்து.

இது, * "மாயோன் மேய" என்னும் சூத்திரத்தானுணர்க.

(கு - பு.) 'இவை' என்றது, அவரைமுதலியவற்றை; அவை கார்காலத்

திற்பூத்தற்குரியன. கணவன் பிரிந்தவிடத்து மனைவி தனித்திருந்து ஆற்றி
யிருத்தற்குரிய இடம் முல்லையென்பர்; 'முல்லை' என்பதற்கு இங்கே பொருள்
செய்திருத்தல்போல, "முல்லை சான்ற புறவணிந்து" (மதுரைகாஞ்சி. உஅரு)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ரு

கூ.—சிறுபாணாற்றுப்படை.

கூரு

என்றவிடத்தும் இப்படியே பொருள் செய்திருக்கின்றனர். "மாயோன் மேய
காடுறை யுலகமும்" என்றதனால், காடு முல்லையாதல் பெறப்படும். இதுகாறும் முல்லை நிலம் கூறப்பட்டது. இனிக் குறிஞ்சிநிலம் கூறப்படும்.

170 - 171. விடர் கால் அருவி வியன் மலை மூழ்கி சுடர் கால்மாறிய செவ்வி நோக்கி—முழைஞ்சுகளிலே குதிக்கும் அருவியினையுடைய பெரிய அத்தகிரியிலே ஞாயிறுமறைந்து அவன்கிரணங்கள்போன அந்திக்காலத்தைப் பார்த்து,

(கு - பு.) முழைஞ்சு - குகை. அத்தகிரி - அஸ்தமயகிரி.

172 - 3. [திறல்வேனுதியிற் பூத்த கேணி, விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்:] திறல் வேல் நுதியின் கேணி பூத்த விறல் வேல் வென்றி வேலூர் எய்தின்—முருகன்கையில் வலியினையுடைத்தாகிய

வேலினுதிபோலக் கேணி பூக்கப்பட்ட வெற்றியையுடைய வேலாலே வெற்றியையுடைய வேலூரைச் சேரின்,

என்றது: நல்லியக்கோடன் தன்பகைமிகுதிக்குஅஞ்சி முருகனைவழி பட்டவழி அவன் இக்கேணியிற்பூவைவாங்கிப் பகைவரை எறியென்று கன விற்கூறி அதிற்பூவைத் தன்வேலாக நிருமித்ததோர் கதைகூறிற்று. இதனானே வேலூரென்று பெயராயிற்று,

(கு - பு.) செவ்விநோக்கி எய்தினெனக.

174. உறு வெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை— மிகுகின்ற வெ யிலுக்கு உள்ளுறைகின்றோர் வருந்தப்பட்ட வெப்பம் விளங்குகின்ற குடிலி லிருக்கின்ற,

(கு - பு. உலைஇய குரம்பை; குரம்பை-குடிசை.

175. எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு — எயினக்குலத்தின் மகளிராலே அடப்பட்ட இனிய புளிங்கறியிடப்பட்ட வெவ்வியசோற்றை,

புளி - தித்திப்புமாம்.

(கு - பு.) எயிற்றியர் - எயினச்சாதி மகளிர்.

176. தேமா மேனி சில்வளை ஆயமொடு— தேமாவின் தளிர்போலும் மேனியையும் சிலவாகிய வளையினையுமுடைய நும்மகளிருடைய திரளுடனே,

177. ஆமான் சூட்டின்— ஆமானினது சூட்டிறைச்சியை யுடைய,

அமைவரப் பெறுகுவிர்—பசிகெடப் பெறுகுவிர்.

வேலூரெய்தின் |(கஎ௩), சூட்டினையுடைய (கஎஎ) சோற்றை

(௧எ௫) ஆயத்தோடே (௧எ௬) அமைவரப் பெறுகுவிரெனமுடிக்க.

முல்லையும் குறிஞ்சியும் சேர்ந்திருத்தலிற் சேரக்கூறினர், இரண்டுங்கூடி யல்லது பாலைத்தன்மை பிறவாமையின்.

பத்துப்பாட்டு.

(கு - பு.) ஆமான் - காட்டுப்பசு. சூட்டிறைச்சி - சுடுதலையுடையமாம் ஸம். அமைவர - நிறைய. இந்த இரண்டுநிலமும் கூடியவிடத்துப் பாலைத் தன்மை உண்டாமென்பதை, "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள் ளும்" (சிலப்பதிகாரம், காடுகாண். ௬௪ - ௬) என்பதனுலுணர்க. 'இரண் டுங்கூடியல்லது' என்னும் வாக்கியம், இரண்டுநிலமும்கூடிய இடமுண்டென் பதைப் புலப்படுத்தவந்தது. இனி அவனுடைய ஆழர் கூறுவார், முதலிலே அதனையுடைய மருதநிலச்சிறப்புக்கூறுகின்றூர்.

178 - 9. [நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக், குறுங்காற் காஞ் சிக் கொம்ப ரேறி:] நாள் கோதை தொடுத்த நறு பூ சினை குறு கால் காஞ்சி கொம்பர் ஏறி—நாட் காலத்தே மாலைகட்டினாற்போல இடையறாமல் தொடு த்த நறிய பூக்களையுடைய சிறிய கொம்புகளையும் குறிய தாளினையுமுடைய காஞ்சிமரத்தின் பெரியகொம்பரிலேயேறி,

(கு - பு.) நாட்காலம் - விடியற்காலம்.

180. நிலை அரு குட்டம் நோக்கி நெடிது இருந்து—ஒருகாலத்தும் நிலைப்படுதல் அரிதாகிய ஆழத்திற்றிரிகின்ற மீன்களை எடுக்குங் காலத்தைக் கருதி நெடும்பொழுதிருந்து,

(கு - பு.) குட்டம் - பள்ளம்.

181 - 2. புலவு கயல் எடுத்த பொன் வாய் மணி சிரல் வள் உகிர் கிழித்த வடு ஆழ் பாசடை—புலானாற்றத்தையுடைய கயலை முழுகியெடுத்த பொன்னிறம்போலும் வாயையுடைய நீலமணிபோன்ற சிச்சிலியினது பெரிய உகிர்கிழித்த வடுவழுந்தின பசிய இலையினையுடைய,

(கு - பு.) சிச்சிலி - மீன்கொத்திக்குருவி. உகிர் - நகம்.

183. முள் அரை தாமரை முகிழ் விரி நாட்போது—முள்ளையுடைத்தாகிய தண்டினையுடைய வெண்டாமரையினது அரும்புவிரிந்த நாட்காலத்திற் பூவை,

184. கொங்கு கவர் நீலம் செங்கண் சேவல்—தேனை நுகர்கின்ற நீல நிறத்தினையும் சிவந்த கண்ணினையுமுடைய வண்டொழுங்கு,

பூவைத் தேனையென்றது, * "தெள்ளிது" என்றதனான்முடிக்க.

185. மதி சேர் அரவின் மான தோன்றும்—திங்களைச் சேர்கின்ற கரும்பாம்பையொப்பத் தோன்றும்,

(கு - பு.) கரும்பாம்பு - கேது. வெண்டாமரைப் பூவிற்குத் திங்களும் அதைச்சார்ந்த வண்டொழுங்கிற்குக் கரும்பாம்பும் உவமை.

---

* "முதன்மு னைவரிற் கண்ணென் வேற்றுமை, சினைமுன் வருதல் தெள்ளி தென்ப" என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமை மயங்கியல், ௫.

௩.—சிறுபாணாற்றுப்படை.

௧௭

186. மருதம் சான்ற மருதம் தண்பணை—ஊடியுங்கூடியும் போகநுகருந் தன்மையமைந்த மருதநிலத்திற் குளிர்ந்த வயலிடத்து,

187 - 8. [அந்தண ரருகா வருங்கடி வியனகர், அந்தண் கிடங்கினவ ளாமூ ரெய்தின்:] அம் தண் கிடங்கின் அரு கடி வியன் நகர் அந்தணர் அருகா அவன் ஆமூர் எய்தின்—அழகினையுடைய குளிர்ந்த கிடங்கினையும் அரிய காவலையும் அகற்சியையுடைய அகங்களையுமுடைய அந்தணர் சுருங்காத அவனுடைய ஆமூரைச் சேர்வீராயின்,

(கு - பு.) கிடங்கு - அகழி. அகங்கள் - வீடுகள்.

189 - 190. [வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி, னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை:] வலி புணர் எருத்தின் வலம் பட நடக்கும் நோன் பகட்டு உரன் கெழும் உழவர் தங்கை—இழுத்தற்குரிய வலிபொருந்தின கழுத்தினாலே வெற்றியுண்டாக நடக்கும் மெய்வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய அறிவுபொருந்தின உழவருடைய தங்கையாகிய,

உரன் - அறிவு; * "உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும்" என்றாற்போல.

(கு - பு.) நோன்மை - வலி, எருது - காளை.

191 - 2. பிடி கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்து தொடி கை மகடூஉ—பிடியினதுகையையொத்த பின்னின மயிர் வீழ்ந்து கிடக்கின்ற சிறிய முதுகினையும் தொடியணிந்த கையினையுமுடைய மகள்,

மக முறை தடுப்ப—உழவர்தங்கையாகிய (௧௯௦) மகடூஉத் (௧௯௨) தான் உள்ளேயிருந்து தன்பிள்ளைகளைக்கொண்டு நும்மை அடைவே

எல்லாவாயும் போகாது விலக்குகையினாலே,

இனிப் பிள்ளைகளை உபசரிக்குமாறுபோல உபசரித்து விலக்கவென்றுமாம்.

(கு - பு.) பிடி-பெண்யானை; தொடி-தோள்வளை; வளைந்திருப்பதென்று பொருள். பெண்யானையின்கை மகளிருடைய பின்னிய கூந்தலுக்கு உவமை; "பிடிக்கைக் கூந்தற் பொன்னரி மாலை தாழ" (சிந்தாமணி, முத்தி. கஙு) மகடூஉ, சாதியொருமை. மக முறை தடுப்ப - மகவால் முறையே தடுக்க வென்க; இனி, மகவைக்கொண்டு, அண்ணன், அம்மான் என்றாற் போல் வனவாகிய முறைப்பெயர்களைச் சொல்லுவித்துத்தடுப்பவெனினும் பொருந் தும்; "மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்" (மலைபடுகடாம், கஅஞ) என்பதனுரையைப்பார்க்க.

193 - 4. இரு காழ் உலக்கை இருப்பு முகம் தேய்த்த அவைப்பு மாண் அரிசி அமலை வெண் சோறு—கரிய வயிரத்தையுடைய உலக்கையினது பூணினையுடையமுகத்தைத் தேயப்பண்ணின குத்துதல்மாட்சிமைப் பட்ட அரிசியாலாக்கின கட்டியாகிய வெள்ளியசோற்றை,

* பதிற்றுப்பத்து, எட்டாம்பத்து, ௩.

(கு - பு.) இருமை - கருமை. காழ் - வயிரம். இரும்பு, ஆகுபெயர். அவைத்தல் - குத்துதல். அமலை - திரளை.

195. கவை தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்—கவைத்த

காலி னையுடைய ஞெண்டும் பீர்க்கங்காயுங்கலந்த கலப்புடனே பெறுகுவிர்;

(கு - பு.) கவைத்த - பிளவுபட்ட. கலவை - கலந்திருப்பது.

தண்பணையின் (கஅசு) ஆரூரெய்தின் (கஅஅ), உழவர் தங்கையாகிய (கக0) மகடூஉத் தடுக்கையினாலே (ககஉ) சோற்றைக் (ககச) கலவையொடு பெறுகுவிரென முடிக்க.

196 - 201. [எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக், கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக, ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப், பிணனு கைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா, ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப, நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்:]

எரி மறிந்து அன்ன நாவின்—மேனோக்கியெரிகின்ற நெருப்புச் சாய்ந்தா லொத்த நாவினையும்,

கரு மறி காதின் - வெள்யாட்டுமறிகளை அணிந்த காதினையும்;

* கவை அடிப் பேய் மகள்—கவைத்த அடியினையுமுடைய பேய்மகள்,

நிணன் உண்டு சிரித்த இலங்கு எயிறு தோற்றம் போல—நிணத்தைத் தின்று சிரித்த விளங்குகின்ற எயிற்றினது தோற்றாவு போல,

பிணன் உகைத்து சிவந்த பேர் உகிர் பணைத்தாள் அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப நீறு அடங்கு தெருவின் ஊர்—தாம்கொன்ற பிணங்களின் தலைகளைக் காலாலேதள்ளிச் சிவந்த பெரிய உகிரினையும் பெருமையை யுடைய கால்களையுமுடைய தலைமையையுடையவாகிய யானைகளின் மத வருவி எழுந்த துகளை அவிக்கையினாலே புழுதியடங்கின தெருவினையுடைய ஊர்,

அவன் சாறு அயர் மூதூர்—அவனுடைய விழாநடக்கின்ற பழைய

னர்,

(கு - பு.) யாட்மெறி - ஆட்டுக்குட்டி. எயிறு - பல். பேய்மகளின்பல் யானைக்கால் நகத்திற்குவமை; "முடியுடைக் கருந்தலை புரட்டு முன்று, ணுகிருடை யடிய வோங்கெழில் யானை" என்பது, பட்டினப்பாலை, உ௩௦ - உ௩௧. துகள் - புழுதி.

202. சேய்த்தும் அன்று சிறிது நணியதுவே—தூரிய இடத்ததுமன்று;

சிறிதாக அண்ணிய இடத்ததே.

மூதூர் நணியதென்க.

(கு - பு.) அண்ணிய - சமீபித்த.

---

* "இரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள், *** கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத், தண்டாக் களிப்பி ளுடுங் கூத்துக், கண்டனன்" என்றார் மணிமேகலையிலும்; சு - வது சக்கரவாளக்கோட்டம்புக்க காதை.

௩.—சிறுபாணாற்றுப்படை.

௩௬

203 - 6. [பொருநர்க் காயினும் புலவர்க் காயினு, மருமறை நாவி னந் தணர்க் காயினுங், கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன, வடையா வாயி லவ ணருங்கடை குறுகி:]

பொருநர்க்கு அடையாவாயினும் புலவர்க்கு அடையாவாயினும், அரு மறை நாவின் அந்தணர்க்கு அடையாவாயினும் அரு கடை வாயில் குறுகி— வினைப்பொருநர்க்கு அடைக்கப்படாவாயினும், அறிவுடையோர்க்கு அடைக் கப்படாவாயினும், அரிய

வேதத்தையுடைத்தாகிய நாவினையுடைய அந்த ணர்க்கு அடைக்கப்படாவாயினும் ஏனையோர்க்கு உள்ளே சேறற்கரிய தலை வாயிலையணுகி,

அடையாவென்றபன்மை நான்குவாயிலையுங்கருதி.

கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன அவன் வாயில்—அது தான் தெய் வங்களிருக்கின்ற பெருமையையுடைய மேரு ஒருகண்ணை விழித்துப்பார்த் தாலொத்த அவனுடைய கோபுரவாசல்,

அன்றிப் பொருநர்க்காயினும் புலவர்க்காயினும் அருமறைநாவி னந்த ணர்க்காயினும் அடையாவாயிலென்றூற் பொருளின்மையுணர்க.

(கு - பு.) கிணைப்பொருநர்-தடாரிப்பறை கொட்டும் பொருநர்; பொரு நர் - கூத்தர்; "தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த, மண்கணை முழவின் மகிழிசை யோதையும்" என்பது, **சிலப்பதிகாரம்,** நாடுகாண் காதை, கநு அ - கூ. தேவர்களுக்கெல்லாம் இருப்பிடமாக இருத்தல் பற்றி மேருமலை, 'கடவுண்மால்வரை' எனப்பட்டது; சுராலயமென்னும் அதன் பெயராலும் இதுவிளங்கும்,

207. செய் நன்றி அறிதலும்—பிறர் தனக்குச்செய்த நன்றியை யறிந்து அவர்க்குத் தானும் நன்மைசெய்தலையும்,

சிற்றினம் இன்மையும்—அறிவும் ஒழுக்கமுமில்லாத மாக்கடிரள் தனக் கில்லாமையையும்,

(கு - பு.) 'சிற்றினமாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென் போரும், விடரும் தூர்த்தரும் நடருமுள்ளிட்ட குழு' என்பர் **பரிமேலழகர்.**

புறநானூறு, உகூ-ம் பாட்டில், "நல்லத னலனுந் தீயதன் தீமையும், இல்லை யென்போர்" என்றதும், இச்சிற்றினத்தவரையே. மாக்கள் - ஐம்புலவுணர்ச் சியை மட்டும் உடையவர்கள்.

208. இன் முகம் உடைமையும் — நோக்கினோர்க்கு இனியமுகத்தை எக்காலமும் உடையனாதலையும்,

இனியன் ஆதலும்—* முகத்தினினிய நகாஅ அகத்து இன்னாதவனாகாமல் நெஞ்சு முகத்திற்கேற்ப இனியனாதலையும்,

* திருக்குறள், கூடாநட்பு, ௪. "முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா, வஞ்சரை யஞ்சப் படும்."

209. செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த—எக்காலமும் தன்னுடனே செறிந்து விளங்குகின்ற தலைமையினையுடைய பலகலைகளை யுணர்ந்தோர் புகழ,

210. அஞ்சினர்க்கு அளித்தலும்—தன்வீரத்தைக்கண்டு அஞ்சிவந்து அடிவீழ்ந்தார்க்கு அருள்செய்தலையும்,

வெஞ்சினம் இன்மையும்—கொடிய சினமில்லாமையையும், கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்.

(கு - பு.) வெஞ்சினம், வைரமென்று வழங்கப்படும்.

211. ஆண் அணி புகுதலும்—வீரரணி நின்ற அணியிலேசென்று அவ் வணியைக் குலைத்தலையும்,

* "ஆண்பா லெல்லா மாணெனற் குரிய" என்றகூறி, † "பெண்ணு மாணும் பிள்ளையு மவையே" என்றதனால் ஆணென்றது ஆண்பாலையே யுணர்த்துமேனும் அணிபுகுதலென்றதனால் ஈண்டு வீரனை யுணர்த்திற்று.

அழி படை தாங்கலும்—தனது கெட்ட படையிடத்தே தான்சென்று பகைவனைப் பொறுத்தலையும்,

(கு - பு.) ஆண்மை - வீரம். பகைவரைப்பொறுத்தல் - பகைவரோடு போர்செய்தலை ஏற்றுக்கொள்ளுதல்.

212. வாள் மீ கூற்றத்து வயவர் ஏத்த — வாள்வலியாலே மேலாகிய சொல்லையுடைய வீரர் புகழ,

213. கருதியது முடித்தலும் — தன்னெஞ்சுகருதிய புணர்ச்சியைக் குறைவிடவாமல் முடிக்கவல்ல தன்மையையும்,

நுகர்தற்குரிய மகளிரை நுகர்ந்து பற்றறுக்காற் பிறப்பறுமையிற் கருதி யது முடிக்கவேண்டுமென்றார்.

காமுற படுதலும்—அங்ஙனம் தானே யின்பமுறாதே அம்மகளிருந் தம் மாலே மிக்கவின்பத்தைப்பெறும் தன்னை விரும்பப்பட்டிருத்தலையும்,

214. ஒருவழி படாமையும்—அவர்கள் அங்ஙனம் விரும்பினார்களென்று அவர்கள் வசத்தனாகாமையையும்,

ஓடியது உணர்தலும்—தான் அவர்வசத்தனாகாமையின் அவர் வருந்திய தன்மையையுணர்ந்து அவரைப்பாதுகாத்தலையும்,

இனி அவர்கள் நெஞ்சில் நிகழ்ந்ததனையுணர்ந்து அவர் குறைமுடித்த லென்றுமாம்.

215. அரி ஏர் உண் கண் அரிவையர் ஏத்த—செவ்வரிபொருந்தின மை யுண்கண்ணினையுடைய மகளிர்புகழ,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௯௦.

† „ „ „ ௬௧.

௩.—சிறுபாணாற்றுப்படை.

௬௪

216. அறிவு மடம் படுதலும்—தான்கூறுகின்றவற்றையுணரும் அறிவில்லாதார்மாட்டுத் தான் அறியாமைப்பட்டிருத்தலையும்,

அறிவு நன்கு உடைமையும்—தன்னைப்போல அறிவுடையார்மாட்டு நன்றாக அறிவுடையனாயிருத்தலையும்,

* "ஒளியார்மு னொள்ளிய ராதல் வெளியார்முன், வான்சுதை வண்ணங் கொளல்" என்றார்பிறரும்.

(கு - பு.) மடம் - அறியாமை. மேற்கோளுக்குப் பொருள்: ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல் - அறிவுடையவர் ஒள்ளியாருடைய அவைக்கண் தாமும் ஒள்ளியராக, வெளியார் முன் வான்சுதை வண்ணம் கொளல் - ஏனை வெள்ளைகளுடைய அவைக்கண் தாமும் வெள்ளிய சுதையின் நிறத்தைக்கொள்க. என்பதாம்.

217. வரிசை அறிதலும்—பரிசிலருடைய தரமறிந்து அவர்பெறுமுறைமையே கொடுத்தலையும்,

கொடுத்தல் இதற்குங் கூட்டுக.

வரையாது கொடுத்தலும்—அங்ஙனம் கல்விமிகுதியில்லாத பரிசிலர்க்குக் கொடாதிருத்தலை மேற்கொள்ளாதே அவர்களளவிற்குத் தக்கனவற்றைக் கொடுத்தலையும்,

இனித் தனக்கென ஒன்றும் வரைந்துவையாமற் கொடுத்தலென்றுமாம்.

(கு - பு) பரிசிலர் - பரிசில் பெறுதற்குரியார். தரம் - தகுதி.

218. பரிசில் வாழ்க்கை பரிசிலர் ஏத்த—பிறர்கையிலேற்ற பொருளால் இல்வாழ்க்கை நடத்துதலையுடைய பாணர் கூத்தர் முதலியோர் புகழ,

219. பன்மீன் நடுவண் பால் மதி போல—பலமீன்களுக்கு நடுவிருந்த பால்போலும் ஒளியையுடைய கலைநிறைந்த மதிபோல,

(கு - பு.) கலை - கிரணமும், வித்தையும்.

220. இன்னகை ஆயமொடு இருந்தோன் குறுகி—இயலிசைநாடகத் தாலும், இனிய மொழிகளாலும் இனியமகிழ்ச்சியைச் செய்யும் திரளோடே இருந்தவனையணுகி,

கலைகள் நிறைந்திருந்தமைபற்றித் தலைவற்கு ஈண்டு மதி உவமையாயிற்று.

(கு - பு.) இங்கே தலைவனுக்கு மதி உவமையாகக் கூறப்பட்டிருத்தல் போலவே, "தோள்வாய் சிலையி னொலியாற் றெறு மீட்டு மீள்வான், நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வ தொத்தான்" எனக்கலைநிறைந்து

* திருக்குறள், அவையறிதல், ச.

விளங்கியதுபற்றிச் சீவகனுக்கு மதி உவமை கூறப்பட்டிருத்தல் காண்க;

சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், சகூ.

இனி, யாழ் வாசித்தல் கூறுவார்.

221 - 2. பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன அம் கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்---பசியகண்களையுடைய கரியகுரங்கு பாம்பின்தலையைப் பிடித்தகாலத்து அப்பாம்பு ஒருகாலிறுகவும் ஒருகால் நெகிழவும் அதன்கையைச் சுற்றுமாறுபோன்ற அழகினையுடைய தண்டிடத்தே செறியச்

சுற்றின,நெகிழவேண்டுமிடத்து நெகிழ்ந்தும் இறுகவேண்டுமிடத்து இறுகியும்

நரம்புதுவக்கும் வார்க்கட்டினையும்,

(கு - பு.) நரம்பு - தந்தி. துவக்கும் - கட்டும். வார்க்கட்டு - தந்தி கட்டு தற்குரிய உறுப்பு.

223. [மணிநிரைத் தன்ன வனப்பின்வா யமைத்து:]

மணி நிரைத்த அன்ன வனப்பின்—இரண்டுவிளிம்பும் சேரத்தைத்து முடுக்கின ஆணிகளாலே மணியை நிரைத்துவைத்தாலொத்த அழகினையும்,

வாயமைத்து—பொருந்தப்பண்ணி,

(கு - பு.) இரண்டு விளிம்பு,- பத்தரின் இரண்டு விளிம்பு.

224. வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து—வயிறுசேர்ந்த ஒழுங்குபட்ட தொழில்வகையமைந்த பத்தரினையும்,

வயிறு - பத்தரினடுவு. தாழிபோலப் புடைபட்டிருத்தலின், அகள மென்றார்.

(கு - பு.) அகளம் - தாழி.

225 - 6. கானம் குமிழின் கனி நிறம் கடுப்ப புகழ் வினை பொலிந்த பச்சையொடு—காட்டிடத்துக் குமிழினுடைய பழத்தினது நிறத்தையொப் பப் புகழப்படுக் துவரூட்டின கைத்தொழிலாற் பொலிவுபெற்ற போர்வை யோடே,

(கு - பு.) குமிழ் - ஒருவகை மரம். துவர் - செம்மைநிறம். போர்வை யாழ்ப்போர்வை.

226 - 7. [தேம்பெய், தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பின்:]

தேம் பெய்து புரி அடங்கு நரம்பின்—தேனொழுகுகின்ற தன்மையைத் தன்னிடத்தே பெய்துகொண்டு முறுக்கடங்கின நரம்பினையுமுடைய,

அமிழ்து பொதிந்து இலிற்றும் நரம்பு—அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து துளிக்கும் நரம்பு,

இஃது ஓசையினிமைக்குக் கூறிற்று; * "தேந்தே - னணிபெற வொழுகி யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" என்றார் பிறரும்.

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உ௩௦:

௩.—சிறுபாணாற்றுப்படை.

௬௩

(கு - பு.) தேனொழுக்கு, முறுக்கடங்கின நரம்பிற்கு உவமை; இலிற் றல் - துளித்தல்; "இலிற்றுமும்மதம்" (சீவகசிந்தாமணி, 2521)

228. பாடுதுறை முற்றிய—நீர் பாடுந்துறைகளெல்லாம் முடியப்பாடுதற்கு,

முற்றிய - செய்யியவென்னும் வினையெச்சம்.

228 - 9. பயன் தெரி கேள்வி கூடுகொள் இன்னியம்—தனது பயன் விளங்குகின்ற இசைகளைத் தான் கூடுதல்கொண்ட இனியயாழை,

பச்சையோடே (உஉசு) வாயமைக்கப்பட்டு வனப்பினையும் (உஉரு), இவ வினையும் (உஉஉ), அகளத்தினையும் (உஉச), நரம்பினையுமுடைய (உஉஎ) இன்னியமென முடிக்க.

(கு - பு) இசை - ஸ்வரம்.

229 - 230. [குரல்குர லாக, நூனெறி மரபிற் பண்ணி:] நூல் நெறி மரபின் குரல் குரலாகப் பண்ணி—இசைநூல் கூறுகின்ற முறைமையாலே செம்பாலையாக வாசித்து,

பாடுதுறை முற்றுதற்கு இன்னியத்தைக் குரல் குரலாகப் பண்ணியென முடிக்க.

(கு - பு.) குரல், ஸ்தாயியென்று கூறப்படும். இங்கே கூறியயாழ் மகர யாழ்; சிந்தாமணியில், "குரல் குரலாகப்பண்ணி" என்னும் செய்யுளுரையில், 'இப்பாலைத் திரிவிலே பத்தொன்பது நரம்பையுடைய மகரயாழ் குரல் குரலாமாறு காண்க' என்று இந்நூலுரையாசிரியர் எழுதியிருத்தல் காண்க.

230 - 231. [ஆறுது, முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்:] முதுவோர்க்கு ஆறுது முகிழ்த்த கையினை எனவும்— * அரசன் உவாத்தியா யன் தாய் தந்தை தம்முன்முதலியோர்க்குப் பலகாலும் குவித்த கைகளை யுடையையென்றும்,

232. இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்—வீரரெறிதற்கு மன மகிழ்ந்து கொடுத்த மார்பினையுடையையென்றும்,

மகளிருமாம்.

† "விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூ ணற வெறிந்தாய்கவ னினதூழினி யெனவே" என்றார் பிறரும்.

---

* ஆசாரக்கோவை, ௧௭:—"அரசனு வாத்தியாயன் றாய்தந்தை தம்மு, னிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே யாவருங் கண்ட நெறி."

† சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், ௧௬௪.

233. ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்—ஏரினையுடைய குடிமக்களுக்கு நிழல்செய்த செங்கோலையுடையையென்றும்,

234. தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்—தேரினையுடைய அரசர்க்கு வெம்மைசெய்த வேலையுடையை யென்றும்,

235. நீ சில மொழியா அளவை—நீ சில புகழினைக் கூறுதற்குமுன்னே,

235 - 6. [மாசில், காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇ:] காம்பு சொலித்த அன்ன மாசு இல் அறுவை உடீஇ—மூங்கில் ஆடையையுரித்தா லொத்த மாசில்லாத உடையினை உடுக்கப்பண்ணி,

இனி மூங்கின்முளையிற் பட்டையுமாம்.

(கு - பு.) மூங்கிலின் ஆடை ஆடையின் மென்மைக்கும் வெண்மைக்கும் உவமை.

237. பாம்பு வெகுண்டு அன்ன தேறல் நல்கி—பாம்பேறி மயக்கினாற் போல மயக்கின கட்டெளிவைத் தந்து,

(கு - பு.) கட்டெளிவு - கள்ளின் தெளிவு.

238 - 240. [காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப், பூவிரி கச்சைப் புகழோன் றன்முன், பனிவரை மார்பன் பயந்த:] கா எரி ஊட்டிய கணை கவர் தூணி பூ விரி கச்சை புகழோன் தன்முன் பனிவரை மார்பன் பயந்த— காண்டவவனத்தை நெருப்புண்ணும்படியெய்த கணையை உள்ளடக்கின ஆவநாழிகையினையும் பூத்தொழில் பரந்த கச்சையினையுமுடைய அருச்சுனன் தமையனாகிய இமவான்போலு மார்பனான வீமசேனன் கண்ட,

(கு - பு.) ஆவநாழிகை - அம்பறாத்தூணி. கண்ட - இயற்றிய,

240 - 241. நுண் பொருள் பனுவலின் வழாஅ பல் வேறு அடிசில்— கூரியபொருளையுடைய மடைநூனெறியிற்றப்பாத பலவேறுபாட்டையுடைய அடிசிலை,

(கு - பு.) மடைநூல் - பாகசாஸ்திரம்; என்றது, பீமசேனனாற் செய்யப் பெற்றதான பாகசாஸ்திரத்தை; அது பீமபாகமென வழங்கும்.

242 - 4. [வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த, விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து, விளங்குபொற் கலத்தில்:] விசும்பில் வாள் நிறம் கோள் மீன் சூழ்ந்த இளங்கதிர் ஞாயிறு எள்ளும தோற்றத்து விளங்கு பொற் கலத்தில்— ஆகாயத்தில் ஒளியை யுடைத்தாகிய நிறத்தினையுடைய கோளாகிய மீன்கள்சூழ்ந்த இளைய

கிரணங்களையுடைய ஞாயிற்றை இகழுந் தோற்றரவையுடைய விளங்குகின்ற பொற்கலத்திடத்தே,

விரும்புவன பேணி—நீ விரும்புவனவற்றை விரும்பி உட்கொண்டு,

(கு - பு.) கோண்மீன் - கோட்களாகிய மீன்கள்.

ரு.—சிறுபாணாற்றுப்படை.

சஉ௫

245. ஆரு விருப்பின் தான் நின்று ஊட்டி—நம்மிடத்து மிகுகின்ற விருப்பத்தாலே தான் நின்று உண்ணப்பண்ணுவித்து,

ஆருமரபினென்றும் பாடம்.

நீ சிலமொழியாவளவை (உ௩௫) விரும்புவன பேணி (உ௪௪) உடீஇ (உ௩௬) நல்கி (உ௩௭) அடிசிலைக் (உ௪௧) கலத்தேயிட்டுத் (உ௪௪) தான்நின்று ஊட்டி யென்க.

246. திறல் சால் வென்றியொடு தெவ்வு புலம் அகற்றி — வலிய மைந்த வெற்றியோடே பகையைத் தத்தநிலத்தைக் கைவிட்டுப் போகப் பண்ணி,

247. விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி—வெற்றியையுடைத் தாகிய வேலினையுடைய முடிவேந்தர்மன்னும் அரண்களை யழித்து,

248. நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின்— அவ்விடங்களிற்பெற்ற பொருளாலே விரும்பிவந்தவர் புன்கண்மையையும், பாணர் புன்கண்மை யையும் போக்கினபின்பு,

(கு - பு.) நயம் - விருப்பம். புன்கண் - துன்பம். பகைவருடைய அரண்களை அழித்த பின்பு அங்கே கிடைத்தவற்றைப் பரிசிலர்க்குக் கொடுத் தல் மரபு.

249. வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு— தன்படைத்தலைவர் மிக் கவாய்க் கொண்டுவந்து தந்த நன்றாகிய நிறத்தினையுடைய பொருட்டிரளுடனே,

தன்படைத்தலைவர் குறுநிலமன்னரையும், அரசரையுமழித்து, நயவர்க் கும் பாணர்க்குங்கொடுத்து மிக்குக்கொண்டுவந்த நிதியமென்க.

250 - 251. [பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி, யுருவ வான்மதி யூர்கொண் டாங்கு:] பருவ வானத்து உருவ வான் மதி பாற் கதிர் பரப்பி ஊர் கொண்டாங்கு— கூதிர்க்காலத்தையுடைய வானிடத்தே வடிவுடைய தலையுடைய வெள்ளிய மதி பால்போலுங் கிரணங்களைப் பரப்பிப் பரத்தலைக் கொண்டாற்போல,

(கு - பு.) கூதிர்க்காலம் - சரற்காலம் மற்றைக்காலங்களைக் காட்டிலும் சரற்காலத்தில் தோன்றும் சந்திரன் மிகவும் வெள்ளிதாகப் பாராட்டப்படும்.

252 - 3. கூர் உளி பொருத வடு ஆழ் கோன் குறடு ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு—கூரிய சிற்றுளிகள் சென்று செத்தின உருக்களழுந் தின வலியினையுடைய குறட்டிடத்திற்றைத்த ஆர்களைச்சூழ்ந்த சூட்டினையுடைய உருளையோடே,

குறடு - அச்சுக்கோக்குமிடம். அயில்வாய் - கூரியவாய்; என்றது சூட்டிற்கு ஆகுபெயர்.

(கு - பு.) குறடு, குடமெனவும், சூட்டு, வட்டையெனவும்வழங்கும்.

254 - 5. [சிதர்கவினை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத், ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல:] முருக்கின் சேண் ஓங்கு நெடுஞ்சினை ததர் கவினை சிதர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல—முருக்கினுடைய விசும்பிலே செல்ல வளர்ந்த நெடிய கொம்பிற் செறிந்த அரும்புகள் வண்டிற்குப் பிணியவிழ்ந்த தோற்றரவுபோல,

ததர் - கொத்துமாம். சிதர் - சிந்துதலுமாம்; சிச்சிலியுமாம்.

(கு - பு.) முருக்கு - முள்ளு முருங்கை.

256-8. [உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக், கருந்தொழில் வினைஞர் கைவினைமுற்றி, யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு.]

கருந்தொழில் வினைஞர் கை யினை முற்றி உருக்குறு அரக்கு உள் எறிந்த போர்வை பாகர் — வலிய தொழிலைச்செய்யுந் தச்சருடைய கையாற்செய்யும் உருக்களெல்லாம் முற்றப்பெற்று உருக்கப்படுஞ் சாதிலிங்கம் உள்ளேநிரம்ப வழித்த பலகையையுடைய பாகர்,

தேர்த்தட்டு வெளிமறையப் பாவின பலகையைப்

போர்வையென்றார். அதன் மேலே சுற்றுச்சுவராகப் பலகையாற்செய்த சுவரைப் பாகரென்றார். பாகரையுடைய தேரைப்பாகரென்றார்; ஆகுபெயரால்.

ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு— ஏறிப்பார்த்த உண்மையாக ஒட்டமுண்டென்று பெயர்பெற்ற அழகினையுடைத்தாகிய நடை யினையுடைய தேரோடே,

நேமியோடே (உ௫௩) போர்வையையுடைய (உ௫௬) பாகரெனமுடிக்க.

259 - 260. மா செலவு ஒழிக்கும் மதன் உடை நோன் தாள் வாள் முகம் பாண்டில்— தன் கடுமையாற் குதிரையின்செலவைப் பின்னேநிறுத் தும் வனப்புடைத்தாகிய வலியினையுடைய தாளினையும், ஒளியினையுடைத் தாகிய முகத்தினையுமுடைய நாரையெருத்தையும்,

வலவனொடு— அதனைச் செலுத்தும் பாகனொடு,

260 - 261. [தரீஇ, யன்றே விடுக்குமவன் பரிசில்:] பரிசில் தரீஇ அவன் அன்றே விடுக்கும் —யானை குதிரை அணிகலமுதலியபரிசில்களையுந் தந்து அவன் அன்றேவிடுக்கும்;

நிதியத்தோடே (உ௪௧) பாகரோடே (உ௫அ) வலவனோடே பாண்டிலையும்(உ௬௦) பரிசிலையுந் (உ௬௧) தரீஇ (உ௬௦) அவன் அன்றேவிடுக்குமென முடிக்க.

௩.—சிறுபாணாற்றுப்படை.

௪௭

261 - 3. மென் தோள் துகில் அணி ...... துளங்கு இயல்

மகளிர் அகில் உண விரித்த அம் மெல் கூந்தலின் — மெல்லிய தோளினையும், துகில் சூழ்ந்த ...... அசைந்த இயல்பினையுமுடைய மகளிர் அகிற்புகையை உண் ணும்படியாக விரித்த அழகையுடைய மெல்லிய கூந்தல்போலே,

264 - 5 [மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித், துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்டு:]

துணி மழை மணி மயில் கலாபம் இடை மஞ்சு பரப்பி தவழும் கோடு —தெளிந்தமேகம் நீலமணிபோலும் மயிலினுடைய விரிந்த தோகைக்கு நடு வே தனது மஞ்சைப்பரப்பித் தவழுமலை,

சிறிதுநீர் உட்கொண்டு பக்கம் வெள்ளியமாசாயிருத்தலின், மேகம் மஞ் சைப்பரப்பியென்றார்.

இனி 'மணிமயில் கலாபம்' என்று பாடமாயின், மயில் தன்கலாபத்தை மஞ்சிடையிலே பரப்புதலைச்செய்து துயல்கோடென்க. துயலல் - ஆடுதல்.

துயல் கழை நெடு கோடு— அசைகின்ற மூங்கிலையுடைய நெடிய மலையிடத்தையுடைய குறிஞ்சி (உகஎ)

266. [எறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னி:] ஏற்றரும் உரும் எறி ந்து இறந்த சென்னி கோடு (உகூ)—ஏறுதற்கொழில் அரிதாகிய உருமேறு தான்ஏறுதற்காக இடித்து வழியாக்கிப்போன சிகரத்தையுடையமலை,

இக்குதிரை ஏற்றரிதென்ப.

267. குறிஞ்சி கோமான்— குறிஞ்சியாகிய ஒழுக்கத்தையுடைய

நிலத் திற்கரசன்,

267 - 9. கொய் தளிர் கண்ணி செல் இசை நிலைஇய பண்பின் நல் லியக்கோடனை — கொய்யப்பட்ட தளிர்விரவின மாலையினையும், பிறரிடத்து நில்லாமற் போகின்றபுகழ் தன்னிடத்தே நிற்றற்குக் காரணமான குணத் தினையுமுடைய நல்லியக்கோடனை,

நயந்தனிர் செலின் — விரும்பிச்செல்லின்,

முதுவாயிரவல (௪0) பெருமகன் (௧௨௨) புரவலனாகிய (௧௨௫) நல்லியக் கோடனை நயந்த
கொள்கையோடே (௧௨௬) முன்னாட்சென்றனமாக, இந்நாள் (௧௨௯), அழிபசிவருத்தம்வீட (௧௪0) யானையோடே தேரெய்தி (௧௪௨) யாம் அவனின்றும் வருகின்றேம் இனி நீயிரும் (௧௪௩) மூவேந்தரிடத்துச் செல்கு விராயின் (௧௪௫), வஞ்சியும் வறிது; அதுவன்றி (௫0) மதுரையும்வறிது;
அதுவன்றி (௬௭) உறந்தையும் வறிது; அதுவன்றி (௮௩) எழுவர்பூண்ட ஈகைச் செந்நுகம் (௧௧௩) ஒருதான்றாங்கிய (௧௧௫) குறிஞ்சிக் கோமானாகிய (௨௬௭) நல்லியக்கோடனை நயந்தனிர்செலின் (௨௬௬), வழியிற் பெறுமவற்றை யாவ

கூறக்கேண்மின்; பட்டினம்படரின் (௧௫௩), வயின் வயிற்பெறுகுவிர் (௧௬௫) அதன்பின்னர் வேலூரெய்தின் (௧௭௩) அமைவரப் பெறுகுவிர் (௧௭௭); அதன்பின்னர் அவன் ஆமூரெய்திற் (௧௮௮) கலவையொடுபெறுகுவிர் (௧௯௫) அவற்றைப்பெற்றபின், அவன் மூதூர் (௨0௧) சேய்த்துமன்று; சிறிது நணியது வேயாயிருக்கும்

(௨௦௨); ஆண்டுச்சென்று முன்னர் அவன் கடைவாயிலைக்குறுகிப் (௨௦௬) பின் அறிந்தோரேத்த (௨௦௯) வயவரேத்த (௨௧௨) அரிவையரேத்தப் (௨௧௫) பரிசிலரேத்த (௨௧௮) இருந்தோனையணுகிப் (௨௨௦) பாடுதுறை முற்றுதற்கு (௨௨௮) இன்னியத்தைப் (௨௨௯) பண்ணிக் (௨௩௦) கையினை யென்றும் (௨௩௧), மார்பினையென்றும் (௨௩௨), கோலினையென்றும் (௨௩௩), வேலினையென்றும் (௨௩௪) நீசிலமொழியா அளவை (௨௩௫) அவன் நீவிரும்புவனபேணி (௨௪௪) உடீஇ (௨௩௬) நல்கி (௨௩௭) அடிசிலைக் (௨௪௧) கலத்தேயிட்டுத் (௨௪௪) தான்நின்று ஊட்டி (௨௪௫) நிதியத்தோடே (௨௪௯) பாகரோடே (௨௫௮) வலவனோடே பாண்டிலையும் (௨௬௦) பரிசிலையும் (௨௬௧) தரீஇ (௨௬௦) அவன் அன்றேவிடுக்கும் (௨௬௬) என வினைமுடிவுசெய்க.

ஏறுமாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத் தனார்பாடிய சிறுபாணாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

முகவுரை.

சென்னை யூனிவர்ஸிடியாரால் 1903-ம் வருஷத்து பி. ஏ. பட்டப்பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பட்ட முல்லைப்பாட்டையும் அதை அறிந்துகொள்ளுதற்கு இன்றியமையாத மதுரை ஆசிரியர் நச்சினார்க்கினியருரையையும் வெளிப்படுத்தத் தொடங்கி, மாணாக்கர்களுக்கு அவை விளங்கும்வண்ணம் நூதனமாக எளிய நடையில் எழுதிய குறிப்புக்களையும் உரியவிடங்களிற் சேர்த்துப் பதிப்பிக்கலானேன்.

முல்லைப்பாட்டென்பது கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவரான நப்பூதனார் பாடியது; இஃது ஆசிரியப்பா ; ௧0௩-அடிகளையுடையது; பகைமேற்சென்ற தலைவன் வருமளவும் தலைவி பொறுத்துக்கொண்டிருந்தவிடத்து அவன் வந்ததனைக்கண்டு தோழிமுதலியோர்கள் தம்முட் கூறியதாக இயற்றப்பெற்றது.

இந்நூலில், தனித்திருக்கும் தலைவியின் இயல்பும் கார்காலத்தின் இயற்கையும் படைவீட்டிற் பகைவர் அடைந்த வருத்தமிகுதியும் தலைவனது வீரமுதலியனவைகளும் பிறவும் மிகச்செவ்வையாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நூல், உரையாசிரியர் பலருரைகளில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது;

பல நூலாசிரியர்கள் இதிலுள்ளவாக்கியங்களைத் தாமியற்றும நூல்களுள் ஆங்காங்கு அமைத்து அழகுபடுத்தியிருக்கின்றனர்; "முன்னோர் மொழிபொருளே யன்றியவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்பது விதியன்றோ.

இதிற் பண்டைக்காலச்செய்திகள் பல காணப்படும்.

இதிலுள்ள விஷயம் ஒவ்வொன்றும் யாவரும் எப்பொழுதும் அனுபவித்துக்கொண்டிருக்கும் அனுபவமாக உள்ளதாதலின், இந்நூல் படிப்பவர்களுக்கு மிக்க இன்பத்தை விளைவிக்குமென்பது கூறாமலே விளங்கும்; செயற்கையழகினும் இயற்கையழகு சிறந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

விளங்க எழுதவேண்டியவைகளைப் பலகாரணங்களால்நான் எழுதாதிருத்தல் கூடும்; கல்வியறிவு ஒழுக்கங்களிற்சிறந்து கலாசாலைகளில் தமிழ்ப்பண்டிதர்களாக வீற்றிருக்கும் விவேகிகள் அக்குற்றத்தைப் பொறுத்து மாணாக்கர்களுக்கு உரிய விஷயங்களைத் தெரிவிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

நூல்.

இது, நக்கீரனார் முதலிய சங்கப்புலவர்களியற்றிய பத்துப்பாட்டினுள் ஐந்தாவது. பத்துப்பாட்டுக்கள் இன்னவையென்பதைப் பின்னுள்ள வெண்பாவா னுணர்க:—

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

அவற்றுள்,—

முதலாவது திருமுருகாற்றுப்படை ௩௧௭-அடிகளையுடையது; முருகக்கடவுள்மீது, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது; இதில்

முருகக்கடவுளுடையஸ்தலங்களுட்சிறந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி),

திருவேரகம்,
குன்றுதோறாடல், பழமுதிர்சோலையென்னும் ஆறுபடைவீடுகளும், அவற்றில் அவர் எழுந்தருளியிருக்கும் விதமும் முறையே விரம்பப் பாராட்டிக் கூறப்படும்.

இரண்டாவது பொருநராற்றுப்படை ௨௪௮-அடிகளையுடையது; இள

ஞ்சேட்சென்னி, புதல்வனாகிய சோழன்கரிகாற்பெருவளவனை

முடத்தா

மக்கண்ணியார் பாடியது; இதில் கரிகாற்பெருவளவன் கொடையும் அவ ன்வீரமும் அவனுண்ட சோழநாட்டின் வளமும் காவிரிநதியின்

சிறப்பும் நன்ருகக் கூறப்படும்.

மூன்ருவது சிறுபாணாற்றுப்படை உசுகூ - அடிகளையுடையது; எறுமா நாட்டு நல்லியக்கோட னென்பவனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்த னுர் பாடியது ; இதில் நல்லியக்கோடனது வண்மையும் அவனுடைய நகரங்களாகிய எயிற்பட்டினம் வேலூர் ஆமூர் முதலியவற்றி னியல்பும்,

அவற்றிலிருந்த மாந்தர்களது நற்குண நற்செய்கைகளும் தமிழ்நாட்டு மூவேந்தர்களுடைய இராஜதானிகளாகிய மதுரை வஞ்சி உறையூ ரென்னு மூன்றுநகரங்களி னிலை பேகன் பாரி காரி ஆய் அதிகன் நள்ளி ஓரி யென்னும் வள்ளல்கள் எழுவரும் இன்னஇன்ன கொடையாற் பெயர்

பெற்றார்க ளென்பதும் கூறப்பட்டுள்ளன.

நான்காவது பெரும்பாணாற்றுப்படை ருoo - அடிகளையுடையது; காஞ்சி நகரத்திருந்த தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனூர் பாடியது; இதில் அவனது வண்மையும், தொண்டை நாட்டிலேயுள்ள குறிஞ்சிமுதலிய ஐந்திணைவளங்களும், அவற்றில்வாழும் மாந்தருடைய தொழில் ஊண் ஒப்புரவு முதலியனவும், காஞ்சிநகரத்தின் சிறப்பும், திருமாலின் அற்றெட்டுத்திருப்பதிகளுள் ஒன்ருகிய திருவெஃகா வென்பதும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது முல்லைப்பாட்டு. இதன் வரலாற்றை முகவுரையிற் காண்க.

ஆருவது மதுரைக்காஞ்சி எஅஉ - அடிகளையுடையது ;

தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்தி **மாங்குடிமருதனார் பாடியது;** இதில் பாண்டி நாட்டின் ஐந்திணைவளங்களும், மதுரையம்பதியி னழகும், அப்பாண்டியனது வீரமுதலியனவும், சேரராஜனது நாளோலக்கச் சிறப் பும், அக்காலத்திருந்த பலசிற்றரசர்களுடைய பெருமையும், அருச்சுன னுக்குக் கண்ணன் உபதேசித்த **பகவத்கீதையின்** மேம்பாடும் இன்னும் பலவுங் கூறப்பட்டுள்ளன.

ஏழாவது **நெடுநல்வாடை** கஅஅ -அடிகளையுடையது. பாண்டியன் நெடுஞ்செழியனை **நக்கீரனார்** பாடியது ; இதில் ஐப்பசிகார்த்திகை மாதங் களாகிய கூதிர்க்காலத்தினியல்பும் தனித்திருந்த தலைவியது வருத்தமிகு தியும் படைவீட்டில் தலைவனிருக்கும் வண்ணமும் விளங்கக் கூறப்பட்டு ள்ளன.

எட்டாவது **குறிஞ்சிப்பாட்டு** உசுக - அடிகளையுடையது ; ஆரியவர சன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் **கபிலர்** பாடியது ; இதில் மலை வளங்களும், இல்லறமுறைமையும், தலைவனும் தலைவியும் தம்முள்வைக் கத்தகு மன்புடைமையும், கற்பின் இன்றியமையாமையும், **பலமலர்விசே** டங்களும் அழகாகக் கூறப்பட்டுள்ளன; இது **பெருங்குறிஞ்சி** யென்றும் பெ யர் பெறும்.

ஒன்பதாவது **பட்டினப்பாலை** ருஎக - அடிகளையுடையது ; சோழன் கரிகாற்பெருவளத்தானைக் **கடியலூர் உருத்திரங்கண்ணனார்** பாடியது ; இதிற் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும், சோழநாட்டின்வளமும் காவிரி நதி பயன்படுதலும், அச்சோழனுடையபராக்கிரமமும், அவனுடைய செங் கோலின் மேன்மையும் நிரம்ப விரித்துக் கூறப்பட்டுள்ளன. இந்நூலைக்

கேட்டு அச்சோழன் கடியலூருருத்திரங்கண்ணனார்க்குப் பதினாறுலக்ஷம்

பொன் பரிசளித்தா னென்று கலிங்கத்துப்பரணியாற் றெரிகின்றது.

பத்தாவது மலைபடுகடாம் ருஅஅ -அடிகளையுடையது ; பல்குன்றக்

கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன் அந்நிசய் நன்னனை இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது ; இதில் அவனூர்க்குச்செல்லும் வழியினியல்பும், ட்டவே, ிடத்துக்கிடைக்கும் உணவின் வகைகளும் அவனது மலை சோகொண்டார்க வளங்களும், அவனது வள்ளன்மையும், ஆற்றலும், அவனது ..., அவனது

நாளோலக்கச் சிறப்பும், அவனது ஊளார் நங்காதலர்'' எ காரியுண்டிக் கடவு ளென்னும் திருநாமத்தோடு ையையுணர்த்துதல் ''...பெருமானது மகிமையும், அவனுடைய முன்னோடிறும்' என்றும், ..., அவனூரினியல்பும், அவனது சேயாறென்னும் ...ஞ்செய்யுளுரைய...ளங்களும் விளக்கக் கூறப்பட்டுள்ளன. இது கூத்ன்வைக்...னவும் பெயர்பெறும்

நூலாசிரியர்.

முல்லைப்பாட்டை இயற்றிய நப்பூதனாரென்பவர் கடைச் சங்கப்புலவர்களுள் ஒருவர்; இவருடைய ஊர் காவிரிப்பூம்பட் டினம் ; இவருடைய தந்தையார் பொன்வாணிகனார் ; இதனால் இவரை வணிகரென்று நினைத்தற்கிடமுண்டு. 'ந' என்பது சிறப் புப்பொருளை யுணர்த்துவதோர் இடைச்சொல் ; முதலில் இவர் 'பூதனார்'

என்னும் பெயரையுடையவராகவிருந்து இந்நூலை இயற்றியகாரணம்பற்றிப் பின்பு நப்பூதனாரென்று வழங்கப்பட்டா ரென்று தெரிகிறது. நப்பாலத்தனார், நக்கீரனார், நச்செள்ளை யார் என்னும் பெயர்களிலும் 'ந' என்பது இப்படி விரவியிருத் தல் காண்க. சிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், ௭௪-ம் செய்யுளுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'நப்பின்னை' என் பதைக்குறித்து எழுதியிருத்தலும் இதனை வலியுறுத்தும்; எட் டுத்தொகை முதலியவற்றில் இவரியற்றியதாக இதுவரையில் ஒன்றும் காணப்படவில்லை. ஆனால், பூதனாரென்னும் பெயரினரொருவர், நற்றிணை, ௨௯ - வது செய்யுளியற்றியதாகத் தெரி கின்றது ; அப்பெயரினரும் இவரும் ஒருவரோ தெரியவில்லை.
வேறோ யாதும்

இந்நூல் உரையாசிரியராகிய

நச்சினார்க்கினியர்வரலாறு.

விருத்தம்.

எவனால வாயிடைவந் தழுகுவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்... றவாது விலவவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனு ழுவ னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மலர்கவென தகந்து மன்னோ.

இ... காவது பெரும்பாணாற்று... சிரியராகிய நச்சினார்க்கினியர் பாண்டி வளநாட்டுள் ...த்திருந்த தொண்டை... ஈகுலத்திற் பாரத்துவாசகோத்திரத் தி... பாடியது; இதில் ...துள்ள பலவகையான எல்லா நூல் காட்டிலேயுள்ள குறிஞ்சிமுதலிய ஐந் ... இவரது சமயம் சைவமே. இவர் மாந்தருடைய தொழில் ... ஒப்புரவு ... புரிதனி, வெண்டிசை விளங்க சிறப்பும், திருமாவின் ... த் துவாச, ... ஞன்மறை து ணிந்தநற் வென்பதும் கூறப்பட்டுள்ளன.

பொரு ளாகிய, தூயஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன்'' என்னும் உரைச்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். சிவதலங்க ளுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்,' 'பெ ரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெழுத்தொருமொழிக்கும் உதாரணமாக இவர் தொல்காப்பியம் எழுத் ததிகாரத்து மொழிமரபில் ''ஓரெழுத்தொருமொழி'' என்னுஞ் சூத்திர த்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்த நூல் களாகிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய

விலக்கணப் பொருள்களுக் கேயன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்து ஆண்டுள்ள தனாலும், அங்ஙனம் மேற்கோள்கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், நாமகளிலம்பகத்து ' மேகம் மீன்ற ' என்னும் ௩௩௩-ம் செய்யுளில் 'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படையுரையிற்காட்டிய சில நயங் களாலும், மற்றுஞ் சிலவற்றாலும், நச்சினார்க்கினியரது சைவ சமயாபி மானம் நன்குவெளியாம்.

நச்சினார்க்கினியர், இந்நூலுக்கன்றிப் பத்துப்பாட்டினுள் பற்றூல் களுக்கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் குறுந்தொகையில் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரை செய்தருளினர். இன்னுஞ் சிலநூல்களுக்கு இவர் உரையியற்றினரென் பர் ; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக் கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்றமை யாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவருடைய உரைச் சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப் படாமையாலும், அவைகள் இங்கே எழுதப்பட்டில

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரை யெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சில ருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை இவ் வுரை யை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வி யந்து இவ்வுரையை அங்கீகரிததுக்கொண்டார்க ளென்று சைனர் கூறு கின்றனர்.

நாமகளிலம்பகத்தில் "கண்ணுளார் நுங்காதலர்" என்னும் ௭௯-ம் செய்யுளுரையில் 'ஈங்குத் தன்மையையுணர்த்துதல்

“செலவினும் வரவி னும்” என்னுஞ் சூத்திரத்திற் கூறினும்’ என்றும், குணமாலையாரிலம்ப

கத்தில் “மங்கை நல்லவர்” என்னுஞ்செய்யுளுரையில் ‘ஆசிரியர் “நண்டுந் தும்பியும்” என்று தும்பியைப்பின்வைத் [illegible] சூத்திரத்தில்

“மாவு மாக்களு மையறிவென்ப” என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கென் றுணர்க ; இதனை வாராததனால் வந்ததுமுடித்த லென்னுந் தந்திரவுத்தி யாற் கொள்க வென்று ஆண்டு உரை கூறிப்போந்தாம்’ என்றும் நச்சினார்க் கினியர் எழுதியிருத்தலால், இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதின பின்பு சீவகசிந்தாமணிக்கு உரையெழுதினரென்று விளங்குகின்றது.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவ்ரால் எடுத்துக்காட்டப்பட் டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள்

இதுகாறும் விளங்கியவை வருமாறு:—

க. அகத்தியம்

உ. அகநானூறு

௩. அணியியல்

௪. அவிநயம்

௫. ஆசாரக்கோவை

௬. இறையனாரகப்பொருள்

௭. எழீஇக்கோவை

௮. ஏலாதி

௯. ஐங்குறுநூறு

௧௦. ஐந்திணையெழுபது

௧௧. ஐந்திணையைம்பது

௧௨. கடகண்டு

௧௩. கலித்தொகை

௧௪. களவழிநாற்பது

௧௫. காக்கைபாடினியம்

௧௬. குணநாற்பது

௧௭. குறிஞ்சிப்பாட்டு

௧௮. குறுந்தொகை

௧௯. கூத்தநூல்

௨௦. கைந்நிலை

௨௧. கொன்றைவேந்தன்

௨௨. சிலப்பதிகாரம்

௨௩. சிறுகாக்கைபாடினியம்

௨௪. சிறுபஞ்சமூலம்

௨௫ சிறுபாணாற்றுப்படை

௨௬. சினேந்திரமாலை

உஎ. சீவகசிந்தாமணி

உஅ. தகடூர்யாத்திரை

உகூ. திணைமாலை நூற்றைம்பது

௩0. திணைமொழியைம்பது,

௩க. திரிகடுகம்

௩உ. திருக்குறள்

௩௩. திருக்கோவையார்

௩ச. திருமுருகாற்றுப்படை

௩ரு. திருவாசகம்

௩சா. தொல்காப்பியம்

௩எ. நற்றிணைநானூறு

௩அ. நாடகநூல்

௩கூ நாலடியார்

௪0. நெடுநல்வாடை
௪௧. பட்டினப்பாலை
௪௨. பதிற்றுப்பத்து
௪௩. பரிபாடல்
௪௪. பல்காப்பியம்
௪௫. பல்காயம்
௪௬. பழமொழி
௪௭. பன்னிருபடலம்
௪௮. பாரதவெண்பா
௪௯. புறநானூறு
௫0. புறப்பொருள்வெண்பாமாலை
௫௧. பூதபுராணம்
௫௨. பெருங்கதை
௫௩ பெரும்பாணாற்றுப்படை

ருச. பெரும்பொருள்விளக்கம்

ருரு. பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதி

ருசா. பொருநராற்றுப்படை

ருஎ. மணிமேகலை

ருஅ. மதுரைக்காஞ்சி

ருகூ. மலைபடுகடாம்

சு0. மாபுராணம் சுரு. யாழ்நூல்

சுக. முத்தொள்ளாயிரம் சுசா. வசைக்கடம் சுஉ.

முதுமொழிக்காஞ்சி சுஎ. வஞ்சிப்பா

சுங. முல்லைப்பாட்டு சுஅ. வளையாபதி சுச.

மோதிரப்பாட்டு சுகூ. விளக்கத்தார்கூத்து.

இன்னும் விளங்காத நூல்கள் பல.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரியவிஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்றமையின், இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்லுதற் கிடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளையா சிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக்கூறப் பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினாற்பிற்பட்டவரென்று தெரி கின்றது.

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல் செய் அருந்தவத்தின் பெரும்பய னாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் விரி வஞ்சி விடுக்கப்பட்டன.

இவருடைய மேம்பாட்டைப் பாராட்டி அக்காலத்து ஆன்றோராற் செய்யப்பட்ட உரைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் வருமாறு:—

வெண்பா.

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு
மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ்— சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.

தொல்காப் பியத்திற் றொகுத்த பொருளனைத்து
மெல்லார்க்கு மொப்ப வினி துரைத்தான்—சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக்கண்டு.

ஆசிரியப்பா.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படி வான்பொரு ளுண்ணிதி னுணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னூற்பொருள் பொதிந்த நூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய ளுகிப் பாற்பட
வெழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்று
மிழுக்கற வாய்ந்த வழுக்கிறெல் சேர்த்தித்

தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணுக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியு
மூரையிடை யிட்ட காண்டிகை யுரைத்து
மான்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லோருபது பாட்டு முணர்பவர்க் கெல்லா
முரையற முழுதும் புரைபட வுரைத்து
மொலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ
ருலைரக்கும்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற்
கண்டதற்

குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள்
விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை போதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு விஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
தீருந்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்து
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துங்

9

தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டுமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாச
னென்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான னிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
னவின்ற வாய்மை **நச்சினார்க் கினிய**
னிருவினை கடியு மருவியம் பொதியின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
வூழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை தானே.

விருத்தம்.

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற வெச்சினாற்
றிசையு முண்ணு மமிழ்தென வெழுநா வெச்சின் மெச்சிநா
னானும் விண்ணோர் மிசைகுவர் வேத போத **னச்சினார்க் கினிய**
னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.———

2

முல்லைப்பாட்டு.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனு

னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர்
வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யா றதழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற

தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதலுடைத்
தயிலுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்

கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி * நிழற்றிய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்

குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா

* மிழற்றிய வென்றும் பாடம்.

ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு * மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந்
தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்து

மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
லகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பருஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசய வெல்கொடி யுயரி வலனேர்பு

வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்

---

* மிலேச்சரென்றும் பாடம்.

தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு முல்லையென்று பெயர்கூறினர்; முல்லைசான்ற கற்புப் பொருந்தியதனால். இல்லறநிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றி யிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல் லறநிகழ்த்திய இயற்கை முல்லையாமென்றுகருதி இருத்தலென்னும்பொருடர முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர்கூறினமையிற் கணவன்

வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள்கூறலே அவர்க்கருத்தாயிற்று. * "தானேசேறல்" என்னும்விதியால், அரசன் தானே சென்றது இப்பாட்டு

(குறிப்பு) முல்லைசான்றகற்பு - இருத்தல் அமைந்தகற்பு ; முல்லை- இருத்தல். இனி முல்லைமலரைச் சூடுதற்கமைந்த கற்பெனினும் பொருந்தும் ; கற்புடைய மங்கையர் முல்லைமலரைச் சூடிக்கொள்ளுதல் மரபு.

இதுகாரணம்பற்றியே முல்லைக்கொடி கற்பென்று பெயர்பெறும். வருந்துணையும் - வருமளவும். ஆற்றியிரு - பொறுத்திரு. தானே சேறலுந் தன்னொடு சிவணிய, வேனோர் சேறலும்

வேந்தன் மேற்றே என்பதன்பொருள்: தன்பகையை வெல்லுதற்குத் தானே செல்லுதலும் அவனொடு நட்புக் கொண்ட மற்றையோர் அவனுக்குத் துணையாகிச் செல்லுதலும ஆகியஇரு பகுதியும் அரசன் கண்ணவாம் என்று என்றது, பகைவரை அடக்குதற்கு அரசன் றானே செல்லுதலும் அவனொடு நட்புக்கொண்ட பிறர் செல்லுதலும் விதியாமென்றவாறு.

இது, தலைவன் வினைவயிற் பிரியக்கருதியதனை அவன்குறிப்பானுணர்ந்து ஆற்றாளாய தலைவியதுநிலைமைகண்டு அவன் வற்புறப்பவும் உடம்படாதவளைப் பெருமுதுபெண்டிர் அவன் வினைமுடித்துவருதல் வாய்வது, நீவருத்தநீங்குவதெனக்கூற, அதுகேட்டு அவள் நீடுநினைந்து ஆற்றியிருந்தவழித் தலைவன் அக்காலத்தே வந்ததனைக்கண்டு வாயில்கள் தம்முட்கூறி

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௨௭

யது.இது, * "வாயி லுசாவே தம்முளு முரிய" † "எல்லா வாயிலு மிருவர் தேஎத்தும்-புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப" என்பனவற்ருற்கூறினர்

(கு - பு) வினைவயின் - போர்க்கண். ஆற்ருள் ஆய - பொருதவளாஇய. பெருமுது பெண்டிர் - மிகமுதிர்ந்த மகளிர். வாய்வது - உண்மை. நீங்குவது - நீங்கவேண்டுவது. பெண்டிர் கூறவென்க. நீடுகினைந்து- இவ்வாறு தலைவர் பிரிந்தாலல்லாமல் அரசியல் நடவாதென்று நினைத்து.வாயில் கள் - தூதிற்குரியவர்கள். 'வாயிலுசாவே' என்பதற்குப்பொருள்: ஒருவர் மற்றொருவர்க்கு உரைப்பதுபோலத் தங்களுட் சொல்லுதலும் அமையு மென்பது.'எல்லாவாயிலும்' என்பதன்பொருள் : தூதிற்குரிய எல்லோரும் தலைவனிடத்தும் தலைவியிடத்தும் பொருந்திய மனமகிழ்ச்சிப் பொருளை நிகழ்த்துதலைத் தமக்குப் பொருளாகவுடையர். எ - று.

1. நனந் தலை உலகம் வளைஇ—அகலத்தை இடத்தேயுடைய உலகத்தை வளைத்து,

(கு - பு) 'நன' என்பது அகரவீற்று உரிச்சொல்; அகலம் என்னுங் குறிப்புப் பொருளையுணர்த்தும்.

1, 2. [நேமியொடு, வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை:]

1. நேமியொடு வலம்புரி தாங்கு தடக் கை மால் (ந.)—சக்கரத்தோடே வலம்புரியைத்தாங்கும் பெரியகைகளையுடையமால்,

(கு - பு) வலம்புரி- ஒருவகைச்சங்கு;

வலமாகவளேந்துள்ளதென்ப து பொருள்.

2. மா பொறித்த மால் (ரு)—திருமார்பிடத்தே திருமகளை வைத்த மால்.

(கு - பு) பொறித்த - வைத்த; இதனை " வடபுலவிமயத்து வாங்கு விற் பொறித்த" என்னும் சிறுபாணாற்றுப்படையுரையானுமுணர்க.

3. நீர் செல நிமிர்ந்த மாஅல் போல—மாவலிவார்த்த நீர் தன்கையிலே சென்றதாக உயர்ந்த திருமாலைப்போல,

இனி, நேமியோடே வலம்புரியையுமுடைய உத்தம விலக்கணங்களைப் பெற்றிருக்கின்ற திருமகளையணைத்தகையிலே நீர் செல்லவென்றுமாம்

இதனாலே முல்லைக்குரிய தெய்வங்கூறினர்.

(கு - பு) மாவலி - ஓரசுரன்; இவனிடம் திருமால் குறுகியவடிவத்துடன்சென்று மூன்றடிமண்கேட்டு உடன்பட்ட அவன் தாரைநீர்வார்த்த வுடனே பெரியவடிவங்கொண்டு பூமியையும் ஆகாயத்தையும் அளந்தா ரென்பது புராணகதை. நேமி - சக்கரம்; ஈண்டுச் சக்கரரேகை; வலம் புரி - சங்கரேகை; இவை சிறந்த ஆடவர் மகளிர்களுடைய கையிலுள்ள உத்தம இலக்கணங்கள்; பெற்றிருக்கின்ற கையென இயைத்தலும் பொருந்

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், உ0௬.

தும்; "வலம்புரி பொறித்த வண்கை மதவலி" என்றார்;(சிந்தா.நாம. கள்ரு) திருமால் முல்லைத்திணைக்குரியதெய்வம்; 'மாயோன்மேய காடுறையுலகம்' என்பர்; (தொல். பொரு. ரு.)

4, 5. [பாடிமிழ் பனிக்கடல் பருகிவல னேர்பு, கோடுகொண் டெழு
ந்த கொடுஞ்செல வெழிலி:]
பாடு இமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு கோடு கொண்டு—
ஒலிமுழங்குகின்ற குளிர்ச்சியையுடைய கடலைக்குடித்து வல
மாகவெழுந்து மலைகளை இருப்பிடமாகக்கொண்டு,
5. உலகம் வளைஇ (க) எழுந்த கொடுஞ்செலவு எழிலி—பெய்யுங்
காலத்தே உலகத்தைவளைத்தெழுந்த
மேகம்,
கடியசெலவினையுடைய
மால் நீர் செல நிமிர்ந்தாற்போல மேகமும் நீர்செலநிமிர்ந்ததென்றார்.
இனி உலகத்தைத் திருவடிகளிலே அணைத்துக்கொண்டுநிமிர்ந்த மா லென்று முரைப்பர்.
6. பெரும்பெயல் பொழிந்த சிறு புன் மாலை—பெரிய

மழையைப்
பெய்த சிறுபொழுதாகிய வருத்தஞ்செய்கின்ற
மாலைக்காலத்துப்
பாவைவிளக்கு (அ௫) எனக்கூட்டுக.

இதனானே முல்லைக்குரிய * காரும் மாலையுங் கூறினார்.
மால்போலெழுந்த எழிலிபொழிந்த மாலையென்க.
(கு - 4) 'பெரும்பெயல் பொழிந்த' என்றதனாற் கார்காலம் கூறப் பட்டது. கார்காலமும் மாலைக்காலமும் முறையே முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதுமாம்.

7. [அருங்கடி மூதூர் மருங்கிற் போகி:] அருங்கடி மூதூர் மருங்
கில் நல்லோர் (கஅ) போகி—அரியகாவலையுடையபழைய
ஊர்
ப்பக்கத்துப் பாக்கத்தே படைத்தலைவரேவலால் நற்சொற்கோ
டற்குரியோர்போய்,
(கு - 4) பாக்கம் - பக்கத்துள்ள ஊர். நற்சொற்கோடல் - நல்லநிமித்தமான வார்த்தையைக்கேட்டல்.

8, 11. [யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ
முல்லை, யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது, †
பெருமுது
பெண்டிர் விரிச்சி நிற்ப.]

8. 10. நறு வீ முல்லை அரும்பு யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப அவிழ்
அலரி நாழி கொண்டநெல்லொடு
தூஉய்—நறியபூக்களையுடை

ய முல்லையினது அரும்புகள் யாழினது ஓசையினையுடைய இன

* "காரு மாலையு முல்லை குறிஞ்சி - கூதிர் யாம மென்மனார் புல வர்." என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சு.

† பெருமுதுபெண்டிரென்பதற்கு ஒருபிரதியிலும் உரையிலது; பெரிய முதிர்ந்த பெண்டிரென்க.

மாணவண்டுகள் ஆரவாரிக்கும்படி அவிழ்ந்தபூவை நாழியிடத்தே

கொண்டுபோன நெல்லுடனே தூவி,

10, 11. கை தொழுது விரிசசி நிற்ப—தெய்வத்தை வணங்கி நற்சொற்

கேட்டு நிற்க,

நல்லோர் (கஅ) போகித் (எ) தூஉய்த் தொழுது நிற்பவென்க.

என்றது:—ஒருவேந்தன் ஒருவேந்தனோடு இகல்கருதினாற் போர்செய்

யவேண்டுதலின், அவனாட்டந்தணர்முதலியோரைத்தன்னாட்டின்கண்ணே

அழைத்தற்கும், அதனையறியாத ஆவைக் கொண்டுபோந்து தான் காத்தற்கு

மாகத் தன்படைத்தலைவரைநோக்கி அரசன் நிரையடித்தற்குஏவியவழி,

அவர் அவனூரினின்றும்போய் ஒருபாக்கத்துவிட்டிருந்து அரசனுக்கு மேல்

வரும் ஆக்கத்தையறிதற்கு விரிச்சிபோக்கல் வேண்டுமென்று புறத்திணையி

யலுட் கூறினமையான், ஈண்டும் அவ்வாறேகூறினர். அது, * "வேந்து

விடு முனைஞர் வேற்றுப்புலக் களவி - னாதந் தோம்பன் மேவற் றாகும்."

† "படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி" என்னுஞ் சூத்திரங்களானும்,

"திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி - நரைமுதியோ ளின்றுரை

த்த நற்சொ-னிரையன்றி - யெல்லைநீர் வைய மிறையோற் களிக்குமால் - வல்லையே சென்மின் வழி." என்னும் உதாரணத்தானுமுணர்க. இவர் இதுகேட்டு நிரைகொண்டால் அரசன் வஞ்சிசூடி மண்ணசையால் மேற் செல்வனென்பது. ஆண்டு ‡ "எஞ்சா மண்ணசைஇ" என்னுஞ்சூத்திரத் திற் கூறியவாறே ஈண்டுக்கூறினர். அது மேல் "முனைகவர்ந்து" (கக) என்பதனானுணர்க.

(கு - பு) நாழி - அளத்தற்கருவிகளுள் ஒன்று. இகல் - பகை. அவனுடு - பகைவன்றேயம். அதனை - அப்போரை. நிரையடித்தற்கு - பசுக் கூட்டங்களை ஓட்டிக்கொண்டுவருதற்கு. ஆக்கம் - விருத்தி. "வேந்துவிடு முனைஞர்" என்பதன்பொருள்:—அரசனால் விடப்பட்டு முனைப்புலங்காத் திருந்த சேனைத்தலைவர், பகைநிலத்தேசென்று களவினாலே பசுக்கூட்டத் தைக்கொண்டுபோந்து பாதுகாத்தலைப் பொருந்துதலுடையதாகும் வெட் சித்திணையென்பது. "படையியங்கரவம்" என்பதன்பொருள். நிரை கொள்ளுதற்கு

எழுந்த சேனை படைவீட்டின் புறத்தேசெல்லுதலாலுண்டாகும் ஓசையும, அங்ஙனம் எழுந்த சேனைவீரர்போய் இரவில் நற்சொற்கேட்டலும். 'திரைகவுள்' என்னும் செய்யுட்குப்பொருள்: திரை கவுள் - சுருண்ட கன்னத்தையும், வெள் வாய்-வெள்ளியவாயினையும், திரிந்துவீழ்தாடி- முறுக்குண்டு வீழ்ந்த தாடியினையும், நரை-நரையையுமுடைய, முதியோன், சின்ற உரைத்த நற்சொல்-நின்றசொல்லிய நன்னிமித்தச்சொல்லான.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உ.
† ,, ,, ,, சு.
‡ ,, ,, ,, எ.

விரை அன்றி-பசுக்கூட்டத்தை அளித்துவிடுவதல்லாமல், நீர் எல்லை வையம்- கடலை எல்லையாகவுடைய பூமியையும், இறையோற்கு அளிக்கும்-அரச னுக்குக் கொடாநிற்கும், ஆதலால், வல்லை நீர் வழி சென்மின் -விரைவாக நீர் வழியிற் செல்லுவீராக. எ - று. வஞ்சிமாலையைச் சூடுதல் பகைமேற் செல்வோர் தொழில். "எஞ்சா மண்ணசை-இ" என்னும் சூத்திரம்: "எஞ்சா மண்ணசைஇ வேந்தனை வேந்தன், அஞ்சுதகச் சென் றடல்குறித் தன்றே." இ - ள். எஞ்சா மண் நசை இ - குறையாத பூமியைவிரும்பி, அதனால், அஞ்சுதகத தலைச்சென்று - அங்கே வாழ்வோர்களுக்கு அஞ்சுதலுண்டாகும்படி அந்நாட்டிடத்தேசென்று, வேந்தனை வேந்தன் - ஒருவேந்தனை மற்றொருவேந்தன், அடல் குறித்தன்று - அடுதலைக்கருதியது

வஞ்சித்திணை. எ - று.

12, 18. [சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின், றுறுதுய ரலமர
ணோக்கி
யாய்மக, ணடுங்குசுவ லசைத்த கையள் கைய,
கொடுங்கோற்
கோவலர்பின்னின்றுய்த்தர, வின்னே வருகுவர்
தாயரென்போ,
ணன்னர் நன்மொழி கேட்டன மதனால், நல்ல நல்லோர்
வாய்ப்
புள்:]

17, 18. நன்னர் வாய்ப்புள்—அவர்கேட்ட நன்றாகிய நற்சொல்,

13, 14. ஆய்மகள் நடுங்கு சுவல் அசைத்த
கையள்—இடைச்சாதியின்
மகள் குளிரால் நடுங்குகின்ற தோளின்மேலே கட்டின
கைய
ளாய்நின்று,

12, 13. சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின் உறு துயர்
அலமரல்
நோக்கி—சிறியதாம்பாலே காலிலே கட்டப்பட்ட
வருத்தத்தை
யுடைத்தாகிய கன்றினுடைய முலையுண்ணாமலுறுகின்ற
துய
ராலே தாய்வருமென்று சுழலுகின்ற தன்மையைப்
பார்த்து,

14, 15. கைய கொடுங்கோற் கோவலர் பின்னின்று
உய்த்தர—கையிட
த்தனவாகிய கொடிய கோலையுடைய இடையர்
பின்னேநின்று

செலுத்துதலைச் செய்கையினாலே,

16, 17. தாயர் இன்னே வருகுவர் என்போள் நன்மொழி கேட்டனம்—

விரும்பமேய்ந்து, நும்முடைய தாய்மார் இப்பொழுதேவருவரெ

ன்று கூறுகின்றோளுடைய நன்றாகிய வார்த்தையாக யாங்கள்

கேட்டோம்;

(கு-பு) தாயரென அஃறிணை உவப்பின்கண் உயர்திணையாகவந்தது.

17. அதனால்—அவள் கூறிய நற்சொல்லின் கருத்தால், 18, 20. [தெவ்வர், முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து,

வருதல் தலைவர் வாய்வது:] தலைவர் தெவ்வர் முனை கவர்ந்து

கொண்ட திறையர் வினைமுடித்து வருதல் வாய்வது—நந்தலை

வர் வஞ்சிசூடிச் சென்று பகைவர் மண்ணைக்கொண்டு பின் அவ

ரிடத்தேவாங்கிக்கொண்ட திறையினையுமுடையராய் இங்ஙனம்

தாம் எடுத்துக்கொண்ட வினையை முடித்துவருவாரென்று நாங் கருதிய தன்மையிலே அவர் சிற்றலுண்மை,

18. நல்ல—அவர் அங்ஙனம் வினைமுடித்துவருதல், நமக்கு இல்ல

றம் நிகழ்தற்குக் காரணமாகலின் நல்லகாரியம்;

20, 21. [நீ நின், பருவர லெவ்வங் களைமா யோயென:] மாயோய் நீ

நின் பருவரல் எவ்வம் களை

என—மாமைநிறத்தையுடையோ

ளே, நீ நின் மனத்தடுமாற்றத்தான் உளதான வருத்தத்தைப்

போக்கென்றுகூற, அதுகேட்டு,

(கு - பு) மாமைநிறம் - நாருரித்த ஆம்பற்றண்டுபோன்றநிறம்; "நீர் **வள** ராம்பற் றூம்புடைத்திரள்கா, ஞருரித் தன்ன மதனின்மாமை" என் **பது** நற்றிணை, சு.

செலவுக்குறிப்பறிந்து வேறுபட்டதுணர்ந்தமையின், மனத்தடுமாற்ற **மென்றூர்.**

பெருமுதுபெண்டிர் (கக), நல்லோர் (கஅ) போகித் (எ) தூஉய்த் **தொழுது** (க0) விரிச்சிநிற்ப (கக) அவர்கேட்ட நன்னர் (கஎ) வாய்ப்புள் (**கஅ**) ஆய்மகள் (கங) கையளாகிக் (கச) கன்றின் (கஉ) அலமரனோக்கித் (**கரு**) தாயர் இன்னே வருகுவரென்போளுடைய (கசு) நன்மொழியாக **யாங்கள்** கேட்டனம்; அதன்கருத் தால் (கஎ). தலைவர் வருதல் வாய்வது (**உ0**); நல்லகாரியம் (கஅ); மாயோய் உக), நீ நின் (உ0) பருவரலெவ்வங் **களையென்று** கூற (உக) அதுகேட்டு நீடுநினைந்து (அஉ) என்க

இங்ஙனம் பொருள்கூறாமல் தலைவியது இரக்கமிகுதிகண்டு பெருமு **துபெண்டிர்** விரிச்சிகேட்டுவந்து தலைவர்வருவாராதல் வாய்வது; நின் எவ் **வங்களையென்று** பல்காலும் ஆறறுவிக்கவும் ஆற்றாளாய்த் துயருழந்து (அ0) **புலம்பொடு** (அக) தேற்றியும் திருத்தியும் (அஉ) மையல்கொண்டும் உயிர்த் **தும்** (அங) நடுங்கிநெகிழ்ந்து (அச) கிடந்தோள் (அஅ) எனப் பொருள் **கூறியக்கால்**

நெய்தற்குரிய இரங்கற்பொருட்டன்றி முல்லைக்குரிய இருத்தற்பொருட்டாகாமையுணாக. அன்றியும் தலைவன் காலங்குறித்தல்லது பிரியானென்பதூஉம், அவன் குறித்தகாலங்கண்டால் தலைவிக்கு வருந்த மிகுமென்பதூஉம், அது பாலையாமென்பதூஉம், அவ்வாற்றாமைக்கு இரங் கல் நிகழ்ந்தால் நெய்தலாமென்பதூஉம் நூற்கருத்தாதலுணர்க.

22. [காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந் து:] காட்டவுங் காட்

டவு ங் கலுழ்சிறந்து காணாள—தலைவன் புகழும் மானமும் எடு

த்துக்காட்டி வற்புறுத்தவும், தோன்றல்சான்ற மாற்றார் பெருமை

கூறிக்காட்டி வற்புறுத்தவும் அன்புமிகுதியாற் கலக்கமிக்கு

- இவை அரசற்குவேண்டுமென்று மனத்திற் கருதாதவள்,

கு - பு) இவை - பகைமேற்செலவும் போர்முதலியனவும்.

23. பூப் போல் உண் கண் புலம்பு முத்து

உறைப்ப—பூப்போலும்

மையுண்கண்கள் தாரையாகச்சொரியாது தனித்து வீழ்கின்ற

முத்துப்போலுந் துளியைத் துளிப்ப, அதுகண்டு,

24. கான் யாறு தழீஇய அகல் நெடும்

புறவின்—காட்டாறுசூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே,

25. சேண் நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி—தூரியநிலத்தே நாறுகின்ற பிடவமோடே ஏனைப் பசியதூறுகளையும் வெட்டி,

(கு - பு) பிடவம் - ஒருவகைச்செடி.

26. வேட்டுப் புழை அருப்பம் மாட்டி — பகைப்புலத்துக்குக் காவலாகவிருக்கும் வேட்டுவச்சாதியினுடைய அரண்களையழித்து,

(கு - பு) வேடு - வேடச்சாதி. புழை - சிறியவாயில்கள்.

26, 27. [காட்ட, விடுமுட் புரிசை யேமுற வளைஇ:] காட்ட முள் இடு புரிசை ஏமுற வளைஇ — காட்டின்கண்ணவாகிய முள்ளாலிடு மதிலைக் காவலுறும்படி வளைத்து,

28. [படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி:] புணரி படும் நீரிற் பரந்த பாடி— திரையொலிக்கின்ற கடல்போற்பரந்த பாசறைக்கண்ணே கண்படைபெறாது (கூஎ) என்க.

(கு - பு) 'பரந்த பாசறை' எனவும் பாடம். (உச - உஅ) 'கான்யாறு ......பாடி'-என்பது, தொல். பொரு. சுக-ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

புறவிடத்தே (உச) எருக்கி (உரு) மாட்டி (உசு) வளைஇப்

(உள) பரந்த பாடியென்க.

29. உவலைக் கூரை ஒழுகிய
தெருவில்—தழையாலேவேய்ந்த கூரை
ஒழுங்கப்பட்ட தெருவிடத்து,

30, 31. கவலை முற்றம் காவல் நின்ற தேம்படு கவுள
சிறுகண்யானை—
நாற்சந்தியானமுற்றத்தே காவலாகநின்ற மதம்பாய்கின்ற
கதுப்
பினையுடையவாகிய சிறியகண்ணையுடைய யானை,
(கு - பு) கதுப்பு - கன்னம்

32, 33, [ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்தியாத்த,
வயல்விளையின்
குள குண்ணாது:] ஓங்குநிலைக் கரும்பொடு வயல் விளை
கதிர்
மிடைந்து யாத்த இன்குளகு உண்ணாது—வளர்கின்ற
தன்மை
யையுடைய கரும்புகளோடே வயலிலே விளைந்த
நெற்கதிரி
னைட்யே நெருங்கப்பட்டுக் கட்டிப்போகட்ட சாவியையும்
இனிய
* அதிமதுரத்தழையையுந் தின்னுமல்,
(கு - பு) யாத்தவற்றையும் குளகையுமென்க.

33, 34. நுதல் துடைத்து அயில்நுனை மருப்பில் தம் கையிடைக்
கொ
ண்டெனா— அவற்றாலே தம்நெற்றியைத்துடைத்துக்
கூர்மை
யையுடைய முனைகளையுடைய கொம்பினிடத்தே ஏறட்ட

தம்

கையிடத்தே கொண்டுநின்றனவாக,

(கு - பு) ஏறட்ட—ஏற்றிக்கொண்ட.

---

* அட்டி மதுரத்தழையென்றும் பிரதிபேதமுண்டு.

35, 36. [கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக், கல்லா விளைஞர்

கவளங் கைப்ப:] கல்லா இளைஞர் வடமொழி பயிற்றிக் கவை

முட் கருவியிற் கவளங் கைப்ப—வடமொழி அடியிலேகல்லாத

இளைஞர் யானைப் பேச்சான வடமொழிகளைக் கற்றுப்பலகாற்

சொல்லிக் கவைத்த முள்ளையுடைய பரிக்கோலாலே

தைத் தின்னும்படி குத்த,

கவளத்

யானைக்குச்செய்யுந் தொழில்களொழிய வேறொரு தொழிலைக்கல் லாத இளைஞரென்றுமாம்.

(கு - பு) பரிக்கோல் - குத்துக்கோல்

37, 40. [கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான், முக்கோலசைநிலை

கடுப்ப நற்போ, ரோடா வல்விற் றூணி நாற்றிக், கூடங் குத்திக்

கயிறுவாங் கிருக்கை:]

40, கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை—கூடமாகக் கால்களை

நட்டுக் கயிற்றை வலித்துக்கட்டின இருப்பின்கண்ணே,

என்றது படங்குகளை.

(கு - பு) படங்குகள் - கூடாரங்கள்.

37, 38. கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசைநிலை

கடுப்ப—துகிலைக் காவிக்கல்லைத் தோய்த்துடுத்த விரதங்களை

யுடைய முக்கோலந்தணன் அம்முக்கோலிலே அந்த உடை

யினை இட்டுவைத்த தன்மையையொக்க,

38, 39. நற்போர் ஓடா வல்வில் தூணி நாற்றி—அறத்தாற்பொருகின் ற

போரிற்கு ஓடாமைக்குக் காரணமான வலியவில்லைச் சேர

வூன்றி அதிலே தூணிகளைத் தூக்கி,

41. பூந்தலைக் குந்தம் குத்தி—பூத்தொழிலைந் தலையிலேயுடைய எறி கோல்களையுமூன்றி,

பூந்தலை - விகாரம்

41. கிடுகு நிரைத்து—கிடுகுகளையும் நிரையக் குத்தி,

(கு - பு) கிடுகு - சட்டம்.

42. வாங்கு வில் அரணம் அரணமாக—இங்ஙனஞ்சூழும் விற்படை

யாகிய அரணே தங்களுக்கு அரணாக,

இதற்குள்ளேவிட்ட,

கயிறுவாங்கிருக்கைக்கண்ணே (சo) நாற்றிக (ரு௧) குத்தி னிரைத்து (௬௧) வாங்குவில்லரணமென்க (௬௨).

43. வேறு பல் பெரும்படை நாப்பண்—மொழி வேறுபட்ட பலவா

கிய பெரிய படைக்குநடுவே,

(கு - பு) வேறு வேறுபாஷைகள் பேசப்படும் நாடுகள் விருந்து வந்தசேனை.

பலவற்றி

43, 44. [வேறோர், நெடுங்காழ்க் கண்டங் கோலியக நேர்பு:] - 43, 44. வேறோர் அகம் நேர்பு—வேறோரிடத்தை அரசனுக்குக் கோயி லாக எல்லாரு முடம்பட்டு,

44. நெடுங்காழ்க் கண்டம் கோலி—நெடிய குத்துக்கோலுடனே

பண்ணின பலநிறத்தாற் கூறுபட்ட மதிட்டிரையைவளைத்து,

கண்டம் - ஆகுபெயர்.

45. குறுந்தொடி முன்கைக் கூந்தல் அம் சிறுபுறத்து மங்கையர்

(சஎ)—குறியதொடியையுடைய முன்கையினையும் கூந்தலசை

ந்து கிடக்கின்ற அழகினையுடைய சிறிய முதுகினையுமுடைய

மங்கையர்,

46, 47. இரவு பகற்செய்யும் திண்பிடி ஒள் வாள் விரவு வரிக் கச்சிற்

பூண்ட மங்கையர் — இராப்பொழுதைப் பகற்பொழுதாக்குந்

திண்ணிய ஆசினையுடைய ஒள்ளியவாளை விரவினவிறத்தினை

யுடைய கச்சிலேபூண்ட மங்கையர்,

(கு - பு) ஆசு - வாளின் உறை.

48, 49. நெய் உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக் கை அமை விளக்

கம் நந்துதொறும் மாட்ட—நெய்யைக்காலுகின்ற திரிக்குழாயை

யுடைய சிற்றூட்கள் நெடிய திரியை எங்குங்கொளுத்தி ஒழுங்

காயமைந்த விளக்குக்கள் அவியுந்தோறும் தங்கையிற்பந்தத்தை க்கொளுத்த,

50. நெடுநா வொண்மணி கழற்றிய ,நடுநாள் — நெடிய நாக்கினை

யுடைய ஒள்ளியமணி எறிந்துவிட்ட நடுயாமத்தும்,

கோயில் பணிமடங்கினல் மணியெறிந்துவிடுதல் இயல்பு.

இனி யானை குதிரைமுதலியன துயில்கோடலின்,

அவற்றின்

யணியோசை அடங்கிய நடுநாளென்றுமாம்.

(கு - பு) வீடுகளில் வேலைகளோய்ந்தபின்பு மணியை அடித்துவிடும் வழக்கமுண்டென்பது "நெடுநா வொண்மணி கடிமனை யிரட்ட", "யாமங் கொள்பவர் நெடுநா வொண்மணி, யொன்றெறி பாணியி னிரட்டும்" என்னும் **நற்றிணைச்செய்யுட்களாலும்** வலியுறுத்தப்படுகின்றது.

51, 52. அதிரல்பூத்த ஆடு கொடிப் படாஅர் சிதர் வரல் அசை வளிக்கு

அசைவந்தாங்கு —புனலிபூத்த அசைகின்ற கொடியினையுடைய

சிறுதூறுகள் துவலையோடே வருதலையுடைய அசைத்த காற்

றிற்கு அசைந்தாற்போல,

சிதர் - மெத்தெனவுமாம்.

(கு - பு) புனலி - ஒருவகைப்பூஞ்செடி; பழைய நூல்களிற் காணப்படுகின்றது.

53, 54. துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப் பெருமூதா

ளர் ஏமம் சூழ—மயிர்க்கட்டுக்கட்டிச் சட்டையிட்ட அனந்தரினை

யும்,பெரிய ஒழுக்கத்தினையுமுடைய மெய்காப்பாளர் காவலாகச்

சூழ்ந்துதிரிய,

(கு - பு) மயிர்க்கட்டு - தலைக்கட்டு (தலைக்குட்டை). அனந்தர் - கள்ளின் செருக்கு. மெய்காப்பாளர் - அரசன் சரீரத்தைப் பாதுகாப்பவர்கள்.

55, 56. [பொழுதளந் தறியும் பொய்யா மாக்க, டொழுதுகாண் கையர்

தோன்ற வாழ்த்தி:]

55, 56. மாக்கள் பொழுது அளந்தறியும் பொய்யாக் காண்கையர்—அறிவில்லாதோருடைய வாழ்நாளை இத்துணையென்று அளந்தறியும் பொய்யாத காட்சியையுடையார்,

(கு - பு) மாக்கள் - விதி விலக்கு அறியாதவர்கள்; "கையறியா மாக்கள்" என்பது நாலடியார்.

56. தொழுது தோன்ற வாழ்த்தி—அரசனைவணங்கி விளங்க வாழ்

த்தி,

57. எறி நீர் வையகம் வெலீஇய
செல்வோய்— திரையெறிகின்ற

கடல்சூழ்ந்த உலகத்தே பகைவரை வெல்லுதற்குச்
செல்கின்ற 57, 58.
வனே,
நின் குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப—கிடாரத்து

நீரிலேகாண்கின்ற நினது நாழிகைவட்டிலிற்
சென்றநாழிகை

இத்துணையென்று சொல்லுகையினாலே,

(கு - பு) குறுநீரென்றது நாழிகைவட்டிலே ; கன்னல் - நாழிகை.

59. [மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை:]

59. மத்திகை வளைஇய 'உடை—புரவியை அடிக்கின்ற சம்மட்டி வளைந்து கிடக்கின்ற உடை,

59. மறிந்து வீங்கு செறிவு உடை—அச்சம்மட்டி மறையும்படி வடிப்பு தாழ்ந்து பெருக்குஞ் செறிதலையுடைய புடைவையு டையினையும்,

(கு - பு) ஆண் உடையையும் புடைவையென்பது பண்டைக்கால வழக்கு.

60. மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து—சட்டையிட்ட அச் சம்வருந் தோற்றரவினையும்,

(கு-பு) தோற்றரவு - தோன்றுதல்.

61. வலி புணர் யாக்கை — இயல்பான வலிகூடின மெய்யினையு முடைய,

61. வன்கண் யவனர்—தறுகண்மையினையுடைய சோனகர்,

62. புலித்தொடர் விட்ட புனை மாண் நல்லில்—புலிச்சங்கிலிவிடப் பட்ட கைசெய்தமாட்சிமைப்பட்ட நன்றாகிய இல்லிலே,

63, 64. திரு மணி விளக்கம் காட்டித் திண்ஞாண் எழினி வாங்கிய

றைப் பள்ளியுள்—அழகினையுடைய மாணிக்கமாகிய விளக்கை
எரியவைத்துத் திண்ணிய கயிற்றிற்றிரையைவளைத்த புறவறை
க்குள்ளறையிற் படுக்கைக்கண்ணேசென்று, ·

65, 66. [உடம்பி னுரைக்கு முரையா நாவிற், படம்புகு மிலேச்ச ருழைய ராக:] உரையா நாவின் உடம்பின் உரைக்கும் படம்

புகும் மிலேச்சர் உழையராக—வார்த்தை சொல்லாத நாவினை
யுடைய கையாலும் முகத்தாலும் வார்த்தைசொல்லுஞ் சட்டை
யிடுஞ் சரவாசிகள் பள்ளிகொள்ளுமிடத்தைச் சூழ்ந்து திரிய,

உரையாநாவென்றார், ஊமைகளென்றற்கு,

(கு - பு) சரவாசிகள் - சரித்துக்கொண்டே வசிப்பவர்கள் ; இப்பெயரை அசாரவாசிகளென்றுங் கூறுவர் ; ஊமைகளைப் படுக்கையறையின் வாயிலிற்காவலாகவைத்தல் மரபு.

67. மண்டு அமர் நசையொடு கண்படை பெறாது—பகைவர் மன
மறியாமல் மிக்குச்செல்கின்ற போரை நச்சுதலாலே

கண்ணுறக்

கம்பெறாமல்,

(கு - பு) நச்சுதல் - விரும்புதல்.

68, 69. எடுத்து எறி எஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து பிடிக்கணம் மறந்த

வேழம் உள்ளியும் (எஉ —ஓச்சிவெட்டுகின்ற வாளழுந்துகையி

ஞலே புண்மிக்குப் பிடித்திரளைமறந்த வேழத்தையுள்ளியும்,

(கு - பு) ஓச்சி - உயர்த்தி. பிடி - பெண்யானை. வேழம் - இங்கே ஆண்யானை.

69, 70. [வேழத்துப், பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமிய:] வேழத்.

துப் பரூஉக்கை பாம்பு பதைப்பன்ன துமிய—யானையினுடைய

பரிய கைகள் பாம்பினது பதைக்கின்ற தன்மையையொத்த

பதைப்பினையுடையவாக அற்றுவிழும்படி,

71, 72. தேம் பாய் கண்ணி நல்வலந் திருத்திச் சோறு வாய்த்து ஒழிந்

தோர் உள்ளியும்—தேன்பரக்குமவஞ்சிமாலைக்கு நன்றாகிய வெ

ற்றியை யுண்டாக்கிச் செஞ்சோற்றுக் கடனிறுத்துப் பட்டவீர

ரை நினைத்தும்,

(கு - பு) செஞ்சோற்றுக்கடன் - செவ்விய சோற்றை

அளித்தவர்க ளுக்குச் செய்யவேண்டிய உரிமை ; அஃதாவது உண்டவர்கள் தம்மைப் பாதுகாத்தோர் பொருட்டு உயிர்விடுதல் ; "செஞ்சோற்றுக் கடனின்றே கழியேனாகில்" என்பதனாலுமுணர்க (பாரதம்).

72, 74. தோல் துமிபு வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவி சாய்த்து
உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்—பக்கரைகளை யறுத்துக்
கூரிய முனையினையுடைய அம்புகள் வந்து அழுந்துகையினாலே
செவிசாய்த்துப் புல்லுண்ணாதே வருந்துங் குதிரைகளை நினைத்தும்,

(கு - பு) பக்கரை - தோலாற்செய்த கலனைமுதலியவை.

75, 76. [ஒருகை பள்ளி யொற்றி யொருகை, முடியொடு கடகஞ்
சேர்த்தி:] ஒருகை பள்ளி ஒற்றி ஒருகைக் கடகம் முடியொடு
சேர்த்தி—ஒரு கையைப் படுக்கையின்மேலேவைத்து ஒருகை
யிற் கடகத்தை முடியோடேசேரவைத்து,

என்றது - கையிலே தலையைவைத்தென்றாயிற்று.

76. நெடிது நினைந்து—இப்படைநொந்தவளவுக்கு நாளை எவ்வாறு

பொருமென்று நெடிதாகவினைந்து,

77. பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்—பகைவரைக்
கருதிவைத்த வாளைப்பிடித்த வலியினையுடைய ங்கையாலே
வெட்டிவென்று (௭௬) என்க.

78. நகை தாழ் கண்ணி நல்வலம் திருத்தி—தனக்கு எக்காலமும்
விளக்கந்தங்கும்வஞ்சியைநன்றாகிய வெற்றிவிலைபெறத்திருத்தி,

79. அரசு இருந்து பனிக்கும் பாசறை—பகையரசிருந்து நடுங்கு
தற்குக்காரணமான பாசறை,

79. பனிக்கும் பாசறை—* நோய் தீருமருந்துபோனின்றது.

(கு - பு) நோய்தீருமருந்து - நோய்தீர்தற்குக்காரணமான மருந்து.

79 முரசு முழங்கு பாசறை—வெற்றிக்களிப்புத்தோன்ற முரசுமுழ
ங்கும் பாசறை,

80, 84. [இன்றுயில் வதியுநற் காணு துயருழந்து, நெஞ்சாற்றுப் படுத்த
நிறைதபு புலம்பொடு, நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்
தியு, மையல் கொண்டு மொய்யெனவுயிர்த்து, மேவுறு மஞ்
ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து:]

80 வதியுநன் இன்றுயில்
காணுள்—தன்னிடத்தேதங்குகின்றவனை
இனியதுயில் கொள்ளுதலைக் காணாளாய்,

81. நெஞ்சு ஆற்றுப்படுத்த புலம்பொடு—அவன் தன்னெஞ்சந்தான்
போகின்றவழியிற் செலுத்துதலால் தனக்குண்டான தனிமையாலே,

இது † "விகழ்ந்தது வினைத்தற் கேதுவு மாகும்" என்பதாம்.

81. விறைதபு புலம்பு—தனதுவிறைகெடுத்ததனிமை,

82 நீடு வினைந்து—இங்ஙனம் பிரிந்தாலன்றி இவ்வரசியல் விகழா
தென்று வினைத்து,

82. ஓடு வளை திருத்தியும்— கழலுகின்றவளையைக் கழலாமற் செறி
த்தும்,

83. மையல்கொண்டும்—மயக்கங்கொண்டும்,

83. ஒய்யென உயிர்த்தும்—விரைய நெட்டுயிர்ப்புக்கொண்டும்,

84. ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து — அம்பு
தைத்த

---

* கலித்தொகை, இரண்டாவதுகுறிஞ்சிக்கலி, உ௩.
"அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப் - பேரம ருண்கணெனன்
றோழி யுறீஇய - வாரஞ ரெவ்வ முயிர் வாங்கு —மற்றிந்நோய் தீரு
மருந்தருளா யொண்டொடீ.டீஇ."

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல்,
௪௩.

மயில்போல நடுங்கி; அணிகலங்கள் நெகிழ்ந்து கண் புலம்புமூழ்த்
துறைப்ப (உரு.) எனக் கூட்டுக.

80, 82. துயருழந்து தேற்றியும்—அதனைக்கண்டு தானும் வருத்தமுற்று
இவள் ஆற்றியிராளென்று துணிந்தும்,

85. பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல —பொற்பாவை ஏந்தி
நின்ற தகளியிலே பரியவிளக்கு நின்றெரிய,
விளக்கு - ஆகுபெயர்.

(கு - பு) பாவை விளக்கு - பிரதிமைத்தீபம். தகளி - அகல்.

86. இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து — தனக்குள்ள இட
மெல்லாம் பொன்னாலும் மணியாலும் சிறப்புப்பெற்று உயர்ந்த
எழுநிலையினை யுடைய மாடத்திடத்து,

87. முடங்கிறைச் சொரிதரும் மாத்திரள் அருவி—* மூட்டுவாய்
களினின்றுஞ் சொரிதலைச்செய்யும் பெருமையையுடைய திர
ண்ட அருவிகளினுடைய,

(கு - பு) மூட்டுவாயென்றது கூடுவாய் மூலையை.

88 இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்—இனிய

பலவா
கிய முழங்குகின்ற ஓசைக்கண்ணே தலைவன் தான்கூறிய பரு
வம் பொய்யாமல் வருவனென்னுங் கருத்தினளாகலின் அவன்
வரவினையே கருதிக்கிடந்தோளுடைய,
89. அஞ்செவி நிறைய ஆலின—அகளுசெவி நிரம்பும்படி ஆரவாரி
த்தன;
89, 91. [வென்றுபிறர், வேண்டுபுலங், கவர்ந்த வீண்டுபெருந் தானை
யொடு, விசயம்:]
89. வென்று—வெட்டிவென்று,
89, 91. பிறர் வேண்டு புலம் கவர்ந்த விசயம்—பகையரசர் எக்காலமும்
விரும்பும் நிலங்களைக் கைக்கொண்ட வெற்றியாலே,
90. ஈண்டு
பெருந்தானையொடு—திரளுகின்ற பெரியபடையோடே,
அரசன் வினைமுடிந்தகாலத்தே
விரைந்துபோர்தாளுகலின்,
அதுகேட்டுவருகின்ற படையென்பதுதோன்ற ஈண்டுபெருந்தா
னை யென்றார்.
91. வெல்கொடி உயரி—எக்காலமும் வென்றெடுக்கின்ற கொடி
யை எடுத்து,
91, 92. வலனேர்பு வயிரும் வளையும் ஆர்ப்ப—வெற்றிதோன்றிக்

கொம்

புஞ்சங்குமுழங்க,

(கு—பு) ஏர்பு—எழுந்து, வலன் நேர்பு எனப் பிரித்தலுமாம்.

92, 93. அயிர செறி இலைக் காயா அஞ்சனம் மலர—நுண்மணலிடத்த

* கூடுவாவென்றும் பிரதிவேறுபாடுண்டு.

4

னவாகிய நெருங்கின இலையினையுடைய காயா அவிழ,

அஞ்சனம்போல (கு—பு) காயா—ஒருவகை மரம்.

அஞ்சனம்—மை.

94. முறி இணர்க் கொன்றை நன்பொன் கால—தளிரினையுங் கொத்தினையுமுடைய கொன்றை நன்றாகிய பொன்னைச்சொரிய,

95. கோடற்குவிமுகை அங்கை அவிழ—கோடலினது குவிந்தமு

கைகள் அகங்கைபோல விரிய,

(கு—பு) கோடல்—வெண்காந்தள். முகை—அரும்பு.

96. தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப—திரட்சிநிறைந்த தோன்றி

உதிரம்போலப் பூப்ப,

(கு - பு) தோன்றி - செங்காந்தள்.

97\. கானம் நந்திய செந்நிலப் பெருவழி—காடுதழைத்த சிவந்தநிலத்

திற் பெருவழியிலே,

98, 100. [வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற், றிரிமருப் பிரலையொடு மடமா னுகள, வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்:]

98\. வானம் வாய்த்த வரகு—மழைவேண்டப் பெய்தவரகு,

100, 98. எதிர் செல் வெண்மழை பொழியும திங்களில் வாங்கு கதிர் வர

கின்—எதிர்காலத்துக்குப் பெய்யச்செல்கின்ற வெளளியமழை

சிறுதுவலையைப்பொழியும் முன்பனிதொடங்குந் திங்களிலே

வளைகின்ற கதிரையுடைய வரகிடத்தே,

99\. திரி மருப்பு இரலையொடு படமான் உகள—முறுக்குண்டகொம் பினையுடைய புல்வாய்க்கலையோடே மடப்பத்தையுடைய மான் துள்ள,

(கு - பு) மடப்பம் - அறியாமை, இளமை. மான் பெண்மான்.

மழையால் தண்ணீரும புல்லும் நிறையப்பெற்றுப் புணர்ந்துதிரியு மென்ற கருப்பொருளால், அவற்றைக்கண்ட அரசனுக்கு வேட்கைமிகுதி கூறிற்று.

மலரக் (௯௩) கால (௯௪) அவிழப் (௯௫) பூப்ப (௯௬) உகளக் (௯௯) கானநந்தியபெருவழி (௯௭) என்க.

இவை எல்லாம் வேட்கைவிளைதற்குக் காரணமாயின.

101. முதிர் காய் வள்ளியங்காடு பிறக்கு ஒழிய—தன்பருவம் வந்தால் முதிருங்காயையுடைய வள்ளியங்காய் பின்னாக,

(கு - பு) வள்ளி - வள்ளிக்கிழங்கு.

102. துனை பரி துரக்குஞ் செலவினர்—விரைந்துசெல்லும் பரியை அதனுனமையாமற் கடிதாகச்செலுத்துஞ் செலவினையுடைய ராய் வந்தவருடைய,

என்றது:—* "வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை, யிடைச்
சுர மருங்கிற்றவிர்த லிலலை, யுள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான." என்பது தோன்றக் கூறிற்று.

(கு - பு) 'வினைவயிற் பிரிந்தோன்' என்பதன்பொருள்: யாதானும்
ஓர்செய்வினையிடத்துப் பிரிந்த தலைவன் அதனைமுடித்து மீண்டுவருங்கால தது, எவ்வளவுகாததூரம் இடையிட்டதாக இருந்தாலும் அவ்விடையின் கணுண்டாகிய அருவழியிடத்தத தங்கி வருதலில்லை; உள்ளம் நெடுந்தூர மான இடததை ஒருக்ஷணத்திற் செல்லுமாறுபோலத் தலைவன்மனம் சென் றற்றவிடததே ஒருக்ஷணத்திற்சென்று உதவிசெய்யும் பறவைகளைப்போல விலத்தைததீண்டாத செல்லுதலையுடைய செருக்குற்ற குதிரையையுடை யானதலால். எ - று. உடைமையால் தவிர்தலில்லையென்க.

103. வினைவிளங்கு நெடுந்தேர்பூண்டமாவே—தான் எடுத்துக்கொ ண்ட வினை எக்காலமும் விளங்கும் நெடிதாகிய தேரைப்பூண்ட குதிரை.

தலைவி தன்னிடத்தே வதிகின்றவனை இன்றுயிலைக்காணாளாய் (அ0) நெஞ்சாற்றுப்படுத்த புலம்பாலே (அக) ஒடுவளை திருத்தியும (அஉ) மையல் கொண்டும் உயிர்த்தும (அங) நடுங்கிநெகிழ்ந்து (அச) பூப்போலுண்கண் புலம்புமுத்துறைப்ப (உங) அதுகண்டுதுயருழந்து (அ0) தேற்றியும (அஉ) வற்புறுத்தப் பிரிதல்வேண்டுமெனக் கருதிக் காட்டவுங் காட்டவுங்காணாத வள் (உஉ) பெருமுதுபெண்டிர (கசு) எவ்வங்களையெனக்கூற (உக) அது கேட்டு நீடுநினைந்து (அஉ) பெரும்பெயல்பொழிந்த சிறுபுன்மாலையில் (சு) இட்டசுடர் அழலாவிற்க (அரு) இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோளுடைய (அஅ) அஞ்செவிநிறையப (அகூ), பரந்தபாடியிலே(உஅ) அரசிருந்து(எகூ) ஒருகைபள்ளியொற்றி ஒருகை (எரு) முடியொடுசேர்த்தி (எசு)வேழத்தை (சுக) யுள்ளியும் (எஉ) மாவைசசிந்தித்தும் (எச) ஒழிந்தோரை உள்ளியும் (எஉ) நினைந்து (எசு) நடுங்குதற்குக்காரணமான பாசறையிற் (எகூ) பெரும் படைநாப்பண் வேறோர் (சகூ) அகம நேர்பு கண்டங்கோலி (சச) யவனர் (சரு) புலி [illegible] தொடர்பு [illegible] நிலவில்லிலே (சுஉ) பொழுதளந்தறியுங் (ருரு) கா [illegible] (அசு) தனனல் இனைதெதன்றிசைக்கையினுமே (ருஅ), மங் கையா ([illegible]) திருமணிவிளக்ககாட்டி (சுங) எழினிவாங்கிய பள்ளியிலே சென [illegible] இளையர் சுவளங்கைப்பச் (ஙசு) சுளாயிர் (சஅ) மாட்டப் (சரு) பெருமூதாளர் ஏமஞ்சூழ (ருச) மிலேச்சருழையராக (சுசு) வெண் மணிவீழ்த்திய நடுநாளினும (ரு0) மண்டமர் நசையிற் கண்படைபெறா திருந்து (சுஎ) மற்றைநாட் படைகொண்டுவிரலினைலை (எஎ) வென்று (அகூ) கண்ணிவலந்திருத்திப் (எஅ) பிறர்வேண்டு புலங்கவர்ந்த (கூ0) விச

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ருங.

யத்தாலே வெல்கொடியுயரிக் (௯௧) தூதுபிறக்கொழியப் (௧௦௪) பெருவழியிலே (௯௭) வயிரும் வளையுமார்ப்ப (௯௨) ஈண்டு பெருந்தானையோடே (௯௦) துனைபரி துரக்குஞ் செலவினையுடையராய் வந்தவருடைய (௧௦௨) தேர்பூண்டமா (௧௦௩) ஆலின (௮௧) வென வினைமுடிக்க.

* "செலவிடைப் பழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" என்பதனால் ஆற்றுவித்துப் பிரிதல்வேண்டுமென்றுணர்க.

தொல்காப்பியனார் கருத்திற்கேற்ப நப்பூதனார்செய்யுள் செய்தாரென்றுணர்க. இவ்வாறன்றி ஏனையோர் கூறும்பொருள்கள் இலக்கணத்தோடு பொருந்தாமையுணர்க.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார்மகனார் நப்பூதனார் பாடிய முல்லைப்பாட்டிற்கு மதுரைஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

௧. வண்டடை கண்ணி வளர்சசி வாணெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ—தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

௨. புணையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துணையுந் துணைபடைத் துன்னார் - முனையு
ளடன்முகந்த தானை யவர்வரா முன்னங்
கடன்முகந்து வந்தன்று கார்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௫௪.

முகவுரை.

சென்னை யூனிவர்ஸிடி யாரால் 1908-ம் வருஷத்து, பி. ஏ. பட்டப் பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பட்ட குறிஞ்சிப்பாட்டையும், ஆசிரியர் நச்சினார்க்கினியருரையையும், நூதனமாக எழுதிய விசேடக்குறிப்புக்களையும் இப்போது பதிப்பிக்கலானேன்.

குறிஞ்சிப்பாட்டென்பது, நக்கீரனார்முதலிய

கடைச்சங்கப்புல வர்களால் இயற்றப்பட்டு அவர்களால் தொகுக்கப்பெற்ற பத்துப்பாட் டினுள், எட்டாவதா க உள்ள ஓாகவற்பா ; இஃது உகூக - அடி களை யுடையது. இந்நூலாசிரியர், கபிலரென்பார்.

பத்துப்பாட்டாவன : திருமுருகாற்றுப்படை , பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்பனவாம். இவற்றுள் திருமுருகாற்றுப் படை, சைவத்திருமுறைகளில் கக - ம் திருமுறைப்பிரபந்தவரிசையிற் சேர்க்கப்பெற்றுள்ளது ; மலைபடுகடாம், கூத்தராற்றுப்படையெனவும் வழங்கும் ; நிற்க.

குறிஞ்சிப்பாட்டு, பெருங்குறிஞ்சியெனவும் வழங்கும் ; ஆரிய அரசன்பிரகத்தனுக்குத் தமிழ்ச்சுவையை அறிவுறுத்தற்பொருட்டு இது பாடப்பட்டதென்பர் ; இவ்வரலாற்றால் இந்நூலின் மேம்பாடு கூறாமலே விளங்கும்.

தலைவனைப்பிரிந்துவருந்திய தலைவியினது பலவகையான வேறு பாடுகளைக்கண்டு துன்புற்ற செவிலித்தாய்க்குப் பாங்கி அறத்தொடு நின்றதாக இந்நூல் இயற்றப்பெற்றது.

மலையின் இயல்பைக்கூறுதலில் மிக்க ஆற்றலுடையவரென்று புகழ்பெற்ற கபிலரால் இயற்றப்பட் டமையின், இதில் ஏனைநூல்களிற் காணப்படாத மலைவளங்கள் மிக அறியலாகும்.

உரையின் இறுதியிலுள்ள வினைமுடி பால்,

இப்பாட்டின்பொருட் சுருக்கம் விளங்கும்.

விளங்க எழுதவேண்டியவற்றைச் சிலகாரணங்களால் நான் எழுதக்கூடவில்லை; அக்குற்றத்தை விவேகிகள் பொறுத்திடுவார்களென்று நம்புகிறேன்.

சென்னை,
13—7—08.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

இந்நூலாசிரியராகிய

கபிலர் வரலாறு.

இவர்பிறந்தவூர், பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூர்; இது, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் உ௭-வதாகிய ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடலிலுள்ள, "நீதிமா மதுரை நீழ *னெட்டிலை யிருப்பை யென்றோர், காதல்கூர் பனுவல் பாடுங் கபில னார் பிறந்தமூதூர், சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துலங்கக் காட்டும், வேதநா யகனார் வாழும் வியன்றிரு வாதவூரால்" என்னும் ௩-ம் திருவிருத்தத்தால் வெளியாகின்றது.

இவர் அந்தணவருணத்தினர்; புறநானூறு, ௨௦௦.—"யானே, பரிசிலன் மன்னு மந்தணன்", ௨௦௧.—"

யானே, தந்தை தோழ னிவனென் மகளி, ரந்தணன் புலவன் கொண்டுவந் தனனே " எனத் தம்மைப்புலப்படுத்தற்காக இவர்கூறியசெய்யுட்களும், கஉ௬.—" புல னழுக் கற்ற வந்த ணாளன் " என மாறோகத்து நப்பசலையார் இவ னைப் பாராட்டிக்கூறியசெய்யுளும் இதனைப்புலப்படுத்தும்.

வேள்பாரியினுடைய உயிர்நண்பரும் அவனுடைய அவைக் களத்துப்புலவருமாக இவர்விளங்கினர்; தமிழ்நாட்டுமூவேந்தரும் அழுக்காறுற்று அவனைக் கொல்லநினைந்து நால்வகைச்சேனைகளோடும் அவன்மலையைச்சூழ்ந்தகாலையில் அவர்களைச் சிறிதும் மதியாது அவனுடைய அருமைக்குணங்களைப் புலப்படுத்திப் பாடினர், அவ் வருமைச்செய்யுட்கள் புறநானூற்றிற் காணப்படும் ; அவனிறந்த பின்பு, இவர், பிரிவாற்றாது மனமுருகிப் பலசெய்யுட்களாற்புலம்பி, அவன் புதல்வியரை அழைத்துச்சென்று மணஞ்செய்துகொள்ளும் படி இருங்கோவேள், விச்சிக்கோனென்பவர்களைவேண்டி மறுத் தமைகண்டு அவர்களைவெறுத்துப் பின்பு அம்மகளிரைப் பார்ப்பார்ப் படுத்துத் தம்முடைய நட்புக்கடனைக்கழித்தனர்.

செல்வக் கடுங்கோவாழியாதனென்னும் சேரவரசன்மீது பதிற் றுப்பத்திலுள்ள எ - ம் பத்தைப்பாடி நூறாயிரம்பொற்காசும் அவன்

* "நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ, வாடா தாயிற் பீடுடைப் பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலை, பரதர் மனைதொறு முணங்குஞ், செந்தலை யிறவின் சிரோய்க் கும்மே".—இச்செய்யுள் தமிழ்நாவலர்சரிதையிற்கண்டது.

ச க பி ல ர் வ ர லா று.

ஒருமலைமீதேறிக் கண்டுகொடுத்தநாடும் பரிசிலாகப்பெற்றவர் இவர்; இஃது, அந்நூலில் எ - ம் பத்தின் பதிகத்தாலும், அந்நூல் அரு - ம் பாடலிலுள்ள, "கபிலன் பெற்ற வூரினும் பலவே" என்பதனாலும் விளங்குகின்றது.

இவருடையசெய்யுட்கள் மிக்க இனிமையையுடையன; பழைய வுரைகளில் உதாரணமாகக்காட்டப்படும், 'கபிலரதுபாட்டு' என்னும் தொடர்மொழியே இதனை வலியுறுத்தும்.

இவரருளிச்செய்தனவாக உசஅ - பாடல்கள் இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றுள், அகவற்பாக்கள் உ0எ: [நற். உ0; குறு. உகூ; ஐங். க00; பதிற். க0; அகநா. கரு; புறநா. ௩0; குறிஞ். க; "நெட்டிலைபிருப்பை" என்பது-க.] வெண்பா சஉ: [திருவள்ளுவமாலையிலுள்ள, "தினையளவு" என்பது க; இன்னாநாற்பதி லுள்ள பாடல் சக.]

இவரியற்றியபாடல்களை உற்றுநோக்குகையில், இவர் குறிஞ்சித்திணையில் மிகப்பயின்றவரென்றும் அதன்வளங்களை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவரென்றும் அவை விளக்குகின்றன.

மேற்கூறிய அகவற்பாக்கள் உ0எ - ல் குறிஞ்சிததிணையைச்சார் ந்தவை கடுடு.

இவருடையவாக்கில் விநாயகக்கடவுள், முருகக்கடவுள், சிவ பெருமான், பலதேவர், திருமால் இவர்களுடைய துதிகள் வந்திருக் கின்றன. இதனல், இவர், சமயக்கோட்பாட்டி ற் பாரதம்பாடியபெருந் தேவனைரப் போன்றவராக எண்ணப்படுகிறார்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என் னும் முத்தொகுதி நூல்களிலும் இவருடையபாடல்களும் நூல்களும் கலந்திருத்தல் இவரது பெருமையை விளக்குகின்றது.

பதிற்றுப்பத்து, அடு-" அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய, மறம்புரி கொள்கை வயுங்குசெந நாவி, னுவலை கூராக் கவலையி னெ ஞ்சி, னனவிற் பாடிய நல்லிசைக், கபிலன்" எனப் பேருங்குன்றூர் கிழாரும், புறநானூறு, டுங - " வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் " எனப் பொருந்திலிளங்கீரனரும், கஉசு - " புலனழுக் கற்ற வந்த ணாள, னிரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன் ", களச - " பொய்யா நாவிற் கபிலன்" என மாறோ கத்து நப்பசலையாரும் பாடியவற்றைப்பார்க்கையில் இவருடைய

மனம்வாக்குக்காயங்களின் தூய்மையும் அறம்புரிகொள்கையும் பெரு ம்புலமையும் அன்புடைமையும் நட்பின்பெருமையும் நன்குவிளங்கு கின்றன.

இவராற்பாடப்பட்டோர் : — அஃதை, இருங்கோவேள், சேர மான்செல்வக்கடுங்கோவாழியாதன், நள்ளி, மலையமான் திருமுடிக் காரி, விச்சிக்கோன், வேள்பாரி, வையாவிக்கோப்பெரும்பேகன், மலையனென்பவர்கள்.

கொல்லிமலை, பறம்புநாடு, பறம்புமலை, முள்ளூர்மலை, முள்ளூர்க் கானமென்பவைகள் இவராற் பாராட்டப் பெற்றிருத்தலின், அவை கள் இவர்காலத்தில் விளக்கமுற்றிருந்தனவென்றும் இவர் பழகிய இடங்களென்றும் தெரிகின்றன.

நட்பு, வண்மை, நன்றிமறவாமை முதலியவை இவருடைய செய்யுட்களிற் பரக்கக் காணலாகும்.

பழைய இலக்கணவுரைகளில், 'கபிலபரணர்' என்றுவழங்குகிற தொகைநிலைத்தொடரால், பரணரென்பவருக்கும் திருவாலவாயுடை யார் திருவிளையாடற் புராணத்திலவந்துள்ள, " பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக் காட னென்போன் " (உ0. க) என்னும் திரு விருத்தத்தால் இடைக்காடருக்கும் சிறந்தநட்பினராக இவர்

எண் ணப்படுகிறார். இவர்வேறு ; தொகை நூல்களிற் காணப்படும் தோல் கபிலரென்பவர் வேறு.

கக - ம் திருமுறையில் வந்துள்ள மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதியென்னும் பிரபந்தங்கள் மூன்றையும் அருளிச்செய்த கபிலதேவநாயனாரென்பவர் இவரேயென்று பெரியோர் கூறுவர்.

மேற்கூறிய திருவிளையாடற்புராணத்தில், இடைக்காடன் பிணக் குத்தீர்த்த திருவிளையாடல், கக - ம் திருவிருத்தத்தில், "ஏனைபந் தாதி சொன்னவன் கபிலன்" எனச்சிவபெருமான் கட்டளையிட்டருளியதாக வந்திருத்தல் காண்க.

இந்நூல் உரையாசிரியராகிய

நச்சினார்க்கினியர் வரலாறு.

விருத்தம்.

எவனுலவாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்

எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.

இந்நூலின் உரையாசிரியராகிய ஆசிரியர் நச்சினார்க்கினியர், பாண்டிவளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லா நூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னராதல், " வண்டிமிர் சோலை மதுரா புரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத் துவாச, னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூய ஞான நிறைந்த சிவச் சுடர், தானே யாகிய தன்மை யாளன் " என்னும் உரைச்சிறப்புப் பாயிரத்தால் விளங்கும்.
சிவஸ்தலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்', 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெழுத்தொருமொழிக்கும் உதாரணமாக, இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமரபில், " ஓரெழுத்தொருமொழி " என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலானும், சைவசமயத்துச் சிறந்தநூல்களாகிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய விலக்கணப்

பொருள்களுக்கன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள்கொண்ட சிலவிடங் களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், நாமகளிலம்பகத்து "மேக ம்மீன்ற " என்னும் ௩௩௩-ம் செய்யுளில், ' போகம்மீன்ற புண்ணி யன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப் படையுரையிற் காட்டிய சில நயங்களாலும், உரைச்சிறப்புப்பாயிரத் தில், " தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மையாளன் " எனக்கூறப்பெற்றதனாலும், மற்றுஞ் சிலவற்றாலும் இவர் சைவசமயியாதல் நன்கு வெளியாகும்.

நச்சினார்க்கினியர்வரலாறு.

ள

இவ்வுரையாசிரியர், பத்துப்பாட்டினுள் இந்நூலுக்கன்றி மற்ற

நூல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் சீவகசிந் தாமணிக்கும் குறுந்தொகையிற் பேராசிரியர் பொருளெழுதாதொழி ந்த இருபது செய்யுட்களுக்கும் உரைசெய்தருளினர். இன்னும் சில நூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேரா சிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்றமையாலும், இவர் அந் நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவரு டைய உரைச்சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப் படாமையாலும் அவைகள் இங்கே எழுதப்பட்டில.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரை யெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டா முறை ஓருரையை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக் கொண்டார்க ளென்று சைனர் கூறுகின்றனர்.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப் பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் கியவை அ0; அவை வருமாறு:—

விளங்

க. அகத்தியம்.

உ. அகநானூறு.

௩. அணியியல்.

௪. அவிநயம்.

௫. ஆசாரக்கோவை.

௬. இராமாயணவெண்பா.

௭. இறையனாரகப்பொருள்.

௮. ஏலாதி.

௯. ஐங்குறுநூறு.

௧௦. ஐந்திணையெழுபது.

௧௧. ஐந்திணையைம்பது

௧௨. ஔவையார்பாடல்.

௧௩. கடகண்டு.

௧௪. கலித்தொகை.

௧௫. களவழிநாற்பது.

௧௬. காக்கைபாடினியம்.

௧௭. கார்நாற்பது

௧௮. காரைக்காற்பேயார்பாடல்.

௧௯. குணநாற்பது.

௨௦. குறிஞ்சிப்பாட்டு.

௨௧. குறுந்தொகை.

௨௨. கூத்தநூல்.

௨௩. கைந்நிலை.

௨௪. கொன்றைவேந்தன்.

௨௫. சிலப்பதிகாரம்.

௨௬. சிறுகாக்கைபாடினியம்.

௨௭. சிறுகுரீஇயுரை.

௨௮. சிறுபஞ்சமூலம்.

௨௯. சிறுபாணாற்றுப்படை.

௩0. சினேந்திரமாலை.

௩௧. சீவகசிந்தாமணி.

௩௨. தகடூர்யாத்திரை.

௩௩. தந்திரவாக்கியம்.

௩௪. திணைமாலைநூற்றைம்பது.

௩௫. திணைமொழியைம்பது.

௩௬. திரிகடுகம்.

௩௭. திருக்குறள்.

௩௮. திருக்கோவையார்.

௩௯. திருப்பாட்டு.

௪0. திருமுருகாற்றுப்படை.

௪௧. திருவாசகம்.

௪௨. திருவாய்மொழி.

௪௩. திருவுலாப்புறம்.

௪௪. தொல்காப்பியம்.

௪௫. நற்றிணைநானூறு.

௪௬. நாடகநூல்.

௪௭. நாலடியார்.

௪௮. நெடுநல்வாடை.

௪௯. பட்டினப்பாலை.

௫௦. பதிற்றுப்பத்து.

௫௧. பரிபாடல்.

௫௨. பல்காப்பியம்.

௫௩. பல்காயம்.

௫௪. பழமொழி.

௫௫. பன்னிருபடலம்.

௫௬. பாரதவெண்பா.

௫௭. புறநானூறு [ஜி.

௫௮. புறப்பொருள்வெண்பாமா

௫௯. பூதத்தாரவையடக்கு.

௬0. பூதபுராணம்.

௬௧. பெருங்கதை.

௬௨. பெரும்பாணாற்றுப்படை.

௬௩. பெரும்பொருள்விளக்கம்.

௬௪. பொய்கையார்முதலாயி
னோர்செய்த அந்தாதி.

௬௫. பொருநராற்றுப்படை.

௬௬. மணிமேகலை.

௬௭. மதுரைக்காஞ்சி.

௬௮. மலைபடுகடாம்.

௬௯. மாபுராணம்.

௭௰. முத்தொள்ளாயிரம்.

௭௧. முதுமொழிக்காஞ்சி.

௭௨. முல்லைப்பாட்டு.

௭௩. மூதுரை.

௭௪. மோதிரப்பாட்டு.

௭௫. யாப்பருங்கலம்.

௭௬. யாழ்நூல்.

௭௭. வசைக்கடம்.

௭௮. வசைக்கூத்து

௭௯. வளையாபதி.

௮0. விளக்கத்தார்கூத்து.

தொல்காப்பியவுரை முதலியவற்றில் வேதம், வேதாங்கம் முத லிய பல நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரிய

விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்ற மையாலும் பிறவாற்றாலும் இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சி யுள்ளவராகச்சொல்லுவதுடன் பலவகையான கலைகளிலும் பயிற்சி யுடையவரென்று சொல்லுதற்கும் இடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளையா சிரியர்முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், ரென்று தெரிகின்றது.

அவர்களுக்கு இவர் காலத்தினாற்பிற்பட்டவ

"பாரத்தொல்காப்பியமும்", "தொல்காபபியத்தில்",

" பாற்

கடல்போல", "பச்சைமாலனைய" என்னுமுதற்குறிப்பையுடைய பாடல்கள், பண்டைக்காலத்தாரால் இயற்றப்பெற்று இவருடைய உரைச்சிறப்புப்பாயிரங்களாக வழங்குகின்றன.

அமிழ்தினுமினிய தமிழ்மடவால் செய் அருந்தவத்தின் பெரும் பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

குறிஞ்சிப்பாட்டு.

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப

நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறுலிற் பழியு முண்டோ
வாற்றின் *வாரா ராயினு மாற்ற
வேனை யுலகத்து மியைவதா னமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றானாச் சிறுமைய ளிவளுந் தேம்பு
மிகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
விருபே ரச்சமோ டியானு மாற்றலேன்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்

---

* வாராதாயினுமென்றும் பாடம்.

க0 குறிஞ்சிப்பாட்டு.

வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணா
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை

முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குர
னற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
யெற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மீமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி
யுரவுக் கதிர்தெறூஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட
முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேறொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ
யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப்
பொழிந்தென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீ
ரவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்

பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
யுள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிள

குறிஞ்சிப்பாட்டு.

கக

மெரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடச
மெருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை

குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்த
ருழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்க
மீங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
* யடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரந்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
யாரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மரக்குவித் தன்ன † பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்
புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்

* அடம் பெனவும் பாடம். † பாரம் புழகெனவும் பாடம்.

வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பரியா
.... கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
யெரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
வெண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
யீரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
யணிமிகு வரிமிஞி றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத் தாயித ழலரி
யந்தொடை யொருகாழ் வளைஇச் செந்தீ
யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்

தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவி லேந்தி யம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
யியலணிப் பொலிந்த வீகை வான்கழ
றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரி
னுரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளு
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
கிளையாக் கண்ண வளைகுபு நெரிதா
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா
மிடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படா

குறிஞ்சிப்பாட்டு.

மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெம்
மலமா லாயிடை வெரூஉத லஞ்சி
மெல்லிய வினிய மேவரக் கிளந்தெம்
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி

யசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையி ரிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதவி னல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரென
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவி ழலரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெறு வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குர லவித்தெஞ்
சொல்லற் பாணி நின்றன னாக
விருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையோர் நோக்கின் மனையோண் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்தி மகிழ்சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்
திரும்புன கிழத்தலிற் சிறுமை நோனா
தாவுற ழுஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா னுடல்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக

விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை * தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்

---

* தெளிர்ப்பவெனவும் பாடம்.

கஅ குறிஞ்சிப்பாட்டு.

சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்,
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திண்ணிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎ
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
யருங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசைஇயல் யாவது
மஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்

தென்முக நோக்கி நக்கன னந்நிலை
நாணு மூட்டு நண்ணுவழி படைதர
வொய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
யாக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவி
னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேற
னீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
யரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிற்றூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையா மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிற
லுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயிற் பலருணப்

குறிஞ்சிப்பாட்டு.

பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற
வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி யந்தி

யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவைமிசை ஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேர்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ
நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி தீரக் கூறித்
துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று

குறிஞ்சிப்பாட்டு.

மிரவரன் மாலைய னேவரு தோறுங்
காவலர் கடுகினுங் கதனாய் குரைப்பினு
நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெறாஅன் பெயரினு முனிய லுறாஅ
னிளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றன்னிலை *தீர்ந்தன்று மிலனே கொன்னூர்

மாய வரவி னியல்புநினைஇத் தேற்றி
நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா
வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்க
ணாகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுக் கலுழுமா லிவளே கங்கு
லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
துருமுஞ் சூரு மிரைதே ரரவமு
மொடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமு
நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடாக முடையவா லெனவே.

இதன்பொருள்.

இதற்குக் குறிஞ்சியென்று பெயர்கூறினர்; இயற்கைப்புணர்ச்சியும் பின்னர்நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுதலின். அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக்குரியனவேகூறுதலானும் அப்பெயர் கூறினர். †"அறத்தொடு நிற்குங் காலத் தன்றி, யறத்தியன் மரபில டோழி யென்ப." என்பதனால், தோழி அறத்தொடு நிற்குங்காலம்வந்து செவிலிக்கு அறத்தொடுநின்றவழி அதற்கிலக்கணங்கூறிய †"எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல், கூறுத லுசாத லேதீடு தலைப்பா,

டுண்மை செப்புங் கிளவி யொடு தொகைஇ, யவ்வேழு வகைய
வென்மனூர் புலவர்.'' என்னுஞ் சூத் திரத்தேழனுள்,
கூறுதலுசாதலொழிந்த ஆறுங்கூறி அறத்தொடுநிற்கின்று
ளென்றுணர்க.

---

* திரிந்தன்றுமிலனென்றும் பாடம்.

† தொல் - பொருளியல், கஉ, கக.

(குறிப்பு). இதற்கு - இப்பாட்டிற்கு. இயற்கைப்புணர்ச்சி - தெய்வத்தா லுளதாவது ; இயற்கை, தெய்வம், ஊழ் என்பன ஒருபொருட்சொற்கள். பின் னர் நிகழ்வன, இடந்தலைப்பாடு முதலியன. ஐந்துதிணைகளுள், குறிஞ்சிக் குரிய ஒழுக்கம் புணர்ச்சியென்பது அகப்பொருள் நூற்றுணிபு ; இஃது உரிப்பொருளெனப்படும். முதல் - முதற்பொருள் ; அது நிலமும் பொழுது மென இரண்டுவகையினையுடையது ; பொழுது, சிறுபொழுதும் பெரும் பொழுதுமென இருவகைப்படும். அவற்றுள், குறிஞ்சிக்குரியநிலம், மலையும் மலையைச்சார்ந்த இடமும் ; இதற்குரிய சிறுபொழுது, யாமம் ; பெரும் பொழுது, கூதிர். கரு - கருப்பொருள்கள் ; அவை தெய்வமுதலியன ; அவற் றுள், குறிஞ்சிக்குத்தெய்வம், முருகக்கடவுள், உணவு, ஐவனநெல்லும் தினை யும் மூங்கிலரிசியும் ; மிருகம், புலியும் யானையும் கரடியும் பன்றியும் ; மரம், அகிலும் ஆரமும் தேக்கும் திமிசும் வேங்கையும் ; புள், கிளியும் மயிலும் ; பறை, முருகியமும் தொண்டகப்பறையும் ; செய்யுந்தொழில்,

தேனழித்த லும் கிழங்ககழ்தலும் தினைமுதலியன விளைத்தலும் கிளிகடிதலும் ; யாழ், குறிஞ்சியாழ் ; பூ, காந்தளும் வேங்கையும் சுனைக்குவளையும் ; நீர், அருவியும் சுனையும் ; ஊர், சிறுகுடியும் குறிச்சியும். ' அறத்தொடுநிற்கும் ' என்ற சூத்திரத்திற்குப்பொருள் : அறத்தொடுநிற்கும் காலத்து அன்றி - தலைவி இக்களவினைத் தமர்க்கு அறிவுறுத்தல் வேண்டுமென்னும் கருத்தினளாகிய காலத்திலல்லாமல், தோழி அறத்து இயல் மரபு இலள் என்ப - தோழி அறத்தின் இயல் பாகத் தமர்க்குக்கூறு முறைமையில்லாள் என்றுகூறுவர் புலவர் எ - று. அறத்தொடு நிற்றல் - உண்மைகூறுதல். ' எளித்தலேத்தல ' என்னும் சூத்திரத்திற்குப் பொருள் : எளித்தல் - தலைவனை எளியனாகக்கூறுதல், ஏத்தல் - அவனை உயர்த்துக்கூறுதல், வேட்கைஉரைத்தல் - அவனது விருப்பத்தை மிகுத்துரைத்தல், கூறுதலுசாதல் - தலைவியுந்தோழியும் வெறியாட்டிடத்தும் பிரிவிடத்தும் சில கூறுதற்கண்ணே தாமும் பிறருடனேயும் வினவுதல், ஏதீடு - ஒருவன் களிறும் புலியும் நாயும்போல்வனகாத்து எம்மைக்கைக் கொண்டானெனவும் பூத்தந்தான் தழைதந்தானெனவும் இவை முதலிய காரணமிட்டுணர்த்தல், தலைப்பாடு - இருவரும் தாமே எதிர்ப்பட்டார் யான் அறிந்திலேனெனக்கூறுதல், உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ - என்ற அவ்வாறனையும் படைத்துமொழியாது பட்டாங்குகூறுதலென்னும் கிளவியோடேகூட்டி, அ எழுவகைய என்மனார் புலவர் - அத்தன்மையவாகிய எழுகூற்றினையுடைய, அறத்தொடுநிற்றலென்று கூறுவர் புலவர். எளித்தல் முதலியஆறும் இப்பாட்டினுள் பின்னர்க்காணப்படும்.

1. அன்னாய் வாழி - தாயே வாழ்வாயாக ;

(கு - பு.) அன்னையென்றது செவிலித்தாயை.

* [வேண் டன்னை:] அன்னை வேண்டு - தாயே யான்கூறுகின்றவார்த்தையை விரும்புவாயாக ;

---

* அடியெண்கள் குறிக்கப்படாதவற்றை அவ்வவற்றின் முன்வரிகளின் முதலிலுள்ள எண்களைச்சார்ந்தவையென்று அறிந்துகொள்க.

௧அ குறிஞ்சிப்பாட்டு.

1 - 12. [ஒண்ணுத, லொலிமென் கூந்தலென் றோழி மேனி, விற லிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ, யகலு ளாங்க ணறியுநர் வினாயும், பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும், வேறுபல் லுருவிற் கடவுட் பேணி, நறையும் விரையு மோச்சியு மலவுற், றெய்யா மையலை நீயும் வருந்துதி, நற்கவின் றொலை யவு நறுந்தோ ணெகிழவும், புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு, முட்கரந் துறையு முய்யா வரும்படர், செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்:]

ஒண்ணுதல் ஒலி மெல் கூந்தல் விறல் மேனி என் தோழி உள் கரந்து உறையும் உய்யா அரு படர் - ஒள்ளிய நுதலினையும் தழைக்கும் மெல்லிய மயிரினையும் பிறர் நிறத்தினைவென்ற வெற்றியினையுடைய நிறத்தினையு முடைய என்னுடையதோழி தன்மனத்துள்ளே மறைத்திருக்கும் தன்னுயி ரைத் தான் தாங்கியிராமைக்குக் காரணமாகிய ஆற்றுதற்கரிய நினைவு,

(கு - பு.) என்னுடையதோழி என்றது தலைவியை. மனத்துள்ளே மறைத் திருக்கும் நினைவென்க.

இழை நெகிழ்த்த வீவு அரு கடு நோய் செப்பல் வன்மையின் யான் செறித்து - தான் அணிந்தகலங்களை நெகிழப்பண்ணின மருந்துகளாற்கெடுத் தற்கரிய கடிய நோய் நினக்குச்சொல்லுதற்கு எளிதன்றி வலியதன்மையை யுடைமையினாலே யான் அதனை என்னுள்ளேயடக்கி,

நல் கவின் தொலையவும் நறு தோள் நெகிழவும் புள் பிறர் அறியவும் புலம்பு வந்து அலைப்பவும் கடவலின் - அவளுடைய

நன்ருகிய அழகுகெட வும் நறியதோள்மெலியவும் வளைகழலுதலைப் பிறரறியவும் தனிமை மேன் மேலேவந்து வருத்தவும் நினக்கு அறிவுருமற் செலுத்துகையினலே,

நீயும் அலவுற்று அகலுள் ஆங்கண் அறியுநர் வினய் - நீயும் அலம்வந்து அகன்றவிடத்தையுடைய ஊரிடத்துக் கட்டினலும் கழங்கினலும் எண்ணி யறிவாரைவினவி (அவர் தெய்வத்தான்வந்த வருத்தமென்றலின்),

(கு - பு.) கட்டு - சிறுமுறத்திற்பரப்பிய நெல்லிற்பார்க்கும் ஒருவகைக் குறி; இங்ஙனம் குறிபார்ப்பவள் கட்டுவித்தி யென்னப்படுவாள். இதனைத் திருக்கோவையார் உ அ௬-ம் செய்யுளாலும் அதனுரையாலும், "கட்டுவிச்சி கட்டேறிச், சீரார் சுளகிற் சிலநெற் பிடித்தெறியா, வேரா விதிர்விதிரா மெய் சிலிராக் கைமோவாப், பேரா யிரமுடையா னென்ருள்" (சிறிய திருமடல், உ௦ - உஉ) என்பதனலும் உணர்க. கழங்கு - கழற்சிக்காய்; இதனலும் குறி பார்ப்பது மரபு.

வினயுமென்றவிடத்தும்மையைப் பேணியென்பதன் பின்னே கூட்டுக.

வேறு உருவின் பல் கடவுள் நறையும் விரையும் ஓச்சியும் பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும் பேணியும் - வேறுபட்ட வடிவினையுடைய பலதெய்வங்களைத் தூபங்களும் சந்தனமுதலியனவுங்கொடுத்தும் பரவியும் வணங்கியும் கலந்தபூக்களைச்சிதறியும் வழிபட்டும் (அதனற்றீராமையின்),

பேணியுமென்னுமும்மை சிறப்பு; எனைய - எண்ணும்மை.

எய்யா மையலை வருந்துதி - இந்நோயையறியாத மயக்கத்தையுடையை யாய் வருந்தாநின்ருய்;

என் தோழி படர் இழை நெகிழ்த்த நோய் நினக்குச் செப்பல் வன்மை யின் யான் செறித்துத் தொலையவும் நெகிழவும் அறியவும் அலைப்பவும் கடவ லின் நீயும் அலவுற்றவினுய்க் கடவுளைப்பேணியும் எய்யாமையலையாய் வருந் துதியெனமுடிக்க.

13 - 4. [முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை, நேர்வருங் குனாய கலங்கெடிற் புணரும்:] அத்துணை முத்தினும் மணியினும் பொன் னினும் நேர் வரும் கலம் கெடின் புணரும்—அவ்வளவாகிய முத்தானும் மாணிக்கத்தானும் பொன்னுனும் பொருந்துதல்வரும் பூண் கெட்டதாயிற் பின்னும்வந்துகூடும்; (அதுபோலன்றி,)

முத்துமுதலியவற்றிற்குக்கூறிய இலக்கணங்களை அத்துணையென்முர். குனாய - அசை.

(கு - பு.) அத்துணையென்பது நெஞ்சறிசுட்டு.

15 - 8. [சால்பும் வியப்பு மியல்புங் குன்றின், மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்த, லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை, யெளிய வென்னுர் தொன் மருங் கறிஞர்:]

சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் மாசு அற கழீஇ வயங்கு புகழ் அந்நிலை நிறுத்தல் - தத்தங்குலத்திற்கேற்ற குணங்களினமைதியும் மேம்பாடும் ஒழுக்கமும் பழையதன்மைகெட்டாற் பிறந்த இழுக்கைப் போம்படி கழுவி விளங்கும்புகழை முன்புபோலே நிற்கும்படிநிறுத்தல்.

(கு - பு.) இழுக்கு - தவறுதல்.

தொல் மருங்கு அறிஞர் ஆசு அறு காட்சி ஐயர்க்கும் எளிய என்னுர்- பழைதாகிய நூலையறிவார் குற்றமற்ற அறிவினையுடைய தெய்வஇருடிகளுக் கும் எளியகாரியமென்னுர்;

* "ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியும்" என்முராகலின், ஐயர் தேவரா கார்.

19 - 20. [மாதரு மடனு மோராங்குத் தணப்ப, நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி :]

நெடு தேர் எந்தை அரு கடி நீவி - நெடியதேரையுடைய என் தந்தை யது அரிய காவலைக் கடந்து,

மாதரும் மடனும் ஓராங்கு தணப்ப - இருமுதுகுரவரும் தமக்கியைந் தோர்க்குக் கொடுப்போமென்றிருக்கின்றகாதலும் எனதுமடனும் சேரப் போக,

(கு - பு.) இருமுதுகுரவர் - தாய் தந்தையர்.

21. [இருவே மாய்ந்த மன்ற லிதுவென :] இது இருவேம் ஆய்ந்த மன்றல் என - இந்தமணம் தலைவனும் யானும் பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகியநிலையாற்பிறந்த கந்தருவமணமென்று,

(கு - பு.) பெருமையும் உரனும் தலைவன்குணங்கள் ; அச்சமும் நாணும் தலைவியின் குணங்கள்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், இ.

22. நாம் அறிவுறலின் பழியும் உண்டோ - நாம் யாய்க்கு அறிவுறுத்த லான் நமக்குப் புகழேயன்றி வருவதோர் பழியுமுண்டோ ? அஃதில்லை ;

உம்மை எச்சவும்மை.

தாகலின்.

ஓகாரம் எதிர்மறை ; இது மறைநூல் விதித்த

(கு - பு .) இது - கந்தருவமணம் ; அது மறைநூல்விதி யென்பதை, " மறையோர் தேத்து மன்ற லெட்டனுட், டுறையமை

நல்யாழ்த் துணைமை யோ ரில்பே" (தொல் - களவியல், க.) என்பதனுலும், "காந்தர்ப்ப மென் பதுண்டாற் காதலிற் கலந்த சிந்தை, மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்" (கம்ப - சூர்ப்பநகை. ருச). என்பதனுலுமுணர்க.

23. ஆற்றின் வாரார் ஆயினும் - இங்ஙனம் அறத்தொடுநின்றபின் தலைவர்க்கே நம்மையடைய நேர்ந்திலாராயினும்,

ஆற்ற - நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க,

24. [ஏனை யுலகத்து மியைவதா னமக்கென :] நமக்கு ஏனை உலகத் தும் இயைவதால் என - நமக்கு மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதொன்று யிருந்ததெனக்கூறி,

25 - 6. [மானமர் நோக்கங் கலங்கிக் கையற், றாளுச் சிறுமைய ளிவ ளுந் தேம்பும் :] ஆளு சிறுமையள் மான் அமர் நோக்கம் கலங்கி கையற்று இவளும் தேம்பும் - ஆற்றுந்தன்மைத்தல்லாத நோயினையுடையளாய் மான் நோக்கமமர்ந்த நோக்கமின்றி மையலேக்கங்கொண்டு வினையொழிந்து அயர் ந்து இவளுமெலியும்;

இவளும் (உசு), கலங்கிக் (உரு) கெடிற் புணரும் (கச) ; அதுபோலன் றிச் சால்பு முதலியனகுன்றின் (கரு) நிறுத்தல் (கசு) எளியவென்னுர் (கஅ) ஆதலின், இஃது இருவேமாய்ந்தமன்றலென (உக) அறிவுருலிற் பழியு மில்லை (உஉ); ஆற்றின்வாராராயினும் ஆற்ற (உங) ஏனையுலகத்தும் இயை வதாலெனக்கூறி (உச) மெலியு (உசு) மெனமுடிக்க.

* "வரைவிடை வைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந் தோன் முட்டினும், உரையெனத் தோழிக் குரைத்தற்

கண்ணும், தானே கூறுங் காலமு முளவே.'' என்பதனுள், 'தானே கூறுங் காலமு முளவே ' என்றதனால் உடையளாயெனத் தலைவிகூற்றினைக் கொண்டுகூறினாளென் றுணர்க. † " செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செப்பு, மறிவு மருமையும் பெண்பா லான'' என்பதனால், மறை புலப்படுத்தலாகாதென்றாராயினும், ‡ " உற்றுழி யல்லது சொல்ல லின்மையி, னப்பொருள் வேட்கை கிழவியி னுணர்ப.'' என்பதனான் மறைபுலப்படுத்தலுமாமென வழுவமைத்தலின், இங்ஙனம் தலைவிகூறினாள்.

இதனால் தோழி தலைப்பாடுகூறினாள்.

(கு - பு.) " வரைவிடைவைத்த '' என்னும் சூத்திரத்திற்குப் பொருள் :

வரைவு இடைவைத்த காலத்து வருந்தினும் - வரைவுமாட்சிமைப்படா நிற்க

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உக.
† ,, ,, பொருளியல் கடு.
‡ ,, ,, ,, கசு.

குறிஞ்சிப்பாட்டு.

உக

வும் பொருள்காரணத்தான் அதற்கு இடயீடாகத் தலைவன்நீக்கிவைத்துப் பிரிந்தகாலத்துத் தலைவி வருத்த மெய்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும் - வரையாதொழுகுந் தலைவன் ஒருஞான்று தோழியையானும் ஆயத்தையானும் செவிலியையானும் கதுமென எதிர்ப்பினும், உளாயென தோழிக்கு உரைத்தற்கண்ணும் - அயலார் வரைவிற்கு மணமுரசு இயம்பிய

வழியானும் பிறஇடத்தானும் தோழிக்கு இன்னவாறு கூட்டம் நிகழ்ந்ததெ னக் கூறி அதனை நமரறியக் கூறல்வேண்டுமென்றும் தலைவற்கு நம்வருத்த மறியக் கூறல்வேண்டுமென்றும் கூறுதற்கண்ணும், தானேகூறும் காலமும் உள - இம்மூன்று பகுதியினும் தோழியினுவாமல் தலைவிதானே கூறும்காலமு முள. எ - று " செறிவு " என்னும் சூத்திரத்திற்குப் பொருள் : செறிவும் - அடக்கமும், நிறையும் - மறைபுலப்படாமல் நிறுத்துமுள்ளமும், செம்மை யும் - மனக்கோட்டமின்மையும், செப்பும் - களவின்கட் செய்யத் தகுவன கூறலும், அறிவும் - நன்மை பயப்பனவும் தீமைபயப்பனவும் அறிவித்தலும், அருமையும் - உள்ளக்கருத்தறிதலருமையும், பெண்பாலான - இவையெல் லாம் பெண்பாற்குக் காரணங்கள் எ - று. " உற்றுழி " என்னும் சூத்திரத் திற்குப் பொருள் : உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின் - தலைவியர்க்கு

எதமுற்ற இடத்தன்றித் தோழியர் மறைபுலப் படுத்துக் கூறுராதலின், அப் பொருள் வேட்கை கிழவியின் உணர்ப - அம்மறை புலப்படுத்துதல் விருப் பத்தைத் தலைவியர் காரணத்தால் தோழியர் உணர்வர். எ - று. தலைப்பாடு கூறல் - தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டார் ; யான் அறிந்திலே னெனத் தோழிகூறல்.

27 - 8. இகல் மீ கடவும் இரு பெரு வேந்தர் வினை இடை நின்ற சான்றோர்போல - மாறுபாட்டின்மிகுதியைச்செலுத்தும் இருவராகிய பெரிய அரசரைச் சந்துசெய்விக்குந் தொழிலிடத்தேநின்ற அறிவுடையோரைப் போல,

(கு - பு.) சந்து செய்வித்தல் - சந்தி செய்வித்தல்.

29. இரு பெரு அச்சமோடு யானும் ஆற்றலேன் - நினக்கும் இவள் வருத்தத்திற்கும் அஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் வருந்தாநின் றேன்,

(கு - பு.) நினக்கென்றது செவிலியை.

30. கொடுப்பின் நன்கு உடைமையும் - கொடுத்தபின்பு எல்லாவற்றானும் நன்றாகி முடிதலையும்,

குடி நிரல் உடைமையும் - ஒருகுடியாகாமல் இரண்டுகுடியும் ஒத்தது டைமையையும்,

(கு - பு.) இரண்டுகுடி - தலைவன்குடி தலைவிகுடி.

31. வண்ணமும் - குணத்தையும்,

துணையும் - சுற்றத்து உதவிகளையும்,

பொரீஇ எண்ணாது - ஒப்பித்துப்பார்த்துப் பின்னரும் பலருடன் உசா வாதே,

*" செந்துறை, வண்ணப் பகுதி வரைவின்றாங்கே " என்பதனால் வண் ணம் குணமென்றுணர்க.

32. எமியேம் துணிந்த ஏமம் சால் அருவினை - நம்மையின்றித் தமி யேமாய் யாங்களே துணிந்த உயிர்க்குப் பாதுகாவலமைந்த செய்தற்கரிய இக் கந்தருவமணம்,

தானும் புணர்ச்சிக்குப்பின் உடம்படுதலின்,

எமியேந் துணிந்தவென்றாள்.

33. நிகழ்ந்த வண்ணம் - முன்புநடந்தபடியை,

33 - 4. நீ நனி உணர செப்பல் ஆன்றிசின் - நீமிகவுமறியும்படி சொல்லுதலையமைந்தேன்;

சினவாதீமோ - அதுகேட்டுச் சினவாதிருப்பாயாக;

35. நெல் கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை - நெல்லைத் தன்னிடத்தேகொண்ட நெடிய மூங்கிலைத்தின்றற்கு மேனோக்கிநின்றுவருந்தின யானை (அவ்வருத்தந்தீரும்படி),

36. முத்து ஆர் மருப்பின் இறங்கு கை கடுப்ப - முத்துநிறைந்த கொம்பிலே ஏறட்டு நான்ற கையையொப்ப,

37 - 8. துய் தலை வாங்கிய புனிறு தீர் பெரு குரல் நல் கோள் சிறு தினை படு புள் ஓப்பி - துய்யையுடைய தலைவளைந்த ஈன்றணிமைதீர்ந்த பெரியகதிர்களை நன்றாகத் தன்னிடத்தேகொள்ளுதலையுடைய சிறிய தினையிலே வீழ்கின்ற கிளிகளையோட்டி,

துய் - இளைதானபருவத்துப் பஞ்சுதனைபோன்றிருப்பது. கடுப்ப வளைந்தவென்க.

39. எல் பட வருதியர் என நீ விடுத்தலின் - பகற்பொழுதுகழியாநிற்க நீர்வருவீராகவென்றுகூறி நீ போகவிடுகையினாலே (யாங்களும்போய்),

வருதியர் - வியங்கோண்முற்று.

(கு - பு.) மகளிரைத் தினைப்புனங்காத்தற்கு அனுப்பல் மலைவாணர் வழக்கம்.

40 - 41. கலி கெழு மீமிசை சேணோன் இழைத்த புலி அஞ்சு இதணம் - ஆரவாரம் பொருந்தின மரத்தினுச்சியிலே இராக்காலம் ஆகாயத்திருப் போன்பண்ணின புலி அஞ்சுகைக்குக்காரணமான பரண்,

† "சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி" என்றார் பிறரும்.

41 - 2. [ஏறி யவண, சாரற் சூரற் றகைபெற வலந்த:] அவண

சாரல் சூரல் தகை பெற வலந்த இதணம் ஏறி - அவ்விடத்தனவாகிய மலைப்பக்கத் துப்பிரம்பாலே அழகுபெறத் தெற்றின இதணத்தேயேறி,

இனிச சூரலாலே பிணித்த தழலென்றுமாம். சூரல் - சூரற்கொடியுமாம்.

(கு - பு.) தெற்றின - பின்னின.

43. தழலும் - தழலும்,

தழலாவது கையாற்சுற்றினகாலத்துத் தன்னிடத்துப் பிறக்குமோசை யாற் கிளி முதலியவற்றை ஓட்டுங்கருவி; கவணென்பாருமுளர்.

---

* தொல். புறத்திணையியல், உஎ. † குறுந்தொகை, கஙo.

தட்டையும் - தட்டையும்,

தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்கண்ணுள்ளாகநறுக்கிப் பலவாகப்

பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி.

குளிரும் - குளிரும்,

குளிராவது இவைபோல்வதோர் கிளிகடிகருவி.

பிறவும் - ஏனையவும்,

பிறவென்றது கவண்முதலியவற்றை.

44. கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி - தழலும் தட்டையும் குளிரும் பிறவுமாகிய கிளியோட்டு முறைமையினையுடையவற்றை முறையே முறை யே கையிலேவாங்கி ஓட்டி,

45. உரவு கதிர் தெறாஉம் உருப்பு அவிர் அமயத்து -

மிருதலையுடைய ஞாயிற்றின்கிரணங்கள்சுடும் வெம்மைவிளங்குகின்ற பொழுதிலே, ஊழூழ் வாங்கி (சச) யென்க.

46. விசும்பு ஆடு பறவை வீழ் பதி படர - ஆகாயத்தேபறக்கும் பறவைகளெல்லாம் தாம்விரும்புஞ்சேக்கைகளிலே செல்லும்படியாக,

(கு - பு.) சேக்கை - கூடு.

47 - 53. [நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண், டகலிரு வானத்து வீசுவளி கலாவலின், முரசதிர்ந் தன்ன வின்குரலேற்றொடு, நிரை செல னிவப்பிற் கொண்மூ மயங்கி, யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ, யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின், மின்மயங்கு கருவிய:]

நிறை இரு பௌவம் குறைபட முகந்துகொண்டு முரசு அதிர்ந்து அன்ன இன்குரல் ஏற்றொடு நிரை செலல் நிவப்பின் கொண்மூ - நிறைந்த கரிய கடலைக் குறையுண்டாம்படி முகந்துகொண்டு முரசு சிறிதுமுழங்கினாற் போன்ற இனியகுரலையுடைய உருமேற்றோடே நிரைத்துச்செல்லுதலையுடைய ஒக்கத்தினையுடையமேகம்,

இன்னிசை முரசின் சுடர் பூண் சேஎய் ஒன்னார்க்கு ஏந்திய இலங்கு இலை எஃகின் மின் மயங்கு கருவிய - இனிய ஓசையையுடைத்தாகிய முரசினையும், ஒளியினையுடைத்தாகிய அணிகலங்களையுமுடையமுருகன் அசுரரைக் கொல்லுமதற்கெடுத்த விளங்குகின்ற இலைத்தொழிலையுடைய வேல் போல மின்னுமயங்குகின்ற தொகுதிகளையுடையவாய்,

அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின் மயங்கி—ஐம்பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயத்திடத்தே வீசுகின்ற காற்றுத் தன்னிடத்தே கூடுகையினாலே நிரைத்தநிரைபோய்க் கலங்கி,

கல் மிசை பொழிந்தென - மலைமேலே பெய்தவாக,

கொண்மூக் (௩0) கருவியவாய் (௫௨) மயங்கிப் (௩0) பறவை படிப்பட ரப் (௪௬) பொழிந்தென (௫௨) என்க.

54 - 6. அண்ணல் நெடு கோட்டு இழிதரு தெண்ணீர் அவிர் துகில்
புரையும் அ வெள் அருவி தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி - தலை வனுடைய நெடிய மலைச்சிகரத்தினின்றுங் குதிக்கின்ற தெளிந்த நீரையுடைய

விளங்குகின்ற வெள்ளிய துகிலையொக்கும் அழகிய வெள்ளிதாகிய அருவி யிலே நீங்குதலில்லாத விருப்பையுடையேமாய் அமையாமல் விளையாடி,

அண்ணன்மலையில் அருவியெனவே நிலமொன்றென்றாள்.

(கு - பு.) அண்ணலென்றது, தலைவனை.

57 - 8. [பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி, நளிபடு சிலம் பில்:] நளி படு சிலம்பில் பளிங்கு சொரிவு அன்ன பாய் சுனை குடைவுழி - செறிவுண்டான மலையிடத்துப் பளிங்கைக்கரைத்துச் சொரிந்துவைத்தாற் போன்ற பரந்தசுனையைக் குடைந்துவிளையாடுகின்றவிடத்தே,

(கு - பு.) பளிங்கு, நீர்நிலைக்குவமை.

பாயம் பாடி - எங்கள்மனத்துக்கு விருப்பமானவற்றைப் பாடி,

(கு - பு.) பாயம்-மனவிருப்பம் ; இஃது இப்பொருளில் வருதலை, "பன் மயிர்ப் பிணவொடு பாயம் போகாது" என்பதனாலுமுணர்க; (பெரும்பா ணாற்றுப்படை, ௱௪௮).

59 - 60. பொன் எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்த எம் பின் இரு கூந்தல் பிழிவனம் துவரி - பொன்னிலேயழுத்தின நீலமணிபோலே சிறிய முதுகிடத்தே தாழ்ந்துகிடந்த எம்முடைய பின்னுதலையுடைய கரியகூந்தலை நீரைப் பிழிந்து ஈரத்தைப்புலர்த்தி,

61. உள் அகம் சிவந்த கண்ணேம் - உள்ளாகிய இடமெல்லாம் சிவந்த கண்ணேமாய்,

61 - 2. வள் இதழ் ஒள் செங்காந்தள் - பெரிய இதழையுடைய ஒள்ளிய சிவந்த கோடற்பூ,

ஆம்பல் அனிச்சம் - ஆம்பற்பூ அனிச்சப்பூ,

63. தண் கயம் குவளை - குளிர்ந்த குளத்திற்பூத்த செங்கழுநீர்ப்பூ,

குறிஞ்சி - குறிஞ்சிப்பூ,

வெட்சி - வெட்சிப்பூ,

64. செங்கொடுவேரி - செங்கொடுவேரிப்பூ,

(கு - பு) கொடுவேரி - ஒருசெடி.

* தேமா - தேமாம்பூ,

மணிச்சிகை - செம்மணிப்பூ,

65. உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ் - தனக்கு உரித்தாக நாறும் விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கிற்பூ,

கூவிளம் - வில்லப்பூ,

(கு - பு:) வில்லம் - வில்வம்.

66. எரி புரை எறுழம் - நெருப்பையொத்த எறுழம்பூ,

சுள்ளி - மராமரப்பூ,

கூவிரம் - கூவிரப்பூ,

* 'தேமா' என்பதுமுதல் 'பெருமூங்கிற்பூ' என்பதிறுதியாகவுள்ளவை கள், தருமபுரவாதீனமடத்திலிருந்து கிடைத்த ஒரு பழைய ஏட்டுப்புத்தகத் தில் மட்டும் இருந்தன.

67. வடவனம் - வடவனப்பூ,

வாகை - வாகைப்பூ,

வால் பூ குடசம் - வெள்ளிய பூவினையுடைய வெட்பாலைப்பூ,

68. எருவை - பஞ்சாய்க்கோரை,

கொறுக்கச்சியுமாம்.

(கு - பு.) பஞ்சாய்க்கோரை நாருக்கு முரியது; "பஞ்சாய்க் கோரை பல் லிற் சவட்டிப், புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி" என்னும் பெரும்பாணாற்றுப்படையாலுணர்க. கொறுக்கச்சி - கொறுக்காந்தட்டை.

செருவிளை - வெண்காக்கணம்பூ,

மணி பூ கருவிளை - நீலமணிபோலும் பூக்களையுடைய கருவிளம்பூ,

69. பயினி - பயினிப்பூ,

வானி - வானிப்பூ,

பல் இணர் குரவம் - பல இதழ்களையுடைய குரவம்பூ,

(கு - பு.) குரவம் - குராமரம்.

70. பசும்பிடி - பச்சிலைப்பூ,

(கு - பு.) பச்சிலையென்று ஒருவகை மரத்திற்கும் ஒருவகைக்

கொடிக் கும் பெயருண்டு.

வகுளம் - மகிழம்பூ,

பல் இணர் காயா - பல கொத்துக்களையுடைய காயாம்பூ,

71. விரி மலர் ஆவிரை - விரிந்த பூக்களையுடைய ஆவிரம்பூ,

வேரல் - சிறுமூங்கிற்பூ,

சூரல் - சூரைப்பூ,

72. குரீஇப்பூளை - சிறுபூளை,

குறுநறுங்கண்ணி - குன்றிப்பூ,

(கு - பு.) குன்றியென்று ஒருவகைமரத்திற்கும் ஒருவகைக் கொடிக் கும் பெயர்; குன்றி - குன்றிமணி.

73. குருகிலை - முருக்கிலை,

மருதம் - மருதம்பூ,

விரி பூ கோங்கம் - விரிந்த பூக்களையுடைய கோங்கம்பூ,

74. போங்கம் - மஞ்சாடிப்பூ,

திலகம் - மஞ்சாடிமரத்தின்பூ,

தேன் கமழ் பாதிரி - தேனாறும் பாதிரிப்பூ,

75. செருந்தி - செருந்திப்பூ,

அதிரல் - புனலிப்பூ,

பெரு தண் சண்பகம் - பெரிய குளிர்ந்த சண்பகப்பூ,

76. கரந்தை - நாறுகரந்தை,

குளவி - காட்டுமல்லிகைப்பூ,

கடி கமழ் கலி மா - விரைகமழும் தழைத்த மாம்பூ,

77. தில்லை - தில்லைப்பூ,

பாலே - பாலேப்பூ,
கல் இவர் முல்லே - கல்லிலேபடர்ந்த முல்லேப்பூ,
78. குல்லே - கஞ்சங்குல்லேப்பூ,
(கு - பு.) கஞ்சங்குல்லே - கஞ்சா.
பிடவம் - பிடவம்பூ,
சிறுமாரோடம் - செங்கருங்காலிப்பூ,
79. வாழை - வாழைப்பூ,
வள்ளி - வள்ளிப்பூ,
(கு - பு.) வள்ளி - வள்ளிக்கொடி.
நீள் நறு நெய்தல் - நீண்ட நறிய நெய்தற்பூ,
80- தாழை - தெங்கிற்பாளே,
(கு - பு.) தாழை - தெங்கு.
தளவம் - செம்முல்லேப்பூ,
முள் தாள் தாமரை - முள்ளேயுடைத்தாகிய தாளேயுடைய தாமரைப்பூ,
81. ஞாழல் - ஞாழற்பூ,
(கு - பு.) ஞாழல் - புலிநகக்கொன்றை.
மௌவல் - மௌவற்பூ,
(கு - பு.) மௌவல் - ஒருவகைமுல்லே.
நறு தண் கொகுடி - நறிய குளிர்ந்த கொகுடிப்பூ,
(கு - பு) கொகுடி - ஒருவகைமுல்லே.
82. சேடல் - பவழக்கான் மல்லிகைப்பூ,
செம்மல் - சாதிப்பூ,
சிறுசெங்குரலி - கருந்தாமக்கொடிப்பூ,
83. கோடல் - வெண்கோடற்பூ,

கைதை - தாழம்பூ,

கொங்கு முதிர் நறு வழை - தாதுமுதிர்ந்த நறிய சுரபுன்னைப்பூ,

84. காஞ்சி - காஞ்சிப்பூ,

மணி குலை கள் கமழ் நெய்தல் - நீலமணிபோலுங் கொத்துக்களையுடைய தேனாறும் கருங்குவளை,

85. பாங்கர் - ஓமை,

(கு - பு.) ஓமை - ஒருவகைமரம்.

மராஅம் - மரவம்பூ,

(கு - பு.) மராஅம் - கடம்பமரம்.

பல் பூ தணக்கம் - பல பூக்களையுடைய தணக்கம்பூ,

86. ஈங்கை - இண்டம்பூ,

இலவம் - இலவம்பூ,

தூங்கு இணர் கொன்றை - தூங்குகின்ற பூங்கொத்தினையுடைய கொன்றைப்பூ,

87. அடும்பு - அடும்பம்பூ,

அமர் ஆத்தி - பொருந்தின ஆத்திப்பூ,

நெடு கொடி அவரை - நெடிய கொடியினையுடைய அவரைப்பூ,

88. பகன்றை - பகன்றைப்பூ,

இது சிவதை; *"பகன்றைப்பூ வுறநீண்ட பாசிலைத் தாமரை" என்புழி, வெள்ளிவட்டில் உவமைகோடலின், இது கிலுகிலுப்பையன்ற

பலாசம் - பலாசம்பூ,

(கு - பு.) பலாசம் - புரசு.

பல் பூ பிண்டி - பல பூக்களையுடைய அசோகம்பூ,

89. வஞ்சி - வஞ்சிப்பூ,

பித்திகம் - பிச்சிப்பூ,

சிந்துவாரம் - கருநொச்சிப்பூ,

90. தும்பை - தும்பைப்பூ,

துழாஅய் - திருத்துழாய்ப்பூ,

சுடர் பூ தோன்றி - விளக்குப்போலும் பூவினையுடைய தோன்றிப்பூ,

91. நந்தி - நந்தியாவட்டப்பூ,

நறவம் - நறைக்கொடி,

நறு புன்னாகம் - நறிய புன்னாகப்பூ.

இது புன்னையின் விசேடம்.

92. பாரம் - பருத்திப்பூ,

பீரம் - பீர்க்கம்பூ,

பைங் குருக்கத்தி - பசிய குருக்கத்திப்பூ,

93. ஆரம் - சந்தனப்பூ,

காழ்வை - அகிற்பூ,

கடி இரு புன்னை - மணத்தையுடைய பெரிய புன்னைப்பூ,

94. நரந்தம் - நாரத்தம்பூ,

நாகம் - நாகப்பூ,

(கு - பு.) நாகம் - ஒருவகைமரம்.

நள்ளிருணாறி - இருவாட்சிப்பூ,

(கு - பு.) இருவாட்சியென்பது நள்ளிருணாறியென்பதன் பொருளாக இருத்தலின், இருள்வாசியென்று இருத்தல் கூடுமோவென்று ஊகிக்கப்படுகின்றது.

95. மா இரு குருந்தும் - கரிய பெரிய குருந்தம்பூவும்,

வேங்கையும் - வேங்கைப்பூவும்,

95 - 7. [பிறவு, மரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன், மாலங்குடைய] அங்குமால் உடைய அரக்கு விரித்தன்ன பிறவும் பரேரம்புழகுடன்—அச்சார விடத்துத் தம்மில் மயக்கமுடையவாய்ச் சாதிலிங்கத்தைப்பரப்பினாற்போன்ற பிறபூக்களையும் பருத்த அழகினையுடைய † மலையெருக்கம் பூவுடனே,

* கலித்தொகை, மருதம், அ.
† மலைவெருக்கம் பூவெனவும் பிரதிபேதமுண்டு.

குறிஞ்சிப்பாட்டு.

பரேரம்புழகு - செம்பூவுமாம்; புனமுருங்கையுமென்பர்.

(கு - பு.) புழகு - மலையெருக்கம் பூவென்பதை, " அழகாவென்றிப் புழகா
வன்பர்க் கரியாயன்பர்க் கெளியாய் " என்னும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தாலுணர்க; (௩௬ - ம் திருவிளையாடல், கஉ). புனமுருங்கை - முள் முருங்கை.

97. மலிவனம் மறுகி - பூக்களிடத்தே மனவேட்கைமிக்குப் பலகாலுந் திரிந்து பறித்து,

98. வான் கண் கழீஇய அகல் அறை குவைஇ - மழை பெய்து தன் னிடத்தைக் கழுவித் தூய்தாக்கின அகன்ற பாறையிலே குவித்து,

கண்ணேமாய் (௬க) மலிவனமறுகிப் (௬எ) பரேரம்புழகுடனே (௬௬) ஒண்செங்காந்தள் (௬உ) முதலியவற்றையும் பிறவற்றையும் (௬௫) பாறையிலேகுவித்து (௬அ) எனமுடிக்க.

செங்காந்தள் முதலியவற்றிற் கெல்லாம் இரண்டாமுருபும் உம்மையும் விரிக்க. குருந்தும், வேங்கையும், பிறவுமென்ற மூன்றற்கும் உருபுவிரிக்க.

(கு - பு.) உருபு - இரண்டாம்வேற்றுமையுருபு.

99. புள் ஆர் இயத்த - பறவைகளின் ஓசையாகிய நிறைந்த வாச்சியங்களையுடையவாகிய,

விலங்கு மலை சிலம்பின் - ஒன்றற்கொன்று குறுக்கிட்டுக்கிடக்கின்ற மலைப்பக்கத்திற்புனத்தே,

100 - 101. வள் உயிர் தெள் விளி இடையிடை பயிற்றி கிள்ளை ஒப்பியும் - பெரிய ஓசையினையுடைய தெளிந்தசொற்களை நடுவேநடுவேசொல்லிக் கிளியை ஓட்டுதலைச் செய்தும் தழைதைஇ (௧0௨) யென்க.

சொல் — கிளியையோட்டுஞ்சொல். கிளியையுமோப்பியெனச் சிறப்பும்மை.

(கு - பு.) இப்பாட்டில் 62-ம் அடி முதலியவற்றில் குறிஞ்சிக்கும் கூதிர்க்காலத்துக்கும் உரிய பூக்களேயன்றி வேறுநிலத்திற்கும் வேறுகாலத்திற்கு முரியபூக்கள் மயங்கிவந்தமை, "எந்நிலமருங்கிற் பூவும்புள்ளும், மந்நிலம் பொழுதொடு வாராவாயினும், வந்தநிலத்தின் பயத்தவாகும்" என்னும் சூத்திரத்தா லமையும். (தொல். அகத்திணை. ௧௯). இச்சூத்திரத்தின் விசேடவுரையில், 'கபிலர்பாடிய பெருங்குறிஞ்சியில் வரையின்றிப் பூமயங்கியவாறு காண்க' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலும் இதனை வலியுறுத்துகின்றது.

கிளை இதழ் பரியா - புறவிதழ்களை வாங்கிப்போகட்டு,

(கு - பு.) 'பறியா' என்று பாடங்கொள்ளுதல் நேரென்றுதோற்று கிறது.

102. கொய் தழை தைஇ - கொய்த தழையைக்கட்டி உடுத்து, கொய்தழை - மிக்கவிடங்களை நறுக்கின தழை,

(கு - பு.) தொடுத்ததழையை ஆடையாக உடுத்திக்கொள்ளுதல் குறிஞ்சி நிலமகளிர்மரபு; இதனைப் புறநானூறு, கககூ, உசஅ-ம் செய்யுட்களாலுணர்க.

103 - 4. பல் வேறு உருவின் வனப்பு அமை கோதை எம் மெல் இரு

முச்சி கவின் பெற கட்டி - பலவாய் வேறுபட்ட நிறத்தையுடைய அழகமைந்த மாலைகளை எம்முடைய மெல்லிய கரியமுடியிலே அழகுபெறச்சுற்றி,

(கு - பு.) மாலைவகைபல வென்பதை, "கோக்குங் கோவைகளு, மிண்டைச் சொருக்குந் தாமமுட னிசைக்கும் வாசமாலைகளுந்,தண்டிற்கட்டுங் கண் ணிகளுந் தாளிற்பிணிக்கும் பிணையல்களு, நுண்டாதிறைக்குந் தொடையல்க ளுஞ் சமைத்து" (பெரிய. முருகநாயனார். க) என்பதனாலுணர்க. சீவகசிந்தா மணி 2656, 2919 - ம்பாடல் முதலியவற்றையும்பார்க்க.

105 - 6. எரி அவிர் உருவின் அம் குழை செயலை தாது படு தண் நிழல் இருந்தனமாக - நெருப்புப்போல விளங்கும் நிறத்தையுடைய அழகிய தளிரையுடைய அசோகினது தாதுவிழுகின்ற குளிர்ந்த நிழலிலே இருந்த அளவிலே,

(கு - பு.) அசோகந்தளிர் நெருப்புப்போன்ற சிவப்புடையதென்பதை, "செந்தீ, யொண்பூம் பிண்டி" (118 - 9)

என்பதனுலுமுணர்க.

107. [எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ் :]

சுரிவளர் நறுங்காழ், பின்னே கூட்டுதும்.

(கு - பு.) 'நறுங்காழ்' என்பது கக0 - ஆம் அடியுரையிலும், 'சுரிவளர்' என்பது ககஉ - ம் அடியுரையிலும் கூட்டப்பட்டிருத்தல் காண்க.

எண்ணெய் நீவிய நலம்பெறு சென்னி (ககசு) - பலகாலும் எண்ணெய் வார்த்த நன்மையைப்பெற்ற தலையிற் குஞ்சி (ககஉ) யென்க.

108. தண் நறு தகரம் கமழ மண்ணி - குளிர்ந்த நறிய மயிர்ச்சந்தனத்தை நாறும்படியாகப்பூசி,

109. ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா - அந்த ஈரம்புலரும்படி விரலாலலைத்துப் புலர்த்துதற்றொழிலாலே பிணிப்பைவிடுத்து,

110. நறு காழ் (க0எ) காழ் அகில் அம் புகை கொளீஇ - அதனை நறிய கரிய வயிரத்தினையுடைய அகிலினது அழகிய புகையூட்டுகையினுலே,

இதில் நறுங்காழ் கூட்டிற்று.

(கு - பு.) காழ் - கருமை, வயிரம், 'நறுங்காழ்' என்பது, 107-ம் அடியி லுள்ளது.

110 - 11. யாழ் இசை அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்ப தேங்கலந்து - யாழோசையினது அழகுமிகுகின்ற பாட்டினையுடைய மிஞிறுகள் ஆரவாரிக்கும்படி அகிலினது நெய் கலந்து,

(கு - பு.) வண்டிசை யாழொலி போலுமென்பதை. "நரம்பி னிம்மென விமிரு, மாதர் வண்டு" (147-8) என்பதனுலும், "அரவ வண்டொடு தேனி னம் யாழ்செயும்", "பாடல்வண் டியாழ்செயும்" (சீவக. 1196, 1207) என் பனவற்ரு லுமுணர்க.

112. [மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்:]

மணி நிறம் கொண்ட சுரி வளர் (க0எ) மா இரு குஞ்சியின் - நீலமணி யினது நிறத்தைத் தன்னிடத்தேகொண்ட

கடைகுழன்றுவளர்ந்தகரியபெரிய மயிரின் கண்ணே,

இதிற் சுரிவளர் கூட்டிற்று.

(கு - பு.) குழன்று - வளைந்து.

மண்ணி (க0அ) அவிழாப் (க0௯) புகைகொளுவுகையினாலே (கக0) தேங்கலந்து (ககக) ஒருகாழ்வளைஇ (ககஅ) மணிநிறங்கொண்ட குஞ்சி (ககஉ) யென்க.

113. மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும் - மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் கொம்புகளிற் பூத்தனவும் சுனைகளிற்பூத்தனவுமாகிய,

114. வண்ண வண்ணத்த மலர்- பலநிறங்களையும் பலசாதிகளையுமுடைய மலர்,

பலநிறங்களையும் பலசாதிகளையுமுடையமலரென ஒன்று நிறமும் ஒன்று சாதிவேறுபாடுங் கூறினர்.

(கு - பு.) ஒன்றென்றது, 'வண்ணம்' என்றசொல்லை.

114 - 5. ஆய்பு விரைஇய தண் நறு தொடையல் வெள் போழ் கண்ணி - அம்மலரை ஆராய்ந்துதொடுத்த தண்ணிய நறிய தொடையலினையும் வெள்ளிய தாழைமடலையுடைத்தாகிய கண்ணியினையும்,

(கு - பு) கண்ணி - தலைமேல்முடிக்குமாலை.

116. [நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சி :]

நாம் உற மிலைச்சி - முருகனென்று அச்சமுறும்படி சூடி, குஞ்சியின்கண்ணே (ககஉ) மிலைச்சியென்க.

நலம்பெறுசென்னி - முன்னேகூட்டிற்று.

(கு - பு.) முருகன் குறிஞ்சிக்குரிய தெய்வம். முன்னேயென்றது, கO௭- ஆம் அடியுரையை.

117 - 8. பைங்கால் பித்திகத்து ஆயிதழ் அலரி அம் தொடை ஒருகாழ் வளைஇ - பசிய காம்பினையுடைய பிச்சியினுடைய அழகியஇதழ்களையுடைய பூவைத்தொடுத்த அழகினையுடைய தொடையாகிய ஒருவடத்தைச் சுற்றி,

இஃது அந்திக்காலத்துமலரும் பூவாதலின், அதனைத் தேங்கலந்து (கககை) ஒரு காழ்வளைஇ (ககஅ) மணிநிறங்கொண்டகுஞ்சி (ககஉ) யெனக் குஞ்சிக்குஇயல்பாக்கி முன்னேகூட்டுக.

(கு - பு.) தலைவன்வந்தகாலம் பகற்காலமானமையின் இங்ஙனங் கூறினர்.

118 - 120. [செந்தீ, யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ, யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்ப :] குவவு மொய்ம்பு அலைப்ப செந்தீ ஒள் பூ பிண்டி அம் தளிர் ஒருகாது செரீஇ - திரளுதலையுடைய தோளிலேவீழ்ந்து அலைக்கும்படி சிவந்த நெருப்புப்போலும் ஒள்ளிய பூக்களையுடைய அசோகினது அழகிய தளிரை ஒருகாதிலே செருகி,

120 - 122. சாந்து அருந்தி மைந்து இறைகொண்ட மலர்ந்து ஏந்து

அகலத்து தொன்று படு பூணொடு நறு தார் பொலிய - சந்தனத்தை யுள்ளடக்கி வலிதங்குதல்கொண்ட அகன்றுயர்ந்த மார்பிடத்தே தொன்றுபட்டுவரு

கின்ற பேரணிகலங்களோடே நறியமாலை பொலிவுபெற,

123. செம்பொறிக்கு ஏற்ற - மூன்றுவரியாகிய உத்தமவிலக்கணத் திற்குப் பொருந்தின மார்பு (கஉக) என்க.

(கு - பு.) ஆடவர்களுக்கு மார்பில் மூன்றுவரியிருத்தல் உத்தம இலக் கணமென்பதை, "மார்பிற் செம்பொறி வாங்கிய மொய்ம்பு" (திருமு. (-க0௪- ‍ரு), "மார்பிடை வரியு மூன்றுள", "பொறிகுலாய்க் கிடந்த மார்பிற் புண்ணி யன்" (சீவக. 1462, 1706) என்பவற்றா லுணர்க.

123 - 4. வீங்கு இறை தட கையின் வண்ணம் வரி வில் ஏந்தி அம்பு தெரிந்து - பூணிறுகின முன்கையையுடைய பெரியகையிலே வண்ணத்தை யுடைய வரிந்த வில்லையெடுத்து அம்புகளைத்தெரிந்துபிடித்து,

125. நுண் வினை கச்சை தயக்கு அற கட்டி - நுண்ணிய தொழில் களையுடைய கச்சைக் கட்டினசேலை துளக்கமறக்கட்டி,

(கு - பு.) கச்சு - அரைக்கச்சு. துளக்கம் - அசைதல்.

126 - 7. [இயலணிப் பொலிந்த வீகை வான்கழ, றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ :] ஈகை இயல் அணி பொலிந்த வான்கழல் துயல்வரும் தோறும் திருந்து அடி கலாவ - பொன்னாற்செய்யப்பட்ட பூண்களிற்பொ லிவுபெற்ற நன்றாகிய வீரக்கழல் பெயரும்பொழுதெல்லாம் பிறக்கிடாத அடி யிலே ஏற்றிழிவுசெய்ய,

128 - 9. முனை பாழ் படுக்கும் துன்னரு துப்பின் பகை புறம் கண்ட பல் வேல் இளைஞரின் - பகைப்புலத்தைப் பாழாக்கும் கிட்டுதற்கரிய வலியை யுடைய பகைகளை முதுகுகண்ட பலவேலினையுடைய வீரரைப்போலே,

130 - 131. உரவு சினம் செருக்கி துன்னுதொறும் வெகுளும் முளை வாள் எயிற்ற வள் உகிர் ஞமலி - பரக்கின்ற சினத்தாலே செருக்கித் தம்மே லொன்று நெருங்குந்தோறும் கோபிக்கும் மூங்கில்முளைபோலும் ஒளியை யுடைத்தாகிய பல்லினையுடையவாகிய பெரிய உகிரையுடைய நாய்,

132. கிளையா கண்ண வளைகுபு நெரிதர - இமையாக்கண்களையுடையவாய் எம்மை வளைத்துக்கொண்டு மேலேமேலேவருகையினாலே,

(கு - பு.) கிளைத்தல் - உறவுகொள்ளுதல்.

133 - 4. [நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா, மிடும்பைகூர் மனத்தே மருண்டு புலம் படர :] யாம் நடுங்குவனம் எழுந்து நல் அடி தளர்ந்து இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புலம் படர - யாங்கள் அஞ்சி அவ்விருப்பைக்குலைந்து கடிதிற்செல்லுதலாற்றாது வருத்தமிக்க மனத்தையுடையேமாய் மயங்கி வேற்றுப் புலத்தேறச்செல்லாநிற்க,

(கு - பு.) 'அவ்விருப்பு' என்றது, அசோகின் கீழிருந்ததனை.

135 - 6. மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து ஆ காண் விடையின் அணிபெற வந்து - தனக்குமாறாகியவிடைகளையெல்லாம் பொருதுகெடுத்த மனச்செருக்கினையுடைய தானறியாதநிலத்திற் புதிய ஆவைக் காணும் ஏறுபோலே அழகுபெற வந்து,

வேட்கைமிகுதிகூறுதற்கு வேறுபுலத்து ஆவென்றார்.

இத்துணையும் ஒக்கக்கூறினர்.

(கு - பு.) இங்கேயுள்ள, ' ஒக்கக்கூறினர் ' என்பது. ' ஏத்தல்கூறினர்
அல்லது 'ஒக்கங்கூறினர்' என்றிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

136 - 8. [எம், மலமர லாயிடை வெரூஉத லஞ்சி, மெல்லிய வினிய
மேவரக் கிளந்து :] ஆயிடை எம் அலமரல் வெரூஉதல் அஞ்சி மெல்லிய
இனிய மேவர கிளந்து - யாங்கள்போகின்றபொழுது எம்மனத்திற் சுழற்சி
யாலே வெருவுதற்குத் தானஞ்சி மெல்லியவாய் இனியவாயிருக்கின்ற சொற்
களை எமக்குப்பொருந்துதல்வரச் சொல்லி,

இதனால் ஏதிடுகூறினன்.

138 - 9. எம் ஐம்பால் ஆய் கவின் ஏத்தி - எம் ஐவகைப்பட்ட மயி
ரினையுடைய பலருமாராய்ந்த அழகைப்புகழ்ந்து அசைகின்ற (கசO) இளைய
(கசக) ரென்க.

ஒள் தொடி - ஒள்ளிய தொடியினையும்,

140. அசை, வேறுகூறிற்று.

மெல் சாயல் - மெல்லிய மென்மையினையும்,

அ வாங்கு உந்தி - அழகிய வளைந்த கொப்பூழினையும்,

141. மடம் மதர் மழை கண் இளையீர் - மடப்பத்தையுடைய மதர்த்த குளிர்ந்த கண்ணினையுமுடைய இளையீரே,

141 - 2. இறந்த கெடுதியும் உடையேன் என்றனன் - இவ்விடத்தே போந்த கெடுதிகள் பலவுமுடையேனென்றுகூறினன்;

என்றது - அவை யானை, கலை, பன்றிமுதலியன கெடுத்தனனாக

விஞ யினன்.

(கு - பு.) யானை முதலியவற்றை வினவுதல், வேழம்வினுதல், கலைவி னுதல், பன்றிவினுதலென வழங்கும்.

குஞ்சியின்கண்ணே (௧௧௨) மிலைச்சிச் (௧௧௬) செரீஇப் (௧௧௧) பொலி யக் (௧௨௨) கலாவக் (௧௨௭) கட்டி (௧௨௫) ஏந்தித் தெரிந்து (௧௨௪) விடை யின் அணிபெறவந்து (௧௩௬) தான்கொண்டுவந்த ஞமலி (௧௩௧) நெரிதரு கையினுலே (௧௩௨) எழுந்து தளர்ந்து (௧௩௩) மருண்டு வேறுபுலம்படரா நிற்க (௧௩௪) ஆயிடை (௧௩௭) எம் (௧௩௬) அலமரல் வெரூஉதலஞ்சிக் (௧௩௭) கிளந்து (௧௩௮) ஏத்தி (௧௩௯) இளையீர், இறந்த (௧௪௧) கெடுதியு முடையேயோ வென்றனன் (௧௪௨) னெனக் கூட்டுக.

142 - 3. [அதனெதிர், சொல்லே மாதலி னல்லாந்து கலங்கி:] அல் லாந்து அதன் எதிர் சொல்லேமாதலின் கலங்கி - அவன்கூற்றிற்கு யாங்கள் மகிழ்ந்து அதற்கு மறுமொழி கொடேமாகையினுலே நெஞ்சழிந்து,

144 - 5. [கெடுதியும் விடஉீ ராயி னெம்மொடு, சொல்லலும் பழியோ மெல்லிய லீரென:] மெல்லியலீர் கெடுதியும் விடஉீராயின் எம்மொடு சொல்ல லும் பழியோ என - மெல்லிய இயல்பினையுடையீர், கெட்டனவும் காட்டித் தாரீராயின் எம்முடன் ஒருவார்த்தை சொல்லுதலும் நமக்குப் பழியாமோ வெனச் சொல்லி,

146 - 8. [நைவளம் பழுநிய பாலை வல்லோன், கைகவர் நரம்பி னிம்மென விமிரு, மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த:] நைவளம்

பழுநிய பாலை வல்லோன் கைகவர் நரம்பின் இம்மென இமிரும் மாதர் வண்டொடு நயந்து இறுத்த சுரும்பு - நட்டராகம் முற்றுப்பெற்ற பாலையாழை வாசிக்க வல்லவன் தன்கையாலே வாசித்தநரம்புபோலே இம்மென்னும் ஓசைபட வொலிக்கும் காதலையுடைய வண்டினத்தோடே தன்னிடத்து மணத்தை விரும்பித்தங்கின சுரும்பினங்களை,

(கு - பு.) நட்டராகம் - ஒருவகைப் பண்.

149. தாது அவிழ் அலரி தா சினை பிளந்து - தாதுவிரிந்த பூக்களை யுடைய தழைபரந்ததோர்கொம்பை முறித்து,

150. தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி - தன்னைச் செலுத்து கின்ற பரிக்கோலைக்கைகடந்த மதக்களிறுபோலே வெற்றியுண்டாக ஓட்டி,

தனக்குக்காவலாகிய பெருமையினையும் உரனையும் கைகடந்து வேட்கை மீதூர்ந்து நிற்றலால் தாறடுகளிற்றை உவமங்கூறினர். மதக்களிற்றிற்கு அங்ஙனமோச்சிநிற்றல் இயல்பு.

(கு - பு.) பரிக்கோல் - குத்துக்கோல். தனக்கு - தலைவனுக்கு.

151. கல்லென் சுற்றம் கடு குரல் அவித்து - கல்லென்னும் ஓசைபடக் கத்தும் வேட்டைநாய்களுடைய கடிய குரல்களை அடித்துமாற்றி,

151 - 1. எம் சொல்லல் பாணி நின்றனனாக - யாங்கள் வார்த்தைசொல் லுதலையுடையதோர் காலத்தைப் பார்த்துநின்றானாக,

கெடுதியுமுடையேனென்றனன் ; அதனெதிர் (கசஉ) யாங்கள் சொல் லேமாதலிற் கலங்கி (கசங) மெல்லியலீர், சொல்லலும்பழியோவெனச் சொல்லி (கசங) ஓச்சி (கரு0) அவித்துச் (கருக) சொல்லற்பாணி நின்றன னாக (கருஉ) வெனக் கூட்டுக.

இத்துணையும் வேட்கைகூறினன்.

(கு - பு.) இஃது எளித்தலிலுமடங்கும்.

153 - 4. இருவி வேய்ந்த குறுங்கால் குரம்பை பிணை ஏர்

நோக்கின் மனையோள் மடுப்ப - இனையரிந்த தாளாலே வேய்ந்த குறியகால்களையுடைய குடிலிலிருக்கும் மான்பிணையையொத்த பார்வையினையுடைய மனைவி எடுத்துக்கொடுப்ப,

155 - 6. தேம் பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து சேமம் மடிந்த பொழுதின் - தேனாற்சமைத்த கட்டெளிவையுண்டு மகிழ்ச்சிமிக்குக் காவற்றொழிலை! மறந்தகாலத்தே,

156 - 8. [வாய்மடுத், திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனு, தரவுற

ழுஞ்சிலை கொளீஇ நோய்மிக்கு :]

இரு புனம் வாய்மடுத்து நிழத்தலின் சிறுமை நோனாது நோய் மிக்கு - பெரியபுனத்தை வேழந்தின்று அழித்துவிடுகையினாலே தப்பி நின்றது விளையும் சிறுமையைப்பொறாதே வருத்தமிக்கு,

159. [உரவுச் சினம்]

இ

உரவு சினம் அரவு உறழ் அம் சிலை கொளீஇ - பரக்கின்றசினத்தை யுடைய பாம்பையொத்த அழகினையுடைய வில்லை நாணேற்றி,

உரவுச்சின அரவுற ழுஞ்சிலை கொளீஇ (கருஅ) எனப் பின்னேகூட்டுக.

பாம்பு வடிவிற்கும் கொலைத்தொழிலுக்கு முவமை.

159 - 160. முன்பால் உடல் சினம் செருக்கி கணைவிடுபு - மெய்வலி யோடே கோபித்தலாற்பிறந்த சினத்தாலே மயங்கி அம்பையெய்து,

விடுபு, விகாரம்.

புடையூ - தட்டையைப் புடைத்து,

160 - 161, கானம் கல்லென மடி விடு வீளையர் வெடிபடுத்து எதிர - காடெல்லாம் கல்லென்னுமோசை பிறக்கும்படி வாயைமடித்து விடுகின்ற சீழ்க்கையராய் மிக்கவோசையையுண்டாக்கி அக்களிற்றைப் புனத்தினின் றும் ஓட்டுகையினாலே,

ஆர்த்தெனவும் பாடம்.

(கு - பு.) சீழ்க்கை - நாவினது நுனியை மடித்துச்செய்யும் ஒலி; "நாத் தலைமடிவிளி" (சீவக - 120.)

162 - 5. [கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக, விரும்பிணர்த் தட க்கை யிருநிலஞ் சேர்த்திச், சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு, மையல் வேழ மடங்கலி னெதிர்தர:]

சினம் திகழ் கடாம் செருக்கி மையல் வேழம் - சினம் விளங்குதற்குக் காரணமாகிய மதத்தாலே மனஞ்செருக்கி மயக்கத்தையுடைத்தாகிய யானை,

மரம் கொல்பு - மரங்களை முறித்து,

கார் பெயல் உருமின் பிளிறி - கார்காலத்துமழையின் உருமேறுபோல முழக்கத்தையுண்டாக்கி,

சீர்த்தக இரு பிணர் தட கை இரு நிலம் சேர்த்தி ஒய்யென (கூகூ) மடங்கலின் எதிர்தர - தன்தலைமைக்குத் தக்கதாகக் கரிய சருச்சரையை யுடைத்தாகிய பெரிய கையைச் சுருட்டி நிலத்தேயெறிந்து கடுகக் கூற்றுவனைப்போலே எங்கள்மேலே வருகையிலே,

166 - 8, [உய்விட மறியே மாகி யொய்யெனத், திருந்துகோ லெல் வளை தெழிப்ப நாணுமறந்து, விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்தி:]

ஒய்யென, முன்னேகூட்டிற்று.

உய்விடம் அறியேமாகி விதுப்புறு மனத்தேம் - உயிர்கொண்டு

பிழைப் பதோரிடத்தை ஆண்டு வேறுணோமாகி நடுக்கமுற்ற மனத்தையுடைய யாங்கள்,

நாணு மறந்து திருந்து கோல் எல் வளை தெழிப்ப விரைந்து அவன் பொருந்தி - உயிரினுஞ் சிறந்த நாணைக்காத்தலை மறந்து திருந்திய திரட்சியை யுடைத்தாகிய ஒளியினையுடைய வளையொலிப்ப விரைந்துசென்று அவனைச் சேர்ந்து,

(கு - பு.) "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்
சிக் கற்புச்சிறந்தன்று" (தொல். களவியல், உ௨.)

169. சூர் உறு மஞ்ஞையின் நடுங்க - தெய்வமேறின மயில்போலே நடுங்காநிற்க,

169 - 171. [வார்கோ, லுடுவுறு பகழி வாங்கிக் கடுவிசை, யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின்:] வார் கோல் உடு உறு கடுவிசை பகழி வாங்கி அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின் - நெடிய கோலையுடைய உடு ச்சேர்ந்த கடியவிசையினையுடைய அம்பை நிரம்பவலித்துத் தலைமையினை யுடைய யானையினது அழகியமுகத்தே எய்கையினாலே,

உடு - நாணைக்கொள்ளுமிடம்.

172 - 5. [புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப், புள்ளி வரிநுதல் சிதைய நில்லா, தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவே,

ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்ப:]

புள்ளி வரி நுதல் சிதைய புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து நெடு வேள் அணங்கு உறு மகளிர் ஆடுகளம் கடுப்ப இழிதா - புள்ளியினையும் புகரினையுமுடைய மத்தகம் அழகழியும்படி அம்புபட்டு உருவின புண்களால் உமிழப்படுங்குருதி முகத்தேபரந்து முருகனால் வருத்தமுற்ற மகளிர்க்கு மறி யறுத்தாடுங் களத்திற் குருதி குதிக்குமாறுபோலக் குதிக்கையினாலே,

(கு - பு.) மறி - ஆடு

அயர்ந்து நில்லாது புறங்கொடுத்த பின்னர் - தன்னைமறந்து ஆண்டு நிற்றலாற்றாது முதுகிட்டுபோன பின்பு,

இதனாலும் ஏதீடுகூறினாள்.

(கு - பு.) முன்பு 136 - 8 - ம் அடிகளின் உரையின்பின், 'ஏதீடுகூறி னாள்' என்பது எழுதப்பட்டிருத்தல் காண்க.

'மகளிராடுங்களம் கடப்பமாலைவளைத்தாற்போல மிகவும் கடப்பமாலை வளைத்த' என்பாருமுளர்.

(கு - பு.) கடப்பமாலை, பின்னடிகளில் வந்துள்ளது.

176 - 7. திண் நிலை கடம்பின் திரள் அரை வளை இய துணை அறை மாலையின் கை பிணி விடேம் - திண்ணிய நிலையினையுடைய கடம்பினது திரண்டமுதலைநெருங்கச்சூழ்ந்த மகளிரொழுங்கிற்குஒப்புச்சாற்றுதலையுடைய மாலைபோலே கைகோத்தலை விடேமாய்,

(கு - பு.) "கடம்பு சூடிய கன்னி மாலைபோற், றொடர்ந்து கைவிடாத் தோழிமார்" (சீவக - 990.)

178. நுரை உடை கலுழி பாய்தலின் - யாற்றின் நுரையையுடைய பெருக்கிலே குதிக்கையினாலே,

178 - 9. உரவு திரை அரு கரை வாழையின் நடுங்க - அதனிடத்துப் பரக்கின்ற திரைமோதி இடிகரையினின்ற வாழைபோலே கால்தளர்ந்து பின்னர் ஒழுகினேமாக, அதுகண்டு,

179-181. [பெருந்தகை, யஞ்சி லோதி யசையல் யாவது, மஞ்ச லோம்புநி னணிநல னுகர்கென:] பெருந்தகை அம் சில் ஓதி அசையல் நின் அணி நலன் நுகர்கு யாவதும் அஞ்சல் ஓம்பு என - பெரிய தகுதிப்பாடுடைய

அழகிய சிலவான மயிரினையுடையாய், இங்ஙனம் காறளர்ந்தொழுகாதேயென் றெடுத்து யான் நின் அழகியநலத்தை நுகர்வேன்; நின்னைநீங்குவேனென்று சிறிதும் அஞ்சுதலைப்பரிகரியெனச் சொல்லி,

182. மாசு அறு சுடர் நுதல் நீவி - குற்றமற்ற ஒளியினையுடைய நுதலைத்துடைத்து,

182 - 3. நீடு நினைந்து என் முகம் நோக்கி நக்கனன் - நெடுநாள் இக்கள வொழுக்கம் நிகழவேண்டுமென்று நினைந்து என் முகத்தைப்பார்த்துச் சிரித் தான்;

(கு - பு.) "உரவுச்சினஞ் செருக்கி.........இறந்த கெடுதியு முடையே னென்றனன்" (130 - 42.) என்பவற்றை நாய்காத்தவாற்றிற்கும், "கணை விடுபுடையு........என்முகநோக்கிநக்கனன்" (160 - 183) என்பவற்றைக் களிறுகாத்தவாற்றிற்கும் புனலுள் எடுத்தவாற்றிற்கும் மேற்கோள்களாகக் காட்டினர் நச்சினார்க்கினியர்; (தொல் - பொருளியல். கஅ - சூ. உரை.)

183 - 5. [அந்நிலை, நாணு முட்கு நண்ணுவழி யடைதர, வொய்யெனப் பிரியவும் விடாஅன்:]

அந்நிலே, பின்னே கூட்டிற்று.

நண்ணுவழி நாணும் உட்கும் அடைதர ஒய்யென பிரியவும் விடான் - அங்ஙனம் அவன்நணுகாநின்றவிடத்துத் தனக்கு இயல்பாகிய நாணமும் அச் சமும் அவ்விடத்தேவந்து தோன்றுகையினுலே விரையத் தன்னிடத்து நின் றும் இவள் நீங்கவும் விடானய்,

185 - 6. [கவைஇ, யாக மடைய முயங்கலின்:] அந்நிலே கவைஇ ஆகம் அடைய முயங்கலின் - அங்ஙனம் நின்றநிலேயிலே கையாலேயணைத்து இவள் மார்பு தன்மார்பிலே யொடுங்கும்படி தழுவுகையினுலே,

இதனுல் ஏதீடும் வேட்கையுரைத்தலும் கூறினுள்.

186 - 7. [அவ்வழிப், பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனே:]

பழு மிளகு உக்க பாறை நெடு சுனே - பழுத்த மிளகுசிந்திக்கிடக் கின்ற கற்பாறையிடத்து நீண்டசுனேயிலே,

188. முழு முதல் கொக்கின் தீங்கனி உதிர்ந்தென - பெரிய அடி யினேயுடைய மாவினுடைய இனியபழங்கள் உதிர்ந்தனவாக, (அப்பழத்தா லும்).

189-190. [புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவின், னெகிழ்ந்துகு நறும்ப ழம் விளேந்ததேறல்:]

பலவின் நெகிழ்ந்து உகு நறு பழம் - பலவினுடைய விரிந்துதேன்பரக் கின்ற நறியபழத்தாலும்,

விளேந்த தேறல் - உண்டான கட்டெளிவு,

புள் எறி பிரசமொடு ஈண்டி - நிரம்புதலால் தன்னே நுகர்கின்ற ஈயினேத் தள்ளியுகுத்த தேனுலே வந்து திரளுகையினுலே,

191. நீர் செத்து அயின்ற தோகை - தனக்கு எளிய நீராகக்கருதி அத் தேறலேயுண்ட மயில்,

191-2. [வியலூர்ச், சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி:] சாறு கொள் ஆங்கண் வியல் ஊர் விழவு களம் நந்தி - விழாக்கொள்ளுதற்குரிய அவ்விடங்களையுடைய அகற்சியையுடைய ஊர்களில் விழாக்கொள்ளுதலை யுடைய களத்தே மிக்கு,

ஆங்கணென்றது - கோயில்களை.

193. அரி கூட்டு இன்னியம் கறங்க ஆடும் மகள் - அரித்தெழுகின்ற ஓசையைக் கூட்டுதலையுடைய இனிய வாச்சியங்களொலிப்ப ஆடுகின்றமகள்,

194. கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல் - கழாய்க்கயிற்றிலே ஏறி யாடுகின்ற தாளத்தினால் தான் ஆற்றாது தளருமாறுபோலத் தளருஞ்சாரல்,

(கு - பு.) கழாய் - ஆடுதற்கு நாட்டின மூங்கில்.

தேறலயின்ற தோகை கூத்தாட ஆற்றாது தளருஞ் சாரலையுடைய குன் றென்க.

இதற்கு உள்ளுறையுவமங் கொள்ளுமாறு: - மிளகுக்கபாறை அந்நிலத்து மாக்களுறைகின்ற ஊராகவும், நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும், மாம்பழத் தாலும் பலாப்பழத்தாலும் விளைந்ததேறல் தந்தையாலும் தாயாலுமுளனாகிய தலைவனாகவும், பிரசம் இவரைக்கூட்டின பால்வரை தெய்வமாகவும், அதனை யுண்டமயில் உயர்ந்த தலைவனைத் தன்குலத்திற்கு ஒத்தானாகக்கருதி நுகர்ந்த தலைவியாகவும், அத்தேறலிற்பிறந்த களிப்புக் களவொழுக்கத்தாற்பிறந்த பேரின்பமாகவும், மயில் ஆடவாற்றாத்தன்மை வருந்திக்குறைந்த தன்மையாக வும் உள்ளுறையுவமங்கொள்க.

(கு - பு.) உள்ளுறையுவமம் - ஒரு பொருளை உள்ளுறுத்து அதனைவெ ளிப்படாமற் கூறுமுவமம்; அது,கருப்பொருள்களுள் தெய்வமொழிந்தவற்றை இடமாகக்கொண்டு புலப்படுமென்பர்; இதனை, தொல்காப்பியம், அகத்திணையியல், சஅ -

ம் சூத்திர முதலியவற்றாலும் அவற்றின் உரையாலும் விள ங்க வுணர்க.

195-7. [வரையர மகளிரிற் சாஅய் விழைதக, விண்பொருஞ் சென் னிக் கிளைஇய காந்தட், டண்கம ழலரி தாஅய்:] விண் பொரு சென்னி கிளைஇய காந்தள் தண் கமழ் அலரி வரை அரமகளிரில் சாஅய் விழைதக தாஅய் - விண்ணைத்தீண்டுகின்ற சிகரங்களிலே கிளைத்த செங்காந்தளினு டைய குளிர்ந்த மணக்கின்ற பூக்கள் கீழே வரையரமகளிர் பரந்து விளையாடி தலின் தந்நலம் சிறிது கெட்டு விரும்புதல்தரும்படி கீழேவந்து பரந்து,

197 - 9. நல் பல வம்பு விரி களத்தில் கவின் பெற பொலிந்த குன்று கெழு நாடன் - நன்றாகிய பலவாகிய கச்சுப்பரந்த களம்போலே அழகுபெறப் பொலிவுபெற்ற மலை பொருந்தின நாடன்,

உயர்ந்தநிலத்தேநின்று மணக்கின்ற காந்தள் வரையரமகளிரால் கீழ்நில த்தே பரந்து அவ்விடத்தைக் கச்சுவிரித்தாற்போல அழகுபெறுத்துமென்ற தனுல், நம்மி லுயர்ச்சியையுடைய தலைவன் நமது நல்வினையால் தனதுபெரு மைகள் தாமுமொழிந்து இவ்விடத்தே வந்துகூடி நமக்கும் உயர்ச்சியுனதாக்கி நம்மை அழகுபெறுத்துகின்றானென்று உள்ளுறையுவமமெய்திற்று.

௩௮ குறிஞ்சிப்பாட்டு.

199. எம் விழை தரு பெருவிறல் - எம்மை எப்பொழுதும் விரும்புத லைத்தருகின்ற பெரியவெற்றியையுடையவன்,

200. அவ்வழி (௩அசு) உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு - தான் முயங்குகையினுலே அப்பொழுது இவளுள்ளத்து நிகழுந்தன்மை மேல்வரை ந்துகொண்டு இல்லறநிகழ்த்துதலாயிருக்குமென்று

நினைந்தனனாய் அதனை யுட்கொண்டு,

அவ்வழி இங்கே கூட்டிற்று.

(கு - பு.) 'அவ்வழி' 186 - ம் அடியிலுள்ளது.

201 - 3. [சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி, வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப, மலரத் திறந்த வாயில் பலருண :]

பலர் உண மலர திறந்த வாயில் வளநகர் - பலரும்வந்து உண்ணும்படி அகலக் கதவு திறந்துகிடக்கின்ற வாசலையுடைய வளநகர்,

மிடா சொன்றி வருநர்க்கு வரையா சாறு அயர்ந்து அன்ன வளநகர் பொற்ப - மிடாச்சோற்றை வருவார்க்கெல்லாம் வரையாமலிடுகின்ற விழாக் கொண்டாடினாற் போன்ற செல்வத்தையுடைய அகம் பொலிவுபெறும்படி,

முன்புள்ள இயல்புகூறிற்று,

204. பை நிணம் ஒழுகிய நெய் மலி அடிசில் - பசுத்த நிணமொழுகின நெய்மிக்க அடிசிலை நீ இடுகையினாலே,

205 - 6. வசை இல் வான் திணை புரையோர் கடும்பொடு விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் - குற்றமில்லாத உயர்ந்தகுலத்திற்பிறந்த உயர்ந்தோர் தமதுசுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசிலை,

206. பெருந்தகை - பெரிய தகைமைப்பாடுடையவன்,

207 - 8. நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு அறம் புணை யாக தேற்றி - நீயிடுகையினாலே யானுண்டலும் உயர்ந்ததென்றுசொல்லி அப்பொழுது இல்லறம் தங்களைக்கரையேற்றுவதாகத் தெளிவித்து,

ஒடு, ஆலாக்குக.

208 - 210. பிறங்கு மலை மீமிசை கடவுள் வாழ்த்தி

கைதொழுது எமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி - பெரியமலையில்மிகஉயர்ந்தவிடத்தே யுறைகின்ற முருகனையும் வாழ்த்தி வணங்கி அவன்முன்னே இவள் மயக்க முறுதற்குக் காரணமான வஞ்சினத்தை உண்மையால்தெளிவித்து,

வஞ்சினம் - பிரியின் அறனல்லதுசெய்தேனுவேனென்னுமொழி. முன் தேற்றுதலின், எமுறுவஞ்சினமென்றார்.

(கு - பு.) முன்தேற்று - முதலில் தேற்றுவது.

211. அம் தீங்தெண்ணீர் குடித்தலின் நெஞ்சு அமர்ந்து - அம்மலையில் அழகிய இனிய அருவிநீரை அவன்குடிக்கையினாலே இவள்நெஞ்சு சூளுற விலே பொருந்தி,

நீர்குடித்தலும் ஒருசூளுறவென்று கொள்க.

நெஞ்சமைந்தென் றும்பாடம்

212 - 4. [அருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி, வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும், பூமலி சோலை யப்பகல் கழிப்பி :] வான் உரி உறையுள்

வயங்கியோர் அவாவும் அரு விடர் அமைந்த பூமலி சோலை களிறு தரு புணர்ச்சி அப்பகல் கழிப்பி - ஆகாயத்திடத்தே தமக்குரிய இருப்பினையுடைய விளங்கிய தேவர்விரும்பும்அரிய முழைஞ்சுகளினிடத்தேபொருந்தின பூமிக்க சோலையிலே களிறுகூட்டின கூட்டத்தை அன்றைப்பகற்பொழுதெல்லாம் போக்கி,

உரிய உறையுள், விகாரம்.

உண்மைசெப்புங்கிளவி கூறினள்.

215 - 6. [எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப், பல்கதிர்

மண்டிலங் கல் சேர்பு மறைய :] பல் கதிர் மண்டிலம் ஏழ் ஊர்பு எல்லை செல்ல இறைஞ்சி கல் சேர்பு மறைய - பலகிரணங்களையுடைய ஞாயிறு எழுகுதிரைபூண்ட தே ரையேறிப் பகற்பொழுது போம்படி தாழ்ந்து அத்தகிரியைச்சேர்ந்து மறை கையினுலே,

217. மான் கணம் மாமுதல் தெவிட்ட - மான்திரள் மரத்தடிகளிலே திரள,

அசையிடுதலுமாம்.

217 - 8. ஆன் கணம் கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர - பசு வினுடையதிரள் கன்றுகளையழைக்குங் குரலையுடையவாய் மன்றுகள்நிறை யப் புகுதலைச்செய்ய,

219 - 220. ஏங்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில் ஓங்கு இரு பெண்ணை அகமடல் அகவ - ஊதுகின்ற கொம்புபோன்ற ஓசையையுடைய வளைந்த வாயையுடைய அன்றில் உயரும் பெரியபனையில் உள்மடலிலே யிருந்து பேட்டையழைக்க,

221. பாம்பு மணி உமிழ - பாம்பு தான்மேய்தல் காரணமாகத் தன்னி டத்துமாணிக்கத்தை ஈன,

221 - 2. [பல்வயிற் கோவலர், ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற:] கோவலர் பல்வயின் ஆம்பல் அம் தீங்குழல் தெள் விளி பயிற்ற - இடையர் பலவிடங்களினின்று ஆம்பலென்னும் பண்ணினையுடைய அழகிய இனிய குழலிடத்துத் தெளிந்த ஓசையைப் பலகாலுமெழுப்ப,

223. ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட - ஆம்பலினது அழகியஇதழ்கள் தளையவிழ,

223 - 5. [வளமனைப், பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி, யந்தி யந்தண ரயர :]

அந்தணர் அந்தி அயர - பார்ப்பார் அந்திக்காலத்துச் செய்யுந்தொழில் களை நிகழ்த்த,

வளம் மனை பூந்தொடி மகளிர் சுடர் தலைக்கொளுவி அந்தி அயர - செல் வத்தையுடைய மனைகளிற் பொலிவுபெற்ற தொடியினையுடைய மகளிர் விள க்கை அவ்விடத்தேகொளுத்தி அந்திக்காலத்திற் செழுழிலைநிகழ்த்த,

௪௦ குறிஞ்சிப்பாட்டு

225 - 6. கானவர் விண் தோய் பணவை மிசை ஞெகிழி பொத்த - அக் காட்டில்வாழ்வார் விண்ணைத்தீண்டுகின்ற பரணின்மேலே தீக்கடைகோலாலே நெருப்பைப் பிறப்பித்து எரிப்ப,

227. வானம் மா மலை வாய் சூழ்பு கறுப்ப - மேகம் பெரிய மலையிடத்தைச்சூழ்ந்து கறுப்ப,

227 - 8. கானம் கல்லென்று இரட்ட - காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னும் ஓசையை யுடையவாய் ஒன்றற்கொன்று மாறிக்கூப்பிட,

கானம் - ஆகுபெயர்.

228. புள்ளினம் ஒலிப்ப - பறவைகள் குடம்பைக்கண்ணேநின்று ஆரவாரிக்கையினாலே,

229 - 230. * [சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத், துணைஇய மாலை துன்னுதல் காணூஉ :]

(கு - பு.) சினைஇய - கோபித்த. சமம் - போர். துணைஇய - விரைந்த.

தெவிட்டப் (உ௨௭) புகுதர (உ௨௮) அகவ (உ௩௦) உமிழப் (உ௩௧)

பயி ற்றக் (உஉஉ) கூம்புவிட (உஉங) அயரப் (உஉ௫) பொத்தக் (உஉசு) கறு ப்ப (உஉஎ) இரட்ட ஒலிப்பச் (உஉஅ) செல்சமங்கடுப்ப (உஉகூ) மாலை தன் னுதல்கண்டு (உ௩0) என முடிக்க.

இவ்வெச்சங்கள் எதிர்காலமுணர்த்தின. † "நிலனொருங்கு மயங்குத லின்றென மொழிப." எனவே காலமிரண்டு மயங்குமென்றலின், குறிஞ்சியில் மாலைக்காலங்கூறினர்.

231 - 4. [நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட், கலங்கலோம்புமி னிலங்கிழை யீரென, வீர நன்மொழி தீரக்கூறி:]

இலங்கிழையீர் - விளங்குகின்ற பூணியையுடையீர்,

நுமர் நேர் இறை முன்கை பற்றி தர நாடு அறி நல் மணம் அயர்கம் - நும்முடையசுற்றத்தார் நுமது நேரிய இறையினையுடைய முன்கையைப்பிடி த்து எமக்குத்தர நாட்டிலுள்ளாரெல்லாமறியும் நன்றாகிய கலியாணத்தினைப் பின்பு நிகழ்த்துவேம்;

சில் நாள் கலங்கல் ஓம்புமின் என ஈரம் நன்மொழி தீரக் கூறி - யாம் இக்களவொழுக்கத்தாற்பெறும் பேரின்பம்பெறுதற்குச் சிறிதுநாள் இங்ஙனம் ஒழுகாநின்றேமென்று நெஞ்சுகலங்குதலைப் பாதுகாப்பீராகவென்று அருளுடைத்தாகிய நல்லவார்த்தையை இவள்நெஞ்சில் வருத்தந் தீரும்படிசொல்லி,

235. துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து - ஆவைப்புணர்ந்த ஏறு போலே விடாமல் எம்முடனேகூடவந்து,

236 - 7. தஞ்சா முழவின் மூதூர் வாயில் உண் துறை நிறுத்து பெயர்ந்தனன் - ஓசையை ஒருகாலுமறாத முழவினையுடைய பழைய நம்மூர் வாசலில் பலரும் நீருண்ணுந் துறையிலே எம்மைநிறுத்தி மீண்டுபோனான்;

---

* இதற்குப் பழையஉரை கிடைத்திலது.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கஉ.

இதனால் வேட்கையுரைத்தல் கூறினாள்.

237-9. அதற்கொண்டு அன்றை அன்ன விருப்போடு என்றும் இரவரல் மாலையனே - அப்புணர்ச்சி தொடங்கி அம்முதனாள் போன்ற விருப்பத்தோடே எந்நாளும் இரவுக்குறியிலே வருதலைத் தனக்கியல்பாகவுடையன்;

ஏகாரம் - ஈற்றசை.

239-241. வருதோறும் காவலர் கடுகினும் கதன் நாய் குரைப்பினும் நீ துயி லெழினும் நிலவு வெளிப்படினும் - அங்ஙனம் வரும்போதெல்லாம் ஊர்காவலர் கடுகிக்காத்தாராயினும் கோபத்தையுடைய நாய் குரைத்ததாயினும் நீ துயி லுணர்ந்தாயாயினும் நிலவு வெளியாக எறித்ததாயினும்,

242-3. வேய் புரை மெல் தோள் இன்றுயில் பெறாஅன் - மூங்கிலை யொத்த மெல்லிய தோளிற்பெறும் இனிய துயிலைப் பெறாதுபோவன் ;

பெயரினும் முனியல் உறாஅன் - யாங்கள் குறியல்லதனைக் குறியாகக் கருதிச் செல்லாநின்று மீண்டு மனையிடத்தே புகுதினும் அதற்கு வெறுத் தலைச்செய்யான் ;

244. இளமையின் இகந்தன்றும் இலனே - அவன்றான் இளமைப்பருவத்தைக் கடந்ததுமிலன்;

244 - 5. [வளமையிற், றன்னிலை திரீந்தன்று மிலனே:] வளமையில் என்றும் (உசஉ) தன்நிலை திரீந்தன்றும் இலனே - நற்குணங்களைத் திரித்தற் குரிய செல்வச்செருக்கான் எந்நாளும் தன்குலத்திற்குரிய நற்குணங்களின் நீங்கியதுமிலன் ;

ஏகாரங்கள் - ஈற்றசை.

"நேரிறை முன்கை .... தன்னிலே திரிந்தன்று ன்லனே" (231 - 44) என்பனவற்றை உண்மைசெப்பலென்னுங்கிளவிக்கு உதாரண மாகக்காட்டினர், நச்சினார்க்கினியர்; (தொல். பொருளியல், 13).

245 - 6. கொன் ஊர் மாய வரவின் இயல்பு நினைஇ தேற்றி - அலர் முதலியவற்ருன் அச்சத்தையுடைய இவ்வூரின்கண்ணே தனக்குப் பொய்யா யிருக்கின்ற இரவுக்குறியிலே கூடுதற்கு வருகின்ற வரவினது தன்மையை இஃதொழுக்கமன்றென்று நினைத்து அவன்வரைந்துகொள்ள இல்லறநிகழ்த் துதலே நல்லொழுக்கமென்று துணிகையினாலே,

(கு - பு.) அலர் - பலரறிந்து கூறும் பழிமொழி.

247 - 8. [நீரொறி மலரிற் சாஅ யிதழ்சோரா, வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண் :] இவள் பெருமதர் மழை கண் நீர் எறி மலரிற் சா அய் இதழ் சோரா ஈரிய கலுழும - இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள் பெருந்துளியெறிந்துபெய்தமலர்போலே அழகுகெட்டு இமைசோர்ந்து ஈரத் தினையுடையவாய்க் கலங்காநிற்கும்.

249 - 261. [ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும், வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய், நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்கு, லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும், புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும், வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத், தருமுஞ் சூரு மிரைதே ரரவமு, மொ

அ௨ குறிஞ்சிப்பாட்டு.

டுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்கும், கொடுந்தாண் முதலையு மிடங்கருங் காமு, நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும், பழுவும்

பாந்தளூ முளப்படப் பிறவும், வழுவின் வழாஅ விழுமமவர், குழுமலை விடரக முடையவா லெனவே:]

இவள் அவர் குழுமலை விழுமம் உடையவால் என நினைத்தொறும் வலைப் படு மஞ்ஞையின் நலம் செலச் சாஅய் அரிப்பனி நாளும் ஆகத்து உறைப்பக் கலுழும் - இவள் அங்ஙனந்தேற்றிக் கண்ணழுகின்றதற்கு மேலே அவர்வருகின்ற மலை இடும்பையுடையவாயிருக்குமென்று நினைக்குந்தோறும் வலையிலகப்பட்ட மயில்போலே தன்னலம் போம்படி நுணுகிக் கண்ணில் அரித்து வீழ்கின்ற நீர் நாள்தோறும் மார்பிலே துளிப்பக் கலங்காநிற்கும்;

(கு - பு.) நுணுகி - மெலிந்து.

கங்குல் - இராக்காலத்து,

அளை செறி உழுவையும் - முழைஞ்சிடத்திலே செறியும் புலிகளும்,

(கு - பு.) முழைஞ்சு - குகை.

ஆளியும் - யாளிகளும்,

உளியமும் - கரடியும்,

புழல் கோடு ஆமான் புகல்வியும் - உள்ளூப்பொய்யான கொம்பையுடைய ஆமானிலேறும்,

(கு - பு.) ஆமான் - காட்டுப்பசு.

களிறும் - யானையும்,

வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து உருமும் - வலியினாற்கெடுக்கும் தறுகண்மையை யுடைத்தாகிய வெவ்விய சினத்தையுடைய உருமேறும்,

சூரும் - கொடுந்தெய்வமும்,

இரை தேர் அரவமும் - இரைதேடித்திரியும் பாம்பும்,

ஒடுங்கு இருங்குட்டத்து அரு சுழி வழங்கும் கொடு தாள்

முதலையும் இடங்கரும் கராமும் - புடைபட்ட கரிய ஆழத்திடத்துப் போதற்கரிய சுழி யிடத்தே திரியும் வளைந்த தாளையுடைய முதலையும் இடங்கரும் கராமும்,

இவை மூன்றும் சாதி விசேடம்.

நூழிலும் - வழிபறிப்பார் கொன்றுகுவிக்குமிடங்களும்,

நூழில் - கொடிப்பிணக்கென்பாருமுளர்.

இழுக்கும் - வழுக்குநிலமும்,

ஊழ் அடி முட்டமும் - முறையடிப்பாடாய்ப் பின்பு வழிமுட்டாயிருக் கும் இடங்களும்,

பழுவும் - பிசாசும்,

பாந்தளும் - பெரும்பாம்பும்,

உளப்படப் பிறவும் வழுவின் வழாஅ விழுமம் - உழுவைமுதலாக எண்ணப்பட்ட இவ்வெல்லாவற்றொடுங்கூட வேறும் தப்புஞ்செயலிற் றப்பாத இடும்பைகளை,

விழுமஞ்செய்வனவற்றை விழுமமென்றார்; இஃது ஆகுபெயர்.

அவர் குழு மலை விடரகம் உடையவால் என - தலைவருடைய கிளைஞ்ய யுடைத்தாகிய மலையின்முழைஞ்சிடம் உடையவாயிருக்குமென்று.

அன்னாய் வாழி ; அன்னாய் , யான் கூறுகின்றதனை விரும்புவாயாக (க) ; நீயும் எய்யாமையலையாகி வருந்துதி (அ) ; இவளும் (உசு) ஏனையுலகத்தும் இயைவதாலெனக்கூறி (உ௪) மெலியும் (உரு) ; யானும் (உ௬) சான்றோர் போல (உஅ) வருந்தாநின்றேன் (உ௯) ; எண்ணாது (௩க) எமியேந்துணிந்த அருவினை (௩உ) நிகழ்ந்தவண்ணம் நீயுணரச் (௩௩) செப்புதலையமைந் தேன் ; அதுகேட்டுச் சினவாதிமோ (௩௪) ; தினையிற் படுபுள்ளோப்பி (௩அ) வருதியரென நீ போகவிடுகையினாலே (௩௯) யாங்களும்போய் இதணமேறிக் (௪க) கிளிகடி மரபினவற்றை வாங்கி ஓட்டிக் (௪௪) கொண்மூப் (௫0) பொழிந்தென (௫௩) நெடுங்கோட்டிழிதரும் தெண்ணீ (௫௪) ரருவி (௫௫) ஆடிப் (௫௬) பாய்சுனைகுடைவுழிப் (௫எ) பாயம்பாடிக் (௫அ) கூந்தலைப் பிழிவனந்துவரிச் (௬0) சிவந்த கண்ணேமாய் (௬க) மலிவனமறுகிப் (௬எ) பரேரம் புழகுடனே (௬௯) காந்தள் (௬உ) முதலியவற்றையும் பிறவற்றையும் (௯௫) பாறையிலேகுவித்துத் (௯அ) தெள்விளி பயிற்றி (க00) ஓப்பியும் (க0க) தழைதைஇ உடுத்துக் (க0உ) கோதையை (க0௩) மூச்சியிலேகட்டிச் (க0௪) செயலைத் (க0௫) தண்ணிழலிலே இருந்தனமாக (க0௬), குன்றுகெழு நாடனாகிய எம்பெருவிறல் (கக௬) அணிபெறவந்து (க௩௬) இளையீர், இறந்த (க௪க) கெடுதியுமுடையேனென்றனன் ; அதனெதிர் (க௪உ) சொல்லே மாதலிற் கலங்கி (க௪௩) மெல்லியலீர், சொல்லலும் பழியோவெனச்சொல்லி (க௪௫) ஒச்சி (க௫0) அவித்துச் (க௫க) சொல்லற்பாணிநின்றனனாக (க௫உ), வேழம் எதிர்தருகையினாலே (க௬௫) விரைந்தவற்பொருந்தி (க௬அ) நடுங்கா, நிற்கப் (க௬௬)

பகழியைவாங்கி (கஎ0) அணிமுகத் தழுத்தலின் (கஎக) அதுபுறங்கொடுத்தபின் (கஎச) கலுழிபாய்தலின் (கஎஅ) வாழையினடுங்கின ளாக, அதுகண்டு பெருந்தகை (கஎகூ) எடுத்து அஞ்சலோம்பெனச்சொல்லி (கஅக) நீவி நினைந்து (கஅஉ) என் முகநோக்கி நக்கனன் (கஅங) ; அவ்வழி நாணுமுட்கும் அடைதருகையினாலே (கஅச) இவள்நீங்கவும் விடானாய் (கஅரு) அந்நிலை (கஅங) முயங்கலின், அவ்வழி (கஅகூ) யிவளுள்ளத்தன் மை யுள்ளினனாய் அதனையுட்கொண்டு (உ00) விருந்துண்டெஞ்சிய மிச்சிலை (உ0சு) நீயிடுகையினாலே யானுண்டலும் புரைவதென்று சொல்லித் (உ0எ) தேற்றிப் (உ0அ) பெருந்தகை (உ0கூ) கடவுளும் வாழ்த்திக் கைதொழுது (உ0க) வஞ்சினம்வாய்மையிற் றேற்றித் (உக0) தெண்ணீர்குடித்தலின் நெஞ் சமர்ந்து (உகக) சோலையிலே (உகச) களிறுதருபுணர்ச்சியைக் (உகஉ) கழி ப்பி (உகச) மண்டிலம் மறைகையினாலே (உகசு) மாலைதுன்னுதல் கண்டு (உங0) இலங்கிழையீர், கலங்கலோம்புமினென (உஙங) ஈரநன்மொழிகூறி (உஙச) எம்மோடுவந்து (உஙரு) உண்துறைநிறுத்துப் பெயர்ந்தனன்; அதற் கொண்டு (உஙஎ) என்றும் (உஙஅ) இரவில்வருமாலையன் ; வருந்தோறும் (உஙகூ) கடுகினும் குரைப்பினும் (உச0) துயிலெழினும் வெளிப்படினும் (உசக) இன்றுயில் (உசஉ) பெறுமற் போவன்; அதுவேயன்றிப் பெயரினும்

முனியலுமுன் (உசங) ; இகந்தன்றுமிலன் (உசச); என்றும் (உசஉ) தீர்ந் தன்றுமிலாதவன் (உசரு) மாயவரவினியல்புநினைந்து தேற்றுகையினுலே (உசசு) இவள்கலுழும் (உசஅ) ; அங்ஙனம் அழுகின்றதற்குமேலே அவர் வருகின்ற (உசுO) குழுமலைவிடரகம் (உசுக) விழுமம் (உ'சுO) உடையவென (உசுக) நினையுந்தோறும் (உருக) சாஅய் (உருO) உறைப்பக் (உசக) கலங்கா நிற்கும் (உருக) ; இதுகாண் நல்வினை நிகழ்ந்தவண்ணமென்றுளென வினை முடிக்க.

ஆரியவாசன்பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர்பாடிய குறிஞ்சிப் பாட்டிற்கு மதுரைஆசிரியர் பாரத்துவாசி நச்சினர்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

க. நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடைய
ளென்குற்றம் யானு முணர்கலேன் - பொன்குற்
றருவி கொழிக்கு மணிமலை நாடன்
றெரியுங்காற் றீய திலன்.

உ. ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே - தேற்ற
மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற்
குறையக் குறிஞ்சிக் குணம்.

முகவுரை.

சென்னை யூனிவர்ஸிடியாரால் 1906-ம்வருடத்து பி. ஏ. பட்டப்பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பட்ட **பட்டினப்பாலையையும்,** அதை அறிந்துகொள்ளுதற்கு இன்றியமையாத மதுரை ஆசிரியர் நச்சினார்க்கினியருரையையும் வெளிப்படுத்தத் தொடங்கி, மாணாக்கர்களுக்கு அவை விளங்கும் வண்ணம் நூதனமாக எளியநடையில் எழுதிய குறிப்புக்களை உரியவிடங்களிற் சேர்த்துப் பதிப்பிக்கலானேன்.

பட்டினப்பாலையென்பது கடைச்சங்கப்புலவர்களான நக்கீரனார்முதலியோரியற்றிய பத்துப்பாட்டினுள் ஒன்பதாவது; கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் இயற்றப்பெற்றது. வேற்றுநாட்டுக்குச்செல்லத்தொடங்கிய தலைவன், தனது நெஞ்சைநோக்கி, 'நெஞ்சே, காவிரிப்பூம்பட்டினத்தைப் பெற்றாலும் யான் தலைவியைப்பிரிந்து நின்னுடன்வாரேன்' என்று கூறுதல் முகமாகக் காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்தையும் சோழன் கரிகாற்பெருவளத்தானது வீரச்செயல்களையும் அவனது செங்கோலையும் பேரழகுபயப்பச் சிறப்பித்துப் பாராட்டிக் கூறப்பெற்றது.

இதன்முதலில் உள்ள ௨௧௮ - அடிகளாற் காவிரிப்பூம்பட்டினத்தின் வளமும், ௨௨௦ - வது முதலிய ௭௯ - அடிகளாற் சோழன்கரிகாற் பெருவளத்தானுடைய பெருமையும், ௩௦௦ - ம் அடியால், செல்லக்கருதிய காடுகள் அவனுடைய வேலினும் வெம்மையையுடையனவென்பதும், ௩௦௧ - ம் அடியால், தலைவியின்தோள்கள் அவனுடைய செங்கோலினும் தண்மையையுடையனவாதலால், இவள் வருதற்குரியளல்லளென்பதும், ௨௧௯, ௨௨௦ - ம் அடிகளால், நெஞ்சே, இவள் இங்கே தனித்திருப்ப யான் நின்னொடுவருதலைச் செய்யேனென்பதும் கூறப்பட்டுள்ளன.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், பதங்களை அந்வயித்து இப்பாட்டிற்குப் பொருளெழுதியது, தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் உகக-ம் சூத்திரமாகிய மாட்டிலக்கணத்தை மேற்கோளாகக்கொண்டென்று உணர்க. மற்ற விசேடங்கள், அங்கங்குள்ள குறிப்புரையால் விளங்கும்.

இந்நூல், பலருரைகளில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது; சீவகசிந்தாமணி முதலிய பலநூலாசிரியர்கள் இதிலுள்ளவாக்கியங்களைத் தாமியற்றும் நூல்களுள் ஆங்காங்கு அமைத்து அழகுபடுத்தியிருக்கின்றனர்; "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்பது விதியன்றோ; இதனை ஆண்டாண்டுள்ள குறிப்புரைகள் ஒருவாறு விளக்கும்.

இதிற் பண்டைக்காலச்செய்திகள் பல காணப்படும். இதிலுள்ள விஷயம் ஒவ்வொன்றும் யாவரும் எப்பொழுதும் அனுபவித்துக்கொண்டிருக்கும் அனுபவமாக உள்ளதாதலின், இந்நூல் படிப்பவர்களுக்கு மிக்க இன்பத்தை விளைவிக்குமென்பது கூறாமலே விளங்கும்; செயற்கையழகினும் இயற்கை யழகு சிறந்ததென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே.

விளங்க எழுதவேண்டியவைகளைப் பலகாரணங்களால் நான் எழுதா திருத்தல் கூடும்; கல்வியறிவு ஒழுக்கங்களிற்சிறந்து கலாசாலைகளில் தமிழ்ப் பண்டிதர்களாக வீற்றிருக்கும் விவேகிகள் அக்குற்றத்தைப் பொறுக்கும்வண்ணம் நிரம்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
வே. சாமிநாதன்.

நூல்.

நக்கீரனார்முதலிய சங்கப்புலவர்களியற்றிய **பத்துப்பாட்டுக்கள்** இன்னவையென்பதைப் பின்னுள்ள வெண்பாவாலுணர்க :—

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

அவற்றுள் :—

க.—திருமுருகாற்றுப்படை :—௩௧௭ - அடிகளையுடையது ; முருகக்கடவுள்மீது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது ; இதில் முருகக்கடவுளுடைய ஸ்தலங்களுட்சிறந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை யென்னும் ஆறுபடைவீடுகளும், அவற்றில் அவர் எழுந்தருளி யிருக்கும் விதமும் முறையே பாராட்டிக் கூறப்படும்.

உ.—பொருநராற்றுப்படை : — உ௪அ - அடிகளையுடையது; இளஞ் சேட்சென்னி புதல்வனாகிய சோழன்கரிகாற்பெருவளவனை முடத்தாமக்கண் ணியார் பாடியது ; இதில் கரிகாற்பெருவளவன்கொடையும் அவன்வீரமும் அவனாண்ட சோழநாட்டின் வளமும் காவிரிநதியின் சிறப்பும் நன்றாகக் கூறப்படும்.

௩.—சிறுபாணாற்றுப்படை :—உ௬௯ - அடிகளையுடையது ; ஏறுமாநாட்டு நல்லியக்கோடனென்பவனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது ; இதில் நல்லியக்கோடனது வண்மையும் அவனுடைய நகரங்களாகிய எயிற்பட்டினம் வேலூர் ஆமூர் முதலியவற்றி னியல்பும், அவற்றிலிருந்த மாந் தர்களது நற்குண

நற்செய்கைகளும் தமிழ்நாட்டு மூவேந்தர்களுடைய இராஜதானிகளாகிய மதுரை வஞ்சி உறையூ ரென்னு மூன்றுநகரங்களினிலைமை யும், பேகன் பாரி காரி ஆய் அதிகன் நள்ளி ஓரியென்னும் வள்ளல்களெழுவ ரும் இன்னஇன்ன கொடையாற் பெயர்பெற்றார்களென்பதும் கூறப்படும்.

௪.—பெரும்பாணாற்றுப்படை :—௫00 - அடிகளையுடையது; காஞ்சி நகரத்திருந்த தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண் ணனார் பாடியது ; இதில் அவனது வண்மையும், தொண்டைநாட்டிலேயுள்ள குறிஞ்சிமுதலிய ஐந்திணைவளங்களும், அவற்றில்வாழும் மாந்தருடைய தொ ழில் ஊண் ஒப்புரவு முதலியனவும், காஞ்சிநகரத்தின் சிறப்பும், திருமாலின் நூற்றெட்டுத்திருப்பதிகளுள் ஒன்றாகிய திருவெஃகாவென்பதும் கூறப்பட் டுள்ளன.

நூல். 3

௫.—முல்லைப்பாட்டு:—இது ௧0௩ - அடிகளையுடையது ; பகைமேற் சென்ற தலைவன் வருமளவும் தலைவி ஆற்றியிருந்தவிடத்து அவன் வந்ததனைக் கண்டு தோழிமுதலியோராகிய வாயில்கள் தம்முட்கூறியதாகக் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது ; இது தலைவ னைப்பிரிந்து தனித்திருக்கும் தலைவியின் இயல்பையும் கார்காலத்தின் தன் மையையும் படைவீட்டிற் பகைவர் துயரத்தோடிருத்தலையும் தலைவனது சௌரியத்தையும் விளங்கக்கூறும்.

கூ.—மதுரைக்காஞ்சி :—எஅ உ - அடிகளையுடையது ; தலையாலங்கானத் துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்தி மாங்குடிமருதனர் பாடியது ; இதில் பாண்டி நாட்டின் ஐந்திணைவளங்களும், மதுரையம்பதியின் எழுச்சியும், அப்பாண்டியனது வீரமுதலியனவும், சேரராஜனது நாளோலக்கச் சிறப்பும், அக்காலத்திருந்த பலசிற்றரசர்களுடைய பெருமையும், அருச்சுனனுக்குக் கண்ணன் உபதே சித்த பகவத்கீதையின் மேம்பாடும் இன்னும் பலவும் கூறப்பட்டுள்ளன.

எ.—நெடுநல்வாடை :—கஅஅ - அடிகளையுடையது; பாண்டியன் நெடு ஞ்செழியனை நக்கீரனர் பாடியது ; இதில் ஐப்பசிகார்த்திகை மாதங்களாகிய கூதிர்க்காலத்தினியல்பும் தனித்திருந்த தலைவியது வருத்தமிகுதியும் படை வீட்டில் தலைவனிருக்கும் வண்ணமும் விளங்கக் கூறப்பட்டுள்ளன.

அ.—குறிஞ்சிப்பாட்டு :—உசுக - அடிகளையுடையது ; ஆரியவரசன் பிர கத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் கபிலர் பாடியது; இதில் மலைவளங்களும், இல் லறமுறைமையும், தலைவனும் தலைவியும் தம்முள்வைக்கத்தகுமன்புடைமை யும், கற்பின் இன்றியமையாமையும், பல மலர்விசேடங்களும் அழகாகக் கூறப்பட்டுள்ளன ; இது பெருங்குறிஞ்சியென்றும் பெயர்பெறும்.

கூ.—பட்டினப்பாலை : — ௩0௧ - அடிகளையுடையது ; இந்நூல்,

வஞ் சிப்பா என்பதும் பெரும்பாலும் ஆசிரியவடிகளும் சிறுபான்மை வெள்ளடியும் கலியடியும் இதில்வந்துள்ளன என்பதும் ஒருசார் பழையவுரையாசிரியர்களுடைய கொள்கை ; இதனை, பின்வருவனவற்றாலுணர்க. 'பட்டினப்பாலை' யென்னும் வஞ்சிநெடும்பாட்டினுள், (உஉ) "நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்" என்றித்தொடக்கத்தன ஆசிரியவடி ; (சுச - சுரு) "வயலாமைப் புழுக்குண்டும், வறளடம்பின் மலர்மலைந்தும்" என்பது கலியடி ; இதனை, "வயலாமைப் புழுக்குண்டும் வறளடம்பின் மலர்மலைந்தும், கயனுட்டக் கடைசியர்தங் காதலர்தோள் கலந்தனரே" என உச்சரித்துக் கலியடியா மாறு கண்டுகொள்க. (உரு) "கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை" என்பது வெள்ளடி ; இதனை, "கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை, யாழிசூழ் வையக் கணி" என உச்சரித்து, 'வெள்ளடியாமாறு கண்டுகொள்க' என்பது, யாப்பருங்கலம், அடியோத்து, கூ - ம் சூத்திரவிருத்தியுரை ;

4 நூலாசிரியர்.

இதனை, யாப்பருங்கலக்காரிகை, ஒழிபியல், ச - ம் கலித்துறையின் விசே

டவுரையாலும் உணர்க ; இதன் மற்றவரலாற்றை முகவுரையிற் காண்க.

கo.—மலைபடுகடாம்: —டுஅரு - அடிகளையுடையது ; பல்குன்றக்கோட்

டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது ; இதில் அவனூர்க்குச்செல் லும் வழியினியல்பும், அவ்வவ்விடத்துக்கிடைக்கும் உணவின்

வகைகளும்
அவனது மலை சோலை காடுகளின் வளங்களும், அவனது வள்ளன்மையும், ஆற்றலும், அவனது சுற்றத்தினொழுக்கங்களும், அவனது நாளோலக்கச் சிறப்பும், அவனது நவிர மென்னும் மலையில் காரியுண்டிக்கடவு ளென்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது மகிமையும், அவனுடைய முன்னோர்களின் பெருமையும், அவனூரினியல்பும், அவனது சேயாறென்னும் ஆறுமுதலியவற்றின் வளங்களும் விளங்கக் கூறப்பட்டுள்ளன. இது கூத்தராற்றுப்படை யெனவும் பெயர்பெறும்.

நூலாசிரியர்.

இந்நூலாசிரியராகிய கடியலூர் உருத்திரங்கண்ணனாரென்பவர், கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர். இவருடைய ஊராகிய கடியலூரென்பது இன்னநாட்டிலுள்ளதென்று தெரியவில்லை.

இவருடைய தந்தையார் : ஐயந்தீர்தற்பொருட்டுத் தந்தையின்பெயரைப் புதல்வனுடையபெயர்க்கு விசேடணமாக்கிவழங்குதல் மரபாக இருத்தலாலும், உருத்திரங்கண்ணனாரென்னும் பெயர்த்தொகையை

உருத்திரனாருடைய புதல்வராகிய கண்ணனாரென விரித்தற்கு இடமுண்டாதலாலும் 'உருத்திரனார்' என்பவர், இவருடைய தந்தையாராகக் கருதப்படுகிறார்; உருத்திரனாரென்னும் பெயரொன்று, குறுந்தொகையில், "புறவுப்புறத் தன்ன" என்னும் 274 - ம் செய்யுளியற்றியவர்பெயராகக் காணப்படுகின்றது.

இவர்சாதி : தொல்காப்பியம், மரபியலில், "ஊரும் பெயரும்" என்னும் ௭௪ - ம் சூத்திரத்தின் விசேடவுரையில், 'உறையூர் ஏணிச்சேரிமுடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூருருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன' என்பது வரையப்பெற்றிருத்தலால், இவர் அந்தணராகக் கருதப்படுகிறார்.

இவரதுசமயம் : பெரும்பாணாற்றுப்படையில், [அடிகள், 372 - 373] "காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப், பாம்பணைப் பள்ளியமர்ந்தோனாங்கண்" எனக் காஞ்சிநகரத்துள்ள விஷ்ணுஸ்தலங்களுள் ஒன்றாகிய திருவெஃகாவென்னுந் திருப்பதியையும் அதிற் பள்ளிகொண்டருளிய திருமாலையும் பாராட்டிக் கூறியிருத்தலின், இவர் வைஷ்ணவசமயத்தில் அதிகப்பற்றுடையவரென்று சொல்லுவதற்கு இடமுண்டு.

இவரியற்றியவை : பத்துப்பாட்டினுள், 4 - வதாகிய பெரும்பாணாற்றுப் படையும், 9 - வதாகிய இந்நூலும், எட்டுத்தொகையுட் குறுந்தொகைக்கண் ணதாகிய, "நெடுநீராம்பல்" என்னும் 352 - ம் செய்யுளும், அகநானூற்றின் கண்ணதாகிய, "வயங்குமணிபொருத" என்னும் 166 - ம் செய்யுளுமாகிய இவைகள் இவரால் இயற்றப்பெற்றவையென்று இப்பொழுது தெரிகின்றது.

இவரை ஆதரித்தபிரபுக்கள்: பெரும்பாணாற்றுப்படைத்தலைவனாகிய தொண்டைமான் இளந்திரையனும், இந்நூற்றலைவனாகிய சோழன் கரிகாற்பெருவளத்தானும் இவரை ஆதரித்ததலைவர்கள்.

இவர்பெற்றபரிசில் : சோழன் கரிகாற்பெருவளத்தான் இந்நூலைக் கேட்டுமகிழ்ந்து பதினாறுநூறாயிரம்பொன் இவர்க்குப் பரிசளித்தானென்று தெரிகின்றது. இதனை, கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம், 22 : "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன், பத்தொடாறுநூறாயிரம்பெறப், பண்டு பட்டினப் பாலை கொண்டதும்" என்பதனாலுணர்க.

இவரதுகாலம் : கடைச்சங்கப்புலவர்களுடையகாலம், இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறுவருஷங்களுக்கு முற்பட்டதென்று இங்கிலீஷ்பாஷையிலும் தமிழ்ப்பாஷையிலும் பயிற்சியுள்ள

பலபுலவர்கள் நுணுகி ஆராய்ந்து தக்க ஆதாரங்கள்காட்டியெழுதி மேன்மேலும் வெளிப்படுத்திவருதல் இக்காலத்தில் யாவருக்கும் தெரிந்ததாதலின், கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய இவர்காலமும் அதுவேயென்பது கூறாமலேவிளங்கும்.

இந்நூல் உரையாசிரியராகிய
நச்சினார்க்கினியர் வரலாறு.

விருத்தம்.

எவனுல வாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.

இந்நூலின் உரையாசிரியராகிய ஆசிரியர் நச்சினார்க்கினியர், பாண்டி வளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாசகோத்திரத்திற்பிறந்தவர், தமிழ்ப்பாஷையிலுள்ள பல்வகையான எல்லாநூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னராதல், "வண்டிமிர் சோலை மதுரா புரிதனி, லெண்டிசை விளங்க வந்த

சாசான், பயின்ற கேள்விப் பாரத் துவாச, ஞன்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன் " என்னும் உரைச்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். சிவஸ்தலங்களுட்சிறந்த சித ம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்,' 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் எழெழுத்தொருமொ ழிக்கும் உதாரணமாக இவர், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமர பில், "ஓரெழுத்தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்தநூல்களாகிய திருவாசகம் திருச்சிற் றம்பலக்கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய விலக்கணப் பொருள்களுக்கன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற் கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள்கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், நாமகளிலம்பகத்து 'மேகம் மீன்ற' என்னும் ௩௩௩-ம் செய்யுளில், 'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படை யுரையிற் காட்டிய சில நயங்களாலும், உரைச்சிறப்புப்பாயிரத்தில், "தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன்" எனக்கூறப்பெற்றதனாலும், மற்றுஞ் சிலவற்றாலும், 'இவர் சைவசமயியாதல் நன்குவெளியாகும்.

இவ்வுரையாசிரியர், பத்துப்பாட்டினுள் இந்நூலுக்கன்றி மற்றநூல்களு க்கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும்

குறுந்தொகையில் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரைசெய்தருளினர். இன்னும் சிலநூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்றமையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவருடைய உரைச் சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும், அவைகள் இங்கே எழுதப்பட்டில.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரையெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை ஓர்உரையை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக்கொண்டார்களென்று சைனர் கூறுகின்றனர்.

நாமகளிலம்பகத்தில் "கண்ணுளார் நுங்காதலர்" என்னும் சஙூ-ம் செய்யுளுரையில் 'ஈங்குத் தன்மையயுணர்த்துதல், "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரத்திற் கூறினும்' என்றும், குணமாலையாரிலம்பகத்தில் "மங்கை நல்லவர்" என்னுஞ்செய்யுளுரையில் 'ஆசிரியர் "நண்டுந் தும்பியும்"

நச்சினார்க்கினியர் வரலாறு.

என்று தும்பியைப்பின்வைத்தது. மேல்வருஞ் சூத்திரத்தில், "மாவு மாக்களு மையறி வென்ப" என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கென்றுணர்க; இதனை வாராததனால் வந்தது முடித்த லென்னுந் தந்திரவுத்தியாற் கொள்க வென்று ஆண்டு உரை கூறிப்போந்தாம்' என்றும் நச்சினார்க்கினியர் எழுதியிருத்த லால், இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதினபின்பு சீவகசிந்தாமணி க்கு உரையெழுதினரென்று விளங்குகின்றது.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் விளங்கியவை வருமாறு:—

க. அகத்தியம்.
உ. அகநானூறு.
௩. அணியியல்.
௪. அவிநயம்.
௫. ஆசாரக்கோவை.

௬. இராமாயண வெண்பா.

௭. இறையனாரகப்பொருள்.

௮. ஏலாதி.

௯. ஐங்குறுநூறு.

௧௦. ஐந்திணையெழுபது.

௧௧. ஐந்திணையைம்பது.

௧௨. கடகண்டு.

௧௩. கலித்தொகை.

௧௪. களவழிநாற்பது.

௧௫. காக்கைபாடினியம்.

௧௬. குணநாற்பது.

௧௭. குறிஞ்சிப்பாட்டு.

௧௮. குறுந்தொகை.

௧௯. கூத்தநூல்.

௨௦. கைந்நிலை.

௨௧. கொன்றைவேந்தன்.

௨௨. சிலப்பதிகாரம்.

௨௩. சிறுகாக்கைபாடினியம்.

௨௪. சிறுபஞ்சமூலம்.

௨௫. சிறுபாணாற்றுப்படை.

௨௬.

௨௭.

௨௮. தகடூர்யாத்திரை.

௨௯. திணைமாலை நூற்றைம்பது.

௩௦. திணைமொழியைம்பது.

௩௧. திரிகடுகம்.

௩௨. திருக்குறள்.

௩௩. திருக்கோவையார்.

௩௪. திருமுருகாற்றுப்படை.

௩௫. திருவாசகம்.

௩௬. தொல்காப்பியம்.

௩௭. நற்றிணைநானூறு.

௩௮. நாடகநூல்.

௩௯. நாலடியார்.

௪௦. நெடுநல்வாடை.

௪௧. பட்டினப்பாலை.

௪௨. பதிற்றுப்பத்து.

௪௩. பரிபாடல்.

௪௪. பல்காப்பியம்.

௪௫. பல்காயம்.

௪௬. பழமொழி.

௪௭. பன்னிருபடலம்.

௪௮. பாரதவெண்பா.

௪௯. புறநானூறு.

௫௦. புறப்பொருள்வெண்பாமாலை.

௫௧. பூதபுராணம்.

௫௨. பெருங்கதை.

௫௩. பெரும்பாணாற்றுப்படை.

௫௪. பெரும்பொருள்விளக்கம்.

௫௫. பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதி.

௫௬. பொருநராற்றுப்படை.

௫௭. மணிமேகலை.

௫௮. மதுரைக்காஞ்சி. ௬௪. மோதிரப்பாட்டு.
௫௯. மலைபடுகடாம். ௬௫. யாழ்நூல்.
௬0. மாபுராணம். ௬௬. வசைக்கடம்.
௬௧. முத்தொள்ளாயிரம். ௬௭. வஞ்சிப்பா. ௬௨.
முதுமொழிக்காஞ்சி. ௬௮. வளையாபதி. ௬௩. முல்லைப்பாட்டு.
௬௯. விளக்கத்தார்கூத்து.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரியவிஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்றமையின், இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்லுதற் கிடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர்,

ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக்கூறப்பட்டிருத் தலின், அவர்களுக்கு இவர் காலத்தினுற்பிற்பட்டவரென்று தெரிகின்றது.

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல் செய் அருந்தவத்தின் பெரும்பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக் கப்பட்டன.

இவருடைய மேம்பாட்டைப்பாராட்டி அக்காலத்து ஆன்றோராற்செய் யப்பட்ட உரைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் வருமாறு:—

வெண்பா.

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு
மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ் - சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.

தொல்காப் பியத்திற் றொகுத்த பொருளனைத்து
மெல்லார்க்கு மொப்ப வினிதுரைத்தான் - சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு.

ஆசிரியப்பா.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொரு ளுண்ணிதி னுணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னூற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய னாகிப் பாற்பட

வெழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்று
மிழுக்கற வாய்ந்த வழுக்கிறேல் சீர்த்தித்

தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியு
முரையிடை யிட்ட காண்டிகை யுரைத்து
மான்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபது பாட்டு முணர்பவர்க் கெல்லா
முரையற முழுதும் புரைபட வுரைத்து
மொலித்திரைக் கலத்தி னுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்

பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்து
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துங்

10 நச்சினார்க்கினியர் வரலாறு.

தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாச

றுண்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
னவின்ற வாய்மை நச்சினார்க் கினிய
னிருவினை கடியு மருவியம் பொதியின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை தானே.

விருத்தம்.

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
வெச்சினாற் றிசையு முண்ணு மமிழ்தென வெழுநா வெச்சின்
மெச்சிநா ணாளும் விண்ணோர் மிசைகுவர் வேத போத
னச்சினார்க் கினிய னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.

உ

கணபதிதுணை.

பத்துப்பாட்டு.

௯.—பட்டினப்பாலை.

நச்சினார்க்கினியருரை.

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து

மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை

பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற்

பிணிக்குங்

கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீ
னுருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
யிருகாமத் திணையேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருத்துஞ்சுந் திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
வறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டுந்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவி

னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு
மாவுதி நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்

௬.—பட்டினப்பாலை.

ரு.

தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கு
முதுமரத்த முரண்களரி
வரிமண லகன்றிட்டை
யிருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடம்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியு
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ

திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பலகோழி
யுறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண் டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்ப
ணிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு

பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானன்
மாமலை யணைந்த கொண்மூப் போலவுந்
தாய்முலை தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கு
மலியோதத் தொலிகூடற்
றீதுநீங்கக் கடலாடியு
மாசுபோகப் புனல்படிந்து
மலவ ஞட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டு
மகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்
துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்து
மட்டுநீக்கி மதுமகிழ்ந்து
மைந்தர் கண்ணி மகளிர் சூடவு
மகளிர் கோதை மைந்தர் மலையவு
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட
ரெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்

வெண்ணிலவின் பயன்றுய்த்துங்
கண்ணடைஇய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டுந்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவி
னல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
றேர்பூண்ட மாபோல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது

௯.—பட்டினப்பாலை.

௫

வான்முகந்தநீர் மலைப்பொழியவு
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்

வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதினிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
யேழகத் தகரோ டுகளு முன்றிற்
குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குற்
தூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
யோங்குவரை மருங்கி னுண்டா துறைக்குந்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப

விழவரு வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திபூ

மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரிய
ருறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிலிளக்குங் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன் றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியு
மீன்றடிந்து விடக்கறுத்

தூன்பொரிக்கு மொலிமுன்றின்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவி
னறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு * நெளிய வீண்டி

* நெரியவீண்டியென்றும் பாடம்.

வளர்ந்தலை மயங்கிய நனந்தலை மறுகி
னீர்நாப் பண்ணு நிலத்தின் மேலு
மேமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர்முன்றின் மீன்பிறழவும்
விலைஞர்குரம்பை மாவீண்டவுங்
கொலைகடிந்துங் களவுநீக்கியு
மமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
நல்லானொடு பகடோம்பியு
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
[படாது கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறை
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையு
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்

துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றா
ளுகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப்போர் வேட்டு

வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரச
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவுங்
கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவு
மருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் தீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
யழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவு
மழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவுங்

கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத்

தசைஇட்

பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவும்

௯.—பட்டினப்பாலை.

௯

கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானாப் பெருஞ்சோற் றட்டி
லொண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
வுணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவு
மருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடலார்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர்

மன்னெயில் கதவு மதனுடை நோன்றாண்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
விருங்கோவேண் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு * புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயின்
மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி

* வழியமைத்தென்றும் பாடம்.

விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்

பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவு
முற்றிழை மகளிர் முகிழ்......திளைப்பவுஞ்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூ
ணரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

இதன்பொருள்.

இந்நூல், பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிய பாலைத்திணையாகலின், இதற்குப் பட்டினப்பாலையென்று பெயர்கூறினார். பாலையாவது பிரிதலும் பிரிதனிமித்தமும் கூறுவது. இப்பாட்டு, வேற்றுநாட்டகல்வயின் விழுமத்துத் தலைவன் செலவழுங்கிக்கூறியது. இது, முதலும் கருவுங்கூறாது உரிப்பொருளே சிறப்பக் கூறியது.

(குறிப்பு.) பட்டினம் - காவிரிப்பூம்பட்டினம் : இது பண்டைக்காலத்திற் சோழர்களுடைய இராசதானியாக இருந்தது; காவிரிநதி கடலொடுகலக்குமிடத்து உள்ளநகரமாதலின், இஃது இப்பெயர்பெற்றது. பட்டினம் - கடற்கரையிலுள்ளவூர். யாதோரடைமொழியுமின்றிப் பட்டின மென்றே இந்நகரம் அக்காலத்து வழங்கப்பெற்றுவந்தது ; இதனை, " ஓங்கு தனமுடையானோர் வணிகன் வையத் துயர்புளதோர் பட்டினத்து முன்

னோர் நாளி, னீங்கரிய சுற்றமுட னிருப்ப" (திருவாலவாயுடையார் திரு விளையாடற்புராணம், ௬௨ - ம் திருவிளையாடல், ௧) என்பதனாலுமுணர்க. பாலைத்திணை - பாலையாகிய ஒழுக்கம். பாலையென்றசொல்லுக்குப்பொருள், பிரிதலும் பிரிதனிமித்தமுமென்பர். பிரிதல் - தலைவியைத்தலைவன்பிரிதல்; நிமித்தம் - காரணம். இப்பாட்டு - 'வசையில்புகழ்' என்னும் இச்செய்யுள். வேற்றுநாட்டு அகல்வயின் விழுமத்து - வேறுதேயஞ்செல்லுதற்குத் தலை வியைப்பிரியுங்காலத்துத் தானடையும் துன்பத்தில்; விழுமம் - துன்பம; செலவு அழுங்கி - செல்லுதல்தவிர்ந்து. 'வேற்ற நாட்டகல்வயின்' என் பது, தொல்காப்பியம், கற்பியல், 5 - ம் சூத்திரத்திலுள்ளபகுதி. ஷை சூத்திரம், தலைவனுடையசொற்கள் இன்னஇன்ன இடத்துநிகழுமென்பதைத் தெரிவிக்கவந்தது. முதலும் கருவும் கூறாது - பாலைத்திணைக்குரிய முதற் பொருளையும் கருப்பொருளையும் சொல்லாமல். ஒவ்வொருதிணைக்கும் முதற் பொருள் கருப்பொருள் உரிப்பொருளெனப் பொருள்கள் மூவகைப்படும்.

பட்டினப்பாலையுரை.

௩௩

முதற்பொருள்களாவன:—நிலமும், பொழுதும்; கருப்பொருள்களாவன :— தெய்வம், உணவு, மிருகம், மரம், பறவை, பறை, செய்தி, யாழ்முதலியன. உரிப்பொருள்களாவன:— புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடலென்பன. இவற்றுள், பாலைத்திணைக்குரிய உரிப்பொருளாவது பிரிதல். இவற்றைத் தொல்காப்பியம்

அகத்திணையியல் முதலியவற்றால் விளங்க உண ர்க.

தலைவியைப்பிரியக்கருதியதலைவன், தனதுநெஞ்சைநோக்கி, ' நெஞ்சே ! தலைவியை உடன்கொண்டுசெல்வோமெனின், வழியிலுள்ளகாடுகள் சோ ழன் கரிகாற்பெருவளத்தானுடைய வேலினும் வெம்மையை உடையனவாக இராநின்றன ; இவளுடையமேனி அவனுடைய செங்கோலினும் தண்மை யையுடையதாக இராநின்றது ; ஆதலால், காவிரிப்பூம்பட்டினங்கிடைக்கு மாயினும் இவளைப்பிரிந்து நின்னுடன்வாரேன் ' என்று கூறுதன்முகமாகக் காவிரிப்பூம்பட்டினத்தையும் அதனையாண்ட கரிகாற்பெருவளத்தானுடைய வேற்படையையும் அவன் செங்கோலையும்சிறப்பித்துப் பாராட்டிச்செய்யப் பெற்றது இப்பாட்டெனக்கொள்க.

1. வசை இல் புகழ் - குற்றங்கூறுதலில்லாத புகழையுடைய, காவிரி (ரு) யென்க.

(கு - பு.) காவிரிக்கு மிக்கபுகழுடையதென்பதை, புறநானூறு : சங - "மிக்கு வருநீர்க் காவிரி", ௬அ - "தண்புனற்காவிரி", கூஅ - " புனிறுதீர் குழவிக் கிலிற்று......... போலச், சுரந்த காவிரி ", ககூ - " பூவிரி புதுநீர்க் காவிரி", ௩கூ - "கோடை யாயினுங்...காவிரி புரக்கும்", ௩கக - "முழங்கு நீர்ப்படப்பைக் காவிரி", பெரும்பாணாற்றுப்படை : உசகூ - உசஅ - "வேலி, யா யிரம் விளையுட் டாகக், காவிரி புரக்கும்", சிலப்பதிகா ரம், கானல்வரி : "ஊழி யுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி", பாரதம், அருச்சுனன் றவநிலைச்சருக்கம், உச : " காவிரி யென்னத் தப்பாக் கருணையான்" என்னும் செய்யுட்களாலுமுணர்க.

1 - 2. வயங்கு வெண்மீன் திசை திரிந்து தெற்கு ஏகினும் - விளங்கு கின்ற வெள்ளியாகியமீன் தான் நிற்றற்குரிய வடதிசையினில்லாமல் தென் றிசைக்கண்ணே போகினும்,

இதனாற் பெய்யும்பருவத்துப் பெய்யாமைக்குக் காரணங்கூறினார்.

(கு - பு.) வெள்ளியாகியமீன் - சுக்கிரனாகியநக்ஷத்திரம். சுக்கிரன் தெ ன்றிசையிற்சென்றால், க்ஷாமகாலமுண்டாகுமென்பது சோதிடநூற்றுணிபு ; புறநானூறு, கக௭ : " மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும், தென் றிசை மருங்கின் வெள்ளி யோடினும் " என்பதனாலுமுணர்க.

3 - 5. [தற்பாடிய தளியுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வான்பொ ய்ப்பினும் :] தளி உணவின் தன் பாடிய புள் தேம்ப புயல் மாறி வான் பொ ய்ப்பினும் - துளி உணவாகையினாலே தன்னைப்பாடிய வானம்பாடி புலரும் படி மழையைப்பெய்தலைத்தவிர்ந்து மேகம்பொய்த்து வற்கடகாலமாயினும்,

(கு - பு.) வானம்பாடி - ஒருவகைப்பறவை ; அது மேகத்தின் துளியை யேயுண்பது ; சாதகப்புள்ளென்றுங் கூறப்படும் ; திருவேங்கடவெண்பா, கஎ : "தண்டா மனாச்சுனையிற் சாதகமும் வேடுவரும், விண்டாரை நாடு கின்ற வேங்கடமே" என்பதனாலுணர்க.

புலரும்படி - உலரும்படி. வற் கடகாலம் - க்ஷாமகாலம்.

5 - 6. தான் பொய்யா மலை தலைய கடற் காவிரி - தான் பொய்யா மற்காலந்தோறும்வருகின்ற குடகமலையிடத்தே தலையினையுடைய, கடலிடத் தேசெல்கின்ற காவிரி,

கடல், கணவன்.

(கு - பு.) எந்தக்காலத்தும் காவிரி பொய்த்தலின்றிப்

பெருகுமென் பதை, புறநானூறு, ௩௫: " அலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினு, மிலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினு, மந்தண் காவிரி வந்து" எனவும்,

மணிமேகலை, பதிகம், ௨௪ - ௨௫: "கோனிலை திரிந்து கோடை நீடினுந், தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை" எனவும் பெரியோர் பாராட்டியிருத் தல்காண்க. குடகமலை - மேற்கே காவிரியுண்டாகுமிடத்தேயுள்ள மலை. இந்நதியின் அதிதேவதை கவேரரென்னும் இராசருஷியின்புத்திரியாக அவ தரித்ததுபற்றி, இது காவேரியென்று பெயர்பெற்றதென்றுகூறுவர்; மணி மேகலை, ௩ - ம் காதை, ௫௫ - ௫௬: " தவாநீர்க் காவிரிப் பாவைதன் றாதை, கவேரன் " என்பதனுலுணர்க ; அப்பெயர் காவிரியென்றுமருவியது. குடக மலையைக் காவிரியின் பிறந்தவீடென்றும் கடலை அதன்கணவனென்றும் கூறுதல் கவிமரபாதலின், கடலைக் கணவனென்றார்.

7. புனல் பரந்து பொன் கொழிக்கும் - நீர்பரந்து கரையிலே பொன்னைப்போகடும், சோழநாடு (௨அ),

(கு - பு.) காவிரியின் மெல்லியமணல் பொன்னிறமாக இருத்தல் பிரத் தியக்ஷம்; இதுபற்றியோ அல்லது வேறு எதுபற்றியோ அந்நதி, வடமொழி யில் ஸுவர்ணநதியென்றும் தென்மொழியில் பொன்னியென்றும் கூறப் படும். 'புனல்பரந்து பொன்கொழிக்கும்' என்றது, பொன்னியென்னும் அதன்பெயர்ப்பொருளை விளக்கியபடி.

8. விளைவு அறா வியல் கழனி - விளைதற்றொழின் மாறாத யுடைய கழனியிடத்தில்,

அகற்சியை

(கு - பு.) கழனி - மருதநிலம்.

9 - 12. கார் கரும்பின் கமழ் ஆலைத் தீ தெறுவிற் கவின் வாடி நீர் செறுவின் நீள் நெய்தற் பூ சாம்பும் புலத்து ஆங்கண் - பசிய கரும்பின் கமழும்பாகை அடுகின்ற கொட்டிலில் நெருப்பிற்புகை சுடுகையினாலே அழகு கெட்டு நீரையுடைத்தாகிய செய்யின்கணின்ற நீண்ட நெய்தற்பூ வாடும நிலத்தையுடைய வயலிடத்து, குறும்பல்லூர் (உஅ),

பட்டினப்பாலையுரை.

(கு - பு.) கமழ், தீ - ஆகுபெயர்கள். கொட்டில் - பாகுகாய்ச்சுமிடம்.
செய் - வயல். குறும்பல்லூர் - நெருங்கிய பல வூர்கள்.

13 - 15. காய்ச் செந்நெற் கதிர் அருந்து மோடு எருமை முழுக்குழவி கூடு நிழல் துயில் வதியும் - காய்த்தலையுடைய செந்நெற்கதிரைத்தின்ற வயிற்றையுடைய எருமையீன்ற முற்பட்டகன்றுகள் நெடுங்கூட்டினுடைய நிழலிலே உறக்கத்தைக்கொள்ளும், குறும்பல்லூர் (உஅ),

(கு - பு.) கூடு - நெற்சேர்.

16. கோள் தெங்கின் - குலைகளையுடைய தெங்கினையும்,

16. குலை வாழை - குலைகளையுடைய வாழையினையும்,

17. காய் கமுகின் - காயையுடைய கமுகினையும்,

(கு - பு.) கமுகு - பாக்குமரம்.

17. கமழ் மஞ்சள் - மணநாறும் மஞ்சளினையும்,

18. இனம் மாவின் - இனமான மாமரங்களினையும்,

18. இண பெண்ணை - குலைகளையுடைய பனையினையும்,

19. முதல் சேம்பின் - அடிபரந்த சேம்பினையும்,

19. முளை இஞ்சி-முளையினையுடைய இஞ்சியினையுமுடைய, விளைவுறு வியன் கழனி (அ) யெனமுன்னேகூட்டுக.

20 - 25. [அகனகர் வியன்முற்றத்துச், சுடர்நுதன் மடநோக்கி, னே ரிழை மகளி ருணங் குணுக் கவருங், கோழி யெறிந்த கொடுங்காற் கனங் குழை, பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு, முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும் :]

21 - 23. சுடர் நுதல் மட நோக்கின் நேர் இழை மகளிர் உணங்கு உணு கவரும் கோழி எறிந்த கொடுங்கால் கனம் குழை - ஒளியையுடைய நுதலினையும் மடப்பம்பொருந்தினநோக்கினையும் பொருந்தின பூணினையு முடையமகளிர் உலருகின்ற நெல்லைத்தின்னுங் கோழியையெறிந்த வளைந்த இடத்தையுடைய பொன்னாற்செய்த மகரக்குழை.

(கு - பு.) நுதல் -நெற்றி. மடப்பம்=மடம் - அறியாமை ; 'மடப்பம் - கொளுத்தக்கொண்டுகொண்டதுவிடாமை ' என்பர் ந ச் சினா ர்க் கி னியர். பூண் - ஆபரணம். மகரக்குழை - மகரமீன்வடிவமாகச்செய்யப்பட்ட குண் டலம்.

24, 25, 20. பொன் கால் புதல்வர் புரவி இன்று உருட்டும் முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும் அகல் நகர் வியன் முற்றத்து - பூணணிந்த தா ளினையுடைய சிறார் குதிரைபூட்டாமற் கையாலுருட்டும் மூன்றுருளையை யுடைய் சிறுதேரினது வழியின்முன்பைவிலக்கும் செல்வமகன்ற மனையினது அகன்ற முற்றத்தையுடைய, குறும்பல்லூ(உஅ)ரென்க.

(சூ - பு.) சிறார் - சிறுபிள்ளைகள்.
நெல்லைக்கவரவந்தகோழிகளை ஓட் டுதற்கு மகளிரெறிந்த
குண்டலங்கள் சிறுவர்கள் செலுத்தும் சிறுதேரைத்

தடுக்குமென்னுமிக்கருத்தை, "பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதக, நற்சிறா ரூர்தலி னங்கைமார் வீசீஇ, யுற்றவர் கோழிமே லெறிந்த வொண் குழை, மற்றத்தே ருருள்கொடா வளமை சான்றவே" (சீவக. நாமக. ௬௨:) என்பதும், "தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரைப், பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத், திலங்குதொடி நல்லார் சிலர்நின் றேற்றி" (மணி மே. ௩-ம் காதை, ௧௪௧ - ௧௪௩:) என்பதும், 'பெருவாழ்க்கையினரென் பார் குழை கொண்டு கோழி யெறியுமவரென்றார்,' (நன்னூல். ௪௦௮, விருத்தி.) என்பதும், "கோழி விட்டெறி குழையினைக் குண்டலப் புழுவென், றூழி யின்கணா மீன்கவர் காகமங் காப்ப" (திருவானைக்காப்புராணம், திருநாட்டுச். ௧௨௨:) என்பதும் ஒருவகையாகத் தழுவிவந்திருத்தல்காண்க.

26 - 27. [விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக், கொழும்பல் குடிச் செழும்பாக்கத்து :]

இஃது, இருஞ்செருவின் (௭௨) விலங்குபகையல்லது கலங்குபகையறி யாப் பாக்கமென மேலேகூட்டிற்று.

28. குறு பல் ஊர் நெடு சோணாட்டு - ஒன்றற்கொன்று அண்ணிதாய்ப் பலவாகிய ஊர்களையுடைய பெரியசோழநாட்டில்,

சோழநாடென்பது சோணாடென மரூஉமுடிபு.

சோழநாட்டுப்பட்டின, (உகஅ) மென்க.

29 - 30. வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி நெல்லொடு வந்த வல் வாய் பஃறி - வெள்ளிதாகிய உப்பினது விலையைச்சொல்லி விற்ற நெல்லைக் கொண்டுவந்த வலிய இடத்தையுடைய படகை.

பஃறி - ஓடமுமாம்.

31 - 32. பணை நிலை புரவியின் அணை முதல் பிணிக்கும் கழி சூழ் படப்பை - பந்தியிலே நிற்றலையுடைய குதிரைகளைப்பிணிக்குமாறுபோலே சார்ந்தீந்தறிகளிலேபிணிக்கும் கழிசூழ்ந்த பக்கத்திணையும்.

அணைமுதல் - அணையிடத்துத் தறியுமாம், படப்பை - தோட்டமுமாம்.

(கு - பு.) பந்தி - குதிரைச்சாலை. அணை - கரை.

32 - 33. கலி யாணர் பொழில் புறவின் பூதன்டலை - மனச்செருக் கெழுதற்குக் காரணமான புதுவருவாயினையுடைய தோப்புக்களுக்குப் புறம் பாகிய பூஞ்சோலைகளையும்,

(கு - பு.) புதுவருவாய் - புதுவரும்படி.

34 - 38. [மழைநீங்கிய மாவிசும்பின், மதிசேர்ந்த மகவெண்மீ, னுரு கெழுதிற லுயர்கோட்டத்து, முருகமர்பூ முரண்கிடக்கை, வரியணிசுடர் வான்பொய்கை :]

34, 35, 36, 38. மழை நீங்கிய மா விசும்பின் மதி சேர்ந்த மகவெண் மீன் உரு கெழு திறல் உயர் கோட்டத்து வான் பொய்கை - மழைமாசுநீங்

ஙள பெரிய ஆகாயத்திடத்து மதியைச் சேர்ந்த மகமாகிய வெள்ளியமீ னினது வடிவுபொருந்தின வலியையுடைய உயர்ந்த கரையையுடைய நன் ருகிய பொய்கைகளையும்,

மதியும் மீனும் பொய்கைக்கும் கரைக்கும் உவமிக்கும்பொருள்.,

இனி, உயர்கோட்டத்தை, எல்லாரும் மதியைச்சேர்ந்த மகவெண்மீனைப் பார்க்கைக்கிடமாகிய கோயிலாக்கிக் கோயிலும் பொய்கையுமென ஏண்ணு தலுமாம்.

இனிப் பொய்கைக்கரையிலே கோயிலாக்கிக் கோயிலும் பொய்கையும் மதிசேர்ந்த மகவெண்மீன்போன்றவென்றுமாம்.

(கு - பு.) மகவெண்மீன் - மகநக்ஷத்திரம்; அது, முடமுகம்போன்ற வடிவமுடையதாதலின், கரைக்கு உவமையாயிற்று. கோட்டமென்பதற்குக் கோயிலென்றும் பொருளுண்டு; 'எல்லாரும் மதியைச்சேர்ந்த மகவெண் மீனைப் பார்க்கைக்கு இடமாகிய கோயில் ' என்றது, சந்திரன் கோயிலை; காவிரிப்பூம்பட்டினத்திற் சந்திரனுக்குக் கோயிலிருந்ததென்பதை, சிலப் | பதிகாரம், கனுத்திறமுரைத்தகாதையிலுள்ள, (கக - ம் அடி:) "நிக்கந்தன் கோட்ட நிலாக்கோட்டம்புக்கு" என்பதனாலுணர்க. எல்லாரும் பார்க்கைக் கென இயைக்க.

37 - 38. முருகு அமர் பூ முரண் கிடக்கை வரி அணி சுடர் பொய் கை - மணம்பொருந்தின பூக்கள் நிறத்தாற் றம்முள் மாறுபட்டபரப்பாலே பலநிறமணிந்த ஒளியினையுடைய பொய்கை,

39. இரு காமத்து இணை ஏரி - இம்மையிலும் மறுமையிலுமுண்டாகிய காமவின்பத்தினைக்கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகளையும்,

அது, "சோமகுண்டஞ் சூரிய குண்டத் துறைமூழ்கிக், காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடுந், தாமின் புறுவ ருலகத்துத் தையலார், போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்" என்றதனானுமுணர்க; (சிலப். கனாத்திறமுரைத்தகாதை, ருகூ - சுஉ.)

(கு - பு.) இணைந்த - இரண்டாகிய. மேற்கோளுக்குப் பொருள்: சோமகுண்டம் சூரியகுண்டத்துறைமூழ்கி - சோமகுண்டம் சூரியகுண்டமென்னும் அத்தீர்த்தத்தில் ஆடி, காமவேள் கோட்டம் தொழுதார் தையலார் - மன்மதனுடைய கோயிலிற்புகுந்து அவனைத்தொழுதாராகியமகளிர், உலகத் துக் கணவரொடும் தாம் இன்புறுவர் - இவ்வுலகத்திற் பிரிவின்றியிருந்து கணவரோடும் இன்புற்றிருப்பார்கள், போகம் செய் பூமியினும் போய்ப்பிறப் பர் - மறுமையிலும் போகபூமியிற்போய்ப்பிறந்து கணவரோடும் இன்புற்றிருப்பார்கள். இங்கேகூறிய சோமகுண்டமும் சூரியகுண்டமும் முறையே, காவிரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்த திருவெண்காட்டிலுள்ள சோமதீர்த்தமும் சூரியதீர்த்தமுமாமென்று சிலபெரியோர்கூறுகின்றனர்.

பட்டினப்பாலையுரை.

40 - 41. புலி பொறி போர் கதவின் திரு துஞ்சும் திண் காப்பின் - புலியாகிய அடையாளத்தினையும் பலகைகள்

தம்மிற்சேருதலையுடைய கத வினையுமுடைய திருமகள்தங்கும் திண்ணிய மதிலினையும,

(கு - பு.) காவிரிப்பூம்பட்டினம் சோழர்களுக்குரிய இராசதானியாத லின், அவர்களுக்குரிய அடையாளமாகிய புலிவடிவம்கூறப்பட்டது.

42 - 50. [புகழ்நிலைஇய மொழிவளர, வறநிலைஇய வகனட்டிற், சோறு வாக்கிய கொழுங்கஞ்சி, யாறுபோலப் பரந்தொழுகி, யேறுபொரச் சேறாகித், தேரோடத் துகள்கெழுமி, நீறாடிய களிறுபோல, வேறுபட்ட வினையோ வத்து, வெண்கோயின் மாசூட்டும் :]

44 - 45. சோறு வாக்கிய கொழு கஞ்சி யாறு போல பரந்து ஒழுகி - சோற்றைவடித்தொழுக்கிய கொழுவிய கஞ்சி யாறுகள்போலே எங்கும்பரந் தொழுகி,

46. ஏறு பொர சேறாகி - இடபங்கள் தம்மிற்பொருகையினாலே பின்பு சேறாய்,

47. தேர் ஓட துகள் கெழுமி - பலதேர்களும் ஓடுகையினாலே தூளி யாய்ப்பொருந்தி,

49 - 50. வேறு பட்ட வினை ஓவத்து வெண் கோயில் - வேறுபட்ட தொழில்களையுடைய சித்திரங்களையுடைய வெள்ளிய கோயிலகளை,

(கு - பு.) கோயில்களை - அரண்மனைகளை.

48, 50. நீறு ஆடிய களிறு போல மாசு ஊட்டும - புழுதியைமேலே பூசிக்கொண்ட யானையைப்போல அழுக்கேறப்பண்ணும்,

கஞ்சி ஒழுகிச் சேருகிக் கெழுமிக் கோயிலை மாசு ஊட்டுதற்குக்காரண மாகிய அட்டில் (௪௩) எனக்கூட்டுக.

(கு - பு.) அட்டில் - மடைப்பள்ளி.

42 - 43. புகழ் நிலைஇய மொழி வளர அறம நிலைஇய அகன் அட்டில் - இம்மைக்குப் புகழ் நிலைபெற்றசொல் எங்கும்பரவாநிற்க மறுமைக்கு அறம்நிலைபெற்ற அகன்ற அட்டில்,

இருமையினும் பெறும் பயனுண்டாகச் சோறிடும் சாலையென்றவாறு.

51 - 52. தண் கேணி தகை முற்றத்து பகடு எருத்தின் பல சாலை - குளிர்ந்த சிறியகுளங்களை உள்ளேயடக்கின முற்றத்தினையுடைய பெரிய எருத்திற்கு வைக்கோலிடும் பலசாலையினையும்,

(கு - பு.) முற்றத்தினையுடையசாலை,

53. தவ பள்ளி - தவஞ்செய்யும் அமண்பள்ளி பௌத்தப்பள்ளிகளையும்,

(கு - பு.) அமண்பள்ளி - அமணரிருப்பிடம்; பௌத்தப்பள்ளி - பௌத்தரிருப்பிடம்.

53 - 58. [தாழ்காவி, னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு, மாவுதி நறும் புகை முனைஇக் குயிறம், மாயிரும் பெடையோ டிரியல் போகப், பூதங் காக் கும் புகலருங் கடிநகர்த், தூதுணம புறவொடு துச்சிற் சேக்கும் :]

54, 55, 56. அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும் ஆவுதி நறு புகை முனைஇ குயில் தம் மா இரு பெடையோடு இரியல் போகி - விளங்குகின்ற சடையினையுடைய இருடிகள் தீயின்கண்ணே வேட்டலைச்செய்யும் நெய்முதலியவற்றின் நறிய புகையைவெறுத்துக் குயில்கள் தம்முடைய கருமையையும் பெருமையையுமுடைய பேடைகளுடனே கெடுதலையுடையவாய் நீங்கிப்போய்,

(கு - பு.) வேட்டலை - ஓமஞ்செய்தலை.

57, 58, 53. பூதம் காக்கும் புகல் அரு கடி நகர் தூது உண் அம் புறவொடு துச்சில் சேக்கும் தாழ் காவின் - பூதங்கள் வாசலிலேகாத்திருக்கும் புகற்கரிய அச்சத்தையுடைய காளிகோட்டத்திடத்திற் கல்லைத்தின்னும் அழகிய புறவுகளுடனே குடியிருப்பாகத்தங்கும் இளமரக்காவினையும்,

முனிவரைத் தன்னிடத்தேகொண்டிருத்தலின், காக் காரணமாயிற்று.

(கு - பு.) பாலைநிலத்துள்ள ஒருவகைப்புறாக்கள், கல்லையேதின்று காலங்கழித்திருக்குமென்பதை, " தூதுணம் புறவைக தேண் டோவறக், காத லந் துணையொடு கழுமிப் புல்லுவ, வேதுண வுண்ணினு மெவர்க்கும் வேள் கணை, தீர்திற மரிதெனத் தெளிப்ப போன்றன" (திருநாட்டுப்படலம், ௬௨) என்னும் திருத்தணிகைப்புராணத்தாலுமுணர்க. கா - சோலை,

59 - 77. [முதுமரத்த முரண்களரி, வரிமணலகன்றிட்டை, யிருங் கிளை யினனொக்கற், கருந்தொழிற் கலிமாக்கள், கடலிறவின் சூடுதின்றும், வயலாமைப் புழுக்குண்டும், வறளடம்பின் மலர்மலைந்தும்,

புனலாம்பற் பூச் சூடியு, நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு, நாண்மீன் விராய கோண்மீன் போல, மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக், கையினுங் கலத்தினு மெய் யுறத் தீண்டிப், பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ, திருஞ்செருவி னிகன் மொய்ம்பினோர், கல்லெறியுங் கவண்வெரீஇப், புள்ளிரியும் புகர்ப்போந்தைப், பழம்பன்றிப் பல்கோழி, யுறைக்கிணற்றுப் புறச்சேரி, மேழகத் தகரொடு சிவல்விளை யாட :]

74, 73. புகர் போந்தை புள் வெரீஇ இரியும் கல் எறியும் கவண் - நிறத்தையுடைய பனையிலிருக்கும் பறவைகளஞ்சிக் கெட்டுப்போதற்குக் காரணமான கல்லையெறியும் கவணையுடைய, கலிமாக்கள் (கூ௨) எனமுன்னே கூட்டுக.

(கு - பு.) பனையிலிருக்கும்பறவைகள் - அன்றில்முதலியன. கலிமாக்கள் - செருக்கையுடையபிள்ளைகள்.

ரு

61 - 62. இனன் ஒக்கல் கரு தொழிற் கலி மாக்கள் - ஓரினச்சுற்றத் தினையும் வலியதொழிலையுமுடைய செருக்கின பரதவர்பிள்ளைகள்,

(கு - பு.) பரதவர் - நெய்தனிலமாக்கள்.

63. கடல் இறவு இன் சூடு தின்றும்-கடலிறாக்களின் இனிய சுடப்பட்டதனைத்தின்றும்,

(கு - பு) இறாக்கள் - ஒருவகைமீன்கள். சுடப்பட்டது - இறைச்சி.

64. வயல் ஆமை புழுக்கு உண்டும் - வயலில் ஆமையைப் புழுக்கின இறைச்சியைத்தின்றும்,

65. வறள் அடம்பின் மலர் மலைந்தும் - மணலிலேபடர்ந்த அடப்பம் பூவைத் தலையிலேகட்டியும்,

66. புனல் ஆம்பல் பூ சூடியும் - நீரினின்ற ஆம்பற்பூவைப் பறித்துச் சூடியும்,

67 - 68. நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரு நாள் மீன் விராய கோள் மீன் போல-நீலநிறத்தையுடைய ஆகாயத்தே வலமாகஎழுந்து திரியும் நாள்களாகிய மீன்களோடேகலந்த கோள்களாகிய மீன்கள்போல,

(கு - பு.) நாள்களாகியமீன் - இருபத்தேழுநக்ஷத்திரங்களாகிய மீன் கள். கோள்களாகிய மீன்கள் - நவக்கிரகங்களாகிய மீன்கள்.

69, 77, 69. மலர் தலை மன்றத்து மேழகம் தகரொடு சிவல் விளையாட பலர் உடன் குழீஇ - அகன்ற இடத்தையுடைய மன்றிலே மேழகக்கிடா யோடே சிவலையுங்கொண்டு பொருவித்து விளையாடும்படி பலரும் சேரத் திரண்டு,

(கு - பு.) மன்று - பொதுவிடம். மேழகக்கிடாய் - ஆட்டுக்கிடாய். சிவல் - ஒருவகைப்பறவை.

மாக்கள், தின்றும் உண்டும் மலைந்தும் சூடியும் விளையாடும்படி மீன் போற் குழீஇயென்க.

72, 71, 60, 61, 59, 71, 70, 72. இகல் மொய்ம்பினோர் பெரு சின த்தால் வரி மணல் அகன் திட்டை இரு கிளை முதா மரத்த முரண் களரி புறக் கொடாது கையினும் கலத்திலும் மெய் உற தீண்டி இரு செருவின் வில நங்கு பகை அல்லது (௨௬) கொழு பல் குடி (௨௭)

கலங்குபகை அறியா (உகூ) செழு பாக்கத்து (உஎ) - அங்ஙனம்பொருவித்தலிற்றோன்றும் மாறு பாடுசெய்யும் வலியினையுடையராய் ஆண்டெப்பிறந்த பெரியசினத்தாலே அறலினையுடைத்தாகிய மணலினையுடைய அகன்றமேட்டில் பெரிய கிளைத் தலையுடைய பழையமரத்தையுடையவாகிய பொருதற்குச்சமைந்த போர்க் களத்தேசென்று முதுகுகொடாமற் கையாற்குத்தியும் படைக்கலங்களாலே வெட்டியும் ஒருவர்மெய்யோடு ஒருவர்மெய் உறும்படி கலந்துபொரும் பெரி

யபோரா விலங்குகின்ற பகையல்லது செருக்கினையுடைய பலகுடி கலங்கி எழுந்திருத்தற்குக் காரணமானபகையை அறியாத பாக்கங்களையும்,

பாக்கம் - கடற்கரையிலூர்கள்.

(கு-பு.) பாக்கங்களில் விளையாட்டுச்சண்டைகளேயுள்ளன வென்றபடி.

75 - 76. பறழ் பன்றி பல் கோழி உறை கிணறு புறச்சேரி - குட்டிகளையுடைய பன்றிகளையும் பலசாதியாகிய கோழிகளையும் உறைவைத்த கிணறுகளையுமுடைய இழிக்குலத்தோரிருக்குந்தெருவுகளையும்,

78 - 79. [கிடுகுநிரைத் தெஃகூன்றி, நடுகல்லி னரண்போல :] நடு கல்லின் அரண் போல கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி -

நடுகல்லினிற்கின்ற தெய்வமாயவனும் அவனுக்குவைத்த கிடுகும் வேலும்போலக் கிடுகைநிரைத்து வேலையூன்றி, புறக்கொடாது (எக) என முன்னேகூட்டுக.

அரண், ஆகுபெயர்.

(கு - பு.) சண்டையிற் பின்னிடாமற்போர்செய்து இறந்தவீரரைத் தெய்வமாகப்பாவித்து, அவர்பெயரை ஒருகல்லிலெழுதி, அதனைநட்டு அதன் முன்னே வேலையூன்றி அக்கல்லைச்சூழத் தட்டிகளைக்கட்டி வழிபடுதல் பண்டைக்காலவழக்கம்; அக்கல் வீரக்கல்லெனவும், அத்தெய்வம் வீரனெனவும் வழங்கும். கிடுகு - கேடகமுமாம். அரண், தெய்வத்திற்கு ஆனமையின், ஆகுபெயர்.

80 - 93. [நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய, குறுங்கூரைக் குடிநாப்ப, ணிலவடைந்த விருள்போல, வலையுணங்கு மணன்முன்றில், வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த, வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர், சினைச்சுறவின் கோடுநட்டு, மனைச்சேர்த்திய வல்லணங்கினான், மடற்றாழை மலர்மலைந்தும், பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும், புன்றலை யிரும்பரதவர், பைந்தழைமா மகளிரொடு, பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா, துவவுமடிந் துண் டாடியும்.]

90. புல் தலை இரு பரதவர் - சிவந்த தலையினையுடைய பெரியபரதவர்,

93. உவவு - உவாநாளாகையினாலே,

(கு - பு.) உவாநாள் - பௌர்ணிமைத்திதி.

92 - 93. பாய் இரு பனி கடல் வேட்டம் செல்லாது மடிந்து - பரந்த கருமையையுடைய குளிர்ந்த கடலில்

மீன்பிடித்தற்குப்போகாது மன எழுச்சிதவிர்ந்து,

(கு - பு.) கடல் பௌர்ணிமையிற்பொங்கிக் கொந்தளித்துக்கொண் டிருக்குமாதலால், பரதவர் மீன்பிடித்தற்காகக் கடலிற்செல்லார்.

91. பைந்தழை மா மகளிரொடு - பசிய தழையினையுடைய கரியநிறத் தினையுடைய தம்மகளிரோடேகூடி,

(கு - பு.) தழை - மலர்கள், தளிர்கள், தழைகள் இவற்றாலாகிய உடைவிசேடம் ; [புறநானூறு, ௧௧௬, ௨௪௮ - ம் செய்யுட்களைப்பார்க்க].

80 - 81. நெடு தூண்டிலில் காழ் சேர்த்திய குறு கூரை குடி நாப்பண் - நெடியதூண்டிலிற்காம்புகள் சார்த்திவைத்த குறிய இறப்பினையுடைய குடியிருப்புநடுவில்,

82, 83, 87. நிலவு அடைந்த இருள் போல வலை உணங்கு மணல் முன்றில் மனை - நிலவுநடுவேசேர்ந்த இருளைப்போலே வலைகிடந்து உலரும் மணலையுடைத்தாகிய முன்றிலினையுடைய மனையிடத்தே,

(கு - பு.) நிலவு மணலுக்கும் இருள் வலைக்குமுவமை.

86 - 87. சினை சுறவின் கோடு நட்டு சேர்த்திய வல் அணங்கினால் - சினையையுடைய சுறவின் கொம்பைநட்டு அதனிடத்தேயேற்றிய வலிய தெய்வம்காரணமாக,

84 - 85. வீழ் தாழை தாள் தாழ்ந்த வெண் கூதாளத்து

தண் பூ கோதையர் - விழுதையுடைய தாழையின் அடியிடத்தேநின்ற வெண்டாளி யினது தண்ணியபூவாற்செய்த மாலையினையுடையராய்,

88. மடல் தாழை மலர் மலைந்தும் - மடலையுடைய தாழையினது மலராச்சூடியும்,

89. பிணர் பெண்ணை பிழி மாந்தியும் - சருச்சரையையுடையபனை யிற்கள்ளையுண்டும்,

93. உண்டு ஆடியும் - நெற்கள்ளையுண்டு விளையாடியும்,

(கு - பு.) நெய்தனிலத்தில் வலைவளம் தப்பினால், நுளைச்சாதிமகளிர், சுறாமீன் கொம்பைநாட்டி வழிபட, அதனினின்றும் வருணன் வெளிப் பட்டு அவர்களுக்கு வரங்கொடுப்பானென்பது மரபு ; இதனை, "சுறவ முண் மருப் பணங்கயர் வனசுழிச் சூழல்" (பெரியபுராணம். திருக்குறிப்பு. எ.) எனவும், "புறவுக் கோட்டஞ் செயும்வனப்பிற் பூவை மொழியார் விழி தான்வா, ழிறவுக் கோட்டுக் கடல்பணிக்கு மெழிலா லவர்நாட் டினரிறைஞ் சுஞ், சுறவுக் கோட்டிட் கடலரசன் ருேன்றி வரங்க ளினிதருளு, நறவக் கோட்டு மலர்ப்புன்னை ஞாழற் பொதும்ப ரெவ்விடனும்" (திருவானைக் காப்புராணம், திருநாட்டுச்சிறப்பு, கசு.) எனவும் வருவனவற்றாலுணர்க. வெண்டாளி - ஒருவகைச்செடி.

94. புலவு மணல் பூ கானல் - புலாலுற்றத்தையுடைய மணலிடத்தே பூக்களையுடைய கடற்கரையில், குடி (அக) யென்க.

95. மா மலை அணைந்த கொண்மூ போலவும் - கரியமலையைச்சேர்ந்த செக்கர்மேகம்போலவும்,

இது, கரிய உயர்ந்த திரையின்மீதே சிவந்த யாற்றுநீர் பரந்ததற்குவமை.

(கு - பு.) செக்கர்மேகம் - செம்மேகம். திரை - அலை.

96. *தாய் .... தழுவிய குழவி போலவும்* - தாயுடைய (மார்பைத்) தழுவிய பிள்ளையைப் போலவும்,
இஃது ஒன்றுபடுதற்கு உவமை.

(கு - பு.) இங்கேகூறிய உவமையையே, "தாய்.........தழுவிய குழவி போலவு, மாமலை தழுவிய மஞ்சு போலவும்" (சீவக. நாம. எக.) எனத் திருத்தக்கதேவரும் கூறியிருக்கின்றனர்.

97. *தெறு நீர் புணரியொடு யாறு தலைமணக்கும்* - தெளிந்த கடலிற் றிரையோடே காவிரி தலைகரக்கும்,
(கு - பு.) கரக்கும் - ஒளிக்கும்.
98. [மலியோதத் தொலிகூடல்:] ஓதத்து ஒலி மலி கூடல் - ஓதத் தினுல் ஒலிமலிந்த புகார்முகத்தே,
(கு - பு.) புகார்முகம் - சங்கமுகத்துறை.
99. *தீது நீங்க கடலாடியும்* - தீவினைபோகக் கடலாடியும்,
100. *மாசு போக புனல் படிந்தும்* - உப்புப்போக நீரிலேகுளித்தும்,
(கு - பு.) நீர் - உப்பில்லாத நல்லநீர்.
101. *அலவன் ஆட்டியும்* - ஞெண்டுகளையாட்டியும்,
(கு - பு.) ஞெண்டுகள் - நண்டுகள்.

101. *உரவு திரை உழக்கியும்* - பரக்கின்றதிரையிலே விளையாடியும்,

102. பாவை சூழ்ந்தும் - பாவைகளைப்பண்ணியும்,

(கு - பு.) தண்டான் கோரையாற்செய்யப்படும் பாவையைவைத்துக் கொண்டு விளையாடல் நெய்தனிலத்து மகளிர்தொழில் ; "பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே" (ஐங்குறுநூறு, 155) என்பதனாலுமுணர்க.

102. பல் பொறி மருண்டும் - ஐம்பொறிகளால்நுகரும்பொருள்களை நுகர்ந்து மயங்கியும்,

103. அகலாக் காதலொடு பகல் விளையாடி - நீங்காதவிருப்பத்து டனே பகற்பொழுதெல்லாம் விளையாடி,

பரதவர் (௯0) உவவுமடிந்து (௯௫) மகளிரோடேகூடிக் (௯௪) குடிகாப் பண் (௮௧) மனையிடத்தேசேர்த்திய அணங்கினைற் (௮௭) கோதையராய் (௮௬) மலைந்தும் (௮௮) மாந்தியும் (௮௯) ஆடியும் (௯௫) பின்னர்க் கடலிலே (௯௮) தீதுநீங்க ஆடியும் (௯௯) படிந்தும் (௧00) ஆட்டியும் உழச்கியும் (௧0௧) சூழ்ந் தும் மருண்டும் (௧0௨) காதலொடு பகல்விளையாடி (௧0௩) யெனமுடிக்க.

104 - 117. [பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும், பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத், துணைப்புணர்ந்த மடமங்கையர், பட்டுநீக்கித் துகிலுடுத்து, மட்டுநீக்கி மதுமகிழ்ந்து, மைந்தர் கண்ணி மகளிர் சூடவு, மக

ளிர்கோதை மைந்தர் மலையவு, நெடுங்கான்மாடத் தொள்ளெரி நோக்கிக், கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும், பாடலோர்த்து நாடக நயந் தும், வெண்ணிலவின் பயன்றுய்த்தும்,

கண்ணடைஇய கடைக்கங்குலான், மாஅகாவிரி மணங்கூட்டுங், தூஉவெக்கர்த் துயின்மடிந்து:]

104, 111. பெறற்கு அரு தொல் சீர் துறக்கம் ஏய்க்கும் நெடு கால் மாடத்து - பெறுதற்கரிய பழைய தலைமையினையுடைய சுவர்க்கத்தையொ க்கும் நெடிய கால்களையுடைய மாடத்திடத்தேயிருந்து,

113 - 114. பாடல் ஓர்த்து நாடகம் நயந்தும் வெள் நிலவின் பயன் துய்த்தும் - பாட்டைக்கேட்டு நாடகங்களைவிரும்பிக்கண்டும் வெள்ளிய நில விற்பெறும்பயனை நுகர்ந்தும்,

108. மட்டு நீக்கி மது மகிழ்ந்தும் - கள்ளுண்டலைக்கைவிட்டுக் காம பானத்தையுண்டு மகிழ்ந்தும்,

(கு - பு.) காமபானம் - காமவின்பநுகர்ச்சிக்காகப் பருகுவது.

107. பட்டு நீக்கி துகில் உடுத்தும் - பட்டுடுத்தவற்றைநீக்கி நொய்ய வாகிய வெள்ளியவற்றையுடுத்தும்,

106, 115. துணை புணர்ந்த மடமங்கையர் கண் அடை இய கடை கங்குலான் - கணவனைக்கூடின மடப்பத்தையுடையமகளிர் பின்புகண்டுயி ன்ற பிற்பட்டசாமத்தையுடைய இராக்காலத்தே,

மாடத்தேயிருந்து நயந்தும் துய்த்தும் மகிழ்ந்தும் உடுத்தும் துணைப்பு ணர்ந்தமடமங்கையர் கண்டுயின்ற கங்குலென்று கங்குற்கு அடைகூறினர்.

109 - 110. மைந்தர் கண்ணி மகளிர் சூடவும் மகளிர் கோதை மைந் தர் மலையவும் - மாடத்தேயிருந்து நுகர்ந்து அனந்தர்மிக்கமையால், கணவர் சூடிய கண்ணியைத் தமதுகோதையாகநினைத்து மகளிர்சூடிக்கொள்ளும் படியாகவும் மகளிர்சூடியகோதையைத் தமது கண்ணியாகநினைத்து மைந்தர் சூடிக்கொள்ளும்படியாகவும் கண்டுயின்றகங்குலென இதுவும் கங்குற்கு அடைகூறினர்.

(கு - பு) அனந்தர் - கள்ளின்மயக்கம். கண்ணி, கோதை - மாலை விசேடங்கள்.

111, 112, 115. நெடு கால் மாடத்து குரூஉ சுடர் ஒள் எரி நோக்கி கொடு திமில் பரதவர் எண்ணவும் கண் அடைஇய கடை கங்குல் - அம்மாடத் திட்ட நிறவிய விளக்குக்களில் விடியற்காலத்து அவியாமல் ஒள்ளியவாய் எரி கின்ற அவையிற்றைப்பார்த்து இராக்காலத்தே வளைந்த திமிலைக்கொண்டு கடலிலேபோன பரதவரெண்ணும்படியாகவும் கண்டுயின்ற கடைக்கங்கு லென்றும் கங்குற்கு அடைகூறினர்.

விளக்குக்களிலே எண்ணெயைவார்த்துத் தூண்டுவாரின்றி எல்லாரும் துயில்கோடலிற் சில எரிந்தவற்றையெண்ணினர்.

(கு - பு.) அவையிற்றை - அவற்றை. திமில் - மீன்பிடித்தற்குரியபடகு.

பட்டினப்பாலையுரை.

உங.

105, 116, 105, 116, 117. பொய்யா மரபின் மா காவிரி பூ மலி பெருந்துறை மணம் கூட்டும் தூ எக்கர் துயில் மடிந்து - பொய்யாமல் நீர்
வருமுறைமையினை யுடைய பெரிய காவிரி பூமிக்க பெரியதுறைகளிற் பூமணங்களைக் கொண்டுவந்துதிரட்டும் தூய இடுமணலிலே துயில்கொண்டுகிடந்து,

பரதவர் (கo), பகல்விளையா டி (கoரு) மாடத்திலிருப்பாரெல்லாரும் கண் ணடைஇய கடைக்கங்குலிலே (ககடு) தூவெக்கர்த் துயின்மடிந்து (ககஎ) மற் றைநாள் மகளிரொடு செறிய (கஙகு) எடுத்த விழவரு

வியலாவணம் (கடுஅ) எனக் கூட்டுக.

118 - 141. [வாலிணர் மடற்றாழை, வேலாழி வியன்றெருவி, னல்லி றைவன் பொருள்காக்குந், தொல்லிசைத் தொழின்மாக்கள், காய்சினத்த கதிர்ச்செல்வன், றேர்பூண்ட மாஅபோல, வைகறொறு மசைவின்றி, யுல்கு செயக் குறைபடாது, வான்முகந்தநீர் மலைப்பொழியவு, மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு, மாரிபெய்யும் பருவம் போல, நீரினின்று நிலத்தேறவு,நிலத்தி னின்று நீர்ப்பரப்பவு, மளந்தறியாப் பலபண்டம், வரம்பறியாமை வந்தீண்டி, யருங்கடிப் பெருங்காப்பின், வலியுடை வல்லணங்கினோன், புலிபொறித்துப் புறம்போக்கி, மதிநிறைந்த மலிபண்டம், பொதிமூடைப் போரேறி, மழை யாடு சிமய மால்வரைக் கவாஅன், வரையாடு வருடைத் தோற்றம் போலக், கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை, யேழகத் தகரோ டுகளு முன்றில்:]

126 - 128. வான் முகந்த நீர் மலை பொழியவும் மலை பொழிந்த நீர் கடல் பரப்பவும் மாரி பெய்யும் பருவம் போல - மேகம் தான்முகந்தநீரை மலை யிடத்தே சொரிதற்காகவும் மலையிற்சொரிந்தநீரை மீண்டு கடலிலே பரப்பு தற்காகவும் மாரிக்காலத்தே பெய்கின்றசெவ்விபோல,

வான், எழுவாயாகப் பெய்யுமென்னும் பயனிலைகொண்டது.

118 - 119, 133. வால் இணர் மடல் தாழை வேலாழி வியல் தெரு வில் அரு கடி பெரு காப்பின் - வெள்ளிய பூங்கொத்துக்களையும் மடலினையு முடைய தாழையையுடையகரையினையுடைத்தாகிய கடலருகின்கண் இருக் கும் பரதவருடைய அகன்றதெருவிடத்து அகன்ற காவலையுடைய பண்ட சாலையின்கண்ணே,

132, 130. வரம்பு அறியாமை வந்து ஈண்டி நிலத்தினின்றும் நீர்

பரப்பவும் - எல்லையறியாதபடி வந்துதிரண்டு பின்னர் அப்பண்டசாலையிலேநின்றும் கடலிலே ஏற்றுதற்காகவும்,

134, 135, 125, 136. வல் அணங்கின் நோன் வலி உடை புலி பொறித்து புறம் போக்கி உல்கு செய மதி நிறைந்த மலி பண்டம் - வலிய வருத்துந்தன்மையையுடைய அச்சடையாளமாகிய வலியையுடைய புலியை அடையாளமாகவிட்டுப் பண்டசாலைக்கு ப்புறம்பே புறப்படவிட்டுச் சுங்கம் கொள்ளுதற்கு மதித்தற்றொழிலிற்குறையற்ற மிக்கபண்டங்களையும்,

(கு - பு.) அச்சு அடையாளம் - அச்சாகிய அடையாளம்.

129, 135, 125, 131, 136,131. நீரினின்று நிலத்தேறவும் புலி பொரீத்து புறம்போக்கி உல்குசெய அளந்து அறியா மதி நிறைந்த பல பண்டம் - கடலினின்றும் பண்டசாலையிலே இறக்குதற்காகவும் புலிபொறித்து மரக்கல த்திற்குப்புறம்பே புறப்படவிட்டுச் சுங்கங்கொள்ளுதற்கு நெஞ்சாலேஅளந்த றிந்து மதித்தல் நிறைந்த பலபண்டங்களையும்,

பரப்பவும் ஏறவுமென்னுமெச்சங்கள் புலிபொறித்தென்னும் வினையொடு முடிந்தன.

137. பொதி மூடை போர் ஏறி - பொதிந்த பொதிகளடுக்கின போரிலேயேறி,

(கு - பு.) மூடை - மூட்டை.

'நீர் கடற்பரப்பவும்' (சுஉஎ) என்ற உவமைக்கு நிலத்தினின்றும் நீர்ப் பரப்பவும் (கஙo), 'நீர் மலைப்பொழியவும்' (கஉசு) என்ற

உவமைக்கு நீரி னின்றுநிலத்தேறவும் (கஉகூ) பொருளாகக்கொள்க.

(கு - பு.) பொருள் - உவமேயம்.

120 - 125. நல் இறைவன் பொருள் காக்கும் தொல் இசை தொழில் மாக்கள் காய் சினத்த கதிர் செல்வன் தேர் பூண்ட மா போல வைகல் தொறும் அசைவு இன்றி குறைபடாது உல்கு செய - நல்ல அரசனுடையபொருளைப் பிறர்கொள்ளாமற்காக்கும் பழையபுகழினையுடைய சுங்கங்கொள்வோர் எரிகின்ற சினத்தையுடைய கிரணங்களையுடைய பகலவன் தேர்பூண்ட குதிரைகளைப்போல ஒருபொழுதும் மடிந்திராது நாடோறும் இளைப்பின்றித் தாழ்வின்றாகச் சுங்கங்கொள்ள,

இதனை இருவகைப்பண்டங்களுக்குங் கூட்டியுரைப்ப.

(கு - பு.) மடிந்திராது - சோம்புதலுற்றிராமல். உல்கு - சுங்கம். இரு வகைப்பண்டங்களாவன, பண்டசாலையிலிருந்து கப்பலிலேற்றப்படுவனவும், கப்பலிலிருந்து பண்டசாலையில் இறக்கப்படுவனவும்.

138 - 139. மழை ஆடு சிமய மால் வரை கவாஅன் வரை ஆடு வருடை தோற்றம் போல - மழையுலாவும் சிகரத்தையுடையவாகிய, பெரிய மூங்கிலையும் பக்கமலையினையுமுடைய மலையிடத்தேயுலாவும் வருடைமானின் தோற்றரவுபோல,

(கு - பு.) தோற்றரவு - தோன்றுதல்.

140 - 141. கூர் உகிர் ஞமலி கொடு தாள் ஏற்றை ஏழகம் தகரோடு உகளும் முன்றில் - கூரிய உகிரையுடைய நாயில வளைந்த காலையுடைய ஏறு னவை மேழகக்கிடாயோடே குதிக்கும் பண்டசாலையின் முற்றத்தினையும,

ஏற்றை தகரோடு இருவகைப்பண்டங்களையும்பொதிந்த மூடைப்போரேறி உகளுமுற்றமென்க.

(கு - பு.) உகிர் - நகம். ஏறு - ஆண். மேழகக்கிடாய் - ஆட்டுக்கிடாய்; இஃது, ஏழகமெனவும் வழங்கும்.

பட்டினப்பாலையுரை.

உ௫

142 - 143. குறு தொடை நெடு படிக்கால் கொடுந்திண்ணை - அணுகி யபடிகளையுடைய நெடிய ஏணிகள்சார்த்தின சுற்றுத்திண்ணையினையும்,

(கு - பு.) படிக்கால் - ஏணி; படிகளையுடையகால்களென்றபடி.

143. பல் தகைப்பின் - பலகட்டுக்களையும்,
144. புழை - சிறுவாசலையும்,
144. வாயில் - பெரியவாசலையும்,
144. போகு இடைகழி - பெரிய இடைகழிகளையுமுடைய,

(கு - பு.) இடைகழியென்பது இக்காலத்து, 'ரேழி' என வழங்கும்.

145 - 151. [மழைதோயு முயர்மாடத்துச், சேவடிச் செறிகுறங்கிற், பாசிழைப் பகட்டல்குற், றூசுடைத் துகிர்மேனி, மயிலியன் மானோக்கிற், கிளிமழலை மென்சாயலோர், வளிநுழையும் வாய்பொருந்தி:]

145, 151. மழை தோயும் உயர் மாடத்து வளி நுழையும் வாய் பொருந்தி - மேகஞ்செறியும் உயர்ந்த மாடத்தில் தென்காற்றுவரும் சாளரங்களைச்சேர்ந்தென்க.

(கு - பு.) தென்காற்று - தென்றல். சாளரம் - பல்கணி.

146. சேவடி - சிவந்த அடியினையும்,

146. செறி குறங்கின் - செறிந்த குறங்கினையும்,

(கு - பு.) குறங்கு - தொடை.

147. பாசிழை - பசிய பூணினையும்,

(கு - பு.) பசிய - பளபளப்புள்ள.

147. ....

148. தூசு உடை - தூசாகிய உடையினையும்,

148. துகிர் மேனி - பவளம்போலுநிறத்தினையும்,

149. மான் நோக்கின் - மான்போலும் பார்வையினையும்,

150. கிளி மென் மழலை - கிளிபோலும் மெல்லிய மழலைவார்த்தையி னையும்,

149 - 150. மயில் இயல் சாயலோர் - மயிலினது இயல்போலும் மெ ன்மையினையுமுடைய மகளிர்,

(கு - பு.) இயல் - மென்மை.

152 - 154. ஓங்கு வரை மருங்கின் நுண் தாது உறைக்கும் காந்தள் அம் துடுப்பின் கவி குலை அன்ன செறி தொடி முன்கை கூப்பி - உயராநின்ற மலைப்பக்கத்தே மெல்லியதேன்றுளிக்கும் செங்காந்தளினது அழகிய கண்ணி டத்து இணைந்த குலையையொத்த செறிந்த தொடியினையுடைய முன்கை குவிக்க,

கூப்பி, கூப்ப வெனத்திரிக்க. இரண்டுகொந்தண்முகை சேர்ந்தாலொத்த கையென்க. கவிதல் - ஒன்றோடொன்றுசேர்தல்.

(கு - பு.) தொடி - வளையல். முகை - அரும்பு.

154 - 155. [செவ்வேள், வெறியாடு:] வெறியாடு செவ்வேள் - வெறியாடுதற்குரிய முருகனுக்கும்,

(கு - பு.) வெறியாடல் - ஆவேசமுற்று ஆடுதல்.

155 - 160. [மகளிரொடு செறியத் தாஅய்க், குழலகவ யாழ்முரல, முழவதிர முரசியம்ப, விழவறா வியலாவணத்து, மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய, மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்:]

159, 160, 159. மை அறு சிறப்பின் சேர்த்திய பலர் தொழு தெய்வம் - பிறப்பறுதற்குக்காரணமான தலைமையையுடைமையாற் கோயில்களிடத்தே உண்டாக்கின பலருந்தொழுந்தெய்வங்களுக்கும்,

155 - 158. மகளிரொடு செறிய தாஅய் குழல் அகவ யாழ் முரல முழவு அதிர முரசு இயம்ப விழவு அறா வியல் ஆவணத்து - பாடுமகளிரோடே பொருந்தப் பரந்து வங்கியம் இசையையுண்டாக்க யாழ் வாசிக்க முழவு முழங்க முரசு ஒலிப்ப எடுத்த திருநாள்நீங்காத அகன்ற அங்காடித்தெருவினையும்,

மகளிரொடு செறிய எடுத்த விழவென்க.

(கு - பு.) வங்கியம் - புல்லாங்குழல். யாழ் - வீணை. முழவு - மத்தளம். அங்காடித்தெரு - கடைத்தெரு.

சேவடிமுதலியவற்றையுடைய சாயலோர் மாடங்களிற் சாளரங்களிற் பொருந்தி முன்கைகூப்பப் பலருந் தொழும் முருகவேளுக்கும் ஏனைத்தெய்வங்களுக்குமெடுத்த விழவரு வியலாவணமெனக்கூட்டுக.

160. மலர் அணி வாயில் கொடியும் - இல்லுறைதெய்வமகிழ ணிந்த மனைவாசலிற் கட்டினகொடிகளும்,

மலர

(கு - பு.) இல்லுறைதெய்வம் - வீட்டுத்தெய்வம்.

161 - 162. [வருபுன றந்த வெண்மணற் கான்யாற், றுருகெழு கரும்பி னொண்பூப் போல:] வருபுனல் தந்த வெண்மணல் கான்யாறு உரு கெழு கரும்பின் ஒண் பூபோல மேல் ஊன்றிய துகிற்கொடியும் (கசுஅ) - வருகின்ற நீர் கொண்டுவந்த வெள்ளியமணலையுடைய காட்டாற்றுக்கரையினின்ற அழகு பொருந்தின கரும்பினது ஒள்ளிய பூவையொக்க மேலூன்றின துகிற் கொடியும்,

கான் - மணமுமாம். கடைத்தெருவிற்கு இரண்டுபுறத்திலுமெடுத்த கொடிக்கு யாற்றங்கரையும் கரும்பம்பூவும் உவமைகூறினர்.

163 - 168. [கூழுடைக் கொழுமஞ்சிகைத், தாழுடைத் தண்பணியத்து, வாலரிசிப் பலிசிதறிப், பாகுகுத்த பசுமெழுக்கிற், காழூன்றிய கவிகுடு கின், மேலூன்றிய துகிற்கொடியும்:]

163. கூழ் உடை கொழு மஞ்சிகை - நெல்லையும் அரிசியையுமுடைய அழகிய மஞ்சிகை,

மஞ்சிகை - கொட்டகாரமுமாம்.

(கு - பு.) மஞ்சிகை - ஒருவகைமூங்கிற்பெட்டி.

164, 163. தாழ் உடை தண் பணியத்து மஞ்சிகை - தாழிதெலயுடைய, தண்ணிய பண்டங்களையுடைய மஞ்சிகை.

நெல்லுப்போல ஏனைப்பண்டங்கள் சிறந்தனவன்மையின், தண்ணிய பண்டமென்றார். பண்டமெனவெ உலகில்விற்கும் பண்டங்களெல்லாம் அடங்கின.

(கு - பு.) தாழ் - தாழ்ப்பாள்.

166, 163. பாகு உருத்த மஞ்சிகை-பாக்குவெற்றிலை சொரிந்த மஞ்சிகை,

இனி, உகுத்தபாகெனமாறி, சிந்தினபாகினையுடைய மஞ்சிகையென்றுமாம்.

என்றது கண்டசர்க்கரைக் கட்டெப்பாகினை.

(கு - பு. கண்டசர்க்கரை - கற்கண்டு.

166, 163. பசுமெழுக்கின் மஞ்சிகை - புதுமெழுக்கினையுடைய மஞ் சிகையிடத்தே,

(கு - பு. பேழையைச் சாணத்தால் மெழுகுவதுண்டாதலின், மெழுக்கு, கூறப்பட்டது.

165. வால் அரிசி பலி சிதறி - வெள்ளிய அரிசியாகிய பலிகளைத்தூவி,

(கு - பு. பலி - தேவருணவு.

167 - 168. காழ் ஊன்றிய கவி கிடுகின் மேல் ஊன்றிய துகில்கொடி யும் - கால்கள் நட்டுவைத்த கவிந்தசட்டங்களின்மேலே நட்டுவைத்த வெள் ளிய துகிற்கொடிகளும்,

கால்கள் - சட்டங்களைத்தாங்குவன.

சிதறி ஊன்றிய மஞ்சிகையிற்கவிந்த இடுகென்க.

169 - 171. பல் கேள்வி துறை போகிய தொல் ஆணை நல் ஆசிரியர் உறழ் குறித்து எடுத்த உரு கெழு கொடியும் - பலவாகிய கேட்டற்றொழிலையுடைய நூற்றிரளை முற்றக்கற்ற பெரிய ஆக்கினையையுடைய நல்ல ஆசிரியர் வாதுசெய்யக்கருதிக்கட்டின அச்சம்பொருந்தின கொடிகளும்,

172. வெளில் இளக்கும் களிறு போல - அசையாத கம்பத்தினை அசைக்கும் யானைபோலநின்று, தூங்குநாவாய் (கஎச),

173 - 175. [தீம்புகார்த் திரைமுன்றுறைத், தூங்குநாவாய் துவன்றி ருக்கை, மிசைக்கூம்பினசைக்கொடியும்:]

173. தீ புகார் திரை முன் துறை - கண்ணுக்குஇனிதாகிய புகாரிடத் துத் திரையினையுடைய துறையின்முன்னே,

174 - 175. துவன்று இருக்கை தூங்கு நாவாய் மிசை கூம்பின் நசை கொடியும் - நிறைந்த இருப்பினையுடைய அசைகின்ற நாவாயின்மேல்கட்ட பாய்மரத்தின்மேலெடுத்த விரும்புதலையுடைய கொடிகளும்,

176 - 178. [மீன்றடிந்து விடக்கறுத், தூன்பொரிக்கு
றின், மணற்குவைஇ மலர்சிதறி:]
மொலிமுன்

178. மணல் குவைஇ மலர் சிதறி - மணலை மிகப்பரப்பிச் செம்பூக் களையுஞ்சிதறி,

176 - 177. *மீன் தடிந்து விடக்கு அறுத்து ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்* - மீனையறுத்துப் பின் இறைச்சியையுமறுத்து அவ்விரண்டுதசை யினையும்பொரிக்கும் ஆரவாரத்தினையுடைய முற்றத்தினையும்,

179 - 181. [பலர்புகுமனைப் பலிப்புதவி, னறவுநொடைக் கொடி யோடு, பிறபிறவு நனிவிரைஇ:]

179. *பலி புதவின்* - தெய்வத்திற்குக்கொடுக்கும் பலியினையுடைய வாசலினையுமுடைய,

179 - 181. *பலர் புகும் மனை நறவு நொடை கொடியோடு பிறபிறவும் நனி விரைஇ* - கள்ளுண்பார்பலருஞ்செல்லும் மனைகளிற் சிறப்புடைக் கள் ளின்விலைக்குக் கட்டின கொடியோடே ஏனையவற்றிற்குக் கட்டினகொடிக ளும் மிகக்கலக்கையினாலே, செல்கதிர் நுழையா (கஅங) வென்க.

182. *பல் வேறு உருவின் பதாகை* - பலவாய் வேறுபட்ட வடிவினை யுடைய பெருங்கொடிகளும்,

182. *நீழல்* - நறவுநொடைக்கொடியோடே முற்கூறியகொடிகளும் பிறகொடிகளும் பதாகைகளும் விரவுகையினாலே இவற்றினிழலில்,

183. *செல் கதிர் நுழையா செழுநகர் வரைப்பின்* - செல்கின்ற ஞாயிற் றின்கிரணங்கள் நுழையப்படாத வளவிய ஊரெல்லையிடத்து, மறுகு (கஅரு) எனக்கூட்டுக.

184. *செல்லா நல் இசை அமரர் காப்பின்* - கெடாத நல்ல புகழினை யுடைய தேவர்கள் பாதுகாவலினாலே,

185 - 186. [நீரின் வந்த நிமிர் பரிப் புரவியுங், காலின் வந்த கருங்கறி மூடையும் :]

185. நீரில் காலின் வந்த நிமிர் பரி புரவியும் - கடலிலே காற்ருன் வந்த நிமிர்ந்த செலவினையுடைய குதிரைகளும்,

185 - 186. நீரில் காலின் வந்த கருங்கறி மூடையும் - கடலிலே காற்

ருன்வந்த கரிய மிளகுபொதிகளும்,

187. வடமலை பிறந்த மணியும் பொன்னும் - மேருவிலேபிறந்த மாணிக்கமும் சாம்பூநதமென்னும்பொன்னும்,

(கு - பு.) சாம்பூநதம் - மேருமலையின் தென்பாலுள்ள நாவன்மரத் தின்கனிச்சாற்றிலிருந்து உண்டாயபொன்; சம்பு - நாவன்மரம்.

188. குடமலை பிறந்த ஆரமும் அகிலும் -
பொதியின்மலையிலேபிறந்த சந்தனமும் அகிலும்,

புகார்க்குத்தென்மேற்காதலிற் குடமலையென்ருர் பொதியின்மலையை; அன்றி மேற்குள்ளமலையென்றுமாம்.

189. தென்கடல் முத்தும் - தென்றிசைக்கடலிற்பிறந்த முத்தும்,

(கு - பு.) தென்கடலென்றது, தாம்பிரபன்னிநதி
கலக்கப்பெற்றகடலை; அந்தப்பாகம் கொற்கைத்துறையென்று வழங்கும்.

189. குணகடல் துகிரும் - கீழ்த்திசைக்கடலிற்படர்ந்த பவளமும்,
190. கங்கை வாரியும் - கங்கையாற்றிலுண்டாகிய பொருளும்,
அவை, யானையும் மாணிக்கமும் முத்தும் பொன்னுமுதலியனவும்

பிற வுமாம்.

190 - 191. * [காவிரிப் பயனு, மீழத் துணவும்:]

(கு - பு.) காவிரி பயனும் - காவிரிநதியிலிருந்து உண்டாகியபொருளும், ஈழத்து உணவும் - சிங்களதேசத்திலுண்டாகிய நுகரும்பொருள்களும்.

191. காழகத்து ஆக்கமும் - கடாரத்திலுண்டான நுகரும்பொருள் களும்,

ஆக்கம், ஆகுபெயர்.

(கு - பு.) பர்ம்மாத்தேயம் பண்டைக்காலத்தில் கடாரமென்று வழங் கப்பெற்றுவந்ததென்பர்.

192. அரியவும் - சீனமுதலிய இடங்களினின்றும்வந்த கருப்பூரம் பனிநீர் குங்குமமுதலியனவும்,

(கு - பு.) சீனம் - சீனதேசம்.

192. பெரியவும் - இவையொழியப் பெரியவையாகிய பலபொருள் களும்,

192. நெளிய ஈண்டி - நிலத்தின்முதுகு நெளியும்படி திரண்டு,

193 - 195. [வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி, னீர்நாப் பண்ணு நிலத்தின் மேனு, மேமாப்ப வினிதுதுஞ்சி:]

195, 194. ஏமாப்ப நீர் நாப்பணும் நிலத்தின் மேலும் இனிது துஞ்சி- ஏமாப்பினாலே புகாரின்நடுவிடத்தும் கரையினிடத்தும் அழிவின்றி இனி தாகத் தங்குகையினாலே,

(கு - பு.) ஏமாத்தல் - இறுமாப்புற்றிருத்தல்.

193. வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகின் - செல்வம்

தலைதெரியாத அகன்ற இடங்களையுடைய தெருவுகளையும்,

* இதற்குப் பழைய உரை கிடைத்திலது.

செழுநகர்வரைப்பிற் (கஅரு) புரவிமுதலியனஈண்டித் (ககூஉ) துஞ்சி (ககூ௩) மயங்கிய மறுகு (ககூரு) என்க.

இனி, இனிது துஞ்சி மீன்பிறழவும் (ககூஎ) மா ஈண்டவும் (ககூஅ) என மேலேகூட்டுவாருமுளர்.

196 - 217. [கிளைகலித்துப் பகைபேணாது, வலைஞர்முன்றின் மீன்பிற ழவும், விலைஞர்குரம்பை மாவீண்டவுங், கொலைகடிந்துங் களவுநீக்கியு, மம ரர்ப் பேணியு மாவுதி யருத்தியு, நல்லானொடு பகடோம்பியு, நான்மறை யோர் புகழ்பரப்பியும், பண்ணிய மட்டியும் பசும்பதங்கொடுத்தும், புண் ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக், கொடுமேழிநசையுழவர், நெடுநுகத் துப் பகல்போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவு மொப்ப நாடிக், கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது, பல்பண்டம் பகர்ந்துவீசுந், தொல்கொண்டித் துவன்றி ருக்கைப், பல்லாயமொடு பதிபழகி, வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற், சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு, மொழிபல பெருகிய பழிதீர் தேஎத் துப், புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும் :]

216, 214, 215. பழி தீர் தேஎத்து முது வாய் ஒக்கல் சாறு

அயர் மூதூர் சென்று தொக்காங்கு - குற்றமற்ற பிறதேசங்களிலே அறிவுவாய்த்த சுற்றத்திணையுடைய விழாக்கணிகழ்த்தின பழையவூரிலுள்ளார் ஈண்டிவந்து குடியேறினாற்போல,

* "செலவினும் வரவினும்" என்னுஞ்சூத்திரத்தால், 'சென்று' என்பது வநதென்னும்பொருடந்தது.

(கு - பு.) விழா - உத்ஸவம்.

214, 217. வேறு வேறு உயர்ந்த புலம் பெயர் மாக்கள் - பலபலசாதி களாயுயர்ந்த தத்தம்நிலத்தைக் கைவிட்டுப்போந்த மாக்கள்,

216, 217. பலமொழி பெருகிய மாக்கள் - பலபாஷைமிக்க மாக்கள்,

மாக்களென்றார், ஐயறிவேயுடையாரதலின். என்றது சோனகர் சீனர் முதலியோரை.

(கு - பு.) ஐயறிவு - ஐம்பொறியுணர்வு. மாக்கள் - மனவுணர்வின்றி ஐம்பொறியுணர்வையேயுடைய விலங்குபோல்வார். இதனை, "மாவு மாக்களு மையறி வினவே", "மக்க டாமே யாறறி வுயிரே" என்னுந் தொல்காப்பிய மரபியற் சூத்திரங்களானுணர்க; "பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்" என்னும் முல்லைப்பாட்டிலும், "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக் கள்" எனவும், "கொலைவினைய ராகிய மாக்கள்" எனவும் வருந்திருக்குறள் களிலும், 'ஐயறியாமாக்கட்கன்றி நூலியற்றும் அறிவினையுடையமக்கட் குப் பல்கலைக்குரிசில் பவணந்தியென்னும் புலவர்பெருமான் புகழ்போல விள ங்கிநிற்றலான்' (நன்னூல், "நடவாமடிசீ" என்னுஞ் சூத்திரவுரை) என்னும்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், உஅ.

சங்கரநமச்சிவாயருடைய உரையிலும் ' மாக்கள் ' என்பது இப்பொருள்பட வந்திருத்தல்காண்க.

217, 213, 217. மாக்கள் பல் ஆயமொடு பதி பழகி கலந்து இனிது உறையும் மறுகின் (௧௯௩) - இம்மாக்கள் பலதிரளோடே இவ்வூரிடத்தே பழகி ஈண்டைநன்மக்களோடே கூடி நன்றாகவிருக்கும், மறுகெனமுன்னே கூட்டுக.

இவர்களிருத்தலின், வளந்தலைமயங்கிய மறுகுகளாயின.

196 - 199. கிளை கலித்து பகை பேணாது வலைஞர் முன்றில் மீன் பிறழவும் விலைஞர் குரம்பை மா ஈண்டவும் கொலை கடிந்தும் களவு நீக்கியும் - மீன்றிரளும் விலங்கின்றிரளும் செருக்கி வலையாற்பிடிப்பாரையும் கொன்று இறைச்சிவிற்பாரையும் தமக்குப் பகையாகக்கருதியஞ்சாதே வலைஞர்முற் றத்தே மீன்பிறழ்ந்துதிரியுமபடியாகவும் விலைஞர்குடிலிலே விலங்குகள் கிடக்கும்படியாகவும் முற்படக் கொலைத்தொழிலை அவர்களிடத்தினின்றும் போக் கியும் பின்னர்க் களவுகாண்பாரிடத்துக் களவுத்தொழிலைப்போக்கியும்,

(கு - பு.) விலங்கு - மிருகம். குடில் - குடிசை.

200. அமரர் பேணியும் - தேவர்களை வழிபட்டும்,

200. ஆவுதி அருத்தியும் - யாகங்களைப்பண்ணி அவற்றான் ஆகுதிகளை அவர் நுகரப்பண்ணியும்,

201. நல் ஆனொடு பகடு ஓம்பியும் - நல்ல பசுக்களோடு எருதுகளைப் பரிகரித்தும்,

(கு - பு.) பரிகரித்தல் - பாதுகாத்தல்.

* "வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை", † "மெய்தெரி வகையி னெண்வகை யுணவின், செய்தியும் வரையா ரப்பா லான" என்பவற்றால், வாணிகர்க்கு உழவுத்தொழிலுரித்தாகலின், பகடோம்பியுமென்றார்; யாகத் திற்குப் பசுவை ஓம்பியுமென்றார்.

(கு - பு.) எண்வகையுணவாவன: பயறு, உழுந்து, கடுகு, கடலை, எள்ளு, கொள்ளு, அவரை, துவரையென்பன.

202. நான்மறையோர் புகழ் பரப்பியும் - அந்தணர்க்குண்டாம் புகழ்களைத் தாங்கள் அவர்க்கு நிலைபெறுத்தியும்,

204, 203. புண்ணியம் பண்ணி அட்டியும் - பெரிதாகிய புண்ணியங்களைத் தாங்கள் பண்ணி அவற்றைச் செய்யமாட்டாதார்க்குத் தானம்பண்ணியும்,

அம் - அசை. பண்ணிய மட்டியுமென்றதற்குச் சோற்றை ஆக்கியிட்டு மென்பாருமுளர்.

(கு - பு.) அம், 'பண்ணியம்' என்பதிலுள்ளது.

---

* தொல்காப்பியம் பொருளதிகாரம், மரபியல், எஎ.
† " " எஅ.

203. பசு பதம் கொடுத்தும் - விளைந்தநெல்லையும் பறிக்குங்கமுகையும் உணவாகக்கொடுத்தும்,

இதற்கு அரிசியும் கறியும் கொடுத்துமென்பாருமுளர்.

204. முட்டா தண் நிழல் வாழ்க்கை - இங்ஙனஞ்செய்யும் அறத்தொழில்கள் முட்டுப்படாத குளிர்ந்த அருளுடனேவாழும் இல்வாழ்க்கையையுடைய, நன்னெஞ்சினோ (உ0எ) ரென்க.

(கு - பு.) முட்டுப்படாத - குறைவுபடாத.

205 - 207. கொடு மேழி நசை உழவர் நெடு நுகத்து பகல் போல நடுவு நின்ற நல் நெஞ்சினோர் - வளைந்தமேழியால் உழவுத்தொழிலை நச்சு தலையுடைய உழவரது நெடிய நுகத்திற்றைத்த பகலாணிபோல நடுவுநிலை யென்னுங்குணம் நிலைபெற்ற நன்றாகிய நெஞ்சினையுடையோர்,

என்றது, ஆண்டுறையும் வேதவாணிகரை,

(கு - பு.) மேழி - கலப்பையின் ஒருறுப்பு. பகலாணி - நடுவேயுள்ள ஆணி ; " நுகத்திற் பகலனையாய் " என்றார் தஞ்சைவாணன்கோவையி லும்.

209, 211. தம பல் பண்டமும் பிற பல் பண்டமும் ஒப்ப நாடி - தம் முடையவாகிய பலசரக்குக்களையும் பிறவாகிய பலசரக்குக்களையும் பொரு ளொப்ப ஆராய்ந்து,

208. வடு அஞ்சி வாய்மொழிந்து - தங்குடிக்கு

வடுவோமென்றஞ்சி மெய்யேசொல்லி,

(கு - பு.) பொய்சொல்லுதல் வடு.

210. கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைபடாது - தாங்கொள்ளுஞ் சரக்கையும் தாங்கொடுக்கும்பொருட்கு மிகையாகக்கொள் ளாது தாங்கொடுக்குஞ் சரக்கையும் தாம்வாங்கும்பொருட்குக் குறையக் கொடாமல்,

.

211. பகர்ந்து வீசும் - இலாபத்தை வெளியாகச்சொல்லிக் கொடுக்கும்,

212. தொல் கொண்டி - பழைதாகியகொள்ளையினையும்,

கொள்ளையென்றார், இந்நெறியை நடத்தினரிடத்தல்லது பொருட்டிர ளுண்டாகாதென்றற்கு.

(கு - பு.) கொள்ளை - மிகுதி.

தண்ணிழல் வாழ்க்கையினையும் (உ0௪) தொல்கொண்டியினையு (உகஉ) முடைய நன்னெஞ்சினே (உ0எ) ரென்க.

212. துவன்று இருக்கை - நெருங்கின குடியிருப்பினையும்,

காவிரி (௬) புனல்பரந்து பொன்கொழிக்கும் (எ) பல்லூர் நெடுஞ்சோ ணாட்டிற் (உஅ) கழிசூழ்படப்பையினையும் (௩உ) தண்டலையினையும் (௩௩) பொய்கையினையும் (௩அ) ஏரியினையும் (௩௯) திண்காப்பினையும் (௪க) கோ

பட்டினப்பாலையுரை.

௩௩

விலைமாகுட்டுதற்குக்காரணமான (௫0) அட்டி லினையும் (௪௩) சாலையினையும் (௫உ) பள்ளியினையும் (௫௩) குயில் (௫௫)

துச்சிற்சேக்கைக்குக்காரணமான

(௰அ) தாழ்காவினையும் (௰௯) பாக்கங்களையும் (௨எ) புறச்சேரியினையும் (எசு) மூன்றிலினையும் (கசக) விழவறா ஆவணத்தையும் (க௫அ) மாக்கள் கலந்து இனிதுறையும் (உகஎ) வளர்தலைமயங்கிய மறுகுகளையும் (க௬௯) நன்னெஞ் சினேர் (உ0எ) துவன்றிருக்கை (உகஉ) யினையுமுடைய பட்டின (உ௬அ) மெனவினைமுடிக்க.

218. முட்டா சிறப்பின் பட்டினம் பெறினும் - குறைவுபடாத தலைமை யினையுடைய பட்டினத்தை எனக்கு உரித்தாகப் பெறுவேனாயினும்,

(கு - பு.) பட்டினம் - காவிரிப்பூம்பட்டினம்.

219. வார் இரு கூந்தல் வயங்கு இழை ஒழிய - நீண்ட கரிய கூந்தலை யுடைய விளங்குகின்ற பூணினையுடையாள் ஈண்டுப் பிரிந்திருப்ப,

220. வாரேன் வாழிய நெஞ்சே - யான் நின்னொடுகூடவாரேன்; நெஞ்சே, போய்வாழ்வாயாக;

* "அளிநிலை பொறாஅது" என்னும் அகப்பாட்டால், போக்கிற்கு ஒருப் படாமல் நிற்குங் குறிப்புணர்க.

220 - 221. கூர் உகிர் கொடு வரி குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு - கூரிய உகிரினையும் வளைந்தவரிகளையுமுடைய புலிக்குட்டி கூட்டிடத்தே அடையுண்டிருந்து வளர்ந்தாற்போல,

(கு - பு.) உகிர் - நகம். வரி - கோடு.

222. பிறர் பிணி அகத்து இருந்து பீடு காழ் முற்றி - பகைவர்காவலிடத்தேயிருந்து தனக்குப்பெருமை வயிரமாகமுற்றி,

---

* அகநானூறு, களிற்றியானைநிரை, ௫:—"அளிநிலை பொறாஅ தமரிய முகத்தள், விளிநிலை கொளாஅ டமியள் மென்மெல, நலமிகு சேவடி நிலம் வடுக் கொளாஅக், குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற, வறிதகத் தெழுந்த வாயின் முறுவலள், கண்ணிய துணரா வளவை யொண்ணுதல், வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன், முளிந்த வோமை முதையலங் காட்டுப், பளிங்

கத் தன்ன பல்காய் நெல்லி, மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப, வுதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன், மாய்த்த போல மழுகுநுனைத் தோற்றிப், பாத்தி யன்ன பகுதி கூர்ங்கல், விரனுதி சிதைக்கு நிரைநிலை யதரயிற், பரன்முரம் பாகிய பயமில் கான, மிறப்ப வெண்ணுதி ராயி னறத்தா, றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி, யன்ன வாக வென்னுநள் போல, முன்னங் காட்டி முகத்தி னுரையா, வோவச் செய்தியி னொன்றுநினைந் தொற்றிப், பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ, டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத், தூநீர் பயந்த துணையமை பிணையன், மோயின ளுயிர்த்த காலை மாமலர், மணியுரு விழந்த வணியிழை தோற்றங், கண்டே கடிந்தனஞ் செலவே யொண்டொடி, யுழைய மாகவு மினைவோள், பிழையலண் மாதோ பிரிதுநா மெனினே." என்றது: பொருள்வயிற்பிரியக்கருதிய தலைமகன் தன்னெஞ்சிற்குச்சொல்லிச் செலவழுங்கியது; பாலைபாடிய பெருங்கடுங்கோ.

ஷ

223 - 225. [அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று, பெருங்கை யானை பிடிபுக் காங்கு, நுண்ணிதி னுணர நாடி:]

225. நுண்ணிதின் உணர நாடி - தன்னுணர்வு கூரிதாகவுணரும்படி இதுவேகாரியமென்று ஆராய்ந்து,

224, 223, 224. பெரு கை யானை அரு கரை கவிய குத்தி குழி கொன்று பிடி புக்காங்கு- பெரிய கையினையுடைய யானை தான் அகப்படப்பண்ணின குழியில் ஏறுதற்கரிய கரைகளை இடியும்படி கோட்டாலேகுத்திக் குழியைத் தூர்த்துப் பிடியிடத்தே சென்றாற்போல,

(கு - பு.) கோடு - கொம்பு. பிடி - பெண்யானை. 'பிறர்பிணியகத் திருந்து' என்றதனால், இளமைப்பருவத்தில், இவன் பகைவருடைய காவலி லிருந்தானென்று தெரிகின்றது.

225 - 226. [நண்ணார், செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்து :] நண்ணார் செறிவுடை திண் காப்பு வாள் கழித்து எறி - அப்பகைவருடைய நெருங்கின திண்ணிய காவலாகிய வாட்படையை ஓட்டி அவ்விடத்தினின் றும் போந்து,

இனி, திண்காப்பிடத்தே வாளை உறைகழித்து வெட்டிப்போந்தென்று மாம்.

(கு - பு.) வாட்படை - வாளாயுதத்தையுடைய காலாட்படை.

227. உரு கெழு தாயம் ஊழின் எய்தி - பகைவர் அச்சம்பொருந்து தற்குக் காரணமான தன் அரசுரிமையை முறையாலேபெற்று,

228. பெற்றவை மகிழ்தல் செய்யான் - தான் இறையாகப்பெற்ற அர சுரிமையால் மகிழ்ச்சிபொருந்துதல் செய்யானாய், மேலும் ஆசைமிக்கு,

(கு - பு.) இறை - கப்பம்.

228 - 238. [செற்றோர், கடியரண் டொலைத்த கதவுகொன் மருப் பின், முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள், உகிருடை யடிய வோங் கெழில யானை, வடிமணிப் புரவியொடு வயவர் வீழப், பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத், தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு, வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப், பேய்க்க ணன்ன பிளிறுகடி முரச, மாக்க ணகல றை யதிர்வன முழங்க, முனைகெடச் சென்று முன்சம முருக்கி :]

230 - 231. முடி உடை கரு தலை புரட்டும் முன்தாள் உகிர்

உடை அடிய - முடியையுடைய கரியதலைகளையுருட்டும் முன்காலில் உகிருடைய அடிகளையுடையவாய்,

234, 235, 228, 229, 231, 232. தூறு இவர் துறு கல் போல உழிஞை சூடி செற்றோர் கடி அரண் தொலைத்த யானையொடு - தூறுபடர்ந்த நெருங்கின மலைகள்போல உழிஞையைச்சூடித் தம்மரசராற் போர்பெற்றாருடைய காவலையுடைய அரண்களையிடித்த யானைகளோடும்,

(கு - பு.) உழிஞை - பகைவருடைய மதிலைவளைத்தற்கு அறிகுறியாக அணியப்படுமாலை; "எயில்காத்த னொச்சி, யதுவளைத்த லாகு முழிஞை"

என்பதனாலுணர்க. புறத்திணைமாலைகளை வீரர்களுக்கேயன்றி யானை குதிரைகளுக்கும் ஆயுதங்களுக்கும் சூட்டுதல்மரபு. அரண் - கோட்டை,

229, 231. கதவு கொல் மருப்பின் ஓங்கு எழில் யானை - கதவை முறிக்கும் கொம்பினையும் உயர்ந்த அழகினையுமுடைய யானையென்க.

232. வடி மணி புரவியொடு - வடித்த மணிகட்டின குதிரைகளோடும்,

234. போர்வேட்டு - போரைவிரும்பி,

236 - 237. பேய் கண் அன்ன பிளிறு கடி முரசம் மா கண் அகல் அறை அதிர்வன முழங்க - பேயின்கண்ணையொத்த முழங்குகின்ற காவலையுடையமுரசம் பெருமையை உடைத்தாகிய

இடத்தையுடைய பாசறையிலே நடுங்குவனவாய் முழங்க,

அகலறை - மலைப்பக்கமுமாம்.

(ந - பு.) பேய்க்கண், வட்டவடிவமுள்ளதாக நூல்கள் கூறும்.

238. முனை கெட சென்று - பகைப்புலங்கெடும்படி சென்று,

233, 232, 238. பெரு நல் வானத்து பருந்து உலாய் நடப்ப வயவர் வீழ முன் சமம் முருக்கி - பெரிய நல்லவானிடத்தே பருந்து உலாவித்திரியும்படியாக வீரர்படும்படி முற்பட்ட தூசியைக்கெடுத்து,

யானைகளோடும் புரவிகளோடும் போர்வேட்டு முரசுமுழங்கச்சென்று பருந்து உலாய்நடப்ப வயவர்வீழ முருக்கியென்க.

(ந - பு.) தூசி - முற்படை.

239. தலை தவ சென்று - அப்பகைவர் அரணிடத்தே மிகநடந்து,

(ந - பு.) தலை - இடம்.

239 - 242. [தண்பணை யெடுப்பி, வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி, மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக், கராஅங் கலித்த கண்ண கன் பொய்கை :] வெண்பூ கரும்பொடு செந்நெல் நீடி குவளையொடு மா இதழ் நெய்தலும் மயங்கி கராம் கலித்த கண் அகல் பொய்கை தண் பணை எடுப்பி - வெள்ளிய பூக்களையுடைய கரும்புகளுடனே செந்நெல்லும்வளர்ந்து குவளையோடே பெருமையையுடைய இதழ்களையுடைய நெய்தலுமயங் கப்பட்டு முதலைகள் செருக்கித் திரிந்த இடமகன்ற பொய்கைகளையுடைய தண்ணியமருதநிலத்துள்ள குடிகளையோட்டி,

243 - 244. [கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச், செறுவும் வாவியு மயங்கி நீரற்று :] செறுவும் வாவியும் நீரற்று மயங்கி வேறு பல் பூளை (உங்கு) யொடு கொழு கால் புதவமொடு செருந்தி நீடி - செய்களும் வாவிக ளும் நீரற்றுத் தம்மில் ஒன்றாய் இருவகைப்பட்ட பலவாகிய பூளைகளோடே கொழுவிய தண்டுகளையுடைய அறுகோடே கோரைகளும் வளரப்பட்டு,

வேறுபல்பூனை, இங்கேகூட்டிற்று. சிறுபூளையும் பெரும்பூளையுமுண்மை யின், 'வேறுபல்பூளை' என்றார்.

(கு - பு.) செய் - வயல்.

பட்டினப்பாலையுரை.

245. அறு கோடு இரலையொடு மான்பிணை உகளவும் - அறல்பட்ட கொம்பினையுடைய புல்வாய்க்கலையோடு மான்பிணை துள்ளிவிளையாடும்படி யாகவும்,

(கு - பு.) புல்வாய் - ஒருவகைமான். கலை - ஆண்மான்.

தலைதவச்சென்று தண்பணையெடுப்பி (உருக) நீடி (உசo) (உசரு) மென்க.

உகளவு

246 - 249. [கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி, யந்தி மாட்டிய நந்

தா விளக்கின், மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ, வம்பலர் சேக்குங் கந் துடைப் பொதியில்:]

கொண்டி மகளிர் உண் துறை மூழ்கி மெழுக்கம் அந்தி மாட்டிய நந்தா விளக்கின் மலரணி கந்து உடை பொதியில் -

பகைவர்மனையோராய்ப் பிடித்
துவந்த மகளிர்பலரும் நீருண்ணுந்துறையிலே சென்றுமுழுகி மெழுகுமெழுக்கத்தினையும் அவர்கள் அந்திக்காலத்தேகொளுத்தின அவியாத விளக்கினையுமுடைய பூக்களைச்சூட்டின தறியினையுடைய அம்பலம்,

கந்து - தெய்வம் உறையுந் தறி.

பொதியிலைமெழுகி விளக்குமிட்டிருக்க பகைவர்மகளிரைவைத்தார், அதனால் தமக்குப் புகழுளதாமென்றுகருதி.

(கு - பு.) 'மெழுகும்' என்பது வருவிக்கப்பட்டது. கொண்டி - கொள்ளுதல். தறி - தூண். அம்பலம் - பொதுவிடம்.

249, 248, 249. வம்பலர் பலர் எறி தொழ சேக்கும் பொதியில் - புதியவர்கள் பலருமேறித் தொழுதற்குத்தங்கும் பொதியில்,

250 - 251. பரு நிலை நெடுதூண் ஒல்க தீண்டி பெரு நல் யானையொடு பிடி புணர்ந்து உறையவும் - அத்தெய்வமுறையும் அம்பலத்தினின்ற பருத்த நிலைமையினையுடைய நெடியதூண் சாயும்படி தம்முடம்புரிஞ்சிப் பெரிய நல்ல களிறுகளுடனே பிடிகள் கூடித்தங்கும்படியாகவும்,

(கு - பு.) களிறு - ஆண்யானை.

252 - 255. [அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்,
முதுவாய்க்
கோடியர் முழவொடு புணர்ந்த, திரிபுரி நரம்பின் தீந்தொடை யோர்க்கும்,
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்து :] தெருவில் அருவிலை நறு பூ தூஉய் முதுவாய் கோடியர் முழவொடு புணர்ந்த திரி புரி நரம்பின் தீ தொடை ஓர்க்கும் பெரு விழா கழிந்த பேஎம் முதிர் மன்றத்து -

ஆண்டுள்ள தெருவின்கண்ணே விலைகூறுதற்கரிய நறியபூக்களைச்சிதறி அறிவுவாய்த்தலை யுடைய கூத்தருடைய மத்தளத்தில் தாளத்தோடேகூடின முறுக்குதல் புரிந்த நரம்பின் இனிதாகிய கட்டினையுடைய யாழைக்கேட்கும் பெரிய திருநாளின்றாகிய அச்சமுநீர்ந்த மன்றத்திடத்தே,

தூஉய் ஓர்க்குமென்க. தொடை, ஆகுபெயர்.

(கு - பு.) தொடை - கட்டு ; யாழிசைக்கானமையின், ஆகுபெயர்.

பட்டினப்பாலையுரை.

கூள

256 - 257. * [சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி, யழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவும் :]

(கு - பு.) சிறுபூ நெருஞ்சியோடு - சிறிய பூக்களையுடைய நெருஞ்சிகளோடு, அறுகை பம்பி - அறுகம்புற்கள் பரவப்பெற்று, அழல் வாய் ஓரி - கொடிய வாயையுடைய நரிகள், அஞ்சு வர கதிர்ப்பவும் - பிறர்க்கு அச்சம் தோன்ற மிக்குமுழங்கவும்.

258. அழு குரல் கூகையோடு ஆண்டலை விளிப்பவும் - இசைக்கு வருந்திக்கூப்பிடுகின்ற குரலையுடைய கூகைகளுடனேகூடி ஆண்டலைப்புள் கூப்பிடும்படியாகவும்,

(கு - பு.) கூகை - கோட்டான், ஆண்டலைப்புள் - ஆண்மக்களுடைய தலைகளைப்போன்ற வடிவுமுடைய ஒருவகைப்பறவை.

259 - 260. கணம் கொள் கூளியொடு கதுப்பு இருத்து அசைஇ பிணம் தின் யாக்கை பேய்மகள் துவன்றவும் - திரட்சிகொண்ட ஆண்பேய்க ளுடனே மயிரைத்தாழ்த்து இளைத்துப் பிணத்தைத்தின்னும் வடிவையுடைய பேய்மகள் நெருங்கும்படியாகவும்,

261. கொடு கால் - வளைந்த கால்களையுடைய, பேய்மகள் (உகூ) என முன்னேகூட்டுக.

262, 261, 262. விருந்து மாடத்து நெடு கடை துவன்றி உண்டு ஆனு பெரு சோறு அட்டில் - விருந்ினர் மாடத்திடத்து நெடிய தலைவாசலிலே முற்படநெருங்கியிருந்து பின்பு உள்ளேசென்று உண்டு மிக்குக்கிடக்கின்ற பெரியசோற்றையுடைய அடுக்களை,

(கு - பு.) விருந்தினர் - புதியராய்வந்தவர். அடுக்களை - மடைப் பள்ளி.

263 - 264. ஒண் சுவர் நல் இல் உயர் திணை இருந்து பைங்கிளி மிழற்றும் பால் ஆர் செழு நகர் - சாந்திட்ட சுவர்களையுடைய நன்றாகிய அகங்களின் உயர்ந்ததிண்ணைகளிலேயிருந்து பசியகிளி வார்த்தைசொல்லு தற்குக் காரணமாகிய பால்நிறைந்த வளவியவூர்,

திண்ணை, விகாரம். இனி உயர்திணை, உயர்ந்த மேனிலமென்றுமாம்.

(கு - பு.) அகம் - வீடு. 'திண்ணை' என்பது, 'திணை' என்று ஆன மையின், விகாரம்; இடைக்குறை.

265 - 267. [தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக், கொடுவி லெயி னர் கொள்ளை யுண்ட, வுணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து :] கொடு வில் எயினர் தொடுதோல் அடியர் துடி பட குழீஇ கொள்ளை உண்ட உணவு இல் வறு கூடு உள்ளகத்து இருந்து - கொடிய வில்லினையுடைய வேடர் செருப் புத்தொட்ட அடியினையுடையராய்த்

துடியொலிப்பத் திரண்டு கொள்ளை

* இதற்குப் பழைய உரை கிடைக்கவில்லை.

௬அ பட்டினப்பாலையுரை.

யாகக் கொண்டுண்ட செல் பின் இல்லையான வறுவிய கூட்டினுடைய உள் ளாகிய இடத்தேயிருந்து,

(கு - பு.) துடி - உடுக்கை. கூடு - தானியச்சேர்.

268. வளை வாய் கூகை நன்பகல் குழறவும் - வளைந்த வாயினையுடைய கூகை அடியொத்தகாலத்தே கூப்பிடும்படியாகவும்,

செழுநகர் (உ௬௪) அட்டிலிடத்துக் (உ௬உ) கூட்டினுள்ளேயிருந்து (உ௬எ) கூகை குழறவு (உ௬அ) மென்க.

269 - 270. [அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப், பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற:] அரு கடி வரைப்பின் ஊர் கவின் அழிய மருங்கு அற பெரு பாழ் செய்தும் அமையான் - அரிய காவலையுடைய மதிலை யுடைய பகைவர்படைவீடுகள் அழகழிய அவர்கள்குலமின்றாகப் பெரிய பாழாகப்பண்ணியதனாலும் செற்றம் ஆறானாய்,

(கு - பு.) செற்றம் - தணியாக்கோபம்.

பெற்றவை மகிழ்தல்செய்யானாய் (உஉஅ), மேலும் ஆசைமிக்கு யானைக ளோடும் (உ௩௧) புரவிகளோடும் (உ௩உ) போர்வேட்டு (உ௩௪) முரச (உ௩௬) முழங்கச் (உ௩எ) சென்று முன்சமமுருக்கித் (உ௩அ) தலைதவச்சென்று எடுப்பி (உ௩௯) உகளவும் (உ௪௫) உகுறயவும் (உ௫௧) கதிர்ப்பவும் (உ௫எ) விளிப் பவும் (உ௫அ) குழறவும் (உ௬அ) துவன்றவும் (உ௬0) பாழ்செய்தும் (உஎ0) ஊர்கவினழியப் (உ௬௯) பாழ்செய்தும்

அமையானு (உ௭௦) யென வினை முடிக்க.

பாழ்செய்தல் இரண்டிடத்தும் கூட்டுக.

271 - 272. மலை அகழ்க்குவனே கடல் தூர்க்குவனே வான் வீழ்க் குவனே வளி மாற்றுவன் என - இவன் தெய்வத்தன்மையுடையனுதலின் இம்மலைகளையெல்லாம் அகழ்தலைச்செய்வன் ; கடல்களையெல்லாம் தூர்த் தலைச்செய்வன் ; தேவருலகைக் கீழ்வீழ்த்தலைச்செய்வன் ; காற்றை இயங் காமல் விலக்குவனென்று உலகத்தார் மேற்கூறும்படியாக, துறைபோக லின் (உ௭௩) என்க.

பெரும்பாழ்செய்தும் அமையானுய், இங்ஙனம் பாழ்செய்தவன் மேல் இவையுஞ்செய்வனென்று கூறும்படியாகத் துறைபோனுனென்றவாறு.

(கு - பு.) அகழ்தல் - தோண்டுதல்.

273. தான் முன்னிய துறை போகலின் - தான்கருதிய போர்த்துறைகளெல்லாம் பொருதுமுடித்தானுகலின்,

274. பல் ஒளியர் பணிபு ஒடுங்க - பலராகிய ஒளிநாட்டார் தாழ்ந்து தம் வீரம் குறைய,

ஒளியராவார் மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரியவேளாளர்.

275. தொல் அருவாளர் தொழில் கேட்ப - பழைய அருவாளநாட்டி லரசரும் தாங்கள் செய்யுந்தொழிலை வந்துகேட்ப,

(கு - பு.) அருவாளநாடு - கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று.

பட்டினப்பாலையுரை.

276. வடவர் வாட - அதற்கு வடக்குநாட்டிலுள்ள அரசர் குறைய,

(கு - பு.) அதற்கு வடக்குள்ளநாடு - அருவாள் வடதலை.

276. குடவர் கூம்ப - குடநாட்டிலுள்ளார் மனவெழுச்சி குறைய,

277 - 291. [தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர், மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாண், மாத்தானை மறமொய்ம்பிற், செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப், புன்பொதுவர் வழிபொன்ற, இருங்கோவேண் மருங்கு சாயக், காடுகொன்று நாடாக்கிக், குளந்தொட்டு வளம்பெருக்கிப், பிறங்கு நிலை மாடத் துறந்தை போக்கிக், கோயிலொடு குடிநிறீஇ, வாயிலொடு புழையமைத்து, ஞாயிறொறும் புதைநிறீஇப், பொருவேமெனப் பெயர் கொடுத், தொருவேமெனப் புறக்கொடாது, திருநிலைஇய பெருமன்னெயில் :]

281. புன் பொதுவர் வழி பொன்ற - புல்லிய இடையராய் அரசாள்வோர் கிளைமுழுதுங் கெட்டுப்போக,

(கு - பு.) கழுவுளென்னும் அரசனொருவன் இடையர்களுக்குத் தலைவனாக இருந்தானென்றும், அவனைத் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை யென்னும் சேரராசன் வென்றானென்றும் தெரிகின்றது ; " ஆன்பயம் வாழ்நர் கழுவு டலைமயங்க ", "பொருமுர ணெய்திய கழுவுள் புறம்பெற்று" என்பவற்றாலும் இவற்றின் உண்மையாலுமுணர்க ; (பதிற். எக, அஅ).

282. இருங்கோவேள் மருங்கு சாய - ஐம்பெருவேளிர் குலமுழுதுங் குறைய,

(கு - பு.) வேளிர் - குறுநிலமன்னர் ; ஐம்பெருவேளிராவார் ; திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநனென்பார் ; " சினங்கெழு திதியன், போர்வேலியானைப் பொலம்பூ ணெழினி, நாரரி நறவி னெருமை யூரன், றேங்கம

ழகலத்துப் புலர்ந்த சாந்தி, விருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநன் " என்னும் அகப்பாட்டானுணர்க; ௩௬.

283. காடு கொன்று - சோழமண்டலத்திற் காடாகிய இடங்களை வெட்டிப்போகட்டு,

283. நாடு ஆக்கி - பண்டுபோலக் குடியிருந்து விளையப்பண்ணி,

284. குளம் தொட்டு - தூர்ந்தகுளங்களைக் கல்லி,

284. வளம் பெருக்கி - நாட்டிற்குச் செல்வத்தைமிகுத்து,

285. பிறங்கு நிலை மாடத்து உறந்தைபோக்கி - பெரிய நிலைகளை யுடைய மாடங்களையுடைய உறந்தையென்னும் தன்னூரைப்போக்கி,

(வி - பு.) உறந்தை - உறையூர். போக்கி - விரிவுறச்செய்து.

286. கோயிலொடு குடி நிறீஇ - கோயில்களோடே பழையகுடிகளையும் பண்டுபோல நிலைநிறுத்தி,

291. திரு நிலைஇய பெரு மன் எயில் - திருமகணிலைபெற்ற பெரிய அக்கத்தையுடைய உறந்தையின் மதிலிடத்தே,

287. வாயிலொடு புழை அமைத்து - பெரிய வாசல்களோடே சிறிய வாசல்களையுமுண்டாக்கி,

288. ஞாயில் தொறும் புதை நிறீஇ - அதன்றலையில் எய்துமறையும் சூட்டுத்தோறும் அம்புக்கட்டுக்களையும் கட்டிவைத்து,

290, 289, 277, 278 - 280, 277. ஒருவேம் எனப் புறக்கொடாது பொருவேமெனப் பெயர்கொடுத்து மன்னர் மன்

எயில் கதுவும் மதன் உடை நோன் தாள் மாத் தானை மற மொய்ம்பின் தென்னவன் திறல்கெடச் செங்கண்ணுற் செயிர்த்து நோக்கிச் சீறி - யாம் தமியேமென்றுகருதிப் பல வரசர்கள்வந்தால் முதுகிடாது அவர்களுடனும் பொரக்கடவேமென வஞ்சினத்தைச்சொல்லி அரசருடைய பெரிய அரண்களைக் கோபித்தழிக்கும் செருக்கினையுடைய வலிய முயற்சியினையும் பெருமையினையுடைய நாற் படையினையும் மறத்தையுடைத்தாகிய வலியினையுமுடைய பாண்டியனது வலிகெடும்படி தன் செய்யகண்ணாலே குற்றத்தைச்செய்துபார்த்துக் கோபித்து, பெற்றவைமகிழ்தல் செய்யான் (உஉஅ) என முன்னேகூட்டுக.

"கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக், குடிபழி தூற்றுங் கோலே னாகுக" * என்றுகூறும் வஞ்சினத்தாற் றனக்கு ஓர் பெயர்பெறுத லின் வஞ்சினத்தைப் பெயரென்றார்.

(கு - பு.) வஞ்சினம் - சபதம்.

292 - 294. [மினனொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி, விசிபிணி முழவின் வேந்தர் சூடிய, பசுமணி பொருத பரேரெ றழ்க் கழற்கால்:]

293, 292, 293, 294. விசி பிணி முழவின் வேந்தர் தம் ஒளி மழுங்கி மின் ஒளி எறிப்பச் சூடிய கழல் கால் - இறுகவலித்த வார்க்கட்டினையுடைய முரசுகளையுடைய வழிபாடில்லாத வேந்தர் தம்மரசிழத்தலிற் றமக்கு முன் புள்ள விளக்கங்கெட்டுப் பின்பு அவ்விளங்குகின்ற விளக்கம் தோன்றும்படி யாகத் தம் முடிமேலேசூடின வீரக்கழலையுடைய காலினையும்,

(கு - பு.) வலித்த - கட்டின.

294. பசுமணி பொருத பரோர் எறழ்க் கழல் - ட ''' ழுணிகளோடே மாறுபட்ட பெரிய அழகிய வலியினையுடைய சுழலென்க.

295 - 297. பொற்றொடி புதல்வர் ஓடி ஆடவும் முற்றிழை மகளிர் ....திளைப்பவும் செஞ்சாந்து சிதைந்த மார்பின் - பொன்னாற் செய்த தொடியினையுடைய பிள்ளைகள் ஓடிவந்து எதிர் விளையாடுகையினாலும் மெய்ம்முழுதுமணிந்த அணிகலங்களையுடைய மகளிர்... . ... .சேர்தலாலும் சிவந்தசந்தனமழிந்த மார்பினையும்,

297. ஒண்பூண் - ஒள்ளிய பேரணிகலங்களையும்,

298. அரிமா அன்ன அணங்கு உடை துப்பின் - சிங்கவேற்றையொத்த வருத்தத்தையுடைய வலியினையுமுடைய,

---

* புறநானூறு, எஉ.

299. திரு மா வளவன் - திருவின் பெருமையையுடைய கரிகாற்பெருவளத்தான்,

திண்காப்பு வாள்கழித்தேறிக் (உஉகூ) காடுகொன்று நாடாக்கிக் (உஅரு) குளந்தொட்டு வளம்பெருக்கி (உஅச) உறந்தைபோக்கிக் (உஅடு) குடிநிறீஇப் (உஅகூ) பெருமன்னெயிலிலே (உகூக) வாயிலொடு

புழையமைத்து (௨௮௭) ஞாயிறொறும் புதை நிறீஇ (௨௮௮) இங்ஙனம் உருகெழுதாயம் ஊழினெய் தித் (௨௨௭) தென்னவன்றிறல்கெடச்சீறி (௨௭௭) அவன் திறையாகத்தந்த அரசவுரிமைகளாற் பெற்றவையில்தான் மகிழ்தல் செய்யானாய் (௨௨௮) மேலு மாசைமிக்கு இவன் மலையகழ்க்குவன், தூர்க்குவன் (௨௭௧), வீழ்க்குவன், மாற் றுவனென்று உலகம் கூறும்படியாக (௨௭௨) உழிஞைசூடி (௨௩௫), யானை யோடும் (௨௩௧) புரவியோடும் (௨௩௨) சென்று முருக்கி (௨௩௮) எடுப்பிப் (௨௩௯) பெரும்பாழ்செய்தும் அமையானாய்ப் (௨௭௦) பணிபொடுங்கக் (௨௭௪) கேட்ப (௨௭௫) வாடக் கூம்பப் (௨௭௬) பொன்றச் (௨௮௧) சாயத் (௨௮௨) தான் முன்னியதுறைபோகையினாலே (௨௭௩) வழிபடா ஏனைவேந்தர் (௨௯௩) தம்மொளிமழுங்கி மின்னொளியெறிப்பச் (௨௯௨) சூடிய (௨௯௩) காலினை யும் (௨௯௪) மார்பினையும் பூணினையும் (௨௯௭) துப்பினையு (௨௯௮) முடைய கரிகாற்பெருவளத்தா (௨௯௯) னென வினைமுடிக்க.

299 - 300. தெவ்வர்க்கு ஒக்கிய வேலினும் வெய்ய கானம் - பகை வனைக்கொல்லுதற்கு அறுதியிட்டுவைத்த வேலினும் கடியவாயிருந்தனகாடு;

(கு - பு.) அறுதியிட்டு - முடிவுசெய்து.

300 - 301. அவன் கோலினும் தண்ணிய தட மெல் தோளே - அவன் செங்கோலினும் குளிர்ந்திருந்தன பெரிய மெல்லிய தோள்கள்.

நெஞ்சே, (௨௨௦) இவனை நேசமுடன் கொண்டு செல்வோமென்னின், கானம் அவன் (௩௦௦) ஒக்கிய (௨௯௯) வேலினும் வெய்யவாயிராநின்றன (௩௦௦); இவடோள் (௩௦') அவன் (௩௦௦) கோலினும் தண்ணிய (௩௦௧) ; இவளைப் பிரியாதுறைதலி ய யான்போதற்கு ஆற்றுவாயிராநின்ற; ஆதலால், பட்டினமபெறினும (௨

வ) உ பகிழை ஈண்டுப்பிரிந்திருப்ப (உகக) யான் நின்னுடன்... ; இனி ஆண்டுப்போய் வாழ்வாயாக (உஉ0) வென வினைமுடிக்க.

'வாரேன்' என்றான் அவளை ஆற்றுவித்துப் பின்பு பிரிதல்கருதி; அது, * "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" என்பதனானுணர்க.

(சூ - பு.) "செலவிடை" என்னும் சூத்திரத்திற்குப் பொருள் : செலவு இடை அழுங்கல் - தலைவன் கருதிய போக்கினை இடையிலே தவிர்ந்திருத் தல், செல்லாமை அன்று - பிரிந்துபோதலாற்றாமைக்கன்று ; வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும - தலைவியை ஆற்றுவித்துப்பிரிதற்குத்தவிர்ந்த தவிர்ச்சியாகும். எ - று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சச.

சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலைக்கு மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

—ooꝏoo—

வெண்பா.

முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால் - செச்செய்

அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

(கு - பு.) மு சக்கரமும் - மூன்று உலகங்களையும், அளப்பதற்கு நீட்டிய கால் - அளத்தற்பொருட்டு நீட்டப்பெற்ற காலானது, இ சக்கரமே அளந் தது - இந்த மண்ணுலகத்தைமட்டும் அளந்தது, செ செய் - செம்மையை யுடைய வயலின்கண்ணுள்ள, அரிகால் மேல் - நெற்கதிர் அரிந்த தாளின்மே லே, தேன் தொடுக்கும் - வண்டுகள் தேனடைவைக்கப்பெற்ற, ஆய்புனல் நீர்நாடன் - அழகிய புனலையுடைய காவிரிபாயப்பெற்ற நாட்டையுடையவ னுன, கரிகாலன் - கரிகாற்பெருவளத்தானது, கால் நெருப்பு உற்று - பாதம் நெருப்புத்தீண்டப்பெற்றமையின். எ - று. மூன்றுலகத்தையும் அளத்தற் குரிய பெருமைவாய்ந்த கரிகாற்பெருவளத்தானுடைய பாதமானது நெருப்புத் தீண்டப்பெற்றமையின் இப்பூவுலகத்தை மட்டும் அளந்தது ; இதனால், இவன் திருமாலைப்போல்வானென்று கூறியபடி. இளமைப்பருவத்தில் நெரு ப்பில்வீழ்ந்தமையின், இவனுடைய கால் கரிந்துபோயிற்றென்றும், அதனாலே தான் இவன் கரிகாலனென்று பெயர்பெற்றானென்றுங் கூறுவர் ; இதனை, " சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும், பிடர்த்தலைப் பேரானைப் பெற் றுக் - கடைக்காற், செயிரறு செங்கோல் செலீஇயினு னில்லை, யுயிருடையா ரெய்தா வினை " (கoடு) என்னும் பழமொழி வெண்பாவாலும், ' இளமைப் பருவத்துப் பிறராற்சுடப்பட்டு உயிருய்ந்துபோகிய கரிகாலனும் இரும் பிடர்த்தலையாரென்னும் பெயரையுடைய தன்மாமனைத் தனக்குத் துணை யாகப்பெறுதலால்,

பின்னொருகாலத்தின்கண் தன்னுரிமையரசுபெற்றுக் குற்ற மற்ற செங்கோலை நடாத்தினன் ; ஆதலால், உயிருடையார் எய்தாததொரு நல்வினைப்பயனில்லை ' என்னும் அதனுனையாலும் உணர்க.

முகவுரை.

சென்னை யூனிவர்ஸிடியாரால் 1912-ஆம் வருஷத்து பி. ஏ. பட்டப்பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பெற்றுள்ள மலைபடுகடாத்தையும் மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையையும் வெளிப்படுத்தத் தொடங்கி, மாணாக்கர்களுக்கு அவை விளங்கும் வண்ணம் நூதனமாகவெழுதிய குறிப்புக்களையும் உரியவிடங்களிற் சேர்த்துப் பதிப்பிக்கலானேன்.

மலைபடுகடா மென்பது, செங்கண்மாவென்னும் நகரிலிருந்த நன்னனென்னும் சிற்றரசன்மீது பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனாரென்னும் கடைச்சங்கப்புலவரால் இயற்றப்பெற்றுள்ள ஒருபாட்டு. இது கூத்தராற்றுப்படை யெனவும் வழங்கும்.

இதனால், நன்னன்வரலாறுகளும் அவனுடைய பல குணவிசேடங்களும் விளங்குவதுடன் நூலாசிரியராகிய பெருங்கௌசிகனாரது இயல்பும் அவருடைய கல்விமேம்பாடும், பண்டைக்கால இயற்கையும் நன்குவிளங்கும்.

இதன் பகுதிகள், தொல்காப்பியஉரைகள்முதலியவற்றில் உரையாசிரியர்களால் ஆங்காங்கு மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பலநூலாசிரியர்கள், இதிலுள்ள வாக்கியங்களையும் கருத்துக்களையும் தாமியற்றிய நூல்களில் அமைத்து அழகுபடுத்தியிருக்கின்றனர்.

இதில்,படிப்பவர்களுடையமனத்தைக்கவரும் தன்மைநவிற்சியும் ஏற்ற உவமையுமேயன்றிப் பெரும்பாலும் பிறவணிகள் காணப்படா.

இதை இயற்றியவர் கடைச்சங்கப்புலவராதலின், இதன்காலம் கி. பி. முதலாவது அல்லது இரண்டாவது நூற்றாண்டாக இருத்தல் வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

நூலைப்பற்றிய பலவகையான ஆராய்ச்சிக்குறிப்புக்களும், இந்நூலின் பொழிப்பாகிய வசனநடையும், அரும்பதஅகராதியும் பிறவும் இப்புஸ்தகத்திற் சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூலை ஆராயுங்காலத்தும் பதிப்பிக்குங்காலத்தும் உடனிருந்து உதவிபுரிந்த மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம- ா-ா-ஸ்ரீ, இ. வை. அநந்தராமையரவர்களுடைய அன்புடைமை என்றும் மறக்கற்பாலதன்று.

இப்புஸ்தகம் பதிப்பிக்கப்பெற்ற அச்சுக்கூடத்தின் சொந்தக்காரர் திடீரென்று காலஞ்சென்றுவிட்டமையாலும், வேறு பலவகையான அசௌகரியங்களாலும் நான் எண்ணியவாறு முன்னமே இதனை வெளியிடக் கூடவில்லை.

இதிற்காணப்படும் குற்றத்தை விவேகிகள்
ளென்று நம்புகிறேன்.
பொறுத்திடுவார்க

சென்னை :
9—1—12.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ள
நூற்பெயர்முதலியவற்றின்
முதற்குறிப்பகராதி.

அகத் - அகத்திணையியல்.
அகநா - அகநானூறு.
அருச்சுனன் - அருச்சுனன் றவநிலைச் சருக்கம்.
அன்னத்தைக்கண்ணுற்ற - அன்னத்தைக் கண்ணுற்றபடலம்.
இடைச் - இடைச்சொல்லியல்.
இலக்கணவி - இலக்கணவிளக்கம்.
உயிர் - உயிர்மயங்கியல்.
உரி, உரிச் - உரிச்சொல்லியல்.
எச், எச்ச - எச்சவியல்.
ஐங்குறு - ஐங்குறுநூறு.
கண்ணப்ப - கண்ணப்பச்சருக்கம், கண்ணப்பநாயனார்புராணம்.
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கரந்தை - கரந்தைப்படலம்.
கலி - கலித்தொகை.
கார் - கார்நாற்பது.
குசேலர்மேல்கடல் - குசேலர் மேல் கடலடைந்தவத்தியாயம்.
குசேலோ - குசேலோபாக்கியானம்.
குற்றியலுகரப் - குற்றியலுகரப்புணரியல்.
குறிஞ்சி - குறிஞ்சிப்பாட்டு
குறு, குறுந் - குறுந்தொகை.
கூர்ம - கூர்மபுராணம்.
சிந்தா - சீவகசிந்தாமணி.
சில, சிலப், சிலப்பதி - சிலப்பதிகாரம்.
சிறுபா, சிறுபாணு - சிறுபாணாற்றுப்படை.
சீகாளத்திப் - சீகாளத்திப்புராணம்.
சீவக - சீவகசிந்தாமணி.
சுயம் - சுயம்வரகாண்டம், சுயம்வரச் சருக்கம்.
திருச்சிற், திருச்சிற்றம்பல - திருச்சிற்றம்பலக்கோவையார்.
திருமு, திருமுருகு - திருமுருகாற்றுப்படை.
திருவிளை - திருவிளையாடற்புராணம்.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியர், நச்சினார்க்கினியருரை.
நக்கீரச் - நக்கீரச்சருக்கம்.
நகர - நகரப்படலம்.
நள, நளவெ - நளவெண்பா.
நற் - நற்றிணை.
நாட்டு - நாட்டுச்சருக்கம்.
நாட்டுப் - நாட்டுப்படலம்.
நாடுகாண் - நாடுகாண்காதை.
நான்மணி - நான்மணிக்கடிகை.
நெடுநல் - நெடுநல்வாடை.
பட், பட்டின - பட்டினப்பாலை.
பதிற், பதிற்று - பதிற்றுப்பத்து.
பிரபுலிங்க - பிரபுலிங்கலீலை.
புள்ளி, புள்ளிமயங்- புள்ளிமயங்கியல்.
பு-வெ - புறப்பொருள்வெண்பாமாலை
புறத் - புறத்திணையியல்.
புறநா - புறநானூறு.
பெரிய - பெரியபுராணம்.
பெரும்பா, பெரும்பாணு - பெரும்பாணாற்றுப்படை.
பொது - பொதுவியல்.
பொரு - பொருளதிகாரம்.
பொரு, பொருந, பொருநரா - பொருநராற்றுப்படை.
மங்கல - மங்கலவாழ்த்துப்பாடல்.
மணி - மணிமேகலை.
மது, மதுரை - மதுரைக்காஞ்சி.
மர - மரபியல்.
மலை - மலைபடுகடாம்.

சூ - சூத்திரம்.
சூளா - சூளாமணி.
செய் - செய்யுளியல்.
சே - சேனாவரையருரை.
சொல் - சொல்லதிகாரம்.
தணிகை - தணிகையாற்றுப்படை.
தாடகை - தாடகைவதைப்படலம்.
திருக் - திருக்குறள்.
மாயையுற்பத்தி - மாயையுற்பத்திகதி.
முருகு - திருமுருகாற்றுப்படை.
முல்லை - முல்லைப்பாட்டு.
வஞ்சி - வஞ்சிப்படலம்.
வரைக்காட்சி - வரைக்காட்சிப்படலம்.
வினை - வினையியல்.
வெண்பாப்பாட் - வெண்பாப்பாட்டியல்.

நூல்.

மலைபடுகடாமென்பது நக்கீரனார்முதலிய கடைச்சங்கப்புலவர்களால் இயற்றப்பட்டு அவர்களால் தொகுக்கப்பெற்ற பத்துப்பாட்டினுள் பத்தாவதாகவுள்ளது.

பத்துப்பாட்டுக்களாவன: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இது,

" முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்னும் பழையவெண்பாவால் விளங்கும். இவற்றை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பது முறையே ஒவ்வொருபாட்டின் உரையிறுதி யில் நச்சினார்க்கினியரெழுதிய வாக்கியங்களாலும், இப்பாட்டுக்க ளைத் தொகுத்தோர் சங்கப்புலவரென்பது மலைபடுகடாத்தின் கசஈ- ஆம் அடியின் விசேடவுரையில் அவர் எழுதிய வினாவிடைகளாக வுள்ள வாக்கியங்களாலும் விளங்கும்.

இப்பாட்டுக்கள் பத்தும், முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலையென்னும் நால்வகைச் செய்யுட்களுள், தொகைநிலையின் பாற்படுமென்று கூறுவாருமுளர்.

இவற்றுள்,—

முதலாவது திருமுருகாற்றுப்படை ௩௧௭ - அடிகளையுடையது; முருகக்கடவுண்மீது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது; இதில் முருகக்கடவுளுடைய ஸ்தலங்களுட்சிறந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை யென்னும் ஆறுபடைவீடுகளும், அவற்றில் அவர் எழுந்தருளியிருக்கும் விதமும் முறையே நிரம்பப் பாராட்டிக்கூறப்படும். இது, சைவத் திருமுறைகளில் கக-ஆம் திருமுறைப் பிரபந்தவரிசையிற் சேர்க்கப்

பெற்றுள்ளது. இப்பாட்டு, புலவராற்றுப்படையென்றும் வழங்கப் பெறும்.

இரண்டாவது பொருநராற்றுப்படை உசஅ - அடிகளையுடையது; இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய சோழன் கரிகாற்பெருவளவனை முடத்தாமக்கண்ணியார் பாடியது; இதில் கரிகாற்பெருவளவன்கொடையும் அவன்வீரமும் அவனாண்ட சோழநாட்டின் வளமும் காவிரி நதியின் சிறப்பும் நன்றாகக் கூறப்படும்.

மூன்றாவது சிறுபாணாற்றுப்படை உசுக - அடிகளையுடையது; ஏறுமாநாட்டு நல்லியக்கோடனென்பவனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது; இதில் நல்லியக்கோடனது வண்மையும் அவனுடைய நகரங்களாகிய எயிற்பட்டினம் வேலூர் ஆமூர் முதலியவற்றி னியல்புகளும், அவற்றிலிருந்த மாந்தர்களது நற்குண நற்செய்கைகளும் தமிழ்நாட்டு மூவேந்தர்களுடைய இராசதானிகளாகிய மதுரை வஞ்சி உறையூரென்னு மூன்று நகரங்களி னிலைமைகளும் பேகன் பாரி காரி ஆய் அதிகன் நள்ளி ஓரி யென்னும் வள்ளல்களெழுவரும் இன்ன இன்ன கொடையாற் பெயர்பெற்றார்களென்பதும் கூறப்பட்டுள்ளன. புறநானூற்றில் கOடு - ஆம் செய்யுள் முதலியவற்றிற் கூறப்பெற் றுள்ள

பாரியென்பவனும் இங்கே கூறப்பெற்றபாரியும் ஒருவனே.

நான்காவது பெரும்பாணாற்றுப்படை

டு00-அடிகளையுடையது; காஞ்சி நகரத்திருந்த தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது; இதில் அவனது வண்மையும், தொண்டைநாட்டிலேயுள்ள குறிஞ்சிமுதலிய ஐந்திணைவளங்களும், அவற்றில்வாழும் மாந்தருடைய தொழில் ஊண் ஒப்புரவு முதலியனவும், காஞ்சி நகரத்தின் சிறப்பும், திருமாலின் நூற்றெட்டுத்திருப்பதிகளுள் ஒன்றாகிய திருவெஃகா வென்பதும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது முல்லைப்பாட்டு. இது கOரு. அடிகளையுடையது; பகைமேற்சென்ற தலைவன்வருமளவும் தலைவி ஆற்றியிருந்தவிடத்து அவன் வந்ததனைக்கண்டு தோழிமுதலியோராகிய வாயில்கள் தம் முட்கூறியதாகக் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது; இது தலைவனைப்பிரிந்து தனித்திருக்கும் தலைமகளியல்பையும் கார்காலத்தின் தன்மையையும் படைவீட்டிற் பகைவர் துயரத்தோடிருத்தலையும் தலைவனது சௌரியத்தையும் விளங்கக்கூறும்.

நூல். ரு

ஆறாவது மதுரைக்காஞ்சி எஅஉ - அடிகளையுடையது; தலை
யாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு
வீடுபேறு நிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்தி மாங்குடிமரு
தனார் பாடியது; இதில் பாண்டிநாட்டின் ஐந்திணைவளங்களும், மது ரையம்பதியி னழகும், அப்பாண்டியனது வீரமுதலியனவும், சோ ராசனது நாளோலக்கச் சிறப்பும், அக்காலத்திருந்த பலசிற்றரசர்க
ளுடைய பெருமையும், அருச்சுனனுக்குக் கண்ணன் உபதேசித்த பகவற்கீதையின் மேம்பாடும், இன்னும் பலவும் கூறப்பட்டுள்ளன.

ஏழாவது நெடுநல்வாடை கஅஅ - அடிகளையுடையது. பாண் டியன் நெடுஞ்செழியனை நக்கீரனார் பாடியது; இதில் ஐப்பசி கார்த் திகை மாதங்களாகிய கூதிர்க்காலத்தினியல்பும் தனித்திருந்த தலைவி யது வருத்தமிகுதியும் படைவீட்டில் தலைவனிருக்கும் வண்ணமும் விளங்கக் கூறப்பட்டுள்ளன.

எட்டாவது குறிஞ்சிப்பாட்டு உசுக - அடிகளையுடையது; ஆரிய
வாசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் கபிலர் பாடியது; இதில் மலைவளங்களும், இல்லறமுறைமையும், தலைவனும் தலைவியும் தம்

முள் வைக்கத்தகுமன்புடைமையும், கற்பின் இன்றியமையாமையும், பல மலர்விசேடங்களும் அழகாகக் கூறப்பட்டுள்ளன; இது பெருங் குறிஞ்சியென்றும் பெயர் பெறும்.

ஒன்பதாவது பட்டினப்பாலை ஙUக - அடிகளையுடையது; சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இதிற் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும், சோழநாட் டின் வளமும், காவிரிநதி பயன்படுதலும், அச்சோழனுடைய பராக் கிரமமும், அவனுடைய செங்கோலின் மேன்மையும் நிரம்ப விரித் துக் கூறப்பட்டுள்ளன. இந்நூலைக்கேட்டு அச்சோழன் கடியலூ ருருத்திரங்கண்ணனார்க்குப் பதினாறுலக்ஷப் பொன் பரிசளித்தானென்று கலிங்கத்துப்பரணியாற் றெரிகின்றது.

மலைபடுகடாத்தின் வரலாற்றிற்கு அங்கமாகத் திருமுருகாற்றுப் படை முதலிய கூ - பாட்டுக்களின் வரலாறுகள் இதுவரையிற் கூறப் பட்டன.

பத்தாவதாகிய மலைபடுகடாமென்பது *பல்குன்றக் கோட்டத் துச் †செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன்மீது இரணிய

* பல்குன்றக் கோட்டமென்பது நன்னனுடையநாடு.
† செங்கண்மா - அவனுடையநகர்.

முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய ஒரு பாட்டு; ருஅரு - அடிகளையுடையது; ஆசிரியப்பாக்களுள், இது நேரிசையாசிரியப்பா; [நேரிசைஆசிரியப்பாவாவது ஈற்றயலடி முச்சீரடியாகவும், ஏனைய அடிகள் நாற்சீரடிகளாகவும் வரப்பெறுவது]. இப் பாட்டின் ருஙிள - ஆம் அடியின் முதலிலுள்ள, ' அதனால் ' என்பது, செய்யுளிலக்கணத்துள் ' கூன் ' என்று வழங்கப்படும்.

மலைபடுகடாமென்னும்பெயர்க்காரணம் : இப்பாட்டின் ருசஅ ம் அடியில் மலைக்கு யானையை உவமித்து அதனிடத்தே பிறந்த பல வகையான (உசுஉ - ம் அடி முதலியவற்றைப்பார்க்க) ஓசையைக் கடாம் (மதம்) எனச் சிறப்பித்துப் பாராட்டியிருத்தலால், இப்பாட்டு ' மலைபடுகடாம் ' எனப் பெயர்பெற்றதென்பர். இதனை, இப்புத்த கத்தின் சுக - ம் பக்கத்துள்ள உரையாசிரியர் வாக்கியங்களாலறிக. இப்படியே, பதிற்றுப்பத்திலுள்ள பாட்டுக்களெல்லாம் தம்பாலுள்ள தொடர்மொழிகளின் பொருட்சிறப்பால் அத்தொடர்மொழிகளையே தம்பெயர்களாகக்கொண்டு விளங்குதல் இங்கே அறிதற்பாலது.

உதாரணம் : பதிற்றுப்பத்தில், 11 -வது செய்யுளின்பெயர், புண்ணுமிழ்குருதி; 90 - வது செய்யுளின்பெயர் வலிகெழுதடக்கை.

கூத்தராற்றுப்படையென்னும் பெயர்க்காரணம் : ஆற்றுப்படை யென்பது, ஒருவர் ஒரு கொடையாளியின்பால் தாம்பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் அங்கே சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல்; ஆறு- வழி, படை - படுத்தல். ஒவ்வொருவரும் இங்ஙனம் கூறுதற்கு உரி யோராயினும், கூத்தர்முதலியோரே எதிர்வந்த கூத்தர் முதலியவர்களுக்குக்கூறி அவர்களை வழிப்படுத்தியதாகச் செய்யுள்செய்தல் மரபு. தொல்காப்பியப் புறத்திணையியலில், ௩௬-ம் சூத்திரத்திலுள்ள, " கூத் தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பய னெதிரச் சொன்னபக்கமும்" என்பது இதற்குவிதி; 'ஆடன் மாந் தரும் பாடற் பாணரும், கருவிப் பொருநரும் இவருட்பெண்பாலாராகிய விறலியருமென்னும் நாற்பாலாரும் தாம்பெற்ற பெருஞ்செல் வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும் ' என்பது இதன்பொருள். இங்ஙனம் இயற்றப்பெற்றவைகள் : கூத்த ராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, புலவராற்

றுப்படை, விறலியாற்றுப்படை என ஒவ்வொருவகையிலும்

பலபல உள்ளன. பத்துப்பாட்டிலன்றி, புறநானூறு முதலியவற்றிலும் பிற் காலத்து நூல்களாகிய கலம்பகங்களிலும் இவ்வாற்றுப்படைச் செய் யுட்கள் காணப்படுகின்றன. இவை, தனிச்செய்யுளாக ஆக்கப்படும். புறப்பொருள் வெண்பாமாலையில் பாடாண்படலத்தில் வந்துள்ள

[வெண் பா.]

"கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்
றலைவ தவிராது சேறி—சிலைகுலாங்
காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு".

என்னும் கூத்தராற்றுப்படைச் செய்யுள் முதலியவற்றாலும் இஃது அறியலாகும். கூத்தராற்றுப்படைக்கு இந்நூலையே உதாரணமாக எடுத்துக்காட்டினர் நச்சினார்க்கினியர்; [தொல். பொரு. பக். 212.]

நன்னனென்னும் தலைவன்பாற்சென்று பரிசில்பெற்றுவரும் கூத் தனொருவன் தான்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிரேவரும் வறியவ னாகிய கூத்தனுக்கு அறிவுறுத்தி, "நீயும் அவன்பாற்சென்று பெருஞ் செல்வம் பெற்று வாழ்வாயாக" என்று வழிப்படுத்தியதாக நன்ன னுடைய பலவகைப்பெருமைகளும் புலப்படும்படி செய்யப்பெற்றிருத்தலின், இது கூத்தராற்றுப்படையென்று பெயர்பெற்றது. இலக் கணவிளக்கச் செய்யுளியலுரையில் இப்பாட்டுக் கூத்தராற்றுப்படை யென்று வழங்கப்பெற்றுள்ளது.

இப்பாட்டினுள், வந்த கூத்தனைநோக்கி, 'கண்ணுளரொக்கற் றலைவ, சுற்றமும் நீயும் நன்னன்பாற் சேறிராயின், நாடுபடர்மின் ;விரிந்த விடியல் கழிமின்; மாமறையாக்கழிமின் ; ஒருவிரொருவி ரோம் பினிர் கழிமின் ; செந்நெறிக்கொண்மின் ; குறுகாதுகழிமின் ; மென் மெலஅகன்மின் ; மலைபிற்படக் கழிமின் ; கோல்கொண்டு ஊன்றி னிர்கழிமின் ; கைபிணிவிடாது கழிமின் ; மருப்பிகுத்துத் துணை மின் ; அஞ்சாது கழிமின்; சேர்தனிர்கழிமின் ; வியங்கொண்மின் ; ஆடிக் கொண்டனிர் கழிமின் ; புள்ளோர்த்துக்கழிமின் ;மருதம்பண் ணிக் கழிமின் ; ஒருகரைக்கொண்டனிர் கழிமின்; அயிராது புகு மின்' எனவந்த ஒருகூத்தன் கூறியதாக அமைந்திருப்பதும் கூத்த ராற்றுப்படையென்னும் பெயர்ப்பொருளை வலியுறுத்தும்.

இதனால், நன்னனென்னும் சிற்றரசனுடைய நாட்டுவளங்களும் நாட்டிலுள்ள குடிகளின் இயல்புகளும் அவனுடைய செங்கண்மா

அ நூல்.

வென்னும் நகரத்தின்சிறப்பும் அவனுடைய அருமையான குணவிசே டங்களும் நவிரமென்னுமலையிலுள்ள காரியுண்டிக்கடவுளென்று திரு நாமம்பெற்ற சிவபெருமானது திருக்கோயிலை அவன் பரிபாலித்ததும் பண்டைக்காலத்து

நடையுடைமுதலியனவும் பிறவும் நன்கு வெளியாகும்.

இதில், ' கலப்பையிராய் இருந்த கண்ணுளரொக்கற்றலைவ ' எனப் பன்மையும் ஒருமையும் விரவியிருத்தல் வழுவெனின், ஆற்றுப் படைச்செய்யுளில் இங்ஙனம் வருதல் இயல்பென ஆன்றோர் அமைத் திருத்தலால், வழுவன்றென்க; இப்புத்தகத்தின் உறு - ம் பக்கத்தா லும் இது விளங்கும்.

இப்பாட்டினுள், முதலாவது அடிமுதலியவற்றில், நன்னன் பாற் பரிசுபெற்றுக் களிப்புற்றுவரும் கூத்தன், வறுமையால் வாட்ட மடைந்து சுற்றத்துடன் கவலையுற்று வழியிலிருந்த கூத்தர் தலைவனை விளித்ததும் ருக - ஆம் அடிமுதலியவற்றில் நீ நன்னன்பாற் செல்வா யாயின், வறுமைநீங்கி வாழ்வையென்று நன்னனுடைய அருமைக் குணங்கள் முதலியவற்றையும் அவனுடைய நகரத்திற்குச்செல்லும் வழியின் இயல்புகளையும் தொகுத்துக்கூறலும் கூடு-ஆம் அடிமுதலிய வற்றில், முன்தொகுத்துக் கூறியவற்றை விரித்துக்கூறலும் அமைந் துள்ளன.

இந்நூலின் இறுதியடி, " குன்றுசூழ் கிடக்கை நாடுகிழ் வோனே " என வந்திருப்பதுபோலத் திருமுருகாற்றுப்படையின் இறுதியடி, "பழமுதிர் சோலை

மலைகிழ வோனே " எனவும், பொரு நராற்றுப்படையின் இறுதியடி, "காவிரி புரக்கு நாடுகிழ வோனே" எனவும், பெரும்பாணாற்றுப்படையினிறுதியடி, " ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே " எனவும், திருத்தணிகையாற்றுப்படையின் இறு தியடி, " நிலைபெறு தணிகை மலைகிழ வோனே " எனவும் வந்திருத் தலை உற்றுநோக்குகையில், ஆற்றுப்படைச்செய்யுள், " கிழவோனே " என முடியவேண்டுமென்று பண்டைக்காலத்தார் எண்ணியிருந்தார்களென்று நினைத்தற்கு இடமுண்டாகின்றது.

நூலாராய்ச்சி.

இந்நூலில்வந்துள்ள

(க).—அரும்பதங்கள்.

* இகுத்தல்.
கவர்தல் (அழைத்தல்).
நிழத்தல்.
நுவறிய.
எத்தம்.
மகுளிபாயாது. இருயினிர்.
வருடை (எண்கால்வரு உயவை, டை).
புழகு. இகுப்பம்.

(உ).—வடமொழிகள்-

ஆணி.
கோவலர்.
பலம்.
வாதி. கலவம்.
திசை.
மணி.

(௯).—ஒருபொருட்பன்மொழிகள்.

அலகைத்தவிர்த்த எண்ணருந்திறத்த.
உயர்ந்தோங்கு.
எண்ணுமிகப்பல.
தெரிந்துணரும்.
நிவந்தோங்கு.
பீலியணித்தழை.
மீமிசை,

(௰).—உயிரளபெடைகள்.

அசைஇ.
அளைஇ.
ஆஅல்.
இடூஉம்.
இரீஇ.
இரூஅ.
இரூஅல்.
உணீஇய.
உரீஇ.
காஅய்.
குரூஉ.
குழீஇய.
கெழீஇ.
கைதொழூஉ.
கைபுடையூஉ.
கொளீஇ.
சேஎய்.
தரீஇ.

உளூஉன்.
ஓரீஇ.
கடாஅம்.
கவைஇய.
கழீஇய.
தரூஉம்.
தலைஇய.
தழீஇய.
தாஅய்.
துதைஇ.

துழைஇ.
தூஉய்.
தெரூஅ.
தேஎத்து.
தேஎம்.
மலைபடுகடாஅம்.
மேஎய்.
வயாஅம்.
வழாஅது.
வழாஅல்.

தொலைஇ.

படர்ந்தா அங்கு.

பரூஉ.

புறந்தரூஉம்.

பெரு அ

பொரூஉம்.

மகா அர்.

மரா அ.

மரா அத்த.

வழீஇ.

வழூஉம்.

விடா அன்.

விரைஇ.

வெரீஇ.

வெரீஇய.

வெரூஉம்.

---

* இதற்கும் பின்னுள்ளவற்றிற்குமுரிய அடிஎண்களை இப்புத்தகத்தின் பின்னுள்ள அரும்பத அகராதியால் அறிந்துகொள்க.

(ரு).—ஓற்றளபெடைகள்.

கண்ஸ்டண்ணென. மரங்ங்.

(சா).—இடைச்சொற்கள்.

அன்ன.	இன்.	கல்லெனை.	போல.
ஆங்கு.	உளி.	ஒரோஎன.	மருள.
இகும்.	கடுக்கும்.	தண்ணென.	மன்ற.
இம்மென.	கடுப்ப.	தில்ல.	மார்.

(எ).—தெய்வவகைகள்.

காரியுண்டிக்கடவுள். தெய்வப்பெண்கள். யமன். சூரியன். பேய். வீரக்கற்கடவுள்.

(அ)—சாதிகள்.

இடையர். குயவர். கூத்தர். உழவர் (களமர்). குறவர் (வேடர்). யானைப்பாகர்.

(சூ).—விலங்குவகைகள்.

ஆட்டுக்கிடாய். காட்டுப்பசு. பன்றி. இடபம் (எருது). காட்டெருமை. புலி. உடும்பு. கீரிப்பிள்ளை. முசுக்கலை. எண்கால்வருடை. குதிரை. முள்ளம்பன்றி. எருமைக்கடா. குரங்கு. யானை. கரடி. செம்மறியாடு. வேங்கை. கலைமான். பசு.

(க0).—நீர்வாழ்வன.

முதலே. வரால். வாளை.

(கக).—பறவைகள்.

காட்டுக்கோழி. கோழி. பருந்து. போாந்தை.

(கஉ).—பண்வகை.

இளி.

குறிஞ்சிப்பண். துக்கத்தைப்போக்கும்பாட்டு. வள்ளைப்பாட்டு.

(கங).—வாத்தியங்கள்.

உடுக்கை.	கொம்பு.	புல்லாங்குழல்.
ஒருகண்மாக்கிணை.	சல்லி (சல்லிகை.)	பெருவங்கியம்.
காடிகைப்பறை (தட்டை.)	சிறுபறை (ஆகுளி).	பேரியாழ்.
	சீறியாழ்.	முழவு.
குறுந்தூம்பு.	தாளம் (பாண்டில்).	

(கச).—கூத்து.

குரவைக்கூத்து. வெறியாட்டு.

(கரு).—இடவகை.

ஊர்.	சிற்றூர்.	பணைநாடு.
கல்லையிடித்துண்டாக்கி கடலொடு	சிறுகாடு.	புகார் (காவிரி

னவழி.
கவர்த்தவழி.
நியமம் (கடைத்தெரு).
நீர்த்துறை.
நெற்களம்.

தோட்டம்.
நல்லவழி.
விளைநிலம். [முதலியன.
வீடு, குடிசை, அரண்மனை
வெறியாடுகளம்.

கலக்குமிடம்),
போர்க்களம், காடு.
காவற்காடு.
குறுங்காடு.

(கசு).—நீர்நிலை.

அருவி. கயம். சுனை. மடு.

(கஎ).—மரம், செடி, கொடி, கிழங்குமுதலியன.

அசோகு.
அவரை.
ஆல்.
இஞ்சி.
ஈரப்பலா.
உயவைக்கொடி.
எள்,
ஐவனநெல்.
கடுமரம்.
கண்பு (கோரை.)

கருப்பூரமரம்.
கரும்பு.
கவலைக்கொடி.
களாச்செடி.
குறிஞ்சிமரம்.
கூவைக்கிழங்கு.
கொறுக்காந்தட்டை.
சந்தனமரம்.
சுரபுன்னை.
சேம்பு.

(கஅ).—பூக்கள்.

கருநெய்தற்பூ. குவளைப்பூ.
காட்டுமல்லிகைப்பூ. செங்காந்தட்பூ.

(கக).—மாலைவகை.

கண்ணி. கோதை.

(உ0).—பாத்திரங்கள்.

தினை.
தேமாமரம்.
பலா.
புளி.
பெருமூங்கில்.
மரல்.
மிளகு.
மூங்கில்.
வாழை.
வெண்சிறுகடுகு.

வெண்காந்தட்பூ.

தார்.
கடகப்பெட்டி. மிடா. மூங்கிற்குழாய்.

(உக).—வாகனங்கள்.

குதிரை. தேர். யானை.

(உஉ).—கருவிகள்.

அம்பு. அரிவாள். கல்யந்திரம். சக்கரம். வில். அரம்.
கத்தி. கவண்கல். தூண்டில். வேல்.

(உங).—பயிர்த்தொழிலுக்குரியவை.

உழாதுவித்துதல். களக்கொடை. நெற்களம்.
உழுதல். களைக்கொட்டு. பரண். ஏர்.
கிளிகடிதல். பாத்தி. கரும்பாலை [யோட்டல். தடுப்பு.
வயல். கவண்கல்லால் யானையை நெல்லறுத்தல்.

(உச).—கைத்தொழிற்சம்பந்தமானவை. அரம்.

கண்ணேணி. நூலிழை. அருங்கலம். காமரம்.
பரண். ஆட்டுத்தோற்படுக்கை. குயவன்சக்கரம். பன்னியபஞ்சு.
ஆடை. குரம்பை (சிறுகுடில்.) யானைமுகபடாம்.
ஆணி. கொடி (துவசம்.)
ஆபரணம். தொடி (கையணி.)

(உரு).—பலவகைத்தொழில்கள்.

அவலிடித்தல். நெல்லறுத்தல்.
தினை, நெல் இவற்றைக்குத்துதல்.

பொதிகளைக்காவடியிற்சுமந்துசெல்லல். நெல்லறுக்கும்பொழுது வக்குதல் (வதக்குதல்.)

தண்ணுமைகொட்டல்.

(உகூ).—உணவுவகைகள்.

அவல்.

எருமைத்தயிர்.

கடமான்தசை.

கரைத்த புளிநீருலையில் அவரைவிதையையும், மூங்கிலரிசியையும், வேறுவேறுவகையான நெல்லரிசியையும் சொரிந்து ஆக்கின புளியங்கூழ்.

கிழங்குகள்.

சோற்றுருண்டை.

தசை.

தினைச்சோறு.

தினைமா.

தேனாலாக்கியகள்.

நெய்யில்வெந்ததசைப்பொரியல்.

நெய்விழுது.

நெய்விழுதுஉள்ளேவைக்கப்பெற்ற தினைச்சோற்றுருண்டை.

நெல்லாலாக்கியகள்.

பலாவிதையின்மாவும், புளியும்கலந்த மோருலையிற்சமைத்த மூங்கிலரிசிச்சோறு.

பழம்.

மூளையாலாக்கியகள்.

வாளைமீன் தசை.

.ாத்துள் ஒத்தபகுதிகள்.

	வரி.	மூலம்.
	532	மழையெதிர்படுகண் முழவுகண்ணிருப்ப.
	533	கழைவளர் தூம்பின் கண்ணிடமிமிர.
காய்த்	142 - 4	கார்வாய்த்தெதிரிக் கோடியர்முழவிற்றூங்கி இறைஞ்சின, பலவே.
	365	காஅய்க்கொண்ட நும்மியம்.
	274 - 5	இரூஅ வன்சிலையர் மாதேர்பு கொட்குங்குறவர்.
.யாழ்	534	கருங்கோட்டுச்சீறியாழ்.
	259,265	கயங்கண்டன்ன பெருமரக்குழாமும்.
	569	தலைவன்றூமரைமலைய.
	424	கொடியோள்கணவன்.
	448	புள்ளோர்த்துக்கழிமின்.
	388	செல்லாநல்விசை.
	75 - 6	தூத்துளிபொழிந்த பொய்யாவானின்வீயாதுசுரக்குமவன்.
	580	மழைசுரந்தன்ன வீகைநல்கி.
	543	கொடைக்கடனிறுத்தசெம்மலோய்.
	558	பாந்திடங்கொடுக்கும்விசும்பு.

2

மலைபடுகடாத்துள் ஒத்தபகுதிகள்.

1

வரி.	மூலம்.
1 - 3	திருமழை தலைஇய ....முழவொடு
6	கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பு
11 - 2	பதலையும் பிறவுங், கார்கோட் பலவின் துணர் கடுப்ப
13	காயகலப்பையிர்
17	தொடுத்தவாளியர் துணைபுணர்கானவர்
36 - 7	களங்கனியன்ன.........மருப்பின்........
47	கயம்புக்கன்ன.........தண்ணிழல்
50	கலம்பெறுகண்ணுளரொக்கற்றலைவ
58	மங்கையர்கணவன்
65-6	எதிர்ந்தபுள்ளினிர்
70	தொலையாநல்லிசை
72	புலவோர்க்குச்சுரக்குமவனீகைமாரியும்
89	கொடைக்கடனிறுத்தவன்
100	அகலிருவிசும்பு

மூலம்.	வரி.	மூலம்.
னநெடுந்தாளாசினி	292	கலைதொடுபெரும்பழம்புண்கூர்ந்தூறலின்.
ந்தினபலவே	511	பலவின்முழவுமருள்பெரும்பழம்.
சங்காந்தள்	149	(காந்தள்) நெருப்பினன்னபல்விதழ்தாஅய்.
கி	256	அற்சேர்ந்தல்கியசைதலோம்பி.
துபுக்கு	491	அருங்கடிவாயிலயிராதுபுகுமின்.
ட்டேக்கட்டேறல்	522	திருந்தமைவிளைந்ததேக்கட்டேறல்.
ழ்	337 - 8	பலவின்சுளைவிளை தீம்பழ முண்டுபடுமிச்சிற்காழ்.
சடி	563	முடுவறந்தபைந்திணைத்சடி.
சயம்	474 - 6	வளைகலத்திகிரியிற்குமிழிசுழலும்ஆறு.
லமகார்	253	புட்கைபோகியபுனறலைமகார்.
றடுத்தபிரசம்	524 - 5	நெடுவரைநேமியிற்செல்லும் இரூல்.
)	579 - 80	ஞெரேரெனநல்கி.
குவிருந்திறைசான்மென	467	திண்டேர்நன்னற்குமயினிசான்மென.
ன் குரல்விறலியர்	536	கடவதறிந்தவின்குரல்விறலியர்.
	530	வானத்தன்னவளமலியானை.
ன்கூடுதுறுகல்	572	வரைமருள்வேழம்.
	397	ஒட்டாதகன்றவொன்னுத்தெவ்வர்.
னி	534	மருதம்பண்ணியயாழ்.
	555	கலுழிக்கட்கின்சேயாற்று.
ாங்குவரைப்பு	575	நிலந்தினக்கிடந்தநிதியம்.

வரி.	
138 - 9	புன்னைரிந்தரலையுக்க
143	முழவிற்றூங்கியிறை
145	தீயினன்னவொண்
158	அசைஇயற்சேர்ந்தல்
165	தூம்மில்போலநில்லா
171	வேய்ப்பெயல்விளையு
174	பழஞ்சிதைவெண்கா
177	பிணவுநாய்முடுக்கிய
213	குமிழிசுழலுங்குண்
217	தருவினன்னபுன்ற
238-9	நெடுவரைநேமியிற்
240	ஞெரேரெனநோக்க
319	திருந்துவேலண்ணற்
358	இறும்பூதுகளுலியவி
377	மழைமருள்பஃறோல்
384	களிறுமலைந்தன்னக
386	ஒன்னாத்தெவ்வர்
469 - 70	நல்யாழ்மருதம்பண்
476	கட்கின்சேயாற்றின்
478	நிதியந்துஞ்சுநிவந்தே

_டாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
	தலைப்பெயறலை இய—முருகு. 9.
	வானந்தண்டளிதலைஇய—பதிற்று. 31.
விசித்தமுழவ.	பண்ணமை முழவு—பதிற்று. 41.
	தாழ்பீலிப் பல்லியமும்—பு - வே. காந்தை. 3.
யிர்த்தூம்பு.	கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்—புறநா. 152.
	கண்ணறுத்தியற்றிய தூம்பு—பதிற்று. 41.
	தேரை, தட்டைப்பறையிற் கறங்கும்—குறு. 193.
சுருக்கிக்காயகலப்	ஒருதலைப்பதலை தூங்க வொருதலைத் தூம்பகச் சிறுமுழாத்தூங்குத் தூக்கி, சுவலழுந்தப்பலகாய இளைஞர்—புறநா. 103, 139.
	முழவும் பதலையும் பிறவுங், கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக், காவிற்றகைத்த துறைகூடு கலப்பையர். பதிற்று. 41.
ஞ்சிறுநெறி.	விசும்பினுக் கேணி நெறியன்ன சின்னெறி—திருச்சிற். 149.
படு திவவின்.	குறுந்தொடி யேய்க்கு மெலிந்து வீங்குதிவவின்—பெரும்பா. 13
	திணையரிசி யவைய லன்ன, வேய்வை போகிய விரலுளர் நரம்பின்—பொருந. 16 - 17.
	கேள்வி போகிய—பொருந. 18.
	சுகிர்புரி நரம்பும்—சீவக. 728.

அடியின் எண்.	மலைபடுகடாத்தின்
1	திருமழைதலைஇய.
	,,
2-3	பண்ணமைத்துத் திண்வார்
5	பீலியணிதழைக்கோடு.
6	கண்ணிடைவிடுத்த களிற்று
	,,
9	அரிக்குரற்றட்டை.
3-13	முழவொடாகுளி..... .. .. பையிர்.
	,,
✓16	எடுத்துநிறுத்தன்ன இட்டரு
21	தொடித்திரிவன்ன தொண்
22	கடிப்பகையனைத்தும்.
,,	கேள்விபோகா.
23	சுகிர்புரிநரம்பின்.

4 மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

கடாத்தின் மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
ந்தன்ன துளை.	கழுகின்பாளையம்பசும்பூக்கருவிருந்தன்ன துளை—பெரும்பா. 7-8.
ணிமுடுக்கி.	துளைவாய் தூர்ந்த துரப்பமையாணி—பொருந. 10.
சை.	விளக்கழலுருவின் விசியுறுபச்சை—பொருந. 5.
ண்டுகமழும்பால்.	விழுவொலி கூந்தல்—ஐங்குறு. 306. மணங்கமழ்மாதரை மண்ணியன்ன—பொருந. 19.
—நடங்கெழிலாகத் தடங்கு வவ்வாய்கடுப்ப.	செய்யோளவ்வயிற்றுஐதுமயிரொழுகியதோற்றம்போல — பொருந. 6 - 7.
மருப்பின்யாழ்.	களங்கனியன்ன கருங்கோட்டுச் சீறியாழ்—புறநா. 127, 145.
ருப்பு.	பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பு—பொருந. 13
பருமலையூறின்றேறலின்மெ ருசீறடி விறலியர் நிற்புறஞ்	கோடியர் நெடுவரை, யருவிடர்ச் சிறுநெறி யேறலின் வருந்தித், தடவரல் கொண்ட தகைமெல் லொதுக்கின், வளைக்கை விறலி யென் பின்ன ளாக—புறநா. 135.
வினன்ன, துளங்கியன்மெ நசீறடி.	உயங்குநாய் நாவி னல்லெழிலசைஇ, வயங்கிழை யுலறியஅடி— சிறுபா. 17 - 8. வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி—பொருந. 42. நாய் நாச்சீறடி—சீவக. 2694. வருந்து நாய்நாவிற் சீறடி—கூர்ம - இராமன்வனம். 15.
மயிற் கதுப்பிகுத்து.	கதுப்பென மணிவயிற் கலாபம் பரப்பி—சிறுபா. 14 - 5. புகை, மாடமாலை மேனலார் மணிக்குழலின் மூழ்கலிற், கோடியர் ந்த குன்றின்மேற் குழீஇய மஞ்ஞை தஞ்சிற, காடு மஞ்சினுள் விரித்திருந்த வண்ண மன்னரே—சீவக. 71. மயிற்குழா, மோடிவளைக்கின்ற தொப்பவே—சீடியநற், பைங்கூந் தல் வல்லியர்கள் பற்றி—நளவெண்பா, சுயம். 25.
இ.	கதுப்பிகுத்தசைஇ—பட். 259.

அடியின் எண்.	மலைபடு
24-5	வசுின் குரல்வார்
27	துளைசெறிய ஆ
29	பொன்போற் பச்
30	வதுவை நாறும்
	,,
31-2	மடந்தை மாண்
	மயிரொழுகிய
36-7	களங்கனியன்ன
37	வணர்ந்தேந்து ம
41-6	உயர்ந்தோங்கு
	லிந்த கல்பொ
	சுற்ற.
42-3	மதந்தபுஞமலி நா
	லிந்தகல்பொ
	,,
	,,
	,,
44	கணங்கொடோ
	,,
	,,
,,	கதுப்பிகுத்தசை

மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

ர்ந்த சேயரிநாட்டத்து......	மடமாஞேக்கின் வாணுதல் விறலியர்—சிறுபா. 31.
.....தண்ணிழல்.	பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே—தேவாரம்.
	காவகம், ..., நிழல்தேறித் தெண்கயம் புக்கதுபோன்றது—சீவக. 872.
	வெவ்வாறு மெனக்குளிர்ந்து வெயிலியங்கா வகையியங்கும் விரிபூஞ் சோலை—கம்ப. நாடவிட்ட. 22.
மணல்வார்புறவு.	புனல்கால் கழீஇய பொழில்—பெரும்பா. 380.
கடற்படர்ந்தாங்கு யாமவணி	மலையி னிழிந்து மாக்கட ஞேக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போலப், புலவரெல்லா நின்ஞேக்கினரே—புறநா. 42.
	கல்வீழருவி கடற்படர்ந் தாங்கு—பெரும்பா. 427.
	கடுவரை நீரிற் கடுத்துவர—பு - வெ. வெட்சி. 11.
	பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய், மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்—கம்ப. கையடை. 15.
ருதும்நீயிரும்.	யாமவ ணின்றும் வருதுநீ யிருமிவண்—சிறுபா. 143 - 4.
	யாமவ ணின்றும் வருதுநீயிரும் இருநிலம்—பெரும்பா. 28 - 9.
ங்கிளையொடுணீஇய, துனை	பழுமர முள்ளிய பறவையிற் புக்கு—பொருந. 64 - 7.
புள்ளினமான.	பழுமரந் தேரும் பறவைபோலக், கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும் ..பாண—பெரும்பா. 20 - 22.
	வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி—புறநா. 47.
_ாள்.	வாங்கமை மென்றோள்—பதிற்று. 12.
ன்.	கொடுங்குழை கணவ, திருந்திழை கணவ, வாணுதல் கணவ, நன்னுதல் கணவ, ஆன்றோள் கணவ, நல்லோள் கணவன், சேயிழை கணவ, புரையோள் கணவ, சேயிழை கணவ, ஒண்டொடி கணவ—பதிற்று. 14, 24, 38, 42, 55, 61, 65, 70,88,90.
	செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ—புறநா. 3.
் துன்னருந்துப்பி னிசை.	மூனைபாழ் படுக்குந் துன்னருந்துப்பிற் பகை—குறிஞ்சி. 128 - 9.

45-6	விலங்கு மலைத்தம விறலியர்.
47	கயம்புக்கன்ன....
	,,
	,,
48	புனல்கால்கழீஇய
52-3	மீமிசைநல்யாறு ன்றும் வருதம்
	,,
	,,
	,,
53	யாமவணின்றும்
	,,
54-5	கனிபொழி கான பறைநிலக்கும்
	,,
57	வாங்கமைத்திரடே
58	மங்கையர் கணவ
	,,
59-60	மூழ்பாழ்படுக்கு

6 மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

...த்தின் மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
நசையேருழவர்.	வித்தியபனுவல்—புறநா. 237.
...ஞ்சாயல்.	நீரினு மினியசாயற் பாரி—புறநா. 105. வானிநீரினுந் தீந்தண்சாயலன்—பதிற்று. 86. வேனிற் புனலன்ன நுந்தை—கலி.
...ள்ளினிர் மன்றவெற்றுக்	நாளன்று போகிப் புள்ளிடைதட்ப—புறநா. 124. ஒருநெறி யெதிர்ப்பா டுற்றது முன்னைப் பெருந்தவப் பயனது போலும்—தணிகையாற்றுப்படை. 169 - 70.
...வனுடு.	நாடென்ப நாடாவளத்தன—திருக். 739. நிலஞ்சுரக்கு நிறைவளம்—கம்ப. நாட்டு. 38.
...	கெடா நல்லிசைநிலைஇ, நல்லிசை நிலைஇய நனந்தலை யுலகத்து—பதிற்று. 14, 86. ஒருவனதிரண்டு யாக்கை யூன்பயி னரம்பின் யாத்த, வுருவமும் புகழு மென்றுங் கவற்றினுழ் காத்துவந்து, மருவிய வுருவ மிங்கே மறைந்துபோ மற்றயாக்கை, திருவமர்ந் துலகமேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே; பொன்று மிவ்வுடலின் பொருட், டென்று நிற்கு மிரும்புக, ழின்று நீர்கழிந் தீர்களாற், குன் றின் மேற்குடைவேந்திர்காள்—சூளா. 776, 1856.
...ருங்கலந் தரீஇப், புல ...மவனீகை மாரியும்.	ஒன்னுத் தெவ்வ ருலைவிடத் தொழிந்த, விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ—பெரும்பா. 491 - 2. யவனர்ப்பிணித்து நன்கலம் வயிரமொடு கொண்டு பிறர்க்குதவி; அமர்கடந்துபெற்ற அரியவென்னுதோம்பாதுவீசிக், கலஞ்செலச்சுரத்தல்; வென்று கலந்தரீஇயர்—பதிற்று. 20, 44, 53. அவ்வெயிற்கொண்ட செய்வுறு நன்கலம், பரிசின் மாக்கட்கு வரிசையினல்கி—புறநா. 6.

மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

அடியின் எண்.	மலைபடுகட
60	இசை நுவல்வித்தின்
61	புதுநிறைவந்த புனை
	”
	”
65-6	பொழுதெதிர்ந்த பு குறுதலின்.
68	வீற்றுவளஞ் சுரக்குட
”	வளஞ்சுரக்குநாடு.
70	தொலையா நல்லிசை
”	”
71-2	பலர்புறங்கண்டவ வோர்க்குச் சுரக்கு
	”
	”

ாற்றலும்புகழுநர்க்கு அா
ிஞு மமாநோக்கம்.

பொய்யாவானின்வீயாது
கிழிருக்கையும்.
கல்செய்யா வெழுதரும்
வசையில்சிறப்பும்.

த்தவவன்.

வான்ரேயிஞ்சி.
பாழியவாஞ, திட்டவெல்
விளைய.
ல்.
னம்.
கடுப்பக் கொய்பதழுற்

ப்பிற் கரும்பு - (அறை -

குரிசி லடையாரைக் கொண்டகூட் டெல்லாம் பரிசின் முகந்தன
பாண்—பு - வெ. வஞ்சி. 16.

செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென் றஞ்சுவரத்தட்கு மணக்
குடைத் துப்பு—மதுரை. 139 - 40.

நட்டவர் குடியுயர்க்குவை—மதுரை. 131.

ஆர்கலி வானந் தளிசொரிந்தாஅங்கு உறுவரார நன்கலஞ் சிதறி—
பதிற்று. 43.

பாயிரு ணீங்கப் பல்கதிர் பரப்பி ஞாயிறு குணமுதற் றோன்றி
யாங்கு; மாயிரு விசும்பிற்பன்மீனொளிகெட ஞாயிறு தோன்றி
யாங்கு மாற்றார் உறுமுரண் சிதைத்தநின் னோன்றாள் வாழ்
த்தி—பதிற்று. 59, 64.

கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்து—பெரும்பா. 446.

கொடுந்தாண் முதலையு மிடங்கரும்—குறிஞ்சி. 257.

கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கு—மதுரை. 730.

பாருடைத்த குண்டகழி—புறநா. 14.

சுற்று முற்றுபா ரெலாம்போழ்ந்த மாகிடங்கு—கம்ப. நகர. 17.

கோடுறழ்ந்த தெடுத்த கொடுங்க ணிஞ்சி—பதிற்று. 16

மழை தொழிலுதவ மாதிரங் கொழுக்கத், தொடுப்பின யிரம் வித்
தியது விளைய—மதுரை. 10 - 11.

அகலிரு விசும்பிற் பாயிருள்—பெரும்பா. 1.

நீலத்தன்ன பைம்பயிர்—மதுரை. 279.

யானை, இறங்கு கைகடுப்ப, வாங்கிய பெருங்குரற் சிறுதினை—
குறிஞ்சி. 35 - 8.

உறங்குபிடித் தடக்கை யொருங்கு நிரைத்தவைபோல், இறங்கு
குரலிறடி—பெருங்கதை, குறிஞ்சி நிலங்கடந்தது.

எருமை யன்ன கருங்கல்—புறநா. 5.

கரும்புநடு பாத்தியிற் கலித்த—ஐங்குறு. 65.

கரும்புநடு பாத்தியன்ன—குறு. 262

	,,
73	இகழுநர்ப்பிணிக்கு
	சுமுழுதுகொடுப்
	,,
75-6	தூத்துளிபொழிந்த
	சுரக்குமவ ஞண்
84-5	பாயிரு ணீங்கப்
	ஞாயிறன்னவவன்
89	கொடைக்கடனிறு
90	கொடுந்தாண் முதலை
91	கல்லகழ்கிடங்கு.
	,,
	,,
92	வரைபுரைநிவப்பின்
97-8	வானமின் ஹுவசிவு
	லாம் பெட்டாங்கு
100	அகலிருவிசும்பிஞ
102	நீலத்தன்னவிதைப்
107-8	கயமுனி முயக்கு
	றன எனல்.
	,,
111	மேதியன்னகல்.
118-9	குறையறைவாரநிவ
	பாத்தி.)

8. மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

...டத்தின் மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
	கரும்பின் பாத்திப்பூத்த—பதிற்று. 13.
...ங்கரும்பு.	அறைக்கரும்பு - பொருந. 193. அறையுறுகரும்பின்—பதிற்று. 75.
...காண்டன.	அவலவெலென்கின்ற நெல்—தொல். எச். 26 - ம் சூ. உரை. உழாதுவித்துநவும்—பதிற்று. 13.
...நீண றுநெய்தல்.	மணிமருணெய்தல்—மதுரை. 282.
...ார்ந்து கவின்முற்றிக் காய ...ந்சி.	பாவையிஞ்சி—பெருங்கதை. [116.
...ன் கொடுத்தலின்.	காவமன்றியு மரம் பயம் பகரும், யாணரறாஅ வியன்மலை—புறநா. தீங்கனி காலமன்றிக் கனிவது காண்டிரால்—கம்ப. நாடவிட்ட. 18.
...இயின.	கூவைநீறுங் கொழுங்கொடிக் கவலையும்—சிலப். காட்சி. 42. பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்—பெருங்கதை.
...ஞையிரட்டுமலை.	துடிக்குடிஞை—பொருந. 210. துடி குடிஞையோ டிரட்டுமலை—புறநா. 170.
...சங்காந்தள்.	கார்த்திகை நாட்டவரிட்ட விளக்கிற்பூத்தனதோன்றி—கார். 26. தோன்றி வில்விளக்கே பூக்கும்—நளவெ. கலிதொட. 28.
...வறிக்களங் கடுக்கும்விய	நீலத்தன்ன பைம்பயிர் மிசைதொறும்......மலர வெறிக்களங்கடுப்ப—மதுரை. 279 - 84. பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்த ராடுகளங்கடுக்கும்—புறநா. 28. வேட்டுவன் மான்றசை சொரிந்த வட்டியும்—புறநா. 33.
...ணர்ச்செயலை.	எரியவி ருருவினங் குழைச் செயலை; செந்தியொண்பூம் பிண்டி—குறிஞ்சி. 105; 118 - 9.

மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

அடியின் எண்.	மலைபடுகடா
118-9	,,
,,	அறையுற்று அலமரு
	,,
121	தோரையவற்பதங்டு
122	தொய்யா துவித்திய.
124	மையெனவிரிந்தன
125-6	செய்யாப்பாவை வ
	ங்கொண்டனவீ
134	காலமன்றியுமரம்ப
	,,
137	கூவைநூறெருடுகுழீ
	,,
140-41	ஆகுளிகடுப்பக் குடி
	,,
145	தீயினன்னவொண்
	,,
149-50	பல்விதழ்தாஅய் டு லதை.
	,,
152	ஊஞர்வட்டியர்.
159	கன்றெரியொள்ளி

பம்.	மானவிறல்வேளழும்பில்—மதுரை. 344 - 5.
பமெனினே......பெறு	செவ்வரைநாடன் சென்னியமெனினே பதமிகப்பெறுகுவிர்—பெரும்பா. 103 - 5.
புக்கு.	உடையோர்போல இடையின்று குறுகி—புறநா. 54.
டேக்கட்டேறல்.	நீடமை விளைந்த தேக்கட்டேறல்—திருமுருகு. 195.
	தூம்பகம் பழுனிய தீம்பிழி—பதிற்று. 81.
	வாங்கமைப் பழுனிய தேறல்—புறநா. 129.
	தேம்பிழிதேறல்—குறிஞ்சி. 155.
	பழஞ்செருக்காளர்—மதுரை. 669.
வெண்காழ்.	ஆசினி முதுசுளை கலாவ விழிதருமருவி—திருமுருகு. 301 - 16.
லைபங்கிணப்பிளவை.	மூளவுமாத் தொலைச்சிய ஆடவர்—புறநா. 325.
	மூளவுமாவல்சி—ஐங்குறு. 364
ளாக்கியவல்சி.	எயிற்றியரட்டவின்புளி வெஞ்சோறு—சிறுபா. 175.
	நாகநெடுவழி—சிறுபா. 88,
	வழையமல்வியன்காடு—பதிற்று. 41.
பகுவிர்.	மகடூஉ மகமுறை தடுப்பப் பெறுகுவிர்—சிறுபா. 192 - 5.
	சுரும்புமூசாச் சுடர்ப்பூங்காந்தள்—திருமுருகு. 43.
	இரும்புனநிழத்தலின்—குறிஞ்சி. 157.
பிருங்கலரும்பொறி.	பொறியறிந்து மாட்டிய பெருங்கலடார்—புறநா. 19. [29.
	கொல்புலிப்படுக்கும் பெருங்களிடார்—கூர்ம. சம்புத்தீவின்.
ப்பகனிலைதளர்க்குங்	கைம்மாவுளம்புகர் புலங்கடிகவணையிற் பூஞ்சினையுதிர்க்கும்மலை;
ங்கழைதத்தி.	யானையியக்கங்கேட்ட கானவன் பணவையேறிக் கவணையிற் கல் கைவிடுதல்—கலி. 23, 41.
	அழுந்துபட்டிருந்த—மதுரை. 342.
	விற்பழுத்துமிழ்ந்த பகழி—சீவக. 435.
னகவில்யானை.	ஓடையொடு பொலிந்த வினைநவில்யானை—நெடுநல். 169.
டுவன்.	மகாரன்னமந்தி—சிறுபா. 56.
	குரங்கன்ன கூளியர்—புறநா. 136.

164	மானவிறல்வேள்வயிரிய
164-9	மானவிறல்வேள்வயிரிய குவிர்.
165	நும்மில்போலநில்லாது
171	வேய்ப்பெயல் விளையுட்
	”
	”
”	தேக்கட்டேறல்.
173	பழஞ்செருக்குற்றநும்.
174	அருவிதந்தபழஞ்சிதை
176	முளவுமாத்தொலைச்சிய
	”
179-83	இன்புளிகலந்து குறம
181	வழையமல்சாரல்.
	”
185	மகமுறைதடுப்பப்பெரு
189	குவளைக்கடிவீ.
193	விளைபுனநிழத்தலின்.
194	புழைதொறுமாட்டிய
	”
205-7	மலைதுவன்றிய யானை கவணுமிழ்கடுங்கலீர்
219	அழுந்துபட்டலமரும்.
226	வில்லுமிழ்கடுங்கணை.
227	தாரொடுபொலிந்த வி
236-7	கோடியர் மகாரன்னக
	”

10 மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள்.

..ாத்தின் மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
..ருடுத்தபிரசம்.	நெடுவரைப் பரிதியிற் றொடுத்தஇறால்—திருமுருகு. 299-300.
	வருடையும் பாயாச் சூருடை யடுக்கம்—நற். 359.
	சேணோனிழைத்த இதணம்—குறிஞ்சி. 40 - 41.
..ணம்.	பருத்திப் பெண்டின்பனுவலன்ன நிணம்—புறநா.. 125.
..னம்.	விரியிருளிரண்டுகூறாய்—கம்ப. நாட்டு. 17.
.	மணிநீர்வைப்பு—சிறுபா. 152.
	மணிநீர்க்கிடங்கு—மதுரை. 351.
	முணித்தலைச்சிறார்—சீவக. 2541.
..ாசுணம்.	யானைவிளிபடத் துழவும் அகல்வாய்ப்பாந்தள்—அகநா. 68.
	களிறுபாந்தட் பட்டென—குறு. 14.
	பரியகளிற்றை யரவுவிழுங்கிமழுங்க—தேவாரம், திருக்கயிலாயம், திருஞான. 2.
	குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பு—திருச்சிற். 21.
	அராவாயின்வாய்க்கரிபுகும்—கம்ப. தாடகை 11.
	சேணுறுபிடவம்—முல்லை. 25,
	கோளியாலத்துக் கொழுநிழல்—புறநா. 58.
	நாடுகா ணெடுவரை—பதிற்று. 85.
	சிலைமான விரூப் பிறழும்—பெரும்பா. 269 - 70.
	பூட்டுசிலையிறவு—சீவக. 1788.
..று.	புளிஞருமகளும் போக்கருஞ்சுரம்—தணிகையாற்று. 167.
	குறவரும்மருள் குன்றமொன்று—குசேலோ. குசேலர்மேல். 39.
..் கெழுமிமிசை.	பாடின்னருவிப் பயங்கெழுமாமலை—சீவக. 2112.
..க்கம்.	குறியவு நெடியவுங் குன்று—சிலப். நீர்ப்படை. 153; மணி. சக்கர. 58.

அடியின் எண்.	மலைபடுக
238-9	நெடுவரை நேமியிற்
239	சூர்புகலடுக்கம்.
243	கழுதிற்சேஞன்.
244	இழுதினன்னவானி
247	இருடணிந்தன்னவே
250	மணிமருடெண்ணீர்
	,,
+ 253	புன்றலைமகார்.
260-61	களிறுமதனழிக்கும
	,,
	,,
	,,
	,,
262	சேட்கமழும்பூ.
268	கோளியாலத்து.
270	காடுகாணனந்தலை.
274	இரூவன்சிலையர்.
	,,
275	குறவருமருளுங்குன்
	,,
278	பாடின்னருவிப்பய
288-9	குறியவுநெடியவுமடு.

மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலும் ஒத்தபகுதிகள்.

	வலேவலந்தன்ன மென்னிழல்—பொருந. 51.
	வரிநிழலசைஇ—சிறுபா. 12.
]ன்.	பலாம்பழுத்த பசும்புண்ணரியல்—பதிற்று. 61.
]மகளிர்.	அமரர்நாடியர் துன்னியாடிடங்களும்—கம்ப. பிலநீங்த. 8.
]மிழ்கொண்டநம்மியம்	கயங்குடைந் தன்ன வியந்தோட்டு—மதுரை. 363.
	தண்ணுமை முழவமொந்தை தகுணிச்சம் பிறவுமோசை யாக்கி ஆடி—சீவக. 965.
]னவர்.	மொய்த்த மூட்டன துடற்றலே துளேப்பமுடுகிக் கைத்தலத்தி னிமிரக்கடிது கன்றிவிசிறும் மெய்த்த மெய்ப்பெரிய சேழ வென—கம்ப. விராதன் 33.
	மெய்யுருவிய வையுறமுளேமுள்ளே எய்யுதறிதன—சீகாளத்தி. கண்ணப்ப. 86.
]காப்பெனக்கொடிச்சியர்	காஞ்சி பாடிக் காக்கம் வம்மோ நெடுந்தகை புண்ணே—புறநா. 281.
]க.	தலேநாட்செருந்தி தமனியமருட்ட—சிறுபா. 147.
]மேமப்பூசல்.	வேங்கை நறும்பூக் கொய்யுங் கானவர் பூசல்—மதுரை. 296 - 7.
	வேங்கை கொய்குவஞ் சென்றழிப் புலிபுலியென்னும் பூசறே ன்ற—அகநா. 48.
]ல்லாப்பார்ப்பிற்கு.	கடிம்ளகு தின்ற கல்லாமந்தி;
	கருவிரன்மந்திக் கல்லாவன்பறழ்—ஐங்குறு 272.
]ாயொடு.	மந்திக்காதலன் முறிமேய்கடுவன்—ஐங்குறு. 276.
]ர.	மந்தியுமறியா மரம்பயிலடுக்கம்—திருமுருகு 42.
	குரங்கறிவாரா மரம்பயிலிறும்பின்—அகநா. 368.
]ட்டமால்பு	மால்புடை நெடுவரைக்கோடு—புறநா. 105.
]ாடயருங்குரவை.	மாயவன்றன் முன்னினுடும் வரிவளேக்கைப் பிஞ்ஞையொடும் ஆடுங்குரவை—சிலப். ஆய்ச்சியர்குரவை.
	மாமணிவண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு மாடிய குரவை—மணி. 19 - காதை, 65 - 6.

290	வரிநிழலசையினிர்.
	,,
292	பழம்புண்கூர்ந்தூறல்
294	அருவிநுகரும்வானர
295-6	குடைதொறும்தெரிய போலின்னிசை.
301	எய்தெறவிழுக்கியகா
	,,
303-4	விழுப்புண்தணிமார் பாடல்.
305	தலைநாட்பூத்தவேங்கை
305-6	வேங்கை மலைமாரிஉ
	,,
311-2	கருவிரன்யந்திதன் க
	,,
313	முறிமேயாக்கைக்கிளை
315	கலைசையற்றநெடுவ
	,,
315-6	நெடுவரைநிலைபெய்தி
320-22	குறவர்தம் பெண்டி
	,,

டாத்தின் மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
ரிற்பிணிமார் விரவுமொழி ராதை.	வடமொழிபயிற்றி இளைஞர் கவளங்கைப்ப—முல்லை. 35 - 6. சீவக. 1834.
புனந்தொறுங் கிளிகடிமக	தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங் கிளிகடிமரபினவாங்கி—குறிஞ்சி. 43 - 4.
	அகன்புனங்காவற் பறையெடுத்து—கம்ப. சித்திரகூட. 22.
டொருங்கிளையந்தார்ப்ப.	நைடதம், நாட்டுப்படலம், கஙு-ம் பாடல் பார்க்க.
ாலை.	சுற்று பாகடு புகையவைசூழ் கருமுகிற்குல மொப்பன—சீகாளத்தி. நக்கீர. 14.
சைபடுவள்ளை.	வெதிர்நெற் குறுவாம் நாம் வள்ளையகவுவம்வா—கலி. 42.
	சிலம்பெதிர் கூஉய்—திருச்சிற். 62.
ாவியலுள்.	முழவங் கண்டுயிலாத முதுநகர்—சீவக. 856.
நசிபாடி.	நறும்புகையெடுத்துக் குறிஞ்சிபாடி—திருமுருகு. 239.
க் கைதோய்வன்ன மழைத்	பனுவல்போலக் கணங்கொளமழை தவழுங்கோடு—நற். 353.
	பொங்கலாடி விண்டுச் சேர்ந்த வெண்மழை—பதிற்று. 55.
	பொங்கல் வெண்மழை—நெடுநல் 19. [16, 17.
ரல்.	மழையுருவினதோல்; மழையெனமருளும் பஃறோல் — புறநா.
	மழையெனமருளுமாயிரும் பஃறோல்—பதிற்று. 62.
கண்கூடுதுறுகல்.	வேழம் துறுகற் பிடிசெத்துத்தழூஉம்—ஐங்குறு. 239.
	மலையே மலையோடுமலைந்தனபோற் கொலைவேழமொடேற்றன குஞ்சரமே—சூளா. அரசியல். 104.
	யானைமலையென மலைவ—கம்ப. மிதிலை. 3.
லைவிடத்தார்த்தென.	ஒன்னாத்தெவ்வ ருலைவிடத்தார்த்து—பெரும்பா. 419.
பெயரொடு நட்டகல்.	ஆடவர், பெயரும்பீடு மெழுதியதர் தொறும், பீலிசூட்டியபிறங்குநிலை நடுகல்—அகநா. 131.

அடியின் எண்.	மலைபடுக
325-7	(யானையை) வெ பயிற்றும்பாகே
328-9	தட்டைபுடையுநர் ளிர்.
	,,
333	கோவலர்குறவரோ
340	மழைகண்டன்னவ
342	திணைகுறமகளிரி
344	குன்றகச்சிலம்பு.
350	முழவுத்துயிலறிய
359	அடுக்கத்துக்குறி
361-2	பனுவலிற்பொங்கி தொழுதி.
	,,
377	மழைமருள்பஃறே
	,,
384	களிறுமலைந்தன்ன
	,,
	,,
386	ஒன்னாத்தெவ்வரு
388-9	செல்லாநல்லிசைப்

	கெடுவி னல்லிசை சூடி நடுகலாயினன் புரவலன் - புறநா. 221.
ஞ்சுரம்.	நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் சுரம்—கம்ப. வனம்புகு. 38.
	தேர்வீசிருக்கை—புறநா. 114.
	வரையாவீகை—புறநா. 17.
ஞ்சாதுசுழிமின்.	அசைவுழியசை இச்சென்மோ—பெரும்பா. 44-5.
ச்சியர்).	வெள்ளி வள்ளியின் விளங்குதோணலார்—சீவக. 420.
பணிவிலாண்மை.	படியோர்த்தேய்த்த வாண்மை—பதிற்று. 79.
	யானை யொடித்துண் டெஞ்சியயா; வேழம் மென்சினையாஅம் பிளக்கும்; களிறு யாஅந் தொலையக்குத்தி—குறு. 232, 237, 307.
ஞரிற்பொலியச்சூடி.	மால் வகுந்து தொடுத்த செம்பூங்கண்ணி—புறநா. 264.
பர்த்தன்னநன்பல.	பண்ணுப் பெயர்த்தாங்கு—பதிற்று. 65.
	பகன்றைப் பாங்குடைத்தெரியல்—பதிற்று. 76.
:.	தெரிந்திடுபோர்கள் மேருவாயவே= கந்த. நாட்டு. 22.
	போரொடு நிகர்வன பொலன்வரை—கம்ப. நாட்டு 46.
	வரைக ளொப்பனபோர்—சீகாளத்தி. நக்கீர. 14.
	தசும்பு துளங்கிருக்கை—பதிற்று. 42.
நாயிற்றுக் களங்கடொறும்	நாட்கள்ளுண்டு—புறநா. 123.
	கண்டோர் மருளும் வண்டுசூழ்நிலையும்—பொருந. 97.
ண்ணுமைவெரீஇ.	வெண்ணெலரிஞர் தண்ணுமை வெரீஇ—புறநா. 348.
ைதாங்குவரைப்பு.	துஞ்சுநீணிதியது சுரமை—சூளா. நாட்டு. 1.
ழங்குடி.	பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய—சிலப். மங்கல.
கரு.	யாறுகிடந் தன்னவகனெடுந்தெரு—மது. 359; நெடுநல். 30.
	நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதி—பெருங்கதை.
ாங்கி.	மழையென மருளு மகிழ்செய் மாடத்து—பொருந. 84.
ாதுபுகுமின்.	உடையோர் போல விடையின்று குறுகி—புறநா. 54.
	தடைஇயவாயி றடையாது நுழைந்து—தணிகையாற்று. 231.

	”
398	சுட்டினும்பனிக்கு
399	தேர்வீசுகவிகை.
400	ஓம்பாவள்ளல்,
403	அசைவுழியசைஇ
410	வளையோர் (இடை
423	படியோர்த்தேய்த்த
429	உம்பலகைத்தயா.
430-31	கண்ணிதிரங்கு மா
450-53	யாழ்பண்ணுப் பெ
459	பகன்றைக்கண்ணி.
461	விலங்கலன்னபோர்
	”
	”
463	துளங்குதசும்பு.
463-4	தேறல்இளங்கதிர்
	பெறுகுவிர்.
468	கண்டோர்மருள.
471	வெண்ணெலரிநர்த
478	நிதியந்துஞ்சு நிவ
479	பதியெழவறியாப்ப
481	யாறெனக்கிடந்தெ
	”
484	மழையெனமாடமே
491	அருங்கடிவாயிலயி
	”

டாத்தின் மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
சட்புலப்பரிசிலர்.	மன்றுபடு பரிசிலர்—புறநா. 135.
	வயிரியமாக்கள் மன்றநண்ணி—பதிற்று. 29.
வந்தோர் மன்ற வளியர்தா	அளியன் ருனேமுதுவா யிரவலன் வந்தோன் பெருமநின் வண் புகழ் நயந்தெனன—திருமுருகு. 284 - 5.
	பரிபுலம்பினரென—சிலப். நாடு. 226;
	பரிபுலம்பினனிவன்—மணி. 16 - ம் காதை, 57.
செந்நிலமருங்கின்.	அரக்குருக் கன்ன செந்நிலன்—பொருந. 43.
	அரக்கத்தன்ன நுண்மணற்கோடு—பதிற்று. 30.
க புண்கூர்யானை.	வரிவயம் பொருத வயக்களிறு—புறநா. 100.
ருப்பு.	யானைமுத்தார்மருப்பு—குறிஞ்சி. 35 - 6.
	பெருங்களிற்று முத்துடைவான் கோடு—திருமுருகு 304-5.
	முத்துடை மருப்பின் மழகளிறு—பதிற்று. 32.
காந்தள்.	உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்—புறநா. 90.
	கோடல்வீயுகுபவைபோ லிலங்கேரெல்வளை—கலி. 7.
ந்தெனச்செல்லும் நெய்க்	அணிநிறவோரி பாய்தலின் மீதழிந்து குன்றம் தேன்சொரியும்—புறநா. 109
செல்லுமிருல்.	நெடுவரைப் பரிதியிற் றொடுத்த தண்கம ழலரிறால்—திருமுருகு. 299-300.
விரி.	மலைத்தலையகடற்காவிரி—படடின. 6.
ரிக்கயவாய்கடுப்ப நெடுங்	அனைத்தும் கங்கையம் பேரியாறு கடற்படர்ந்தாங்கு அளந்து கடையறியாவளம்—மதுரை. 695 - 7.
லியானை.	காளமேகமுநாகமுந் தெரிகில—கம்ப. சித்திரகூட. 2.
கதைந்தமுற்றம்.	தாதெரு மறுகிற் பாசறை—புறநா. 33.
	முரசுகடிப் பிகுப்பவும்—புறநா. 158.

அடியின் எண்.	மலைபடுக
492	மன்றில்வதியுநர் சே
	,,
493-4	பெருவிறலுள்ளி Q மென.
497	பரிபுலம்பலைத்த.
	,,
507	அரக்குவிரித்தன்ன
	,,
517	குரூஉப்புலிபொரு
517-8	யானைமுத்துடைம
	,,
	,,
519	வளையுடைந்தன்ன
	,,
524-5	நீனிறவோரி பாய் கணிருல்.
,,	நெடுவரைநேமியற்
527	குடமலைப்பிறந்தகா
526-9	அனைத்தும் காவி கடைத்துவன்றி.
530	வானத்தன்னவளம
530-31	யானைத்தாதெருத்
532	முழவுகணிகுப்ப.

மலைபடுகடாத்திலும்
பிறநூல்களிலும்ஒத்தபகுதிகள். 15

றியாழ்.
வா துடன்புணர்ந்தொன்றிக்
ன்குரல்விறலியர்.

ர்.
லின்றை.

ா தலகமொடுநிற்பப் பெரி
ன.

ாரும்பெரியோர்.
றுத்த.
).

ழ.
டுகொண்டனர் மாய்ந்தோர்.
ா நுழைநூற்கலிங்கம்.
லொடுவழிசிறந்துபலநாணிற்
வீர்.
வெந் தொல்பதிப் பெயர்ந்
னக்கூறி.
ழையணிய.

களங்கனியன்ன கருங்கோட்டுச் சீறியாழ்—புறநா. 127, 145.
நரம்பார்த்தன்னவின் குரற்றொகுதி—திருமுருகு. 212.

சுகிர்புரிநரம்புநம்பி யூழ்மணி மிடறுமொன்றாய்ப் பணிசெய்த—
சீவக. 728.
அருந்திறற்கடவுட் டிருந்துபலி—மணி. சக்கர. 60.
கடவுட் கடன் கழிப்பியபின்றை—பொருந. 52.
கடவுட் பழிச்ச—பதிற்று. 41.
கொடாஅ நல்லிசை நிலைஇ—பதிற்று 14.
மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமா
ய்ந்தனரே—புறநா. 165.
என்றுநிற்கு மிரும்புகழ்—சூளா. அரசியல். 226.
இடைதெரிந் துணரு மிருவர்காட்சி—பெரும்பா. 445.
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளம்—பெரும்பா. 446.
மறம்வீங்கு பல்புகழ்—பதிற்று. 12.
பெரியபுராணத்துள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் புரா
ணத்து, "திரிபுரமெரித்த" என்னும் 4 - ம் செய்யுளையும், திரு
வாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துள்ள 56 - ம் திரு
விளையாடலில், 9 - ம் செய்யுளையும் பார்க்க.
கல்லென்சுற்றம்—பெரும்பா. 21.
உருப்பில் சுற்றமோடு—பெரும்பா. 447.
மரையிலைபோல மாய்ந்திசினோர் பலரே—புறநா. 27.
நோக்கு நுழைகல்லா நுண்மைய அறுவை—பொருந. 82 - 3.
பலநாள் பயின்று பலரொடு செல்லினும் தலைநாள் போன்ற விரு
ப்பினன் மாதோ—புறநா 101.
சேறுமென் தொல்பதிப் பெயர்ந்தென மெல்லெனக் கிளந்தனம்—
பொருந. 121 - 2.
மாலை முத்தமொடு பாடினியணிய—பொருந. 161 - 2.

534	கருங்கோட்டுச் சீ
534-6	யாழ் நரம்புமீதிற கடவதறிந்த இ
	”
538	அருந்திறற்கடவு
538	கடவுட்பழிச்சிய
	”
541-2	இன்றிவட்செல்ல யோர்மாய்ந்தெ
	”
542	இடைதெரிந்து
543	கொடைக்கடனி
544	வென்றிப்பல்புக
	”
549	கல்லெனொக்கல்.
550	உருப்பில்சுற்றத்
553	தம்பெயர்தம்மொ
561	இழைமருங்கறிய
565-6	தலைநாளன்னபுக பினும்பெறுகு
567-8	செல்வேந் தில்ல தென மெல்லெ
569-70	விறலியர் விளங்கி

...த்தின் மூலம்.	பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும்.
	மகளிர் வயங்கிழையணிய—பதிற்று 12. [159-73.
...ய.........நல்கி.	தாமரை... சூட்டி......தரவிடைத் தங்க லோவிலனே—பொருந. பைம்பொற்றாமரை பாணர்ச்சூட்டி—பதிற்று. 48.
...யுங்கொடுத்தல்.	தேஎர்ராடுமாசிதறி—மதுரை. 224.
...தியம்.	நிலந்தினக்கிடந்த நெடுநிதிச் செல்வம்—தணிகையாற்று. 25. ஏற்றகை மாற்றாமை—நாலடி.
...கை நிறையக்கலம்பெயக்	இலம்படு புலவ ரேற்றகை ஞெமிரப் பொலஞ்சொரி வழுதி—பரிபாடல்.
...கொடியிற்றோன்றும்.	வரையிழியருவியி னொளிறுகொடிநுடங்க; வரைமிசை யிழிதரு மருவியின் மாடத்துக் கொடி நுடங்குதெரு; வான்றோய் வெல்கொடி வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்க—பதிற்று. 25, 47, 69. விசய வெல்கொடி யுயரி—முல்லை 91. விறல்சானன்கொடி அருவியினுடங்க—மதுரை. 371 - 4. நெடுங்கோட் டிழிதரு தெண்ணீர் அவிர்துகில் புரையு மவ்வெள்ளருவி—குறிஞ்சி. 54 - 5.
...நாடுகிழவோனே.	பழமுதிர் சோலை மலைகிழ வோனே—திருமுருகு. 317. காவிரி புரக்கு நாடுகிழ வோனே—பொருந. 248. ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே—பெரும்பா. 500. நிலைபெறு தணிகைமலை கிழவோனே—தணிகையாற்று. 417.

அடியின் எண்.	மலைபடுகட
569-70	,,
569-80	தலைவன்ருமனைமலை
	,,
571-2	தேரையும் யானையை
575	நிலந்தினக்கிடந்த நி
576	ஏற்றகை.
576-7	இலம்படுபுலவரேற்ற கவிழ்ந்தகை.
581-2	மலைநீர்வென்றெழு (
	,,
	,,
	,,
583	குன்றுசூழிருக்கை
	,,
	,,
	,,

மலைபடுகடாத்தில் வந்துள்ள உவமைகள்.

முழவொலிக்கு மேகத்தின் ஒலி உவமை :—1 - 3.
பெருவங்கியமென்னும் வாச்சியத்தின் ஒலிக்கு யானைத்துதிக்கையின் ஒலி :—6.
முழவுமுதலியவாச்சியங்களின் தொகுதிப் பொதிக்குப் பலாக்காய்க்குலை :—3 - 12. [புறநா. 128.]
ஒத்தபாறைக்குக் கற்படுத்தியஇடம் :—15.
செங்குத்தான மலைவழியின் காட்சிக்கு எடுத்து நிறுத்தியவழி :—16.
யாழிலுள்ள வார்க்கட்டின் உறழ்ச்சிக்கு மகளிர்கையிலுள்ள தொடிகளினுறழ்ச்சி :—21.
யாழிலுள்ள துளைகளின் ஒழுங்கிற்கு வரகம்பயிரின் கதிர்நீட்சி :—24 - 5.
யாழிற் போர்த்தப் பெற்றுள்ள தோலின் நிறத்திற்குப் பொன்னினிறம் :—29.
மடந்தையின் கூந்தல் மணத்திற்குக் கல்யாணப்பெண்ணின் மணம் :—30.
யாழுறுப்பாகிய உந்தியின் தையலுக்கு மடந்தைமார்பின் உரோமாவலி :—31 - 4.
பரிசில்பெறுதற்குச் சுற்றத்தாரோடு நன்னனிடம் செல்லும் கூத்தனுக்குப் பழமுண்ணுதற் பொருட்டு இனத்தோடு காட்டை நோக்கிச் செல்லும் வௌவால் :—54 - 65.
நன்னனுடைய மனைவியரின் தோள்களுக்கு மூங்கில் :—57.
மங்கையர் கண்களுக்குத் தாமரை மலர் ;—58.
நன்னனுடைய மென்மைக்கு புதுப் பெருக்கானநீர் :—61.
நன்னன் வண்மைக்கு மேகம்:—75-6.
பகையைப் போக்கிவிளங்கும் நன்னனுக்கு இருளைப்போக்கி விளங்கும் சூரியன் :—84 - 5.
நன்னன் ஊரைச்சூழ்ந்த மதிலுக்கு மலை .—92.
மின்னலுக்கு வாள் வெட்டுதலாலுண்டாகும் வடு :—97.
முசுண்டைப் பூவிற்குக் கார்த்திகை நாள் :—100 - 101.
எள்ளுப்பயிர்களின் காட்சிக்கு நீலமணி :—102.
சுனைக்கு நீர்ச்சால் :—104.
தினைக்கதிர்களுக்கு யானைக்கன்றுகளின் கைகள் :—107 - 8.

யாழுறுப்பாகிய கோட்டினது நிறத்திற்குக் களாப்பழத்தின் நிறம் :—36 - 7.

விறலியின் அடிகளுக்கு ஓடியிளைத்த நாயின் நா :—42 - 3

விறலியர் கூந்தலுக்கு மயிலின் தோகை :—44.

விறலியர் கண்களுக்கு மானின்கண்கள் :—45.

காட்டினது நிழலுக்கு ஆழ்ந்த குளம் :—47 - 8; 259 - 65.

கூத்தன் நன்னனிடம் விரைந்து சென்றதற்கு மலை உச்சியினின்றும் வருகிறஆறு கடலை நோக்கி விரைந்து செல்லுதல் :—52 - 3.

அவரைப் பூவிற்குத் தயிர்க்கட்டிகள் :—109 - 10.

அவரைக்காய்க்கு அரிவாள் :—110.

உருண்டகல்லுக்கு எருமை :—111.

வரகின் கவைக்கதிர்களுக்கு வாதம் செய்பவனுடைய கைவிரல்கள் :—112.

கரும்பின் தொகுதிக்கு வேற்படையாட்கள் : —116 - 9.

கருநெய்தற்பூவிற்கு மை .—124.

இஞ்சிக்கிழங்கிற்குப் பாவை :—125.

கவலைக்கிழங்கிற்குப் பெண்யானையின் முழந்தாள் :—127 - 8.

மலையின் முகத்தே சாய்ந்து தோன்றும் வாழைப்பூவிற்கு யானையின்

முகத்தே தைத்த வேல் :—129 - 31.

பேராந்தையின் முழக்கத்திற்குச் சிறுபறையின் முழக்கம் .—140 - 41.

பலாக்காய்க்குக் கூத்தரின் முழவு :—143 - 4.

செங்காந்தளுக்குத் தீ :—145.

செங்காந்தளின் புதிய அரும்பிற்கு ஊன் :—145 - 6.

செங்காந்தளின் இதழிற்கு நெருப்பு :—149.

வேடர் விரைந்துவருதற்கு நீரில்வீழ்ந்து வருந்துவோரைக் காத்தற்பொருட்டு ஒருவர் விரைந்து வருதல் ·—279 - 80.

அருவியாடுவோர் அதனைக் கையாற்குடையுந் தோறும் உண்டாகிற ஓசைக்குப் பலவகை வாச்சியங்களின் ஓசை :—296.

வேங்கைப்பூவிற்குப் பொன் :—305.

யானையின் முழக்கத்திற்கு இடிமுழக்கம் :—307 - 10.

காந்தட்பூக்களின் மடல்கள் சிந்தப்பெற்ற பாறைக்கு வெறிக்களம் :—149 - 50.

பலவகைப் பூக்களும் கமழப்பெற்ற மலைச்சாரலுக்குக் கல்யாணவீடு :—151.

அசோகம்பூவிற்கு நெருப்பு :—159. [குறிஞ்சி. 105, 115 - 9]

கவண்கல்லுக்குக் கூற்றம் :—206 - 9.

இருண்டகாட்டிற்கு இருளையுடைய இராத்திரி :—212.

காட்டாற்று வழியே செல்லுதலுக்கு அகழின்வழியே செல்லுதல் :—214.

கூத்தரின் பிள்ளைகளுக்குச் செம்மறியாடு :—217.

வில்லுமிழ்கடுங்கணைக்கு மாரி :—226.

யானைக்கு மலை :—225 - 7.

கல்லாற்றின் ஒலிக்குத் தேரொலி :—323 - 4; 571.

காந்தட்பூவின் மடலுக்குத் துடுப்பு :—336.

கரும்பின் ஆலைப்புகைக்கு மேகம் :—340.

நன்னனுடைய மலையிலுள்ள அருவியோசை முதலியவற்றிற்கு மதயானையின் ஓசை :—296 - 348.

நன்னனுடையமலைக்காட்சிக்குத் திருவிழாக்காட்சி :—351.

வெள்ளை மேகத்திற்குப் பன்னிய பஞ்சு :—361.

மேகத்தின் அண்மைக்குக் கைசென்று பிடிக்கும் தன்மை :—362.

மேகங்கள் இயல்பாகவே துளிகளைத் துளித்தற்கு அவை வலியத்தூவுதல் :—363.

மயிலிறகின் அடிக்குப் பலகறை :—234.

ஆண்குரங்கிற்குக் கூத்தருடைய பிள்ளைகள் :—236 - 7.

குகைகளுக்கு ஒருவகைக்கிணறுகள் :—366

கொதித்த சூரியகற்களுக்குக் காய்ந்த வேல் :—373.

தேனடைக்குச் சக்கரம் :—238 - 9.

தினைத்திற்கு நெய்விழுது : 244.

பன்றிக்கு இருளின் துண்டம் :—247.

யானைக்கு மேகங்கள் :—377, 530.

கொடிகளின் இயற்கைப் பின்னலுக்குச் செயற்கைப் பின்னல் :—379.

தெளிந்த நீரிற்குப் பளிங்கு —250
குகைக்கு வீடு :—255.
மலைப்பாம்பிற்கு வெட்டிச் சாய்த்த மரம் :—261.
சோலைக்கு ஆழ்ந்த குளம் ;—259 - 65.
பலவகைப் பறவைகளின் முழக்கத்திற்குப் பலவகைவாச்சியங்களின் முழக்கம் :—269.
வழிச்சென்று வருந்துவோரைக் காத்தற்பொருட்டு கண்ணுடையமலை
உருண்டகற்களின் நெருக்கத்திற்குப் போர்செய்யும் யானைகளின் நெருக்கம் :—384.
பசுவின்பாலுக்குச் சங்கு :—409.
ஆட்டின்தொகுதிக்குப் பலவகைநெல்லின் அரிசிகள் :—413 - 4.
ஆட்டுமந்தையின் ஒலிக்குக் கடலொலி :—415 - 6.
தோற்படுக்கைக்குச்சேணம் :—418 - 9.

மலைபடுகடாத்தில் வந்துள்ள உவமைகள்.

19 அவரைவிதைக்கு
434 - 6

வேங்கைப்பூ :—
மாம்பழத்தின் சாற்றிற்குக் கற்கண்டின்பொடி :—512 - 3.

ஒத்த திணையரிசிக்கு நறுக்கியபொன் :—440.
நூற்றைக்கிழங்கிற்கு 515

நுகத்தடி :—

மலைபடுகடாத்தின்பொழிப்பு.

—— ✦✱✱✦ ——

முழவுமுதலிய வாத்தியங்களை அடக்கிய பைகளைக்கட்டிய காம ரத்தைத் தோளில்தாங்கிக்கொண்டு மலைப்பக்கத்துள்ள அரியவழி யில் நடந்துவந்து, இளைப்புற்றுப் பாணரும் விறலியருஞ்சுற்ற மர நிழலிலிருந்த கூத்தர்தலைவனை, *யாங்கள், முன்பு *உம்மினும் வறு மையுற்று வாடியிருந்தவர்களே. இப்போது நன்னன்பாற்சென்று பரிசில்பெற்றுக் கவலையற்றுவருகின்றேம் ; நீங்களும் அவனை அடைவீ ராயின் நல்ல பயனை அடைவீர்கள் ; என்னைச் சந்தித்தமையால், நீங் கள், புறப்பட்டவேளை நல்லவேளையே ; நல்ல சகுனத்தையும் நீவிர் பெற்றிருத்தல் கூடுமென்று எண்ணுகிறேன். இனி, அவனூரை அடைதற்குரிய வழியின் நன்மைதீமைகளையும் இடையிடையே தங்கி த்தங்கி இளைப்பாறுவதற்கு ஏற்றஇடங்களையும் அவனுடையமலைநாட் டினும் காட்டுநாட்டினும் தன்பணைநாட்டினும்உள்ள உணவின்வகை களையும் அவனுடையமலையின்தன்மையையும் அங்கங்கேயுள்ளசோலை கள் காடுகள் இவற்றின் இயல்புகளையும் அவனுடையவண்மையையும் அவனது அறிவின்வன்மையையும்

அவனுடைய நாளோலக்கச்சிறப் பையும் அவன்சுற்றத்தாரது நல்லொழுக்கத்திணையும் அவனுடைய நவிரமென்னும்மலையில் எழுந்தருளியிருக்கும் 'காரியுண்டிக்கடவுள்' என்று திருநாமம்பெற்ற சிவபெருமானதுஇயல்பையும் அவனதுதலைமையையும் அவன் முன்னோர்களின்பெருமையையும் அவன்ஊரின் இயல்பையும் உள்ளவாறு சொல்லுவேன். அவற்றைக் கேட்டிடுக; அவன் நகரத்துக்குச் செல்லுகின்றவழி, மற்ற ஊர்களுக்குச்செல்லு

கின்ற வழிகள்போன்றதன்று; அது புதுவருவாய்களையுடைய ஊர்கள் நெருங்கப்பெற்று எங்கும்காணப்படாத புதியகாட்சிகளையுடையது; வேண்டியகாலத்தில் மழைபெய்கையினாலே அங்கங்கேயுள்ளவர்கள் விரும்பியபடியே பயிர்கள் விளைந்துவிளங்கும் கொல்லைகளில் முசுட்டைக்கொடிகள் கார்த்திகைநக்ஷத்திரம்போன்ற பூக்களைப்பெற்று விளங்கும்; எள்ளுப்பயிர்கள் ஒரு கைப்பிடியில் ஏழுகாய்களே அடங் கும்படி நெய்யொழுகக்காய்த்து வளர்ந்திருக்கும்; விளையாட்டுச்சண்

டைசெய்கின்ற யானைக்கன்றுகளின் துதிக்கை ஒன்றோடொன்று பிணை

---

* யாங்களென்பதும் உம்மென்பதும் இவைபோற் பின்வருவனவும் உளப்பாட்டுப்பன்மை.

ந்தாற்போலவே இணைக்கதிர் ஒன்றோடொன்றுநெருங்கி அறுத்தற் குரியபருவத்தைப்பெற்றுத் தோன்றுநிற்கும்; இனையையறுத்தகொல் லைகளில் அரிதாள்தோறும் அவரைகள் தயிர்க்கட்டிகளைப்போற் பூக் களைக்கீழே உதிர்த்து அரிவாள்போன்ற காய்களையுடையனவாய்த் தோன்றும் ; வரகம்பயிர்கள், எருமைகள்கிடந்தாற்போலக் கற்கள் மிக்கவழியிடத்தில் தருக்கம்பேசுவோனுடைய இணைந்துதோன்றும் கைவிரல்களைப்போன்று இரட்டித்தகதிர்கள் முற்றி அரிவாளாலே அரிதலுறுநிற்கும்; ஐவனநெல்லும் வெண்ணெல்லும் பால்கட்டிச் சிறிதுமுற்றி நாற்றிசைக்காற்றுக்களாலும் ஊடறுக்கப்பட்டு நன்றாக விளைந்துகாணப்படும்; கரும்புகள் மிகவளர்ந்து வேற்படைகளையுடைய சேனைகள் ஓடுதல்போலவே காற்றாலே ஒருபக்கமாகச்சாய்ந்து அசை யாநிற்கும்; காட்டிலே மூங்கில்காய்த்தநெல் அவலிடிக்கும்பதத்தைக் கொண்டு தோன்றும்; வெண்சிறுகடுகுகள், உழாமல் களைக்கொட் டால் அடிவரைந்துகொத்தும்தோட்டங்களில் விதைக்கப்பட்டு நெருங்கி விளைந்திருக்கும் ; கருநெய்தல்கள் கருமையென்பதே வடிவுகொண்டதென்னும்படி மலர்ந்துவிளங்கும்; இஞ்சிகள் பாவைபோன்ற கிழங்குகளையுடையனவாய் உறைப்புச்சுவையைப்பெற்றுத் தோன்றும்; கவலைக்கிழங்குகள் குழிகள்தோறும் பெண்யானையின் மடித்த முழந்தாளைப்போலச் சிறந்து வளர்ந்திருக்கும்; யானையை வேல்குத் தினாற்போலச் சிறுமலையின்மேலே தம்முடைய பூக்கள்படும்படிநிற் கும்

வாழைகளின்காய்க்குலைகள் பழுத்து விளங்காநிற்கும்; பெரு மூங்கில்கள் காய்த்து முற்றியநெல்லுடன்கூடி அசையாநிற்கும்; அகாலங்களிலும் நிலவிசேடத்தால் மரங்கள்பலனைக்கொடுத்தலால் நாவலின்பழங்கள் காற்றாலே உதிர்ந்து பாறைகளிலே பரந்துகிடக்கும்; விடாய்த்தகாலத்தில் வாயில்நீரூறுதற்குக்காரணமான உயவைக்கொடிகள் எங்கும் படர்ந்துதோன்றும்; கூவைக்கிழங்குகள் முற்றிக்கிடக்கும்; தேமாம்பழங்கள் சாறுமிகுந்து உண்பாரை வேறொன்றிற்செல்லாதபடி தடுத்துவிளங்காநிற்கும்; ஈரப்பலாக்களின்பழங்கள் தாமே வெடித்து உள்ளேயுள்ளவிதைகளைச் சிந்தாநிற்கும்; பலாமரங்கள் வழிப்போக்கர்களான கூத்தர்களுடையமத்தளங்கள்போலவே கீழும் மேலும் காய்த்து முற்றி வளைந்துதோன்றாநிற்கும்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டுசென்று பாறைகள்தோறுமுள்ள வேடர்களுடையசிறிய ஊர்களிலே தங்குவீராயின், அவர்களால் நல்லஉணவுகளைப்பெறுவீர்; பெற்றஅன்று அங்கே அவர்களுடன்தங்கி இளைப்பாறி நெருப்புப்போன்ற அசோகம்பூக்களைச் சுற்

றத்துடன் சூடிக்கொண்டு
அம்மரங்களுள்ளசெவ்வியவழியிற்போய்ப் பின்பு மூங்கில்கள்
ஒன்றோடொன்றுஉரிஞ்சி ஒலிக்கும் மலையிலுள்ள அரியவழியில்
இறங்கிச்சென்று அதன்பக்கத்துள்ளசிறூர்களை அடை ந்து, "
யாங்கள் நன்னனுடையகூத்தரோம்" என்றுசொல்லுவீராயின்,
நீங்கள் அவ்வூராரால்அழைக்கப்பெற்று,
நெடுந்தூரம்நடந்துவந்த உம் முடையவருத்தம்தீரும்படி
இனியமொழிகளைக்கூறிப் பின் அவர்கள்,
நெய்யில்வெந்தபொரியலையும் அழகியதினைச்சோற்றையும்
கொடுக்க உண்டு மகிழ்வீர் ; நன்னனுடைய மலைமேலுள்ளநாடு
மிகச்சிறந்தது. அங்கேசெல்லுவீராயின்,
நீர்பெறுவனவற்றைச்சொல்லுவேன் ; கேட் பீராக :
உடும்பின்தசையோடு கடமானுடையகொழுத்தஇறைச்சியை யும்
முள்ளம்பன்றியின் இறைச்சியையும் கலந்துதின்று
இடையிடை யே தேனாற்செய்த கள்ளின்தெளிவை
மிகப்பருகிப் பின்பு நெல்லாற் சமைத்தகள்ளினையும்உண்டு
களிப்புற்றுத் துயின்று விடியற்காலத் துள்ள உம்முடைய
மயக்கம்தீரும்படி பலாவிதையின்மாவையும் புளி யையும்
கலந்துவைத்தமோருலையில் மூங்கிலரிசியைச்சொரிந்து ஆக்
கியசோற்றைக் குறமங்கையர்,
தங்கள்தங்கள்பிள்ளைகளைக்கொண்டு, அண்ணன், அம்மான்
என்றாற்போன்ற முறைப்பெயர்களைக்கூறு வித்து

உங்களைத்தடுத்து அழைத்துஉண்பிக்க அவ்வுணவையும் மலை யுச்சியிலிருந்துகொண்டுவந்த சந்தனம், அகில், பொன், மணிமுதலிய வற்றையும் அவர்களுடையமனைகள்தோறும் பெற்று மகிழ்வீர் ; இங் ஙனம்பெறுதலினாலே தாமதித்து நன்னனிடம்சென்று பெறக்கருதிய பரிசிலை நீவிர் மறக்கவும்கூடும் ; அன்றியும் தெய்வங்கள் விரும்பும்பூக் களைக் கிட்டினாலும் அங்கேயுள்ள வரையரமகளிர் இருத்தலைக்கண்டா லும் உயிர்போம்படி வெதும்பி நடுங்குதற்கும் உரியீராவீர் ; ஆகை யினாலே அம்மலையிடங்களிற் பலநாள்நில்லாது இறங்கி நிலத்திலுள்ள நாட்டிற்செல்லுமின் ; தினைப்புனத்தை அழிக்கும் பன்றிகளைப்பிடித் தற்கு நுழைவழிகள்தோறும் பொருத்திவைக்கப்பட்ட கற்பொறிகள் அவ்வழிகளிலுண்டு ; ஆதலால் அவ்வழியிற்போகஎண்ணுவீராயின், இராத்திரியில் மிகுந்தஇருட்டுவேளையிற்செல்லாமற் பொழுதுவிடிந்த பின் செல்லுவீராக ; சிறுவழிகளிற் பருக்கைக்கற்களாலாகிய மேட்டு நிலத்தில் வெடிப்புக்கள்உண்டு ; அவ்வெடிப்புக்களில் பாம்புகள்மறைந்து ஒடுங்கிக்கிடக்கும் குழிகளும் உள்ளன. அக்குழிகளை மரங்க ளின்மேலே ஏறிக் கையைக்கொட்டிப்பார்த்துவிட்டு, அப்பாம்புகள் மகிழும்படி விறலியர் அஞ்சலிசெய்து வாழ்த்தாநிற்க மிருகங்கள் கிடக்கும்வழியினின்றும் சிறிதுகடக்கப்போய் வலப்பக்கத்துவழியை

உமக்குவழியாகக்கொண்டுபோவீராக ; விளைந்த
தினைக்கொல்லையைக் காத்தற்குவந்து அதனைச்சூழ்ந்தகுறவர்
யானைகளால் அஃது அழி ந்துபோவதற்குவருந்தி
மிகஉயர்ந்தபரணிமேலேறி, பக்கத்துள்ளகுறுங் காட்டிடத்தேநின்று,
அந்தயானைகள் பகற்காலத்தில் அங்கேநின்றும்
வேறிடங்களுக்குப்போய்விடும்படி
அவர்கள்வீசியகவண்கற்கள் குரங் குகள் தம்குட்டிகளோடு
அஞ்சியோடும்படி இடையேயுள்ளமூங்கில் கணைக்கடந்து
தவறுமல்வரும் ; அவை யமன்போன்றவை ஆதலால்,
அக்கற்கள் உங்கள்மேலேபடாதபடி மரங்களிலே
மறைந்துசெல்லுவீ ராக. இராக்காலத்தையொத்த
காவற்காட்டினையும் யானைகளைவிழுங் கும்
முதலைகள்தங்கப்பெற்று, குமிழிகள்சுழன்றுவரும் மடுக்களையும்
நீர்குத்தின இடங்களையும் உடையவாய் ஏறுதற்கும்
இறங்குதற்கும் அரியனவாயிருத்தலினாலே அகழியிலே
இறங்கிச்சென்றாற்போலும் காட்டாற்றுவழிகள் கால்வழுக்கும்
இடங்களையுடையன. அவ்விடத் திற்
பெரியமரங்களிற்சுற்றிக்கிடக்கின்ற பெருங்கொடிகளைப் பிடித்
துக்கொண்டும் ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொண்டும்
பிள்ளைக ளோடே போவீராக ; பக்கமலையில் விழுந்தவர்களை
மறைத்துவிடும் படியான ஆழமுள்ள குளங்களுக்கு அருகில்
இடத்தைமறைத்துக் கொண்டிருக்கும் நுண்ணியபாசி

ஊன்றியிட்டீ அடியை ஓடப்பண் ணும்; அன்றியும் அவ்விடங்கள் செல்லுதற்கு அருமையையுமுடைய ; அதற்குப்பரிகாரமாக வழிகளின் இருபுறத்தும் பின்னிவளர்ந்த சிறு மூங்கில்களின் கோல்களையும் கொறுக்காந்தட்டைகளின் கோல்களை யும் பற்றுக்கோடாகப்பிடித்துக்கொண்டுபோமின். முகபடாத்தாற் பொலிவுபெற்றனவும், மலைபோன்றனவும், போர்த்தொழிலிலே பயின் றனவுமாகிய யானைகளையும் வில்லிலிருந்து மழைபோலத்தாழ்ந்து விழும் வேகமான அம்புகளையுமுடைய முன்படையால்அழகுபெற்ற தும், பூக்களையுடையமடுக்களுள்ள ஆற்றங்கரையிலுள்ளதும், மதிலை யுடையதுமான

* திருப்பதியையடைந்து,கோயிலிலுள்ளவரும் துதித் தற்கரியவருமாகிய காரியுண்டிக்கடவுளைத்தரிசிக்கும்பொழுது அவரை நீவிர் வணங்கிவிட்டு உடனேசெல்லுக; அங்ஙனம் செல்லுதலைத்தவிர் த்து

உங்களுடையவாத்தியங்களை வாசிக்கவேண்டா ; வாசிப்பீராயின், அம்மலையில் இடைவிடாமற்பெய்துகொண்டிருக்கும் மழையால் உங்க ளுடையவாத்தியங்களெல்லாம் நனைந்துபோய்விடும். அல்லாமல் நீங்

கள் போதலும்அரிது. அன்றியும் அந்தக்காட்டிற் †பலகறைபோன்ற வெள்ளிய வேர்கள்பொருந்திய பீலியையுடையமயில்கள் ஆடி இளை

---

* காரியுண்டிக்கடவுளெழுந்தருளிய ஸ்தலம். † சோழி.

த்துநின்றாலும் கூத்தருடையபிள்ளைகள்போன்ற
ஆண்குரங்குகள் நீண்டமூங்கிற்கிளைகளிலே பாய்ந்தாலும்
செங்குத்தான மலையின்பக் கத்துள்ள
தெய்வங்கள்விரும்பியமலையில் தேருருள்போல வைக்கப்
பட்டுள்ள தேனடைதோற்றினாலும் அவற்றை விரைவாக
நீங்கள்பார் க்கவேண்டா. பார்த்தால் வழி தப்பிவிடும்.
அங்ஙனம்போய் மலை வழியிலேயுள்ள காட்டிற் செல்லுவீராயின்,
உயர்ந்த பரணின்மேலே யிருந்து கொல்லையைக்காப்பவன்
எய்தஅம்பால் தன்மார்பில் புண் மிகுந்து
அந்தஅம்போடேஓடிப்போய் வழியிற்கிடப்பதாகிய கொழு
த்தபன்றியைக் காண்பீர் ; கண்டால், இழைந்த
மூங்கிலிலிருந்து உண்டாகியதீயினாலே
கெட்டநாற்றம்உண்டாகாதபடி அதனைவதக்கி மயிர்போகச்சீவித்
தின்று சுனையிலே கலக்கமறத்தெளிந்து பளிங்கு போன்றநீரை
வழிவந்த இளைப்புத்தீரும்படிகுடித்து மிகுந்ததசை யைப்
பொதியாகக்கட்டிக் கைக்கொண்டு அவ்விடத்தே இராத்திரி
வேளையில் அப்பாற்போவதைநிறுத்திவிட்டு
உப்புடையவீடுபோன்ற குகைகளிலே பிள்ளைகளோடே
தங்குங்கள் ; இங்ஙனம்தங்கி இளைப் பாறிவிட்டு
விடியற்காலத்திலேஎழுந்து செவ்வியவழியிற்செல்லுவீ ராக ;
செல்லுங்கால் யானையைவிழுங்குவதும் வெட்டிய பெருமரம்
கிடந்தாற்போல்வதுமாகிய பெரும்பாம்பு
விழுந்துகிடக்கும்வழியை விட்டு விலகிச்செல்லுக ;
செல்லுகையில் தெய்வங்களன்றி மானிடரால்

விரும்பப்படாதனவாய் அங்கேயுள்ளபூக்களையும், பழங்களையும், குள ங்களைக்கண்டாற்போலும் குளிர்ச்சியையுடைய மரங்களின் தொகுதி களையும் இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் பார்த்துக்கொண்டே யான் கூறிய அடையாளங்களைநினைந்து அவற்றை அணுகாமற்செல்லுவீ ராக ; செல்லுங்கால், நாடுகளையெல்லாம் காணுதற்குரிய அகன்றஇட த்தையுடைய உச்சிமலையில் மெல்லமெல்லப் போவீராக ; அங்ஙனம் போகையில் மிகுந்தநிழலையுடைய மரங்கள்நெருங்கின குறுங்காட் டாலே வெயில்வெப்பம்இல்லாததும் திசைமயக்கம்உண்டாகும் இராக் காலத்திலும் வலியவில்லையுடையவர்களாய் மிருகங்களை ஆராய்ந்து கொண்டு சுழன்றுதிரியும் குறவர்கள்கூட்டம் பகலிலும் மயங்குதற் குரியதுமான குன்றத்தை அடைவீர் ; அடைந்தால் அதனிடத்தே செல்லுதலை ஒழிக. சென்றால் திசைமயக்கத்தால்வருந்துவீர் , ஆத லால் அதனருகிலுள்ள விசாலமானபாறையிற் சேர்ந்துநின்று கல் லென்னும் ஓசையுண்டாகும்படி நும்முடையவாத்தியங்களைக் கொட் டுவீராக ; கொட்டினால், நன்னனுடையகட்டளையால் காட்டைக்காத் துக்கொண்டு உச்சிமலையில்இருக்கும் வேடர்கள்பலர், அப்பொழுது

அவ்வாத்தியவோசையைக்கேட்டு, வெள்ளத்தில் அகப்பட்டுவருந்தும் மனிதர்களின் துன்பத்தைக்கண்டு ஓடிவந்து விரைந்துஎடுப்பாரைப் போலே, உங்கள்வருத்தம்தீரும்படி மிகவிரைந்துவந்து நறியபூக்களை யும் இனியபழங்களையும் உங்களுக்குக்கொடுப்பார். நீங்கள் அம்மலர் களைச்சூடி அப்பழங்களைஉண்டபின், இடையூறுமிருந்தவழியில் அவர் கள் உங்களுக்குமுற்படச்செல்லுவர். நீங்கள்

அவர்கள்பின்னேசெ ன்று சுற்றத்தோடு மனமகிழ்ச்சியை அடைவீர். அடைந்து அவர் கூறியதிசையைஉட்கொண்டு, புதியராய்வந்தோர் பார்த்தாலும் அவர் கள்தலைகளைச் சுற்றச்செய்யும் பக்கமலையில் குறியனவும் நெடியனவு மாகிய குவடுகளினின்றும் முறைமைப்படஇறங்கிப் பூக்கள்பரந்தநிழ லிலே இளைத்திருப்பின், அப்பொழுது திசைகடோறும் அருவியாடும் தெய்வமகளிர் அவ்வருவியைக் கையாற்குடையுந்தோறும் உங்கள் வாத்தியத்தைப்போல உண்டாகிற இனியஓசையையும், மலைமேலிட்ட பரணிலுள்ளவேடர்கள் தினைப்புனத்திற்புகுந்து தின்னும்யானைத் தலைவனைப் பிடித்தற்குச்செய்யும் ஆரவாரத்தையும், குகையில் தங்கி யிருக்கும் முள்ளம்பன்றி தனது கூரியமுள்ளால் எய்து வருத்துகையி னாலே வீழ்ந்தவேடர்கள் அழும் முழக்கத்தையும், தம் கணவர்மார் பில் புலிபாய்ந்ததையாலுண்டாகிய விழுப்புண்ணை ஆற்றுதற்கு இது தக்கதென்று எண்ணிக் குறத்தியர்பாடும்

பாட்டாலெழுந்தஓசையையும், முதனாளிலேபூத்த வேங்கைமரத்தின்பூக்களைச் சூடக்கருதி, தாம்பாடினால் அது தாழ்ந்துகொடுக்குமென்றுநினைந்து மகளிர் புலி புலியென்றுகூப்பிடும்ஒலியையும், கருவுற்ற பெண்யானைக்கு அது வேண்டியஉணவுகளைக்கொடுத்து ஆண்யானை பாதுகாத்துவிட்டுப் போகும்போது புலி ஒளித்திருந்து பார்த்து அதனைவருத்த, அது கண்டபெண்யானை தன்னுடையசுற்றத்தோடே வருந்திக்கூப்பிடும் இடிபோன்றகுரலையும், எடுத்தற்குஅரியவெடிப்பில் தன்கையினின்றும் வீழ்ந்துஇறந்த தன்குட்டியின்பொருட்டுச் சுற்றங்களோடுகூடிக் கத்தும் மந்தியின்ஆரவாரத்தையும், முசுக்கலை ஏறமுடியாதென்று எண்ணும்படி உயர்ந்தமலையின்மேல அசையாதபடிநட்ட கண்ணேணி வழியாகச்சென்று தேனீக்கள்சேர்த்துவைத்த தேனடையைஅழித்துத் தேன்கொள்வோர்செய்யும் ஆரவாரத்தையும், இவற்றிற்கைக் கொண்டபொருள்கள் நன்னனுக்குத் திறைகொடுத்தற்குச் சாலுமென்று சிற்றரண்களை அழித்தவேடர் மகிழ்வுற்றுச்செய்யும் ஆரவாரத்தையும், நறவைக் காலையிற்குடித்தவேடர் மான்றோல்போர்த்த சிறு பறைமுழங்க உச்சிமலையில் தம்மனைவியரோடுஆடும் குரவைக்கூத்தின்

ஒலியையும், கல்லின்மேல்வரும்ஆறுகள் வெடிப்புக்களில்வீழ்ந்து

தேர் கள்வந்தாற்போல இடைவிடாமல்ஒலிக்கும் ஆரவாரத்தையும், சுழி யில் அகப்பட்டயானைகளைக் கோபந்தணிவித்துத் தறியிற்கட்டுதற்குச் செய்யும் பாகருடையஓசையையும், மூங்கிலாற்செய்ததட்டைப்பறை யைப் புடைத்துக்கொண்டு தினைப்புனத்தில்கிளியையோட்டுகின்ற மகளி ருடையஆரவாரத்தையும், இடையரும் குறவரும் வென்றதன்வெற்றி தோன்ற ஆரவாரிக்கும்படி காளையும் மரையானேறும் முதுகிடாத வலியுடனே புண்ணுண்டாம்படி ஒன்றோடொன்றுமுட்டிப் பொரும் கல்லென்கின்றஆரவாரத்தையும், எருமைக்கடாக்கள் தம்மிற்பொரும் ஆரவாரத்தையும், எல்லாரும்உண்டபின்பு மிஞ்சிக்கிடக்கும் பலாப் பழத்தின் சுளையிலிருந்து விதையைக்கொள்ளுதற்கு யானைக்கன்றுக ளோப்பிணைத்துக் கான்தள்மடலாலேஅடித்து அவற்றைக் கடாவிடும் பிள்ளைகளின்ஆரவாரத்தையும், ஆலைகளிற் கரும்பினின்று சாறுகொள் ளும்ஒலியையும், தினையைக்குற்றும்மகளிர்பாடும்உலக்கைப்பாட்டின் ஒலியையும், சேம்பையும் மஞ்சளையும் பன்றிகள்தோண்டிவிடாதபடி காப்பவர்கள்கொட்டும் பன்றிப்பறையின் ஓசையையும், இந்தஓசைக ளால் மலையினிடத்தில்எழும் எதிரொலியையும் கேட்பீர். நன்ன னுடையமலை, மகளிர்ஆடுதற்குஏற்ற

மத்தளங்கள் இடைவிடாமல் ஒலி த்துக்கொண்டிருக்கும் ஊர்களிலுள்ள திருநாளை ஒத்து உங்களுக்குச் சிறந்து தோன்றும். அங்கே காணுதற்கு இனியவற்றைக் கண்குளி ரக்கண்டும் கேட்பதற்குஇனியவற்றைச் செவிகுளிரக்கேட்டும் உண்ப தற்குஇனியஉணவுகளைப் பாராட்டியுண்டும்

இந்நகர்ச்சி இன்னும்உண் டாவதாகவென்று

பழையஉறவினரைப்போன்ற முறைமையினைஉடை யீராய்ச் சிலநாள் தங்கி அம்மலை உமக்குப்பின்னாகும்படி செல்லுமின். சென்று பக்கமலையிலே விறலியர் குறிஞ்சிப்பண்ணைப்பாட அங்கே யுள்ளதெய்வங்களைக் கையால்தொழுது, 'எம்குறைமுடித்தால் உம க்கு இவைதருவேம்' என்று துதித்துவேண்டிக்கொண்டு அப்பாற் போவீராக; போய்க் கார்காலம்வருமளவும் பன்னியபஞ்சுபோல மேகங்கள்கிடக்கும் பெரியமலையிடத்தில் மிகவும் சமீபமான இடத்தி லுள்ள கரியமேகக்கூட்டம் திவலைகளைத் தூவுகையினாலே திசையறி யாமல்மயங்கும் சுற்றத்தோடே

காவியவாத்தியங்கள் நனையாதபடி

கிணறுகள்போன்றகுகையிலேபுகுந்துகொள்ளுக. பின்பு பெரியகல்லு களில் முறிந்துநிற்கும் மலைகளை அடையாமல் தன் அழகால் பார்ப்போ ருடைய

கண்ணொளியை வாங்கிக்கொள்ளும் மலையிலுள்ளனவாகிய குழிகளாலுண்டாகும் துன்பங்களை மாற்றிக்கொள்ளுதற்குக் காம

ரத்தை ஊன்றுகோலாகக்கொண்டு செல்லுவீராக. செல்லுகையில்
வேல்காய்ந்தாற்போன்ற குடுமிக்கூர்ங்கற்களையுடையபாறையில் வெய்
யில்வேளையிற்செல்லாமல் அந்திப்பொழுதிற் போவீராக.
அவ்வழிக
ளில் நன்னனுடையசேனைத்தலைவரோடே
யானைக்கூட்டங்களையுடை யனவும்
போர்செய்யவந்த அரசர்களுடைய நிலைமையைக்கெடுப்பனவு
மாகிய அரண்கள் பலவுள்ளன. அந்தஅரண்களில்
பின்னிவைத்தாற் போலக் கொடிகள்
பிணங்கியிருக்குஞ்சிறுகாட்டையுடைய வழிகடோறும்
உங்களுள்ளே முன்னேபோகிறவர் தம்முகத்தில்அடியாத படி
வாங்கிவிட்டகோல்கள் யாழின்பத்தரையும் முழவின்கண்ணையும்
கெடுத்துவிடாமல் காத்துக்கொண்டு பின்னேபோகிறவர்
தவறாமல் அவர்கையைப்பிடித்துக்கொண்டு மெல்லமெல்லச்
செல்லுக. சென்றால், யானைஒன்றோடொன்று மலைந்தாற்போல
நெருங்கியிருக்குங் கற்களினிடத்தே காடுகள்
மிகப்பலஉள்ளன. தாம் புறங்கொடுத்து ஓடிய
விடத்துப் பகைவர்சிரித்தொலிக்க, அதுபொறாமல் நாம்உயிர்விடுதற்கு
இது நல்லசமயமென்று மீண்டுவந்து பொருது தம்முடையஉயிரை
விட்ட மறவருடையபெயர்களை எழுதிநட்டகற்கள் முதுகிட்டுப்போன

வரைஇகழும் கவர்த்தவழிகள் மிகப்பலவாயிருக்கும்;
உம்முடைய இசை அந்நடுகல்லிலுள்ள தெய்வத்திற்கு
விருப்பமுண்டாகும்படி யாழைவாசித்துவிட்டு
விரைந்துபோவீராக. உங்களுள் வழியறியா மற்போய்
மீண்டுவந்தபுதியவர்கள், பின்வருகிறவர்களும் அவ்வாறு
போய்மீளாதபடி பலவழிகளுங்கூடினசந்தியைக்
கையாலேதுடைத்து அடையாளமாக ஊகம்புல்லை
முடிந்துவைத்திடுக. நீங்கள்போகும்இடத்தில்
மராமரத்தின்நிழலிலே இவ்வாறு பொருதுபட்ட இன்னுமொன்று
உலகம்அறிவதற்குப் பொருதுபட்டவீரர்பெயர்களை எழுதி
நடப்பட்டனவாகியகற்கள் தெய்வத்தன்மையிருந்து
பிறகாடுகளை இக ழும் கவர்த்தவழிகளில்,
நன்னனுடையபகைவரிருக்கும் அருநிலங் கள் பலவுள்ளன;
அவை, தத்தம் ஊர்களிலிருந்து மனிதர்நினைத்தாலும்
நடுங்குதற்குக்காரணமானவை. 'நன்னனைநினைந்து செல்லுகின்
றேம்' என்று அவர்களிடம்கூறுவீராயின்,
அவர்களுடையஊர்கள்
உங்களுக்கு நன்னனுடையபழையஊர்களைஒக்கும்; ஆதலால், அங்கே
இளைத்தஇடத்தே இளைப்பாறி அஞ்சாமற்போவீராக;
தன்பிணையைப் புலிபாய்ந்து கொல்லுகையினாலே கலைமான்
மனம்வருந்தி அதனைக் கூப்பிடுங்காடுகளில் முறையேபோய்,
வில்லோசைக்குஅஞ்சின மரை யேறுகள்
விரைந்தோடும்காட்டில் வேறிடத்திற்சென்று மேய்ந்து வந்த
பசுக்களின்இனியபாலை இடையர்கொண்டுவந்து சொரிகையி

ஞாலே அவர்களுக்கு விருந்தினராவீர் ;
பண்டங்களைவிற்றுவாங்கின பலவகைநெல்லின் அரிசியையொத்து
நிறம்வேறுபட்ட பலவகைஆடு களின்திரள்களிலே
இராக்காலத்திற்செல்லுவீராயின், அங்கேயுள் ளார்
சன்மத்துவைத்திருந்த பாற்சோற்றையும் பாலையும் பெறு
வீர். அவற்றைஉண்டு சேணமிட்ட படுக்கையைஒத்த
மென்மையை யுடைய ஆட்டுத்தோலிலே
கொடியவிலங்குகள்வாராமல் இடையர் வைத்துள்ளநெருப்பைத்
துணையாகக்கொண்டுதங்கி அப்பாற்செல்லு வீராக ;
செல்லும்பொழுது நாடுகாக்கும் வேடர்களைக்காண்பீர் ;
காண்பீராயின், அவர்களுக்கு ' நன்னன்பாற்செல்லுகின்றேம் '
என்று கூறுமின் ; கூறின், அவர்கள் தசைகளையும்
கிழங்குகளையும்கொடுத்து உங்களை நவிர்ந்துதின்னப்பண்ணிப்
பாதுகாப்பார்களேயன்றி வருத்த மாட்டார்கள் ; அவற்றையுண்டு
அவ்விடத்தில் அவர்கள்போகச்சொ ன்னவழியையே
வழியாகக்கைக்கொண்டுபோமின் ; அக்காடு அத் தன்மையது;
அப்பண்பைக்கண்டுமகிழ்ந்து மராமரத்தினது பூங்கொத் தும்
யாமரத்தின்பூவும் ஆகியஇவற்றைத் தளிர்களோடேசேர்த்து

மால்நாராற்கட்டின கண்ணியைச்சூடி மழைபெய்யப்பெற்றுக் குளிர்ந் திருக்கும் வழியிலுள்ள நீரைக்குடித்துக் குளித்து, அதனை வழிக் கும்முகந்துகொண்டுபோமின்; போனால், புல்வேய்ந்த குடிசைகடோறுமுள்ள குடிகளிடத்தே, புளிக்கரைத்தவுலையிலே அவரைவிதை, மூங்கிலரிசி, நெல்லரிசி இவற்றைச் சொரிந்துஆக்கின புளியங் கூழைப் பகலில் வழிவந்தவருத்தந்தீரும்படி இராத்திரி உணவாகப் பெறுவீர்; பெற்று இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள்தங்குவீ ராயின், தினைமாவோடு சோற்றுருண்டையை உள்ளீடாக நெய்விழு தைக்கொண்டு உண்ணும்படி அவர்கள்கொடுக்க நாடோறும்பெறு வீர்; அவற்றைப்பெற்று உண்டு, பனிநீங்கும்படி விறகுகளைஎரித் துக் குளிர்காய்ந்து நன்றாகத்தூங்கிவிட்டு விடியற்காலத்தில் நிமித் தம் பார்த்துக்கொண்டு போவீராக; போனால், காஞ்சிமரத்தினையும் நீர்வந்துபொருகின்ற அறுகம்புல்பரந்த இடங்களையும் விளைநிலங்களை யும் சோலைகளையும் இடைச்சேரிகளையுமுடைய நன்னனது தண்பணை நாடு, நீங்கள் பலநாள்தங்கினாலும் ஒருநாள்நின்றாலும் யாழின் பண்ணை மாறிவாசித்தாற்போன்ற நுகர்தற்கு நன்றாகிய பலபொ

ருள்களை ஊர்கடோறும்உடையது. அந்நாட்டையடைந்தால்,

காலை யில் உழவர் நெல்லைமுகந்துதாராநிற்பர்.

கள்விற்கும்வலையருடைய மகளிர் வாளைமீனின்தசையை

வரான்மீனின்தசையோடே கலந்து கொடுத்து

நெல்முளையாலாக்கினகள்ளின்தெளிவையும் கொடுப்பக்

களங்கடோறும் அவற்றைப்பெறுகுவிர்;
அவற்றைப்பெற்றபின்பு, இவை நன்னனுக்கும்
உணவாதற்கு அமையுமென்று கண்டோர்மயங்கும்படி
அங்கங்கேயுள்ளவர்களிட்ட இறைச்சிகளோடுகலந்து ஆக்
கினசோற்றைச் சுற்றங்களோடு உண்டு மருதப்பண்ணைவாசித்து
இளைப்பாறிவிட்டுப்போமின்; போய்,
நெல்லறுப்பார்கொட்டும்தண்ணுமைக்கு அஞ்சிய எருமைக்கடா
நும்மேல்வாராதபடி பாதுகாத்துக்கொண்டு
சேயாற்றின்கரைவழியேசெல்லுமின்; சென்றால், சோலைகளை
யும் மதிலையும் திருநாளென்றுகூறும்படி சனங்கள் அடர்ந்து
இடம் பெறாத கடைவீதியையும் பலகவர்த்தன்மையையுடைய
குறுந்தெருக்களையும் பழங்குடிகளையுடையனவாய்
மிகவுயர்ந்தமாடங்களை இருபுறத்திலும்பெற்று
ஆறுபோலத்தோன்றும் பெருந்தெருக்களையுமுடைய தாய்ப்
பொருட்டிரள்நிலைபெற்ற அவனுடையபழையவூர் மிகவும்
தூரியதன்று. அவ்வூரிற்சென்று பகைவரைவெல்லும்வீரர்கள்
வேலைச்சாத்திவைத்திருக்கும் பலதெற்றுவாசல்களையுடைய
கோபுரவாயிலில் ஐயமின்றிப்புகுவீராக; புகுந்துசென்றால்,
அம்பலங்களில் அயலூரிலிருந்துவந்து தங்குவோராகிய
•கூத்தர்முதலியோர் உங்களைக் கண்டு, "இவர்கள்
நன்னனைப்பார்த்தற்குவருபவர்கள்" என்றுகருதி, தனியேஇருந்த
தங்கள்வருத்தம்போம்படி உங்களை விருந்தினராக எண்ணி

எதிர்கொள்ளுவார்கள்; நீங்கள் அவர்களோடு அளவளாவி யிருந்துவிட்டு, பின், ஆமான்கன்றும் கரடிக்குட்டியும் முதுகிடத்தே கால்களையுடைய எண்கால்வருடைக்கிடாயும் பாம்பின்வலியைக்கெடுத்த கீரிப்பிள்ளையும் மரையான்குழவியும் ஆண்உடும்பும் மயிலும் காட்டுக்கோழிச்சேவலும் பலாப்பழமும் மாம்பழமும் நறைக்கொடியும் நூற்றைக்கிழங்கும் கற்பூரமும் மிக்கவிலையுள்ளமாணிக்கமும் யானைக்கொம்புகளும் காந்தட்பூவும் புன்னைப்பூவும் மஞ்சாடிப்பூவும் சந்தனமும் மிளகின்காய்க்குலையும் மூங்கிற்குழாயிலே முற்றினதேனாற்செய்தகள்ளின்தெளிவும் மூங்கிற்குழாயிலேதோய்த்த எருமைத்தயிரும் தேனடையும் ஈரப்பலாவின்பழமும் ஆகியஇவைகள், வருபவர்களால் நன்னனுக்குக் கையுறையாகவைக்கப்பெற்றிருத்தலின், காவிரிநதி கடலொடுகலக்கும் புகாரைப்போன்ற அரண்மனைவாயிலை அடைந்து, பின் அரண்மனைமுற்றத்தைஅணுகி, முழவுஒலிப்பப் பெருவங்கிய முழங்க யாழ்நரம்பின்ஓசையுடனே ஒத்துப்பாடுபவரும் தலைவனைக் கண்டாற் செய்யக்கடவதனை அறிந்தவரும் பழையமுறைமையினின்றும் தப்பாதவருமாகியவிறலியர், முதலில் கடவுளைவாழ்த்தினபின்பு, நீங்கள் பாடவேண்டியபுதியபாட்டினைப் பாடிமுடித்துவிட்டு நன்னனை

நோக்கி, "உலகமுள்ளளவளவும்கீர்த்திநிற்கும்படிகொடுப்பதாகிய கடப்பாட்டைமுடித்த தலைமையையுடையோனே" என்றுசொல்லி, பின்பு வெற்றியாலுண்டாகும் பலவகைப்புகழ்களையும் ஐம்பொறிகளையும் தன்வயமாக்கிய அவன்வெற்றியையும்புகழ்ந்து, உங்களுடையமனத் திலுள்ள மற்றப்புகழ்களையும்பாடுமின்; அவற்றை முற்றக்கேட்டற் கும் உடன்பாடில்லாதவனாகி அவன் உங்களைநோக்கி, "என்மீதுள்ள விருப்பத்தால் நீவிர் இங்குவந்ததே அமையும்; வழிவந்தவருத்தம் நுமக்கு மிகுதியாகவுள்ளது" எனமுகமன்கூறி, பின் சான்றோர்பல ருடன் சமயமிருக்குமண்டபத்தே தான்இருந்து, "உயர்ந்தஅரசவுரிமையையும் நல்ல அமைச்சர்முதலியோரையும் பரந்தநாட்டினையும் நுண்ணிய அறிவினையுமுடையராயிருந்தும், இரந்தோர்க்கு, 'யாம்வறுமையையுடையேம்' என்றுகூறி மறித்தகையினையுடையராய்த் தம் பெயரைத் தம்மொடுகொண்டு முற்றக்கெட்ட அரசர், சேயாற்றுமணலினும்பலர்; அதனால், நம்முடையவாழ்நாள் புகழோடேகழிவதாக" என்றுகருதிக் கொடுத்தற்றொழிலிலே விரிந்தஉள்ளத்தோடே பரிசில்பெறுதற்குவிரும்பிச்சென்ற உம்மைக்காட்டிலும் தான்மிகமகிழ்ந்து இனிமையாக உங்களைப்பார்த்து

நூலின்போக்குவாவுதெரியாத நுண்ணிய உடைகளை உங்களுடைய இடையிலே உடுக்கச்செய்து அவ் விடத்தே நீங்கள் பலநாள் தங்குவீராயினும் இனியதசைகளையும் வெண்ணெல்அரிசிகளையும் முட்டில்லாமல் முதனாள்போன்றவிருப்பத் தோடேதரப் பெறுகுவீர்; பெற்று அவ்விடத்தில், 'எம்முடையவூர்க் குப்போகக்கருதுகின்றேம்' என்று அவன்பொறுக்கும்படி மெல்லெனச்சொல்லி விடைகேட்பீராயின், அவன் இயல்பாகியகொடைத்தொழிலாலே வளம்பிழைப்பறியாதபடி நிதியத்தோடே தேர்கள் யானைகள் பசுத்திரள்கள் குதிரைகள் ஆகிய இவற்றையெல்லாம், உங்களிலே தலைவனான கூத்தன் பொற்றாமரையைச்சூட, விறலியர் போணிகலங்களைப்பூண, பரிசிலாகக்கொடுத்துப் போகச்சொல்லுவன்; ஆதலால், விரைந்துசென்று அவன்பாற் பரிசில்பெற்று வாழ்வீராக.

---

*மலைபடுகடாம்.

நச்சினார்க்கினியருரையும் விசேடக்குறிப்பும்.

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டின்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பி
னிளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழ றுதைஇ
நடுவுநின் றிசைக்கு மரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவுங்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பிற்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கி
னெடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவ
ரிடுக்கண் செய்யா தியங்குந ரியக்கு
மடுக்கன் மீமிசை யருப்பம் பேணா
திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகித்
தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவிற்

கடிப்பகை யனைத்துங் †கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பி
னரலை தீர வுரீஇ வாகின்
குரல்வார்ந் தன்ன நுண்டுளை யிரீஇச்
சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி
யிலங்குதுளை செறிய வாணி முடுக்கிப்

---

* இந்நூலுக்குக் கூத்தராற்றுப்படையெனவும் பெயருண்டு.
† கேள்விபோகாவெனவும் பாடம்.

புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்
மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத்
தடக்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப
வகடுசேர்பு பொருந்தி யளவினிற் றிரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியா

முனைவரப் பண்ணி யருநெறி திரியா
திசைபெறு திருவின் வேந்தவை யேற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொ
டுயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின்
மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்
கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற்
புனல்கால் கழீஇய மணல்வார் புறவிற்
புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ
தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்
கியாமவ ணின்றும் வருதும் நீயிருங்
கனிபொழி கானங் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளின மானப்
புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை யெழில் .. ... வாங்கமைத்
திரடோண்
மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்

முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பி
னிசைநுவல் வித்தி னசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயன்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி

மலைபடுகடாம்.

ரு

வின்னவி றடக்கை மேவரும் பெரும்பூ
ணன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொ
டுள்ளினிர் சேறி ராயிற் பொழுதெதிர்ந்த
புள்ளிமிர் மன்ற வெறுறுக் குறுதவி
ஞற்றி னளவு மசையுநற் புலமும்
வீற்றுவளஞ் சுரக்குமவ ணுடுபடு வல்சியு
மலையுஞ் சோலையு மாபுகல் கானமுந
தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியு
மிகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க்
காசுமுழு தூ கொடுப்பினு மமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னுண்மகி ழிருக்கையு
நல்லோர் குழீஇய நாநவி லவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்

சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதி னியக்கு மவன் சுற்றத் தொழுக்கமு
நீரகம் பனிக்கு மஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்
பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரு
ஞாயி றன்னவவன் வசையில் சிறப்பு
மிகந்தன வாயினுந் தெவ்வர் தேஎ
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைதோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கட னிறுத்தவவன் றொல்லோர் வரவு
மிரைதேர்ந் திவருங் கொடுந்தாண் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி
யுரைசெல வெறுத்தவவன் மூதூர் மாலையுங்
கேளினி வேளாநீ முன்னிய திசையே
மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்
புதுவது வந்தன் றிதுவதன் பண்பே
வான மின்னு வசிவுபொழிய வானு

௲ மலைபடுகடாம்.

திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளையப்
பெயலொடு வைகிய வியன்க ணிரும்புனத்
தகலிரு விசும்பி னாஅல் போல
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத் தன்ன விதைப்புன மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலி
னகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்
கவ்வை போகிய கருங்காய் பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்
பொய்பொரு கயமுனி முயங்கு கைகடுப்பக்
கொய்பத முற்றன *குவவுக்குர லேனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறுங்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை
மேதி யன்ன கல்பிறங் கியவின்
வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி
யிரும்பு கவர்வுற்றன பெரும்புன வரகே
பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் *விளைந்தன வைவனம் வெண்ணெல்
வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக்
காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக்
குறையறை வாரா நிவப்பி னறையுற்
றாலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே
புயற்புனிறு போகிய பூமலி புறவி

னவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை
தொய்யாது வித்திய துளர்படு துடவை
யையவி யமன்ற வெண்காற் செறுவின்
மையென விரிந்தன நீணறு நெய்தல்
செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து
வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
காழ்மண் டெஃகங் களிறுமுகம் பாய்ந்தென
ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத்
துறுகல் சுற்றிய சோலை வாழை

* குலவுக்குரலெனவும் பாடம்.

யிறுக்குலை முறுகப் பழுத்த பயம்புக்
கூழுற் றலமரு மூந்தூ ழகலறைக்
கால மன்றியு மாம்பயன் கொடுத்தலிற்
காலினுதிர்ந்தன கருங்கனி நாவல்
மாறுகொள வொழுகின ஊறுநீ ருயவை
நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந்
துண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிக்

தாலே யுககன நெடுநதா ளாசினி
விரலூன்று படுக ணாகுளி கடுப்பக்
குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக்
கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச்
சுரஞ்செல கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே
தீயி னன்ன வொண்செங் காந்தட்
டூவற கலித்த புதுமுகை யூன்செத்
தறியா தெடுத்த புன்புறச் சேவ
லூஉ னன்மையி னுண்ணா துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களங் கடுக்கும் வியலறைத் தோறு
மணவில கமழு மாமலைச் சாரற்
றேனினர் கிழங்கின ரூனார் வட்டியர்
சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்
தூவொடு மலிந்த காய கானவர்
செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே
யிரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவி
ரன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கிக்
கன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம போகி
யலங்குகழை நரலு மாரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி

நோனாச் செருவின் வலம்படு நோன்றாண்
மான விறல்வேள் வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்

ஸ்ரீ

மலைபடுகடாம்.

சேட்புலம் பகல வினிய கூறிப்
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவி
ரேறித் தரூஉ மிலங்குமலைத் தாரமொடு
வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்றநும் மனந்த தீர
வருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி
னின்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ

நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்
குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி
யகமலி யுவகை யார்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குரிசின் முன்னிய
பரிசின் மறப்ப நீடலு முரியி
ரனைய தன்றவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவளைக் கடிவீ தொடினும
வரையர மகளி ரிருக்கை காணினு
முயிர்செல வெம்பிப் பனித்தலு முரியிர்
பலநா ளில்லாது *நிலனுடு படர்மின்
விளைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப்
புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி
யுடைய வாறே நள்ளிரு ளலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமி
னளிந்து பலர் வழங்காச் செப்பந் துணியின்
முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்விற்
கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே
குறிக்கொண்டு மரங் கொட்டி நோக்கிச்

* நிலனொடுபடர்மினென்றும் பாடம்.

செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிது நெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின்
புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவ
ருயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ
வகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்
பகனிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்க
லிருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்பொ டிரிய
வுயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரமறையாக் கழிமி
னுரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி
யிரவி னன்ன விருடூங்கு வரைப்பிற்
குமிழி சுழலுங் குண்டுகய முடுக்க
ரகழிழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉ மருங்குடைய வழாஅ லோம்பிப்
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவி னன்ன புன்றலை மகாரோ
டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமி
னழுந்துபட் டலமரும் புழகமல் சாரல்
விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா
வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
யடிநிலை தளர்க்கு மருப்பமு முடைய
முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரலோ
டெருவை மென்கோல் கொண்டனிர் கழிமி

னுயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய
மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி
யோர்யாற் றியவின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுட் காணிற்
றொழாநிர் கழியி னல்லது வறிது
நும்மியந் தொடுத லோம்புமின் மயங்குதுளி
மாரி தலையுமவன் மல்லல் வெற்பே
யலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினுங்

அ

மலைபடுகடாம்.

கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினு
நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த
சூர்புக லடுக்கத்துப் பிரசங் காணினு
ஞெரேரென நோக்க லோம்புமி னுரித்தன்று
நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்
வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே
கழுதிற் சேணோ னேவொடு போகி
யிழுதி னன்ன வானிணஞ் செருக்கி

நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பி
னெறிகெடக் கிடந்த விரும்பிண ரொருத்தி
னிருடுணிந் தன்ன வேனங் காணின்
முளிகழை யிழைந்த காடுபடு தீயி
னளிபுகை கமழா திறாயினிர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்க்
குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி
மிகுத்துப் பதங்கொண்ட பரூஉக்கட் பொதியினிர்
புட்கை போகிய புன்றலை மகாரோ
டற்கிடை கழித லோம்பி யாற்றநு
மில்புக் கன்ன கல்லளை வதிமி
னற்சேர்ந் தல்கி யசைத லோம்பி
வான்கண் விரிந்த விடிய லேற்றெழுந்து
கானகப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயங்கண் டன்ன வகன்பை யங்கண்
மைந்துமலி சினத்த களிறுமத னழிக்குந்
துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி
யிகந்துசேட் கமழும் பூவு முண்டோர்
மறந்தமை கல்லாப் பழனுமூ ழிறந்து
பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னு
ரிருங்கால் வீயும் பெருமரக் குழாமு
மிடனும் வலனு நினையினிர் நோக்கிக்
குறியறிந் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்

கூடியத் தன்ன குரல்புணர் புள்ளி
ளுடைகா ணனந்தலை மென்மெல வகன்மின்

மாநிழற் பட்ட மரம்பயி லிறும்பின்
ஞாயிறு தெரூஅ மாக நனந்தலைத்
தேஎ மருளு மமைய மாயினு
மிரூஉ வன்சிலையர் மாதேர்பு கொட்குங்
குறவரு மருளுங் குன்றத்துப் படினே
யகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென
வியங்க லோம்பிநு மியங்க டொடுமின்
பாடி னருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவ ருளரே
நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
யுண்டற் கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
யூறு நிரம்பிய வாறவர் முந்துற
நும்மி னெஞ்சத் தவலம் வீட
விம்மென் கடும்போ டினியி ராகுவி
ரறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு
குறியவு நெடியவு மூழிழிபு புதவோர்
நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்

தலர்தாய வரிநிழ லசைஇனி திருப்பிற்
பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ
கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறு
மருவி *நுகரும் வானர மகளிர்
வருவிசை தவிரா து வாங்குபு குடைதொறுந்
தெரியிமிழ் கொண்டநு மியம்போ லின்னிசை
யிலங்கேந்து மருப்பி னினர்பிரி யொருத்தல்
விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்
சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளி
னெய்தெற விழுக்கிய கானவ ரழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பி
னெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாட

* நுகக்குமென்றும் பாடம்.

2

றலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமா ரிடூஉ மேமப் பூசல்
கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி

வலிக்குவரம் பாகிய கணவ னோம்பலின்
னொண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்குகுரல்
கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
யருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை
†நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்
பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்ளை
யருங்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட்செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை
நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன
கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்
துரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை
யொலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறுங்
கிளிகடி மகளிர் விளிபடு பூச
லினத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை

மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரொ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொரூஉங் கல்லென் கம்பலை
காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி
வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழ
மூண்டுபடு மிச்சிற்காழ் பயன்கொண்மார் கன்று

† நிலைபுணர்ந்திட்டவென்றும் பாடம்

கடாஅ வுறுக்கு மகாஅ ரோதை
மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனக்
கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமுந்
தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையுஞ்
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பு
மென்றிவ் வனைத்து மியைந்தொருங் கீண்டி
யவலவு மிசையவுந் துவன்றிப் பலவுட
னலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்பக்
குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர்
முழவுத்துயி லறியா வியலு ளாங்கண்

விழவி னற்றவண வியன்கண் வெற்ப
கண்ண் டண்ணெனக் கண்டுங் கேட்டு
முண்டற் கினிய பலபா ராட்டியு
மின்னும் வருவ தாக நமக்கெனத்
தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்
செருமிக்குப் புகலுந் திருவார் மார்ப
னுருமுரறு கருவிய பெருமலை பிற்பட
விறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்
மைபடு மாமலை பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி
தூஉ யன்ன துவலை துவற்றலிற்
றேஎந் தேருக் கடும்பரிக் கடும்பொடு
காஅய்க் கொண்டநும் மியந்தொய் படாமற்
கூவ லன்ன விடரகம் புகுமி
னிருங்க லிகுப்பத் திறுவரை சேராது
குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து
நின்று நோக்கினுங் கண்வாள் வெளவு
மண்கணை முழவின் றலைக்கோல் கொண்டு
தண்டு காலாகத் தளர்த லோம்பி
யூன்றினிர் கழிமி னூறுதவப் பலவே
யயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை

வெயில்புறந் தரூஉ மின்ன வியக்கத்துக்
கதிர்சினந் தணிந்த வமையத்துக் கழிமி
னுரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு
புரைதவ வுயரிய மழைமருள் பஃறோ
லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய
பின்னி யன்ன பிணங்கரி னுழைதொறு
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோ
லின்னிசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணு மோம்பிக்
கைபிணி விடாது பைபயக் கழிமின்
களிறு மலைந்தன்ன கண்கூடு துறுகற்
றளிபொழி கானந் தலைதவப் பலவே
யொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே
யின்புறு முரற்கைநும் பாட்டுவிருப் பாகத்
தொன்றொழுகு மரபினும் மருப்பிகுத்துத் துனைமின்
பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்
செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்

கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை
ஒட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
யோம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே
மேம்பட வெறுத்தவன் றொழிறிணை மூதா
ராங்கன மற்றே நம்ம னோர்க்கே
யசைவுழி யசைஇ யஞ்சாது கழிமின்
புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கான மொழிந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த

மலைபடுகடாம்.

வளையான் றீம்பான் மிளை சூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்

கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும்
பல்பாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலும் விதவையும் பண்ணுற பெறுகுவிர்
துய்மமயி ரடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்
கூப்பிடு கடக்குங் கூர்ங்கல் லப்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணிற்
படியோர்த் தேய்த்த பணிவி லாண்மைக்
கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
யோம்புந ரல்ல துடற்றுந ரில்லை
யாங்குவியங் கொண்ம்மி னதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅ மெல்லிணரு
மும்ப லகைத்த வொண்முறி யாவுந்
தளிரொடு மிடைந்த காமர் கண்ணி
திரங்குமர னாரிற் பொலியச் சூடி
முரம்புகண் ணுடைந்த நடவை தண்ணென
வுண்டனி ராடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொ ளரிசி விதவை சொரிந்த
சுவல்விளை நெல்லி னவரையம் புளிங்கூ
ழற்கிடை யுழந்தநும் வருத்தம் வீட
வகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய

புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி
வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை
தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக
வசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்

மலைபடுகடாம்.

விசையங் கொழித்த பூழி யன்ன
வுண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்
புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்
புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த வூர்தொறு நல்லியாழ்ப்
பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினு
நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே
*கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த விருஞ்சுவல் வாளை
நிலையோ ரிட்ட நெடுநாண் றூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅற்
றுடிக்க ணன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்

ஞெண்டாடு செறுவிற் றாய்க்கண் வைத்த
விலங்க லன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேற
விளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும்
பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்
திண்டோர் நன்னற்கு மயினி சான்மெனக்
கண்டோர் மருளக் கடும்புட னருந்தி
யெருதெறி களமரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்
வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்க ணெருமை யினம்பிரி யொருத்தல்
கணைசெலன் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி
வணைகலத் திகிரியிற் குமிழி சுழலுந்
துணைசெலற் றலைவா யோவிறந்து †வரிக்குங்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்

* சண்புமலி, காண்புமலியென்றும் பாடம்.

† பணிக்குமென்றும் பாடம்.

மலைபடுகடாம்.

யாண் டொருகரைக் கொண்டனிர் கழிமி
னிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ வறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத்
தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென
விகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு
மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரு
நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்
பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கு மொள்வாண் மறவர்
கருங்கடை யெஃகஞ் சாத்திய புதவி
னருங்கடி வாயி லயிராது புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி
வந்தோர் மன்ற வளியர் தாமெனக்
கண்டோ ரெல்லா மமர்ந்தினி தினோக்கி
விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட

வெரிகான் றன்ன பூஞ்சினை மாஅத்த
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
ஊமை யெண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தக
ரவுக்குறும் பெறிந்த சிறுகட் டீர்வை
யளைச்செறி யுழுவை கோளூற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
யரக்குவிரித் தன்ன செந்நில மருங்கிற்
பரற்றவ ழுடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் தியலு மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரற் சேவல்
கானப் பலவின் முழவுமருள் பெரும்பழ

மிடிக்கலப் பன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரந்
தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி
காஅய்க் கொண்ட நுகமரு ளூறை
பரூஉப்பளிங் குதிர்த்த பலவுரு திருமணி
குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்

வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்த
ளாகந் திலக நறுங்கா ழாரங்
கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்
கானிலை யெருமைக் கழைபெய் தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லு நெய்க்க ணிறாஅ
லுடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்துங்

குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டுழுவத்துக் கயவாய் கடுப்ப

நோனாச் செருவி னெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வளமலி யானைத்
தாதெருத் ததைந்த முற்ற முன்னி
மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிட மிமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்றா நல்லிசைச் சென்றோ ரும்ப
லின்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
விடைத்தெரிந் துணரும் பெரியோர்

மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்மலோயென
வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்
சென்றது நொடியவும் விடாஅ னசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்

பொருமுர ணெதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்ற மணுகல் வேண்டிக்
கல்லெ னொக்க னல்வலத் திரீஇ
யுயர்ந்த கட்டி லுருப்பில் சுற்றத்
தகன்ற தாயத் தஃகிய நுட்பத்
திலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை யிழிதரு நீத்தஞ்சா லருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவா ழெக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி துவந்த
வுள்ளமொ டமர்ந்தினிது நோக்கி

யிழைமருங் கறியா நுழைநூற் கலிங்க
மெள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவ றந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லி னரிசி முட்டாது
தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பி னும்முட்
டலைவன் றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழங்
கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமோ டனைத்து
மிலம்படு புலவ ரேற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்
வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெமரென
மழைசுரந் தன்ன வீகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றுங்
குன்றுசூ ழிருக்கை நாடுகிழ வோனே.

இதன்பொருள்.

1 - 2. திரு மழை தலைஇய இருள் நிற விசும்பின் விண் அதிர் இமிழ் இசை கடுப்ப—செல்வத்தையுண்டாக்கும் மழையைப்பெய்த இருண்டநிறத்தையுடைய மேகத்தினது ஆகாயத்திடத்திலேநின்று முழங்குமோசையை யொப்ப,

நடுக்கங்கூறவே மிக்கவொலியென்றாயிற்று.

விசேடக்குறிப்பு. திரு - செல்வம்; "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே, யெடுப்பதூஉ மெல்லா மழை" என்பது இங்கே அறி யற்பாலது. தலையல் - மழைபெய்துவிடுதல்; "தலைய லென்பது மழை பெய்து விடுதல்"—திவாகரம்; "தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானம்" (திருமுருகு. கூ) அதிர்தல் - நடுங்குதல். இவற்றுள் முதலாவதடி, ஆசிரியப்பா வில் நாற்சீரடிவருமென்பதற்கும் அளவடியில் முடுகியலடிவருமென்பதற் கும் உதாரணமாக எடுத்துக்காட்டப்பெற்றது; (தொல். செய். நஉ, சுஎ - ம் சூ - உரை.)

2 - 3. பண் அமைத்து திண் வார் விசித்த முழவொடு—பண்களைத் தன் கண்களிலே உண்டாக்கப்பட்டுத் திண்ணிய வாரராலே இறுகவலித்த மத் தளத்தோடே,

"இடக்க ணிளியா வலக்கண் குரலா - நடப்பது தோலியற் கருவி யாகும்" என்பகனுற் பண்ணமைத்தென்றார்.

வி - பு. கண் - அடிக்கும்பக்கம். விசித்தல், வலித்தல் - இழுத்து

இறு கக் கட்டுதல். முழவொலிக்கு மேகத்தினொலி உவமையாதல், இந்நூலிற் பின்வந்துள்ள, "மழையெதிர் படுகண் முழவுகண் ணிகுப்ப" (532) என்பதனாலும் விளங்கும். இளி பஞ்சமமென்றும், குரல் ஷட்ஜமென்றும் வழங்கும்.

3. ஆகுளி—சிறுபறையும்,

4. நன் உருக்குற்ற விளங்கு அடர் பாண்டில்—கரைய உருக்குதலுற்ற விளங்கின தகடாகத்தட்டின கஞ்சதாளமும்,

வி - பு. அடர் - தகடு. பாண்டில் - வட்டம் ; தாளத்திற்கு ஆகுபெயர். "பாண்டில்பண்கனிய" சீவக. (3138.) கஞ்சதாளம் - வெண்கலத்தாளம்.

5. மின் இரு பீலி அணி தழை கோட்டொடு—விளங்குகின்ற கரிய பீலியாகிய அழகினையுடைய தழையைக்கட்டின கொம்போடே,

வி - பு. பீலியைத் தழையென்ற வழங்குவதுமுண்டு. கோடு - கொம் பென்னும் வாத்தியம்.

6. கண் இடை விடுத்த களிற்று உயிர் தூம்பின்—கண்களினடுவே வெளியாகத்திறந்த யானையின்கைபோலும் நெடுவங்கியத்தோடே,

உயிர் - ஆகுபெயர்; இனி யானை நெட்டுயிர்ப்புக்கொண்டாற்போலும் ஓசையையுடையவென்றுமாம்.

வி - பு. கண் - கணு ; "கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்" என்பது (புறநா. 152.) தூம்பு - துளையையுடையவாத்தியம். உயிர்த்தலை

யுடைய மூக்காகஇருத்தலின், யானைக்கை உயிரெனப்பட்டது ;

யானைக்கை

மூக்கென்றும் வழங்கும்; "நெடுமூக்கிற் கரியினுரி மூடிக் கொண்டார்" (தேவாரம்). நெடுவங்கியம் பெருவங்கியமென்றும் வழங்கும் 'களிற்றுயிர்ப் புத்தூம்பின்' எனவும் பாடம்.

7. இளி பயிர் 'இம்ரும் குறு பரம்

தூம்பொடு—இளியென்னும்நரம்பி னுடைய ஓசையைத் தானொலிக்கும் குறிய மேலாகிய தூம்போடே,

இது குறுந்தூம்பு. பயிர் - தழைத்தல்.

வி - பு. நரம்பு - யாழ்நரம்பு. பயிர் - தழைத்த ஓசைக்காயிற்று. குறுந் தூம்பு - ஒருவனகவாத்தியம்.

8. விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ—பாட்டைச் சுருதிகுன்று மற் கைக்கொண்டுநிற்கும் இனிய குழலும் நெருங்கப்பட்டு,

வி - பு. விளிப்பது - பாடுவது; "கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணாய்" (மணிமேகலை, ச - ம் காதை, கடு); "விளியாதான் கூத்தாட்டு" (திரிகடுகம்.) குழல் - புல்லாங்குழல்.

9. நடுவு நின்று இசைக்கும் அரி குரல்

தட்டை—கண்களுக்குநடுவே நின்றொலிக்கும் நரம்பின்ஓசையையுடைய கரடிகையும்,

இனித் தாளமானத்திடையே நின்றொலிக்கும் அரித்தெழுகின்ற ஓசை யையுடையவென்றுமாம்.

வி - பு. அரி - நரம்பு. 'கரடிகத்தினொற்போலும் ஓசையையுடைத்தாத லின், இது கரடிகையென்று பெயர்பெற்றது' என்பர், அடியார்க்குநல்லார். கண்கள் - கணுக்கள்; இவ்வாத்தியம் மூங்கிலாற்செய்யப்படுவதாதலாற் கண் களுக்கு நடுவென்றார். தாளமானம் - தாள அளவு.

10. கடி கவர்பு ஒலிக்கும் வல் வாய்

எல்லரி—விளக்கத்தையுடைத் தாகிய தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் வலிய வாயையுடைய சல்லியும்,

வி - பு. கடி - விளக்கம் ; ஆகுபெயரால் தாளத்திற்குப் பெயராயிற்று. கவர்பு - கவர்ந்து. சல்லி - சல்லிகையெனவும் வழங்கும்.

11. நொடி தரு பாணிய பதலையும்—மாத்திரையைச்சொல்லும் தாளத் தையுடைய ஒருகண்மாக்கிணையும்,

11. பிறவும்—கூறு தவாச்சியங்களும்,

வி - பு. நொடி - மாத்திரை. பாணி - தாளம். தருதல் - ஈண்டு, தெரி வித்தல். பதலை, ஒருகண்மாக்கிணையென்பன ஒருபொருட்சொற்கள் ; அப் பறை ஒருகண்ணுடைமையை, " பதலை யொருகண் பையென வியக்குமின் " (புறநா. 152.) என்பதனுலுணர்க. கூறு தவாச்சியங்களாவன : பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தடாரி, அந்தரி, சந்திரவளையம், மொந்தை, நிசாளம், துடுமை, தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, பெரும்பறை, துடி என்பன.

12. கார் கோள் பலவின் காய் துணர் கடுப்ப—கார்காலத்தாலே பழுத் தலையுடைய பலாவினது காயை மிகவுடைய தொத்தையொப்ப,

வி - பு. துணர், தொத்து - கொத்து.

13. நேர் சீர் சுருக்கி காய கலப்பையிர்—தம்மிலொத்த கனத்தை யுடையவாகக் கட்டிக் காவின வாச்சியமுட்டுக்களையுடைய பையையுடை யிராய்,

வி - பு. சீர் - கனம். காய, காவின - தோளிற்சுமந்த ; கா - தோட்

சுமை. கலப்பை, கலத்தையுடையபை ; கலம் - வாச்சியங்கள் ; "காவினங் கலனே சுருக்கினங் கலப்பை " (புறநா. 206., வாத்தியத்தொகுதிகளை மூட் டென்றல் மரபு. இந்நூலாசிரியர், பலாக்காய்க்குலைக்கு முழவின் தொகுதி களை உவமைகூறுவர்பின் ; கசஙு - சு - ம் அடிகளைப்பார்க்க.

முழவோடே ஆகுளியும் (ங) பாண்டிலும் (சு) கோட்டொடும் (ஞ) தூம்பொடும் (கூ) குறுந்தூம்பொடும் (எ) தட்டையும் (க) எல்லரியும் (க0) பதலையும் பிறவும் (கக) தீங்குழலும் நெருங்கப்பட்டு (அ) அவற்றைச் சுருக்கிக் காயகலப்பையி (கங) ரென்க.

14. கடு கலித்து எழுந்த கண் அகல் சிலம்பில்—கடுமரம் மிக்கு வளர்ந்த இடமகன்ற பக்கமலையில்,

வி - பு. கடுமரத்தின்காய், கடுக்காய்.

15. படுத்து வைத்தன்ன பாறை மருங்கில்—படுத்துவைத்தாற்போன்ற ஒத்தநிலமாகிய கற்பாறையின்பக்கத்தில்,

வி - பு. படுத்தல், தளவரிசையென இக்காலத்து வழங்கும்.

16. எடுத்து நிறுத்தன்ன இட்டு அரு சிறுநெறி—நிலத்தே கிடக் கின்றவழியை எடுத்துநிறுத்தினாற்போன்ற இட்டிய அரிய சிறியவழியை,

வி - பு. இட்டிய - நுண்ணிய. இப்படியே மலையில் செங்குத்தான இடத்தில் தோன்றும் சிறுவழியை, " செல்வர் மனத்தினோங்கி,. . . . . சிறியார் கொண்ட தொடர்பிற் செல்லச்செல்ல வஃகுநெறி " என்றார் சிந்தாமணி யிலும் ; 1416.

17. தொடுத்த வாளியர் துணை புணர் கானவர்—தொடுத்த அம்பினை யுடையராய்த் தம்மனைவியரோடு கூடியிருக்கின்ற கானவர்,

வி - பு. துணை - மனைவி ; ' துணை புணர்கானவர் ' என்பதில் துணை யென்பது, " ஏவ விளையர்தாய் " என்பதுபோனின்றது.

18 [இடுக்கண் செய்யா தியங்குந ரியக்கும் :] இயங்குநர் இடுக்கண் செய்யாது இயக்கும்—வழிபோவாரை வருத்துதலைச்செய்யாமல் வழிபோக் கும்,

வி - பு. வழிச்செல்வோருக்கு இடுக்கண்செய்வோராகிய கானவரும் இடு க்கண்செய்யாமல் வழிகாட்டியனுப்புகின்றார்களென் றதனால், நன்னனுடைய நீதிபுலப்படுகின்றது ; இதனுடன், " அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக், கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடி

* இந்த இயைபிலிசைக்குறிக்கு உட்பட்டஎண்ணும் இப்படியே ஆங்காங்குள்ள எண்களும் தத்தம் முன்புள்ளமொழிகளையேனும் அம்மொழிகளைப் பொருளாகப்பெற்ற மொழிகளையேனுமுடைய மூலத்தின்வரியைப் புலப்படுத்தும்.

யுடை வியன்புலம் " (பெரும்பாணாறு, ௩௯ - ௪௧) என்பது ஒப்புநோக்கற்பாலது.

19 - 20. [அடுக்கன் மீமிசை யருப்பம் பேணா, திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகி :] அடுக்கல் மீமிசை இடி சுரம் நிவப்பின் இயவு அருப்பம் பேணாது கொண்டொழுகி—மலையிடத்து மிக்கவுயர்ச்சியிற் கல்லையிடித்த அருநிலத்தில் உயர்ந்தவழியைப் போதற்கரிதாகக்கருதாதே போதக்கடவே மென்று நெஞ்சாலேகொண்டுநடந்து,

கல்லையிடித்து ஆக்கியவழி.

வி - பு. அருப்பம் - அருமையையுடையது; இயவு - வழி.

14 - 20. சிலம்பிற் பாறைமருங்கிற் சிறுநெறியைக் கானவர்போக்குஞ் சுரத்தில் இயவுக்கொண்டொழுகியென்க.

21. தொடி திரிவு அன்ன தொண்டு படு திவவின்—தொடியினது உறழ்ச்சியையொத்த உறழ்ச்சியையுடைய ஒன்பதென்னுமெண்ணுண்டான வார்க்கட்டினையும்,

வலித்தல் மெலித்தல் செய்யவேண்டுதலின், உறழ்ச்சிகூறினார்.

வி - பு. தொடி - மகளிர் அணிந்துகொள்ளும் ஒருவகைவளை; நெகிழ வேண்டியஇடத்து நெகிழ்ந்தும் இறுகவேண்டியஇடத்து இறுகியுமுள்ளதாதலின், தொடிக்குத் திரிவுகூறினர்; "மடந்தை முன்கைக் குறுந்தொடி யேய்க்கு, மெலிந்து வீங்குதிவவு" (பெரும்பாணாறு - கஉ - ௩.) மாயோண் முன் கை யாய்தொடி கடுக்குங், கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவு" (பொருநராறு. கசு - ௫) தொண்டு - ஒன்பது உறழ்ச்சி - மாறுபாடு.

22 - 4. [கடிப்பகை யனைத்துங் கேள்வி போகாக், குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பி, னரலை தீர வுரீஇ :]

22. கேள்வி அனைத்தும் போகா—நூற்கேள்வி அடைய முற்றுப் பெற்று,

22, 24. கடிப்பகை அனைத்தும் அரலை தீர உரீஇ—வெண்சிறுகடு களவும் கொடும்பில்லையாம்படி தீற்றி,

முடங்கிப் பரற்றன்மையாயிருத்தலிற் கொடும்பை அரலையென்றார்.

அரலை - குற்றமுமாம். இனி வெண்சிறுகடுகளவும் கேள்விதப்பாதென் பாருமுளர்; அது வடிவிற்குவமையாதலிற் பொருந்தாது.

23. குரல் ஓர்த்து தொடுத்த சுகிர் புரி நரம்பின்—ஓசையை

ஓர்ந்து பார்த்துக் கட்டின வடித்துமுறுக்கின நரம்பினையும்,

கேள்விபோகா உரீஇத் தொடுத்த நரம்பென்க.

வி - பு. பேய்க்குப்பகையாதலின்; வெண்சிறு கடுகு கடிப்பகை யெனப்பட்டது அனைத்துமென்பது கடிப்பகையோடும் கேள்வியோடும் இயையும். சுகிர்தல் - வடித்தல். கொடும்பு - கொடுமுறுக்கு. அரலை - சிறியகல். உரீஇ, தீற்றி - உருவி.

24 - 5. வரகின் குரல் வார்ந்தன்ன நுண் துளை இரீஇ—வரகின் கதிர் ஒழுகின தன்மைத்தாக நெருங்கின நுண்ணிய துளைகளையிருத்தி,

௬௨. மலைபடுகடாம்.

இது, பொல்லம்பொத்துமிடத்திற்றுளை. *" பரியவைக் கமுகின் பாளை யம் பசும்பூக், கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை " என்றார் பிறரும்.

வி - பு. வரகு - ஒருவகைப்பயிர். குரல் - கதிர். வார்தல், ஒழுகுதல் - நீளுதல். பொல்லம் பொத்தல் - இரண்டுதலைப்பையும்கூட்டித்தைத்தல். " பரி யவை....... ..துளை " என்பதன்பொருள். பரியவை கமுகின் - பரிய தாளினை யுடைய கமுகினது, பாளை அம் பசு பூ - பாளையாகிய அழகினையுடைய பசியபூ, கரு இருந்தன்ன - விரியாமற் கருவாயிருந்தாலொத்த, கண்கூடு செறி துளை - இரண்டுகண்ணுங்கூடின செறிந்ததுளை.

26 - 9. [சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி, யிலங்குதுளை செறிய வாணி முடுக்கிப், புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப், புது வது போர்த்த பொன்போற் பச்சை :]

27. இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி—விளங்குகின்ற துளைகணிரம்பும்படி சுள்ளாணிகளை இறுகத்தைத்து,

28. புதுவது வெண்கை புனைந்த யாப்பு அமைத்து—புதிதாக யானைக் கொம்பாற் செய்த யாப்பை அமையப்பண்ணி,

யாப்பு - பத்தலிற் குறுக்கே வலிபெற ஒட்டுவது.

வி - பு. இவ்வடி, வினையெச்சம் அகர ஈறன்றிப் பிற ஈறுகளால் முடிக்குஞ்சொல்லை விசேடித்துவருதற்குக் காட்டிய மேற்கோள்களுள் ஒன்று; (தொல். வினை. ௩௪ - ம் சூ. ௩ - உரை.)

26, 29. சிலம்பு ஏுமை பத்தல் பசையொடு சேர்த்திப் புதுவது போர்த்த பொன்போல் பச்சை—ஒலித்தலமைந்த பத்தலிலே பற்றோடேகூட்டிப் புதிதாகப்போர்த்த பொன்னிறம்போலும் நிறத்தையுடைய தோலினையும்,

வி - பு. சுள்ளாணி - மெல்லிய ஆணி. கை - ஒருறுப்பு. 'வெண்கை' என்றதனால், யானைக்கொம்பென்றாயிற்று. பத்தல் - யாழின் ஒருறுப்பு. சில ம்பு, முதனிலைத்தொழிற்பெயர். பசை, பற்று - பிசின்.

24 -). இரீஇ முடுக்கி அமைத்துச் சிலம்புதலமைந்த பத்தலிலே போர்த்த பச்சையென்க.

30 - 31. [வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால், மடந்தை :]

30, 31. வண்டு வதுவை நாறும் ஐம்பால் மடந்தை—தன்னிடத்திருந்த வண்டு கலியாணம்செய்தமகளுடைய நாற்றத்தைநாறுதற்குக் காரணமான மயிரினையுடைய மடந்தை,

வதுவைக்கு எல்லாமணமும் உளவாதல்பற்றி வதுவைநாறுமென்றார்.

வி - பு. உத்தமசாதி மகளிர்கூந்தலுக்கு இயல்பான மணமுண்டென் பதை, "அரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே" (குறுந்தொ கை, ௨) என்பதனாலும் அறிக. ஐம்பால் - ஐந்துவகையாக முடித்தற்குரியது.

30. கமழ் ஐம்பால்—இயல்பான மணத்தையுடைய ஐம்பால்,

31 - 2. [மாண்ட நடங்கெழி லாகத், தடங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப :] எழில் நடங்கு மடந்தை மாண்ட ஆகத்து அடங்கு மயிர் ஒழுகிய

* பெரும்பாணாற்றுப்படை, எ - அ.

அவ்வாய் கடுப்ப—அழகு கட்புலனாகின்றசையும் மடந்தையது மாட்சிமைப் பட்ட மார்பிடத்தே சென்று பின்பில்லையான மயிர் ஒழுங்குபட்டுக்கிடக்கின்ற அழகிய வயிற்றிடத்தையொக்க,

வி - பு. எழிலை - இலாவணியமென்பர். வாய் - இடம்.

33 - 4. அகடு சேர்பு பொருந்தி அளவினில் திரியாது கவடு பட கவைஇய சென்று வாங்கு உந்தி—பொல்லம்பொத்துதல் நடுவே சேரப்பட்டுக் கட்கினிதாய்த் தனக்குக் கூறுகின்ற அளவிலே வேறுபடாமற் பகுத்த லுண்டாக அகத்திட்ட உயர்ந்துவளைந்த உந்தியினையும்,

உந்தி - யாழுறுப்பு ஒருறுப்பு.

வி - பு. அகடு - நடு. கவைஇய - உட்கொண்ட. வாங்குதல் - வளைதல்.

35 - 7. நுணங்கு அரம் நுவறிய நுண் நீர் மாமை களங்கனி அன்ன கதழ்ந்து இளர் உருவின் வணர்ந்து எந்து மருப்பின் வள் உயிர் பேரியாழ்— நுண்ணிய அரத்தாலே அராவின நுண்ணியநீர்மையினையுடைய கரியநிறத் தாலே களம்பழத்தினிறத்தை ஒத்தனவாய்க் கடுகித்தோன்றுகின்ற நிறத்தை யுடைய வளைந்தேந்தின

கோட்டினையுமுடைய பெரிய ஓசையினையுடைய பேரியாழ்,

வி - பு. மாமை - கரியநிறம். களம்பழம் இயல்பாகவே மிகவும் கரு நிறமுடையதென்பதை, "களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்", 'காக்

கையிற் கரிது களம்பழம்' என்பவற்றாலும் அறிக. "களங்கனி யன்ன கருங் கோட்டுச் சீறியாழ்" (புறநானூறு, உ௨எ, ௧௪௫.) வணர்தல் - வளைதல். உயிர் - ஒலி ; "வள்ளுயிர்த் தெள்விளி" (100) என்னும் குறிஞ்சிப்பாட்டும், 'பெரிய ஓசையினையுடைய தெளிந்தசொல்' என்னும் அதனுரையும் இங்கே அறிதற்பாலன. பேரியாழ், நால்வகையாழினுள் ஒன்று.

திவவினையும் (உக) நரம்பினையும் (உ௩) பச்சையினையும் (உ௯) உந்தி யினையும் (௩௪) மருப்பினையுமுடைய பேரியாழ் (௩எ) என்க.

38. [அமைவரப் பண்ணி யருணெறி திரியாது :] பேரியாழ் (௩எ) அருள் நெறி திரியாது அமைவர பண்ணி—பேரியாழைத் தனக்கு நூலிற் கூறிய வழிகளைத் தப்பாதபடி பொருந்துதல்வரச் சமைத்து,

வி - பு. அருளுதல் - கூறுதல்; 'திருவாய்மலர்ந்தருளிய' என்னும் வழக்காலுமுணர்க. அமை, முதனிலைத்தொழிற்பெயர் ; பொருந்துதல்.

39 - 40. இசை பெறு திருவின் வேந்தவை ஏற்ப துறைபல முற்றிய—இசையை எக்காலமுங்கேட்கின்ற செல்வத்தினையுடைய அரசர்களுடைய அவைக்களத்தே அவர்கள் செவிகொள்ளும்படி தாம்வாசிக்குந்துறைகள் பலவற்றையும் வாசித்துமுடித்த,

40. பை தீர் பாணரொடு—பசுமையற்ற பாணரோடே,

என்றது :— கல்வி முதிர்ந்தமையின், இளமையற்ற பாணரென்றவாறு.

வி - பு. இசைபெறுவேந்து, திருவின்வேந்து என இயைத்துப் பொருள் கொள்க ; இசைகேட்டலாகிய செல்வத்தையுடைய வேந்தெனக்கொள்ளினும் பொருந்தும். 'துறைபல' என்றது வலிவு,

மெலிவு, சமமென்னும் மூன்று

தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழுதானமுடித்துப்பாடும் இருபத்தொருபாடற் றுறைகளை; இதனை "மூவேழ் துறையு முறையுளிக் கழிப்பி" என்னும் புறநானூற்றாலும் (152) அதனுரையாலுமறிக. பசுமை இளமை. கல்வி மூதிர்ந்தமையின் இளமையற்றபாணரென்றது ஆண்டினிளைஞராயினும் அறிவின்முதியரென்றபடி; இஃது, "ஒருகுடியிற், கல்லாத மூத்தோனைக் கைவிட்டுக் கற்ற, னிளமைபா ராட்டு முலகு" (நான்மணி. சுகு.) "ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு, மூத்தோன் வருக வென்னா தவரு, ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்" (புறநா. கஅங) என்பவற்றைத் தழுவி விளங்குகின்றது.

41. உயர்ந்து ஓங்கு பெருமலை ஊறு இன்று ஏறலின்—உயர்ந்துவளர்ந்த கற்கள் தம்மிற்றொடரும் பெரியமலைகள் வேறோரிடையூறின்றாக ஏறி வருகையினாலே,

42 - 3. [மதந்தபு ஞமலி நாவி னன்ன, துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடி :] துளங்கு இயல் மெலிந்த மதம் தபு ஞமலி நாவின் அன்ன கல் பொரு சீறடி—அசைகின்ற இயல்பினையுடைய இளைத்த வலிகெட்ட நாயினது நாவினையொத்த கல்லுப்பொருகின்ற சிறிய அடியினையும்,

றெலின் மெலிந்த அடியென்க.

வி - பு. தபுதல் - கெடுதல். நாவின் - இன்சாரியை. மாதர்

அடிக்கு ஓடியிளைத்த நாயின்நா உவமையாதலே, "வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி" (பொருந. 42), "உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ, வயங்கிழை யுல றியவடி" (சிறுபா. 17 - 8), "வருந்துநாய் நாவி னன்ன மலரடி" (கூர்ம புராணம், இராமன் வைகுந்தமடைந்தவத்தியாயம், 28) என்பவற்றிலும் காண்க.

44 - 6. [கணங்கொ டோகையிற் கதுப்பிருத் தசைஇ, விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத், திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்ற :]

45. விலங்கு மலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து—மானோடு மாறு பட்டுப் பொருந்தின செவ்வரியையுடைய கண்ணினையும்,

46. இலங்கு வளை விறலியர்—விளங்குகின்ற வளையினையுமுடைய விறல்படப்பாடியாடுவார்,

44, 46. கணம் கொள் தோகையின் கதுப்பு இருத்து அசைஇ நின் புறம் சுற்ற—திரட்சியைக்கொண்ட மயில்போலே மயிரைத்தாழ்த்து இளைத்து நின்னைப் புறத்தே சூழ,

வி - பு. விலங்கு - மிருகம்; கண்ணுக்கு உவமையாகவருதலின்மானாயிற்று. மலைத்தல் - மாறுபடுதல்; "சிலைத்தா ரகல மலைக்குந ருளரெனின்" (புற. 61.) விறல் - சத்துவம்; அஃதாவது மெய்ப்பாடு. கணம், திரட்சி - கூட்டம். கதுப்பு - கூந்தல். இருத்தல் - தாழ்த்தல். "இருத்த கண்ணீர்" (புற. 143.) மகளிர்கூந்தற்கு மயிற்றோகை உவமையாதலே. "கதுப்பென, மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன், மயின்மயிற் குளிக்கும்" (சிறுபா. 14 - 6.) என்பதனாலும், சிந்தாமணி எக - ம் செய்யுளாலும் உணர்க. இந்தப்

பகுதியைப் பொருளானந்தத்திற்கு உதாரணமாகக்காட்டினர், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர்.

அடியினையும் (சஙு) நாட்டத்தினையும், (சரு) வளையினையுமுடைய விறலியர் (சசு) கதுப்பிகுத்து அசைஇச் (சஎ) சுற்றத் (சஅ) தென்க.

47 - 8. [கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற், புனல்கால் கழீஇய மணல்வார் புறவில் :]

48. புனல் கால்கழீஇய மணல் வார் புறவில்—பெருகுநீர் துராலை வாரிக்கொண்டுபோன மணல் ஒழுங்கு பட்ட சிறுகாட்டிடத்தில்,

47. கயம் புக்கன்ன பயம் படு தண் நிழல்—குளத்திலே புகுந்தாலொத்த பயனைத்தருகின்ற குளிர்ந்த நிழலிலே,

வி - பு. இப்படியே மரநிழலுக்குக் கயம், " கயங்கண் டன்ன... ...பெரு மரக் குழாமும் " (உருக - சுரு) என இந்நூலுள்ளே பின்னும் வருதல்காண்க. துரால் - குப்பை. வார்தல் - ஒழுங்குபடுதல்.

49 - 50. [புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக், கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ :]

49, 50. புலம்பு விட்டிருந்த காட்சி கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ—வழிவந்தவருத்தத்தைக் கைவிட்டிருந்த அறிவினையுடைய பேரணி கலங்களைப்பெறுங் கூத்தருடைய சுற்றத்திற்குத் தலைவனே,

49 - 50. புனிறு இல் ஒக்கல்—ஈன்றணிமையில்லாத சுற்றம், என்றது பிள்ளையைப்பெற்றவர்கள் பிள்ளையைக்கொண்டு கூடவந்திலர் களென்றவாறு.

வி - பு. புலம்பு-வருத்தம். காட்சி-அறிவு. கண்ணுளர்-கூத்தர்; 569-ம் அடிமுதலியனபார்க்க. 'புளிறில் ஒக்கல்' என்றது இங்கே விறலியரை.

கலப்பையிராய் (௩௫) இயவுக்கொண்டொழுகி (௨௦) யாழைப் (௩௭) பண்ணித் (௩௮) துறைபலமுற்றிய பாணரொடு (௪௦) விறலியர் புறஞ்சுற்றத் (௪௬) தண்ணிழலிலே (௪௭) யிருந்த (௪௯) கண்ணுளரொக்கற்றலைவனே (௫௦) யென வினைமுடிக்க.

கலப்பையிரென்னும் பன்மை தலைவனென்னுமொருமையோடு முடிந்தது; * "ஒருமை சுட்டிய" என்னுஞ் சூத்திரத்தால்.

வி - பு. "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி, பன்மைக் காகு மிடனுமா ருண்டே" என்பதன்பொருள்: 'ஒருமையைக்கருதிய பெயராகிய நிலைமையையுடையசொல், பன்மைக்குப் பொருந்திநிற்கும் இடமுமுண்டு' என்பது.

51 - 3. தூ மலர் துவன்றிய கரை பொரு நிவப்பின் மீமிசை நல் யாறு கடல் படர்ந்தாஅங்கு யாம் அவண் நின்றும் வருதும்—தூய பூக்கணெருங்கின கரையைப்பொருகின்ற ஒக்கத்தினையுடைய மலையுச்சியினின்றுமிழிந்த நல்லயாறு கடலைநோக்கிப்போனாற்போல யாம் அவனைநோக்கிச்சென்று சில பெற்றுவருகின்றேம்;

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ௬௫.

4

இனி மலையிற்பொருள்களை வாரிக்கொண்டு யாறு கடலைநோக்கிப்

போனாற்போல அவ்விடத்துள்ள பொருள்களை வாரிக்கொண்டு வருகின்றே

மென்றுமாம்.

வி - பு. நிவப்பு, ஒக்கம் - உயர்ச்சி. யாறு கடலைநோக்கிச்சேறலைக் கூத்தன் நன்னன்பாற் சென்றதற்கு உவமையாகக் கூறியது, "மலையி னிழிந்து மாக்கட னோக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போலப், புலவ ரெல்லா நின்னோக் கினரே" (புறநா. சஉ.) என்பதை ஒத்துநின்றது. "யாமவ ணின்றும் வருதும் நீயிரும்' என்பது, **பெரும்பாணாற்றுப்படையின்,** உஅ - வது அடியாகவும் வந்துள்ளது.

53 - 5. [நீயிருங், கனிபொழி கானங் கிளையொ டுணீஇய, துனை பறை நிவக்கும் புள்ளின மான :]

54 - 5. கனி பொழி கானம் கிளையொடு உணீஇய துனை பறை நிவக் கும் புள்ளினம் மான—பழங்களைச்சொரிகின்ற காட்டிற் பழங்களைச் சுற்றத் தோடே சென்றுதின்றற்கு விரைந்த பறத்தற்றொழிலிலேயோங்கும் பறவைத்திரளை யொக்க,

வி - பு. பறவையென்றது, வெளவால்களை ; இவ்வுவமை, "பழுமரந் தேரும் பறவை போல" (உ0). எனப் **பெரும்பாணாற்றுப்படையிலும்** வந் துள்ளது.

53. நீயிருமென்பது மேலே (சுஙி) கூட்டுதும்.

56 புனை தார் பொலிந்த வண்டு படு மார்பின்—கைசெய்த மாலையாற் பொலிவுபெற்ற வண்டுகளையுண்டாக்குகின்ற மார்பினையுடைய, கணவன் (ருஅ) என்க.

வி - பு. தார் - மார்பின்மாலை ; "வண்ண மார்பிற் றாருங் கொன்றை" (புறநா. கடவுள்.)

57. வனை புனை எழில் .... — ஓவியங்களிலே . .. . பண்ணின கைசெய்த அழகைத் தன்னிடத்தேயுடைய ....யும்,

57. வாங்கு அமை திரள் தோள்—வளைந்த மூங்கிலையொத்த

திரண்ட தோளினையும்,

58. மலர் போல் மழை கண் மங்கையர் கணவன்—பூப்போலும் குளிர்ச்சியையுடைய கண்ணினையுமுடைய கற்புடைமகளிர்க்குக் கணவன்,

வி - பு. குணமிகுதிபற்றித் தலைவன்மனைவியரைப்புகழக்கருதிய ஆசிரியர், மனிதருட் பெண்பாலாரைப்பாடுதல் சிறப்பன்றென்னும் விதிபற்றி, அவனோடு சார்த்தி, 'மங்கையர் கணவன்' என்றார்; இந்நூலுள், "கொடியோள் கணவன்" (௪௨௪) என வருவதும்அது. இதனை, 'மக்களுட் பெண் பால் பாடுதல் சிறப்பின்மையின், "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறநா - ௩) என்றாற்போலச் சிறுபான்மை ஆண்மக்களோடு படுத்துப்பாடுப' (தொல். பொரு. புறத். சூ. ௨௬ - ௩) என்பதனாலுணர்க; "ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ", "பாவை யன்ன நல்லோள் கணவன்" (பதிற். ௧௪, ௬௧) என்பனவும் அதைத்தழுவிவந்தவை.

59. முனை பாழ் படுக்கும் துன்னருந் துப்பின்—பகைப்புலத்தைப் பாழுண்டாக்கும் கிட்டுதற்கரிய வலியினையும்,

வி - பு. இவ்வடி, குறிஞ்சிப்பாட்டில், ௧௨௮ - ம் அடியாகவும் வந்துள்ளது

60. [இசைநுவல் வித்தி னசையே ருழவர்க்கு :] நுவல் இசை வித்தின் நசை ஏர் உழவர்க்கு—தாம் பிறரைக்கூறும் புகழாகிய விதையாலே பிறர்பொருள்களை நச்சுதலாகிய ஏருழவினையுடைய பரிசிலர்க்கு,

என்றது புகழைவித்திப் பொருளை யெடுப்பரென்றவாறு.

வி - பு. இவ்வடியின்பொருள், "உரவோன் செவிமுதல், வித்திய பனுவல் விளைந்தன்று நன்று" (உ௩எ) எனப் புறநானூற்றிலும் ஒருவகை யாக அமைந்திருக்கின்றது.

61. புது நிறை வந்த புனல் அம் சாயல்—புதுப்பெருக்காய்வந்த நீர் போலும் அழகையுடைய மென்மையினையும்,

என்றது - தண்ணீர் அரியகாலத்தேவந்து பயன்றருமாறுபோல இவ னும் பயன்றருவனென்றவாறு.

வி - பு. "நீரினு மினிய சாயற், பாரி வேள்" என்பது புறநானூறு, ௧0௫.

62. மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி—தனதறிவு ஆக்கத்திற்கு மாறுகிய கேட்டைநினையாது ஆக்கத்தினையேயுணரும் நினைவினையும்,

வி - பு. ஆக்கம் - பெருகுதல்.

63. வில் நவில் தடக்கை—விற்றொழிலிலேபயின்ற பெரிய கையினை யும்,

63. மே வரும் பெரும்பூண்—பொருந்துதல்வரும் பேரணிகலங்களையு முடைய,

வி - பு. மே - பொருந்துதல்; முதனிலைத்தொழிற்பெயர்.

64. நன்னன் சேய் நன்னன் படர்ந்த கொள்கையொடு—நன்னன்மக னாகிய நன்னனை நினைத்த கோட்பாட்டுடனே,

துப்பினையும் (௫௧) சாயலினையும் (௬௧) சூழ்ச்சியினையும் (௬உ) கையினை யும் பூணினையு (௬௩) முடைய நன்னனென்க.

65. உள்ளினிர் சேறிர் ஆயின்—அவன்றரும் பரிசில்கள் இவையென்று அப்பரிசில்களை உள்ளினிராய்ச் செல்வீராயின்,

வி - பு. உள்ளினிராய் - நினைத்தீராய்.

65 - 6. [பொழுதெதிர்ந்த, புள்ளினிர் மன்ற வெற்றாக் குறுதலின் :]

என் தாக்குறுதலின் எதிர்ந்த பொழுது புள்ளினிர் மன்ற—என்னை எதிர்ப் படுகையினாலே நீர் புறப்படுகின்றபொழுது நமக்குவரும் ஆக்கத்தை எதிர் கொண்டுநின்ற நன்முகூர்த்தத்தோடே நன்னிமித்தத்தையும் உடையிராயிருந் தீர்; அறுதியாக,

வி - பு. நற்காலத்தையும் நன்னிமித்தத்தையும் உடையீரென்றபடி, மன்ற, அறுதியாக - நிச்சயமாக.

உஅ மலைபடுகடாம்.

67. ஆற்றின் அளவும்—வழியினது நன்மையினதளவும் தீமையினதளவும்,

67. அசையும் நல் புலமும்—நீர் தங்கும் நன்றாகிய இடங்களும்,

வி - பு. அசைதல் - தங்கல்.

68. வீற்று வளம் சுரக்கும் அவன் நாடு படு வல்சியும்—பிறர்நாட்டுக் கில்லாத செல்வத்தை மாறாமற்கொடுக்கும் அவன் நாடுவிளைகின்ற உணவுகளும்,

நாடெனவே மலைநாடும், காட்டுநாடும், தண்பணைநாடுங்கூறினார்; அது மேற்காண்க.

வி - பு. வீறு - வேறொன்றற்கில்லாத அழகு. மேற்காண்க - பின்னேகாண்க.

69. மலையும்—அவனாட்டின் மலைகளின்றன்மையும்,

69. சோலையும்—அவனாட்டிற் சோலைகளின்றன்மையும்,

69. மா புகல் கானமும்—விலங்குகள் விரும்பித்திரியுங்

காட்டின் றன் மையும்,

ஆற்றினது அளவுமுதலிய ஐந்தினையும் இக்கூறியமுறைமைய கூறாமல் மயங்கக்கூறுவர் ; கூறும்வழிக்கண் ஆண்டுள்ளனவே கூறவேண்டுதலின்.

வி - பு. புகலுதல் - விரும்புதல். ஆண்டு உள்ளனவே - அந்தவழியில் உள்ளவற்றையே.

70 - 72. தொலையா நல் இசை உலகமொடு நிற்ப பலர் புறம் கண்டு அவர் அருங்கலம் புலவோர்க்கு தரீஇ சுரக்கும் அவன் ஈகை மாரியும்— கெடாத நல்லபுகழ் உலகமுள்ளளவுநிற்கும்படியாகப் பகைவர்பலரினையும் முதுகுகண்டு அவர்திறையாகத்தந்த பெறுதற்கரிய பேரணிகலங்களை முற்பட அறிவுடையோர்க்குக் கொடுத்துப் பின் அவர்க்குச்சொரியும் அவன் பொன் மழையும்,

வி - பு. பகைவருடைய ஆபரணங்களை அரசர் தாம் கைக்கொள்ளாமல் பரிசிலராகிய புலவோர்க்குக் கொடுத்தல் மரபு ; அவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம், பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி " (புறநா. சு), ' ' குரிசி லடையாரைக் கொண்டகூட் டெல்லாம், பரிசின் முகந்தன பாண் " (பு - வெ. வஞ்சி, கசு.) என்பவற்றாலுமுணர்க.

73. இகழுநர் பிணிக்கும் ஆற்றலும்—தன்னை இகழ்ந்திருக்கும் பகை வரை அரசுகொடாமற் சுருக்கும் அறிவின்வலியும்,

வி - பு. பிணித்தல் - கட்டுதல்.

73 - 6. புகழுநர்க்கு அரசு முழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு தூ துளி பொழிந்த பொய்யா வானின் வீயாது சுரக்கும் அவன் நாண்மகி ழிருக்கையும்—சூதர் மாகதர் பாணர் கூத்தர் முதலியோர்க்குத் தான்புறங் கண்ட பகைவரரசை முற்றுங்கொடுப்பினும் அமைதிபிறவாத அறிவுடனே தூயதுளியைப் பெருகச்சொரிந்த பருவம்பொய்யாத மேகம் பின்னரும்

பெய்யுமாறுபோலப் பின்னரும் மாறாமற்சொரியும் அவனுடைய நாளோ லக்கமும்,

நோக்கு - நோக்கனோக்கம். "வீயாவீண்டும்" என அகற்சிமேற்று.

வி - பு. சூதர் - நின்றேத்துவார். மாகதர் - இருந்தேத்துவார்; "சூதர் வாழ்த்த மாகதர் நுவல"—(மதுரைக்காஞ்சி. 670) பாணர் - பாடுவோர். நோக்கு அல் நோக்கம் - கண்ணால்நோக்கும்நோக்கமின்றி மனத்தால் நோக்கும் நோக்கம்; அஃதாவது கருதுதல். வீயாது - மாறாமல்.

77 - 80. [நல்லோர் குழீஇய நாநவி லவையத்து, வல்லா ராயினும் புற மறைத்துச் சென்றோரைச், சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி, நல் லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமும்:] நா நவில் நல்லோர் குழீஇய அவையத்து சென்றோரை வல்லாராயினும் புறம் மறைத்து சொல்லிக் காட்டிச் சோர்வு இன்றி விளக்கி நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும் — தாம் கற்றவை நாவிடத்தே பயின்ற நல்ல அறிவினையுடையோர் திரண்ட தன் அவைக்களத்திடத்தே சென்ற அறிவுடையோரைத் தாம் கற்ற வற்றை மனங்கொள்ளக் கூறமாட்டாராயினும் மாட்டாமையை மறைத்துத் தாம் பொருளைச்சொல்லிக்காட்டி அதனைத் தப்பின்றாக எல்லார்மனமுங் கொள்ளும்படி அறிவித்து நன்றாகநடத்தும் அவனுடைய சுற்றத்தாருடைய பேரொழுக்கமும்,

நவிலுதல் - கூறியடிப்படுதல். சுற்றம் - கல்வியுடையோர்.

வி - பு. 'நல்லோர் குழீஇய அவை' என்றதனால், நல்லவையும் நிறை யவையும் கொள்ளப்பட்டன ; அவற்றின் இலக்கணங்களை, "

புகழுந் தரும நெறி நின்றோர்போய் காம, மிகழுஞ் சினஞ்செற்ற மில்லோர் - நிகழ்கலைகள், எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றே, நல்லா யவைக்கு நலம் ", " நலனடக் கஞ் செம்மை நடுவுநிலை ஞானங், குலனென் றிவையுடையோர் கோதில் - புலனில்லோர், சென்று மொழிந்தனவுங் கேட்போர் செறிந்தவிட, மன்றே நிறைந்த வவை" (வெண்பாப்பாட. பொது. கூ, க0), " ஆறட் பகைசெற் றருங்கலை யோர்ந்து, பாரிற் கீர்த்தி படைத்தோர் வைகுதல், நல்லவை யடக் கம் வாய்மை நடுநிலை, சொல்லு நன்மை யுடையோர் தொகைஇ, வல்லார் மொழியினும் வல்லுந ராக்கிக், கேட்போ ருறையவை நிறையவை யாகும் " (இலக்கணவி. சூ. கூடகூ) என்பவற்றால் அறிந்துகொள்க. மாட்டாமையை - வன்மையில்லாமையை. அரசர்க்குரிய உறுதிச் சுற்றவகைகளுள் கல்வியுடை யோர்களும் ஒருவகையினர். நவிலுதல் - கூறி அடிப்படுதலென்பதை, " நவி லொறு ஞனயம் போலும் " என்னும் திருக்குறளா லுணர்க. அருகிலுள்ளார் தலைவனுக்குச் சொல்லிக்காட்டுதல், " அளியன் றானே முதுவா யிரவலன், வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்து " (திருமுருகு. உஅச - ரு) என்பத னாலும் அறியலாகும்.

81 - 3. நீர் அகம் பணிக்கும் அஞ்சு வரு கடுந்திறல் பேர் இசை நவிரம் மேஎய் உறையும் காரி உண்டி கடவுளது இயற்கையும்—கடல்சூழ்ந்த உலகு நடுங்கும் அஞ்சுதரோன்றுங் கடியவலிமையுடைய பெரிய புகழினையுடைய

நவிரமென்னுமலையைப் பொருந்தியிருக்கும் நஞ்சை ஊணாகவுடைய இறைவனதியல்பும்,

பனிக்குங்காரி ; திறலினையுடையகாரி.

வி - பு. நவிரமென்னுமலை, இக்காலத்துத் திரிசூலகிரியென்று வழங் கப்படுமென்பர், சிலாசாதனபரிசோதகருள் ஒருசாரார். " நம்பு மேவு நசையா கும்மே " (தொல். உரி. ௩௧.) என்பதற்கு ' பேரிசை நவிரமேஎய் ' என்னும் இப்பகுதி உதாரணமாகக் காட்டப்பெற்றது.

84 - 5. பாய் இருள் நீங்க பகல் செய்யா எழுதரு ஞாயிறு அன்ன அவன் வசை இல் சிறப்பும்—பரந்த இருணீங்கும்படி பகற்பொழுதைச்செய்து தோன்றும் ஞாயிற்றையொத்த அவனுடைய பகையாகிய இருளைக்கடிந்த குற்றமில்லாத தலைமையும்,

வி - பு. பகைவரும் வறுமையுமாகிய இருளைப்போக்குந் தலைவர்களுக் குச் சூரியனை உவமைகூறுதல் நூல்களிற் பரக்கக்காணலாகும்

86 - 9. [இகந்தன வாயினுந் தெவ்வர் தேஎ, நுகம்படக் கடந்து நூழி லாட்டிப், புரைதோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக், கொடைக்கட னிறுத்தவவன் றொல்லோர் வரவும் :] தெவ்வர் தேம் இகந்தன ஆயினும் நூழி லாட்டி நுகம் பட கடந்து புரை தோல் வரைப்பின் வேல் நிழல் புலவோர் க்கு கொடைக் கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும்—பகைவர்தேயம் சேணிகந்தனவாயினும் ஆண்டுச்சென்று தூசிப்படையைக் கொன்றுகுவித்து வலியுண்டாகவென்று பின்னர் உயர்ச்சியையுடைய யானையணிந்துநிற்கின்ற அணியிலே சென்றுபொருத வேற்போரின்விளக்கத்தையுடைய அறிவுடை யோர்க்குக் கொடுத்தற்குரிய நாடும் ஊருமுதலியவற்றைக்கொடுத்த அவனு டைய குடியிலுள்ளோர் தோற்றரவும்,

காஞ்சி சான்ற வயவராதலின், அவரைப் புலவரென்றார்.

வி - பு. இகந்தன, சேண இகந்தன - நெடுந்தூரத்தைக் கடந்தன. தூசிப்படை - முன்படை. நுகம் - வலி. தோல் - யானை. வரைப்பு - எல்லை; இங்கே சேனை நிழல் - விளக்கம். காஞ்சிசான்றவயவர் - நிலையாமையை எப்பொழுதும் உள்ளத்திற் கொண்டிருத்தலமைந்தவீரர்; இவ்வீரர் நூலுணர்ச்சியை உடையராதலின், புலவரெனப்பட்டார்; "காஞ்சி சான்ற வயவர் பெரும" என்பது பதிற்றுப்பத்து, ௬௫, ௧௰. 'கொடைக்கடனிறுத்த செம்மலோய்' என்பர் பின்; ௫௪௩.

90 - 91. இரை தேர்ந்து இவரும் கொடுதாள் முதலையொடு திரை படு குழிந்த கல் அகழ் கிடங்கின் — இரையைத் தேடியுலாவும் வளைந்த காலினையுடைய முதலைகளோடே திரையுண்டாக ஆழ்ந்த கல்லையகழ்ந்த கிடங்கினையும்,

வி - பு. படுதல் - உண்டாதல். கிடங்கு - அகழி.

92 வரை புரை நிவப்பின வான் தோய் இஞ்சி — மலையையொத்த உயர்ச்சியையுடைய வானைத்தீண்டுமதிலினையுமுடைய,

93 - 4. உரை செல வெறுத்த அவன் மூதூர் மாலையும் கேள் — புகழ் எங்கும்பரக்கும்படி செறிந்த அவனுடைய பழைய ஊரின தியல்பும் இருக்கும்படி கேட்பாயாக;

ஆற்றினதளவு முதலியவற்றையெண்ணி இன்னதும் இன்னதும் இருக்கும்படி கேட்பாயாகவென முடிக்க.

வி - பு. வெறுத்த - நெருங்கிய; "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறநா. ௫௩.)

94. [இனி வேளை நீ முன்னிய திசையே :] இனி நீ வேளை முன்னிய திசையே கேள் — அவற்றில் இப்பொழுது நீ நன்னனைக்

கருதிச்செல்கின்ற திசையைக் கேள் ;

திசை - ஆற்றினளவையுணர்த்திநிற்றலின், ஆகுபெயராயிற்று. ஏகாரம்- பிரிநிலை.

95 - 6. மிகு வளம் பழுநிய யாணர் வைப்பிற் புதுவது வந்தன்று— மிகுகின்ற செல்வம் முற்றுப்பெற்ற புதுவருவாயையுடைய ஊர்களாலே புதிதாகிய தன்மை வந்தது ;

வி - பு. புதுவருவாய் - புதுவரும்படி. புதுவது - புதியதன்மை.

96. [இதுவதன் பண்பே :] அதன் பண்பு இது—அவ்வழியின் செய்தி இத்தன்மைத்து ;

97 - 8. [வான மின்னு வசிவுபொழிய வானு, திட்ட வெல்லாம் பெட் டாங்கு விளைய :] ஆனாது இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய வானம் மின்னு வசிவு பொழிய—அமையாதே நிலத்தேயிட்ட விதைகளெல்லாம் இன்னவாறே விளையவேண்டுமென்று ஆண்டுள்ளார் விரும்பினாற்போலே விளையும்படியாக மேகம் மின்னுகிய பிளந்துவடுப்படுதலோடே பெய்கையினாலே,

வி - பு. வசிதல் - பிளத்தல். மின்னல் பிளந்துவடுப்பட்டாற்போன் றிருத்தலின், மின்னுவசியென்றார்.

99. பெயலொடு வைகிய வியன் கண் இரு புனத்து—அம்மழை யோடேதங்கின அகன்ற இடங்களையுடைய பெரிய கொல்லைநிலத்தே,

100 - 101. [அகலிரு விசும்பி னாஅல் போல, வாலிதின் விரிந்த புன் கொடி முசுண்டை :] புல் கொடி முசுண்டை அகல் இரு விசும்பின் ஆல் போல வாலிதின் விரிந்த—புல்லிய கொடியினையுடைய முசுண்டை ஏனைப் பூதங்கள் தோன்றுதற்குக்காரணமான பெரிய ஆகாயத்திற் கார்த்திகையாகிய மீன்போல வெள்ளிதாக மலர்ந்தன ;

ஆரல் - ஆலெனவிகாரம்.

வி - பு. முசுண்டை - ஒருகொடி; இக்காலத்து முசுட்டையென வழங்குகின்றது. "மழையில் வான மீனணிந் தன்ன, குழையமன் முசுண்டை வாலிய மலர" என்பது, அகநானூறு, உசுரு. ஆகாயம் ஏனைப்பூதங்கள் தோன்றுதற்குக் காரணமென்றது, அதினின்று காற்றும், அதினின்று தீயும், அதினின்று நீரும், அதினின்று நிலமும் உண்டாயினவென்னும்

ரு௨ மலைபடுகடாம்.

முறைபற்றியதாம். "பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளம்" (ருருஅ) என இந்நூலுட்பின்னும் வருதல்காண்க. இந்த இரண்டடிகளும் யாப்பருங் கலவிருத்தியுரையில், உவமக்காட்சியுள் ஊனந்தோன்றிய ஆனந்தவுவமத் திற்கு உதாரணமாகக் காட்டப்பெற்றன.

102 - 6. [நீலத் தன்ன விதைப்புன மருங்கின், மகுளிபா யாது மலி துளி தழாலி, னகளத் தன்ன நிறைசுனைப் புறவிற், கவ்வை போகிய கருங் காய் பிடியேழ், நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண் :] பல் கவர் ஈர் எண் நீலத்து அன்ன விதை புனம் மருங்கின் அகளத்தன்ன நிறை சுனை புறவின் மகுளி பாயாது மலி துளி தழாலின் கவ்வை போகிய கரு காய் பிடி ஏழ் நெய் கொள ஒழுகின—பலவாகக் கிளைத்த பசிய எள்ளுத்தோடுகளெல்லாம் நீலமணியையொத்த நிறத்தையுடையவாயெழும்படி அவற்றைவிதைத்த கொல்லையின்பக்கத்தில் நீர்ச்சாலையொத்த நிறைந்த சுனைகளையுடைய

காட்டி டத்தே அரக்குப்பாயாமல் மிக்க துளிசழுவுகையினாலே இளங்காயாகிய தன் மைபோன கரியகாய் ஒருபிடியிலே எழ்காயாக நெய் உள்ளேகொள்ளும்படி யாக வளர்ந்தன ;

வி - பு. ஈர் எண் என்பதிலுள்ள 'ஈர்' என்பதை ஈரமென்னும் சொல் லின்சிதைவென்றாவது இருமையென்னும் பண்புச்சொல்லின் விகாரமென் றாவது கொள்க. 'எண்' என்பதும் எள்ளுக்கு ஒருபெயர். இங்கு எள்ளுத் தொகுதிக்கு நீலமணி ஒப்பிடப்பட்டதுபோலவே "நீலத்தன்ன பைம்பயிர்" எனப் பயிருக்கு ஒப்பிடப்பட்டது ; (மது. உஎக) அகளம் - நீர்ச்சால். மகுளி பாய்தல் - அரக்குப்பாய்தல். கவ்வை - எள்ளிளங்காய் ; "கவ்வை கறுப்ப" (மது. 271.)

107 - 8. [பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக், கொய்பத முற்றன குவவுக்குர லேனல் :] பொய் பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப குவவு குரல் ஏனல் கொய் பதம் உற்றன—தம்மில் விளையாடிப்பொருகின்ற யானைக்கன்றுகளின் ஒன்றோடொன்றுசேர்ந்த கைகளையொப்பத் தம்மிற் பிணையுங்கதிர்களையுடைய தினை அறுக்குஞ் செவ்வியாகமுற்றின ;

வி பு. 'பொய்பொரு' என்றதனால் விளையாடிப்பொருகின்றவென் றார். கயமுனி - யானைக்கன்று. இப்படியே 'தினைக்கதிருக்கு' யானைக் கையை, "யானை, முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத், துய்த்தலை வாங் கிய புனிறுதீர் பெருங்குர, னற்கோட் சிறுதினை" என உவமித்தார், கபில ரும் ; (குறிஞ்சி. 35 - 8.)

109 - 110. [விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறுங், குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை :] அவரை இருவிதொறும் விளை தயிர்ப் பிதிர்வின் வீ உக்கு குளிர்புரை கொடுங்காய் கொண்டன—அவரைகள் தினையரிதாடோறும்

முற்றினதயிரினது பிதிர்ச்சிபோலும் பூக்களுதிர்ந்து அடியிலே அரிவாளையொக்கும் வளைந்த காயைக்கொண்டன;

குளிர் - கிளிகடிகருவியுமென்ப.

வி - பு. இருவி - தினையரிந்த தாள். வீ - பூ. குளிர் - அரிவாள். கொடுமை - வளைவு.

111 - 13. [மேதி யன்ன கல்பிறங் கியவின், வாதிகை யன்ன கவைக் கதி ரிறைஞ்சி, யிரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே :] பெரும்புனம் வரகு மேதி அன்ன கல் பிறங்கு இயவின் வாதி கை அன்ன கவை கதிர் இறைஞ்சி இரும்பு கவர்வுற்றன—பெரியபுனத்தில் வரகுகள் எருமைகிடந்தாற் போன்ற கற்பெருத்த வழியிடத்திலே தருக்கங்கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களையொத்த இரட்டித்த கதிர்கள் முற்றி வளைந்து அரிவாளாலே அரிதலுற்றன;

வி - பு. "மேதியன்ன கருங்கல்"—(புறநா., ரு). பிறங்குதல் - பெருத்தல். இயவு - வழி. வாதி - வாதம் சொல்வோன்; "ஒதைந்தன வரினு மியைந்தன வரையார்" (தொல். எச். கூ - ம் சூ ந.) என்பதற்கு இதிலுள்ள 'வாதி' என்பது உதாரணமாகக் காட்டப்பெற்றது. வாதுசெய்வோர்களுட் சிலருடைய கைவிரல்களுள்ளே சுட்டுவிரலும் அதன் அடுத்தவிரலுமே இணைந்து அசைந்துதோன்றுதலை இக்காலத்தும் காணலாகும். வரகின்கதிர் இரட்டித்துள்ளனவென்பதை, "கவைக்கதிர் வரகுங் காய்பயி லெள்ளும்" (பெருங்கதை) என்பதனாலும் அறியலாகும். இரும்பு, ஆகுபெயர்.

114 - 144. [பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு,

வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல், வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக், காலுறு தூவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக், குறையறை வாரா நிவப்பி னறையுற், ருலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே, புயற்புனிறு போகிய பூமலி புறவி, னவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை, தொய்யாது வித்திய துளர்படு துடவை, யையவி யமன்ற வெண்காற் செறுவின், மையென விரிந் தன நீணறு நெய்தல், செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக், காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து, வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும், விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை, காழ்மண் டெஃகங் களிறு முகம் பாய்ந்தென, ஆழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத், துறுகல் சுற்றிய சோலை வாழை, யிறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக், கூழுற் றலமரு முந்தூ ழகலறைக், கால மன்றியு மரம்பயன் கொடுத்தலிற், காலி னுதிர்ந்தன கருங்கனி நாவன், மாறுகொள வொழுகின ஊறநீ ருயவை, நூறொடு குழீஇ யின கூவை சேறுசிறந், துண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிந், தாலை யுக்கன நெடுந்தா ளாசினி, விரலூன்று படுக ணுதளி கடுப்பக், குடிஞை யிர ட்டு நெடுமலை யடுக்கத்துக், கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச், சுரஞ்செல்கோடி யர் முழவிற் றூங்கி, முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப்பலவே :]

120, 21. பூ மலி புறவின் புயல் புனிறு போகிய அம் பொதி தோரை அவல் பதம் கொண்டன—பூமிக்க காட்டிடத்தே மழையால் ஈன்றணிமை தீர்ந்து முற்றிய அழகிய குலையினையுடைய மூங்கில் அவலிடிக்குஞ் செவ்வி யைக்கொண்டன ;

இது மூங்கில்.

வி - பு. புறவு - காடு போகிய - நீர்ந்த. பொதி - 'குலை ; "பொன்
னிறச் செந்நெல் பொதியொடு பிள்வாட" என்பது நாலடியார் ; தோரை
யென்பது மூங்கிலையும் ஒருவகைநெல்லையும் உணர்த்தும்; அவற்றுள், மூங்
கிலையுணர்த்திற் றென்பார், 'இது மூங்கில்' என்றார் ; "குறுங்கதிர்த் தோரை
நெடுங்காலையவி" (மது. உஅஎ), "நீள்கழை, நெல்லு நீர்விளை கேழலுந்
தோரையும் " (சீவக. கசஉஉ) என்பவற்றால் தோரை ஒருவகைநெல்லாத
லறிக. 'அவற்பதங்கொண்டன' என்பதை, 'அவலவலென்கின்ற நெல்'
(தொல். சொல். எச். சூ. உ ௬ - சே ந. உரை) என்பது விளங்கச்செய்கின்றது.

123, 122. ஐயவி தொய்யாது துளர் படு துடவை வித்திய அமன்ற—
வெண்சிறுகடுகு உழாதே களைக்கொட்டால் அடிவரைந்து கொத்தும்
தோட்டங்களிலே விதைக்கப்பட்டனவாய் நெருங்கி விளைந்தன ;

வி - பு. தொய்யாது - உழாமல். துளர் - களைக்கொட்டு ; "துளர்படு துடவை" (பெரும்பா. உ0க.) துடவை - தோட்டம். அமலுதல் - நெருங் குதல்.

126, 125. இஞ்சி செய்யா பாவை வளர்ந்து கவின் முற்றி காயம்
கொண்டன—இஞ்சிமுதல் ஒருவராற் பண்ணப்படாத பாவைகள்
பட்டு அழகுமுதிர்ந்து காழ்ப்பைக்கொண்டன ;

வளரப்

இஞ்சிக்கிழங்கைப் பாவையென்றல் மரபு.

வி - பு. முதல் - வேர். " பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும் " **(பெருங்கதை)** என்பதனாலும் இஞ்சிக்கிழங்கைப்பாவையென்றல் அறியலாகும். கூயம், காழ்ப்பு - உறைப்புச்சுவை.

128, 127. கொழுங்கொடி கவலை குழிதொறும் வயவு பிடி முழந்தாள் கடுப்ப விழுமிதின் வீழ்ந்தன—கொழுவிய கொடியினையுடைய கவலை குழிகடோறும் வலியபிடியின் மடித்த முழந்தாளையொக்கும்படி சிரிதாகக் கீழே வளர்ந்தன;

வி - பு. வயவு - வலி. பிடி - பெண்யானை. **விழுமிது**, சிரிது - சிறப்பையுடையது. கிழங்குவளர்தலை வீழ்தலென்றுசொல்லும்வழக்கை, **புறநானூறு**, கOகூ - ம் செய்யுளின் விசேடக்குறிப்பாலுணர்க.

126. மா இருந்து வீழ்ந்தன—முற்றி மாவாந்தன்மை தம்மிடத்தே யுளவாய் வீழ்ந்தன;

129. காழ் மண்டு எஃகம் களிறு முகம் பாய்ந்தென—காம்பிலேதைத்தவேல் யானையைக் குத்திற்றென்னும்படியாக,

வி - பு. காழ் - காம்பு. எஃகம் - வேல். பாய்ந்தென, பாய்ந்ததென என்பதன்விகாரம்.

130 - 31. ஊழ் மலர் ஒழி முகை உயர் முகம் தோய துறு கல் சுற்றிய சோலை வாழை—முறைப்பட மலர்தலையொழிந்த முகைகளினுடைய உயர்ந்த முகங்கள் சென்றுதீண்டும்படியாக நெருங்கினமலைகளைச் சூழ்ந்துநின்ற சோலையாகியவாழை,

வேல் யானையைக்குத்தினாற்போல வாழைப்பூ மலையைத்தீண்டி நின்ற தென்றுணர்க ; வாழைப்பூ உதிர்ந்த பின்பு உலராது நிற்றல் இயல்பு.

132. இறுகு குலை முறுக பழுத்த—காய்செருங்கின குலை மிகவுநெகி ழும்படி பழுத்தன ;

வி - பு. ஊழ் - முறை. துறுதல் - நெருங்குதல். கல் - மலை; "பொலிகயி லைக், கல்வி லிருக்கக் கடனுறல் " என்பது திருவிலைக்கலம்பகம், உ. போரில் யானையை வேலாற்குத்தல் மரபென்பதை "கைவேல் களிற்றொடுபோக்கி வருபவன்" என்னும் திருக்குறளா லுணர்க.

132 - 3. முந்தூழ் ஊழுற்று பயம் புக்கு அலமரும்—பெருமூங்கில் செல்லுமுற்று சவூற்றுப் பயன்படுந்தன்மையிலே புகுந்து அசையாநிற்கும் ;

வி - பு. முந்தூழ் - பெருமூங்கில். ஊழ் - முறை ; முற்றுதல். அல மருதல் - அசைதல்.

134. மரம் காலம் அன்றியும் பயன் கொடுத்தலின்—ஆண்டுள்ள மரங்கள்தாம் காலமன்றியும் நிலவிசேடத்தாற் பயனைக்கொடுத்தலின்,

வி - பு. இவ்வடியோடு, "கால மன்றியும் மரம்பயம் பகரும், யாணரறாஅ வியன்மலை" என்னும் (புறநா. கககூ.) பகுதி ஒப்புநோக்கற்பாலது.

135, 133. நாவல் காலிற் கருங்கனி அகல் அறை உதிர்ந்தன—நாவல் காற்றாலே கரியபழம் அகன்ற பாறையிலே உதிர்ந்தன ;

இது சினைவினை முதலொடுமுடிந்தது.

வி - பு. கால் - காற்று. அறை - பாறை. சினைவினை, கனியின் உதிர் தல்; முதல் - நாவல்.

136. நீர் ஊறு உயவை மாறு கொள ஒழுகின—விடாய்த்தகாலத்தில் வாய் நீருறுதற்குக்காரணமான உயவைக்கொடி நீரோடே மாறுபாடுகொள் ளும்படி படர்ந்தன; என்றது - தண்ணீர் தேடவேண்டாவென்றவாறு.

வி - பு. உயவைக்கொடியின் இலை நாவில் நீருறச்செய்யுமென்பர்.

137. கூவை நூறொடு குழீஇயின — கூவைக்கிழங்கு நீருந்தன்மை யோடே முற்றித்திரண்டன;

வி - பு. நூறு, நீறு ஒருபொருட்சொற்கள். இக்கிழங்கு 'கூவைநீறு' என்றும், 'கூவைச்சுண்ணம்' என்றும் வழங்குவதுண்டு. "கூவை நீறுங் கொழுங்கொடிக் கவலையும்" (சிலப். காட்சி. சஉ), "பாவையிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்" (பெருங்கதை) என்பவற்றாலறிக. இக்கிழங்கு குற்றாலமலை முதலியவற்றிற்காணலாகும். மலைநாட்டில்வாழ்பவர்கள் இதன் இலையில் உண் பதுண்டு; "கூவை துற்ற நாற்கால் பந்தர்" (புறநா. உக.) கூவை - ஒரு மரமென்பர் கல்லாடவுரையாசிரியர் (மயிலேறும்பெருமாள்பிள்ளை.)

137 - 8. தேமா சேறு சிறந்து உண்ணுநர் தடுத்தன—பழமாக்கள் சாறு மிக்கு உண்பாரை வேறொன்றிற் செல்லவொட்டாமற் றடுத்துக்கொண்டன;

வி - பு. தேம் மா - இனியமாமரம். சேறு - சாறு.

138, 9. நெடுந்தாள் ஆசினி புண்ணரிந்து அரலை உக்கன—நெடிய அடி யையுடைய ஆசினிப்பலாப் புண்ணும்படிவெடித்து உள்ளுள்ள விதைகள் சிந்தின;

வி - பு. ஆசினி - ஒருவகைப்பலா; இஃது ஈரப்பலாவெனவும் வழங் கும்; இம்மரம் வேரிற்காய்த்துப்பழுப்பது; "படிக்கு வீரப் பலாப்பழுத்து"- (பிரபுலிங்க. மாயையுற்பத்தி. எ.) புண்போலே தோன்றலின், பழத்தின் வெடிப்பைப் புண்ணென்றார்; 'பெரும்பழம் புண்கூர்ந்து' என்பர் பின்;உகஉ.

140 - 41. விரல் ஊன்று படு கண் ஆகுளி கடுப்ப குடிஞை இரட்டும் நெடுமலை அடுக்கத்து—விரல்தீண்டுகின்ற முழங்குங்கண்ணையுடைய சிறு பறையையொக்கப் பேராந்தை பேடும்சேவலும் மாறிக்கூப்பிடும் நெடிய மலைப்பக்கத்தே,

வி - பு. படுதல் - ஒலித்தல்; குடிஞை, பேராந்தை - ஒருவகைஆந்தை, பேடு - இங்கே பெண்ணாந்தை; "வன்கட் கடுந்துடி, புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையோ டிரட்டும்" (புறநா. கஎ0.)

141 - 3. அலங்கு சினை பலவு கார் வாய்த்து எதிரி சுரம் செல் கோடியர் முழவின் கீழும் மேலும் தூங்கி முரஞ்சு கொண்டு இறைஞ்சின—அசைகின்ற கொம்பினையுடையபலாக்கள் மழைமிகப்பெய்யப்பட்டு அதனைத் தாம் ஏற்றுக்கொண்டு வழிபோகின்றகூத்தருடைய மத்தளங்கள்போலே கீழும் மேலுந்தூங்கி முற்றுதல்கொண்டு தாழ்ந்தன;

வி - பு. பலவு - பலாமரம்; சுரம் - வழி; கோடியர் - கூத்தர்; முரஞ்சல் - முற்றல்; "முரஞ்சன் முதிர்வே" (தொல். உரி. ௩௫) அரிதாள் - அரிந்ததாள்கள். பலாப்பழங்களுக்கு மத்தளங்கள் உவமை. இந்நூலின்முதவில் (க - கஉ) வாத்தியங்களுக்குப் பலாப்பழங்களை உவமைகூறினார்.

123. வெண்கால் செறுவில்—வெள்ளிய அரிதாள்களையுடைய

செய் யிலே,

114 - 5. ஐவனம் வெண்ணெல் பால் வார்பு கெழீஇ பல் கவர் வளி போழ்பு வாலிதின் விளைந்தன—ஐவனநெல்லும் வெண்ணெல்லும் பால்கட் டிச் சிறிதுமுற்றிப் பலவாய்க்கவர்த்த காற்று ஊடறுக்கப்பட்டு நன்றாகவிளைந் தன ;

வார்தல் - ஒழுகுதலாதலிற் கட்டுதலையுணர்த்திற்று. கெழுமுதல் ஈண்டு முற்றுதலையுணர்த்திற்று. பல்கவர்வளியெனவே நாலுகாற்றுமடித்து முற்று தல்கூறினர்.

வி - பு. ஐவனம் - தினையோடுசேர்த்து விளைவிப்பதாகிய ஒருவகை நெல்; "ஐவனம் வித்தி மையுறக் கவினி, ஈனல் செல்லா வேனல்" (புறநா. கஙக.)

119; 1 17. தீங்கழை கரும்பு கவிழ் கணைத்து—இனிய சோலாகிய கரும்பு தோடுகவிழ்தலோடே தண்டுதிரண்டு,

வி - பு. கழைக்கரும்பு - ஒருவகைக்கரும்பென்பாருமுளர்.

118. அறை குறைவாரா நிவப்பின்—பாத்தி குறைபடுதலுண்டாகாத வளர்ச்சியோடே,

வி - பு. அறை - பாத்தி.

116 - 7. வேல் ஈண்டு தொழுதி இரிவு உறழென்ன கால் உறு துவைப்

பின் இறைஞ்சி—வேற்படை திரண்டதானை கெட்டுப்போதலை உற்றதென்னும்படி காற்று மிகப் படுகின்ற ஆரவாரத்தாலே சாய்ந்து,

118 - 9. அறையுற்று ஆலைக்கு அலமரும் — வெட்டுதலுற்று ஆலையிலேசென்று பயன்படுதற்கு அசையாநிற்கும்;

கரும்புதிரண்டு நிவப்போடே இறைஞ்சி அலமருமென்க.

வி - பு. தொழுதி - கூட்டமாதலிற் சேனைக்காயிற்று. அறை - அறுத்தல்; "அறைக்கரும்பு" (பொரு. கூ௯௩) கரும்புகள் காற்றாலசைதற்கு வேற் படையையுடைய சேனை கெட்டோடுதல் உவமை.

124. நீள் நறு நெய்தல் மை என விரிந்தன—நீண்ட நறியநெய்தல் கருமைதான் வடிவுகொண்டதென்னும்படியாக அலர்ந்தன;

வி - பு. "மணிமருணெய்தல்" (பெரும்பா. உ௮௨.)

நீ முன்னியதிசையைக்கேள் (௯௭), வானம்பொழிகையினாலே (௯௭) பெயலோடு வைகிய புனத்து (௯௯) முசுண்டை மலர்ந்தன (௧0௧); எண் ஒழுகின (௧0௬); எனல் கொய்பதமுற்றன (௧0௮); அவரை கொண்டன (௧௧0); வரகு கவர்வுற்றன (௧௧௩); புறவிலே (௧௨0) தோரை கொண்டன (௧௨௧); ஐயவி அமன்றன (௧௨௩); இஞ்சி காயங்கொண்டன (௧௨௬); கவலை வீழ்ந்தன (௧௨௮); வாழை (௧௩௧) பழுத்தன (௧௩௨); முந்தூழ் அலமரும் (௧௩௩); நாவல் உதிர்ந்தன (௧௩௫); உயவை ஒழுகின (௧௩௬); கூவை குழீஇயின. (௧௩௭); தேமாத் தடித்தன (௧௩௮); ஆசினி உக்கன (௧௩௯); பலவு இறைஞ்சின (௧௪௪); வெண்காற்செறுவிலே (௧௨௩) ஐவனநெல்லும் வெண்ணெல்லும் விளைந்தன (௧௧௫); கரும்பு அலமரும் (௧௧௯); நெய்தல் விரிந்தன (௧௨௪); இவ்வாறே மிக்கவளம் முற்றுப்பெற்ற புதுவருவாயை யுடைய வூர்களாலே (௯௫) புதிதாகிய தன்மைவந்தது; அவ்வழியின் பண்பு இத்தன்மைத்து (௯௬) எனவினைமுடிக்க.

இஃது ஆற்றினது நன்மையினளவுகூறிற்று.

வி - பு. 'ஆற்றினது (நன்மையின்) அளவென்றது, ௬௭ - ம்

அடியி லுள்ளதை.

145. தீயின் அன்ன ஒள் செங்காந்தள்—நெருப்பினையொத்த ஒள்ளிய செங்காந்தளினது,

இதற்கு நன்னனென்னும்பெயர் நீயோடடுத்த தன்மையின், ஆனந்த மாய், பாடினரும் பாட்டுண்டாரும் இறந்தாரென்று ஆளவந்தபிள்ளையாசிரியர் குற்றங்கூறினராலெனின், அவர் அறியாதகூறினர்; செய்யுட்செய்த கௌசிகனர் ஆனந்தக்குற்றமென்னுங் குற்றமறியாமற் செய்யுட்செய்தாரேல், இவர் நல்லிசைப்புலவராகார்; இவர்செய்தசெய்யுளை நல்லிசைப்புலவர்செய்த ஏனைச்செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனநீக்காது கோத்தற்குக்காரணம் ஆனந்தக்குற்றமென்பதோர்குற்றம் இச்செய்யுளுட் மையானென்றுணர்க.

௩அ மலைபடுகடாம்.

இச்சொன்னிலை நோக்குமிடத்து ஓர்குற்றமுமின்று; என்னை? அன்ன வென்னும் அகரவீற்றுப் பெயரெச்ச உவமவுருபு தீயென்னும்பெயரைச்சேர்ந்துநின்று இன்சாரியை இடையேயடுத்துநிற்றலின். நன்னனென நகரமுதலும் னகரவொற்றீறுமாய்நிற்குஞ் சொல்லாயினன்றே அக்குற்றமுளதாவதெனமறுக்க. நன்னவென அண்மைவிளியாய்நின்ற முன்னிலைப்பெயரென்று குற்றங்கூறுவார்க்கு இப்பாட்டுப் படர்க்கையேயாய்நிற்றலிற் குற்ற மின்றென்க.

நூற்குற்றங்கூறுகின்ற * பத்துவகைக்குற்றத்தே"

தன்னுெருபொருள் கருதிக்கூறல் ” என்னுங்குற்றத்தைப் பின்னுள்ளோர் ஆனந்தக்குற்ற மென்பதோர் குற்றமென்று நூல்செய்ததன்றி அகத்தியனுரும் தொல்காப் பியனுரும் இக்குற்றங்கூருமையிற் சான்ரேர்செய்யுட்கு இக்குற்றமுண்டா யினும் கொள்ளாரெனமறுக்க.

வி - பு. ஆனந்தமாய் - ஆனந்தக்குற்றமாகி; ஆனந்தகுற்றமென்பது எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கா னந்தம், தொடையானந்தமென ஆறுவகைப்படும் ; அவற்றுள், இங்கேசொல் லியது சொல்லானந்தத்திலடங்குமென்பர் ; “ இயற்பெயர் மருங்கின் மங்கல மொழிபத், தொழிற்சொல் புணர்ப்பது சொல்லா னந்தம் ” என்பதனுலுண ர்க. ஆனந்தக்கு ற்றம் - மரணத்தைத்தரும் குற்றம். ஆளவந்த பிள்ளையாசிரிய ராவார் இன்னுரென்று தெரியவில்லை. சங்கப்புலவர்களுக்கு நல்லிசைப்புலவ ரென்பது சிறப்புப்பெயர். தொல்காப்பியம், எச்சவியலில், கஎ - ம் சூத்திரத் தின் விசேடவுரையில் இரண்டாம்வேற்றுமையுருபு அன்னவென்பஸதயும் கொண்டு முடியுமென்பதற்கு இந்தஅடியையே மேற்கோளாக நச்சினுர்க்கினி யர் எடுத்துக்காட்டியிருத்தல் ஆராய்தற்பாலது.

146 - 7. தூவற் கலித்த புது முகை ஊன் செத்து அறியாது எடுத்த புல் புறம் சேவல்—மழையாலே செருக்கிவளர்ந்த புதிய முகையைத் தசை யாகக்கருதி முகையென்றறியாதேயெடுத்த புற்கென்ற முதுகினையுடைய பருந்து,

வி - பு. செத்து - அறிந்து ; “ பண்பில சொல்லுந்தேறுதல்

செத்தே" (ஐங்குறு. உசுஎ). முகை - அரும்பு.

148. ஊன் அன்மையின் உண்ணாது உகுத்தென — தசையல்லாதபடியாலே தின்னாமல் எவற்றையுஞ் சிந்திப்போகட்டதாக,

149 - 50. நெருப்பின் அன்ன பல் இதழ் தாஅய் வெறி களம் கடுக்கும் வியல் அறைதோறும் — நெருப்பினையொத்த பலவிதழ்கள் பரந்து வெறியாடுகின்ற களத்தையொக்கும் அகன்ற பாறைகடோறும்,

---

* பத்துவகைக் குற்றங்களாவன :— "சிதைவெனப் படுபவை வசையற நாடிற், கூறியது கூறன் மாறுகொளக் கூறல், குன்றக் கூறன் மிகைபடக் கூறல், பொருளில மொழிதன் மயங்கக் கூறல், கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல், பழித்த மொழியா னிழுக்கங் கூற, றன்னா னொருபொருள் கருதிக் கூற, லென்ன வகையினு மனங்கோ ளின்மை, யன்ன பிறவு மவற்றுவிரி யாகும்" என்பன ; தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், சூ. ௧0௮.

வி - பு. வெறி - தெய்வத்திற்குச்செய்யும் கடன்; வேலன் சூடிய காந்தள் மலர்கள் சிந்திக் கிடக்குமாதலின், வெறிக்களம் உவமையாயிற்று ; "வெறியயர் சிறப்பின் வெவ்வாய் வேலன், வெறியாட் டயர்ந்த காந்தள்" (தொல். புறத். ரு.) பலநிறப்பூக்களும் சிந்திக்கிடத்தல்பற்றி வெறிக்களத் திற்கு "நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும், வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து, சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய், மணிமருண் டேய்த்த லுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர, வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப, முல்லை சான்ற புறவணிந்து" (மது. உஎகூ - அரு.) என முல்லைநிலத்தை உவமைகூறினர், மாங்குடிமருதனார்.

151. மணம் இல் கமழும் மா மலை சாரல் — மணஞ்செய்த

மனைபோல மணக்கும் பெரிய மலைப்பக்கத்திற் சிறுகுடி (கடுசு) யென்க.

152. தேனினர் கிழங்கினர் ஊன் ஆர் வட்டியர்--தேனினையுடைய ராய்க் கிழங்கினையுடையராய்த் தசைநிறைந்த கடகத்தையுடையராய்,

வி - பு. மண இல் - கல்யாண வீடு. வட்டி, கடகம் - கடகப்பெட்டி ; " முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த, வகன்பெரு வட்டி " (ஐங்குறு. சஎ.)

153. சிறு கண் பன்றி பழுதுளி போக்கி—சிறிய கண்ணையுடைய பன்றியிற் பழுதானவற்றைப்போக்கி, அதன் தசையையும்,

பழுதுளி, உளி - பகுதிப்பொருள்விகுதி.

வி - பு. பகுதிப்பொருள் விகுதி, தனக்கென ஒருபொருளின்றிப் பகுதியின் பொருளையே பொருளாகவுடையது ; " இடனுடைப் பேரியாழ் முறை யுளிக் கழிப்பி " (பெரும்பா. சகஉ) என்பதில், உளி, பகுதிப்பொருள் விகுதி யென்று எழுதியிருத்தல்காண்க.

154 - 5. [பொருதுதொலை யானைக் கோடு சீரகத், தூவொடு மலிந்த காய கானவர் :] தூவொடு மலிந்த பொருது தொலை யானை கோடு சீரக காய கானவர்—மற்றுள்ள தசைகளோடே நிறைந்த வட்டிகளையும் தம்மிற் பொருது பட்ட யானையினது கொம்புகள் காவுமரமாகக் காவிக்கொண்டுவந்த கானவ

ருடைய,

வி - பு. தூ - தசை. மலிந்த, வினையாலணையும் பெயர். காவுமரம் - தோளிற்சுமக்குமரம். காவி - சுமந்து. கானவர் - வேடர் ; காட்டிலுள்ளவர்.

156 - 7. செழு பல் யாணர் சிறுகுடி படினே இரு பேர் ஒக்கலொடு பதம் மிக பெறுகுவிர்—வளவிய பல புதுவருவாயினையுடைய சிறிய ஊரி லேதங்கிற் கரிய பெரிய சுற்றத்தோடே அவ்வுணவுகளை மிகவும் பெறுகுவிர்;

வி - பு. "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே, யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" (தொல். எச்ச. சுரு) என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில், ஒரு மைச்சொல் பன்மையோடுமுடிவதற்கு, 'கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ. (ருO).... ..இரும்பேரொக்கலொடு பதமிகப்பெறுகுவிர்' என்னும் இந் தப்பகுதியே உதாரணமாகக்காட்டப்பெற்றது. பொருநராற்றுப்படையில்,

பொருந (ங), தொழுது முன்னிற்குவிராயின் (கருO) எனவும், சிறுபாணாற் றுப்படையில், முதுவா யிரவல (சுO), செல்குவிராயின் (கசரு) எனவும்,

பெரும்பாணாற்றுப்படையில், புலவுவாய்ப்பாண (உஉ), திரையற்படர்குவிரா யின் (ஙஎ) எனவும் வருபவைகள் இங்கே அறியற்பாலன. இரு பேர்ஒக்கல் - வறுமைமிகுதியால் உடம்பு கரிந்த பெரிய சுற்றமெனினும் பொருந்தும். சுற்றத்தாரையும் உளப்படுத்தினமையின், 'பெறுகுவிர்' என்றார்.

158. [அன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கி :] அசைஇ அன்று அல் சேர்ந்து அவண் அல்கி—அவற்றைப்பெற்று இளைப்பாறி அற்றைநாளிராப் பொழுதும் அவர்களுடனேபொருந்தி

அவ்விடத்தேதங்கி,

159 - 60. கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து சேந்த செயலை செப்பம் போகி—கன்றின நெருப்புப்போன்ற ஒள்ளிய பூங்கொத்துக்களைச் சுற்றத்தோடேசூடிச் சிவந்த அசோகமரத்தையுடைய செவ்விய வழியைப் போய்,

வி - பு. அசோகம்பூ மிக்கசெந்நிறமுடையதாதலின், நெருப்பு உவமை யாயிற்று. "அளிமுரா லணிமல ரசோகம் பூத்தன,.... . ...அழற்கணை தரித்த போன்றவே" (நைடதம். அன்னத்தைக் கண்ணுற்ற. ௩௬) என்பதனாலும் அதுவிளங்கும். கடும்பு - சுற்றம். செயலை - அசோகமரம்.

161 - 2 அலங்கு கழை நரலும் ஆரி படுகர் சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி—அசைகின்ற மூங்கிலொலிக்கும் அரிதாயிழியும் வழிகளை யுடைய சிலம்பைச்சேர்ந்திருந்த சிறூர்களைச்சேர்ந்து,

வி - பு. ஆரி - அருமையையுடையது. மலைவழி மிகுந்த ஏற்றிழிவை யுடையதாதலின், அரிதாயிழியும் வழியென்றார். பாக்கம் - பக்கத்திலுள்ளது.

163 - 4. நோனா செருவின் வலம் படு நோன் தாள் மான விறல் வேள் வயிரியம் எனினே—பகைவரைப் பொறுமற்பெரும் போரினையும் வெற்றி யுண்டாகும் வலியமுயற்சியினையும் மானத்தையும் வெற்றியையுமுடைய நன்னனுடைய கூத்தரேமென்று கூறுவீராயின்,

வி - பு. நோனுமை - பொறுமை. வலம் - வெற்றி. வயிரியர் - கூத்தர். மானவிறல்வேளென்பது "விளங்கு பெருந்திருவின் மான விறல்வேள்" என மதுரைக்காஞ்சியிலும் வந்துள்ளது.

165. நும் இல் போல நில்லாது புக்கு—நும்முடைய மனைபோல வாசலில்நில்லாதே உள்ளேசென்று,

166. கிழவிர் போல கேளாது கெழீஇ—முன்பே கிழமையுடையீர் போலே அவரைக்கேளாதே உறவுகொள்ளுகையினாலே,

167. சேண் புலம்பு அகல இனிய கூறி—சேணிடைவந்த நுமது வருத் தந்தீரும்படி இனியமொழிகள் அவர்கூறி,

168. [பருஉக் குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு :] பொழிந்த நெய்க்கண்பருஉக்குறை வேவையொடு—மிகச்சொரிந்த நெய்யிடத்தே பருத்த தசைகிடந்து வெந்த பொரியலோடே,

169. குரூஉ கண் இறடி பொம்மல் பெறுகுவிர்—நிறவிய வடிவினை யுடைய தினைச்சோற்றைப் பெறுகுவிர்;

வி - பு. 'நும்மில்........புக்கு' என்றதனால் நாட்டினர்க்கு வந்தோர் பாலுள்ள அன்பின் மிகுதி கூறினர்; "பொருநர்க் காயினும் புலவர்க் காயி னும், அருமறை நாவி னந்தணர்க் காயினும், ...அடையா வாயில்" (சிறுபா. உ0௩ - ௬), "எங்கோ னிருந்த கம்பலை மூதூர், உடையோர் போல விடை யின்று குறுகி" (புறநா. ௬௪) என்பவையும் இக்கருத்துடையன; "அடையாத பொற்கதவு மஞ்சலென்ற சொல்லும் உடையான்" என்பதும் இங்கே யறியத்தக்கது. கிழமை - உரிமை. சேண் இடை - நெடுந்தூரமான இடம். குறை - குறைக்கப்பெற்ற தசை. வேவை - வெந்தது. இறடிப் பொம்மல் - தினைச்சோறு. 'மானவிறல் வேள் (௬௪)........பெறுகுவிர்' என்னும் இவ் வடிகளின் பொருளுடன், "செவ்வரை நாடன் சென்னிய மெனினே, தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇநும், பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகு விர்" (பெரும்பா. ௧0௩ - ௫) என்பது ஒத்துவிளங்குதல்காண்க.

170 - 188. [எறிக் தரூஉ மிலங்குமலைத் தாரமொடு, வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல், குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப், பழஞ்செருக் குற்றநும் மனர்க தீர, வருவி தந்த பழஞ்சோறை வெண்காழ், வரு விசை தவிர்த்த கடமான் கொழு ங்குறை, முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை, பிணவு நாய் முடுக்கிய தடியொ டு விரைஇ, வெண் புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி, னின்புளிக் கலந்து மாமோ ராகக், கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து, வழையமை சாரல் கமழத் துழைஇ, நறுமல ரணிந்த நாறிரு முச்சிக், குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி, யகமலி யுவகை யார்வமொ டளைஇ, மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர், செருச்செய் முன்பிற் குரிசின் முன்னிய, பரிசின் மறப்ப நீடலு முரியி, ரனைய தன்றவன் மலைமிசை நாடே :]

188. அவன் மலை மிசை நாடு அனையதன்று—அந்நன்னனுடைய மலை யினது உச்சியிலுடு யான்முற்கூறிய தன்மைத்தன்று ; மிகவுஞ்சிறப்புடைத்து ; ஆண்டுப் பெறுவனவற்றைக் கேட்பீராக ;

177, 5. பிணவு நாய் முடுக்கிய தடியொடு வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை முளவுமா தொலைச்சிய பைந்நிணம் பிளவை விரைஇ—பெண் ணாகியநாய் ஓடிக்கடித்த உடம்பின் தடிகளோடே ஓடிவருகின்ற விசையைக் கெடுத்துக்கொன்ற கடமானின் கொழுவிய தசையையும் எய்ப்பன்றியைக் கொன்ற பசுத்தநிணத்தையுடைய பிளக்கப்பட்டதசைகளையும் கலந்து,

வி - பு. தடி - மாம்ஸம். முளவுமா, எய்ப்பன்றி - முள்ளம்பன்றி. பிளவை - பிளக்கப்பட்டது. ஆகாரவீறு அல்வழிக்கண் அம்முப்பெறாத

முடிபுபெற்றதற்கு, 'பிணவுநாய்முடுக்கிய' என்னும் இந்தப்பகுதி உதா ரணம் ; (தொல். குற்றியலுகரப். சூ. எஅ. ந. உரை.) குறியதன்கீழ் ஆகாரம் குறுகி உகரமேற்றதற்கு ' முளவுமா ', ' பிணவுநாய்' என்பவற்றை

எடுத்துக் காட்டினர், இலக்கணவிளக்கமுடையார்.

6

சச. மலைபடுகடாம்.

171 - 2 வேய் பெயல் விளையுள் தேகள் தேறல் குறைவு இன்று பருகி—மூங்கிற்குழாய்க்குள்ளே பெய்தலையுடைய முற்றிய தேனாற்செய்த கட்டெளிவைக் குறைவின்றாக நிரம்பவுண்டு,

வி - பு. விளையுள் - விளைதல். 'திருந்தமை விளைந்த தேக்கட்டேறல்' என்பர் பின்னும்; ருஉஉ. கள் மூங்கிற்குழாய்க்குள்ளவைக்கப்பெற்று முற்று மென்பதை, "காரணி யாணர்த், தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்தி" (பதிற். அக), "வாங்கமைப் பழுனிய தேறல்" (புறநா. கஉக) என்பவற்றாலும் அவற்றினுரைகளாலுமறிக.

172. நறவு மகிழ்ந்து—பின்னர் நெல்லாற்சமைத்த கள்ளை உண்டு மகிழ்ந்து,

முற்படக் கூறியதசைகளை இடையேதின்று தேறலைப்பருகி நறவு மகிழ்ந்தென்க.

வி - பு. சிந்தாமணியில், கஉ௲ - ம் கவியில்வந்துள்ள 'தொண்டிக் கள்' என்பதற்கு 'நெல்லாலாக்கின கள்' என்றுபொருள்செய்திருப்பது அறியற்பாலது. மகிழ்ந்து - கள்ளையுண்டு; "வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து" (புறநா. கஉக.) என்பதனாலறிக.

172 - 3. வைகறை பழஞ்செருக்கு உற்ற நும் அனந்தல் தீர—விடியற் காலத்துக் கள்ளுண்டுமகிழ்ச்சியுற்ற நும்முடைய மதம்தீரும்படி,

வைகறையனந்தலென்க.

வி - பு. அனந்தல், மதம் - மயக்கம்.

174. அருவி தந்த பழம் ஊழ்த்து (கஅ0) சிதை வெண் காழ் யா (கஎக)—நீர் கொண்டுவந்த பலாப்பழம் செவ்வியழிந்து உதிர்ந்த வெள்ளிய விதையின் மாவையும்,

வி - பு. செவ்வி - பக்குவம். வெண்காழ்மா - பலாவிதையாலாகியமா.

178 - 9. வெண் புடை கொண்ட துய் தலை பழனின் இன் புளி உலை மோர் ஆக கலந்து — வெள்ளியபுறத்தைக்கொண்ட ஆரத்தை இடத்தே யுடைய புளியம்பழத்தின் இனியபுளிப்பையும் உலையாகவார்த்த மோருக்கு அளவாகக் கலந்து,

வி - பு. புளிச்சுவை - கள்மயக்கத்தைத் தீர்க்குமென்பர்.

180 - 81. கழை வளர் நெல்லின் அரி வழை அமை சாரல் கமழ துழைஇ ஆக்கிய—மூங்கிலிலேநின்றுமுற்றிய நெல்லின் அரிசியைச் சுரபுன்னைநெருங் கிய மலைச்சாரலெல்லாம் நாறும்படியாகத் துழாவியாக்கிய,

வி - பு. கழைவளர்நெல்லின் அரி - மூங்கிலரிசி; "அவற்பதங் கொண் டன வம்பொதித் தோரை" (கஉக) என மூங்கில்நெல் முன்பும் கூறப்பெற் றுள்ளது.

183. வால் அவிழ் வல்சி—வெள்ளிய சோறாகிய உணவை,

182 - 3. நறுமலர் அணிந்த நாறு இரு முச்சி குறமகள்—நறியமலரைச் சூடின நாறுகின்ற கரிய மயிர்முடியினையுடைய குறச்சாதியின்மகள், ஆக்கிய,

கள்ளுண்டபின்பு அனந்தநீரச் சோற்றைப்பெறுகுவிரென்க.

184. அகம் மலி உவகை ஆர்வமொடு அளை இ—நெஞ்சுநிறைந்த மகிழ்ச் சியையுடையராய் விருந்தினரைப்பெற்றேமென்னும் ஆசையோடே நெஞ்சு கலந்து.

185. மக முறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்—தத்தம்பிள்ளை களைக்கொண்டு முறைசொல்லித் தடுக்கையினாலே மனைகடோறும் பெறுகுவிர்;

அண்ணன், அம்மானென்றாற்போல்வன முறை.

வி - பு. "தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப" என்றார், சிறுபாணாற்றிலும்; ககஉ. வல்சியைப்பெறுகுவிரென்க.

170. ஏறி தரூஉம் இலங்கு மலை தாரமொடு—தாங்கள் உச்சிமலையிலே ஏறிக் கொண்டுவரும் விளங்குகின்ற மலையிற் பண்டங்களோடே,

அவை: சந்தனம், அகில், பொன், மணிமுதலியன.

வி - பு. தாரம் - பலபண்டம்.

தடுப்ப மனைதொறும் தாரத்தோடே வல்சியைப்பெறுகுவிரென்க.

186 - 7. செரு செய் முன்பின் குரிசில் முன்னிய பரிசில் மறப்ப நீடலும் உரியிர்—ஆண்டுப்பெற்றவற்றாலே, போரைச்செய்கின்ற வலியை யுடைய நன்னனிடத்துப் பெறக்கருதிய பரிசிலை மறக்கும்படி நீட்டித்திருத் தலுமுரியிர்;

வி - பு. முன்பு - வலி.

189 - 91. நிரை இதழ் குவளை கடி வீ தொடினும் வரை அரமகளிர் இருக்கை காணினும் உயிர் செல வெம்பி பனித்தலும் உரியிர்—நிரைத்த இதழையுடைய குவளையில் தெய்வம்விரும்புதலிற் கடியவாகிய பூக்களைக் கிட்டினும் ஆண்டை வரையரமகளிருடைய இருப்பைக்காணினும் உயிர் போம்படி வெதும்பி நடுங்குதலுமுரியிர்;

ஆகையினுலே பலநாணில்லாது நில னுடு படர்மின் (கசுஉ) எனவினைமுடிக்க.

வி - பு. நிரைத்த - வரிசையுற்ற. குவளையென்பதற்குக் கருங்குவளை, செங்குவளையெனப் பொருள்கொண்டு அம்மலர்களிலிருக்குந் தெய்வங்கள் முறையே உமாதேவியாரும் சூரியனுமெனக்கொள்க ; மலர்களுள் இன்ன தில் இன்னதெய்வம் வாழுமென்பதைப் பழையநூல்களிற் காண்க. வீ - மலர். வரையரமகளிர் - மலையிலுறையும் தெய்வப்பெண்கள். ஆண்டை - அவ்விடம்.

இத்துணையும் அசையுநற்புலமும், வல்சியும் சேரக்கூறினர்.

வி - பு. அசையு நற்புலம், கள - ம் அடியிலும், வல்சி, கஅ - ம் அடியிலுமுள்ளன.

192. * [பலநா ணில்லாது நிலனுடு படர்மின் :]

வி - பு. பல நாள் நில்லாது - பலதினங்கள் தாமதித்து நில்லாமல், நிலன் நாடு படர்மின் - நிலத்திலுள்ள நாட்டுவழியே செல்லும்மினென்க ; ‘ நில னுடு ' என்றபாடத்திற்குப் பூமிவழியேயென்க

* இதற்குரைகிடைக்கவில்லை.

193 - 5. [விளைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப், புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி, யுடைய வாறே :] ஆறே கேழல் விளை புனம் நிழத்தலின் அஞ்சி புழைதொறும் மாட்டிய இருங்கல் அரும்பொறி உடைய—வழிகள், பன்றி முற்றின தினைப்புனத்தை நொக்குகையினுலே இதற்கஞ்சிச் சில்வழிக டோறும் கொளுத்திவைத்த பெரிய கற்பொறிகளையுடைய ; ஆகையினுலே,

வி - பு. நிழத்தல், கொக்கல் - குறையச்செய்தல்; " ஒய்தலாய்த ணிழத் தல் சாஅய், ஆவயி னான்கு முள்ளத னுணுக்கம் " (தொல். உரிச். சூ. ௩உ.) புழை - சிறுவழி. கொளுத்திவைத்த - பொருத்திவைத்த. கற்பொறி - கல்யந் திரம்; " இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய, பெருங்க லடாரும் போன்ம் " (புறநா. கக.) என்பதனாலறிக. இங்கே கூறியது, பன்றியை அகப்படுத்தும் யந்திரம்.

195 - 6 [நள்ளிரு ளலரி, விரிந்த விடியல் வைகினிர் கழிமின்:] நள் ளிருள் வைகினிர் அலரி விரிந்த விடியல் கழிமின்—செறிந்த இருட்காலத்தே தங்கினிராய் ஞாயிற்றின்கதிர்விரிந்த விடியற்பொழுதிலே போவீர்;

197. நளிந்து பலர் வழங்கா செப்பம் துணியின்—செறிந்து பலரும் போகாதவழியைப் போகத்துணிவீராயின், அவ்விடம்,

வி - பு. செப்பம், வழியென்னும்பொருளில் இடுகுறிமாத்திரையாய் வந்தது.

198 - 9. [முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்வில், கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே:] முரம்பு கண் ணுடைந்த பரல் அவல் போழ் வில் பாம்பு கரந்து ஒடுங்கும் பயம்பும் உளவே—மேட்டுநிலம் தன்னிடத்திலே விண்ட பரலையுடைய பள்ளநிலத்திற் பிளப்பிலே பாம்பு மறைந்துகிடக்கும் குழிகளுமுள;

உம்மையாற் புலிமுதலியனவுமுள. மார் - அசை.

வி - பு. முரம்பு - பருக்கைக்கல்லாலாகிய மேடு. பரல் - பருக்கைக் கல். அவல் - பள்ளம். போழ்வு - பிளப்பு.

200. குறிக்கொண்டு மரம் கொட்டி நோக்கி—அப்பயம்பை மனத் தாலே குறித்தல்கொண்டு விலங்கிற்கு மரங்களிலேயேறிக் கொட்டிப்பார்த்து,

201. செறி தொடி விறலியர் கைதொழூஉ பழிச்ச—செறிந்த வளையினையுடைய விறலியர் அப்பாம்பு மனமகிழும்படி

கையிற்றொழுதுவாழ்த்த,

வி - பு. இதனால், மகளிர் பாம்பை வழிபட்டுவந்தமை தெரிகின்றது.

202. [வறிது நெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின் :] நெறி வறிது ஒரீஇ வலம் செயாக் கழிமின்—விலங்குகிடக்கும்வழியைச் சிறிது அகலப் போய் வலப்பக்கத்துவழியை நுமக்குவழியாகச்செய்துகொண்டு போவீராக ;

வலம், ஆகுபெயர்.

வி - பு. வறிது - சிறிது; " வறிது சிறிதாகும் " (தொல். உரிச். நஅ.)

203. [புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவர் :] புனிறு போகிய புனம் சூழ் குறவர் புலந்து—ஈன்றணிமைதீர்ந்துமுற்றின தினைப்புனத்தைக் காத்தற்குச்சூழ்ந்த குறவர் தினையழிகின்றதற்கு வெறுத்து,

புலர்ந்தென்பதுபாடமாயின், முற்றியென்க.

வி - பு. புலர்தல் உலர்தலாதலின், முற்றியென்றார்.

204. உயர் நிலை இதணம் ஏறி கை புடையூஉ—உயர்ந்த நிலையினையுடைய பரணிலேயேறிக் கையைக்கொட்டி,

205. அகன் மலை இறம்பில் துவன்றிய யானை—அகன்றமலையிற் குறுங்காட்டிடத்தே நிறைந்த யானைகளினுடைய,

206. பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடுங்கல்—பகற்பொழுதே நிற்கின்றநிலையைக்கெடுக்குங் கவண் காலுகின்ற கடிய கற்கள்,

பகைநிலைதளர்க்குமென்று பாடமாயின், பகைத்த நிலையென்க

வி - பு. காலுகின்ற - கக்குகின்ற. கற்கள் கூற்றத்தன்ன.

207 - 10. [இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக், கருவிர லூகம் பார்ப்போ டிரிய, வுயிர் செகு மரபிற் கூற்றத் தன்ன, வரும்விசை தவிராது.]

209. உயிர் செகு மரபின் கூற்றத்தன்ன—உயிர்களைப் போக்குமுறை மையாலே கூற்றத்தையொக்கும்; அவைதாம்,

208. **கருவிரல்** ஊகம் பார்ப்போடு கல்லென (207) இரிய—கரியவிரலை யுடைய குரங்குகள் பார்ப்போடே கல்லென்னுமோசைபடக் கெடும்படியாக,

வி - பு. பார்ப்பு - குட்டி; "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை", "தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன" (தொல். மா. சூ. ச, ரு.) என்பவற்

றின் உரையில், 'தாமும்' என்றதனால் ஊர்வன, நடப்பனவற்றுள்ளும் சிறுபான்மை இப்பெயர்களுக்கு உரியன கொள்க என்றது இங்கேகருதற்பாலது.

207, 210. இரு வெதிர் ஈர்ங்கழை தத்தி விசை தவிராது வரும்— பெரியமூங்கிலினது பசிய கோலைக்கடந்து வருகின்றவிசை மாறாதுவரும்;

210. மரம் மறையா கழிமின்—அதற்கு மரங்களிலேயொதுங்கிநின்று போவீராக;

குறவர் (உ0ரு) ஏறிக் கைபுடையூஉத் (உ0ச) தளர்க்குங்கல் (உ0கூ) கூற்றத்தன்ன (உ0க); அவை இரியத் (உ0அ) தத்தி (உ0எ) விசைதவிராது வரும்; அதற்கு மரமறையாக் கழிமின் (உக0) என்க.

211 - 2. உரவு களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின்—வலியயானையை விழுங்குமுதலைகள் தங்கப்பட்டு இராக்காலத்தையொத்த இருள்செறியும்இளைகளையும்,

வி - பு. கரக்கும் - ஒளிக்கும். மிளை - காவற்காடு.

213. குமிழி சுழலும் குண்டு கயம் முடுக்கர்—குமிழிகள் சுழன்றவரும் ஆழ்ந்த நீராழ்தமடுக்களையுடைய முடுக்கரையுமுடைய,

முடுக்கர் - நீர்குத்தின இடங்கள். முடுக்கரையுடைய யாறு (உகச).

214. அகழ் இழிந்தன்ன கான் யாற்று நடவை—ஏறுதற்கும் இறங்குதற்கும் அரியவாகையினாலே அகழிலே இழிந்தாற்போன்ற காட்டாற்றுவழி,

215. வழூஉம் மருங்கு உடைய—கால் ஓடுமிடங்களையுடைய, அவ்விடத்திற்கு,

வி - பு. வழூஉம் - வழுக்கும்.

215 - 8. [வழாஅ லோம்பிப், பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித், துருவி னன்ன புன்றலை மகாரோ, டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்.]

217. துருவின் அன்ன புன்றலை மகாரோடு—செம்மறியாட்டினை யொத்த புற்கென்ற தலையினையுடைய பிள்ளைகளோடே,

216, 215. வலந்த பரூஉக் கொடி மதலை பற்றி வழாஅல் ஓம்பி—மரங்களிற்சுற்றிக்கிடக்கின்ற பரிய கொடியாகிய பெரிய பற்றுக்கோட்டைப் பிடித்துக் கால் ஓடுதலைப் பரிகரித்து,

வி - பு. புற்கென்ற - சிவந்த. மதலை - பற்றுக்கோடு. வழாஅல் - வழுவுதல், வழுக்குதல்.

218. ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்—ஒருவரையொருவர் பாதுகாத்துப் போவீராக;

219. அழுந்து பட்டு அலமரும் புழகு அமல் சாரல்—கிழங்கு தாழவீழ்ந்து அசையும் மலையெருக்குநெருங்கின பக்கமலையில், ரு ய டு ௪

வி - பு. அழுந்து - பள்ளம்; இது கிழங்கிற்கு ஆகுபெயர். "பகன்றையும் பலாசு மகன்றலைப் புழகும்" என்பது, பெருங்கதை. அலமரும் சாரலென்க.

220 - 21. [விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா, வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி :] விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா கண் புதைத்த நுண்ணீர் பாசி வழும்பு—வீழ்ந்தோரைமறைக்கும் ஆழத்தை யுடைய குளங்களுக்கு அருகாக இடமறைதற்குக்காரணமாகிய நுண்ணிய நீர்மையையுடைய பாசியினது குற்றம்,

* "வழும்பறுக்க கில்லாவாங் தேரை - வழும்பில்சீர்" என்றார் பிறரும்.

வி - பு. மாய்த்தல் - மறைத்தல்.

222. அடி நிலை தளர்க்கும் அருப்பமும் உடைய - அடி ஊன்றியிட்ட நிலையை ஓடப்பண்ணும்; அதுவுமன்றி அவ்விடம் போதற்கருமையையு முடைய; அதற்குப் பரிகாரமாக,

வி - பு. அருப்பம் - அருமை.

223 - 4. முழுநெறி அணங்கிய நுண் கோல் வேரலோடு எருவை மெல் கோல் கொண்டனிர் கழிமின்—வழிமுழுதும் பின்னிவளர்ந்த நுண்ணிய கோல்களையுடைய சிறுமூங்கிலோடே வேழத்தினது மெல்லிய கோல் களையும் பற்றுக்கோடாகப் பிடித்துப்போவிர் ;

வி - பு. எருவை, வேழம் - கொறுக்காந்தட்டை.

இத்துணையும் ஆற்றினது நீர்மையினளவு (௬எ) கூறினார்.

225 - 8. [உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய, மாரியி னிருதரு வில் லுமிழ் கடுங்கணைத், தாரொடு பொலிந்த வினைநவில் யானைச், பொலிந்த :]
சூழியிற்

புகர் முகம் புதைய (௨௨௫) சூழியிற் பொலிந்த (௨௨௮) உயர் நிலை மா கல் (௨௨௫) வினை நவில் யானை (௨௨௭)—புகரையுடைய முகமறையும்படி

* நாலடியார், கயமை, ௨.

முகபடாத்தாற்பொலிவுபெற்ற உயர்ந்த நிலையினையுடைய பெருமையை யுடைய மலைபோலும் போர்த்தொழிலிலே பயின்ற யானையினையும்,

வி - பு. புகர் - புள்ளி. பொலிந்த - அழகுபெற்ற, சூழி, முகபடாம் - யானையின்முகத்தில் அணியும் ஒருவகை ஆடை. கல் - மலை. வினை - தொழில்.

226. மாரியின் இருதரு வில் உமிழ் கடுங்கணை—மழைபோலத் தாழ்ந்துவிழும் வில்லுக்கான்ற கடிய அம்பினையுமுடைய,

வி - பு. இருத்தல் - சொரிதல்; " இருத்தகண்ணீர் " (புறநா.

௪௭௩.) ‘வில் உமிழ்கடுங்கணை’ என்பது, “விற்பழுத் துமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி” (சீவக. ௪௩௫) என்பதில் அமைந்துள்ளது.

227. தாரொடு பொலிந்த மூத்த புரிசை (௨௨௭)--தூசிப்படையோடே பொலிவுபெற்ற பழைய மதில்,

மதில் - ஆகுபெயராய்த் திருப்பதியையுணர்த்திற்று. என்றது காரி யுண்டிக் கடவுளுடைய படைமிகுதிகூறிற்று. அன்றிப் பகைப்புலத்தை அழி த்தற்கும் அந்நிலத்தைக்காத்தற்கும் நன்னனன் வைத்த படையுமாம்.

வி - பு. தார், தூசிப்படை - முன்படை. திருப்பதி - காரியுண்டிக் கடவுள் எழுந்தருளிய தலம். ‘காரியுண்டிக்கடவுளுடைய படைமிகுதி’ என்றது, ‘தார்’ என்றதை நோக்கி. பகைப்புலம் - பகைவரிடம்.

228 - 9. [சுடர்ப்பூ விலஞ்சி, யோர்யாற் றியவின் மூத்த புரிசை :] சுடர் ப்பூ இலஞ்சி யாற்று ஓர் இயவின் மூத்த புரிசை—ஒளியையுடைய பூக்களை யுடைய மடுவினையுடைய யாற்றுக்கரையில் ஒருவழியினையுடையவூர்,

ஓராற்றியவுபாடமாயின், ஒருப்பட்டவழியென்க.

இனி அம்பையுடைய தூசிப்படையோடுபொலிந்த யானையென்று யானைக்கடையாக்கி அவ்வியானையினுடைய பூக்களெழுதின முகபடாம் போலே உயர்நிலைமாக்கற் புகர்முகம்புதையப்பொலிந்த சுடர்ப்பூவையுடைய புரிசையென்றுமாம்; இன்னும் யானையின்மத்தகம்போலேபொலிந்த சுடர்ப் பூவையுடைய புரிசையென்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம்போலே பொலிந்த

சுடர்ப்பூவிலஞ்சியையுடைய உயர்நிலைமாக்கலையுடைய புரிசை யென்பாருமுளர். அவர் சுனையிடத்து மேலெழுந்த குவளைமுதலியவற்றி னரும்புகள் தலைசாய்ந்து கற்புதைய்க்கிடந்ததற்கு யானையின் மத்தகத்துப் புகரை உவமையென்றுகொண்டார்.

வி - பு. மடு - இயல்பாகவேஉண்டான நீர்நிலை. யாறு - நதி; கரைக்கு ஆனமையின், ஆகுபெயர்; இது விட்ட ஆகுபெயரின்பாற்படும்.

230. [பராவரு மரபிற் கடவுட் காணின் :] புரிசைப் (உஉக) பரா அரு மரபிற் கடவுள் காணின்—கோயிலிற் பராவுதற்கரிய முறைமையினையுடைய கடவுளைக் கண்டீராயின்,

வி - பு.
லென்றுமாம்.

பராவுதல் - துதித்தல்; திரிகரணங்களால் வழிபாடுசெய்த கடவுள், பராவுதற்கரியவரென்பது, கந்தபுராணம், திருவவ தாரப்படலம், ௬௨ - ம் பாடலாலும் விளங்கும்.

231. [தொழாநிர் கழியி னல்லது :] நீர் தொழா கழியின் அல்லது— நீர் வணங்கிப்போம் அத்தனையல்லது,

நீரென்பது குறுகிநின்றது இனித் தொழாநிரென்பது மறையன்றித் தொழுதென்று பொருடருமேனுமுணர்க.

வி - பு. மறையன்றி - எதிர்மறையன்றி.

231 - 32. வறிது நும் இயம் தொடுதல் ஓம்புமின்—சிறிது நம்முடைய வாச்சியங்களைத் தீண்டுதலைக் காப்பீராக ; அதற்குக் காரணமென்னையெனின்,

வி பு. வறிது, சிறிதென்பது,முன்வந்துள்ள, ' வறிது

நெறியொரீஇ' (உ0உ) என்பதனாலும் விளங்கும்.

232 - 3. [மயங்கு துளி, மாரி தலையுமவன் மல்லல் வெற்பே :] அவன் மல்லல் வெற்பு மயங்கு துளி மாரி தலையும்—அவனது வளவிய நவிரமென்னு மலை மயங்கின துளியையுடைய மழையை இடைவிடாமற்பெய்யாநிற்கும்;

என்றதனாற்பயன் : வாச்சியங்களும்நனைந்து நமக்கும் போதலரிதென்ப தாம்.

வி - பு. 'மல்லல்வளனே' (தொல். உரிச். எ) மயங்கின - கலந்த.

234 - 5. [அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக், கலவ மஞ்ஞை கட்சி யிற் றளரினும் :]

234 - 5. அலகை அன்ன வெள் வேர்ப் பீலி மஞ்ஞை—பலகறையை யொத்த வெள்ளிய வேரினையுடைய பீலியையுடைய மயில்,

வி - பு. அலகு - பலகறை; சோழி. பறையலகென்பது பலகறை யெனமருவிற்றென்பர். வேர் - முருந்தெனவழங்கும். பீலி - மயிலின் கலாபம்; தோகை.

235. கட்சியில் கலவம் தளரினும்—அக்காட்டிடத்தே ஆடுதற்குவிரித்த கலாபத்தினது பாரத்தாலே ஆடியிளைத்து நிற்பினும்,

236 - 7. [கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன, நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும் :]

237. நெடுங்கழை கொம்பர்—நெடிய மூங்கிலின் கவடுகளிலே,

236 - 7. கடும்பறை கோடியர் மகாஅர் அன்ன கடுவன் உகளினும்— கடிய பறையினையுடைய கூத்தருடைய பிள்ளைகளையொத்த கடுவன்பாயினும்,

வி - பு. கவடு - கிளை. கடுவன் - ஆண்குரங்கு. இங்கே ' கடும்பறைக் கோடியர் மகாரன்னமந்தி ' என்றது, " உமணரொ ழுகையொடுவந்த, மகாஅ ரன்னமந்தி " (சிறுபா. ருரு - கூ) என்றதை நினைப்பிக்கின்றது.

238 - 9. [நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த, சூர்புக லடுக்கத் துப் பிரசங் காணினும் :]

238 - 9. நேர் கொள் நெடுவரை சூர் புகல் அடுக்கத்து — செவ்வை யைத் தன்னிடத்தேகொண்ட நெடியமலையில் தெய்வம் விரும்பின பக்கமலை யிலே,

238 - 9. நேமியின் தொடுத்த பிரசம் காணினும்—தேருருள்போல் வைத்த தேனிறாலைக் காணினும்,

வி - பு. நேர் கொள் நெடுவரை - செங்குத்தானமலை. சூர் - தெய்வம்; அச்சத்தைத் தருவது. புகலுதல் - விரும்புதல். பிரசம் - தேன். தேனிறால் - தேனடை; நேமி - தேருருள்; வட்டவடிவமுடையது; நேமி - வட்டம்.

240 - 41. [ஞெரேரென நோக்க லோம்புமி னுரித்தன்று, நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர் :]

240. ஞெரேரென நோக்கல் உரித்தன்று—கடுகப்பார்த்தல் நுமக்குரிய தொழிலன்று; அதற்குக் காரணமென்னையெனின்,

வி - பு. ஞெரேரென - விரைவுக்குறிப்பை உணர்த்தும்

இடைச்சொல்.

241. மெல்லடி நிரை செலல் நெறி மாறுபடுகுவிர்—மெல்லிய அடி யாலே நிரைத்துச் செல்லுதலையுடைய வழிதப்புவிர்;

வி - பு. நிரைத்து - வரிசையுற்று.

240. ஓம்புமின்—ஆதலால் அங்ஙனம நோக்குதலைப் பாதுகாப்பீர்;

இதுவும் ஆற்றினது அருமைகூறிற்று.

242. வரை சேர் வகுந்தின் கானத்து படினே—மலையைச்சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தேசெல்லின்,

வி - பு. வகுந்து - வழி.

243 - 9. [கழுதிற் சேணோ னேவொடு போகி, யிழுதி னன்ன வானி ணஞ் செருக்கி, நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பி, னெறிகெடக் கிடந்த விரும்பிண ரெருத்தி, னிருடெணிந் தன்ன வேனுங் காணின், முளிகழை யிழைந்த காடுபடு தீயி, னளிபுகை கமழா திருயினிர் மிசைந்து :]

கழுதில் சேணோன் (உசரு) நிறம் புண் கூர்ந்த (உசு) ஏவொடு போகி (உசரு) நெறிகெட கிடந்த (உசகூ) ஏனம் (உசஎ)—பரணின்மேலிருந்த யானைமுதலியவற்றிற்கு எட்டாதவன் எய்த மருமத்திற் புண்மிகுதற்குக்கார ணமான அம்போடேபோகி நெறிகெடக்கிடந்த பன்றி,

வி - பு. கழுது, பரணென்பதை, "பணவை யிதணங் கழுது பரணே" என்னும் பிங்கலந்தையாலுணர்க. சேணோன் - நெடுந்தூரத்திலுள்ள வன்; சேண் - நெடுந்தூரம்; "கலிகெழு மீமிசைச் சேணோ னிழைத்த, புலி யஞ் சிதண மேறி" (குறிஞ்சி. ௪0 - ௪௧) என்பதனாலுணர்க. நிறம், மரு மம் - மார்பு. ஏ - அம்பு; ஏத்தொழிலையுடையது; "ஏமாறில்லா விந்திரன்", "ஏத்தருங்கொடியனூர்" (சீவக. ௧௯௬௮, ௨௮0௪) என்பவற்றாலும், அவற்றின் உரைகளாலும் உணர்க. நெறிகெட - வழிசிதைய. ஏனம்

- பன்றி. தொல்காப்பியம், மரபியலில், முதற்சூத்திரத்தின் விசேடவுரையில், 'மாற் றருஞ் சிறப்பின்' என்றதனாற் போந்தபொருளாகிய, 'இவை ஒருதலையாகத் தத்தம் மரபிற் பிறழாமற் செய்யுள்செய்யப்படுமென்பதூஉம், ஈண்டுக்கூறு தனவாயின வழக்கொடுபட்ட மரபு பிறழவும் செய்யுளின்பம்படின் அவ்வாறு செய்யவென்பதூஉம் கூறியவாறாயிற்று ' என்பதற்குக் காட்டியஉதாரணங் களுள், 'இருடுணிந்தன்னவேனம்' என்பது ஒன்று.

நிலம் தின் மருப்பின் (௨௪௫) இழுதின் அன்ன வால் நிணம் செருக்கி
(௨௪௪) இரும்பிணர் எருத்தின் (௨௪௬) இருள் துணிந்தன்ன ஏனம் (௨௪௭)—

7

கிழங்குகளை அகழ்ந்து தின்கையினாலே மண்டின்றுதேய்ந்த கொம்பினையும் நெய்விழுதினையொத்த வெள்ளியநிணம் செருக்கும்படி கரியசருச்சரையை யுடைத்தாகிய கழுத்தினையுமுடைய இருள் அற்றுக்கிடந்தாற்போன்ற ஏனம், செருக்கவெனத்திரிக்க.

வி - பு. நிலம் தின் - நிலத்தால் தின்னப்பட்ட.' நிணம் - கொழுப்பு. சருச்சரை - சரசரப்பு. பன்றியைப் பிடிப்போர் அதுவரும்வழியில் குழியை வெட்டிவைத்து அதனை மறைத்துவிட்டுத் தாம் பரணின்மேல் இருப்பார்; இதனை, "சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின், வீழ்முகக் கேழ லட்ட பூசல்" (**மது.** ௨௯௪ - ௫) என்பதனாலறிக.

௯-248 - 9. ஏனம் காணின் முளரி கழை/இழைந்த காடு படு தீயின் நளி புகை கமழாது இறாயினிர் மிசைந்து—பன்றியைக்கண்டீராயின் உலர்ந்தமூங் கில் தம்மில்இழைந்ததனாற் பிறந்த காடெங்குமுண்டாகிய தீயினாலே செறிந்த

புகைகாருமல் வக்கி மயிர்போகச்சீவித் தின்று,

வி - பு. முளிதல் - உலர்தல். இழைதல் - உரஞ்சுதல். நளி - செறிவு. இருவுதல் - நெருப்பில்வாட்டி மயிர்போகச் சீவுதல். வக்குதல் - வாட்டுதல். "வன்பெரும் பன்றி தன்னை யெரியினில் வக்கி", "கொழுப்பரிந்து, வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து" (பேரிய. கண்ணப்ப. ககஎ, கசுடு) என்பவை ஈண்டு அறியத்தக்கவை.

250 - 251. [துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்க், குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி :] குவளை அம் பைஞ்சுனை துகள் அற துணிந்த மணி மருள் தெண்ணீர் அசைவிட பருகி—குவளையால் அழகிய பசிய நிறத்தவாகிய சுனையில் கலக்கமறத்தெளிந்த பளிங்கென்றுமருளும் தெளிந்த நீரை வழியில் இளைப்புத்தீரும்படி குடித்து,

அசைவு, விகாரம்.

வி - பு. துணிதல், தெளிதலென்பதை, " துணிநீர் மெல்லவல் " (மது. உஅங) என்பதன் பொருளாலும் தெளிக.

252. [மிகுத்துப் பதங்கொண்ட பரூஉக்கட் பொதியினிர் :] பரூஉ கண் பதம் மிகுத்து கொண்ட பொதியினிர்—பருத்த இடத்தையுடைய தசையாகியவுணவை முழுதுந்தின்னுமல் மிகுத்துவைத்துக்கட்டிக்கொண்ட பொதியின்சுமையினையுடையிராய்,

வி - பு. பதம் - உணவு பொதி - மூடை; பொதிதலையுடையது.

253. புன் கை போகிய புன்றலை மகாரோடு—வளை கையினின்றும் போதற்குக்காரணமான சிவந்த தலையினையுடைய பிள்ளைகளோடே,

பிள்ளைப்பேற்றுல் வளையிடாராகலின், வளைபோதற்குப் பிள்ளைகள்காரணமாயினர்.

வி - பு. புன், வளை யென்பது, " புள்ளும் யாழுங் குழலு மேங்க " (சீவக. உ0ககக) என்பதனுலும் விளங்கும். போகிய, காரியப்பொருளில் வந்தது. புன்றலைமகார், " துருவி னன்ன புன்றலை மகார் " (உகஎ) என இந்நூலில் முன்பும் வந்துள்ளது.

254 - 5. [அற்கிடை கழிதலோம்பி யாற்றநு மில்புக் கன்ன கல்லளை வதிமின் :] இடை கழிதல் ஓம்பி ஆற்ற நும் இல் புக்கன்ன கல் அளை அற்கு வதிமின்—அவ்விடத்துப் போதலைப்பரிகரித்து வழியிடத்தனவாகிய நும் இல்லிலே புக்காலொத்த கல்முழைஞ்சுகளிலே இராக்காலத்துத் தங்குவிர்;

வி - பு. அளை; முழைஞ்சு - குகை.

இஃது அசையுநற்புலமும் வல்சியும் சேரக்கூறிற்று.

கானத்துப்படின் (௨௪௨) மிசைந்து (௨௪௩) பருகிப் (௨௫௧) பொதியி னிராய் (௨௫௨) மகாரோம்ட (௨௫௩) கழிதலோம்பி அற்கு (௨௫௪) வதிமின் (௨௫௫) எனக.

256. அல் சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி—இராக்காலத்திற்கு எல்லாருங்கூடித் தங்கி இளைப்பாறி,

257. வான் கண் விரிந்த விடியல் எற்றெழுந்து—வானிடத்தே ஞாயிற் றின்கதிர்விரிந்த விடியற்காலத்தே துயிலுணர்ந்தெழுந்து,

வி - பு. உலகிற்குக் கண்ணாதலின், சூரியனைக் கண்ணென்றார்; இது, "வான்கண் விழியா வைகறை யாமத்து" (சிலப். நாடுகாண். ௧) என்பதனாலும், 'உலகிற்குக் கண்ணாகிய ஆதித்தன் தோன்றி விளங்காத வைகறையென்னும் யாமத்திடத்து' என்னும் அதன் உரையாலும் விளங்கும்; "எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்குங் கண்ணவா னிவனே யன்றோ" (பாரதம், அருச்சுனன். ௩௯.) என வில்லிபுத்தூராழ்வாரும் சூரியனை உலகின்கண்ணாகக் கூறியிருத்தல் காண்க.

258. கான் அகப்பட்ட செந்நெறி கொண்மின்—காட்டிடத்தே கிடந்த செவ்விய நெறியைப் போவீராக;

வி - பு. செந்நெறி - செம்மையாகியவழி.

259 - 65. [கயங்கண் டன்ன வகன்பை யங்கண், மைந்துமலி சினத்த களிறுமத னழிக்குந், துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி, யிகந்துசேட் கம ழும் பூவு முண்டோர், மறந்தமை கல்லாப் பழனு மூழிறந்து, பெரும்பயங் கழியினு மாந்தர் துன்ஞ், ரிருங்கால் வீயும் பெருமரக் குழாமும் :]

259 - 61. அகன் பை அம் கண் மைந்து மலி சினத்த களிறு மதன்

அழிக்கும் துஞ்சு மரம் கடுக்கும் மாசுணம் விலங்கி— அகன்றபடத்தினையும் அழகியகண்ணினையுமுடைய வலிமிகுகின்ற சினத்தவாகிய யானைவலியைக் கெடுத்துவிழுங்கும் விழுந்துகிடக்கின்ற பெருமரங்களையொக்கும் பெரும்பாம்புகிடக்கின்ற வழியைவிலங்கி,

வி - பு. பை - படம். மைந்து - வலிமை. மதன் - வலி. துஞ்சுதல் தூங்குதலாதலின், விழுந்துகிடத்தற்காயிற்று. அழிக்கும் மாசுணமென்க; பெரும்பாம்பு களிற்றை விழுங்குமென்பது, "வெண்கோட் டியானை விளிபடத் தழவு, மகல்வாய்ப் பாந்தள்" (அகநா. சுஅ,) "குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை" (திருச்சிற்றம்பல. உக) "புழுங்குவெம் பசியொடு புரளும் பேரரா, விழுங்கவுந் தெறிரெதிர் விரித்த வாயின்வாய், முழங்குவெங் கரிபுகும்" (கம்ப. தாடகை. கக) என்பவற்றாலும் விளங்கும்.

பெரும்பயம் கழியினும் (உசுச) ஊழ் இறந்து (உசுரு) இகந்து சேண்

கமழும் பூவும் உண்டோர் (உசுஉ) மறந்து அமைகல்லா பழனும் (உசுங) மாந்தர் துன்னார் (உசுச)—அவற்றாற்கொள்ளும் பெரியபயன் கொள்ளாமற் போகிலும் முற்காலம்அடிப்பட்டுப்போந்த முறைமையைக்கடந்து, தாம்நிற் கின்ற இடத்தைக்கடந்து தூரியநிலத்தே சென்றாலும் பூவையும் நுகர்ந்தவர் மறந்து உயிர்வாழ்தலாற்றாத பழங்களையும் தெய்வங்களன்றி மானிடர் அணுகாராகையினாலே,

ஊழிறந்து துன்னாரென்க.

இரு கால் வீயும் (உசுரு) பழனும் (உசுங) கயம் கண்டன்ன (உசுசு) பெரு மரக்குழாமும் (உசுரு)—நீளுங்காம்பையுடைய அப்பூக்களையும் பழத் தையும் குளத்தைக்கண்டாற்போலுங் குளிர்ச்சியையுடைய பெரியமரக்குழாத் தினையும்,

266 -7. [இடனும் வலனு நினையினிர் நோக்கிக், குறியறிந் தவையவை குறுகாது கழிமின் :] நினையினிர் குறியறிந்து இடனும் வலனும் நோக்கி அவைஅவை குறுகாது கழிமின்—யான்கூறியதனைநினைத்து அவற்றின்குறி களையறிந்து இடத்தினும்வலத்தினும்பார்த்து அவையிற்றை அவையிற்றை அணுகாமற் போவீர்;

வி - பு. அவையிற்றை - அவற்றை; 'உண்டற் கினிய பழனுங் கண் டோர், மலைதற் கினிய பூவுங் காட்டி' (உஅஉ - ங) என இந்நூலிற் பின்னர் வரும் பகுதி இங்கே அறிதற்பாலது.

விலங்கி நோக்கிக் குறுகாது கழிமினென்க.

இது சோலை (சுக) கூறிற்று.

268 -9. கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து கூடு இயத்தன்ன குரல் புணர் புள்ளின்—கொம்புகள்பலவுமுற்றிய பழத்தைத் தன்னிடத்தே கொண்டதாகிய ஆலமரத்திடத்தே கூடின பலவாச்சியங்களையொத்த பல ஓசையுங்கூடின பறவைத்திரளையுடைய

நாடுகா (உஎ0) ணென்க.

வி - பு. கோடு, கொம்பு - கிளைகள் ; " மூரஞ்சன் முதிர்வே " (தோல். உரிச். ௩௫) என்னும் சூத்திரத்திற்கு இந்தப்பகுதியே மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கோளி - கொள்ளுதலையுடையது ; இச்சொல்லுக்குப் பூவாது காய்க்குமரமென்றுபொருள்கூறுவது முண்டு. ஆலமரத்திற் பலவகைப்பறவைகள் கூடிமுழங்குதல் பலவகைமுழக்கங்களின் தொகுதிக்கு உவமையாக, "முட்டிலா மூவறு பாடை மாக்களாற், புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய, மட்டிலா வளநகர் ", " மாசனம்,........பழுமரப் பறவையொத்தவே " (சீவக. கூ௨, அ௨அ,) "பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் பதினெண், டேய மாந்தருங் கிளந்தசொற் றிரட்சிதான் " (திருவிளை. நகர. கூஎ.) என வேறுசிலராலும் கூறப்பெற்றுள்ளது.

270. நாடு காண் நனந்தலை மென்மெல அகன்மின்—நாடுகளையெல்லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலையை மெல்லமெல்லப் போவீர் ;

நனந்தலை - ஆகுபெயர்.

வி - பு. நன - அகலம் ; இஃது அகரவீற்று உரிச்சொல் ; “ நனவே
களனு மகலமுஞ் செய்யும்” (தொல். உரிச். எஅ) மலையுச்சி இங்கே ‘நாடு காணனந்தலை’ எனக்கூறப்பட்டாற்போலவே, “கோடுபல விரிந்த நாடுகா
ணெடுவரை” (அடு) எனப் பதிற்றுப்பத்திலும் கூறப்பெற்றுள்ளது. திருக்குறுங்குடியின் பக்கத்துள்ள ஒரு மலையின் உச்சி மிகவும் உயர்ந்து நாடுகாணியென இன்னும் வழங்கப்படுகின்றது.

271. மா நிழல் பட்ட மரம் பயில் இறும்பின்—பெரியநிழலுண்டான மரம்நெருங்கின குறுங்காட்டாலே,

272. [ஞாயிறு தெருஅ மாக நனந்தலை :] மாகம் ஞாயிறு தெருஅ நனந்தலை—ஆகாயத்திற்றிரியும் ஞாயிறு சுடப்படாத அகன்ற இடத்தை யுடைய குன்றம் (உஎடு),

273 - 5. தேஎம் மருளும் அமையமாயினும் இறுஅ வன்சிலையர் மா தேர்பு கொட்கும் குறவரும் மருளும் குன்றத்து படினே—திசைதெரியாமல் மயங்கும் இராக்காலமாயினும் முறியாத வலியவில்லையுடையராய் விலங்கு தேர்ந்துநின்று சுழன்றுதிரியும் குறவருமுட்படமயங்கும் குன்றத்தே நீங்கள் செல்லின்,

வி - பு. தேம் - திசை. சிந்தாமணியில், “ பூட்டுசிலை யிறவினொடு ” என்றவிடத்து இறமீனுக்கு வில்லை உவமை கூறியிருத்தலால், இங்கேயுள்ள ‘ இறவன் சிலையர் ’ என்பதற்கு இறமீனைப்போன்ற வலிய வில்லையுடையவரென்று பொருள்கூறினும் பொருந்தும். விலங்கு தேர்ந்து - மிருகங்களைத் தேடிக்கொண்டு. ‘

குறவரு மருளுங் குன்றம் ' என்பது, உம்மை உயர்வுசிறப் புப் பொருளில்வந்ததற்கு மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது ; (தொல். இடைச். சூ. எ. ரு. உரை) இந்தவாக்கியத்தை இப்படியே " அக்கானிடைக், குறவரும்மருள் குன்றமொன்றுண்டரோ " எனக் (சூளா. மேல்கடல். ௩௧) சூசலோபாக்கியானத்தில் அமைத்திருக்கின்றனர்.

276 - 7. [அகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென, வியங்க லோம்பிநு மியங்க டொடுமின் :] இயங்கல் ஓம்பி அகன் கண் பாறை துவன்றி கல் லென நும் இயங்கள் தொடுமின்—அவ்வழியைப் போதலைப் பரிகரித்து அகன்ற இடத்தையுடைய பாறையிலே குவிந்து கல்லென்னுமோசைபட நும்முடையவாச்சியங்களை வாசிப்பீராக ;

278 - 9. பாடு இன் அருவி பயம் கெழு மீமிசை காடு காத்துறையும் கானவர் உளரே—ஓசையினிதாகிய அருவியின்பயன்பொருந்திய உச்சிமலை யிலே காட்டைக்காத்திருக்குங் கானவர் பலருமுளர் ;

ஏகாரம் - ஈற்றசை.

வி - பு. பாடு - ஓசை. இதனை, " பாடின் படுமணி யிரட்ட " என்பதனு லுமுணர்க ; (திருமு. ௧௩.) இவ்வடி, " பாடின் னருவிப் பயங்கெழு மாமலை " (உ௧௧௨.) எனச் சீவகசிந்தாமணியில் அமைக்கப்பெற்றுள்ளது.

ரு௯௨ மலைபடுகடாம்.

280 - 81. நிலை துறை வழீஇய மதன் அழி மாக்கள் புனல் படு பூசலின்—நிலையாய்ப்போந் துறையைத்தப்பி ஆழத்திலேபுக்க வலியழிந்தமாக்கள் புனலிலேயழுந்துகின்ற வருத்தங்கண்டு விரைந்தெடுப்பாரைப்போல,

வி - பு. மாக்கள் - ஐயறிவினையுடையார்.

281 - 6. [விரைந்துவல் லெய்தி, யுண்டற் கினிய பழனுங் கண்டோர் மலைதற் கினிய பூவுங் காட்டி, யூறு நிரம்பிய வாறவர் முந்துற, நும்மி னெஞ்சத் தவலம் வீட, விம்மென் கடும்போ டினியி ராகுவிர்:]

நெஞ்சத்து அவலம் வீட (உஅரு) விரைந்து வல்லெய்தி (உஅக)—திசை மயக்கத்தாற்கலங்கி அறிவழிந்த நெஞ்சிற் கேடு போம்படி ஓடிக் கடுகவந்து சேர்ந்து,

282 - 3. உண்டற்கு இனிய பழனும் கண்டோர் மலைதற்கு இனிய பூவும் காட்டி—எல்லாரும் உண்டற்கினியவாகிய பழங்களையும் கண்டவர்கள் சூடுதற்கினியவாகிய பூக்களையும் நுமக்குக்காட்டி, நீர் அவற்றைநுகர்ந்தபின்பு,

வி - பு. 'உண்டற்கினிய' என்பது இந்நூல், கஙஉ - ம் அடியிலும் வந்துள்ளது.

284. அவர் ஊறு நிரம்பிய ஆறு முந்துற—அக்கானவர் இடையூறு மிக்கவழியை நுமக்குமுற்படப் போகையினாலே,

285 - 6. நும்மின் இம்மென் கடும்போடு இனியிராகுவிர்—நும்முடைய இம்மென்னும் ஓசையையுடைய சுற்றத்தோடே மனமகிழ்வீர்;

வி - பு. சுற்றத்தார் இசைப்புலவராதலால், "இம்மென்கடும்பு" என்றார்.

287. அறிஞர் கூறிய மாதிரம் கைக்கொள்பு—திசைமயக்கநாடியறிவார் கூறியதிசையையுட்கொண்டு,

288 - 9.

[குறியவு நெடியவு மூழ்இழிபு புதுவோர், நோக்கினும் பனிக்கு நோய்கூரடுக்கத்து :]

புதுவோர் நோக்கினும் பனிக்கும் நோய் கூர் அடுக்கத்து—புதியமாந்தர் கண்ணால்நோக்கினுந் தலைநடுக்கும் நோய்மிக்க பக்கமலையிடத்து,

குறியவும் நெடியவும் ஊழ் இழிபு—குறியனவும் நெடியனவுமாகிய குவடுகளை முறைமைப்பட இழிந்து,

வி - பு. குறிய, நெடிய - அஃறிணைப்பன்மைப்பெயர். ஊழ் - முறை.

290. அலர் தாய வரி நிழல் அசையினிர் இருப்பின்—பூப்பரந்த பலவரிகளையுடையவாகிய நிழலிலே இளைத்திருப்பின்,

வி - பு. இடையிடையே வெய்யிலும் கலந்திருத்தலின், 'வரிநிழல்' என்றார்; "சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ" (கஉ) என்னும் சிறுபாணாற்றுப்படையில் வரிநிழலென்பதற்குச் செறியாத நிழலென்று பொருள் செய்யப்பெற்றிருக்கிறது.

291. பல திறம் பெயர்பவை கேட்குவிர்—பலகூறுபாடுகளையுடையவாய் எழுகின்ற ஓசைகளைக் கேட்பீர் ;

மாதோ - அசை.

மலைபடுகடாம். ௫௫

292. கலை தொடு பெரும்பழம் புண்கூர்ந்து

ஊறலின்—முசுக்கலை தோண்டின பெரியபலாப்பழம் புண்மிக்குத் தேனூறுகையினாலே,

வி - பு. பலாப்பழம் இங்ஙனமே " புண்ணரிந், தாலை யுக்கன நெடுந்தா வாசினி " என முன்னும் கூறப்பெற்றுள்ளது ; கடஅ - கூ முசு - குரங்கின் சாதியுள் ஒன்று கலை - அதன் ஆண்.

293. மலைமுழுதும் கமழும் மாதிரந்தோறும்—மலைமுழுதும் அத்தேனூறுந் திசைகடோறும்,

294 - 6. [அருவி நுகரும் வானர மகளிர், வருவிசை தவிராது வாங்குபு குடைதொறுந், தெரியிமிழ் கொண்ட நும்மியம்போ லின்னிசை :] வாங்குபு வருவிசை தவிராது இமிழ் கொண்ட அருவி நுகரும் வானரமகளிர் குடை தொறும் நும் இயம் போல் தெரி இன்னிசை—உள்ள பண்டங்களை வாங்கிக் கொண்டு வருகின்ற விசைதவிராது ஒலித்தலைக்கொண்ட அருவியையாடும் தெய்வமகளிர் அதனைக் கையாற்குடையுந்தோறும் நம்முடைய வாச்சியங்களைப்போல் தாளந்தெரிகின்ற இனியவோசையும்,

வி - பு. வாங்குதல், அருவியின் தொழில். நீராடுவோர், அதில் கையால் பலவகையான வாச்சியவோசையைப் பிறப்பித்தலுண்டென்பது, " கயங் குடைந்தன்ன வியந்தொட்டு " (மதுரைக்காஞ்சி, ௩௬௩), " தண்ணுமை முழவ மொந்தை தகுணிச்சம் பிறவு மோசை, யெண்ணிய விரலோ டங்கை புறங்கையி னிசைய வாக்கித், திண்ணிதிற் றெறித்து மோவார் கொட்டியுங் குடைந்து மாடி, யொண்ணுதன் மகளிர் தம்மோ டொர்மிசை யவர்க ளொத்தார் " (சீவக. ௬௬௫) என்பதனாலும் விளங்குகின்றது.

297 - 9. [இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல், விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர், புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல் :]

298 - 9. விலங்கல் மீமிசை பணவை கானவர் புலம் புக்கு உண்ணும்—மலையின்மேலிட்டபரணிற் கானவர் தினைப்புனத்தைப் புகுந்துதின்னும்,

297, 299. இலங்கு ஏந்து மருப்பின் இனம் பிரி ஒருத்தல் புரி வளை பூசல்—விளங்குகின்ற ஏந்தின கொம்பையுடைய தன்னினத்தைப்பிரிந்த யானைத்தலைவனைப் பிடித்தற்குவிரும்பின வளைத்தலையுடைய ஆரவாரமும்,

வி - பு. பணவை - பரண். அது மிகவும் உயரமான இடத்தில் அமைக்கப்படுமென்பதை, “ கானவர், விண்டோய் பணவைமிசை ஞெகிழி பொத்த ” என்பதனாலும் அறிக; (குறிஞ்சி. ௨௨௫- ௬.) தலைமைவாய்ந்த ஆண்யானையை யானைத்தலைவனென உயர்திணைவாய்பாட்டாற் கூறுவது மரபு. “ மாதத், தலை வனே யொத்துப் பொலிந்தது சந்திர சைலம் ” (கம்ப. வரைக்காட்சி. எ.) என்பதனாலும் அது விளங்குகின்றது.

300 - 301. சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளின், னெய்தெற விழுக்கிய கானவ ரழுகை :] சேய் அளை பள்ளி எய் எஃகு உறு முள்ளின் நெய் தெற இழுக்கிய கானவர் அழுகை—நெடிய முழையாகிய இருப்பிடத்தில்தங்கும் எய்ப்

பன்றி தனதுகூர்மையுறுகின்றமுள்ளால் எய்துகொல்லுகையினாலே பட்ட கானவரழுகின்ற அழுகையும்,

வி - பு. அளை, முழை - குகை. எய்ப்பன்றி - முள்ளம்பன்றி. இது

தன்உடம்பிலுள்ள முள்ளைவீசிப் பிறரைக்கொல்லுமென்பதை, "வையுறு முனைமுள்ளெ, யெய்யுதறின வொய்யெனவெதி ரெய்யடகணை யென்ன" (சீகாளத்திப். கண்ணப்ப. அகூ) என்பதனாலும்அறிக.

302 - 4. [கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பி, னெடுவசி விழுப் புண் டணிமார் காப்பென, வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல் :] கொழு நர் மார்பில் கொடுவரி பாய்ந்தென நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென அறல் வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்—தம்கணவர்மார்பிலே புலிபாய்ந்த தாகப் பட்ட நெடிய பிளத்தலையுடைய சீரியபுண்ணை ஆற்றுதற்குக் காவ லென்றுகருதி அறல்வீற்றிருந்த மயிரினையுடைய கொடிச்சியர்பாடும் பாட்டா லெழுந்த ஓசையும்,

வி - பு. கொடுவரி - வளைந்தகோடுகளையுடையது; புலி; அன்மொழித் தொகை. வசி - பிளப்பு. "விழுப்புண் படாத நாளெல்லாம்" என்னும் திருக்குறளின் விசேடவுரையில், 'விழுப்புண் - முகத்தினும் மார்பினும் பட்ட புண்' என்றார், பரிமேலழகர். புண்ணையாற்றுதற்கு இசைபாடுதல் பாதுகாப் பென்பதை, "ஆம்பலூதி, இசைமணி யெறிந்து காஞ்சி பாடி......, காக்கம் வம்மோ காதலந்தோழி.........நெடுந்தகைபுண்ணே" (புறநா. உஅக) என் னும் செய்யுட்பகுதியும் விளக்குகின்றது.

305 - 6. தலை நாள் பூத்த பொன் இணர் வேங்கை மலைமார் இடூஉம் ஏமம் பூசல்—முதனாளிலேபூத்த பொன்போலுங்கொத்தினையுடைய வேங்

கைப்பூவைச்சூடுதற்கு மகளிர் புலிபுலியென்றுகூப்பிடும் மெத்தையுடைய
ஆரவாரமும்,
வேங்கைவளைந்து பூவைக்கொடுத்தலின், அச்சந்தீர்ந்த பூசலென்றார்.
வி - பு. வேங்கைப்பூவைப்பறிக்குங் குறமகளிர், 'அம்மரக்கிளை தாழ்
ந்துகொடுக்குமென்று நினைந்து, 'புலிபுலி' என்றுகூவி மலர்பறித்தல் மர
பென்று தெரிகின்றது; "கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர், நறும்
பூக் கொய்யுங் கானவர் பூசல்" (மது. உகங - எ) என்பதனுரையாகிய,
'கரியதாளினையுடைய வேங்கையிடத்துப் பெரிய கவடுகளிற்றோன்றிய
சிறியகொம்புகளிற்பூத்த நறியபூவைப்பறிக்குமகளிர் புலிபுலியென்றுகூறும்
ஆரவாரம்' என்பதனாலும், "ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்,
புலிபுலியென்னும் பூச றோன்ற", "கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்
கர்ப், பொன்னேர் புதுமலர் வேண்டிய குறவ, ரின்னா விசைய பூசல் பயிற்ற
லின்" (அகநா. சஅ, இஉ) என்பவற்றாலும் இவற்றின்குறிப்புரைகளாலும்
அது விளங்குகின்றது.
307. கன்று அரை பட்ட கயந்தலை மடப்பிடி—கன்று வயிற்றிலே

யுண்டான மெல்லியதலையினையுடைய மடப்பத்தையுடைய பிடியை,

வி - பு. பயிதல் - உண்டாதல். கய - மென்மை; "கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்" (**தொல்.** உரிச். உச.) என்பதனுரையில், "கயந் தலை மடப்பிடி" என்னும் இந்தப்பகுதியே மேற்கோளாகக் காட்டப்பெற் றுள்ளது.

308. வலிக்கு வரம்பாகிய கணவன் ஓம்பலின்—வலிக்கு ஓரெல்லையாகிய களிறு கவழந்தேடிக்கொடுத்துப் பாதுகாத்துப் போகையினாலே,

வி - பு. கணவனென்பது சில அஃறிணைப் பொருளின் ஆண்பாற் பெயராகவும் வழங்குகிறது; "மாயா வேட்டம் போகிய கணவன், பொய்யா மரபிற் பிணவுநினைந் திரங்கும்" (**நற்.** ௧௦௩), "வங்காக் கிடந்த செங்காற் பேடை, யெழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது (**குறுந்.** ௧௫௧) என்பவற்றால் அறிக.

309. ஒண் கேழ் வயம் புலி பாய்ந்தென—அப்போக்கினைக்குறித்து ஒளித்திருந்து ஒள்ளிய நிறத்தையுடைய வலியபுலி பாய்ந்ததாக,

309 - 10 கிளையொடு நெடு வரை இயம்பும் இடி உமிழ் தழங்கு குரல்— அப்பிடி தன்சுற்றத்தொடே நெடியமலையிடத்தேகூப்பிடும் இடியோசைபோலும் முழங்குங்குரலும்,

இடியுமிழ்ந்த ஓசையை ஆகுபெயரான் உமிழ் என்றார்.

311. கை கோள் மறந்த கருவிரல் மந்தி—பார்ப்பைத் தன்கையால்

தழுவிக் கோடலைமறந்த கரியவிரலையுடையமந்தி,

312. அரு விடர் வீழ்ந்த தன் கல்லா பார்ப்பிற்கு—எடுத்தற்கரிய ஆழ்ந்த முழையிலேவீழ்ந்திறந்த தன்குட்டிக்கு,

கல்லாமை - தனக்குரியதொழிலைக் கல்லாமை.

வி - பு. தனக்குரியதொழிலைக் கல்லாமையாவது, தாயின் மார்பை இறுகப்பற்றிக்கொள்ள அறியாமை. குரங்கின்குட்டியைப் பார்ப்பென்று வழங்குதல் "பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே" (குறுந். உஎஅ) என் பதனாலும் விளங்கும்.

313 - 4. முறி மேய் யாக்கை கிளையொடு துவன்றி சிறுமை உற்ற களையா பூசல்—தளிரைமேய்ந்துவளர்ந்த வடிவினையுடைய சுற்றத்தோடே நெருங்கி நோய்மிக்க விலக்கப்படாத ஆரவாரமும்,

மந்தி பார்ப்பிற்குத் துவன்றிச் சிறுமையுற்ற பூசலென்க.

315 - 6. கலை கை அற்ற காண்பு இன் நெடு வரை நிலை பெய்து இட்ட மால்பு நெறியாக—முசுக்கலை ஏறமுடியாதென்று செயலற்ற காட்சியினிய உயர்ந்தவரையிலே நிலைபேறுண்டாகக் கூட்டிநட்ட கண்ணேணியே வழியாகச் சென்று,

வி - பு. கை - செயல். கண்ணேணியாவது கணுக்களிலேயே அடி வைத்து ஏறிச்செல்லும்படி அமைத்துள்ளமூங்கில். மலையினுச்சியிலுள்ள தேனிறாலைஅழிக்கும் பொருட்டுச் செங்குத்தான மலையில் ஏறிச்செல்வதற்கு அதன் அயலில் இவ்விரண்டுமூங்கில்களைக்கூட்டி நடுவது வழக்கம். கண் - கணு. "மால்புடை நெடுவரைக் கோடு" என்றார் புறநானூற்றிலும்; ௧0௫.

௫அ மலைபடுகடாம்.

317. பெரும்பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை—பெரியபயனுண்டாகத் தேனைத் திரட்டிவைத்த

தேனையழித்துக்கொண்ட கொள்ளையா லுண்டான ஆரவாரமும்,

318 - 9. [அருங்குறும் பெறிந்த கானவ ருவகை, திருந்துவே லண் ணற்கு விருந்திறை சான்மென :]

319. திருந்து வேல் அண்ணற்கு விருந்து இறை சான்மென—திருந் தும்வேலினையுடைய நன்னனுக்குப் புதிதாகக்கொடுத்தற்கு இவற்றிற்கைக் கொண்டபொருள்கள் அமையுமெனக் கருதிச்சென்று,

318. அரு குறும்பு எறிந்த கானவர் உவகை—அழித்தற்கரிய குறும்புகளையழித்த கானவர் மகிழ்ச்சியிலுண்டான ஆரவாரமும்,

வி - பு. இவற்றிற் கைக்கொண்ட - இந்தச் சிற்றரண்களிலிருந்து யாம் கைக்கொண்ட. குறும்பு - பகைவர்தங்கும் சிற்றரண்.

320 - 22. நறவு நாட்செய்த குறவர் தம் பெண்டிரொடு மான் தோல் சிறுபறை கல்லென கறங்க வான் தோய் மீமிசை அயரும் குரவை—நறவை நாட்காலத்தேகுடித்தகுறவர் தம்பெண்டிரோடேகூடி மான்றோல்போர்த்த சிறுபறை கல்லென்னும்ஓசைபடவொலிப்ப வானைத்தீண்டும் உச்சிமலையிலேயாடுங் குரவைக்கூத்தின் ஆரவாரமும்,

வி - பு. நாட்காலம் - விடியற்காலம். குரவை - குரவைக்கூத்து ; எழுவர் கைகோத்து மண்டலமாக ஆடுவது ; இருபாலாரும் விரவியாடுதல் உண் மையின், குறவர் தம் பெண்டிரொடு அயருங் குரவையென்றார். இதனை, " மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும், ஆடிய குரவையிஃது " (மணி. கக - ம் காதை, சுரு - சு.) என்பதனாலும், " மாயவன் றன் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்........ தாதெருமன் றத்தாடும் குரவையோ தகவுடைத்தே " (சில. ஆய்ச்சியர்குரவை) என்பதனாலும் அறிக. இங்கே கூறியகுரவை முருகக்கடவுளைநோக்கி ஆடும் குன்றக் குரவையின்பாற்படும்.

323 - 4. [நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன, கல்யா ரொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை:] நல் எழில் நெடு தேர் இயவு வந்தன்ன ஒலிக்கும் கல் யாறு விடர் முழங்கு இரங்கு இசை—நல்ல அழகினையுடைய நெடியதேர் கள் வழியிலே ஓடிவந்ததன்மையவாக ஒலிக்கும் கல்லின்மேல்வரும் யாறுகள் முழைஞ்சுகளிலேவீழ்ந்து மாறாது ஒலிக்கும் ஓசையும்,

325 - 7. நெடுசுழி பட்ட கடுங்கண் வேழத்து உரவு சினம் தணித்து பெரு வெளில் பிணிமார் விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை—காட்டாற்றின் நெடியசுழியிலேவீழ்ந்து அகப்பட்ட தறுகண்மையையுடைய யானையினது வலிய சினத்தைத் தணியப்பண்ணிப் பெரியகம்பத்திலே சேர்த்தற்குத் தமதுஏவற்றொழிலைச்செய்தற்குக்காரணமான பேச்சுக்களைப்பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆரவாரமும்,

வி - பு. தறுகண்மை - அஞ்சாமை. வெளில் - யானைக்கம்பம். பிணி மார், வினையெச்சம். விரவுமொழி - கலக்குமொழி; அவை அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ என்பன, "கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்,

கல்லா விளைஞர் கவளங் கைப்ப" (முல்லை. நடு - சு), "அங்கையந் தலத் தினு லப்பு தாதையெனக், கொங்கலர்க் கண்ணியான் கொம்மைதான் கொட் டலின்" (சீவக. கஅநஅ) என்பவற்றாலும் அவற்றினுரைகளாலும் அறியப் படும்.

328 - 9. ஒலி கழை தட்டை புடையுநர் புனந்தொறும் கிளி கடி மகளிர் விளி படு பூசல்—ஒலிக்கும் மூங்கிலாற்செய்த தட்டையைப்புடைத்துப் புனங்கடோறும் கிளியையோட்டுகின்ற மகளிர்கூப்பிடுதலாற்பிறந்த ஆரவாரமும்,

வி - பு. * தட்டையாவது மூங்கிலைக் குறுக்கேநறுக்கிப் பலவாகப்பிளந்து ஓசையுண்டாகும்படி ஒன்றிலேதட்டுங்கருவி. இதனால் கிளிகடிதலுண் டென்பதை, "தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங், கிளிகடி மரபின வூழூழ் வாங்கி" (குறிஞ்சி. சங - ச) என்பதனாலும் இதனுரையாலும் அறிந்துகொள்க. மகளிர்கூப்பிடுதலாவது - 'ஆயோ' என ஒலித்தல். இது, "வெஞ் சொற்பேசும் வேடர்மடவாரிதணம்மதுவேறி, அஞ்சொற் கிளிகளாயோ வென்னும்", "மடமொழியாள் புனங்காக்கச், செவ்வே திரிந்தாயோவென" என்னும் தேவாரங்களாலும், "வேயோங்கு சாரல் விளைபுனங்காவல்கொண், டாயோ வெனமொழியு மம்மழலை யின்னிசையால்" (சுயம். கoச) என்னும் சூளாமணியாலும் விளங்குகின்றது.

330. இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல்லேறு—நிரையினின்றும் பெயர்ந்த அசையும் குட்டேற்றினையுடைய இடபமும்,

வி - பு. இமில், குட்டேறு - இடபத்தினுடைய முன்முதுகில் உருண்டு பருத்துத்தோன்றும் ஒருறுப்பு.

331. மலை தலை வந்த மரையான் கதழ் விடை—எக்காலமும் போர் செய்து போர்த்தொழில் தன்னிடத்திலேகைவந்த மரையானினது விரைந்த ஏறும்,

வி - பு. மரையான் - ஒருவகைமிருகம்; விடை அதன் ஆண்.

332 - 5. [மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக், கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப, வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய, நல்

லேறு பொருஉங் கல்லென் கம்பலை :]

333. கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப—முல்லைநிலத்திற்கோவலரும் குறிஞ்சிநிலத்திற்குறவரும் சேரக்கூடி வென்றதன்வெற்றி தோன்ற ஆரவாரிக்கும்படி,

மாறு மைந்தின் ஊறுபட தாக்கி (கூகூஉ) பொருஉம் கல்லென் கம்பலை (கூகூரு) —முதுகிடாதவலியுடனே புண்ணுண்டாம்படி முட்டிப் பொரும் கல்லென்கின்ற ஓசையையுடைய ஆரவாரமும்,

ஏறும் விடையும் ஆர்ப்பப் பொருஉம் கம்பலையென்க.

வி - பு. கோவலர் - இடையர். விலங்குகள் ஒன்றோடொன்று பொருது வென்றபொழுது உரியவர்மகிழ்வது இயல்பு; "எருமைநா கின்ற செங்க ணேற்றையோ டேற்றை சீற்றத், தருமிவையென்னத் தாக்கி யூழற நெருக்கியொன்றாய், விரியிரு ளிரண்டு கூறாய் வெகுண்டன வனைய நோக்கி,

அரியினங் குஞ்சி யார்ப்ப மஞ்சுற வார்க்கின் றாரும்" (கம்ப. நாட்டுப். கள)

என்பதனுல் அஃது அறியலாகும். கோவலர், முல்லைநிலத்திற்கும் குறவர் குறிஞ்சிக்கும் உரியவர். இடபம் முல்லைக்கும் மரையானேறு குறிஞ்சிக்கும் உரியனவாதலின், அவைஅடையும் வெற்றி அவர்வெற்றியாயிற்று. மைந்து - வலி. ஊறு - புண்.

நல்லேறு (௩௩௫) வள் இதழ் குளவியும் குறிஞ்சியும் குழைய (௩௩௪)
பொருஉம் கம்பலை (௩௩௫) --எருமையேறுகள் வளவிய இதழையுடைய
குளவியும் குறிஞ்சியும் வாடும்படி தம்மிற்பொருகின்ற ஆரவாரமும்,
வி - பு. குளவி - காட்டுமல்லிகை. குறிஞ்சி - ஒருவகைப்பூமரம். இது
இனைமயக்கம்.
336 - 9. [காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி, வண்கோட் பலவின்
சுளைவிளை தீம்பழ, முண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார் கன்று, கடாஅ
வுறுக்கு மகாஅ ரோதை :]
337 - 8. வண் கோள் பலவின் விளை தீம்பழம் சுளை உண்டு படு மிச்சில்
காழ் பயன் கொணமார்—வளவிய குலைகளையுடைய பலாவினது முற்றின
இனிய பழத்திற்சுளையை விரும்பினோரெல்லாரும் தின்று கீழ்வீழ்ந்துகிடக்
கும் மிகையான பழத்தின்விதை(ய)ப் பயன்கோடற்கு,
கன்று (௩௩௮) காந்தள் துடுப்பின் கமழ் மடல் ஓச்சி (௩௩௬) கடா்
வுறுக்கும் மகார் ஓதை (௩௩௯) —கன்றுகளைப்பிணைத்துக் காந்தளினது
துடுப்புப்போலும் கமழுகின்ற மடலாலேயடித்துக் கடாவிடும் பிள்ளைக

ளுடைய ஆரவாரமும்,

வி - பு. கோள் - குலை. தீமை - இனிமை. மிச்சில் - மிஞ்சியது. காழ் - விதை ; ' அருவிதந்த பழஞ்சிதை வெண்காழ் ' (௧எ௪) எனமுன்னும் வந்துள்ளது. துடுப்பு - மரத்தாற் செய்யப்பட்டுள்ள ஒருவகைக் கருவி. கடாவுறுத்தல், கடாவிடுதல் - உழவுதொழிலோர் செய்யும் ஒருவகைத்தொழில்.

340. * [மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரென :]

வி - பு. மழை - மேகம். ஆலை - கரும்படிக்குமெந்திரம் ; ஞெரேரென - விரைவாக.

341. [கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும் :] கரும்பின் கழை கண்ணுடைக்கும் ஏத்தமும்—கரும்பின்கோலைச் சாறுகொள்ளும் ஆலையின் ஓசையும்,

வி - பு. கழை, கோல் - தண்டு. எல்லாப்பிரதிகளிலும், ' வத்தம் ' என்றேகாணப்படுகின்றது ; ஏங்குதல் ஒலித்தலாதலின், ' ஏக்கம் ' என்று பாடங்கொள்ளினும் பொருந்தும்.

342. தினை குறு மகளிர் இசை படு வள்ளையும்—தினையைக்குறுகின்ற மகளிருடைய இசைமிகுகின்ற வள்ளைப்பாட்டும்,

வி - பு. குறுதல் - குத்துதல். வள்ளை - உலக்கைப்பாட்டு ; " உலக்கைப் பாட்டே வள்ளைப்பாட்டென்ப " என்பது, பிங்கலந்தை ; "

நாநற் கறிந்தன மாயி னவன்றிறங், கொல்யானைக் கோட்டால்
வெதிர்நெற் குறுவாநாம், வள்ளை யகவுவம்வா" (கலித்தொகை, ௪௨)
என்பதும் அதனை விளக்குகின்றது.

343 - 4. சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர் பன்றி பறையும்— சேம்பையும் மஞ்சளையும்விதைத்து வளர்ந்தபின்பு பன்றி கிழங்குஅகழாமற் காப்போருடைய பன்றிக்குக்கொட்டும் பறையோசையும்,

வி - பு. பன்றிப்பறை - பன்றியை ஓட்டுதற்காகக் கொட்டும்பறை. அது குடப்பறையெனவும்வழங்கும்; "பன்றிப் பறையே குடப்பறை யாகும்" என்பதனாலறிக.

344. குன்றகம் சிலம்பும்—இவ்வோசைகளால் மலையிடத்தெழும் எதி ரொலியும்,

345. என்ற இவ்வனைத்தும்—என்று யான்கூறிய எல்லாஓசைகளும்,

345. [இயைந்தொருங் கீண்டி :] ஒருங்கு இயைந்து ஈண்டி—சேரப் பொருந்தித் திரளப்பட்டு,

346. [அவலவு மிசையவுந் துவன்றிப் பலவுடன் :] அவலவும் மிசையவும் பல உடன் துவன்றி— தாழ்வரையிலுள்ளனவும் உச்சிமலையிலுள்ளனவு மாகிய ஒழிந்த பலவோசைகளும் நெருங்குகையினாலே,

வி - பு. அவல் - பள்ளம். மிசை - மேல்.

347 - 8. [அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த, மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப :] எண்ணரு திறத்த அலகை தவிர்த்த மலைபடு கடாம் மாதிரத்து இயம்ப—எண்ணுதற்கரிதாகிய
கூறுபாட்டையுடையவாகையினாலே எண்ணையொழிந்த மலைகளாகிய யானைக்குண்டாகின்றவொலி திசைகளெல்லாமொலிப்ப,

கடாம் - ஆகுபெயராய் அதனாற்பிறந்த ஓசையையுணர்த்தி நின்றது.

வி - பு. திறம் - கூறுபாடு. அலகு - அளவு. கடாம் - மதம்.

வரி நிழலிருப்பின் (உகூ0), இன்னிசையும் (உகூரு) பூசலும் (உகூகூ) அழுகையும் (௩0௧) பாடலும் (௩0௪) பூசலும் (௩0௬) குரலும் (௩௧0) பூசலும் (௩௧௪) கொள்ளையும் (௩௧௭) உவகையும் (௩௧அ) குரவையும் (௩உஉ) இசையும் (௩உ௪) ஓதையும் (௩உ௭) பூசலும் (௩உகூ) கம்பலையும் (௩௩௫) ஓதையும் (௩௩கூ) ஏத்தமும் (௩௪௧) வள்ளையும் (௩௪௨) பறையும் (௩௪௪) என்றிவ்வனைத்துங் (௩௪௫) குன்றகச்சிலம்பும் (௩௪௪) ஒருங்கி யைந்தீண்டப்பட்டு (௩௪௫) ஒழிந்த ஓசைகளுந் துவன்றுகையினாலே (௩௪௬) மலைகளாகிய யானைக்குண்டாகின்ற வொலி (௩௪அ) பலதிறம்பெயர்பவை (உகூக) மாதிரத்தியம்ப (௩௪அ) அவற்றைக்கேட்குவி (உகூக) ரென முடிக்க.

இருப்பின், (உகூ0) கேட்குவி (உகூக) ரென்க.

மலைக்கு யானையையுவமித்து அதன்கட்பிறந்தஓசையைக் கடாமெனச் சிறப்பித்தவதனால் இப்பாட்டிற்கு மலைபடுகடாமென்று பெயர்கூறினார்.

வி - பு. 'மலைபடுகடாம்' என்னும் தொடர்மொழிச்சிறப்பால், இந் நூல், மலைபடுகடாமென்று பெயர்பெற்றாற்போலவே,
பதிற்றுப்பத்துச்செய்

யுட்களெல்லாம், தம்பாலுள்ளதொடர்மொழியின்பொருட்சிறப்பால் அத்தொ
டர்மொழிகளையே தம் பெயர்களாகக் கொண்டு விளங்குதலை ஆராய்ந்தறிக.

பதிற்றுப்பத்துள், கக - ம்பாட்டின்பெயர் : புண்ணுமிழ்குருதி ; கூ0 ம்பாட்
டின்பெயர் : வலிகெழுதடக்கை.

349 - 51. [குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர், முழவுத் துயி லறியா வியலு ளாங்கண், விழவி னற்றவன் வியன்கண் வெற்பே :]

351. அவன் வியன் கண் வெற்பு—அந்நன்னனுடைய அகன்றஇடத்தையுடையமலை,

349. குரூஉ கண் பிணையல் கோதை மகளிர்—பலநிறம்பொருந்தின இடத்தையுடைத்தாகிய பிணைத்தலையுடைய மாலையினையுடையமகளிர் ஆடற் கேற்ற,

வி - பு. குரு - நிறம்.

350 - 51. முழவு துயில் அறியா வியலுள் ஆங்கண் விழவின் அற்று— முழவு கண்ணுறக்கமறியாத அகன்ற ஊரிடத்துக்கொண்ட திருநாளையொத் துச் சிறந்திருக்கும்;

வி - பு. முழவு - மத்தளம் ; இடைவிடாது ஒலித்தலைத் துயிலாமை யாகச்சொல்லுவது மரபு; " முழவங்கண்டுயிலாதமுதுநகர் (சீவக. அகூ)
என்பதனாலுமறிக. இது சமாதியென்னும் குணவணி.

352 - 3. கண் தண்ணென கண்டும் கேட்டும் உண்டற்கு இனிய பல பாராட்டியும்—காண்டற்கினியனவற்றைக் கண்குளிரக்கண்டும் கேட்கப்படு வனவற்றைச் செவிகுளிரக்கேட்டும் உண்டற்கினிய

உணவுகளைக் கொண்டாடியுண்டும்,

வி - பு. 'கண்ண்தண்ணென' என்பது ஒற்றளபெடை; (தொல். செய். சூ. கஅ - உரையைப்பார்க்க) முன்னர் வந்துள்ள, "மரங்ங்கொட்டி" (௨௦௦) என்பதும் இதுவே.

354-5. [இன்னும் வருவ தாக நமக்கெனத், தொன்முறை மரபினி ராகி :] நமக்கு இன்னும் வருவதாக என தொல் முறை மரபினிராகி—நமக்கு மேலும் இந்நுகர்ச்சி உண்டாவதாகவென்று விரும்பிப் பழையஉறவான மக் களைப்போலும் முறைமையினையுடையிராய்ச் சிலநாள்தங்கி,

வி - பு. நுகர்ச்சி - காட்சிமுதலிய அனுபவங்கள்.

355-6. பல் மாண் செரு மிக்கு புகலும் திரு ஆர் மார்பன்—பலவாய் மாட்சிமைப்பட்ட வஞ்சிமுதலியபோர்த்தொழில் மிக்குநடத்தலாலே உலகம் புகழுந் திருமகள்நிறைந்திருந்த மார்பினையுடைய நன்னனுடைய,

வி - பு. வஞ்சி - போர்செய்தற்குப் பகைவர் மேற்செல்லுதல். அரசரைத்திருமாலின் கூறென்றும், அவர்மார்பில் திருமகள் உறைகின்றாளென்றும் கூறுவது மரபாதலின், 'திருவார்மார்பன்' என்றார்.

357. உரும் உரறு கருவிய பெரு மலை பிற்பட—உருமேறுமுழங்கும் தொகுதியையுடைய பெரிய மலை நமக்குப்பின்னாம்படி,

வி - பு. கருவி - கூட்டம்.

358 - 9. இறும்பூது கஞலிய இன் குரல் விறலியர் நறு கார் அடுக்கத்து குறிஞ்சி பாடி—அதிசயநெருங்கின இனிய யாழையுடைய விறல்பட வாடுமகளிர் நறிய கரிய பக்கமலையிலே குறிஞ்சியென்னும்பண்ணைப் பாட,

குரல், ஆகுபெயர். பாடி - பாடவென்க.

வி - பு. குறிஞ்சிப்பண் - குறிஞ்சிநிலத்திற்குஉரியபண்.

360. கைதொழூஉ பரவி பழிச்சினிர் கழிமின்—நீரும் ஆண்டுறையுந் தெய்வங்களைக் கையாலேதொழுது எம்குறைமுடித்தால் நமக்கு இவைதருதுமென்று பரவுக்கடன்பூண்டு வாழ்த்திப்போவீர்;

வி - பு. கையாலேதொழுது - அஞ்சலிசெய்து. குறை - ஆகவேண்டிய காரியம். 'பரவுக்கடன்பூண்டு' என்றது, வரங்கொள்ளுதலை.

மரபினிராகிப் (௩௫௫) பாடிப் (௩௫௯) பழிச்சி (௩௬0) மலைபிற்படக் (௩௫௭) கழிமின் (௩௬0) என்க.

361. [மைபடு மாமலை பனுவலிற் பொங்கி:] பனுவலின் பொங்கி மை படு மாமலை—சூல்முதிர்வதற்குமுன்பு எஃகுறு பஞ்சிபோலப் பொங்கிச்சென்று கார்காலம்வருமளவும் மேகம்கிடக்கும் பெரிய மலையிடத்தில்,

வி - பு. சூல்முதிராதமேகம் பன்னிய பஞ்சுபோலத் தோற்றுமென்பதை, "ஆளில் பெண்டிர் தாளிற் செய்த, நுணங்குநுண் பனுவல் போலக் கணங்கொள, ஆடுமழை தவழுங் கோடுயர் நெடுவரை" (நற்றிணை. ௩௫௩) என்பதனாலும் உணர்க. எஃகுதல் - பன்னுதல்.

362. கை தோய்வு அன்ன கார் மழை தொழுதி—கை சென்றுபிடிக்குந் தன்மையையொத்த அணுகுதலையுடைய கரிய மேகத்திரள்,

363. தூஉய் அன்ன துவலை துவற்றலின்—வலியத் தூவினுலொத்த துவலைகளைத் தூவுகையினுலே,

வி - பு. துவலை - நீர்த்துளி

364. தேஎம் தேரு கடு பரி கடும்பொடு—திசைகளைத் துணிந்துகொள்ளமாட்டாத கடிய செலவினையுடைய சுற்றத்தோடே,

வி - பு. தேம் - திசை. கடும்பரி - விரைந்தநடை. கடும்பு - சுற்றம்.

365. காஅய் கொண்ட நும் இயம் தொய்படாமல்—காவிக்கொண்ட நும்முடைய வாச்சியங்கள் நனையாதபடி,

வி - பு. காஅய் - காவி; தோளிற்சுமந்து; "கேளர் சுருக்கிக் காய கலப்பையிர்" என்றார் முன்னும்; கஙு

366 கூவல் அன்ன விடரகம் புகுமின்—கிணறுகள்போன்ற முழைஞ்சுகளிடத்தே புகுவீர்;

வி - பு. விடர், முழைஞ்சு - குகை.

367. இரு கல் இகுப்பத்து இறு வரை சேராது—பெரிய கல்லினது திரட்சியினிடத்து முறிந்துநின்ற மலைகளைச்சேராதே,

வி - பு. இகுப்பம் - திரட்சி. இறுதல் - முறிதல்.

368 - 72. [குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து, நின்று நோக்கினுங் கண்வாள் வெளவு, மண்கனை முழவின் றலைக்கோல் கொண்டு, தண்டொலாகத் தளர்த லோம்பி, யூன்றினிர் கழிமி னூறுதவப் பலவே :]

மலைபடுகடாம்.

369, 368. நின்றுகண் நோக்கினும் வாள் வெளவும் இடம் பட்ட

குன்று—நின்று கண்ணுற்பார்க்கினும் கண்ணினொளியைத் தன்அழகாலே வாங்கிக்கொள்ளும் இடமுண்டாகிய மலையில்,

உம்மை - அவற்றைநுகர மனத்தாற்கருதின் அம்மனத்தையும் வாங்கிக் கொள்ளுமென எச்சவும்மை.

வி - பு. மலை, பார்ப்போருடைய கண்களைக் கவருமென்றபடி. உம்மை, 'பார்க்கினும்' என்பதிலுள்ளது

ஆரிடர் அழுவத்து (௩௬அ) ஊறு தவ பல (௩௭௨)—பொறுத்தற்கரிய வருத்தத்தைச்செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும்இடையூறுகள் மிகப்பல; அவற்றை,

வி - பு. ஆரிடர் - அருமையான இடர்; பொறுத்தற்கரிய துன்பம். அழுவம் - பள்ளம்.

மண் கனை முழவின் தலை (௩௭0) தண்டு காலாக (௩௭௧) கொண்டு (௩௭0)—மார்ச்சனை செறிந்த முழவிடத்திற் காமரத்தை நுமக்குக் காலாக வாங்கிக்கொண்டு,

வி - பு. தலை - இடம். காமரம் - முழவை இருபுறத்துங் கட்டித் தொங்கவிட்டுக் கழுத்தின்பின் வைத்துக்கொள்ளும் மரம்; 'நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்', 'காஅய்க் கொண்ட நும் மியம்' (௧௩, ௩௬௫) என இதனுள் முன்வந்திருத்தல்காண்க.

தளர்தல் ஓம்பிக் (௩௭௧) கோல் (௩௭0) ஊன்றினிர் கழிமின் (௩௭௨)— அடி உள்ளேவிழுதலைப் பரிகரித்து அத்தண்டாகிய கோலை ஊன்றிப்போவிர்;

373. அயில் காய்ந்தன்ன கூர் கற் பாறை—வேல்காய்ந்தாற்போலும் குடுமிக்கூர்ங் கற்களையுடைய பாறையில்,

வி - பு. "பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்" என்பது, அகநானூறு, ௫௩.

374. வெயில் புறந்தரூஉம் இன்னல்

இயக்கத்து—குளிர்ச்சிவாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னுமைசெய்யும் வழியிடத்திற் போம்பொழுது,

வி - பு. புறந்தருதல் - பாதுகாத்தல். இயக்கம் - வழி.

375. கதிர் சினம் தணிந்த அமையத்து கழிமின்—ஞாயிறு சினமாறின அந்திப்பொழுதிலே போவீர் ;

376 - 8. [உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு, புரை தவ வுயரிய மழைமருள் பஃறோ, லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய :]

376 - 8. உரை செல வெறுத்த அவன் நீங்கா சுற்றமொடு புரை தவ உயரிய மழை மருள் பல் தோல் அருப்பமும் உடைய—புகழ் பரக்கும்படி செறிந்த நன்னனுடைய நீங்காத படைத்தலைவரோடே உயர்ச்சிமிகவுயர்ந்த மேகமென்று மருளும் பல யானைத்திரளையுடைய அரண்களையும் அவ்வழி யுடைய ;

378. அரசு நிலைதளர்க்கும் அருப்பம்—பொரவந்த அரசர் நிலையுடை
மையைக் கெடுக்கும் அரண்,

வி - பு. உரை - புகழ்; 'உரைசெல வெறுத்தவவன் மூதூர்' (கூ௩)
என்றார், முன்னும். 'நீங்காச் சுற்றம்' என்றதனால்,
படைத்தலைவரென்பது
பொருளாயிற்று. தோல் - யானை. அரசு - பகையரசர்.

379. பின்னி அன்ன பிணங்கு அரில் நுழை தொறும்—அவ்வரங்க ளிற் பின்னிவைத்தாலொத்த கொடிபிணங்கின சிறுகாட்டையுடைய சிறிய வழிகடோறும்,

வி - பு. அரில் - சிறு தூறுகளாலாகிய காடு. நுழை - சிறுவழி.

380 - 83. முன்னோன் வாங்கிய கடு விசை கணை கோல் இன் இசை நல் யாழ் பத்தரும் விசிபிணி மண்ணார் முழவின் கண்ணும் ஓம்பி கைபிணி

விடாது பைய கழிமின்—முன்போகின்றவன் முகததிலடியாமல் வாங்கி விட்ட கடியவிசையையுடைய திரண்டகோல் இனிய இசையைத் தன்னிடத்தேகொண்ட நல்ல யாழின்பத்தரையும் வலித்துக்கட்டினமார்ச்சனைசெறிந்த முழவின்கண்ணையும் கெடாதபடி காத்து அவனைக் கைபிடித்துக்கோடலை விடாதே மெல்லமெல்லப் போவீர்;

நாம்கோண்நனந்தலை (உஎ0) முதல், இத்துணையும் மலை (சுகூ) கூறிற்று.

இவ்விடத்து யாற்றின்தன்மையும் சேரக்கூறினார்.

384. களிறு மலைந்தன்ன கண்கூடு துறுகல்—யானைகள் தம்மிற்சேர்ந்து பொருதாலொத்த ஒன்றினிடத்தே ஒன்று கூடிநெருங்கின கல்லிடத்தே,

வி - பு. மலைதல் - போர்செய்தல் ; "சுரும்புணக் களித்த புகர்முக வேழ, மிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்" (ஐங்குறு. உ௲௬) என்றவிடத்துத் துறுகல் யானையாகக் கருதப்பட்டமை காண்க.

385. தளி பொழி கானம் தலை தவ பலவே—மழைபெய்கின்ற காடுகள் அவ்விடத்து மிகப்பல;

386 - 7. ஒன்னா தெவ்வர் உலைவிடத்து ஆர்த்தென நல்வழி கொடுத்த நாண் உடை மறவர்—ஏவல்பொருந்தாத பகைவர்

முதுகிட்டவளவிலே தமது வெற்றிதோன்ற ஆரவாரித்தாராக, அது பொறுமல் இவ்விடம் உயிர் கொடுத்தற்கு நல்லகாலமென்று மீண்டு உயிரைக்கொடுத்த நாணத்தையுடைய மறவருடைய,

வி - பு. ஒன்னுமை - பொருந்தாமை. தெவ் - பகை. பகைவர் முதுகிட்டபொழுது வீரர் தமது வெற்றி தோன்ற முழங்குதல் மரபு; இஃது 'ஆலங் கானத் தகன்றலை சிவப்ப, வென்றிகொள் வீர ரார்ப்பினும் பெரிது" (அகநா. கஎ) என்பதனால் அறியலாகும். மறவர் - வீரர்; இவர்கள் பகை வரைச் சார்ந்தோர். இவர் உயிர்விடுதற்குஅஞ்சாரென்பது, "உறினுயி ரஞ்சா மறவர்" (திருக்குறள், எஎஅ) என்பதனால் விளங்கும்.

388 - 9. செல்லா நல் இசை பெயரொடு நட்ட கல் ஏசு கவலை எண்ணு மிக பலவே—கெடாத நல்ல புகழினையுடைய பெயர்களை எழுதிநட்ட கற் கள் முதுகிட்டுப்போனவரை இகழும் பலவழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்;

சுசு

மலைபடுகடாம்.

வி - பு. "சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்" (திருக்குறள்,
எஎஎ) என்பதனால், செல்லா நல்லிசை என்பதற்குப் பொருள் நன்கு விளங்
குகின்றது. போரில் உயிர்துறந்த வீரர்களின் பெருமை புலப்படும்படி, ஒரு
கல்லில் அவர்களுடைய பெயரையும் அவர்களது அரியசெயல்களையும் எழுது
வித்து அதனைநட்டுத் தெய்வமாகக்கருதி வழிபடுதல். பண்டைக்காலவழக்கம். இன்னும், சிவந்தபூமாலைகளையும்

மயிற்பீலிகளையுஞ்சூட்டி மதுவைநிவேதித்தலும் அதனைச்சூழத் திண்ணைபோடுவித்தலும் உண்டென்று புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றால் நன்கு விளங்குகின்றது. கவலை - பிரிவுபட்டவழி.

390 - 91. இன்பு உறு முரற்கை நும் பாட்டு விருப்பாக தொன்று ஒழுகும் மரபின் நும் மருப்பு இகுத்து துனைமின்—இன்பமிகுகின்ற தாளத் தினையுடைய நும்முடையபாட்டு அந்நடுகல்லிற் றெய்வத்திற்கு விருப்பமாகப் பழமைநடக்கின்ற முறைமையினையுடைய நும்முடைய யாழைவாசித்து விரையப் போவிர் ;

மருப்பு, ஆகுபெயர்.

வி - பு. முரற்கை - முரலுதல் ; ஒலித்தல் ; இது தாளத்திற்கு ஆனமையின், ஆகுபெயர் ; "பாணர் நயம்படு முரற்கையின் " (ஐங்குறு. ௪0எ) என்பதனாலும் இது விளங்கும். மருப்பு - யாழுறுப்பினுள் ஒன்று ; அது, 'கோடு' என வழங்கும். இகுத்தல் - ஒலித்தல் ; இங்கே வாசித்தலுக்கு ஆயிற்று ; "மழையெதிர் படுகண் முழவுக ணிதுப்ப" (நி௩உ) என்பர் பின்னும்.

392 - 3. பண்டு நற்கு அறியா புலம் பெயர் புதுவிர் சந்து நீவி புல் முடிந்து விடுமின்—முற்காலம் நன்மையறியாத தீயநிலத்தை வழியறியாமற் போய் மீண்டுவந்த புதியவர்கள் பின்வருகின்றவர்களும் அவ்வாறுபோய் மீளாதபடி பலவழிகளுங்கூடின சந்தியைக் கையாலேதுடைத்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டுவைப்பீர் ;

நற்கு - நன்கின்விகாரம்.

வி - பு. புலம் - நிலம். 'நன்கறியாப்புலம்' என்றதனால், தீயநிலமென்றாயிற்று. புதுவிர் - புதியவர்களாகியநீங்கள். சந்து - சந்தி. நீவல் - நீக்கல் ஊகம்புல் - ஒருவகைப்புல் ; வைக்கோல்போல அது வீடுகளின்மேல் வேயப் படும் ; "ஊகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பு"

என்பது, **பெரும்பாணாற்றுப் படை,** கஉஉ.

கானம் பல (௩அ௫) ; ஆண்டுக்கல் (௩அகூ; நட்ட (௩அஅ) கவலை பல (௩அக); அக்கல்லிற்கு மருப்பிகுத்துத் தூனமின் (௩கக) ; அப்பொழுது புதுவிர் (௩கஉ), புன்முடிந்திடுமி (௩கூ௩) னெனக் கூட்டுக.

394. செல்லும் தேஎத்து—நீங்கள் போம் தேசத்திலே,

வி - பு. தேம் - தேயம்; "செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடு மின்" என்பது, **சிலப்பதிகாரம்,** இறுதிக்கட்டுரை.

394 - 6. [பெயர்மருங் **கறிமார், கல்லெறிந்** தெழுதிய நல்லரை மராஅ த்த, கடவு ளோங்கிய காடேசு கவலை ;]

கல் எறிந்து (௩கூ௫) மருங்கு பெயர் அறிமார் (௩கூ௪) எழுதிய (௩க௫) கடவுள் (௩கசு)—கல்லை இடந்துகொண்டு அதனிடத்தே இவ்வாறேபொருது பட்ட இன்னனென்று அவன்பெயரை உலகம்அறிவதற்கு எழுதிய கடவுள்,

வி - பு. எறிந்து, இடந்துகொண்டு - பெயர்த்து.

395 - 6. நல் அரை மராத்த கடவுள்—நல்ல அரையினையுடைய மராத் திடத்தனவாகிய கடவுள்,

என்றது - மராமரத்தின் நிழலிலே நட்ட கல்லென்றவாறு.

வி - பு. மரா, மராமரம் - ஆச்சாமரம். மரத்தின் அடியில் தெய்வமாகப் பாவித்துக் கற்களைநட்டுப் பூசித்தலை இக்காலத்தும் காணலாகும். முன்பு ௩அக - ம் அடியிலும் ஈண்டும் கூறிய கல், 'வீரக்கல்' என்று பண்டைக் காலத்து வழங்கிவந்ததன்றி, இக்காலத்தும் வீரனென்று வழங்கப்பெற்று ஒருசாரரால் வழிபாடும் செய்யப்படுகின்றது.

396. கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை—அக்கடவுளின் தெய்வத்தன்மை மிக்க தன்கொடுமையாற் பிறகாடுகளையிகழும் பலவழிகளில்,

397 - 8. [ஒட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர், சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே :]

397 - 8. ஒட்டாது அகன்ற ஒன்னா தெவ்வர் சுரம் தவ பலவே—நன்னனைப் பொருந்தாதே நீங்கின அவன் ஏவற்குப் பொருந்தாத பகைவரிருக்கும் அருநிலங்கள் மிகப்பல;

இதனால் இகழுநர்ப்பிணிக்கும் ஆற்றல் (எடு) கூறினார்.

398. சுட்டினும் பனிக்கும் சுரம்—தத்தம் ஊர்களிலேயிருந்து நினைப்பினும் தலைநடுக்குவிக்குஞ் சுரம்,

வி - பு. சுட்டுதல் - நினைத்தல். பனித்தல் - நடுங்குதல்.

399 - 400. தேம் பாய் கண்ணி தேர் வீசு கவி கை ஓம்பா வள்ளல் படர்ந்திகுமெனினே—தேன்சொரிகின்ற கண்ணியினையும் தேரைச்சிதறும் கொடுத்துக்கவிந்த கையினையுமுடைய தனக்கென்று ஒருபொருளும் பேணாத நன்னனை நினைத்துச் செல்கின்றேமென்று கூறுவீராயின்,

வி - பு. கண்ணி - தலையிலணிந்துகொள்ளுமாலை. கவிகை - கவிந்த கை. படர்தல் - நினைத்தல், செல்லுதல். ‘படர்ந்திகும்’ என்பதில் இகு மென்பது இடைச்சொல்.

401 - 2. [மேம்பட வெறுத்தவவன் றொல்றிணை மூதூர், ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே :] நம்மனோர்க்கு ஆங்கனம் மேம்பட வெறுத்த அவன் தொல் திணை மூதூர் அற்று—நம்மையொக்கும் பரிசிலர்க்கு அப்பகைப்புலம்

எல்லாவூர்களினும் மேலாம்படி செல்வமுண்டான நன்னனுடைய பழைதாகிய உயர்ந்த ஒழுக்கத்தினையுடைய பழையவூர்களை யொக்கும்;

வி - பு. நம் அன்னோர்க்கு-நம்மை ஒத்தவர்க்கு. ஆங்கனம் - அவ்விடம்; மரூஉமொழி. வெறுத்த - மிக்க. இணை - ஒழுக்கம். ஆங்கனம் மூதூர் அற்று.

403. அசைவுழி அசைஇ அஞ்சாது
கழிமின்—இளைத்தவிடத்தே இளைப்பாறி அஞ்சாமற் போவீர்;

வி - பு. பகைப்புலமாதலின், அஞ்சுவாரென்று நினைந்து இங்ஙனம் கூறினன். ௪00 - ம் அடி முதலியவற்றின்பொருளும் ௧௯௪ - ம் அடி முதலியவற்றின்பொருளும் ஒத்து விளங்கி, நன்னனுடைய மேம்பாட்டைப் புலப்படுத்தல்காண்க.

404 - 5. [புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக், கலைநின்று விளிக் குங் கான மூழிறந்து :] புலி உற வீழ் தன் பிணை உள்ளி வெறுத்த கலை நின்று விளிக்கும் கானம் ஊழ் இறந்து—புலி பாய்கையினாலேபட்ட தன் பிணையை நினைத்து வெறுத்த கலைநின்று கூப்பிடும் அக்காட்டை முறை மைப்படப்போய்,

வி - பு. உறுதல் - பாய்தல். பிணை - பெண்மான். கலை - ஆண்மான். ஊழ் - முறை. இறத்தல் - கடத்தல்.

406. சிலை ஒலி வெரீஇய செங்கண்
மரைவிடை—வில்லின் ஓசைக்கு வெருவின சிவந்தகண்ணையுடைய மரையேறு,

வி - பு. சிலை - வில். 'மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை' (௩௩௧) என மரையான்விடை இதில் முன்னும் கூறப்பெற்றுள்ளது.

407. தலை இறும்பு கதழும் நாறு கொடி புறவின்—முற்பட்ட குறுங் காட்டிலே விரைந்தோடும் நாறுகின்ற கொடிகளையுடைய காட்டிடத்து,

வி - பு. தலை - முன்.

408 - 9. வேறு புலம் படர்ந்த ஏறு உடை இனத்த வளை ஆன் தீம் பால்—வேற்றுப்புலங்களிலே சென்றுமேய்ந்த ஏற்றையுடைய நிரையிடத் தனவாகிய சங்குபோல் வெள்ளிய பசுக்களின் இனிய பாலை,

வி - பு. வேற்றுப்புலம் - வேறிடம். ஏறு - இடபம். நிரை - பசுக்
கூட்டம். வளை - சங்கு.

409 - 10. மிளை சூழ் கோவலர் வளையோர் உவப்ப தருவனர் சொரிதலின்—நிரையைக் காவல் சூழ்கின்ற இடையர் வளையினையுடைய மகளிர் மன மகிழும்படி கொண்டுவந்து சொரிகையினாலே,

வி - பு. மிளை - தலைக்காவல்.

411 - 2. [பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும், புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர் :] பலம் பெறு நசை யொடு நும் பதிவயின் தீர்ந்த புலம்பு சேண் அகல புதுவிர் ஆகுவிர்—பலத்தைப்பெறவேண்டுமென்னும் ஆசையுடனே நும்முடைய ஊரினின்றும் போந்த வருத்தம் விட்டுநீங்குகை யினாலே விருந்தாந்தன்மையை யுடையிராகுவிர் ;

வி - பு. பலம் - பிரயோசனம். பதி - ஊர். புலம்பு - வருத்தம். சேண் -
நெடுந்தூரம். சொரிதலின், புதுவிர் ஆகுவிரென்க.

413 - 6. [பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன, தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக், கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும், பல் யாட் டினநிரை :] பகர் பல விரவு நெல்லின் அரி அன்ன தகர் விரவு துரு வை வெள்ளையொடு விரைஇ கல்லென் கடத்திடை கடலின் இரைக்கும் பல் யாட்டு இன நிரை—பண்டம்விற்ற பலவுங்கூடும்

நெல்லினரிசியை யொத்

தனவாகக் கிடாய்விரவுகின்ற செம்மறித்திரள் வெள்யாட்டுடனேகலந்து தல்லெலன்கின்ற ஓசையையுடைய காட்டிடத்தே கடல்போலேயொலிக்கும் பல யாட்டின் இனங்களையுடைய திரள்களிலே,

பகர்நெல், வினைத்தொகை.

வி - பு. பகர்தல், விற்றல். பல விரவு - பலநிறமுள்ள நெற்கள் கல ந்த. தகர் - ஆண் ஆடு. துருவை - செம்மறியாடு. வெள்ளை - வெள்ளாடு. கடம் - காடு. பலநிற நெற்களின் தொகுதி பலநிறமுள்ள ஆட்டின்தொகு திக்கு உவமை.

416. எல்வினிர் புகினே—இராக்காலத்தை யுடையிராய்ச் செல்லின்,

மனத்தே அக்காலத்தைக் கருதுதலின், உடைமையாயிற்று.

வி - பு. எல் - இராத்திரி.

417. பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்—பாலும் பாற்சோறும் நுமக்கென்று சமையாமல் தமக்குச் சமைந்திருந்தவற்றைப் பெறுகுவிர்;

வி - பு. 'பண்ணாது பெறுகுவிர்' என்பதற்குச் செய்திருக்கும் பொருள் மிக்க இனிமைபயந்து, "தமக்கென் றுலையேற்றார்" என்னும் ஆசாரக் கோவையின் கருத்தை நினைப்பிக்கின்றது. 'பாலும் விதவையும்' என்றும் பாடம்.

418. துய்மயிர் அட க்கிய சேக்கை அன்ன—மெல்லிய தலைமயிரினை யுடைய சேணமிட்ட படுக்கையையொத்த,

வி - பு. துய் - பஞ்சின் நுனியாதலின், மெல்லியதற்காயிற்று. சேணம்- படுக்குமெத்தைக்குரிய பொருள்கள் ஐந்தனுள் ஒன்று ; "சிறுபூளை செம் பஞ்சு வெண்பஞ்சு சேண, முறுதூவி சேக்கையோ ரைந்து" என்பதனு லறிக.

419. மெய் உரித்து இயற்றிய மிதி அதள் பள்ளி—ஆடுகளின் மெய் யையுரித்து ஒன்றுகத்தைத்த வார்மிதித்த தோற்படுக்கையிலே,

வி - பு. அதள் - தோல். "மான்ருேற் பள்ளி மகவொடு முடங்கி" (பெரும்பா. அக) என வேறிடத்து மான்தோற்படுக்கை கூறப்பெற்றுள்ள

தாயினும், இஃது இடையரிருப்பிடமாதலின், ஆட்டுத்தோலென்றூர்.

420. தீ துணையாக சேந்தனிர் கழிமின்—கொடியவிலங்குகள் வாராதபடி இடையர் ஒளித்த நெருப்புத் துணையாகத் தங்கிப் போவிர் ;

வி - பு.

421 - 2.

சேந்தனிர் - தங்கினீராய். பள்ளியில் தங்கினீராய்.

கூப்பிடு கடக்கும் கூர் நல் அம்பின் கொடுவில் கூளியர்

கூவை காணின்—கூப்பிடாத அவ்வெல்லையைக் *கடவாநிற்கும் கூரிய நல்ல அம்பினையும் கொடியவில்லினையுமுடைய நாடுகாக்கும் வேடருடைய திரளைக்

கண்டீராயின், அவர்களுக்கு,

வி - பு. கடக்குமென்றதனல், கூப்பிடாத எல்லையைக் கடவாநிற்கு மென்று பொருள்செய்தார். கூப்பிடு - கூப்பிடுதூரம். திருமுருகாற்றுப்படையில், "வேறுபல் லுருவிற் குறம்பல் கூளியர்" என்புழி, கூளியரென்பதற்

* கூவாநிற்குமென்றும் பிரதிபேதமுண்டு.

குச் சேவித்து நிற்போரென்று பொருள்செய்திருக்கின்றனர். கூவை யென்பது திரளென்னும் பொருளில், " புலவுவிற் பொலிகூவை " (கசஉ) என மதுரைக்காஞ்சியிலும் வந்துள்ளது. ' கூர்நல் வம்பிற் கொடுவிற் கூளியர்,

என்னும் இந்த அடி, புறநானூற்றில், உரு - ம் பாட்டிலும் காணப்படுகின்றது.

423 - 4. படியோர் தேய்த்த பணிவு இல் ஆண்மை கொடியோள் கணவன் படர்ந்திசும் எனினே—தன்னை வணங்காதாரை அழித்த தாழ்ச்சி யில்லாத பகைவரையாளுந் தன்மையினையுடைய நன்னனை நினைத்துப் போகின்றேமென்று கூறின்,

கொடியோள் கணவன் - கொடியினையுடையோள் கணவன். இதனால் அவன்றேவி கற்புமிகுதி கூறினார். இது நன்னனென்னும் பொருட்டாய் நின்றது.

வி - பு. படியோர் - படிதலில்லாதவர்கள் ; பகைவர். ஆண்மையை யுடைய கணவனென்க. கல்விமுதலியவற்றிற்கு அறிகுறியாகக் கொடிகட்டுவதுபோலக் கற்புடைமைக்கும், கொடியுண்டென்று ' கொடியோள் ' என்பதற்கு இங்கே செய்திருக்கும் பொருளால் தெரிகின்றது. ' கொடியோள் கணவன் ' என்னுந் தொடர்மொழி இங்கே இடுகுறிப்பெயர் மாத்திரையாய் நன்னனென்னும் துணையாய் நின்றது. பொருட்டாய் - பொருளையுடையதாய்.

425 - 6. தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை—தசைகளையும் கிழங்குகளையும் நும்மை நலிந்து தின்னப்பண்ணிப் பாதுகாப்பாரல்லது வருத்துவார்களில்லை ; அவற்றைநுகர்ந்து,

வி - பு. தண்டுதல் - அலைத்தல். தரீஇ - தந்து.

427. ஆங்கு வியம் கொண்மின்—அவ்விடத்து அவர் போகச்சொன்ன வழியை நமக்கு வழியாகக் கொண்டுபோவீர்;

வி - பு. வியம் - ஏவல்.

427 அது அதன் பண்பே—அக்காட்டின் தன்மை அத்தன்மைத்தா யிருக்கும்;

428. தேம் பட மலர்ந்த மராஅ மெல் இணரும்—தேனுண்டாக மலர்ந்த மராவினது மெல்லிய பூங்கொத்தும்,

வி - பு. மரா - மராமரம்.

429. உம்பல் அகைத்த ஒள் முறி யாவும்—யானைமுறித்த ஒள்ளிய தளிர்களையுடைய யாம் பூவும்,

வி - பு. அகைத்தல் - ஒடித்தல். யாம்பூ - யாமரத்தின் பூ. யா - ஒரு மரம்; இதனை யானைகள் பிளந்துண்ணுதல் இயல்பு. யா, ஒரு மரமாதல், "யாமரக்கிளவியும் பிடாவுந் தளாவு, மாமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே" (தொல். உயிர். சூ. உஎ) என்பதனாலும், யானைகள் பிளந்துண்ணுமென்பது, "உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய, யாஅ வரிநிழற் றுஞ்சும்", "பிடி பசி களைஇய பெருங்கை வேழ, மென்சினை யாஅம் பிளக்கும்", "களிறுதன், உயங்குநடை மடப்பிடி வருத்த நோனாது, நிலையுயர் யாஅந் தொலையக் குத்தி, வெண்ணார் கொண்டுகை சுவைத்த" (குறுந்தொகை. உ௩உ, ௩எ, ௩௱எ) என்பவற்றாலும் விளங்கும்.

430 - 31. ['தளிரொடு மிடைந்த காமர் கண்ணி, திரங்கு மா ஞரிற் பொலிய சூடி :]—திரங்கு மரல் நாரில் தளிரொடு மிடைந்த காமர் கண்ணி பொலிய சூடி—உலர்ந்த மரல் நாரிலே தளிர்களோடே நெருக்கக்கட்டின விருப்பமருவின கண்ணியை அழகுபெறச் சூடி,

வி - பு. மரல், இக்காலத்து மருளென்று வழங்கப்படுகின்றது. அதன் நாரால் பூவைத்தொடுத்து மாலை கட்டுதலை, "மரல் வகுந்து தொடுத்த செம் பூங் கண்ணி" (புறநா. உகச) என்பதனுலறிக.

432. முரம்பு கண் உடைந்த நடவை தண்ணென—பருக்கையையுடைய மேட்டுநிலத்திடம் விண்ட சிறுவழி மழைபெய்து குளிருகையினாலே,

433. உண்டனிர் ஆடி கொண்டனிர் கழிமின்—அங்நீரைக்குடித்துக் குளித்து வழிக்கு முகந்துகொண்டு போமின் ;

வி - பு. முரம்பு, பருக்கைக் கற்களாலாகிய மேட்டுநிலமென்பது, "கற்க ணெருங்கு மிடமுரம் பாகும்" (உரிச்சொல் நிகண்டு, இடப்பெயர். கச) என்பதனுலும் விளங்குகின்றது.

434 - 6. [செவ்வீ வேங்கைப் பூவி னன்ன, வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த, சுவல்விளை நெல்லி னவரையம் புளிங்கூழ் :]

செவ்வீ வேங்கை பூவின் அன்ன அவரை—சிவந்த பூக்களையுடைய வேங்கைப்பூவினையொத்த நிறத்தையுடைய அவரைவிதை,

வேய் கொள் அரிசி—மூங்கில் தன்னிடத்தே கொண்ட அரிசி,

சுவல் விளை நெல்லின் அரிசி—மேட்டுநிலத்தேவிளைந்த நெல்லினரிசி,

சொரிந்த மிதவைப் புளியங்கூழ்—இவற்றைப் புளிக்கரைத்த உலையிலே சொரிந்துஆக்கின குழைந்த புளியங்கூழை,

வி - பு. வேங்கைப்பூ - வேங்கைமரத்தின்பூ. அவரை விதைக்கு வேங்கைப்பூ உவமை. வேய்கொள் அரிசி - மூங்கில் நெல்லின் அரிசி. சுவல் - மேட்டுநிலம்; "வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்" என்பது, புறநா னூறு, கஉ0. "கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்க,

ரூதெரு மறுகிற் போ
தொடு பொதுளிய, வேளை வெண்பூ வெண்டயிர் கொளீஇ, யாய்மக ளட்ட வம்புளி மிதவை, யவரை கொய்யுந ராஅ மாந்தும், தென்னம் பொருப்பன்" (புறநா. உகு) என்பதிலும் இங்ஙனமே ஒருவகைப் புளியங்கூழ் கூறப்பெற் றிருத்தல் காண்க.

437. அற்கு இடை உழந்த நும் வருத்தம் வீட—இராக்காலத்துக் காட் டிடத்துப் பகற்பொழுதுவந்த நும்வருத்தம் போம்படி,

வி - பு. அற்கு - அல்லுக்கு; இராக்காலத்திற்கு. இடை - இடம்; காட்டிடம்.

438 - 9. [அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய, புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்:] ஆங்கண் அகலுள் கழி மிடைந்து இயற்றிய புல் வேய் குரம்பை குடிதொறும் பெருகுவிர்—அவ்விடத்து அகன்ற ஊரிடத் துக் கழிகளால் தெற்றிப்பண்ணின புல்லான்வேய்ந்த குடில்களிலிருக்கும் குடிகடோறும் பெருகுவிர்;

கூழை அற்குப் பெறுகுவிரென்க.

வி - பு. அகலுள் ஊரென்பது, "அகலுள் பதியே; கோட்டம் வசதி, தாவள நியமம், வாழ்க்கை தண்ணடை, மருதநிலத் தூர்ப்பெயர்" (திவாகரம்)
என்பதனுலும்விளங்கும். தெற்றி - இறுகக்கட்டி. குரம்பை, குடில் - குடி
சை. குடிகள் - குடியிருப்போர்.

440 - 43. [பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி, வெண்ணெறிந்
தியற்றிய மாக்க ணமலை, தண்ணென னுண்ணிழு துள்வீ டாக,

சேப்பி னல்கலும் பெறுகுவிர் :]

443. அசையினிர் சேப்பின்—இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள் தங் குவீராயின்,

440 - 41. பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி வெண் எறிந்து இயற்றிய மா கண் அமலை —பொன்னை நறுக்கினாலொத்த நுண்ணிய ஒத்த அரிசியை வெள்ளையெறிந்தாக்கின கரிய இடத்தையுடைய சோற்றுத்தடியை,

வி - பு. 'பொன்னறைந்த நுண்ணேரரிசி' என்றது, தினையரிசியை; " நன்பொ னன்ன புனிறுதீ ரேனல் " (ஐங்குறு. உகூ௩.) என்பதனாலும் தினைக்குப் பொன் உவமையாதல் உணரப்படும். வெண் எறிந்து - வெள்ளை நிறமுள்ள அரிசிகளை எடுத்தெறிந்து. அமலை, தடி - சோற்றுருண்டை.

442 - 3. தண்ணெண் நுண் இழுது உள்ளீடாக அல்கலும் பெறுகுவிர்—தண்ணென்ற நுண்ணிய நெய்விழுதை உள்ளேயிட்டுண்ணும்படி நாடோறும் பெறுகுவிர் ;

வி - பு. உணவு வகையில், உள்ளீடென்றும் மேலீடென்றும் இரு வகையுண்டு ; உள்ளீடு - ஒன்றன் உள்ளே வைத்துஉண்ணப்படுவது ; மேலீடு - ஒன்றன்மேலேயிட்டு உண்ணப்படுவது ; மேலீடு கண்ணுறையென்றும் வழங் கும் ; " புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக " (புறநா. சுக, என்ப தனாலறிக. வேப்பிலைக்கட்டியென்று இக்காலத்துவழங்கப்படுவது மேலீடே.

444. விசயம் கொழித்த பூழி அன்ன —கருப்புக்கட்டியைக் கொழித்த பொடியையொத்த,

வி - பு. விசயங்கொழித்த பூழி - சருக்கரை.

445. உண்ணுநர் தடுத்த இடி நுண் நுவணை — தன்னை நுகர்வாரை வேறொன்றை நுகராமல் தடுத்த இடித்தலால் நுண்ணிதாகிய

திணைப்பிண்டியோடு,

சேப்பின் நவணையோடே அமலையை இழுது உள்ளீடாக அல்கலும் பெறுகுவிரென்க.

வி - பு. நவணை, திணைப்பிண்டி - திணைமா.

நவணையோடென ஒடு விரிக்க.

446 - 7. கொய் மர விறகின் ஞெகிழி மாட்டி பனி சேண் நீங்க இனிது உடன் துஞ்சி—கொய்ய மரமாகிய விறகாலாக்கின கடைக்கொள்ளியை எரித்துப் பனி விட்டுநீங்கும்படி இனிதாகச் சேரத்துஞ்சி,

வி - பு. கொய்ய - மெல்லிய.

448. புலரி விடியல் புள் ஓர்த்து கழிமின்—இராக்காலம் நீங்குதலையுடைய விடியற்காலத்தே நிமித்தம்பார்த்துப் போவிர்;

புள்ளோர்த்தென்றதற்குப் புட்களின்குரல் கேட்டுப் போவீரென்றுமாம். வி - பு. நிமித்தம் - பக்ஷிசகுனம். புட்களின்குரல் - கோழிமுதலிய வற்றின் குரல்.

இத்துணையும் கானமும், கானத்து ஆற்றினது நன்மையும், அசையுநற் புலமும், வல்சியும் சேரக்கூறினர்.

449. புல் அரை காஞ்சி—புற்கென்ற அரையினையுடைய காஞ்சிமரத் திணையும், புனல் பொரு புதவின்—நீர்வந்துபொருகின்ற

அறுகுகளையும்,

வி - பு. புற்கென்ற - மஞ்சள்நிறமும் வெள்ளைநிறமுங்கலந்தநிறமுள்ள. புதவு, அறுகு - அறுகம்புல்.

450. மெல் அவல்—மெல்லிய விளைநிலங்களையும்,

வி - பு. அவல் - பள்ளம்; விளைநிலத்திற்காயிற்று; ஆகுபெயர்.

450 - 53. [இருந்த வூர்தொறு நல்லியாழ்ப், பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும், பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினு, நன்பல வுடைத்த தவன் றண்பணை நாடே :]

451. காவும்—பொழில்களையும்,

452. பள்ளியும்—இடைச்சேரிகளையுமுடைய,

வி - பு. பள்ளி-முல்லைநிலத்தூர்; இது, "தெய்வ முணவே" (தொல். அகத். சூ. கஅ) என்பதன் விசேடவுரையால் அறியலாகும்.

453. அவன் தன் பணை நாடே—நன்னனுடைய குளிர்ந்த மருதநிலத் தையுடைய நாடு,

452, 50. பல்நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும் இருந்த ஊர்தொறும்—பலநாள் நிற்பினும் ஒருநாள் தங்கிப்போயினும் நீர் நுகர்தற்குக் குடிநீங் காதிருந்த ஊர்கள்தோறும்,

நல்லியாழ் (சடுO) பண்ணு பெயர்த்தன்ன (சடுக) நன் பல வுடைத்து (சடுஉ)—நல்ல யாழின்பண்ணை மாறிவாசித்ததன்மையவாக நன்றாகிய பல பொருள்களை யுடைத்து;

வி - பு. நீர் நுகர்தற்கு நன்பலவுடைத்தென்க.

காஞ்சிமுதலியவற்றை உடையநாடு ஊர்தோறும் நன்பலவுடைத்தென்க.

பண் ஒன்றையொன்று ஒவ்வாது இனிதாயிருக்குமாறுபோல நுகரும் பொருள்களும் ஒன்றையொன்றொவ்வா, இனிமையுடையவென்றார்.

வி - பு. யாழின் பண்ணை மாறி வாசிக்கக்கேட்டல் பலபொருள்களின் நுகர்ச்சிக்கு உவமை ; கூத்தனுக்குத் தெரிந்ததாதலின், பண்ணுப்பெயர்ச்சி உவமைகூறப்பெற்றது.

454 - 5. கண்பு மலி பழனம் கமழ துழைஇ வலையோர் தந்த இரு சுவல் வாளை—கண்புநெருங்கின மருதநிலத்தைப் பூக்கள் நாறவளைத்து ஆராய்ந்து வலையைவீசுவார் கொண்டுவந்த பெரிய கழுத்தினையுடைய வாளைத்

தடியை,

வி - பு. கண்பு - ஒருவகைக் கோரை ; இது நீரிலுண்டாவது ; "கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக், களிறுமாய் செருந்தியொடு கண்பமன் றூர்தர" (மதுரைக்காஞ்சி, கஎக - உ) என்பதனாலும், "கண்பகத்தின் வாரணமே" (தேவாரம்) என்பதனாலுமறிக.

456 - 8. நிலையோர் இட்ட நெடு நாண் தூண்டில் பிடிக்கை அன்ன செங்கண் வரால் துடிக்கண் அன்ன குறையொடு விரைஇ—ஓரிடத்தில் நிலைபெற நிற்றலையுடையோரிட்ட நெடிய கயிற்றையுடைய தூண்டிலிற்பட்ட பிடியின்கையையொத்த சிவந்தகண்ணையுடைய வராலினது துடியின்கண்ணையொத்த தடியோடேகலந்து,

வி - பு. பிடிக்கை - பெண்யானையின்கை ; இது வரால்மீனுக்கு உவமை. துடி - உடுக்கை. குறை, தடி - குறைத்த தசைத்துண்டம்.

459. பகன்றை கண்ணி பழையர் மகளிர்—பகன்றைப்பூவாற் செய்த கண்ணியையுடைய கள்விற்கும் வலையருடைய மகளிர்,

வி - பு. பகன்றைக்கண்ணி - சிவதைக்கொடியின் பூவாலாகிய மாலை; "பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி" (குறிஞ்சிப்பாட்டு, அஅ)

என்பதனுரையால் இது விளங்கும். பழையர் - கள்விற்போர்.

460 - 62. ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த விலங்கல் அன்ன போர் முதல் தொலைஇ வளம் செய் வினைஞர் வல்சி நல்க—ஞெண்டு கள் ஆடித்திரியும் செய்க்கு அருகில் மேட்டுநிலத்தேயிட்ட மலையையொத்த போர்களை அடியிலேவிழ அழித்துக் கடாவிட்டு வளப்பத்தையுண்டாக்கும் உழவர் நெல்லை முகந்துதராநிற்க,

வி - பு. ஞெண்டு - நண்டு. செறு, செய் - நன்செய். விலங்கல் - மலை ; இது நெற்போருக்கு உவமை ; "வரைக ளொப்பன போரொழுக் கியபுரி வரையின், அருவி யொப்பன சுற்றுபா கடுபுகை யவைசூழ், கருமு கிற்குல மொப்பன தீங்கழைக் கரும்பின், திரள வற்றினைச் சூழ்ந்தகா டொப்பன செறிந்து" (சீகாளத்திபுராணம், நக்கீரச். ௧0) என இவ்வுவமையைப் பின் பற்றி ஸ்ரீ சிவப்பிரகாசஸ்வாமிகள் நெற்போரைக் கூறியிருக்கும் அழகு மிகப்பாராட்டற்பாலது. வல்சி - உணவு ; நெல்லுக்காயிற்று ; ஆகுபெயர் ; 'நாடுபடு வல்சியும்' என்றார்முன்னும் ; ௬அ.

463. துளங்கு தசும்பு வாக்கிய பசும்பொதி தேறல்—களிப்புமிகுதியால் அசையும் மிடாவினின்றும்வார்த்த பசிய மூலையாலாக்கின கட்டெளிவை,

வி - பு. கள்வைத்திருக்கும் பாண்டமும் களிப்புமிகுதியால் அசையு மென்பதை, "தசும்பு துளங்கிருக்கை" (பதிற்றுப்பத்து, ௬உ) என்பதனுலும், 'தன் களிப்புமிகுதியால் தன்னை உண்டாருடல்போல அத்தசும்பிரு

ந்து ஆடும்படியான இருப்பு' என்னும் அதன் உரையாலும் அறிக. கள் பல வற்றால் ஆக்கப்படுமாயினும் 'பசும்பொதித் தேறல்' என்றதனால், மூளையா லாக்கின கள்ளென்றார். மூளை - நென் முளை முதலியன.

464. [இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர் :] ஞாயிறு இளங்கதிர் களங்கள் தொறும் பெறுகுவிர்—ஞாயிற்றினது இளைய கதிர்க ளெறிக்குங்காலத்திலே களங்கடோறும் பெறுகுவிர் ;

விளைஞர் வல்சிநல்காநிற்கப் பழையர்மகளிர் விரைஇத் தேறல்நல்காநிற் கப் பெறுகுவிர் என்க.

வி - பு. " இளங்கதிர் ஞாயிறெள்ளுந் தோற்றத்து" (மணிமேகலை, பதி. க) என இவ்வாக்கியம் வேறிடத்தும் வந்துள்ளது. பழையர்மகளிர் கூத் தர்க்குவரர்க்குங்கள்விலையாக உழவர் அம்மகளிர்க்கு நெல்லைஅளக்கின்றனர்.

465 - 8. [முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு, வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித், திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக், கண் டோர் மருள :]

466 - 8 வண்டு பட கமழும் தேம் பாய் கண்ணி திண் தேர் நன்னற் கும் அயினி சான்மென கண்டோர் மருள—வண்டுபடியும்படி நாறும் தேன் சொரிந்த கண்ணியினையும் திண்ணிய தேரினையுமுடைய நன்னனுக்கும் உண வாதற்கமையுமென்று கண்டோர்கள் மருளும்படி,

வி பு. தேம் - தேன். கண்ணி - இங்கே தலையிலணிந்துகொள்ளு மாலை. நன்னற்கும், உம்மை - உயர்வு சிறப்புப்பொருளது. சான்மென = சாலுமென.

465. முள் அரித்து இயற்றிய வெள்ளரி வெணசோறு—முள்ளைக் கழித்து ஆக்கின கொழுப்பால்

வெள்ளியநிறத்தையுடைய தடிகளையிட்ட
வெள்ளிய சோற்றை,

வெள்ளிய நிறத்தையுடைய தடிகளை
வெள்ளரியென்றார்; ஆகுபெய ராக்கி.

மருள் இயற்றியவென்க.

வி - பு. அரி - அரிந்த தசைத்துண்டங்கள். இவற்றோடுகூட்டிச் சோறு ஆக்கப்படுதல், "ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும்" (புறநா. ௩௩) என்பதனாலும் தெரிகின்றது.

468. கடும்பு உடன் அருந்தி—நும் சுற்றத்துடனே புண்டு,

469-70. எருது எறி களமர் ஓதையொடு நல் யாழ் மருதம் பண்ணி அசையினிர் கழிமின்—எருத்தையடிக்கின்ற உழவரோசையோடே கூடும்படி நல்லயாழை மருதத்தைவாசித்து இளைப்பாறிப் போவீர்;

வி - பு. களமர் - களத்தே தொழில்செய்பவர். மருதம் - காலைப்பண்; இது, "யாழோர் மருதம் பண்ணக் காழோர், கடுங்களிறு கவளங் கைப்ப" (மதுரைக்காஞ்சி, ௬௫௮ - ௯) என்னும் வைகறைவர்ணனையாலும் அறியப்படுகின்றது.

இத்துணையும் நாடுபடுவல்சியும் அசையுநற்புலமும் சேரக்கூறினார்,

471 - 3. வெள் நெல் அரிநர் தண்ணுமை வெரீஇ செங்கண் எருமை இனம் பிரி ஒருத்தல் கனை செலல் முன்பொடு கதழ்ந்து வரல் போற்றி— வெள்ளிய நெல்லையறுப்பார் கொட்டின பறையோசைக்கு வெருவிச் சிவந்த கண்ணையுடைய எருமைத்திரளைப் பிரிந்தகடா ஆரவாரிக்குஞ் செலவினை யுடைய வலியோடே நும்மேல் விரைந்து வருதலைப் பேணி,

வி - பு. "வெண்ணெல் லரிநர் தண்ணுமை வெரீஇ" என்னும் இவ் வடி, புறநானூறு, ௩௪௮ - ம்செய்யுளில் முதலடியாகவும் காணப்படுகின்றது.

474 - 5. வனை கலம் திகிரியின் குமிழி சுழலும் துனை செலல் தலைவாய் ஓவிறந்து வரிக்கும்—குயவன்வனைகின்ற மட்கலத்திற் சக்கரம்போலக் குமிழி சுழன்றுதோன்றும் விரைந்தசெலவினையுடைய வாய்த்தலையில் ஒழிவின்றி ஓடும் யாறு (௪௭௬),

வி - பு. மண்கலம் - மண்ணாற்செய்யப்படும் பாண்டம். வனைகலத்திகிரி - குயவனுடைய சக்கரம். தலைவாய், வாய்த்தலை - வாய்க்காலின் தலைப்பு; "காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை, ஓவிறந் தொலிக்கு மொலியே யல்லது" (சிலப்பதி. நாடுகாண். ௧0அ - ௯) என்றவிடத்து, 'ஓவிறந் தொலிக்குமொலி' என்பதற்கு, 'வாய்த்தலைக்கிட்ட கதவின் மீதெழுந்து குதிக்கின்றன அப்புதுப்புனலொலி' என்று பொருளெழுதினர், அடியார்க்குநல்லார்.

476 - 7. காணுநர் வயாஅம் கட்கு இன் சேயாற்றின் யாணர் ஒரு கரை கொண்டனிர் கழிமின்—காண்பார்விரும்பும் கட்கினிய சேயாற்றினது புது வருவாயையுடைய ஒருகரையை வழியாகக்கொண்டு போவிர்;

வயாம் - ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெட்டது. சேயாறு - அவ்வியாற்றின் பெயர்.

வி - பு. வயா - விருப்பம்; "வயாவென் கிளவி வேட்கைப் பெருக் கம்" (தொல். உரி. ௬௩) கட்கு - கண்ணுக்கு. யாணர், புதுவருவாய் - புது வரும்படி. ஈற்றுமிசையுகரம் - 'வயாவும்' என்பதிலுள்ள உகரம்; மெய் - வகரமெய்; "செய்யு மென்னும்

பெயரெஞ்சு கிளவிக்கு, மெய்யொடுங் கெடு மே யீற்றுமிசை யுகர, மவ்விட னறித லென்மனார் புலவர்" (தொல். வினை. சுக) என்பது இதற்கு விதி.

478 - 87. [நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற், பதியெழ வறியாப் பழங்குடி கெழீஇ, வியலிடம் பெரூஅ விழுப்பெரு நியமத், தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென, விகழுநர் வெரூஉங் கவலை மறுகிற், கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு, மலையென மழையென மாட மோங்கித், துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும், பனிவார் காவிற் பல்வண் டிமிரு, நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர் :]

486. பல் வண்டு இமிரும் பனி வார் காவின்—பலவண்டுகளொலிக்கும் குளிர்ந்த நெடிய பொழில்களையும்,

482, 478. இகழுநர் வெரூஉம் நிவந்தோங்கு வரைப்பின்—நன்னனை இகழ்ந்திருப்பார் அஞ்சும் மிகவோங்கு மதிலையும்,

வி - பு. நிவந்தோங்கு, ஒருபொருட் பன்மொழி.

சாறென (சஅக) கெழீஇ (சஎக) கடலென காரென ஒலிக்கும் சும்மை யொடு (சஅங) வியல் இடம்பெறு விழு பெரு நியமத்து (சஅ0)—திருநா ளென்னும்படி மாந்தர் பொருந்திக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத் தோடே திரிதற்கு அகன்ற இடம்பெறாத சீரிய பெரிய அங்காடித்தெரு வினையும்,

வி - பு. சாறு - திருவிழா. திருவிழாவிற் பலரும்கூடுதல் இயல்பு. அங்காடித்தெரு - கடைத்தெரு.

482. கவலை மறுகின்—பல கவர்த்தன்மையையுடைய

குறுந்தெருக் களையும்,

பதி எழவு அறியா பழங்குடி (௪௭௬) துனி தீர் காதலின் இனிது அமர்ந்து உறையும் (௪௮௫) மாடம் மலையென மழையென ஓங்கி (௪௮௪)— ஊரினின்றும் போதலையறியாத பழையகுடி வெறுப்பில்லாத விருப்பத்தோடே நன்றாதல்பொருந்தியிருக்கும் மாடங்கள் மலையென மழையென ஓங்குகையினாலே,

வி - பு 'பதியெழுவறியாப் பழங்குடிகெழீஇய.... ....புகார்' என ஈண்டுள்ளசொல்லும் பொருளும் அமைந்தவாக்கியமொன்று **சிலப்பதிகாரத் திலும் காணப்படுகின்றது; (மங்கல.)**

481 யாறெனகிடந்த தெருவின்—யாறென்னும்படி கிடந்த பெருந் தெருவினையும்,

இரண்டுமருங்கின் மாடமும் தெருவும் யாறும் கரையும் போன்ற வென்றார்.

வி - பு. தெருவுக்கு யாறு உவமை; "ஆறு கிடந்தன்ன அகனெடுந் தெரு" என்பது, **நெடுநல்வாடை,** ௩0; "நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதி" என்பது **பெருங்கதை.**

நிதியம் துஞ்சும் (௪௭௮) அவன் பழ விறல் மூதூர் நனி சேய்த்தன்று (௪௮௭)—காவினையும் மதிலினையும் நியமத்தினையும் மறுகினையும் தெருவினை யுமுடைய, பொருட்டிரடங்கும் அவன் பழைய வெற்றியையுடைய மூதூர் மிகவும் தூரிதன்றென்க.

வி - பு. "துஞ்சுநீ ணிதியது சுரமை யென்பவே" (**சூளா.** நாட்டு. க) 'நிதியந்துஞ்சும்' என்பது, பாகதத்துள் தற்பவத்திற்கு உதாரணமாகக்காட் டப்பட்டது.

இது மூதூர்மாலை (௯௨) கூறிற்று.

488 - 9. பொருந்தா தெவ்வர் இருந்தலை துமிய பருந்து படகுடக்கும் ஒள் வாள் மறவர்—நன்னனைப்பொருந்தாத பகைவருடைய கரிய தலைகள் துணியப் பருந்துகள்படியப் போரைவெல்லும்

ஒள்ளியவாளையுடைய மறவர் தம்முடைய,

வி - பு. இருமை - கருமை. துமித்தல் - துண்டமாக்கல். பருந்து கள் படிவது, புலாலை உண்பதற்கு. மறவர் - வீரர்; மறம் - வீரம்

490 - 91. கருகடை எஃகம் சாத்திய புதவின் அருங்கடி வாயில் அயி ராது புகுமின்—கரிய காம்பினையுடைய வேலைச்சாத்திவைத்துக் காத்திருக் கின்ற பல தெற்றுவாசல்களையுமுடைய அரிய கோபுரவாயிலை ஐயுறாமற் புகுவீர்;

வி - பு. கடை - காம்பு. புதவு - கதவு; தெற்றுவாசலென்பது, இக் காலத்துத் திட்டிவாயிலென வழங்கும்.

மலைபடுகடாம்.

492 - 5. [மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர், வெல்போர்ச் சேஎய் பெருவிற லுள்ளி, வந்தோர் மன்ற வளியர் தாமெனக், கண்டோ ரெல்லா மமர்ந்தினிதி ஞேக்கி:]

492, 495. மன்றில் வதியுநர் சேண் புலம் பரிசிலர் கண்டோரெல் லாம்—அம்பலங்களிலே தங்குவாராகிய தூரியநிலங்களினின்றும் வந்த கூத் தர்முதலியோராய் நம்மைக்கண்டோரெல்லாம்,

வி - பு. அயலிடங்களிலிருந்துவந்த பரிசிலர் பொதுவிடங்களில் தங் குவது மரபாதலின், 'மன்றில் வதியுநர்' என்றார். சேண்புலம் - நெடுந் தூர மானஇடம். பரிசிலர் - பரிசில் பெறுதற்குரியவர்.

அளியர் தாம் (சகூச) வெல் போர் சேஎய் பெரு விறல் (சகூங) மன்ற (சகூச) உள்ளி (சகூடு) வந்தோரென (சகூச) அமர்ந்து இனிதின் நோக்கி (சகூடு)—இவ்வளிக்கத்தக்கவர் தாம் வெல்லும்போரைவல்ல முருகனைப்போலும் நன்னனைப் பரிசிலர்க்குங் கொற்றமாகநினைத்து வந்தோரென்றுகருதி முகம்பொருந்தி இனிதாகப்பார்த்து,

வி - பு. அளிக்கத்தக்கார் - பாதுகாக்கத்தக்கவர். சேய் - முருகக்கடவுள்; என்றது அக்கடவுள்போன்றநன்னனை. அமர்ந்து - பொருந்தி. மன்ற - நிச்சயமாக.

496 - 7. [விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப், பரிபுலம் பலைத் தநும் வருத்தம் வீட :] பரி புலம்பு அலைத்த வருத்தம் வீட அவர் விருந்து நும் இறை எதிர்கொள அவர் குறுகி—தரித்தலாலுண்டான தனிமை வருத்தின வருத்தம் போம்படி அவ்விடத்தோர் விருந்தாய் நீங்கள் தங்குதலை எதிரேற்றுக்கொள்கையாலே அவர்களைச சேர்ந்திருந்து,

வி - பு. பரிபுலம்பு - மிக்கதனிமை; தரித்தல் - தாமதித்தல். இறை= இறுத்தல் - தங்குதல்.

498 - 500. [எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்த, தொழுதி போக வலிந்தகப் பட்ட, மட நடை யாமான் கயமுனிக் குழவி :]

498 - 500. எரி கான்றன்ன பூ சினை மராஅத்த தொழுதி போக வலிந்து அகப்பட்ட மடநடை ஆமான்குழவி—நெருப்பைக் கான்றாலொத்த பூங்கொம்புகளையுடைய மராமரத்திடத்தே கிடந்த இனமெல்லாம் கெட்டுப் போகப்போகமாட்டாது அகப்பட்ட மடப்பத்தையுடைய நடையையுடைய ஆமானினதுகுழவி,

வி - பு. கான்றாலொத்த - கக்கினாலொத்த. சினை - கொம்பு. தொழுதி, இனம் - கூட்டம். ஆமான்குழவி - காட்டுப்பசுவின் கன்று.

500. கயமுனி குழவி—யானைக்கன்றினையது,

501. [ஊமை யெண்கின் குடாவடிக் குருளை :] எண்கின்

குடாவடி ஊடமை குருளை—கரடியின் வளைந்த அடியினையுடைய வாய்திறவாக்குட்டி,

502 - 3 மீமிசை கொண்ட கவர் பரி கொடுந்தாள் வரை வாழ் வருடை
வல் தலை மா தகர்—முதுகிடத்தேகொண்ட நிலத்தைக்கைக்கொள்ளும் செல
வினையுடைய வளைந்தகாலையுடைய வரையிடத்தேவாழும் எண்கால்வருடையில் வலிய தலையினையுடைய பெரியகிடாய்,

இனி வருடையுந் தகருமென வேறாகக் கூறலுமாம்.

வி - பு. மீமிசைக் கொண்டதாளென்க.
எண்கால்வருடையென்பது ஒருவகை விலங்கு; "மாவுமாக்களும்" (தொல். மர) என்பதன் விசேடவுரையைப் பார்க்க.

504. அரவு குறும்பு எறிந்த சிறு கண் தீர்வை—பாம்பினது வலிகளை யழித்த சிறிய கண்ணினையுடைய கீரி,

வி - பு. கீரி - கீரிப்பிள்ளை.

505 - 6. அளை செறி உழுவை கோள் உற வெறுத்த மடக்கண் மரை யான் பெருசெவி குழவி—முழையிலே செறிந்திருந்த புலி பாய்தலுறுகையினாலே தன்னுடலைவெறுத்த மடப்பத்தையுடையகண்ணினையுடைய மரை யானினது பெரிய செவியினையுடைய குழவி,

வி - பு. மரையான் குழவி - மரையான் கன்று.

507 - 8. அரக்கு விரித்தன்ன செந்நிலம் மருங்கிற் பரல் தவழ் உடும்பின் கொடுந்தாள் ஏற்றை—அரக்கைப்பரப்பினாலொத்த சிவந்தநிலத்திடத்திற் சுக் கான்கல்லிலேதவழும் உடும்பினது

வளைந்தகாலையுடைய ஏறு,

வி - பு. உடும்பின் ஏற்றை - ஆண்உடும்பு.

509. வரை பொலிந்து இயலும் மடக்கண் மஞ்ஞை—மலையிடத்தே அழகுபெற்று ஆடும் மடப்பத்தையுடைய கண்ணினையுடைய மயில்,

510. கானம் கோழி கவர் குரல் சேவல்—கானத்திடத்துக் கோழியினது பெடையையழைக்கின்ற குரலையுடைய சேவல்,

வி - பு. காட்டுக்கோழிச் சேவல்.

511. கானம் பலவின் முழவு மருள் பெரும்பழம்—காட்டிடத்துப் பலாவினுடைய முழவென்றுமருளும் பெரியபழம்,

வி - பு. 'சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி, முரஞ்சுகொண்டிறைஞ்சின வலங்குசினைப் பலவே' என்றார் முன்னும்; 143 - 4

512 - 3. [இடிக்கலப் பன்ன நறுவடி மாவின், வடிச்சேறு விளைந்த தீம் பழத் தாரம் :] நறுவடி மாவின் இடி கலப்பன்ன வடி சேறு விளைந்த தீம்பழம் தாரம்—நறிய வடுக்களையுடைய மாவினது பொடிச்செய்த கண்டின்கலப்பை யொத்த பிழியப்படும் சாறுமுற்றின இனிய பழமாகிய பண்டம்,

வி - பு. கண்டு - கற்கண்டு. சேறு - சாறு. பழமாகியபண்டம் - மாம் பழம்

514. தூவல் கலித்த இவர் நனை வளர் கொடி—மழையாற்செருக்கின பரக்கின்ற அரும்புகளையுடைய மணம்வளருகின்ற நறைக்கொடி,

வி - பு. நறைக்கொடி - ஒருவகைக் கொடி; "தண்கமழ் நறைக்கொடி கொண்டு" (ஐங்குறு. உஎசு) என்பதனாலுணர்க.

515 காஅய் கொண்ட நுகம் மருள் நூறை—காவிக்கொண்டுவந்த நுகமென்றுமருளும் நூற்றைக்கிழங்கு,

நூறை - மலங்கென்பாருமுளர்.

வி - பு. காஅய், காவி - தோளிற்சுமந்து. நுகம் - நுகத்தடி. மலங்கு - ஒருவகை மீன்,

516. [பருஉப்பளிங்குதிர்த்த.] உதிர்த்த பருஉ பளிங்கு—மரத்தினின்
றும் சிதறியுதிர்த்த பருத்த நிகரமாகிய கற்பூரம்,

வி - பு. கற்பூரமென்று ஒருவகை மரமுண்டு; "இமயச்சாரற் கருப்
புரக்கன்று" (சீவக. கஉசுஎ). நிகரம் - கூட்டம்.

516. பல உறு திரு மணி—பலவிலைபெற்ற அழகிய மாணிக்கம்,

517 - 8 [குரூஉப்புலி பொருத புண்கூர் யானை, முத்துடை மருப்பின்
முழுவலி மிகுதிரள்:] குரூஉபுலி பொருத புண் கூர் முழுவலி யானை முத்
துடை மருப்பின் மிகுதிரள்—நிறத்தையுடைய புலிபொரப்பட்ட புண்மிக்க
குறைவில்லா வலியையுடைய யானைகளினுடைய முத்துடைய கொம்புகளினு
டைய மிக்கதிரள்,

வி - பு. யானைக்கொம்புகள் முத்துடையனவென்பதை, "பெருங்களி
ற்று, முத்துடைவான் கோடுதழீஇ" (திருமுருகு. ங0௪ - ரு), "யானை, முத்
தார் மருப்பு" (குறிஞ்சி. ஙரு - சு) என்பவற்றாலுமுணர்க.

519. வளை உடைந்தன்ன வள் இதழ் காந்தள்—வளையுடைந்தாற்

போன்ற வளவிய இதழையுடைய காந்தட்பூ,

வி - பு. வளை - மகளிரணிந்துகொள்ளும் கைவளையல். உடைந்தவளை

காந்தட்பூவின் இதழிற்கு உவமம் ; " 'அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ,

லிலங்கே ரெல்வளை யிறையூ ரும்மே" என்பது கலித்தொகை, எ.

520. நாகம்—புன்னைப்பூ,

520. திலகம்—திலகப்பூ,

520. நறு காழ் ஆரம்—நறிய வயிரத்தையுடைய சந்தனம்,

521. [கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி :] மிளகின் கரு

கொடி காய்துணர் பசுகறி—மிளகினது கரியகொடிகள்காய்த்த கொத்திற்

பசியமிளகு,

முன்னர் மிளகென்றது முதலே ; கறி - சினை.

522. திருந்து அமை விளைந்த தேக்கள் தேறல்—நன்றாகிய மூங்கிற்

குழாயிலே முற்றிய தேனாற்செய்த கட்டெளிவு,

வி - பு. கட்டெளிவு - கள்ளின் தெளிவு.

523. கான் நிலை எருமை கழை பெய் தீந்தயிர்—காட்டிடத்து நிலைமை

யினையுடைய எருமையினது மூங்கிற்குழாயிலேதோய்த்த இனியதயிர்,

524. நீல் நிறம் ஓரி பாய்ந்தென—முற்றுகையினாலே நீலநிறத்தை

யுடைய நிறம் பிறந்ததாக,

524 - 5. நெடு வரை நேமியின் செல்லும் நெய் கண்

இருல்—நெடிய

வரையில் இருலிடத்தைவிட்டுப்பாயுந் தேனைத் தன்னிடத்தேயுடைய இருல்

கள்,

வி - பு. முற்றுகையினுலே - முதிர்கையினுலே. ரேமி, இருல் - தேன்

கூடு. நெய் - தேன்; தேன், நெய்யென்றும், தேனெய்யென்றும் நூல்களில் வழங்கும், "அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து, திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே" (புறநா, கoக) என இப்படியே வந்திருத்தல் காண்க.

526 - 9. [உட்ம்புணர்பு தழீஇய வாசினி யனைத்துங், குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி, கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப, நோனுச் செருவி னெடுங்கடைத் துவன்றி :]

526. தழீஇய ஆசினி—நன்றென்று கூட்டிக்கொண்ட ஆசினிப்பலா,

வி - பு. ஆசினிப்பலா - ஈரப்பலா.

527 - 8. குடமலை பிறந்த தண் பெருங்காவிரி கடல் மண்டு அழுவத்து கயவாய் கடுப்ப—குடகமலையிற்பிறந்த குளிர்ந்த பெரியகாவிரி கடலிலே மிக் குச்செல்கின்ற ஆழத்தையுடைய புகார்முகத்தையொப்ப,

வி - பு. குடகமலை - ஒருமலை புகார்முகமென்றது, காவிரி கடலொடு கலக்கும் இடத்தை ; "மலைத்தலையகடற்காவிரி" (பட்டின. கூ).

529. நோனா செருவின் நெடுங்கடை—பகைவர் பொறுத்தலாற்றாத போரினையுடைய தலைவாசலிலே,

வி - பு. நோன்றல் - பொறுத்தல். 'நெடுங்கடை' என்றமையால், தலைவாயிலாயிற்று.

526, 9. * அனைத்தும் உடம்புணர்பு துவன்றி,

வி - பு. அனைத்தும் - மேற்கூறியயாவும். உடம் புணர்பு துவன்றி - ஒருமிக்கச் சேரப்பெற்று நெருங்கி.

530 - 31. * [வானத் தன்ன வளமலி யானைத், தாதெருத் ததைந்த
முற்ற முன்னி :]

வி - பு. வானத்து அன்ன - மேகங்களையொத்த, வளம் மலி யானை -
செல்வ மிகுந்த யானைகளையுடைய, தாது எரு ததைந்த - தாதாகிய எருக்கள்
நெருங்கின, முற்றம் முன்னி - முன்றிலை அடைந்து. யானைகளுக்கு மேகம் உவமை. யானைகளையுடைய முற்றமென்க.

532. மழை எதிர் படு கண் முழவு கண்
இருப்ப—மழைமுழக்கத்திற்கு எதிராகமுழங்கும் கண்ணையுடைய முழவின்கண்கள் ஒலியாநிற்க,

வி - பு. படுதல் - ஒலித்தல். முழவின் ஒலிக்கு மழையொலி உவமை; "விண்ணதிரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத், திண்வார் விசித்த முழவு" (உ - ௩) என இந்நூலுள் முன்னும் வந்துள்ளது. இருத்தல், ஒலித்தலென் பதை, "மருப்பி குத்துத்துனையின்" (௩௬௬) என முன் வந்ததனாலும் அறிக.

533. கழை வளர் தூம்பின் கண்ணிடம் இமிர—மூங்கிலாகிய இசை வளரும் பெருவங்கியத்தினது திறந்தகண்ணிடம் ஒலியாநிற்க,

வி - பு. 'கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பு' (௬) என முன் வந்தமையாலும் பெருவங்கியத்தினது இயல்பு புலனாகின்றது.

534 - 6. [மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ், நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக், கடவ தறிந்த வின்குரல் விறலியர் :]

மருதம் பண்ணிய கரு கோடு சீறியாழ் நரம்பு மீது இறவாது உடன் புணர்ந்து ஒன்றி இன் குரல் விறலியர்—மருதத்தை வாசித்த கரிய தண்டினை

---

* இவற்றிற்கு உரைகிடைத்திலது.

அஉ மலைபடுகடாம்.

யுடைய சிறிய யாழின்நரம்பினோசைக்கு மேற்போகாது அவ்வோசையுடனே கூடி ஒரோசையாய் இனிதாகிய பாட்டினையுடைய விறல்பட ஆடுமகளிர்,

536. கடவது அறிந்த விறலியர்—தலைவனைக்கண்டாற் செய்யக்கடவ தொழிலை யறிந்த விறலியர்,

வி - பு. மருதம் - மருதப்பண். நரம்போசையும் மிடற்றோசையும் ஒன்றுபடப் பாடலின் சிறப்பை, “நரம்பார்த் தன்ன வின் குரற் றொகுதி” (திருமுரு. உகஉ), “சுகிர்புரி நரம்பு நம்பி, யூழ்மணி மிடறு மொன்றாய்ப் பணிசெய்த” (சீவக. எஉஅ) என்பவற்றாலும் அறிக. செய்யக்கடவதொழில் - வழிபாடு.

537. தொன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாஅது—பழையதாய்நடக்கு முறைமையினையுடைய தம்மிலக்கணத்தில்தப்பாமல்,

வி - பு. தொன்று - பழமை.

538. அருந்திறல் கடவுள் பழிச்சிய பின்றை—பொறுத்தற்கரிய வலியையுடைய கடவுளை முதலில் வாழ்த்தின பின்பு,

வி - பு. ‘ அருந்திறற் கடவுள் ’ என்பதன் பொருள், (சீவக. சOஉ) “ நலம் பொறுக்கலாத பிண்டி நான்முகன் ” என்பதை நினைப்பிக்கின்றது.

முற்றத்தையணுகி (ருகக) இருப்ப (ருகஉ) விறலியர் (ருகரு) தேவ பாணியைப் பாடினபின்பு (ருகஅ) என்க.

வி - பு. தேவபாணி - தேவர்களைப்பரவும் பாட்டு.

539. விருந்தின் பாணி கழிப்பி—சென்று புதிதாகப்பாடும் பாட்டுக்களைப்பாடி,

539 - 40. நீள் மொழி குன்றா நல் இசை சென்றோர் உம்பல்—வேனிழற்புலவோர்க்குக் (அஅ) கொடுத்தவற்றை வாங்காதபடி தாம்கூறிய வஞ்சினங்களிற் குறையாத நல்ல புகழிலேநடந்தோருடைய வழியில்வந்தவன்,

வி - பு. வேல் நிழல் புலவோர் - வேற் போரின் விளக்கத்தையும் அறிவையும் உடையவீரர். வஞ்சினம் - சபதம்.

இதனாற் கொடைக்கடனிறுத்த அவன் தொல்லோர்வரவு (அகூ) கூறினார்.

541 - 3. [இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப, விடைதெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக், கொடைக்கட னிறுத்த செம்ம லோயென :]

542. இடை தெரிந்து உணரும் பெரியோர் மாய்ந்தென—நன்றிது தீதிதுவென்று ஆராயும் பெரிய உபகாரிகள் இறந்தார்களாக,

வி - பு. இடை - இடம். தெரிந்துணர்தல் - நன்மை தீமைகளை ஆராய்தல்.

541, 543. இன்று இவண் செல்லாது உலகமொடு நிற்ப கொடை கடன் இறுத்த செம்மலோய் என—நின்பேர் இக்காலத்து இவ்வுலகிலே நடந்து விடாதே உலகமுள்ளவளவு நிற்கும்படி கொடையாகியகடனை முடித்த தலைமையை யுடையோயென்றுகூறி,

வி - பு. இந்தப்பகுதியும், "மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே" (புறநா. கசுரு) என்பதும் ஒத்துவிளங்குகின்றன.

மலைபடுகடாம். அரு

544 வென்றி பல் புகழ் விறலோடு ஏத்தி—வெற்றியாலுண்டாகிய பலபுகழ்களை ஐம்பொறிகளைத் தன்வசமாக்கின வெற்றியோடே புகழ்ந்து,

வி - பு. வென்றிப்பல் புகழ், பிரதாபமென வழங்கும்.

545. சென்றது நொடியவும் விடாஅன்—நும்மனத்திற்சென்றவனைப் புகழ்களை முற்றக்கூறவும் அமையானாய்,

வி - பு. நொடித்தல் - சொல்லுதல்.

545 - 6. நசை தர வந்தது சாலும் வருத்தமும் பெரிது என—என் மேலுள்ளநசை கொண்டுவருகையினாலே என்னிடத்தேவந்தது அமையும்; வழிவந்தவருத்தமும் பெரிதென முகமன்கூறி,

வி - பு. நசை - விருப்பம். முகமன் - உபசாரம்.

547 - 8. பொரு முரண் எதிரிய வயவரொடு பொலிந்து திருநகர் முற்றம் அணுகல் வேண்டி—பொருகின்ற மாறுபாட்டினை எதிர்கொண்டிருக்கும் படைத்தலைவரோடே பொலிவுபெற்றுச் செல்வத்தையுடைய தன்மனையின் முற்றத்தை நீங்கள்செல்லுதலைவிரும்பி,

பொலிந்தென்னுமெச்சத்தை உடையவென்பதனேடுமுடிக்க.

549. கல்லென் ஒக்கல் நல் வலத்து இரீஇ—கல்லென்னும் ஆரவாரத்தையுடைய சான்றோரிருக்கின்ற நன்றாகிய சமயத்திருக்கு மண்டபத்தே யிருந்து,

வலம் - இடம்.

வி - பு. சமயத்திருக்கு மண்டபம் - யாவருக்கும் காட்சிக்கு எளியனாய் வீற்றிருக்கு மண்டபம்.

இதனால், நல்லிதினியக்குமவன் சுற்றத்தொழுக்கமும் அவன் நாண்மகி ழிருக்கையும் கூறினர்.

550 - 52. உயர்ந்த கட்டில் உருப்பு இல் சுற்றத்து அகன்ற தாயத்து அஃகிய நுட்பத்து இலமென மலர்ந்த கையராகி—உயர்ந்த அரசவுரிமை யினையும், கொடுமையில்லாத அமைச்சர்முதலியோரையும், அகன்றநாட்டினை யும், சுருங்கின அறிவினையுமுடையராய் இரந்துவந்தோர்க்கு யாம் இல்லே மென்றுகூறி இல்லையென்று மறித்த கையினையுடையராய்,

கட்டில் - சிங்காதனமுமாம். தாயம் - உரிமைகளெல்லாவற்றையுங் கூறி ற்றுமாம்.

வி - பு. உருப்பு - உஷ்ணம்; கொடுமைக்காயிற்று; " உருப்பில் சுற் றமோடிருந்தோற்குறுகி " (சசஎ) என்றார் பெரும்பாணாற்றிலும். தாயம் - உரிமை; இங்கே நாட்டிற்காயிற்று.

553. தம் பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்—தம்பெயரை உலகில் நிறுத்தாமல் தம்முடனேகொண்டு பொன்றக் கெட்டுப்போன அரசர்,

வி - பு. பொன்றக் கெடுதல் - முற்றக்கெடுதல்; புகழுக்குரிய செயல்களில்லாதவரென்றபடி.

554 - 6. நெடு வரை இழிதரு நீத்தம் சால் அருவி கடு வரல் கலுழி

கட்கு இன் சேயாற்று வடு வாழ் எக்கர் மணலினும் பலரே—நெடிய மலையி னின்றுங்குதிக்கும் பெருக்குநிறைந்த அருவியினது கடியவரத்தினையுடைத்

தாகிய பெருக்கினையுடைய கட்கினிய சேயாற்றின் அறல்வீற்றிருந்த இடு மணலாகிய மணலினும்பலர்;

வி - பு. சேயாறு - நன்னனுடைய ஆறு. "வடுவாழெக்கர் மணல்" என்பதற்கு வடு அழுந்திய எக்கர் மணலென்றார், (ருரு) புறநானூற்று உரையாசிரியர்.

557. [அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளென :] அதனால் நம் வரைந்தநாள் புகழொடும் கழிக என—ஆகையினாலே நமக்குத் தெய்வம் இத்துணைக்காலமிருவென எல்லையிட்டுவிட்ட நாள் புகழோடே கழிந்துபோவ தாகவென்று கருதி,

வி - பு. தெய்வம் - ஊழ்வினை.

558. [பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு :] பரந்து இடம் கொடுக்கும் உள்ளமொடு—கொடுத்தற்றொழிலிலேவிரிந்து அதற்கே இடங்கொடுக்கும் நெஞ்சுடனே,

விசும்பு தோய் உள்ளம்—ஆகாயத்தையொத்த பெரிய உள்ளம்.

வி - பு. மனத்திற்கு ஆகாயம் உவமை; விசும்பு பரந்து இடம் கொடுக்குமென்பதை, "அகலிரு விசும்பு" (பெரும்பா. க)

என்பதனுரையாலு முணர்க.

559 - 60. [நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி, துவந்த வுள்ள மோ டமர்ந்தினிது நோக்கி :] நயந்தனிர் உவந்த உள்ளமோடு சென்ற நும்மி னும் தான் பெரிது அமர்ந்து இனிது நோக்கி— பரிசில்பெறுதற்கு விரும்பி மகிழ்ந்த நெஞ்சத்தோடே சென்ற நும்மினுங்காட்டில் தான் பெரிதும் முக னமர்ந்து இனிதாகப்பார்த்து,

வி - பு. நும்மினும் காட்டில் - நும்மைக்காட்டிலும்.

561 - 2. [இழைமருங் கறியா நுழைநூற் கலிங்க, மெள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ :] எள்ளறு சிறப்பின் இழை மருங்கு அறியா நுழை நூல் கலிங்கம் வெள்ளரை கொளீஇ—இகழ்ச்சியற்ற தலைமையினையுடைய இழைபோனவிடமறியாத நுண்ணியநூலாற்செய்த புடைவைகளை அழுக் கேறினசீலைகள் கிடத்தலின் வெள்ளிதாகிய அரையிலே உடுத்தி,

வி - பு. புடைவைகள், சீலைகளென்பன ஆண்பாலுக்கும்வழங்கும். ‘இழைமருங் கறியா நுழை நூற்கலிங்கம்’ என்பது, “நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந், தரவுரி யன்ன வறுவை” (பொருநராறு. அ௨ - ௩) என்பதை ஒத்து விளங்குகின்றது.

563 - 6. [முடுவ றந்த பைந்நிணத் தடியொடு, நெடுவெ ணெல்லி னரி சிமுட் டாது, தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து, பலநா ணிற்பினும் பெறு குவிர் :]

565 - 6. வழி சிறந்து பல நாள் நிற்பினும்—அவ்விடம் நுந்நெஞ்சிற்குச் சிறப்பெய்திப் பலநாள் நின்றீராயினும்,

563. முடுவல் தந்த பைந்நிணம் தடியொடு—பெண்ணாய் கடித்துக் கொண்டுவந்த பசிய நிணத்தையுடைய தசைகளோடே,

564. நெடு வெள் நெல்லின் அரிசி முட்டாது—நெடிய வெள்ளிய

நெல்லினரிசியும் முட்டுப்படாமல்,

565, 6. *தலைநாள் அன்ன புகலொடு*
பெறுகுவிர்—முதனாட்போன்ற
விருப்பத்தோடே பெறுகுவிர்;

வி - பு. வழி - இடம். முட்டுப்படாமல் - குறைவுபடாமல். புகல் - விருப்பம். 'பலநாள் நிற்பினும் பெறுகுவிர்' என்பது, "ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம், பலநாள் பயின்று பலரொடு செல்லினுந், தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ" (புறநா. ௧0௧), "பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழைஇ, யென்னானும் வேண்டுப வென்றிகழ்ப—என்னானும், வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர், காண்டொறுஞ் செய்வர் சிறப்பு" (நாலடி. மேன்மக். ௯) என்பவற்றை நினைப்பிக்கின்றது.

566 - 8. [*நில்லாது, செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கூறி விடுப்பின்*:] *நில்லாது எம் தொல் பதி பெயர்ந்து செல் வேம் தில்ல என மெல்லென கூறி விடுப்பின்*—அவ்விடத்து நில்லாதே எம்முடைய பழைய ஊரே மீண்டு போவேம்; இஃது எங்களுக்குவிருப்பமென்று அவன்பொறுக்கச்சொல்லி அவனைக் கைவிடின்,

வி - பு. "செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென" (பொருநராறு. ௧௨௧) என்பதனுரையில், 'தொல்பதி' என்றார், இதுவும் தமக்குப் பதியென்பது தோன்ற' என்பது எழுதப்பெற்றுள்ளது.

568 - 9. *நும்முள் தலைவன் தாமரை மலைய*—நுங்களில் தலைவனானவன் பொற்றாமரையைச் சூட,

569 - 70. விறலியர் சீர் கெழு சிறப்பின் விளங்கு இழை அணிய— விறல்படவாடுமகளிர் அழகுபொருந்தின தலைமையினையுடைய விளங்குகின்ற பேரணிகலங்களைப் பூண,

571. நீர் இயக்கு அன்ன நிரை செலல் நெடு தேர்—நீரின் செலவினை யொத்த நிரைத்துச்செல்கின்ற செலவினையுடைய நெடிய தேர்கள்,

வி - பு. நிரைத்து - வரிசையுற்று. செலவு - செல்லுதல்.

572 வாரி கொள்ளா வரை மருள் வேழம்—யானைபடுகின்றவிடத்திற் பிடித்துக்கொள்ளாத மலையென்று மயங்கும் யானைகள்,

என்றது - பகைவர் திறைதந்த யானைகளை.

வி - பு. வாரி - யானையை அகப்படுத்துமிடம்.

573. கறங்கு மணி துவைக்கும் ஏறு உடை பெரு நிரை—ஒலிக்கு மணிகள் ஆரவாரிக்கும் ஏறுகளையுடைய பெரிய பசுத்திரள்கள்,

வி - பு. ஏறு - காளை.

574. பொலம் படை பொலிந்த கொய் சுவல் புரவி—பொன்னாற்செய்த கலனைமுதலியவற்றாற் பொலிவுபெற்ற மனச்செருக்கால் மயிரைப் பலகாலுங் கொய்யும் கழுத்தினையுடைய குதிரைகள்,

வி - பு. கலனை - சேணம். “பொன்னென்கிளவி” (தொல். புள்ளி மயங். சுக) என்னும் சூத்திரவுரையில், பொன்னென்பது பொலமென்று வருமென்பதற்கு இந்தஅடியையே மேற்கோளாகக் காட்டினர்.

575. நிலம் தின கிடந்த நிதியமோடு—மண் தின்னும்படி பழைதாய்க் கிடந்த பொருட்டிரளோடே,

575. அனைத்தும்—எல்லாவற்றையும்,

576 - 7. இலம் படு புலவர் ஏற்ற கை நிறைய கலம் பெய கவிழ்ந்த கழல் தொடி தட கையின்—இல்லாமையுண்டான புலவர் ஏற்றகைநிறையும்படி பேரணிகலங்களைச் சொரிகையினாலே கீழ்நோக்கின உழலுந்தொடியணிந்த பெரியகையினிடத்துண்டாகிய,

வி - பு. இலம் - வறுமை. "இலமென் கிளவிக்குப் படிவரு காலை, நிலையலு முரித்தே செய்யு ளான" (தொல். புள்ளி. உக.) என்பதற்கு 'இலம் படுபுலவர்' என்னும் அடியே உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளது.

இதனாற் புலவோர்க்குச்சுரக்கும் அவன் ஈகைமாரி (எஉ) கூறினர்.

578. வளம் பிழைப்பு அறியாது—தான்கொடுத்தசெல்வம் கெடுதலை யறியாதபடி,

578 - 9. வாய் வளம் பழுநி கழை வளர் நவிரத்து மீமிசை—வாய்த்த வளப்பம் முற்றப்பெற்று மூங்கில்வளர்ந்த நவிரமென்னும் பெயரையுடைய மலையிடத்துச்சியிலே,

579 - 80. ஞெரேரென மழை சுரந்தன்ன ஈகை—கடுக மழைசொரிந் தாற்போன்ற கொடையாலே,

580 - 81. [நல்கித், தலைநாள் விடுக்கும் பரிசில் :] தலைநாள் பரிசில் நல்கி விடுக்கும்—முதனாளிலே பரிசில்தந்து போகச்சொல்லும்;

581 - 3. மலை நீர் வென்று எழு கொடியில் தோன்றும் குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனே—மலையினின்றும் விழுகின்ற அருவிகள் வென்றுயர்கின்ற கொடிகள்போலத் தோன்றும் மலைகள்சூழ்ந்த பரப்பினையுடைய நாட்டிற்கு உரிமையையுடையோன்.

வி - பு. அருவிகளுக்குத் துகிற்கொடிகள் உவமை; "வேறுபஃ றுகிலி னுடங்கி.........இழுமென விழிதருமருவி" (திருமுருகு. உகூ பதனுலுமுணர்க.

- ௩கூ) என் விடுப்பிற் (ருகூஅ) சென்றோரும்பல் (ருசுo) நாடுகிழவோன் (ருஅ௩) தன்கையிடத்துண்டாகிய (ருஎஎ) மழைசுரந்தன்ன இயல்பாகிய கொடைத்

தொழிலாலே (ருஅo) வளம்பிழைப்பறியாதபடி (ருஎஅ) நிதியத்தோடே (ருஎகு) தேர் (ருஎக) வேழம் (ருஎஉ) நிரை (ருஎ௩) புரவி (ருஎச) இவை யனைத்தும் (ருஎகு) உயர்ந்தவன் தாமரைமலைய விறலியர் (ருகூக)

இழையணி யத் (௫௭௦) தலைகாளிலே பரிசிலாக (௫௮௧) நல்கி (௫௮௦) விடுக்கும் (௫௮௧) எனமுடிக்க.

இதனுல், வீயாதுசுரக்குமவன் வியன்மகிழிருக்கை (௭௬) கூறினர்.

கலப்பையிராய் (௧௩) ஒழுகிச் (௨௦) சுற்ற (௪௯) இருந்த (௪௯) தலைவ (௫௦), யாறுகடற்படர்ந்தாங்கு (௫௨) யாம் அவனைக்கருதிச்சென்று பரிசில் பெற்று 'வருகின்றேம்; நீயிரும் (௫௩) நன்னற்படர்ந்த கொள்கையொடு (௬௪) சேறிராயின் (௬௫) எற்ருக்குறுதலின் (௬௬) எதிர்ந்தபொழுதையும் (௬௫) புள்ளையும் உடையிராயிருந்தனிர் (௬௬); இனி யாற்றினதளவும் புலமும் (௬௭) வல்சியும் (௬௮) மலையும் சோலையும் கானமும் (௬௯) ஈகைமாரியும் (௭௨) ஆற்றலும் (௭௩) இருக்கையும் (௭௬) சுற்றத்தொழுக்கமும் (௮௦) கடவுளதியற்கையும் (௮௩) அவன் சிறப்பும் (௮௫) தொல்லோர்வரவும் (௮௯) மூதூர்மாலையும் (௯௩) இருக்கும்படி கேட்பாயாக ; அவற்றுள் இனிவேலை நீ முன்னியதிசையைக்கேள் (௯௪) ; பெட்டாங்குவிளைய (௯௮) வானம் பொழிகையினுலே (௯௭) முசுண்டை (௧௦௧) முதலாகப் பல (௧௪௪) ஈருகவெண் ணிய இம் மிகுவளம பழுநியவைப்பாலே (௯௫) புதுவதுவந்தன்று; அவ்வழி யின்பண்பு இத்தன்மைத்து (௯௬) ; அவற்றைக்கண்டு கானவர் (௧௫௫) சிறு குடிப்படின் (௧௫௬) ஒக்கலொடும் பதமிகப்பெறுகுவிர் (௧௫௭); அசைஇ அன்று அற்சேர்ந்து அவண் அல்கிப் (௧௫௮) போகிப் (௧௬௦) பாக்கமெய்தி

(௧௬௨) விறல்வேள் வயிரியமெனிற் (௧௬௪) பொம்மல் பெறுவிர் (௧௬௯) ; அவன் மலைமிசை நாடு அனையதன்று (௧௮௮) ஆண்டுத் தேக்கட் டேறலைப்

(களக) பருகி நறவைமகிழ்ந்து (களஉ) அனந்தல் தீர் (களங) மகமுறைதடுப்ப மனைதொறும் (கஅடு) தாரத்தோடே (கள0) வல்சியைப் (கஅங) பெறுகுவிர் (கஅடு); பெற்றால் பரிசின்மறப்ப நீடலுமுரியிர் (கஅஎ); அங்ஙனநீட்டிப்பிற் பனித்தலு முரியிர் (கஙக) ; ஆதலால் பலநாணில்லாது நாடுபடர்மின் (கஙஉ) ; படரும்பொழுது அவ்வாறு (கஙடு) அரும்பொறி (கஙச) யுடையவாகையி
ஞலே நள்ளிருள் (கஙடு) வைகினிர் விரிந்தவிடியல்கழிமின் (கஙசு) ; கழிந்து செப்பந்துணியின் (கஙஎ) வலஞ்செயாக்கழிமின் (உ0உ) ; கழிந்து குறவர் (உ0ங) ஏறித் (உ0ச) தளர்க்குங்கல் (உ0சு) கூற்றத்தன்ன (உ0கூ) ; அவைதாம் இரியத் (உ0அ) தத்தி (உ0எ) விசைதவிராது வரும் ; அதற்கு மா மறையாக்கழியின் (உக0) , கழிந்து கான்யாற்றுநடவை (உகச) வழூஉமருங் குடைய (உகடு) ; அவ்விடத்திற்கு வலந்த பரூஉக் கொடிமதலைபற்றி (உகசு) வழாலோம்பி (உகடு) ஒருவிரொருவிரோம்பினிர் கழிமின் (உகஅ) ; கழிந்து நுண்ணீர்ப்பாசிவழும்பு (உஉக) அடிநிலைதளர்க்கு மருப்பமுமுடைய (உஉஉ); அதற்கு வேரலோடு (உஙங) மென்கோல் பற்றினிர்கழிமின் (உஉச) ; கழிந்து கடவுட்காணின் (உங0) வெற்புமாரி தலையு (உஙங) மாதலின், நும்மியக்
தொடுதலோம்புமின் (உஙஉ) ; ஓம்பி முஞ்ஞைதளரினும் (உஙடு) கடுவன் உகளினும் (உஙஎ) பிரசங்காணினும் (உஙகூ) ஞெரேரெனநோக்கலுரித்தன்று (உச0) ; நெறிமாறு படுகுவிர் (உசக) ; அங்ஙனம் நெறிமாறுபடாமற்போய்க்
கானத்துப்படின் (உசஉ) ஏனங்காணின் (உசஎ) மிசைந்து (உசகூ) பருகிப் (உருக) பொறியினிராய் (உருஉ) மகாரோடே (உருங) கழிதலோம்பி அற்குக் (உருச) கல்லளைவதிமின் (உருடு) ; வதிந்து விடியலெழுந்து (உருஎ) செந்நெறிக்கொண்மின் (உருஅ) ; கொண்டு விலங்கி (உசுக) நோக்கிக் (உசுசு) குறு
காதுகழிமின் (உசுஎ) ; கழிந்து நாடுகாணனந்தலை மென்மெல வகன்மின் (உஎ0) ; அகன்று குன்றத்துப்படின் (உஎடு) இயங்கொடுமின் (உஎஎ) ; தொட்டால் கானவருளர் (உஎகூ) ; அவரெய்திக் (உஅக) காட்டி (உஅங) முந்துற (உஅச) இனியிராகுவிர் (உஅசு); அங்ஙனமினியிராய் அவர்கூறிய மாதிரங் கை

க்கொண்டு (௨௮௭) இழிந்து (௨௮௮) இருப்பின் (௨௯0) மலைபடுகடாம் (௩௪௮) பலதிறம்பெயர்பவைகேட்குவிர் (௨௯௧); கேட்டபின் அவன்வெற்புவிழவின ற்று (௩௫௧); ஆண்டுத் தொன்முறைமரபினிராகிப் (௩௫௫) பாடிப் (௩௫௯) பழிச்சி (௩௬0) மலைபிற்படக் (௩௫௭) கழிமின்; (௩௬0) கழிந்து துவலைத வற்றலின் (௩௬௩) விடரகம்புகுமின் (௩௬௬); புகுந்து குன்றில் ஆரிடரழு வத்து (௩௬௮) ஊறுதவப்பல (௩௭௨); அவற்றைக் கோல்கொண்டு (௩௭0) ஊன்றினிர்கழிமின் (௩௭௨); கழிந்து இன்னலியக்கத்து (௩௭௪) அமையத்துக் கழிமின் (௩௭௫); கழிந்து அவ்விடம் அருப்பமுமுடைய (௩௭௮); அவ்வர ண்களிற் போகில் நுழைதொறும் (௩௭௯) கைபிணிவிடாதுகழிமின் (௩௮௩); கழிந்தாற் கானம்பல (௩௮௫); கல் நட்ட (௩௮௮) கவலைகள்பல (௩௮௯); அக் கல்விற்கு மருப்பிகுத்துத்துனைமின் (௩௯௧); அப்பொழுது புதுவிர் (௩௯௨) புன்முடிந்திடுமின் (௩௯௩); இட்டுப்போனாற் சுரந்தவப்பல (௩௯௮); ஓம்பாவள் ளற் படர்ந்திருமெனின் (௪00) நம்மனோர்க்கு ஆங்கனம் (௪0௨) மூதூர் (௪0௧) அற்று (௪0௨); அசைவுழியசைஇ அஞ்சாதுகழிமின் (௪0௩); அக்கானத்தை யிறந்து (௪0௫) கோவலர்பாலைச் (௪0௯) சொரிகையினாலே (௪௧0) அவர்க்கு விருந்தாவிர் (௪௧௨); அங்ஙனம்விருந்தாய் ஆட்டினிரையிலேபுகிற் (௪௧௬)

௮௮ மலைபடுகடாம்.

பாலும்மிதவையும் பெறுகுவிர் (௪௧௭); அவற்றைப்பெற்று அதட்பள்ளியிலே (௪௧௯) சேந்தனிர்கழிமின் (௪௨0); கழித்து கூளியர்கூவைகாணிற் (௪௨௨) படர்ந்திருமெனின் (௪௨௪) தடியுங்கிழங்குந் தரீஇ (௪௨௫) ஓம்புநரல்லது உடற்றுநரில்லை (௪௨௬); அவற்றையருந்தி வியங்கொண்மின்; அதன்பண்பு அஃது (௪௨௭); அப்பண்பைக்கண்டு கண்ணியைச் (௪௩0) சூடித் (௪௩௧) தண்ணென (௪௩௨) உண்டனிர் ஆடிக்கொண்டனிர்கழிமின் (௪௩௩); கழிந்தாற் புளிங்கூழை (௪௩௬) அற்குக் (௪௩௭) குடிதொறும்பெறுகுவிர் (௪௩௯); பெற்று அசையினிர் சேப்பின் (௪௪௩) நுவணையோடு (௪௪௫) அமலையை (௪௪௧) இழுதுள்ளீடாக (௪௪௨)

அல்கலும் பெறுவிர் (சசங) ; அவற் றைப்பெற்று ஞெகிழிமாட்டித் (சசசு) துஞ்சிப் (சசஎ) புள்ளோர்த்துக் கழி மின் (சசஅ) ; கழிந்தால் அவன் தண்பணைநாடு நன்பலவுடைத்து (சடுங) ; அதனையடைந்தால் வினைஞர்வல்சிநல்கப் (சசுஉ) பழையர்மகளிர் (சடுக) விரைஇத் (சடுஅ) தேறலை (சசுங) நல்க (சசுஉ) அவற்றைப்பெறுகுவிர் (சசுச) ; அவற்றைப்பெற்றபின்பு அவரவரிட்டவெண்சோற்றை (சசுடு) யருந்தி (சசுஅ) மருதம்பண்ணிக் கழிமின் (சஎ0) ; கழிந்து எருமையொருத் தல் (சஎஉ) கதழ்ந்து வரல்போற்றிச் (சஎங) சேயாற்றின் (சஎசு) ஒருகரை கொண்டனிர்கழிமின் (சஎஎ) ; கழிந்தால் அவன்மூதூர் சேய்த்தன்று

(சஅஎ); அவ்வூரிற்சென்றால் அருங்கடிவாயிலை அயிராது புகுமின் (சகுக); புக்காற்பரிசிலர் (சகுஉ) கண்டோரெல்லாம் (சகுடு) எதிர்கொளக்குறுகிப் (சகுசு) பின்னர்முற்றமுன்னிக் (டுஙக) கடவுள் வாழ்த்தியபின்னர் (டுஙஅ)

விருந்திற்பாணிகழிப்பிச் (டுஙக) செம்மலோயெனக்கூறி (டுசங) யேத்திச் (டுசச) சென்றதுநொடியவும் விடானுய் (டுசடு) வருத்தமுழ்பெரிதெனக் கூறி (டுசக) அணுகல்வேண்டி (டுசஅ) நல்வலத்திரீஇ (டுசக) மாய்ந்தோர் (டுடுங) மணவினும்பலர் (டுடுசு) ; அதனால் நம்வரைந்தநாள்புகழொடு கழிக வென்றுகருதிப் (டுடுஎ) பரந்திடங்கொடுக்குமுள்ளத்தோடே (டுடுஅ) அமர்ந்து நோக்கிக் (டுசு0) கலிங்கம் (டுசுக) வெள்ளரைக்கொளீஇப் (டுசுஉ) பலநாள்நிற்பினும் (டுசுசு) தடியொடு (டுசுங) அரிசி முட்டாது (டுசுச) தலை நாளன்னபுகலொடு (டுசுடு) தரப்பெறுகுவிர் ; நில்லாது (டுசுசு) செல்வே மென (டுசுஎ) விடுப்பின் (டுசுஅ) சென்றோரும்பல் (டுச0), நாடுகிழவோன்

(டுஅங), அவன் தன்கையிடத்துண்டாகிய (டுஎஎ) மழைசுரந்தன்ன இயல் பாகிய கொடைத்தொழிலாலே (டுஅ0) வளம்பிழைப்பறியாதபடி (டுஎஅ) நிதியத்தோடே (டுஎடு) தேர் (டுஎக) வேழம் (டுஎஉ) நிரை (டுஎங) புரவி (டுஎச) இவையனைத்தையும் (டுஎடு) தலைவன்றாமரைமலைய விறலியர் (டுசுக) இழையணியத் (டு௭0) தலைநாளிலேபரிசிலாக (டுஅக) நல்கி (டு௯0) விடுக்கும் (டுஅக) ; ஆதலால், அவன்பாற் றாழாமற்

கடிதாகச்சென்று பரிசில் பெறுகுவிராகவெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல்குன்ற க்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைப்பாடிய மலைபடுகடாத்திற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

இப்பாட்டுடைத்தலைவனாகிய

நன்னன் வரலாறு.

இப்பாட்டுடைத்தலைவனாகிய இவன் வரலாற்றை அறிவதற்கு இந்நூலும் இதன் இறுதியிலுள்ள பழையவாக்கியமும், அகநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு, மதுரைக்காஞ்சி முதலியவற்றின் சிலபகுதிகளுமேயன்றி வேறு கருவிகிடைத்திலது. இவன் வேளிர்குலத்தைச் சேர்ந்தவன்; (94, 163 - 4.) பிறநூல்களில் நன்னன் வேண்மானெனக்கூறப்பெறுபவன் இவனே; (அகநா. 98) வேண்மான் - வேளிர்தலைவன். இவன்

தந்தையின்பெயர் நன்னனென்பது (64.).

இவன் நாடு, பல்குன்றக்கோட்டம்; நகர், செங்கண்மா (இப் பாட்டின் இறுதிவாக்கியம்); மலை, நவிரமலை; ஆறு, சேயாறு; இவற்றுள்,

பல்குன்றக்கோட்டமென்பது தொண்டைநாட்டின் பெரும்பிரிவாகிய 24 - கோட்டங்களுள் ஒன்று. பலகுன்றங்களைத் தன்பாற் பெற்றிருத்தலின், இக்கோட்டம் இப்பெயர்பெற்றது. கோட்டமென்பது நாட்டின் பெரும்பிரிவிற்குச் சங்கேதமாகவழங்குகின்றது. 'பல்குன்றக் கோட்டத்துச் சிலைநாட்டுத் திருவேங்கடம்' என்னும் சிலாசாஸனவாக்கியத்தால், திருவேங்கடமலை (திருப்பதி)யும் பல்குன்றக் கோட்டத்துள்ளதென்று தெரிகிறது; 'குன்று சூழிருக்கை நாடுகிழவோனே' (583) என்பது இதனை வலியுறுத்துகின்றது.

சேங்கண்மா என்னும் ஊர் திருவண்ணுமலைக்கு மேற்றிசையில் உள்ளது. இது செங்கண்மானெனவும், செங்கமா எனவும் இக்கால த்து வழங்கும். இந்நகரில், பண்டைக்காலத்தில், அகழி, கோட்டை, பெரியவீதி, கடைத்தெரு, குறுந்தெரு, சிங்காதனம்அமைந்த இராச சபை, நாளோலக்கம், அரியகாவல்களையும், நன்னனைப் பார்த்தற்குப் பலரும் தத்தமக்குரிய காணிக்கைகளைக் கொணர்ந்து வைத்துக் காத்

திருக்கும் முன்றிலையுமுடைய கோபுரவாசல் இவற்றையுடைய அரண் மனை, அயலூரிலிருந்து வருபவர்கள் கவலையின்றித் தங்குவதற்குரிய பொதுவிடமாகியமன்று ஆகிய இவைகள் இருந்தனவென்று இந்நூல் தெரிவிக்கின்றது.

நவிரமலை. இது மிக்கவளத்தையும் புகழையும் உடையது; (82, 578 - 9.) இதில், 'காரியுண்டிக்கடவுள்' (83) என்று திருநாமம்பெற்ற சிவபெருமானுடைய திருக்கோயிலுண்டு; சேனைகளை அமைத்து நன்னன் அக்கோயிலைப் பரிபாலித்துவந்தனன் (226 - 30). இம்மலை

இக்காலத்தில் திரிசூலகிரி, பர்வதமலை என வழங்கப்படுகின்றது. சிவபெருமானுக்கு அங்கே இக்காலத்து வழங்குந் திருநாமம் ஸ்ரீ காளகண்டேசுவர ரென்பது; இம்மலை திருவண்ணாமலையின் வாயுதிக்கில் உள்ளது; (ஷை கோயிற்சாஸனம், திரிசூலகிரிப்புரா ணம்.) இதனால் நன்னனைச் சைவசமயாபிமானியென்று நினைத்தற் கிடமுண்டு.

சேயாறு, இது 'காணுநர் வயாஅங் கட்கின் சேயாறு,' 'கடுவரற் கலுழிக் கட்கின் சேயாறு' (476, 556) என இந்நூலுள்ளே பாராட் டிக்கூறப்படும். இக்காலத்துச் சண்முகநதியென வழங்கும் நதி இதுவே ; (அருணாசலபுராணம், திரிசூலகிரிப்புராணம்.)

இவன் முன்னோர் பல நற்காரியங்களைச்செய்து புகழ்பெற்றவர் கள். இவன், மென்மையையுடையவன் ; மிக்ககொடையாளி; பிற ருடைய்குற்றங்களை உள்ளடக்கிக் குணங்களையே பாராட்டி அவர்களை மேம்படுத்தும் சிறந்த சுற்றத்தையுடையவன் ; பொய்யாவாய்மையி னன் ; மிக்கவீரன் ; ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்பவன். ஐம் பொறிகளையும் வென்றவன்.

மானவிறல்வேள் (163-4), செருச்செய் முன்பிற் குரிசில்

(186), திருந்து வேலண்ணல் (319), செருமிக்குப்புகலுங் திருவார்மார்பன் (356), தேம்பாய்கண்ணித் தேர்வீசுகவிகை ஓம்பா வள்ளல் (399- 400), வண்டுபடக் கமழுந் தேம்பாய்கண்ணித் திண்டேர்நன்னன் (466-7), வெல்போர்ச்சேய் (493), குன்றுநல்லிசைச் சென்றோரும்

பல் (540) என இந்நூலுட் பாராட்டப் பெற்றிருத்தலின், இவனுடைய மேம்பாடுகள் புலனாகின்றன.

இவன்மனைவி கற்பிற்சிறந்தவள்; கற்பிற்கு அறிகுறியாகக்கொடியைப் பெற்றவள் (424).

இவன் பிறந்தநாட் கொண்டாட்டம் இவன்காலத்தில் மிகச்செவ்வையாக நடைபெற்றுவந்தது; "பேரிசை நன்னன்பெரும் பெயர் நன்னாட், சேரிவிழவி னார்ப் பெழுந்தாங்கு" (மதுரை. 618 - 9).

இந்தவிழா, நாண்மங்கல மென்று பழையநூல்களில் வழங்கும்.

இவன்காலத்துச் சங்கப்புலவர், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், பரணர், மாங்குடிமருதனார், மாமூலனார் முதலியோர்.

நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனாரென்பவர் கடைச்சங்கப்புலவர்களில் ஒருவராகிய நல்லிசைப்புலவர்; இதுவும் இவர்பெருமையும் இந்நூல், 145 - ஆம் அடியின் விசேடவுரையால் விளங்கும். இவர் சாதியால் அந்தணர்; இதனை, 'உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன' (தொல். மர. சூ. எச, உரை) என்பதனால்அறிக. இந்நூலன்றி நற்றிணையில் இரண்டுசெய்யுட்களும் (சச, கஙக.) இவர் செய்தன வாகத் தெரிகின்றன. இவருடைய குணவிசேடங்களும், தாம் அனுபவித்தவற்றைப் பிறரும் அறிந்து இன்புறும்படி செய்யுள் செய்யும் இவருடைய ஆற்றலும் இவர்காலத்து வழக்கங்களும்

இந்நூலை மெல்ல ஊன்றிப்படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

இந்நூல் உரையாசிரியராகிய
நச்சினார்க்கினியர் வரலாறு.

விருத்தம்.

எவனுல வாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னே.

மலைபடுகடாத்தின்உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் பாண்டிவளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாசகோத்திரத்தில் அவதரித்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லா நூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னாரதல், "வண்டிமிர் சோலை மதுராபுரி தனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பார த்துவாச, னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூயஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன்" என்னும்

உரைச்சிறப் புப்பாயிரத்தால் விளங்கும். சிவதலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்', 'பெரும்பற்றப்புலியூர்' என் பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெழுத்தொரு மொழிக்கும் உதாரணமாக இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமரபில் "ஓரெழுத் தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்த நூல் களாகிய திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார், திருவுலாப்புறம் முதலியவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய இலக்கணப் பொருள்களுக்கேயன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற் கோள்கள் எடுத்து ஆண்டுள்ளதனாலும், அங்ஙனம் மேற்கோள் கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், சீவக சிந்தாமணியில், நாமகளிலம்பகத்தில், 'மேகம் மீன்ற' என்னும், ௩௩௩ - ம் செய்யுளில், 'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழு திய விசேடவுரையாலும்,

திருமுருகாற்றுப்படையுரையிற்காட்டிய சில நயங்களாலும், மற்றுஞ் சிலவற்றாலும் இவரது சைவ சமயாபி மானம் நன்குவெளியாகும்,

 நச்சினார்க்கினியர் வரலாறு.

நச்சினார்க்கினியர் இந்நூலுக்கன்றிப் பத்துப்பாட்டினுள் மற்ற நூல்களுக்கும், தொல்காப்பியத்திற்கும், கலித்தொகைக்கும், குறுந் தொகையில் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய் யுட்களுக்கும் உரைசெய்தருளினர். இன்னுஞ் சிலநூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர் ; அவை இவையென்று புலப்படவில்லை ; இக் காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப் பட்டதென்று தெரிகின்றமையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ் சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவருடைய உரைச்சிறப் புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும், அவைகள் இங்கே எழுதப்பட்டில.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரை யெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு,

"அறுவர்தந் நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவாவு மாறுன நீக்கி - மறுவரவின்
மாசா ரியனும் மறுதலைச்சொன் மாற்றுதலே
யாசா ரியன தமைவு" (ஏலாதி,

என்றபடி, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை ஒருரை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர் கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக்கொண்டார் களென்று சைனர் கூறுகின்றனர். இது ஷை சிந்தாமணி யுரையை யும், தொல்காப்பியம் நச்சினார்க்கினியத்தையும் படிப்பவர்களுக்கு நன்றாக விளங்கும்.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப் பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் விளங்கிய வை வருமாறு :—

1. அகத்தியம்.
2. அகநானூறு (நெடுந்தொகை.)
3. அணியியல்.
4. அவிநயம்.
5. ஆசாரக்கோவை.
6. இராமாயண வெண்பா.
7. இறையனாரகப்பொருள்.
8. ஏலாதி.
9. ஐங்குறுநூறு.
10. ஐந்திணையெழுபது.
11. ஐந்திணையைம்பது.
12. ஒளவையார்பாடல்.
13. கடகண்டு.
14. கலித்தொகை.

15. களவழிநாற்பது.

16. காக்கைபாடினியம்.
17. கார்நாற்பது.
18. காரைக்காற்பேயார்பாடல்.
19. குணநாற்பது.
20. குறிஞ்சிப்பாட்டு.
21. குறுந்தொகை.
22. கூத்தநூல்.
23. கைந்நிலை.
24 கொன்றைவேந்தன்.
25. சிலப்பதிகாரம்.
26. சிறுகாக்கைபாடினியம்.
27. சிறுகுரீஇயுரை.

28. சிறுபஞ்சமூலம்.

29. சிறுபாணாற்றுப்படை.

30. சினேந்திரமாலை.

31. சீவகசிந்தாமணி.

32. தகடூர்யாத்திரை.

33. தந்திரவாக்கியம்.

34. திணைமாலை நூற்றைம்பது.

35. திணைமொழியைம்பது.

36. திரிகடுகம்.

37. திருக்குறள்.

38. திருக்கோவையார்.

39. திருப்பாட்டு.
40. திருமுருகாற்றுப்படை.
41. திருவாசகம்.
42. திருவாய்மொழி.
43. திருவுலாப்புறம்.
44. தொல்காப்பியம்.
45. நற்றிணைநானூறு.
46. நாடகநூல்.
47. நாலடியார்.
48. நெடுநெல்வாடை.

49. பட்டினப்பாலை.
50. பதிற்றுப்பத்து.
51. பரிபாடல்.
52. பல்காப்பியம்.
53. பல்காயம்.
54. பழமொழி
55. பன்னிருபடலம்.
56. பாரதவெண்பா.
57. புறநானூறு.
58. புறப்பொருள்வெண்பாமாலை.
59. பூதத்தாரவையடக்கு.

60. பூதபுராணம்.

61. பெருங்கதை.

62. பெரும்பாணாற்றுப்படை.

63. பெரும்பொருள்விளக்கம்.

64. பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதி.

65. பொருநராற்றுப்படை.

66. மணிமேகலை.

67. மதுரைக்காஞ்சி.

68. மலைபடுகடாம்.

69. மாபுராணம்.

70. முத்தொள்ளாயிரம்.

71. முதுமொழிக்காஞ்சி.

72. முல்லைப்பாட்டு.

73. மூதுரை.

74. மோதிரப்பாட்டு.

75. யாப்பருங்கலம்.

76. யாழ்நூல்.

77. வசைக்கடம்.

78. வசைக்கூத்து.

79. வளையாபதி.

80. விளக்கத்தார்கூத்து.

இன்னும் விளங்காத நூல்கள் பல.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும், பல உரைகளிலிருந்தும் பற்பல அரிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்

றமையின், இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்லுதற் கிடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளை யாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினாற்பிற்பட்டவ ரென்று தெரிகின்றது.

அமிழ்தினுமினிய தமிழ்மடவால்செய் அருந்தவத்தின் பெரும் பயனாக அவதரித்தருளிய இம்மஹோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

" பாரத்தொல்காப்பியமும் ", " தொல்காப்பியத்தில் ", " பாற் கடல்போல ", " பச்சைமால் " என இவருடைய மேம்பாட்டைப் பாராட்டி அக்காலத்துள்ள ஆன்றோராற் செய்யப்பட்ட நான்குசெய் யுட்கள் உரைச்சிறப்புப் பாயிரங்களாக வழங்குகின்றன.

உ

மலைபடுகடாம்

அரும்பதமுதலியவற்றின் அகராதி.*

[எண்கள், அடிகளைப்புலப்படுத்துவன.]

அகடு - நடு இடம், 33.
அகப்பட்ட - கிடந்த, 258; சிக்கிக்கொண்ட 499.
அகம் - இடம், 366; உள், 344; நெஞ்சு, 184. [259, 276,
அகல் - அகன்ற (விசாலித்த), 133,
அகல - நீங்க, 412.
அகலறை - அகன்ற பாறை, 133.
அகலிருவிசும்பு - மற்றப் பூதங்கள் தோன்றுதற்குக் காரணமான பெரிய ஆகாயம், 100; தன்னையொழிந்த நான்குபூதங்களும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமான பெரிய ஆகாயமென்பதும் பொருந்தும், [பெரும்பா. 1. உரை]
அகலுள் - அகன்ற ஊர், 438
அகழ் - அகழி; தோண்டி உண்டாக்கப்படுவது, 214.
அசோக மரம், 160.
அஞ்சு - அஞ்சுதல்; முதனிலைத்தொழிற்பெயர், 81.
அடர் - தகடு, 4.
அடி நிலை தளர்க்கும் - அடி ஊன்றியிட்ட நிலையை ஓடப்பண்ணும், 222.
அடுக்கம் - பக்கம், 141; மலைப்பக்கம், 239, 289, 359.
அடுக்கல் - மலை, 19.
அடைமொழிச்சிறப்புள்ள அடிகள், 13, 14, 16, 17, 20, 23, 31, 35, 37, 39, 42, 47, 48, 54, 60, 70, 82, 90, 91, 105-6, 107-8, 114, 120, 126-8, 130 31, 135, 138, 140, 153, 178, 204, 208, 209, 237, 245-7, 250, 271, 272, 289, 295, 308, 311, 312, 313, 316,

* இதில் தொடர்மொழிகளும் விஷயங்களும் பிறவும் கலந்துவரும்.

அமைகல்லா - அமையாத, 263.
அமைச்சர் (சுற்றம்), 550.
அமைத்து - பொருந்தச்செய்து, 28.
அமைதல் - பொருந்துதல், 38.
அமையம் - சமயம், 273, 375.
அமைவர - பொருந்துதல்வர, 38.
அயரும் - செய்யும், 322.
அயிராது புகுமின் - ஐயுறாமல் போவீராக, 491.
அயில் - வேல், 373.
அயினி - உணவு, 467.
அரக்கு - சாதிலிங்கம், 507.
அரசு நிலை தளர்க்கும் - (போர்செய்ய வந்த) அரசருடைய நிலையைத் தளரச்செய்யும், 378.
அரம் - அராவுதற்குரிய கருவி, 35.
அரமகளிர் - தெய்வப்பெண்கள், 190, 294,
அரலை - குற்றம், கொடுமுறுக்கு, பருக்கைக்கல், 24, விதை, 139.
அரவு - பாம்பு, 504.
அரி - அரிசி, 180; அரித்தெழுதல், 9; அரியப்பட்டதசை, 465; இரேகை, 45; நரம்பு, 9.
அரித்து - கழித்து, 465.
அரிந்து - வெடித்து, 138.
அல்கலும் - நாடோறும், 443.
அல்கி - தங்கி, 158, 256.
அலகு - அளவு, 347; பலகறை (சோழி) 234.
அலகைத்தவிர்த்த எண்ணருந்திறத்த, 347.
அலங்குதல் - அசைதல், 144, 161.
அலமருதல் - அசைதல், 119, 133, 219.
அலர் - பூ, 290.
அலரி - சூரியன், 195.
அலைத்த - வருந்தச் செய்த, 497.
அவ்வாய் - அழகிய இடம், 32.
அவண் - அவ்விடம், 53, 158.
அவரை, 110.
அவல்-உண்ணுதற்குரிய அவல், 121; பள்ளம், 198, விளைநிலம், 450.
அவல - தாழ்வரையிலுள்ளன, 346.
அவலம் - கேடு, 285.
அவற்பதம் - அவலிடித்தற்குரிய பக்குவம், 121.
அவிழ் - சோறு, 183.
அவை - சபை, 77.
அழுகை, 301.
அழுந்துபட்டு - (கிழங்கு) தாழவீழ்ந்து, 219; [மதுரை. 342.]

அரிநர் - (நெல்) அறுப்பார், 471.
அரில் - சிறுகாடு, 379.
அருகு - பக்கம், 220.
அருங்கடிவாயில் - அரிய காவலை யுடைய கோபுரவாயில், 491.
அருங்கலம் - பெறுதற்கரிய ஆபரணம், 71.
அருணெறி=அருள்நெறி - நூலிற் சொல்லிய வழி, 38.
அருந்தி - உண்டு, 468.
அருந்திறற்கடவுள்- பொறுத்தற்கரிய வலியையுடைய தெய்வம், 538.
அருப்பம் - அரண், 378; அருமை, 19, 222.
அருவி, 174, 278, 294, 554, 581.
அருவிதந்தபழம், 174.
அருவிநுகரும் - அருவியாடும், 294.
அருளுதல் - சொல்லுதல், 38.
அரை-மரத்தின் நடு, 395; வயிறு, 307.
அல் - இராத்திரிப் பொழுது, 158, 256.
அழுவம் - ஆழம், 528; குழி, 368.
அளியர் - பாதுகாக்கத்தக்கவர், 494.
அளை - குகை, 255, 300, 505.
அளைஇ - கலந்து, 184.
அளைச்செறியுழுவை - குகையிலேநெருங்கிவாழும் புலி. 505.
அற்கு - இராத்திரிகாலத்திலே, 254, 437.
அற்று - அத்தன்மையது, 402.
அற - நீங்க, 250.
அறல்வாழ்கூந்தல், 304.
அறிஞர் - அறிபவர், 287.
அறிமார் - அறிவதற்கு, 394.
அறை - அறுத்தல், பாத்தி, 118; பாறை, 133, 150.
அறைந்தன்ன = அறைந்தால்அன்ன - நறுக்கினுலொத்த, 440.
அறையுற்று - வெட்டுதலுற்று, 118.
அன்மையின் - அல்லாமையால், 148.
அன்று அவண் - அற்றைநாள் அவ்விடத்தே, 158.

அன்ன - ஒத்த.
அனந்தல் - மதம், 173.
அனைத்தும் - அவ்வளவும், 22 ; எல்லாம், 345, 526, 575.
அஃகிய நுட்பம் - சுருங்கிய அறிவு, 551.
ஆஅல்=ஆல் - கார்த்திகைநட்சத்திரம்; தொகுத்தல்விகாரம் ; (ஆரல்) 100.
ஆக்கிய - சமைத்த, 183.
ஆகம் - மார்பு, 31.
ஆகாயம், 558.
ஆகுளிப்பறை - சிறுபறை, 3, 140.
ஆங்கண் - அவ்விடம், 438.
ஆங்கனம் - அவ்விடம், 402.
ஆங்கு-அவ்விடத்து, 427, உவமவுருபு, 52, 98.
ஆசினி - ஈரப்பலா, 139, 526.
ஆட்டுத்தோற்படுக்கை, 419.
ஆடி - நீராடி, 433.
ஆண்மை - ஆளுந்தன்மை, 423.
ஆணிமுடுக்கி - சுள்ளாணிகளை இறுகத்தைத்து, 27.
ஆமான்குழவி-காட்டுப்பசுவின்கன்று, 500
ஆர்த்தென - ஆரவாரித்தாராக, 386.
ஆர்ப்ப - ஆரவாரிக்க, 333.
ஆர்வம் - ஆசை, 184.
ஆரம் - சந்தனம், 520.
ஆரிடர்=அரு + இடர் - பொறுத்தற்கு அரிதாகிய வருத்தம், 368.
ஆரிப்படுகர் - அரிதாய்இறங்கும்வழி. 161.
இகழுநர்ப்பிணிக்கும்ஆற்றல் - தன்னை இகழ்ந்திருக்கும் பகைவரைச்சுருக்கும் அறிவின்வலி, 73.
இகுத்து - தாழ்த்து, 44 ; வாசித்து, 391.
இகுதரு - தாழ்ந்துவிழும், 226.
இகுப்ப - ஒலியாநிற்க, 532.
இகுப்பம் - திரட்சி, 367.
இகும், தன்மைப்பன்மை, 400, 424.
இசை - இராகம், 342, 381 ; ஓசை, 2, 324 ; புகழ், 60, 70, 388, 540.
இசைபெறுதிருவின்வேந்தவை - சங்கீதத்தை எக்காலமுங்கேட்கின்ற செல்வத்தினையுடைய அரசர்களுடையஅவைக்களம், 39.
இஞ்சி-ஒருவகைக்கிழங்கு,126; மதில், 92.
இஞ்சிசெய்யாப்பாவைவளர்ந்து - இஞ்சியானது செய்யப்படாத பாவை போன்றகிழங்கு வளரப்பெற்று, 125 - 6.
இட்ட - போகட்ட (போட்ட), 456; - விதைத்த, 98.
இட்டு - சிறுமை, 16.
இடங்கர் - முதலை, 211.
இடம் - சமயம். 386.
இடர் - வருத்தம், 368.
இடன் - இடப்பக்கம், 266.
இடி - இடித்த, 445 ; பொடி, 512, மேகத்தின் இடி, 310.
இடிச்சுரம் - கல்லையிடித்த அருநிலம், 20.

ஆலம் - ஆலமரம், 268.
ஆலை - கரும்பாலை, 119, 340.
ஆற்ற - வழியிடத்தனவாகிய, 254.
ஆற்றல் - வலி, 73.
ஆற்றினளவும் - வழியினது நன்மையின் அளவும் தீமையினளவும், 67.
ஆறு - வழி, 67, 195.
ஆன் - பசு, 409.
ஆனாது - அமையாமல், 97.
இகந்தனவாயினும் - கடந்தனவாயினும், 86.
இகந்து - இருக்குமிடத்தைக்கடந்து, 262.
இகழுநர் - இகழ்ந்திருப்போர், 73, 482.
இடுக்கண் - வருத்துதல், 18.
இடூஉம்=இடும் - கூப்பிடும், 306.
இடை - இடம், 254, 437, 542.
இடைதெரிந்துணரும், 542.
இடையர், கொடியவிலங்குகள் கிட்டாதபடி இரவில் நெருப்பை வளர்த்து வைத்துக்கொண்டிருத்தல். 420.
இணர் - பூங்கொத்து, 159, 305, 428.
இதணம் - பரண், 204.
இதழ் - பூவிதழ், 149, 189, 334.
இம்மென்கடும்பு-இம்மென்னும் ஓசையுண்டாகியசுற்றம் (தாமேஆலாபனஞ்செய்துகொண்டிருப்பவர்), 286.
இமிர - ஒலிக்க, 533.

இமிரும் - ஒலிக்கும், 7, 486.
இமில் - காளையின் முன் முதுகிலுள்ள கொண்டை, 330.
இமிழ் - ஒலித்தல், முதனிலைத்தொழிற்பெயர், 296; முழங்குதல், 2.
இயக்கம் - வழி, 374.
இயக்கு - செல்லுதல், 571.
இயக்கும் - நடத்தும், 18, 80.
இயங்கல் - போதல், 277.
இயங்கள்தொடுமின் - வாத்தியங்களை வாசிப்பீர், 277.
இயங்குநர் - வழியேபோகிறவர், 18.
இயந்தொடுதல் - வாத்தியங்களைவாசித்தல், 232.
இயம் - வாத்தியம், 232, 269, 277, 296, 365.
இயம்ப - ஒலிப்ப, 348.
இயல் - இயல்பு, 43.
இயவு - வழி, 20, 111, 229, 323.
இயற்கை - இயல்பு, 83.
இயற்றிய - ஆக்கின, 441, 465; பண்ணின, 438.
இயைந்து - பொருந்தி, 345.
இரங்குதல் - ஒலித்தல், 324.
இரட்டும் - மாறிக்கூப்பிடும், 141.
இராத்திரிஉணவு, 435 - 6.
இரிய - கெட, 208.
இரிவு - கெடுதல், 116.
இரீஇ - இருத்தி, 25; இருந்து, 549.
இரு=இருமை - கருமை, 157, 488; பெருமை, 99, 100, 455.
இருக்கை - இருப்பிடம், 76; இருப்பு, 190; பரப்பு, 583.
இருங்கால்வீ - நீண்டசாம்பையுடைய ... 265

இலங்குதல் - விளங்குதல், 27, 46.
இலஞ்சி - மடு, 228.
இலம் - இல்லாமை, 576; இல்லேம், 552.
இலமெனமலர்ந்தகையராகி - இரந்துவந்தோர்க்கு யாம் இல்லேமென்று கூறி இல்லையென்று மறித்தகையையுடையராகி. 552.
இவ்வனைத்தும் - இவைகளெல்லாம், 345
இவண் - இவ்வுலகம், 541
இவர்தல் - பரத்தல், 514.
இவரும் - உலாவும், 90.
இழிதரும் - குதிக்கும், 554.
இழிந்தன்ன=இழிந்தால்அன்ன - இறங்கினாற்போன்ற, 214.
இழிபு - இறங்கி, 288.
இழுக்கிய - இறந்த, 301.
இழுது - நெய்விழுது, 244, 442.
இழை - ஆபரணம் (இழைக்கப்பெற்றது), 570, நூலிழை, 561.
இழைந்த - உரிஞ்சிய, 248.
இளி - ஒருசுரம்; அது பஞ்சமத்துக்கு மேற்பட்டது, 7.
இறடி - தினை, 169.
இறந்து - கடந்து, 263, 405.
இறுஅ=இறு - முறியாத, 274.
இறுஅல்=இறால் - தேன்கூடு, 525.
இறுயினிர் - வக்கி (வதக்கி), 249.
இறுகுகுலை - (காய்) நெருங்கினகுலை, 132.
இறுத்த-கொடுத்த, 89; முடித்த, 543
இறும்பு - குறுங்காடு, 205, 271, 407.
இறும்பூது - ஆச்சரியம், 358.
[illegible]

10.
எல்லாம் - உயர்திணைப்பன்மை, 495.

ஒள்வாள் - ஒள்ளியகத்தி, 489.
ஒன்றி - கூடி, 535.

எழவு - எழுதல், 479.
எழில் - அழகு, எழுச்சி, 31, 57, 323.
எழுதரு - தோன்றுகின்ற, 84.
ஏன், 106.
எள்ளுதல் - இகழுதல், 562.

ஒன்னு - பொருந்தாத, 386, 397.
ஒன்னுத்தெவ்வர் - தன்ஏவலைப் பொருந்தாத பகைவர், 386, 397. [பெரும்பா. 419.]
ஓ - ஒழிதல், 475 [திருமுருகு. 3.]

அரும்பதமுதலியவற்றின் அகராதி.

ஓச்சி - அடித்து, 336.
ஓதை - ஓசை, 327, 339, 467.
ஓம்பல் - பாதுகாத்து நீங்கல், 308.
ஓம்பாவள்ளல் - தனக்கென்று ஒரு பொருளையும் பேணாத நன்னன், 400.
ஓம்பி - ஒழித்து, 371; ஒழிந்து, 277; காத்து, 382; நீக்கி, 215, 254; நீங்கி, 256.

ஓம்பினர் - பாதுகாப்போர், 343.
ஓம்பினிர் - பாதுகாத்து, 218.
ஓம்புநர் - பாதுகாப்பவர். 426.
ஓம்புநரல்லதுடற்றுநரில்லை, 426.
ஓம்புமின் - பாதுகாப்பீர், 232, 240.
ஓர்த்து - ஓர்ந்து பார்த்து, 23, 448.
ஓரா - நினையாத, 62.
ஓரி - தேன்முற்றினாற் பிறக்கும் ஒருவகைக்கரியநிறம்,542.[புறநா.109.]
ஓவிறந்து - ஒழிவின்றி. 475. [சிலப். நாடு, 109.]

கடு - கடுமரம், 14.
கடுக்கும் - ஒக்கும், 150, 261.
கடுங்கண் - அஞ்சாமை, 325.
கடுப்ப - ஒப்ப, 2, 12, 32, 107, 127, 140, 528.
கடும்பரிக்கடும்பு - கடியசெலவினையுடையசுற்றம், 364
கடும்பறை - கடியவாச்சியம், 236.
கடும்பு - சுற்றம், 159, 286, 364.

கடும்புடன்அருந்தல், 468.
கடுமரம், 14.
கடுமை, 81; விரைவு, 206, 226, 364, 380, 555.
கடுவரல் - விரைந்துசெல்லல், 555.
கடுவன் - ஆண்குரங்கு, 237.
கடை - காம்பு, 490; தலைவாசல், 529.
கண் - இடம், 99, 252, 257, 276, 349, 441; கணு, 6; வடிவு, 169; வாத்தியத்தில் அடிக்கப்படும் பக்கம், 140, 382, 533.

கதிர்சினந்தணிந்த அமையம் - சூரியன்வெம்மை ஆறினசமயம், 375.
கதுப்பு - கூந்தல், 44.
கம்பலை - ஓசை, 335.
கமழ்தல் - மணத்தல், 30, 466.
கமழ - மணக்க, 181.
கமழாது - நாறுமல், 249.
கமழைம்பால் - இயல்பாகவேமணக்குங்கூந்தல், 30.
கயந்தலை=கய தலை - மெல்லியதலை, 307.
கயம் - ஆழமானகுளம், 47, .20, 259; நீராறுதமடு, 213
கயம்புக்கன்னநிழல், 47.
கயமுனி - யானைக்கன்று, 107, 500.
கயமுனிக்குழவி - யானைக்கன்றில் இளையது, 500.
கயவாய் - புகார்முகம்; காவிரி கடலொடுகலக்கும்இடம், 528.
கரக்கும்-மறைக்கும்; விழுங்கும்,211.
கரடி, 501.
கரடிகை - ஒருவகைவாத்தியம், 9.
கரந்து - மறைந்து, 199.
கருங்கடையெஃகம் - கரியகாம்பினையுடையவேல், 490.
கருநெய்தற்பூ, 124.
கருப்பூரமரம், 516.
கரும்பு, 119.
கரும்பை ஆலையிற்கொடுத்துச்சாறெடுத்தல், 340 - 341.
கல்லேசுகவலை - (வீரக்) கற்கள் முதுகிட்டுப்போனவரை இகழும் பலவழிகள். 389.
கலப்பன்ன - கலத்தலையொத்த, 512.
கலப்பை - கலங்கள் அல்லது வாத்தியமுட்டுக்களையுடையவை, 13.
கலம் - ஆபரணம், 50, 72, 577; மண்பாண்டம், 474.
கலம்பெறுகண்ணுளர் - பேரணிகலங்களைப் பெறுதற்குரியகூத்தர், 50.
கலவம் - கலாபம்; மயிலின்தோகை, 235.
கலிங்கம் - ஆடை, 561.
கலித்த - செருக்கிவளர்ந்த, 146, 514.
கலித்து - மிக்கு, 14.
கலுழி - நீர்ப்பெருக்கு, 555.
கலை - ஆண்மான், 405; முசுக்கலை (ஒருவகைக்குரங்கின் ஆண்) 292, 315.
கலைதொடுபெரும்பழம் - முசுக்கலை தோண்டின பெரிய (பலாப்) பழம், 292.
கவ்வை - எள்ளுப்பயிரின் இளங்காய், 105.
கவடு - பகுப்பு, 34.
கவண், 206.
கவண்கல், 206.
கவணுமிழ்கடுங்கல், - கவண் கள் உமிழுகின்ற வேகமானகற்கள், 206.
கவர்தல் - அழைத்தல், 510.

கருவிய - தொகுதியையுடைய, 357.
கல் - மலை, 111, 225.
கல்யாறு - கல்லின்மேலேவரும் ஆறு, 324.
கல்லகழ்கிடங்கு-கல்லை அகழ்ந்துஉண்டாக்கிய அகழி, 91,
கல்லாப்பார்ப்பு - தனக்குரியதொழிலையன்றி வேறொன்றையும் கல்லாத (குரங்கின்) குட்டி, 312.
கல்லெறிந்து - கல்லைத்தோண்டி, 395.
கல்லென் - கல்லென்கின்ற, 335.
கல்லெனொக்கல் - கல்லெனும்ஆரவாரத்தையுடைய சுற்றம், 549
கல்லென்கடம் - கல்லெனும் ஓசையையுடைய காடு, 415.
கல்லென - கல்லெனும் ஓசைபட, 207, 276, 321.
கவர்பரிக்கொடுந்தாள் - கைக்கொளும்செலவையுடைய வளைந்ததாள், 502.
கவர்பு - கைக்கொண்டு, 10.
கவர்வு = கவர்தல் - அரிதல், 113.
கவலை - கவர்த்தவழி, 389, 396, 482; கவலைக்கொடி, 128.
கவலைமறுகு - பலகவர்த்தன்மையையுடைய குறுந்தெரு, 482.
கவிகை - கொடுத்துக்கவிந்தகை, 399.
கவிழ்க்கணைத்து - கவிழ்தலோடேதிரண்டு, 117; கவிழ், முதனிலைத்தொழிற்பெயர்.
கவின் - அழகு, 125.
கவைஇய = கவவிய - அகத்திட்ட 34.
கவைக்கதிர் - இரட்டித்தகதிர், 112.

அரும்பதமுதலியவற்றின் அகராதி.

க௦ரு

அரும்பதமுதலியவற்றின் அகராதி.

க0எ

224, 477.

சிறந்து - மிகுந்து, 137.

சிறப்பு - தலைமை, 85, 562, 570.
சிறுகுடி - சிறியவூர், 156.
சிறுபறை - ஒருவகைவாத்தியம், 321.
சிறுமை - நோய், 314.
சினம் - கோபம், 261, 326; வெம்மை, 375.
சினை - கிளை, 144, 498.
சீர் - அழகு, 570; கனம், 13; காமரம், (காவடித்தண்டு) 154.
சீர்கெழுசிறப்பு - அழகுபொருந்தின தலைமை, 570.
சீறடி=சிறுஅடி - சிறியஅடி, 43.
சீறியாழ் - சிறியயாழ், 534.
சுகிர்புரிநரம்பு - வடித்து முறுக்கின நரம்பு, 23.
சுட்டினும் - நினைப்பினும், 398.
சுடர்ப்பூ - ஒளியையுடையபூ, 223.
சும்மை - ஆரவாரம், 483.
சுரக்கும் - இடைவிடாது சொரியும், 72; சொரியும், 76; மாறுமற்கொடுக்கும், 68.
சுரந்தன்ன=சுரந்தால்அன்ன - சொரிந்தாற்போன்ற, 580.
செம்மலோய் - தலைமையையுடையோய், 543.
செய்யா - செய்து, 84.
செயலை - அசோகமரம், 160.
செயா=செய்யா - செய்து, 202.
செரு - சண்டை, 163, 186, 356, 529.
செருக்கி - செருக்க, செருக்கும்படி, 244.
செருக்கு - மகிழ்ச்சி, 173.
செல்லாநல்லிசை - கெடாதநல்லபுகழ், 388.
செல்லுதல் - போதல், 394.
செல=செல்ல - பரக்க, 93.
செவ்வீவேங்கை - சிவந்தபூக்களையுடையவேங்கைமரம்; உதிரவேங்கை, 434.
செறிதல் - நெருங்குதல், 201, 505.
செறிதொடிவிறலியர் - நெருங்கியவளையல்களையுடையவிறலியர், 201.
செறு - பாத்தி, 123; வயல், 460.
சென்றதுகொடியவும்விடான், 545.
சென்று - உயர்ந்து, 34.

அரும்பதமுதலியவற்றின் அகராதி.

ஞாயிறு - சூரியன், 85, 272, 464.

ஞெகிழி - கடைக்கொள்ளி, 446.

ஞெண்டாடுசெறு - நண்டுகள் ஆடித் திரியும் வயல், 460.

தலைஇய - பெய்த, 1.

தலைநாள் - முதல்நாள், 305, 565, 581.

தலைநாளன்ன புகலொடு - முதல்நாள் போன்ற விருப்பத்தோடே, 565.

தலையும் - மழையைப் பெய்யாநிற்கும், 233.

தலைவன் பெயரைக் கூறியவுடன் அவன் நாட்டார் பாராட்டல், 163-9.

துனைமின் - விரையப்போவீர், 391.

தொலையா - கெடாத, 70.

நாடுபடுவல்சி - நாட்டில் விளைகின்ற உணவுகள், 68.

நல்லிசைச்சென்றோர்உம்பல் - நல்ல புகழிலேநடந்தோருடைய வழியில் வந்தவன், 540.

நல்லிது - நன்றாக, 80

நல்லேறு - எருமைக்கடா, 335.

நல்வழி - நல்லகாலம், 387.

நவிரமலை, 82, 579.

நவில் - பழகிய, 227.

நவிலுதல் - சொல்லிச்சொல்லி அடிப்படுதல், இடைவிடாமற்பழகுதல், 63, 77, 227 [திருக்குறள், 783.]

நிற்புறஞ்சுற்ற=நின்புறம்சுற்ற - நின்னைப்புறத்தேசூழ, 46.

நிறம் - உரு, 36; மார்பு, 245.

நிறுத்தன்ன - நிறுத்தினாற்போன்ற, 16.

நிறை - நீர்ப்பெருக்கு, 61.

நுட்பம் - அறிவு, 551.
நுடங்குதல் - அசைதல், 31.
நுண்ணீர் - நுண்ணியதன்மை, 35.
நுண்ணீர்ப்பாசி - நுண்மையானநீர்மையையுடையபாசி, 521.
நுண்ணுருக்குற்ற- கரையஉருக்குதலுற்ற, 4.
நுணங்கு - நுண்மை, 35.
நும்மின் - உங்களுடைய, 285.
நுவணை - தினைமா, 445.
நுவலுதல் - சொல்லுதல், 60.
நுவறிய - அராவின, 35.
நுழை - சிறுவழி, 379; நுட்பம், 561.
நூழிலாட்டி - கொன்றுகுவித்து, 87.
நூறு - நீறு, பொடி, 136, 137.
நூறை - நூற்றைக்கிழங்கு; மலங்கு மீன், 515.
நெடுங்கடை - தலைவாசல், 529.
பகர்தல் - விற்றல், 415.
பகன்றைக்கண்ணி - சிவதைக்கொடியின்பூவாலாகியமாலை, 458.
பகனிலை - பகற்பொழுதேநிற்கின்ற நிலை, 206, 222.
பகைமையுள்ளவை, 504, 505, 506.
பச்சை-தோல், யாழின் ஒருறுப்பு, 29.
பசும்பொதித் தேறல் - பசியமுளையாலாக்கின கள்ளின் தெளிவு, 463.
பசை - பற்று; ஒன்றோடொன்றைப் பற்றச் செய்வது, 26.
பட - உண்டாக, 91.
படர்தல் - செல்லுதல், 52.
படர்ந்த - சென்ற, 408; நினைத்த, 64.
படர்ந்தாங்கு-படர்ந்தால் ஆங்கு, 51.
படர்ந்திகும் - நினைத்துச் செல்லுகின்றோம், 400 - 424.
படர்மின் - செல்லுமின், 192.

அரும்பதமுதலியவற்றின் அகராதி.

ககள

அரும்பதமுதலியவற்றின் அகராதி.

அரும்பதமுதலியவற்றின் அகராதி.

கஉக

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.

1	4	விண்ணிதி	...	விண்ணதி
5	35	ககூடு	...	கசூடு
13	10	விதவை	...	மிதவை
,,	23	காமர்	...	காமரு
,,	24	மரநா	...	மரஞ
,,	28	விதவை	...	மிதவை
25	29	தலைவனெ	...	தலைவவெ
28	28	அவ்வெ	...	" அவ்வெ
35	10	முந்தூழ்	...	உந்தூழ்
36	16	141	...	144
39	19	தசையை	...	தசை
46	14	வெருக்கு	...	யெருக்கு
53	27	குசலோ	...	குசேலோ
57	7	கையிஞலே	...	கையிலே
71	40	பெருகு	...	பெறுகு
77	37	களையுமு	...	களையு
83	15	த்தை	...	த்தே
84	30	பாலுக்கு	..	பாலுடைக்கு
88	8	பெருகு	...	பெறுகு